அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு - 10

Srila Sri Kasivasi Swaminatha Thambiran Swamigal Avergal
Tiruppanandal Mutt Endowment Publication

திருவாசகம்

முதற் பகுதி

மூலம்

சீர் பிரித்தும், சொல் பிரித்தும்
அருஞ்சொற் குறிப்புடன் பதிப்பித்தது.
ஆசிரியர் மாண்பு, நூல் மாண்பு, கதை விளக்கம்,
பழைய முறைகளை விளக்கும் பிற்சேர்க்கைகளுடன் கூடியது.

பதிப்பாசிரியர் :
நீ. கந்தசாமிப் பிள்ளை
பள்ளியகரம், தஞ்சாவூர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
1964

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்நூல் வெளியீடு - 16

திருவாசகம்

முதற் பகுதி

மூலம்

சீர் பிரித்தும், சொல் பிரித்தும்
அருஞ்சொற் குறிப்புடன் பதிப்பித்தது.
ஆசிரியர் மாண்பு, நூல் மாண்பு, கதை விளக்கம்,
பழைய முறைகளை விளக்கும் பிற்சேர்க்கைகளுடன் கூடியது.

பதிப்பாசிரியர் :
நீ. கந்தசாமிப் பிள்ளை
பள்ளியகரம், தஞ்சாவூர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
1964

கீதா பிரஸ், திருச்சி-2.

FOREWORD

The first part of the present deluxe edition of Saint Manickavasagar's Thiruvachakam has been edited and produced with an elaborate Introduction, marginal notes and very useful supplements, by Shri N. Kandasami Pillai. It has been published under the sponsorship of Srila Sri Kasivasi Swaminatha Thambiran of the Tiruppanandal Mutt.

There have been conflicting accounts regarding the date of Saint Manickavasagar; but there is little doubt that the twelve Tirumurais including the hymns of Manickavasagar were composed in the following order: Appar, Sundarar and then Manickavasagar. The Peria Puranam contains the lives of Appar and Sundarar but omits Manickavasagar. It is however clear that he lived before the tenth century A.D. and it must be borne in mind that, in all probability, the mention in Appar's hymns of a Saint turning a jackal into a horse, refers to Manickavasagar. It is well known that the Saint was a Brahmin who resided in Vathavoor who became a Minister of a Pandian king. There is a story that the king sent Manickavasagar to buy horses and on the way Lord Siva is reported to have met him and revealed himself to him. Manickavasagar utilised the money given for the purchase of horses for the renovation of a Siva Temple and when he returned to the King's palace without any horses, he was thrown into prison. Ultimately. a miracle is reported to have taken place and the jackals in the neighbouring forest were turned into horses which were presented to the King. Very soon however the horses were retransformed into jackals and the *Minister* was imprisoned. It is narrated that the Vaigai river rose in flood and the King prayed for the pardon of the Saint Manickavasagar, who relinquished his office thereafter and went to Chidambaram where his hymns were mostly composed.

It is indubitable that Manickavasagar's Thiruvachakam is one of the supreme classics of the world's devotional poetry, the outpourings taking every form from despair at the non-attainment of God's presence to ecstasy over the ultimate revelation. There is a well-known saying in Tamil that the heart which will not melt on reading the Thiruvachakam will be unaffected by any other utterance.

As remarked by Shri N. Kandaswami Pillai, the Thiruvachakam is the Saint's spiritual biography and a personal record of the various phases of his spiritual experiences. A European author has thus commented on the Thiruvachakam: "In no literature with which I am acquainted has individual religious life, its struggle and dejection, its hopes and fears and its confidence and triumph, received a delineation more frank and pronounced." Dr. Pope has translated Manickavasagar's hymns in a rhythmic form. The following is an example:

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே, மாசிலாமணியே,
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காத்
தொடக்கெலாம் அறுத்த நற்சோதீ,
இன்பமே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே—" —பிடித்தபத்து.

"O. Ruler, spotless Gem, Who mad'st me Thine, thrilling my frame through every pore: in friendly shape

Did'st enter it, as 'twere a vast and golden shrine,—making this body vile of sweetness full!

Affliction, birth and death, bewilderment,—all links of life—Thou hast cut off; O, beauteous Gleam!

My soul's delight—I've seized Thee and hold Thee fast: Henceforth,

Ah, whither, Grace imparting, would'st Thou rise?

It is worthy of note that the Thiruvachakam contains hymns addressed to a personal God-head as well as to the indwelling presence and the Universal spirit. The Saint has also, in the course of his poems, compiled instructions leading to the attainment of Gnana Yoga. Stanza after Stanza also contains accounts of the realised being of man; and in one hymn (the 49th Pathikam) he describes the vision of the falling away of duality leaving the one residual and all-embracing entity.

The Saiva Siddhanta system of philosophy is one of the climaxes of human spiritual quest and seeks to maintain the supremacy of the Lord whilst affirming the separate existence of souls and the Universe. In the form of questions and answers,

Manickavasagar illustrates by the story of Nataraja's dance the truth that God establishes Universal harmony by conquering the destructive forces. In a well-known book entitled "Indian Theism," Mr. Nicol Macnicol says "it is hardly necessary to multiply illustrations of the fervent spirit of this worshipper of Siva. It is a constant marvel to note how by the heat of his devotion, he is able to describe alike the terrible as well as the beautiful aspects of the God-head." In the present edition, the Introduction refers with admiring affection to Dr. Pope and to a letter written by him to Justice Subramania Iyer and referred by Shri M. Subbaraya Iyer. The preface also gives a full account of Manickavasagar's discourses and disputations. As Shri Kandasami Pillai points out, it is demostrated that after resigning from the Ministership of the Pandian King, Manickavasagar lived in Chidambaram, the dates assigned by the Editor being 804 to 807 A.D.

It is appropriate and significant that this edition of Thiruvachakam should be published under the auspices of the Annamalai University and under the sponsorship of the Thiruppanandal Mutt whose Heads have been famous patrons of Tamil devotional literature.

Shri Kandaswami Pillai has performed and fulfilled his task with thoroughness and wideranging scholarship. This volume is sumptuously got up and it is a delight to handle and peruse it.

(Sd.) C. P. RAMASWAMI AIYAR,
2—9—1964.

உ

சிவமயம்

பதிப்புரை

சைவசமயத்தின் உயிர்நாடியாகவுள்ள பன்னிரு திருமுறைகளுள் மாணிக்கவாசகர் அருளிச்செய்த திருவாசகமும் திருச்சிற்றம்பலக்கோவையும் எட்டாந்திருமுறையாக உள்ளன. அவற்றுள் சிறப்பாகத் திருவாசகம் அறுநூற்றைம்பத்தாறு தித்திக்குந் தேமதுரத் தீந்தமிழ்ப் பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. திருவாசகம் யாவராலும் விரும்பிக் கற்கப்படும் ஓர் அருள்நூல். இந்நூல், ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலும் பல பதிப்புகள் வெளிவந்துள்ளன. சிற்றுரை பேருரைகளும் வரையப் பட்டுள்ளன. ஆயினும், சாதாரண மக்களும் எளிதில் படித்துப் பொருள் புரிந்து கொள்ளும் விதத்தில் சந்தி பிரித்து ஆங்காங்கே அருஞ் சொற் குறிப்புக்களும் தக்க விளக்கங்களும் கொடுத்து ஒரு நல்ல சிறந்த பதிப்பு இதுவரை வெளிவந்ததில்லை. அக்குறையைப் போக்கும் முறையிலேயே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இத் திருவாசகப் பதிப்பு அமைந்துள்ளது.

இந்நூலில் சிறந்த பாடங்களோடு திருந்தியமூலம், சந்தி பிரியாமலும் சீர் முதலிய யாப்பமைதி குன்றுதவாறும் பெரிய எழுத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் எதிர்ப் பக்கத்தில் அதற்கு நேராக மூலச் செய்யுளே அனைவர்க்கும் பொருள் விளங்கத்தக்க நிலையில் சந்தி பிரித்தும் பொருள் இயைபிற்கேற்பச் சீர் வரையறை நோக்காது சொற்களைக் கூட்டியும், தொடர்மொழிக் குறியீறிகளை ஆங்காங்கு இட்டும் அமைக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் அருஞ்சொல் விளக்கங்களும் அமைந்துள்ளன. திருவாசகத்தில் எடுத்தாளப்பட்ட கதைகள் இந்நூலில் பிற்சேர்க்கையாக இணைக்கப்பெற்றுள்ளன. தஞ்சை, பள்ளியக்கிரகாரம் திருவாளர் நீ. கந்தசாமிப்பிள்ளை அவர்கள் இத்தகைய பதிப்பினை வெளியிட வேண்டுமென்று தாம் நெடுநாட்களாக அரும்பாடுபட்டுச் சேர்த்த குறிப்புக்களை உதவி இந்நூல்

வெளியீட்டுப் பணியைத் திருத்தமுறச் செய்தமைக்கு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

செந்தமிழ் நூல்களைத் திருந்திய முறையில் அடக்க விலையினும் குறைந்த விலைக்கு அச்சிட்டு வழங்குதல் வேண்டும் என்னும் பெருநோக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்தின் பத்தொன்பதாம் பட்டத்தில் எழுந்தருளி யிருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நிறுவிய அறக்கட்டளையின் நிதியுதவியால் இப்பதிப்பு அச்சிடப் பெற்று வெளிவருகிறது. இதுபோல் சிறந்த நூல்கள் பல பல்கலைக்கழகச் சார்பில் வெளிவருதற்குப் பல்லாற்றானும் ஆவன புரிந்து வருபவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்தின் இருபதாம் பட்டத்தில் எழுந்தருளியிருந்து இமயம் முதல் குமரிவரை செந்தமிழும் சிவநெறியும் வளர நல்லறங்கள் பலவற்றை நிலைபெறச் செய்பவர்களுமாகிய காசிவாசி ஸ்ரீலஸ்ரீ அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதனை வனப்புற அச்சிட்டு உதவிய திருச்சிராப்பள்ளி 'கீதா பிரஸ்' உரிமையாளர் அவர்களது பணி சிறப்பாகப் பாராட்டுதற்குரியதாகும்.

கோ. சுப்பிரமணிய பிள்ளை,
தமிழாராய்ச்சித்துறை, தமிழ்க்கலைத்துறைத் தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

திருச்சிற்றம்பலம்

பொருளடக்கம்

உ

திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

முன்னுரை

திருவாசகம் என்னும் தெய்வத் தமிழ்மறை, தமிழ் மொழியில் சிறந்த இலக்கியச் சுடர்மணியாகவும், ஞானக் கருவூலமாகவும் திகழ்கின்றது. இவ் அருள்நூல், திருக்கோவையாருடன் சேர்ந்து சைவத் திருமுறை பன்னிரெண்டில், எட்டாவது திருமுறையாக அமைந்துள்ளது. இது தோன்றி நிலவியுள்ள இந்த ஆயிரம் ஆண்டுகளில், கோடிக் கணக்கான மக்களின் மனத்தைக் கரைத்து மாசைநீக்கி மாண்புறச் செய்திருக்கிறது. உள்ளத்தை உருக்கி உயர்வடையச் செய்வதில், உலக இலக்கியத்திலேயே ஒப்பற்றது எனக் கூறினும் மிகையாகாது. உள்ளம் கலந்து இத் தெய்வப்பாடல்களைப் படிக்கும்போது, மெய்மறந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய உள் ஒளி பெருகி உலப்பிலாத தேனமுதம் உண்டு திளைத்தவர் எண்ணிறந்தவராவர். சமயத்தொடர்பு ஒன்றும் இல்லாமல், இலக்கியம் என்ற அளவில் படித்து இன்புற்றவர்களும் இன்புறுபவர்களும் பலராவார். பண்பட்டைந்த உள்ளமுடையவர்கள், எந் நாட்டாராயினும், எச்சமயத்தாராயினும், எந்த வழியிலேனும் இத்தெய்வப் பாடல்களையோ, பாடல்களைப் பற்றியோ, தெரிந்துகொள்வாராயின், இந்நூலைத் தங்கள் உயிர்க்கு உறுதியாகப் பற்றிக்கொள்வார்கள் என்பது திண்ணம். இவ் உண்மையை எடுத்துக்காட்டப் பல நிகழ்ச்சிகளைக் கூறலாம் எனினும், இடம் இன்மைகருதி இரண்டு நிகழ்ச்சி மட்டும் கூறுகின்றேன்.

அறிஞர் ஜி. யூ. போப்பையருடைய தமிழ்ப்பயிற்சியும் பற்றும் உலகம் அறிந்ததேயாகும். அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புக்களால்தான் தமிழின் பெருமையையும், திருக்குறள், நாலடியார், திருவாசகம் முதலிய நூல்களின் பொருளையும், பரந்த உலகம் அறிந்துகொண்டது. இப்

பெரியார் எழுபது ஆண்டுகளுக்கு முன்னர், மயிலை மாமுனிவர் என்று உலகம் போற்றியவரும், சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்தவருமாகிய அறிஞர் சர். எஸ். சுப்பிரமணிய ஐயரவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தின் மேற்பகுதி நீரால் நனைந்து எழுத்துக்கள் கலைந்திருந்தன. கீழ்ப் பகுதியில், "மேற்பகுதியில் எழுத்துக்கள் நீர்த்துளிபட்டு கலைந்திருப்பதை நான் அறிவேன்; வேறு கடிதம் எழுதலாம் என்று எண்ணினேன். ஆனால், அந் நீர்த்துளிகள் கடிதத்தில் பட்ட நிகழ்ச்சி இக்கடிதத்தைக் கிழித்துவிட்டு வேறு ஒன்று எழுத எனக்கு இடம் தரவில்லை; சில காலமாக, நான் எந்தக் கடிதம் எழுதினாலும், திருவாசகத்தில் ஒரு தொடரைத் தலைப்பில் எழுதிய பின்புதான் மற்றவற்றை எழுதுவேன். இன்று அவ்வாறு எழுதிவிட்டுக் கடிதத்தை மேல் தொடர்ந்து எழுதும்போது என் உள்ளத்திலமர்ந் திருந்த திருவாசகப் பொன்மொழி என்னை அறியாமலே கண்ணீர் பெருகச்செய்திருக்கிறது. பெருகிய கண்ணீர் கடிதத்தில் விழுந்து நனைந்திருப்பதைக் கவனியாமல் மையுறிஞ்சுதாளால் கடிதத்தை ஒற்றி எடுத்தபோது, கண்ணீர்த்துளிகள்பட்டுக் கையெழுத்துக் கலைந்திருப்பதைப் பார்த்தேன். பார்த்ததும், இக்கடிதத்தைப் புறக்கணிக்க மனம் வரவில்லை. திருவாசகத்தால் எழுந்த கண்ணீரும் போற்றத்தக்கது என்ற எண்ணத்தால் இக்கடிதத்தை அப்படியே அனுப்பியுள்ளேன் – மன்னிக்க '' என எழுதி யிருந்தார். இதனை எண்ண எவ்வளவு இனிமையாக இருக்கிறது. இச்செய்தியை, சென்னையில் 15—12—1956ல் அறிஞர் சர். சி. பி. இராமசாமி ஐயரவர்கள் தலைமையில் கூடிய மர்ரே கம்பெனி திருவாசக வெளியீட்டு விழாவில், மயிலை வழக்கறிஞர் சுப்பராய ஐயரவர்கள் தெரிவித்தார்கள். போப்பையரவர்கள் கடிதம் தன்னிடம் இருப்பதாகவும் கூறினர்கள். என் இனிய நண்பராகிய ஒரு சிறந்த திருமாலடியார், '' கண்ணநீர் கைகளால் இறைக்கும் " என்னும் திருவாய்மொழித் தொடருக்கு, " திருமாலை உள்ளத்தில் வைத்தமையால் எழுந்த கண்ணீரும் போற்றத் தகுந்த புனிதம் உடையதாகலின், அக்கண்ணீர்த்துளிகள் எவரும் நடமாடும் நிலத்தில் விழக்கூடாது என்ற கொள்கை யினல், தன் கைகளால் தாங்கி நறுந்துழாய்த் தாழியில்

இறைக்கின்ருள். தெய்வம் எழுப்பிய கண்ணீரும் தெய்வமே" என விளக்கியதை மேல் நிகழ்ச்சியோடு ஒத்து நினைக்க மனம் தூண்டுகிறது. திருவாசகத்தொடரால் எழுந்த கண்ணீரும் திருவாசகத்தெய்வம் என்றே எண்ணிஞர் போப்பையர்.

மற்ருெரு நிகழ்ச்சி, என் நண்பர் ஒருவரைக் குறித்தது; நண்பர் என்று சொல்லுவதிலும், ஆசிரியர்களுள் ஒருவர் எனக் கூறுவதே பொருத்தமாகும். இவர் எனக்கு இலத்தீன்மொழி கற்பித்தவர்; கத்தோலிக்க கிறிஸ்தவ சமயத்தினர்; அழுத்தமான சமயப்பற்றும் நெறியும் உடையவர்; வழக்கறிஞர்; நான்காம் வகுப்புக்குமேல் தமிழ்ப் பயிலாதவர்; இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் வல்லவர். இப்போது இருந்தால் இவருக்கு வயது எண்பத்துநான்கு இருக்கலாம். நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னர், ஒருநாள், நீதிமன்றத்தில் வழக்கு உரைத்து உடலும் மனமும் அலுத்து மாலையில் வீட்டிற்கு வந்தார். நான் எப்போதும் மாலைக்காலத்தில்தான் அவரிடம் இலத்தீன் படிப்பது வழக்கம். உடைகளை மாற்றிக் கொண்டு வந்து என் முன் நின்ருர். "தம்பி, என் வாழ்க்கை ஆண்டவனைத் தூற்றுவதிலேயே கழிகிறது, என்ன செய்வது, மனம் அமைதியடையவில்லை; இச் சொற்கள்தான் ஆறுதல் 'a broken and a contrite heart O God thou wilt not despise' [Psalms 51-17] என்று சொல்லிக்கொண்டு அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தார். பின்னர், அவ் விவிலியநூல் சொற்ருெடரின் அருமையை எல்லாம் எடுத்துக்கூறி "பார், இந்த ஒரு சிறுதொடர் உள்ளத்தை எவ்வாறு அமைதிசெய்கின்றது; இத்தகைய அரிய வாசகங்கள் நம் தமிழில் இல்லையே" என்ருர். நான், உடனே அவர் கூறிய விரிவுரைகளுக்கெல்லாம் பொருத்தமானதும், இனிய எளிய சொற்களாலானதுமான "ஏசினும், யான் உன்னை ஏத்தினும், என் பிழைக்கே குழைந்து வேசறு வேனை விடுதி கண்டாய்" என்னும் திருவாசகத் தொடரைக் கூறி, திருவாசகம் என்ருல் என்ன என்பதையும், மாணிக்க வாசகர் யார் என்பதைப்பற்றியும் விளக்கமாகத் தெரிவித்தேன். மனம் மகிழ்ந்தார். "அருமையாக இருக்கிறது; இதுகாறும் தெரிந்து கொள்வதற்கியலாது போயிற்று; இனியும் தெரிந்துகொள்ளும் வாய்ப்பில்லை; அதனுல் குறை

யில்லை; நீ ஒவ்வொருநாளும் திருவாசகத்தில் ஒரு பாட்டை வாசித்துச் சொல்" என்று சொன்னார். அவ்வாறே, நானும் சிலநாள் சொல்லிவந்தேன். சில ஆண்டுகள் கழிந்தன. அவர் நோய்வாய்ப்பட்டிருந்தார்; காணச்சென்றேன்; ஆவி அகத்ததோ புறத்ததோ என்ற நிலையில் படுத்திருந்தார். என்னைப் பார்த்ததும், "தம்பி அதிகம் பேசுவதற்கில்லை; நீயும் என் நலத்தைப்பற்றி ஒன்றும் கேட்கவேண்டாம். காலத்தை வீண்போக்காது திருவாசகத்தில் ஒன்று சொல்" என்றார். நானும் மிகவும் தளர்ந்த குரலில்

மா வடு வகிர் அன்ன கண்ணி பங்கா! நின் மலர் அடிக்கே
கூவிடுவாய்? கும்பிக்கே இடுவாய்? நின் குறிப்பு அறியேன்;
பா இடை ஆடு குழல் போல், கரந்து, பரந்தது, உள்ளம்.
ஆ: கெடுவேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே

என்ற செய்யுளைப் பாடினேன். "போதும், அந்தத் தாளை எடுத்துப் பெரிய எழுத்துக்களில் 'மலர் அடிக்கே கூவிடுவாய்-அடியேன் உன் அடைக்கலமே' என்பதை மட்டும் எழுதிக் கொடு" என்றார். அவ்வாறே செய்தேன். அத்தாளை வாங்கி அருகே வைத்துக்கொண்டார். ஒருமுறை என்னைப் பார்த்தார். "நீ போகலாம், இனி வரவேண்டியதும் இல்லை" என்று கூறிவிட்டுக் கண்ணை மூடிக்கொண்டார். இனி எழுத என் மனம் வருந்துகின்றது. மறுநாள் அவர் இல்லை.

ஒருபொழுது தன் இனிய சொற்களைக் கேட்டார் உள்ளத்தையும் தன் வயமாக்கும் இந்தத் தெய்வத் திருவாசகம், முதன் முதலாக நூற்றுமுப்பது ஆண்டுகளுக்கு முன்னர், சிவக்கொழுந்து தேசிகரால் அச்சிடப்பெற்றது. பின்னர், பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளன. திரு. எஸ். இராஜம் அவர்கள் வெளியிட்ட பதிப்பைத் தவிர எல்லாப் பதிப்புக்களும் சந்தி பிரியாமல் அச்சிட்டனவேயாகும். சந்தி பிரித்து அச்சிடுவதால் செய்யுளின் ஓசை நலம் பழுது படும் என்பது பலருடைய கருத்து. சந்தி பிரியாது அச்சிட்டால் பொதுமக்கள் படிக்குங்கால் இடர்ப்படுவதோடு பொருளும் எளிதில் விளங்காது என்பது சில அறிஞருடைய கருத்து. இந்தக் கருத்து நூறாண்டுகளுக்கு மேலாக சிறந்த பதிப்பாசிரியர்களிற் சிலர் கொண்டிருந்தும் பல பதிப்பாசிரியர்களால் இதுவரை கையாளப்படவில்லை. சந்தி பிரித்து அச்சிடுவதா, பிரிக்காது அச்சிடுவதா என்ற கொள்கை ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாக நாம் கொள்வதற்கில்லை;

ஆதலால், தமிழறிஞர் பலரும் கருதும்படி, இக்கருத்தில் உடன்பட்ட சில பதிப்பாசிரியர்கள் கூறியுள்ளதை இம் முன்னுரையின் பிற்குறிப்பாகத் தந்துள்ளேன்; இது, சிறிது மிகுதியாயினும் பதிப்புக்களின் பயன் கருதி தரப்படுகிறது.

திருவாசகத்தைப் பெரும்பாலும் இசையுடன் பாடி இன்புறுவதே மரபாக இருந்து வருகிறது; ஆகையால், இதன் இசையமைப்பு பழுதுபடாவண்ணம் பதிப்பிக்க வேண்டுவது பதிப்பாசிரியருடைய முதற் கடமையாகின்றது. சீர் பிரித்து அடி வரையறையையும் காட்டிப் பதிப்பதுதான் இம்முறைக்குத் துணையாக இருக்கும். ஆனால் பொருளுணர்ச்சிக்குச் சந்தி பிரித்து ஒவ்வொரு சொல்லையும் தனியாகத் தெரிந்துகொள்ளும் முறையில் பதிப்பது இன்றியமையாதாகின்றது. எனவே, எல்லோரும் பயன் பெற வேண்டி, இப்பதிப்பில், இருமுறையும் கையாளப் பெற்றுள்ளது; ஒரு பக்கத்தில், செய்யுள்கள், சீர்பிரித்து, இதுகாறும் எல்லா நல்ல பதிப்புக்களிலும் பதிப்பித்துள்ளபடி, அச்சிடப் பெற்றிருக்கிறது. திருவாசகச் செய்யுள்களின் தொடர் எண், தமிழ் இலக்கத்தில், செய்யுளின் தொடக்கத்திலேயே கொடுக்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு பதிகத்துள்ளும் உள்ள செய்யுளின் தொடர் எண்ணை, ஒவ்வொரு செய்யுளுக்கும் மேல், நடுவில், தமிழ் இலக்கத்தில் தரப்பெற்றுள்ளது. எதிர்ப்பக்கத்தில், சந்தி பிரித்த பாடம் ஒவ்வொரு செய்யுளுக்கும் நேரில் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இந்தப் பக்கத்தின் தலைப்பில் பதிகத்தின் பெயர் தரப்பெற்றிருக்கிறது. ஒவ்வொரு செய்யுளுக்கும் தலைப்பில், அச்செய்யுளால் அறியக்கூடிய பொருள் சுருக்கமாகக் கொடுக்கப் பெற்றிருக்கிறது. செய்யுளின் தொடக்கத்தில் தொடர் எண்ணும், இறுதியில் பதிகத்தில் உள்ள தொடர் எண்ணும், அராபிய இலக்கத்தில் தரப்பெற்றுள்ளன. செய்யுள்கள், பொருள் எளிதில் விளங்கக்கூடிய அளவில் சந்தி பிரித்தும், குறியீடுகள் அமைத்தும் தரப்பெற்றுள்ளன. எளிதில் பொருள் விளங்காத சொற்களுக்குப் பொருளும் பக்கத்திலேயே கொடுக்கப் பெற்றிருக்கிறது. இந்த முறைகளினால், செய்யுளின் இசைநலம் குன்றாமலும், பொருள் விளங்க இடர்ப்பாடில்லாமலும், இந் நூலை எல்லோரும் படித்துக்கொள்ளலாம் என்று கருதப் பெறுகிறது.

திருவாசகப் பதிகமுறை வைப்பில், இதுகாறும் அச்சிடப்பெற்று வழங்கிவரும் முறைக்கும், திருவாதவூரர் வரலாற்றைக் கூறும் புராணங்களில் காணும் முறைக்கும் சில வேறுபாடுகள் இருக்கின்றன.

இப் புராணங்களில் பழமை வாய்ந்தது நம்பி திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம்.

"திருப்பெருந்துறையில் ஞானதேசிகர் திருவாதவூரரைப் பாடும்படி சொன்னபோது, 41 - அற்புதப்பத்து, 42-சென்னிப்பத்து, 51-அச்சோப்பதிகம் முதலிய பதிகங்களைப் பாடினார். பின்னர், ஞானதேசிகர் சுட்டிக்காட்டிய மாணாக்கர்களை நோக்கி, 26-அதிசயப் பத்து பதிகத்தைச் செய்தார். ஞானதேசிகர் மறைந்தருளிய பொழுதும் பிறகும், 22-கோயில் திருப்பதிகம், 27-புணர்ச்சிப்பத்து, 23-செத்திலாப்பத்து, 32-பிரார்த்தனைப்பத்து, 25-ஆசைப்பத்து, 34-உயிருண்ணிப்பத்து. 39-திருப்புலம்பல், 28-வாழாப்பத்து, 44-எண்ணப்பதிகம் முதலிய பதிகங்களைப் பாடியருளினார். பிறகு, திருப்பெருந்துறை நகருட்சென்று அங்கு நிகழ்ந்தவற்றைக் கண்டபோது, 8-திருவம்மானை, 9-திருப்பொற்சுண்ணம், 10-திருக் கோத்தும்பி, 11-திருத்தெள்ளேணம், 13-திருப்பூவல்லி, 14-திரு வுந்தியார், 15-திருத்தோணோக்கம், 7-திருவெம்பாவை, 5-திருச் சதகம் முதலிய பதிகங்களை அருளினார். பாண்டியனிடமிருந்து திருமுகம் வந்து கோயிலுட்சென்று முறையிடுங்காலத்து, 20-திருப் பள்ளி யெழுச்சிப் பதிகம் ஓதியருளினார். மதுரையில், குறித்த நாளில் குதிரைகள் வாராமை கண்டு, 33-குழைத்தபத்து, 29-அருள் பத்து பதிகங்களைப் பாடினார். குதிரைகள் வாராமையால் அரசனால் சிறையிலிடப்பட்டபோது, 24-அடைக்கலப்பத்து பதிகத்தைப் பாடினார். சிறைக்கு அண்மையில் மரத்திலிருந்த குயிலைப் பார்த்து, 18-குயில் பத்து பதிகத்தைப் பாடினார். குதிரைகள் மீது வரக் கண்ட வணிகரைப் பார்த்து மதுரை நகரத்து மகளிர் கூறியதாக, 17-அன்னைப்பத்து பதிகத்தை அருளினார். குதிரைப் பாகர்க்குப் பாண்டியன் பரிசளித்தபோது, 37-பிடித்த பத்து பதிகத்தைப் பாடி யருளினார். பரிகளெல்லாம் நரிகளாக மாறினபோது, 38-திருவே சறவு பதிகத்தைச் சொன்னார். பாண்டியன் அவரைச் செல்லும்படி இறுதியாக விடைதந்தபோது, 1-சிவபுராணப் பதிகத்தை அருளி னார். திரு உத்தரகோசமங்கையில், 6-நீத்தல் விண்ணப்பப் பதிக மும், திருக்கழுக்குன்றத்தில், 30-திருக்கழுக்குன்றப் பதிகமும் அருளி னார்." எனக் கூறுகிறது. எஞ்சிய 18 பதிகங்களைப்பற்றி ஒன்றும் வெளிப்படையாகக் கூறவில்லை.

கடவுண்மாமுனிவர் திருவாதவூரர் புராணம்: "அமைச்சுரிமை விட்டுத் துறவு பூண்டு திருப்பெருந்துறை சென்று ஞானதேசிகர் கட்டளைப்படிப் பூசித்து வரும் நாட்களில், 1-சிவபுராணம், 41-அற் புதப்பத்து, 26-அதிசயப்பத்து, 33-குழைத்தபத்து, 42-சென்னிப்

பத்து, 25-ஆசைப்பத்து, 28-வாழாப்பத்து, 24-அடைக்கலப் பத்து, 23-செத்திலாப்பத்து, 27-புணர்ச்சிப்பத்து, 29-அருள் பத்து, 43-திருவார்த்தை, 44-எண்ணப்பதிகம், 47-திருவெண்பா, 20-திருப்பள்ளி யெழுச்சி, 38-திருவேசறவு, 50-ஆனந்த மாலை, 34-உயிருண்ணிப்பத்து, 32-பிரார்த்தனைப்பத்து, 36-திருப்பாண்டிப் பதிகம் ஆகிய இருபது பதிகங்களை அருளிச் செய்தார். பிறகு பொய்கையில் தீ, தோன்றிற்று. அடியவரெல்லாம் ஐந்தெழுத் தோதித் தீக்குளித்து மறைந்தனர். வாதவூரர் மிக வருந்தி, 5-திருச்சதகம் பாடி, பின் உத்தரகோசமங்கை சென்று, 6-நீத்தல் விண்ணப்பம் பாடினர். பிறகு, இடைமருதைத் தரிசித்து ஆரூர் சென்று, 39-திருப்புலம்பல் பாடி, சீர்காழி சென்று, 37-பிடித்த பத்து பதிகம் பாடிப் பலதலங்கள் தொழுது திருவண்ணுமலையில் மார்கழி மாதத்தில் பெண்கள் நீராடத் துயிலெழுப்பிச் செல்வது கண்டு, 7-திருவெம்பாவைப் பதிகத்தையும், பெண்கள் அம்மானை ஆடுவது கண்டு, 8-திரு அம்மானைப் பதிகத்தையும் பாடிக் கழுக் குன்றடைந்து, 30-திருக்கழுக்குன்றப் பதிகம் பாடி, பிறகு, சிதம் பரம் சென்று ஞானதேசிகரின் திருவுருவங்கண்டு, 31-கண்டபத்து பதிகம் பாடி, தில்லையின் திருவீதிகளில் வலம் வரும்போது, 40-குலாப்பத்து, 22-கோயில் திருப்பதிகம், 21-கோயில் மூத்த திருப்பதிகம், 2-கீர்த்தித் திருவகவல், 3-திருவண்டப்பகுதி, 4-போற்றித் திருவகவல் பதிகங்கள் பாடி, ஆங்கு பெண்கள் பொற் சுண்ணம் இடித்தல் கண்டு, 9-திருப்பொற் சுண்ணப் பதிகம் பாடி, பின்பு 11-திருத்தெள்ளேணம், 14-திருவுந்தியார், 15-திருத்தோ ணோக்கம், 13-திருப்பூவல்லி, 16-திருப்பொன்னூசல், 17-அன்னைப் பத்து, 10-திருக்கோத்தும்பி, 18-குயில் பத்து, 19-திருத்தசாங்கம், 35-அச்சப்பத்துப் பதிகங்கள் பாடி, ஒரு பர்ணசாலை அமைத்துத் தில்லையிலிருந்தார். பின்பு புத்தரைவாதில் வென்று ஊமை அரச குமாரியைப் பேச வைத்து வாதத்தின் சாரத்தை, 12-திருச்சாழல் பதிகத்தில் அமைத்தருளினர். பிறகு, தில்லையிலேயே, 49-திருப்படை யாட்சி, 46-திருப்படை யெழுச்சி, 51-அச்சோப்பதிகம், 45-யாத் திரைப்பத்து முதலிய பதிகங்களைப் பாடியருளினர்'' என்று கூறு கின்றது. 48-பண்டாய நான் மறையைப்பற்றி இப் புராணத்துள் எதுவும் காணப்படவில்லை. 47-ஆம் பதிகமாகிய திருவெண்பாவின் எண், இருபத்தெட்டு செய்யுட்கள் எனக் கூறுகின்றது.

மகா வித்துவான் மீனுக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்கள் திருப்பெருந் துறைப் புராணம்: ''திருப்பெருந்துறையில், 1-நமச்சிவாயவா அழ்க, 41-அற்புதப்பத்து, 26-அதிசயப்பத்து, 33-குழைத்த பத்து 42-சென்னிப்பத்து, 25-ஆசைப்பத்து, 28-வாழாப்பத்து, 24-அடைக் கலப்பத்து, 23-செத்திலாப்பத்து, 27-புணர்ச்சிப்பத்து, 29-அருட் பத்து, 43-திருவார்த்தை, 44-எண்ணப்பதிகம், 20-திருப்பள்ளி யெழுச்சி, 5-திருச்சதகம் முதலிய பதிகங்களையும், திருவுத்தரகோச மங்கையில், 6-நீத்தல் விண்ணப்பப் பதிகத்தையும், திருவாரூரில், 39-திருப்புலம்பல் பதிகத்தையும், கழுமலத்தில், 37-பிடித்த

பத்துப் பதிகத்தையும், திருவண்ணுமலையில், 7-திருவெம்பாவை, 8-திரு அம்மானை முதலிய பதிகங்களையும், திருக்கழுக்குன்றத்தில், 30-திருக்கழுக்குன்றப் பதிகத்தையும், திருத்தில்லையில், 31-கண்ட பத்து, 40-குலாப்பத்து, 22-கோயில் திருப்பதிகம், 21-கோயில் மூத்த திருப்பதிகம், 4-போற்றித் திருவகவல், 2-கீர்த்தித் திருவக வல், 3-திருவண்டப் பகுதி, 9-திருப்பொற் சுண்ணம், 11-திருத் தெள்ளேணம், 14-திருவுந்தியார், 15-திருத்தோணேக்கம், 13-திருப் பூவல்லி, 16-திருப்பொன்னூசல், 10-திருக்கோத்தும்பி, 17-அன்னைப் பத்து, 18-குயில் பத்து, 35-அச்சப்பத்து, 19-திருத்தசாங்கம் 12-திருச்சாழல் முதலிய பதிகங்களையும் அருளினர்'' எனக் கூறு கிறது. எஞ்சிய பதினெரு பதிகங்களைப்பற்றி ஒன்றும் கூறவில்லை.

இப்போது வழங்கிவரும் திருவாசகப்பதிக முறையில் காணப்பெறும் இரண்டு பதிகங்கள், மேற்குறித்த புராணங் களில் காணப்படவில்லை. அவை 'திருவெண்பா' 'பண் டாய நான்மறை' என்பனவாம். இவ்விரண்டிற்கும் மாருக, 'தீதறச் சிறந்த வெண்பாத் திகழெழு நான்கு மோதி' எனத் திருவாதவூரர் புராணம் திருவம்பலச் சருக்கம் 14ஆம் செய்யுளின் ஈற்றடியில் காணப்படுகிறது. 'திருவெண்பா', 'பண்டாய நான்மறை; இரண்டும் வெண்பாக்களால் இயன்றுள்ளவை. திருவெண்பாவில் 11செய்யுளும், பண்டாய நான்மறையில் 7 செய்யுளும் ஆக 18 வெண்பாக்கள் காணப் படுகின்றன. திருத்தசாங்கம் என்பது பத்து வெண்பாக்களை யுடையது. அதனை மேற்கூறிய பதினெட்டுச் செய்யுட் களோடு சேர்ப்பின் இருபத்தெட்டு வெண்பாக்களாகும்; ஆயினும், திருத்தசாங்கமென ஒரு தனிப்பதிகம் வகுக்கப் பட்டிருத்தலின் அதனை ஈண்டுச் சேர்த்தல் முறையன்று. பண்டாய நான்மறை என்பது, செய்யுளின் முதற்குறிப்பாற் பெற்ற பெயர். அவ்வாறு பெயர் பெற்ற பதிகம் திருவாச கத்தில் வேறு எங்கும் காணப்படவில்லை. ஆகவே திரு வெண்பா என்பதே 28 வெண்பாக்களாக இருத்தல் வேண்டு மென்றும், அவற்றுள் 10 வெண்பாக்கள் இறந்து பட்டிருத்தல் வேண்டுமென்றும் எண்ண வேண்டியிருக் கிறது. ஒருக்கால், 'தீதறச்சிறந்த வெண்பா திகழெழு நான்கும்' என்பதில், பாடவேறுபாடுகள் இருப்பினும் இருக்கலாம். 'பண்டாய நான்மறை' என்ற பதிகம், திருவாசகப் பதிகவரிசையைக் கூறும் பழம்பாடல்கள் எல்லாவற்றுள்ளும் காணப்பெறுகின்றது. நன்கு சிந்திப் போமாயின், இப்போது வழங்கிவரும் முறை, திருவாத

ஊரடிகள் காலந்தொட்டே வழங்கி வந்ததாகக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

பதிக அடைவு வேறுபாடுகளை எளிதில் காணும்படி புராணங்களின்படியும், வழக்கிலுள்ளபடியும், பதிகவரிசைகளை அடைத்த ஒரு அட்டவணை, இம்முன்னுரையோடு இணைக்கப்பட்டுள்ளது. புராணங்களின் மூலச்செய்யுட்கள் பிற்சேர்க்கை ‘ ஈ ’-ல் தரப்பெற்றுள்ளன.

இதுவரை வெளிவந்துள்ள அச்சுப்புத்தகங்களையும், தமிழகத்தின் பல வேறுபட்ட இடங்களில் கிடைத்த நூற்றுக்கு மேற்பட்ட ஓலைச்சுவடிகளையும் ஒப்பு நோக்கி, உண்மைப் பாடம் காணும் கட்டளைகளைப் பின்பற்றித் தெளிந்த பாடங்களே இப்பதிப்பில் தரப்பெற்றுள்ளன. ஒப்பு நோக்கிய அச்சுப்புத்தகங்கள், சுவடிகள் முதலியவற்றின் விவரங்களும், பாடம் கண்ட முறையும், பல பாட வேறுபாடுகளும், தெளிவாக இந்நூல் இரண்டாம் பகுதியில் தரப்பெறும். பொருள் அகராதி, சொல் அகராதி, நூலில் வந்துள்ள கதைகள், பல இடங்களின் வரலாறு, யாப்பு அமைதி, புணரியல் விதிகள் முதலிய பல விளக்கங்களும் இரண்டாம் பகுதியில் வர இருக்கின்றன.

இப்பகுதியில் காணும் திருவாதவூரடிகள் வரலாறு, திருவாசக வரலாறு என்னும் இரண்டும், சுருங்கிய அளவிலும், சிந்தனையை ஊக்கும் வகையிலும் தரப்பட்டனவேயன்றி முழுதும் கூறுவனவல்லவாகலின், அடிப்படையாக அமைந்த வரலாற்று உண்மைகளைக் காட்டும் மேற்கோள்களும், ஆதரவுகளும் கொடுபடவில்லை. அடிகள் காலத்தைப் பற்றிய ஆராய்ச்சி மிகவும் பெருகியுள்ளமையின், அதைப் பற்றிய பல அறிஞர் கருத்துக்களின் சுருக்கம் இரண்டாம் பகுதியில் வரவிருக்கிறது. பிற்சேர்க்கைகள், நூருண்டுகளுக்கு முன்னர் பெரியோர் திருவாசகத்தையும், திருவாதவூரடிகளையும் போற்றிப் பொருள்கண்ட முறைகளைப் பல கோணங்களிலிருந்து பார்க்கச்செய்து மேலும் மேலும் ஆர்வத்தை விளைவிப்பதற்குத் தரப் பெற்றனவே யாகும்.

பல ஆண்டுகளாகத் திருவாசகப்பாடங்களைத் திட்டம் செய்வதற்கு, எனக்குப் பல ஓலைச்சுவடிகளை வரவழைத்துக் கொடுத்து உதவி வரும் திரு எஸ். இராஜம் ஐயங்கார் அவர்களுக்கும், பல ஏட்டுச்சுவடிகளில் உள்ள வேறுபாடுகளைக்

குறித்துக் கொடுத்து உதவும் தமிழ்ப் பேரறிஞர்கள் திரு வெள்ளைவாரண முதலியார், திரு சிவப்பிரகாச தேசிகர், திரு டி. கே. இராமாநுஜம் ஐயங்கார் சுவாமிகள் முதலிய அன்பர்களுக்கும், இப்பகுதி முழுவதும் அச்சிட்டபின்னர், பொறுமையாக இதிலுள்ள அச்சுப்பிழைகளைத் திருத்தி உதவியும், 'சீருடைக் கழலே' என்று நாள்தோறும் ஓதி வந்த பாடம் பொருத்தமானதா என்பதைச் சிந்திக்கச் செய்து, 'சீருடைக் கடலே' என்று பல சுவடிகளிலும் கண்ட பாடத்தை தேர்ந்தெடுக்கச் செய்தும், 'தேவர்' என்ற சொல், வடமொழியில், உபநிடதங்களில், 'புலன்கள்' என்ற பொருளில் வழங்கிவருவதை எடுத்துக்காட்டியும், பல வழிகளில் எனக்குத் துணைசெய்யும் திருச்சிற்றம்பலம் பேராசிரியர் மு. அருணாசலம்பிள்ளை அவர்களுக்கும், என் உளமார்ந்த நன்றியைத் தெரிவிக்கும் கடமையுடையேன்.

திருவாசகத்தைத் தங்கள் வெளியீட்டுத் திட்டத்தில் சேர்த்து, பதிப்பிக்கும் பணியை அடியேனுக்கு அளித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் அறிஞர் சர். சி. பி. இராமசுவாமி ஐயரவர்களுக்கும், திவான்பகதூர் தி. மு, நாராயணசாமி பிள்ளை அவர்களுக்கும், பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினர்களுக்கும், சிறப்பாக, திரு எம். பி. தாமோதரன் அவர்கள், இசையரசு தண்டபாணி தேசிகர், தமிழ்ப் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும், தமிழ்ப் பேராசிரியர்கள் திரு தெ, பொ. மீனாக்ஷி சுந்தரம்பிள்ளையவர்கள், கோ. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எல்லா நற்பணிகளுக்கும் தோன்றாத் துணையாக இருந்துவரும் பல்கலைக்கழக இணைவேந்தர், செட்டி நாட்டரசர் அறிஞர் சர். மு. அ. முத்தையா செட்டியார் அவர்களுக்கும், தமிழகம் முழுதும் போற்றி வணங்கும் பல்கலைக் கழகம் கண்ட 'செட்டிநாட்டரசர் அறிஞர் சர். மு. அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் நினைவிற்கும் எந்நாளும் நிலைத்த நன்றியுடையேன்.

சைவம் நிலைதளர்ந்த காலத்திலும் நாட்டிலும் சைவத்தை நிலைநாட்டித் தமிழ்ப் பெருமையை உலகறியச் செய்த குமரகுருபர முனிவருடைய வழிக்குரவர்களாகத் தமிழும், சைவமும் ஓங்கப் பல்வகையாலும் பொருளுதவி

செய்துவரும் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் இப் பதிப்பை வெளியிடத் திருவுளம் கொண்டமைக்கு அடியேன் வணக்கமும், நன்றியும் உரியதாகுக.

இப்பதிப்பு நன்முறையில் வெளிவருவதற்குப் பலவழி யாலும் முயன்றுவரும் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு டி. டி மீனுக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களுக்கும், வெளியீட்டுப் பகுதிப் பொறுப்பாளர் திரு ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை அவர்களுக்கும், கீதா அச்சுக்கூடத் தலைவர் திரு மணிஐயர் அவர்களுக்கும், அச்சுக்கூடத்திலேயே அச்சுப்படிகளைப் பிழைதிருத்திப் பார்த்து உதவும் வித்வான் நா. சுவாமி நாதன், எம். ஏ., அவர்களுக்கும் நன்றியுடையேன்.

இப்பதிப்பில் காணும் குறைகளையும், வேறு தக்க பாடங் களையும் எடுத்துக் காட்டும் அறிஞர்களுக்கு என்றும் கடமைப்பட்டவனுவேன். தக்க பாடங்களையும் திருத்தங் களையும் எடுத்துக் கூறும் அன்பர்களுடைய பெயருடன் அடுத்த பதிப்பில் வெளியிடும் ஆர்வமும் உடையேன்.

ஒன்றுக்கும் பற்ருத எளியேனை இவ் அருட்பணியில் புகுத்தியாண்ட திருவருளை வழுத்தி நிற்கும்.

தஞ்சை,
21-5-1964.

அடியுறை
நீ. கந்தசாமி

பிற்குறிப்பு

1843-இல் சென்னைக் கல்விச் சங்கத்துத் தமிழ்ப்புலவர் திரு. வேங்கடாசல முதலியார் கம்பராமாயணம், அயோத்யா காண்டப் பகுதியில் வெளியிட்டது.

இதனுலே சகலருக்கும் தெரியப்படுத்துகிறது என்ன என்ருல்:

இந்த ஸ்ரீமத் கம்பராமாயணம் அயோத்யா காண்டத்தில்—60-ம் பக்கம் தொடங்கி, பின் தொடர்ந்து வருகிற அந்தந்த திருவிருத்தத் திலும், அடிதோறும் உள்ள சொற்கள் எல்லாத்தையுமே, எடுத்துச் சந்தி பண்ணுமலும் விகாரப்படுத்தாமலும், அடிதொடை நோக்கியும், வேண்டும் இடம் அறிந்தும், சிலதுகளை மாத்திரம் எடுத்துச் சந்தி பண்ணியும் விகாரப்படுத்தியும், மற்றதுகளை எல்லாம் சந்திபிரித்தும் அச்சிற் பதிப்பித்து இருக்கிருேம். அப்படி எதுக்காக செய்யப்பட்டது

என்ருல், இதற்கு முன்னமே லோகோபகாரம் ஆக, எம்மால் அச்சிற்பதிப்பிக்கப் பட்டிருக்கின்ற சில சுவடிகளைப் பார்வை இட்ட வர்களில், இந்த பிராந்தியத்துப் பிரபுக்களும், வித்துவான்களும், புலவர்களும், கவிராயன்மார்களும் உபாத்தியாயர்களும் ஆயிருக்கிற சில பெயர்கள், அந்த சுவடிகளில் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பயன் உள்ள சந்தியையும் விகாரத்தையும் வைத்துக்கொண்டு, அதுகள் அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கையி ஞலே, இத்தமிழ் ஆனது லோகத்துக்கு உபகாரம் ஆகவேணும் என்று நமது முன்ஞேர்கள் நினைத்தபடிக்கு நாங்கள் பிரயோசனம் கண்டோம்; ஆகையால் அப்படியே இதிலும் செய்யப்படவேணும் என்று எம்மைக் கேட்டுக்கொண்டார்கள்; இதுவும் அல்லாமல் தமிழ் இலக்கணம் படித்தும், பல சொற்களுக்கும் உறுப்புக்களுக்கும் சொன்ன பொது விதிகளையும், சில சொற்களுக்கும் உறுப்புக்களுக் கும் சொன்ன சிறப்பு விதிகளையும் கொண்டு, இன்ன இடத்திலே சந்தியாவது விகாரமாவது வேண்டும், இன்ன இடத்திலே அது வேண்டாம், என்று ஓர்ந்து உணர்ந்து, பயன் உள்ள சந்தியையும் விகாரத்தையுமே அனுசரித்து, நமது முன்ஞேர்கள் கருதியபடிக்கு லோபோபகாரத்தை நிலைநிறுத்தாமல் பயன் இல்லாத சந்தியையும் விகாரத்தையுமே எங்கெங்கும் [?]அனுசரிக்கப் புறப்பட்டு, அந்த லோகோபகாரத்தை நிலைகெடுக்கிற இளங்கல்விமான்கள் பலபெயர் கள் இருக்கிருர்கள், அவர்களை சந்திப்பேய் அறையாமலும் விகார வெறிபிடியாமலும், அவர்களுக்குத் தெளிவு உண்டாகி, கலக்கம் தீரும்படியாய், இந்த சந்தியையும் விகாரத்தையும் குறித்து, சந்தி விளக்கம் என்று ஒரு நூல் செய்யவேணும் என்றும் கூடக் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களாலே கேட்டுக்கொள்ளப்பட்ட இந்த இரண்டும், லோகோபகாரமா இருக்கையால், யாமும் அதுகளுக்கு உடன்பட் டோம். அதற்காக, கற்றவர்களுக்கே செம்பாதி பொருள் விளங் காது என்று லோக வதந்தி ஆயிருக்கிற, இந்த ஸ்ரீமத் கம்பராமா யணத்திலே, மேற்படி சந்தியையும் விகாரத்தையும் தகுந்தபடி பிரிவினை செய்தால், அது முழுதும் பொருள் விளங்கும் என்று எண்ணி, முதலிலே அயோத்தியா காண்டத்தில் அறுபதாம் பக்கம் தொடங்கி, தேர்ந்த ஒரு நல்ல கல்விமான் ஆனவர், ஒருவரிடத்தில் தாம் கற்றபோதும், தாமே கற்கிறபோதும், தாம் ஒருவனுக்கு கற்பிக்கும்போதும், தமக்கும் கேட்போர்க்கும் பொருள் விளங்கி, இவர் கற்றவர்தாம் என்று கேட்டோர் தம்மை மதிக்கும்படியாய், எப்படி சந்தியையும் விகாரத்தையும் விலக்கி, பதங்களைப் பிரித்து படிப்பாரோ, அப்படியே பிரித்து அச்சிற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இதிஞலே ஆரணியகாண்டம் பாதிவரைக்கும் போயும், இதுவரைக் கும் யாதொரு திருவிருத்தமும் எமக்கு அர்த்தம் ஆகாதது இல்லை; இப்படி செய்யாததற்கு முன்னே, எமக்கு இதில் இருந்த மயக்கமும் இப்படி செய்த பின்பு அல்லவோ தீர்ந்தது. உங்களுக்கும் இப்படியே அனுபவம் ஆகல் ஆம். ஊன்றிப்பார்த்தால் இந்த விளம்பரத்

திஞலே கூட அந்த அனுபவம் காணல் ஆம், எப்படி என்ருல், இதிலே இருக்கிற சொற்களே, வேண்டும் இடங்களிலே சந்தி விகாரங்களே வைத்துக்கொண்டு, வேண்டா இடங்களிலே அதுகளே விலக்கி, எழுதியபடியால், இதை வாசிக்கிறதற்கும், வாசித்தபின் பொருள் அறிகிறதற்கும், அதி சுலபம் ஆயிருக்கிறதால், இதைக் கண்டு அறியுங்களேன்.

இனி சந்தியாவது விகாரமாவது, பயன் நோக்கி இன்ன இடத்திலே வேண்டும், பயன் இல்லாமையால் இன்ன இடத்திலே வேண்டாம், என்று ஓர்ந்து உணராமல், சந்தியையும் விகாரத்தையும் எங்கெங்கும் கொண்டு, நமது முன்னேர்கள் கருதிய லோகோபகாரத்தை கெடுக்கும் சந்தி விகார அபிமானிகள் ஆகிய இளங்கல்விமான்களுக்கு, இச்சந்திவிகாரங்களின் விவரங்களேயும், இதுகளால் வரும் பயன்களேயும், இலக்கணங்களாலேயும் இலக்கியங்களாலேயும் இதுகள் பயன் உள்ள சந்தியும் விகாரமும் இதுகள் பயன் இல்லாத சந்தியும் விகாரமும் என்று எடுத்துக்காட்டுதற்காக, மேலே சொல்லிய புத்திமான்கள் கேட்டுக் கொண்டபடிப சந்தி விளக்கம் என்று ஒரு நூலும் செய்யப்படும், அதிலே இந்த சந்தியையும் விகாரத்தையும் பிரிவிஃன செய்தற்கு வயனங்களும், அதிஞலேவரும் பயன்களும், அப்படி பிரிவிஃன செய்யாவிட்டால் வரும் நஷ்டங்களும், பிரிவிஃன செய்து காட்டச்சொல்லி கேட்டுக்கொண்டவர்கள் பெயர்களும் விளங்கும்.

1895-இல் முதுபெரும்புலவர் திரு வெ. ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் சுவர்க்க நீக்கம் மொழிபெயர்ப்பு முன்னுரையில் வெளியிட்டது.

"தமிழறிந்தோர் ஆங்கிலேயே பாஷையில் பழகுமுன் எழுதப்பட்ட நமது வசன நூல்களில், ஒரு வசனத்தின் முடிவையும் அடுத்த வசனத்தின் துவக்கத்தையும் காட்ட வசனங்களுக்கிடையே முடிப்பிசைக்குறி(.)யிட்டும் இடம் விட்டும் எழுதலாவது. ஒரு வசனத்திஞள்ளேயே வாசிப்போன் நிறுத்தி வாசிக்க வேண்டிய இடங்களில் உறுப்பிசைக்குறி(,) முதலிய குறியிட்டு இடம் விடுதலாவது இல்லே. அந்தக் குறை இப்போது இங்கிலீஷ் பாஷையின் வழக்கத்தை அனுசரித்து வேண்டுமிடத்து இடம் விடுதலாலும் பல குறியீட்டிஞலும் நிரப்பப்பட்டுவிட்டது. அவ்வாறு செய்யுள் எழுதும் முறை சீர்திருத்தப்படவில்லே. இப்போது அச்சிடப்பட்டுள்ள சில நூல்களில் செய்யுட்கள் சீர் பிரித்துப் பதிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் சந்தியும் பிரித்துப் பதிக்கப்பெற்ற நூல்கள் மிகச் சில. செய்யுளேச் சந்தி பிரித்துப் பதிக்கக்கூடாதென்பது அனேகர் கொள்கை. சந்திபிரிக்காத செய்யுட்களில் குறியீடு பெரும்பாலும் கூடாததே. சந்தி பிரித்துக் குறியீட்டோடு எழுதப்பட்ட செய்யுள், வாசிப்போர்க்கு, அவ்வாறெழுதப்படாத அதே செய்யுளிலும், எளிதாகப் புலப்படுமென்பதிற் சந்தேகமில்லே. செய்யுளேச் சந்தி பிரித்தெழுதும்போது, "மடங்கொன் றறிவ கற்றுங் கல்வி"

என்பதை "மடங்கொன்று அறிவு அகற்றும் கல்வி" என்று எழுதினுல் வெண்பா இலக்கணம் சிதைதல்போல, யாப்புக் கெடாமலும் சிலேடை யமகம் திரிபு மடக்கு முதலியவை பழுதாகா மலும் பிரித்தல்வேண்டும். சந்தி பிரியாதிருப்பினும் வாசிப்போர் இலகுவா யறிந்துகொள்ளக்கூடிய பாகங்களைச் சந்தி பிரித்தெழுதல் அவசியகமன்று. சந்தி பிரித்துக் காட்டல் நலமாயும் அதனுல் யாப்புக்கேடு வருவதாயும் இருந்தால், சந்திபிரித்துப் பொருள் கொள்ளவேண்டுமென்பதற்கடையாளமாகப் பிரிக்கவேண்டிய எழுத்துக்கு ஒரு குறியிடுதல் உசிதமாயிருக்கின்றது. 'வந்து அகாலத்துக் கண்டான்' எனற்பாலது இவ்வாறு சந்தி பிரித் தெழுதினுல் யாப்பு கெடும்படியாகச் செய்யுளில் வருமாயின் யாப்புக் கேடுருமல் 'வந்தகாலத்துக் கண்டான்' என்றெழுதலாம்.

அவ்வாறே , ; : . இவை முதலில் குறியிடுதல் வேண்டியதா யிருந்தும் அக்குறியீடு யாப்புக்கெடாமல் அமையாததாயின், எவ் வெழுத்தைப் பிரித்து இடையே எக்குறி இடவேண்டுமோ, அவ் வெழுத்தைப் பிரியாமல் அதன்கீழ் அக்குறி இடுதலும் தகுதியா யிருக்கின்றது. "அட்டாலும் பால்சுவையிற் குன்ருது, அளவளாய்" என்று பிரித்தெழுதில் யாப்புக் கெடுமாகலின், அவ்வாறெழுதாது "அட்டாலும் பால்சுவையிற் குன்ரு தளவளாய்" என்று யாப்புக் கேடின்றிக் குறியிடலாம். சந்தி பிரித்தல், சீர்பிரித்தல் குறியீடு ஆகிய இவைகளைப்பற்றி இப்போது கூறிய கருத்துக்களை ஞாபகத் தில் வைத்து இப்புத்தகத்தில் செய்யுட்கள் பதிப்பிக்கப்பட்டிருக் கின்றன. செய்யுட்களில், மேற்கூறியவாறு, சந்தி பிரித்தல் சீர் பிரித்தல் குறியீடு ஆகிய மூவகைச் சீர்திருத்தமும் ஒருங்கே பிரயோகித்து இந்நூல்தான் முதற்கட் பதிப்பிக்கப்பட்ட தென்ப தில்லை. இதற்கு முன்னமே (சொற்ப பேதத்துடன்) இவ்வாறு பதிக்கப்பட்ட நூலுண்டு.

இங்கிலிஷ் செய்யுட்களில் யாப்பிலக்கணப்படி அடிகளைச் சீர் பிரிப்பதில் பதங்கள் அர்த்தமாகாதபடி சிதைதலும் அவ்வடிகளை அர்த்தமாகும்படி பிரிப்பதில் யாப்பிலக்கணங் கெடுதலும் உண்டு. அவ்வாறன்றித் தமிழ்ச் செய்யுட்கள் விஷயத்தில் பொருளறியும்படி சந்தி பிரித்தலும், யாப்பிலக்கணத்துக் கிணங்கச் சீர்பிரித்தலும் ஒன்ருேடொன்று மாறுகொள்ளாது பெரும்பான்மை ஒத்திருக் கின்றன. "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி-பகவன் முதற்றே உலகு" என்பதில் சீர் பிரித்தலும் பொருளுக்காகப் பதம் பிரித்தலும் வேறுபடாமை விளங்கின்றது. இவ்வாறன்றி, இங்கிலிஷ் செய்யுட்கள் அர்த்தமாகும்படி பதம் பிரித்தல் ஒரு வகையாகவும் சீர் பிரித்தல் வேறு. வகையாகவும் இருப்பது, இவ்வேறுபாட்டை விளக்கும்படி இங்கிலிஷ் செய்யுட்களைப்போலப் பதம்புணர்த்தி யான் செய்த 'திரிபுரமெரித்த வுருத்திரனே - பொருகாமதகன னென்போன்' என்ற குறள் வெண்பாவினுல் விளங்கும். இப் பாவைச் சீர்பிரித்துக் காட்டவேண்டி, 'திரிபு ரமெரித் தவுருத்

திரனேபொருகா மதகனனென் போன்" என்றும், 'பொருள் புலப்படக் காட்டல்வேண்டில் 'திரிபுரம் எரித்த உருத்திரனே பொரு காமதகனன் என்போன்' என்றும், பிரித்தெழுத வேண்டும்."

1944-இல் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்கள் நான்மணிக் கடிகை முன்னுரையில் வெளியிட்டது.

"இந் நூலினைப் பதிப்பிடுதலில் ஒரு சில நியமங்களைக் கையாண்டுள்ளேன். இவற்றைக் குறித்துச் சில ஆண்டுகளாக நான் கருத்தூன்றி ஆலோசனை செய்ததுண்டு. புது நியமங்களுக்கு அவசியம் உண்டா? என்ற ஐயப்பாடும் இடையிடையே தோன்றியது. ஆங்கிலத்தில் 'சாஸர்' இயற்றிய கவிகளைத் தற்காலத்துள்ளார் பொருளுணர்ந்து கொள்வதற்கு அருமையாயிருத்தல் பற்றி, சொல்லின் எழுத்தமைதியை மாற்றி அச்சியற்றல் தகுமா? இது போன்றதுதானே செய்யுளின் சொற்களைப் பரிந்து அச்சிடுதல்? இங்ஙனம் பிரிப்பதால் செய்யுளின் ஓசை கெட்டுவிடுமல்லவா? இவை போன்ற கேள்விகளுக்கு முற்றும் திருப்திகரமான விடையளிப்பது எளிதல்ல. ஆனால், பொருள் எளிதில் விளங்கும்படி அச்சியற்றவேண்டும் என்ற நோக்கமும் கைக்கொள்ள வேண்டுவதாயுள்ளதே. இரு வகை மனப்பாங்கிற்கும் ஒரு சமரசம் ஏற்பட வேண்டியது அவசியம். இந் நெறியில் நான் சிறிது முயற்சி செய்திருக்கிறேன். அனுபவம் பெருகப் பெருக இந் நியமங்கள் திருந்தியமையலாம். செய்யுள் பயிலுவோரின் தொகை அதிகரித்து வரும் இந் நாளில் இந் நியமங்கள் தக்கபடி ஆராயப்பட்டு அனைவர்க்கும் உடம்பாடான சில நியமங்கள் ஏற்படக்கூடும். அக்காலம் விரைவில் வரின் நலமாகும்.

பொதுவாக நான் செய்துள்ள ஒரு சில வேறுபாடுகளைக் குறித்து மட்டுந்தான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

1. செய்யுட்களில் காமா, செமிக்கோலன் முதலிய குறியீடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்.

2. நேரிசை வெண்பாக்களில் தனிச் சொல்லை இரண்டாவது அடியில் சிறியதொரு கோடு அமைத்துத் தனிப்படக் காட்டுவது இப்போது வழக்கமாயுள்ளது. இவ் வழக்கம் சமீப காலத்திலேதான் ஏற்பட்டது. முற் காலத்து ஏட்டுப் பிரதிகளில் இது கிடையாது. முதல் முதலில் அச்சிடும் முயற்சியில் இயங்கியவர்களில் சிலர் சிறிது வெற்றிடம் விட்டும், சிலர் இடம்விடாது தொடர்ந்தும் தனிச் சொல்லைப் பதிப்பித்தனர். வேறு சிலர் தனிச் சொற்களுக்குமுன் கவிவெண்பாவில் உடுக்குறியிட்டு பதிப்பித்தனர். உதாரணமாக 1831-ல் தாண்டவராய முதலியாரால் 'பழுதற ஆராயப்பட்டு' வெளிவந்த திருக்குறண்மூலமும் நாலடி நானூற்றின் மூலமும்' என்ற பதிப்பைக் காண்க. 1868–ல்

வெளியிட்ட வடமலை வெண்பாவும் இங்ஙனமே பதிப்பிக்கப்பட்டுள்ளது. மிகப் பிற்பட்ட காலத்தில் தான் (சுமார் 1875) கோடிட்டுக் காட்டும் வழக்கம் ஏற்பட்டது. தனிச் சொல்லை விதித்துள்ள இலக்கண நூல்களில் அதனை இவ்வாறு காட்ட வேண்டும் என்ற குறிப்புக் கொடுக்கப்படவில்லை. கலிப்பா முதலியவற்றுள் தனிச் சொல் வரும்போது அதனைக் கோடிட்டுக் காட்டும் வழக்கம் இன்றும் கிடையாது. நேரிசை வெண்பாவிலும் கலிவெண்பாவிலும் மட்டுந்தான் இதனை இப்போது கையாண்டு வருகிறார்கள். நேரிசை வெண்பாவில் சில இடங்களில் கோடிடுவது பொருளை எளிதில் உணர்வதற்காக இடும் காமா முதலிய குறியீடுகளுக்குத் தடையாயிருக்கிறது. ஆகவே, இப் பதிப்பில் தனிச் சொல்லுக்கு அடையாளமாக இடும் கோடு நீக்கப்பட்டுள்ளது.

3. சொற்கள் அசையுறுப்புக் கெடாதவண்ணமும் எதுகை, மோனை, சீர் இவற்றின் நயங்கள் கெடாதவண்ணமும் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

4. *கீழ்வருவனவற்றைப் பிரிக்கவில்லை :—*

மரபு வழிப்பட்ட அடைமொழிகள் (உ-ம்) கொடுங்குழை, வான்முகம். சிறுமை, பெருமை, நல், தீ முதலிய அடைமொழிகள் (உ-ம்) பெருங்கடல், பெருஞ்சிறப்பு.

ஒரு சொல் நீர்மைத்தாக அமைந்த சொற்கள் (உ-ம்) வேளாண்மை, மேற்பட, இன்புறூஉம்.

எல்லாம் என்பது சேர்ந்து வரும் பெயர்கள் (உ-ம்) மரமெல்லாம். ஆ, ஆக, ஆகிய முதலிய சேர்ந்து வரும் பெயர்ச்சொற்கள் (உ-ம்) வித்தாக.

வேற்றுமை யுருபுகள், சாரியை, சொல்லுருபுகள் சேர்ந்துவரும் பெயர்கள். (உ-ம்) படியை, மடியகத்து.

உருபுகள் தொக்குவரும் பெயர்கள் (உ-ம்) அறஞ்சேர்ந்த, காதற் புதல்வர், எள்ளற் பொருளது.

பண்பு குறிக்கும் குறிப்புச் சொற்கள் (உ-ம்) மெல்லென்றல்.

கொள் முதலிய துணைவினைகள் சேர்ந்துவரும் வினைகள் (உ-ம்) பூசிக்கொளினும், தவிர்க்குமாம்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

எச்சத்தின்மேல் வரும் அன்ன, அனைய முதலியன (உ-ம்) கற்றன்னர்.

எச்ச வாய்பாடுகள் (உ-ம்) சிறிதாயின்.

மேலே குறிக்கப்பட்டனவொழியப் பிற இடங்கள் பெரும்பாலும் பிரிக்கப்பட்டிருக்கும். இப்பதிப்பிலே, வேறு இரண்டு நியமங்கள் முக்கியமாகக் கவனிக்கத்தக்கன. குற்றுகர முற்றுகரங்களும் இன்மைப் பொருளில் வரும் இல்லும் எல்லா இடங்களிலும் பிரிக்கப் பட்டிருக்கின்றன."

1955-இல் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் திவ்ய பிரபந்தம், முதலாயிரப் பதிப்புரையில் வெளியிட்டது.

"இவ் இலக்கியச் செல்வத்தைத் தமிழ் மக்கள் அனைவரும் பாடிக் கவிதைச் சுவையில் ஈடுபட வேண்டுமானால், இன்னும் நூதன முறைகளை அனுசரித்து, ஒரு புதிய பதிப்பு வெளிவருதல் வேண்டுமென்று தோன்றியது. இக்கருத்தின் விளைவே இப் பதிப்பாகும்.

இதற்கு முன் அச்சியற்றி வந்துள்ள முறைகளை இங்கே கவனித்தல் அவசியமாகும். ஒரு காலத்தில் அடி வரையறை தெரியக்கூடாத வண்ணமே செய்யுட்களை ஏட்டில் எழுதி வந்தனர். பிற்பாடு அடி வரையறை காட்டப்பட்டது. அச்சில் அடி வரையறையைக் காமா, உடுக்குறி முதலிய குறியீடுகளால் காட்டி வந்தனர். இவ்வளவில்தான் திவ்யப் பிரபந்தப் பதிப்புக்கள் வெகு காலம் அச்சியற்றப்பெற்று வந்தன. செய்யுட்களை வாசிப்பதில் இம்முறை பெரிதும் பயன்படாமையினாலே, பின்னர், சீர்பிரித்து அச்சிடத் தொடங்கினர். 1934-ல் ஸ்ரீ வி. கே. ராமாநுஜதாஸன் அவர்கள் முதல் முதலில் திருவாய்மொழியைச் சீர்பிரித்து வெளியிட்டனர். 1952-ல் வெளிவந்த ஸ்ரீ பி இரத்தின நாயகர் ஸன்ஸ் அவர்கள் பதிப்பில் நாலாயிரம் முழுவதும் இங்ஙனமே சீர்பிரிக்கப் பட்டுள்ளது, இம் முறையில் பெரும்பயன் உண்டாயிற்று. செய்யுட்களின் இயல்பு நன்கு புலனாயிற்று. அன்றியும் பிரிப்பதில் செய்யுள் இலக்கணத்தை முக்கியமாகக் கவனித்து வந்தமையினாலே அச்செய்யுட்களில் பிழையிருக்குமாயின் அவை எளிதில் புலப்படுதற்கும் இடம் ஏற்பட்டது.

மேலும், சீர்களைப் பிரித்தல் இசை யின்பத்தை உணர்தற்கும் பயன்பட்டது. ஏனெனில் இவ்வின்பம் சீர்களையே முக்கிய நிலைக் களமாகக் கொண்டது. அதனோடு ஆழ்வார்கள் பாடிய காலத்து வழங்கிய இசை பற்றியும் அவ் இன்பம் சிறந்து விளங்கும். ஆழ்வார்களோடு ஏறத்தாழச் சமகாலத்தினராகிய நாயன்மார்களின் திருப்பாடல்கள் இசை இன்பத்தை உணர்வதற்கும், செய்யுள் இன்பத்தை உணர்வதற்கும் மிகவும் பயன்படுவனவாகும். சிறிது காலத்திற்கு முன்பிருந்த அறிஞர்களும் இதை யுணர்ந்து இசை பற்றிய குறிப்புக்கள் தந்துள்ளார்கள். உதாரணமாக, 'பிறந்த வாறும்' என்ற பாசுரத்தின் முகப்பில் 'பண்-காந்தாரம்' என்பதனோடு, 'தாளம்-ஏழொத்து, மோகனராகம், ஆதி தாளம்' என்ற குறிப்பும் உள்ளது. இதனை 1865-ல் வெளிவந்த ஸ்ரீ அப்பாவு முதலியார் பதிப்பில் காணலாம். ஆனால், இவைகளெல்லாம் சேவிப்பவர்களுக்கும் சந்தை சொல்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் விளக்கமற்ற குறிப்புக்களேயாகும். கற்போர்களெல்லாரும் சங்கீத வித்வான்களாக இருக்க முடியுமா?

சீர் பற்றிப் பிரிப்பதும் இசை பற்றிப் பிரிப்பதும் பொருளுணர்ச்சிக்கு உதவுவன அல்ல. தமிழறிவு மிக்கார்க்கும் இசை-அறிவு உடையார்க்கும் அன்றி ஏனையோர்க்கு இவை பயன்படமாட்டா.

பொருளுணர்ச்சிக்கு சீர் பிரிப்பதைக் காட்டிலும், சந்தி பிரிப்பது அவசியம். தமிழ் இலக்கணத்தைக் கற்பவர்கள் இக்காலத்தில் அரியர். சந்தி சேர்ந்துள்ள தொடர்களை இவர்கள் பிரிக்கமுடியாமல் தடுமாறுகிருர்கள். இம் முயற்சியும் பலராலும் ஒரு நியம மின்றிப் பலபடியாகக் கையாளப்பட்டு வந்துள்ளது. எனவே, இது வேண்டும் பயனை அளிக்கவில்லை. இருபாலார்க்கும் எளிதில் பொருள் உணரக் கூடியபடி செய்யுளை அமைத்தால்தான் தற்காலத்தவர்க்குப் பயன் படுவதாகும். இந்நோக்கம் செய்யுளில் வரும் பதங்களில் பெரும் பாலானவற்றைப் பிரித்தால் அன்றி முற்றுப்பெருது. இந்நெறியே ஏனையவற்றைக் காட்டிலும் சிறந்தது. அடி பிரித்தல், சீர் பிரித்தல், சீருள்ளே சந்தி பிரித்தல், பதங்களைப் பிரித்தல் என வரும் பரிணமைக் கிரமப்படியும் இது உண்மையாதல் காணலாம். எனினும், இசையும் ஒரோ இடங்களில் கவனிக்கும்படியாயிற்று. உதாரணமாக, 'அமலனுதிபிரான்' என்ற பாசுரத்தில் இதன் அவசியத்தைக் கண்டுகொள்ளலாம். இங்ஙனமே சீர்களையும் ஒருவாறு தழுவிப் பதங்களைப் பிரித்திருக்கிறது. பொருளுணர்ச்சிக்கு வேண்டும் காமா முதலிய பலவகை நிறுத்தல் – குறியீடுகளும் இடப்பட்டுள்ளன.

இனி, பதங்களைப் பிரித்தல் முதலியன பற்றி இப்பதிப்பில் கையாண்ட நெறிகளில் மிக முக்கியமானவற்றைக் கவனித்தல் வேண்டும். பதங்களைப் பிரிப்பதில் சந்தி முக்கியமான அம்சம். அவற்றுள் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். 'இல்' என்பது பல பொருளில் வரும். வீடு, இன்மை, உருபு என்பனவாக வருதலை முக்கியமாகக் கூறலாம். உருபாக வருவதன்பின் வல்லினம் வருமாயின் அது, சந்தி பெற்றே வரும். 'திண்ணக் கலத்திற்றிரை' என்பது திவ்யப் பிரபந்தம் (163). 'புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்' என்பது குறள் (46). இன்மைப் பொருளில் வருமிடத்துச் சந்தி சேர்த்தல் இல்லை. 'வழுவில் கொடையான்' (திவ்யப். 47). 'ஏதமில் தண்ணுமை' (திவ்ய. 924). 'கோளில் பொறியில்' (குறள் 9) என்பவற்றைக் காண்க. உறழ்ந்து வருதலுங்கூட இவற்றில் கிடையாது; இயல்பாகவே நிற்கும். இவ் ஈரிடத்தும் வரும் பிரயோகத்தை வேறு பிரித்தறிதல் அவசியமாகும். அன்றியும் உருபேற்ற நிலையில் திரிந்துவரும் எழுத்துக்கள் கடின சந்திகளின் பயனும். இவற்றை நீக்குதலும் வேண்டும். இவ்வகைக் கடின சந்திகளில் வருமொழியின் வடிவமும் விளங்க மாட்டாது. உதாரணமாக, 'திண்ணக் கலத்திற் றிரை' என்பதில் 'றிரை' என்பதன் உண்மை வடிவம் புலப்படுதல் அரிது. ஆகவே, வருஞ் சொல்லின் ரூபம் தெளிவுபட இருத்தல் நல்லது. சந்தியையும் ஒருவாறு காட்டினுல்தான் பொருளும் தெளிவுபடும். இதனுல் 'கலத்திற் திரை' என்று கொடுப்பதே தகுதி எனக் கொள்ளத் தக்கது. இன்னும் பையிற்றுயின்ற என்ற திருப்பாவைப் பாசுரப் பகுதியில் 'துயின்ற' என்பதனைத் தெளிவுபடுத்திச் சந்தியையும் ஒருவாறு சுட்டி 'பையிற் துயின்ற' என்று அமைக்கப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் கருதியே சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்

கள் தமது பதிப்புக்களில் இம்முறையைக் கையாண்டனர். இது போன்ற கடின சந்திகளிலன்றிப் பிற இடங்களில் எல்லாம் சந்திகள் தெளிவாகவே பிரித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

குற்றுகர முற்றுகரச் சந்திகளைப் பிரித்து, உகரங்களை நக வளைவுக் குறிகளுக்குள் அமைத்துத் தற்காலத்தார் பலர் பாடல்களை அச்சிட்டு வருகின்றனர். இதனால் குற்றுகரம் முற்றுகரம் என்ற இலக்கணம் தெரியலாம். மற்றும் வருமொழி இன்னதெனத் தெரிதற்கு இடமுண்டு. செய்யுளோசையை உணர்தற்கும் இது பயன்படுவதாகலாம். ஆனால், செய்யுளோசையில் நோக்கமின்றிப் பதங்களைப் பிரித்து அச்சிடும் தற்கால நெறியில் இவை சிறிதும் பயன்படமாட்டா. எனவே, உகரங்களைத் தனிப்படக் காட்டும் நெறி கையாளப்படவில்லை."

உ

திருச்சிற்றம்பலம்

திருவாதவூரடிகள் வரலாறு

ஆர் அருள் வடிவம்–ஆய அன்னையார் திருக்கண் சாத்த
சீர் அருள் அம்பலத்தில் திருநடம் நவிலுவாரே
பேர் அருளொடு கை–ஏடு பிடித்து எழுதிடப் பணித்தார்
நார் அருள் அடியாரோடு நமை எழுதவும் பணிப்பார்,

திருப்பெருந்துறைப்புராணம்.

தமிழகத்தில் சைவ நன்மக்களால், தெய்வநிலையில் வைத்துப் போற்றப்பெறும் சமயகுரவர் நால்வருள் திருவாதவூரடிகள் ஒருவர். இவருக்கு, மாணிக்கவாசகர், மணிவாசகர், அருள்வாசகர், பெருந்துறைப்பிள்ளை, ஆளுடைய அடிகள் என்ற பெயர்களும் வழங்குகின்றன. இப்பெயர்களுள், பெரும்பான்மையாக வழங்கப்பெறுவது மாணிக்கவாசகர் என்னும் பெயர். சிவபெருமான், ஞானதேசிகனாக இவரை ஆட்கொண்டபோது இப்பெயரைச் சூட்டினார் என்பது பலரும் கூறும் வரலாறு. இதனைப் பரஞ்சோதி முனிவர்

"பழுது இலாத சொல்மணியினை, பத்திசெய்து, அன்பு
முழுதும் ஆகிய வடத்தினால் முறை தொடுத்து, அலங்கல்
அழுது சாத்தும் மெய் அன்பருக்கு, அகம் மகிழ்ந்து ஐயர்,
வழுவு இலாத பேர் மாணிக்கவாசகன்" என்றார்.

எனக் குறிப்பிடுகிறார். திருவாதவூரில் பிறந்தமையால், திருவாதவூரடிகள், வாதவூரர், என்றும்; சிவபெருமானால் திருப்பெருந்துறையில் ஆட்கொள்ளப் பெற்றமையால், பெருந்துறைப்பிள்ளை என்றும்; சிவபெருமான் ஆட்கொண்ட நால்வருள் இவர், ஆண்டான் அடிமை முறையில் நின்றமையாலும், துறவு பூண்டமையாலும் ஆளுடைய அடிகள் என்றும் பெயர் பெற்றார்.

இவருடைய வாழ்க்கை வரலாறு, இரண்டு பெரும் பிரிவுகளில் கருதப்பெறவேண்டும்; ஒன்று ஞானநெறி வாழ்க்கை; மற்றொன்று உலகநெறி வாழ்க்கை. முன்னையதை நாம் தெரிந்துகொள்வதற்கு, இவரே, தெளிவான குறிப்புக்களைக் கொடுத்துள்ளார்; அக்குறிப்புக்கள், இவர் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத் திருவாசகத்தின்



தேனூறும் அமுதப்பாடல்களிலுள்ளனவேயாகும். இத் தெய்வத் தீந்தமிழ்ப் பனுவலைப்பற்றிய சிறு முன்னுரை ஒன்று, பின்னர், தனித் தலைப்பில் தரப்பட்டுள்ளது

இவருடைய உலகநெறி வாழ்க்கையைத் திட்டமாகவும், தெளிவாகவும் தெரிந்துகொள்ளுதற்கேற்ற பழைய வரலாற்றுச் செய்திகள், நூல்வழியாகவோ, வரலாற்று முறையில் இடம்பெறக்கூடிய வேறு ஆதரவுகள் வழியாகவோ, இதுகாறும் நமக்குக் கிடைத்தில ; நாமும் இதுவரையில் இவற்றைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டோமில்லை. இவருடைய இயற்பெயர்தானும் எது என்பது அறிந்திலோம் ; இவரைப்பற்றி இப்போது நாம் தெரிந்திருப்பதெல்லாம், புராணங்கள் மான்மியங்கள் என்று வரும் பழங்கதைகளில் வந்த செய்திகளே.

இந்தப் புராண இலக்கியம், ஒரு தனித்தகுதியுடையது; செவிவழக்காக வந்தவற்றை மிகைப்படுத்தியும், உருவகப் படுத்தியும், தெய்வீக நிகழ்ச்சிகள் பலவற்றைக் கற்பனை செய்து புகுத்தியும், தொன்றுதொட்டு வரும் கருத்துக் களையும், வரலாற்றுச் செய்திகளையும், கொள்கைகளையும் இடையிடையே பின்னியும், எடுத்துக்கொண்ட பொருளுக்கு ஏற்றம் கற்பிப்பதற்காக, காலங்கடந்த இதிகாச மாந்தருடனும், தெய்வங்கள் முனிவர்களுடனும், பெருவழக்கிலுள்ள பழஞ்செய்திகளுடனும் தொடர்புபடுத்தியும், மக்களின் அறிவு, இச்சை, செயல்களை வளம்படுத்தி நல்வழிப் படுத்துவதற்காகப் பல உண்மைகளையும் வாழ்க்கை வழிகளையும், கதைகள் மூலமாகவும் வற்புறுத்திக்கூறும் நல்லுரைகள் மூலமாகவும், புராணம் இயற்றியோர் கொள்கைகள் அவர்கள் காலத்தின் கருத்துக்கள் நிகழ்ச்சிகள் முதலியவற்றை உள்ளீடாகப் புகுத்தியும், எளிய முறையில் எல்லோர் உள்ளத்திலும் பதியுமாறு சொல்லிவருவதாகும். இதனால் விளைந்த நன்மைகளும் ஊக்கமும் பல என்றாலும், இப்பகுதி இலக்கியத்தைச் சார்ந்த நூல்களிலிருந்து வரலாற்று உண்மைகளை அறிந்து கொள்ளுவது எளிதல்ல,; ஆனால் வரலாற்று உண்மைகள் அடிப்படையில் இல்லாமலும் இல்லை.

திருவாதவூரடிகள் வரலாற்றைக் கூறுவனவாக எழுந்த புராணங்களில், காலத்தால் முற்பட்டது, ஏறக்குறைய அறு நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய, பெரும்பற்றப்

புலியூர் நம்பி 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமும்;[1] பின்னர் தோன்றியவற்றுள் ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் எழுந்த கடவுண்மாமுனிவர் "திருவாதவூரர் புராணமும்," ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகளுக்குமுன் வந்த பரஞ்சோதி முனிவர் 'திருவிளையாடற் புராணமும்[2]', தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் எழுதிய 'திருப்பெருந்துறைப் புராண'மும்[3] கருதவேண்டியவை. மாசிலாமணி ஞானசம்பந்தர் என்னும் பெரியாரின் மாணவர் ஒருவர் எழுதிய 'உத்தரகோசமங்கைப் புராணம்'[4]

---

1. ஞானோபதேசம் செய்த திருவிளையாடல் 89ம், நரி குதிரையான திருவிளையாடல் 96ம், குதிரை நரியான திருவிளையாடல் 20ம், மண் சுமந்த திருவிளையாடல் 56ம் ஆக 261 செய்யுள்கள்.

2. வாதவூரருக்கு உபதேசித்த படலம் 86ம், நரி பரியாக்கிய படலம 127ம், பரி நரியாக்கிய படலம் 66ம், மண் சுமந்த படலம் 114ம் ஆக 393 செய்யுள்கள்.

3. திருவாதவூரர் திருவவதாரப் படலம் 65ம், அமைச்சுரிமை பூண்ட படலம் 61ம், திருப்பெருந்துறையடைந்த படலம் 67ம், உபதேச படலம் 100ம், மதுரையை அடைந்து விடைபெற்ற படலம் 77ம், தில்லையை அடைந்த படலம் 73ம் ஆக 473 செய்யுள்கள்.

புருநவன் பெருந்துறையடைந்து திருவிழாச்செய்த படலத்தில், திருவாதவூரருக்குத் திருவிழா எடுத்துச் சிறப்புற நடைபெறும் செய்தி பல விளக்கங்களுடன் அழகுபெறச் சொல்லியிருக்கிறது.

4. பார்ப்பதி தவம் புரிந்த அத்தியாயத்தில் 11, 12, 13, 19, 20 ஆவது செய்யுள்கள். இப்புராணம் கூறுவதின் சுருக்கம் "ஓராயிரம் முனிவர்களுக்குச் சிவபெருமான் ஞானோபதேசம் செய்துவரும் நாட்களில், ஒரு நாள், இலங்கையில் தன்னை நோக்கித் தவம் செய்யும் மண்டோதரிக்கு அருள் செய்யச் சென்றவர் தன் கைச்சுவடியாகிய எழுதரும் திருமுறையை ஆயிரம் முனிவருள் ஒருவராய மாணிக்க வாசகர் என்பவரிடம் கொடுத்தார். சிவபெருமான் கட்டளைப்படி அங்குள்ள திருக்குளத்தில் தீப்பிழம்பு தோன்ற முனிவரெல்லாம் அதனுட் பாய்ந்தனர். மாணிக்கவாசகர் திருமுறையைக் காப்பாற்ற வேண்டி அத்திருக்குளத்தின் கரையிலேயே நெடுநாள் தங்கியிருந்தனர். பொருள்நூல்பொறித்த திருமுறையைப் போற்றல் குறித்து வீற்றிருந்த, மருள்நீங்கு உணர்வின் மாணிக்கவாசகனை, எம் இறை நோக்கி, "இருள் நீர் வேலி ஞாலத்தில், யாம் வாழ் தலங்கள் தொறும் அடைந்து, தெருள் நீர் மொழிச் செய்யுளில் புகழ்தல் செய்தி; அதன் பின், ஓர் பதியில், தொன்றுபடும் மும்மலம் நீக்கி, தோன்றாத் துணையின் அருள் வெளிப்பட்டு, என்றும் உலவாப் பேரின்பத்து இரண்டும் ஒன்றும் அறத்திளைப்ப உயர்வீடு அருள்வாம்" என நவின்றார்.

மாணிக்கவாசகரின் முற்பிறப்புச் செய்தி ஒன்றைத்தான் பேசுகிறது.

எவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்றாலும், அவர்கள் பிறந்த, வளர்ந்த, வாழ்ந்த சூழ்நிலையைப் பற்றியும், அக்காலத்து அரசியல் நிலை, நாட்டு நிலை முதலியவற்றைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே, இவ்வரலாறு, மிகவும் சுருங்கிய முறையில், முதலாவதாக, வாதவூரர் பிறந்த சிற்றூரைப்பற்றியும், இரண்டாவதாக, கடவுண்மாமுனிவர் எழுதிய திருவாதவூரர் புராணத்தில் கண்டபடி வாதவூரர் வரலாற்றையும், மூன்றாவதாக, வாதவூரர் காலத்துப் பாண்டியநாட்டு அரசியல், பொருளாதார நிலைகளைப்பற்றி இந்த வரலாறுக்கு வேண்டிய அளவு சிறிது கூறியும், வாதவூரர் உலக வாழ்க்கையைத் தெரிந்துகொள்வதற்கு இதுவரை வழங்கிவருகிற வரலாற்றை அடிப்படையாக வைத்து சில கருத்துக்களை எழுப்பி சிந்தனையை ஊக்கும் முறையிலும் எடுத்துரைக்க முன்வருகிறது. வாதவூரர் வரலாற்றில், கடவுண்மாமுனிவர் சொல்லுவதற்கும், பெரும்பற்றப்புலியூர்நம்பி சொல்லுவதற்குமுள்ள கருதத்தக்க செய்தி வேறுபாடுகளை அடிக் குறிப்பில் காணலாம். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் வாதவூரர் வரலாறு எவ்வாறு அறிஞர்களால் சுருக்கமாகக் கூறப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டாகத் திருவாவடுதுறை ஆதீன மஹாவித்வான் தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகள் எழுதிய பாட்டில் ஒரு பகுதியும் கொடுக்கப் பெற்றிருக்கிறது. (பிற்சேர்க்கை 2)

I

நம்நாடு, பரந்த நிலபரப்பும், நீண்ட வரலாறும் உடையது. பழங்காலந்தொட்டே, இதில் சில சிறு ஊர்கள், ஞானப் பயிர் விளைவிக்கும் நாற்றங்கால்களாக இருந்து வந்திருக்கின்றன. இவை, நிலப்பரப்பில் மிகமிகச் சிறியவையாக இருப்பினும், தொன்றுதொட்டு தொடர்ந்துவந்த தூய பண்புகளைக் காப்பாற்றியும், வளர்த்தும், பரவச்செய்தும் வந்தவகையில், மக்கள் வரலாற்றுள் சிறந்த இடம் பெறத் தக்கவையாகின்றன. இந்த ஞான நாற்றங்காலின் வரலாறுகள், இதுகாறும், சிறிதளவிலேனும் ஆராயப்பெறாதது வரலாற்றுப் பகுதியில் ஒரு பெருங்குறையேயாகும். இயற்

கையின் சீற்றத்தாலும், வேற்றவர் படையெடுப்பாலும், மக்களின் நெறி திறம்பிய போக்குகளினாலும், ஆள்பவர் அறிவின்மையாலும், ஒவ்வொரு கால வட்டங்களில், நாடு இன்னலுற்று, மக்கட் பண்புகள் வாழ்வதற்கான நீரூற்று கள் யாவும் வறண்டு, பாலை வனமாக மாறும் நிலைமைக்கு வந்த நாட்களிலெல்லாம், இந்தச் சிற்றூர்களே பாலைவனத் தில் பசுஞ்சோலைகளாக நின்றன. இமயம் முதல் குமரி வரை பரவியுள்ள நம் நாட்டில், பலவேறு இடங்களில், பல வேறு காலங்களில் தோன்றி, வளர்ந்து, ஒன்றுபட்டுப் பரவிய நற்பண்புகளும், ஞான நோக்கங்களும் இச்சிற்றூர் களையே புகலடைந்து உயிர் வாழ்ந்தன. இச்சிற்றூர்களில் வாழ்ந்த மக்கள், ஊன் நோக்கும் இன்பம் வேண்டி உழல் வதிலேயே காலத்தைக் கழித்து விடாமல், வான் நோக்கும் வழியில் நின்றார்கள். உலகநெறிக் கல்வியிலேயே ஆழ்ந்து விடாமல் வீட்டு நெறிக் கல்வியைச் சிறப்பாகப் போற்றினார் கள். நிலையில்லாத உலகில் நிலைத்தது எது என்பதைக் காண்பதே, அவர்களுடைய தலையாய நோக்கமாக இருந் தது. நிலைத்ததற்கும் நிலையாததற்கும் உள்ள தொடர்பை யும், நிலையாததைக்கொண்டு நிலைத்ததைப் பற்றும் வழியை யும் பல படிகளிலிருந்து ஆய்ந்து வந்தனர். உள்ளத்தின் தூய்மையாகிய உண்மையும், வாயின் தூய்மையாகிய வாய் மையும், மெய்யின் தூய்மையாகிய மெய்ம்மையும் இவை மூன்றும் ஒன்றிய செம்மையும், இவர்களிடம் ஒளிவிட்டு ஓங் கின. எவ்வுயிரிடத்தும் செந்தண்மை பூண்டு ஒழுகி, அந்த ணர் என்னும் சிறப்புக்கு உரியவர்களாக விளங்கினர் இவர்களுடைய அன்றாட வாழ்க்கையும், தனிச்சிறப்பு உடைய தாகவே சென்றது. இந்த ஞான நாற்றங்கால்கள், ஒவ் வொன்றும் சில சிறப்பியல்புகளை உடையனவாக இருப்பி னும்,பல பொது இயல்புகள் உடையனவாக விருந்தன. இத் தகைய முதுபதிகளில், ஒன்றைப்பற்றி ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், ஒரு பெரியார் எழுதி வைத்த குறிப்பைப் பார்ப்போமானால், பொதுவாக, ஞானப்பயிர் விளையும் சிற்றூர் மக்களின் அன்றாட வாழ்க்கையை ஒரு வாறு தெரிந்து கொள்ளலாம். இந்தக் குறிப்பு, ஓர் இனிய செந்தமிழ்ச் செய்யுளில் அமைந்துள்ளது; இது, வாழ்க் கையை இயங்கு ஓவியம்போல், நம் கண்முன் காட்டும் பெருமை வாய்ந்தது. அனைவரும் படித்து இன்பமும்

பயனும் பெறவேண்டி, அச்செய்யுளில், ஆண் மக்களது அன்ருட வாழ்க்கையைக் குறிப்பிடும் பகுதிமட்டில் கீழே தரப்பெறுகிறது. அவ்வூர்ப் பெருமக்கள் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நீராடல், வழிபாடு முதலியவற்றை முடித்துக்கொண்டு,

'பொய்ம்மை கடிந்து, புகழ்புரிந்து, பூதலத்து
மெய்ம்மை தலைசிறந்து, மேதக்கும் உண்மை
மறை பயில்வார்; மன்னு வியாகரணக் கேள்வித்
துறை பயில்வார்; தொல்நூல் பயில்வார்; முறைமையினல்
ஆகமங்கள் கேட்பார்; அருங்கலைநூல் ஆதரித்து,
போகம் ஒடுங்கா, பொருள் துயிப்பார்; சோகம் இன்றி,
நீதி, நிலை, உணர்வார்; நீள் நிலத்துள், ஐம்புலனும்
காதல்விடு தவங்கள் காமுறுவார்; ஆதி,
அருங்கலை, நூல், ஓதுவார்; ஆதரித்து, வென்றிக்
கருங்கலியை நீங்கக் கனல் வகுப்பார்; ஒருங்கு இருந்து
காமநூல் கேட்பார்; கலைஞானம் காதலிப்பார்;
ஓமநூல் ஓதுவார், உத்தரிப்பர்; பூ மன்னும்
நான்முகனே அன்ன சீர் நானூற்றுவர் மறையோர்
தாம் மன்னி வாழும் தகைமத்து'

— ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை.

இத்தகைய தெய்வத்திரு விளையும் முதுபதிகளுள், திருவாதவூர் ஒன்று; இது பாண்டிய நாட்டில் உள்ளது. சங்க காலப் பெரும்புலவராகிய கபிலர் பிறந்ததும் இப்பழம்பதியேயாகும். அவர் காலத்து, இவ்வூர் பறம்பு நாட்டைச் சேர்ந்திருந்தது. இங்கு, அறிவு பண்படுதற்கும் புலமை தோன்றுதற்கும் ஏற்ற பல சூழல்கள் வாய்ந்திருந்தன என்பதை, கபிலரது இளமை வரலாறு ஒன்ருல் நன்கு காணலாம். இவ்வூரில் இருப்பை மரங்களும், மகிழ மரங்களும் அடர்ந்திருந்தன. ஒரு நாள், இருப்பை நிழலில் கபிலர் விளையாடிக் கொண்டிருந்தார்; அம்மரத்தின் மலர்கள், மரத்தில் இருக்கும் நிலையையும், உலர்ந்து மண்ணில் விழுந்து கிடக்கும் நிலையையும் பார்த்தார். மரத்தோடு இணைந்து தன் நிலை கெடாது நின்ற மலரின் தோற்றம், பெண் யானையின் எழில்மிகு கொம்பு போன்றிருந்தது; மரத்தை விட்டுப் பிரிந்து மண் மீது விழுந்து உலர்ந்த மலர், பரதவர் முற்றத்திலே உலரும் இருல் போன்றிருந்தது. ஒரே பொருள் தன் நிலையில் இருந்தபோதும், நிலை தவறிய போதும் அடையும் ஏற்றத்தாழ்வு அவருள்ளத்தில் பல வகையான

உலக நிகழ்ச்சிகளையும், எண்ணங்களையும் தோற்றுவித்தது. தான் கண்ட காட்சியைக் கண்டபடியே ஏற்ற உவமை யோடு கூறி, ஏனைய கருத்துக்களைக் கற்பவர் மனநிலைக் கேற்ப உய்த்துணர வைத்து,

'நெட்டிலை இருப்பை வட்ட ஒண்பூ,
வாடாது – ஆயின்,
பீடுஉடைப் பிடியின் கோடு ஏய்க்கும்மே !
வாடிலோ ?
பைந்தலைப் பரதர் மனைதொறும் உணங்கும்
செந்தலை இறவின் சீர் ஏய்க்கும்மே !'

என்று ஒரு செய்யுள் இயற்றினர். இச்செய்யுளின் எளிமை யும், அருமையும் புலவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தன. ஏறக் குறைய அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஒரு கவிஞர், திருவாதவூரைப்பற்றிப் பேச வந்தபோது, 'அவ்வூரில் இருப்பை மரத்து நிழலில் ஒரு இனிய பாட்டொலி எழுந்தது; மகிழ மரத்து நிழலிலும் ஒரு ஒலி எழுந்தது' என அழகு பெறக்கூறி, 'முன்னையது, "நெட்டிலை இருப்பை" என்று தொடங்குவது. பின்னையது வேதநாயகனாகிய சிவபெருமானது சிலம்பு ஒலி', என விளக்கும்.

'நீதிமா மதூக நீழல் 'நெட்டிலை இருப்பை' என்று ஓர்
காதல்கூர் பனுவல் பாடும் கபிலனார் பிறந்தமூதூர்;
சோதிசேர் வகுள நீழல் சிலம்பு – ஒலி துளங்கக் காட்டும்
வேதநாயகனார் வாழும் வியன் திருவாதவூரால்'

— பெரும்பற்றப்புலியூர் நம்பி.

என்னும் செய்யுள் அறிஞர் நினைந்து இன்புறத்தக்கது.

II

சிவபெருமானது திருவருள் வாய்க்கப் பெற்றதும், அப் பெருமானுக்கு நஞ்சு அளித்த கடலோடு கலவாத பெருமை யுடைய வையை ஆற்றுல் வளம்பெருக்கப் பெற்றதும், அகத் திய முனிவனால் தமிழ் வளர்க்கப் பெற்றதும், பகையை ஒழித்து உலகம் முழுதும் ஆளும் பாண்டியர்களுக்கு உரியது மாகிய பாண்டி வளநாட்டில், பழமறை பயிலும் அந்தணர் கள் வாழும் திருவாதவூரில் அமாத்தியர் மரபைச் சார்ந்த

சைவநெறித் தலைவனாகிய ஓர் அந்தணனுக்கு[5] மகவாக, அவன் மனைவியார் திருவயிற்றில், தென்னர் கோனுடைய ஆட்சி முதல்வர் தோன்றினர். இவருக்குத் திருவாதவூரர் என்று பெயரிட்டு, உரிய காலத்தில் அமுதூட்டல், குடுமி வைத்தல், பூணூல் போடுதல் முதலியவற்றைச் செய்தார்கள். இவரும், பதினாருண்டு நிறையுமுன்பே கல்வி கேள்விகளில் மேம்பட்டு விளங்கினர். இவரது பெருமையை அறிந்த பாண்டியன், இவரை அமைச்சர் தலைவனாகச் செய்து தென்னவன் பிரமராயன் என்ற சிறப்புப் பெயருடன் அமைச்சர்க்குரிய ஆடை, பூண், கவிகை, தண்டு, யானை முதலியவற்றையும் கொடுத்தான்.

திருவாதவூரர் அமைச்சராக இருந்து,

"காதலித்து அறம் செய்வோர்க்குக் கவசமும் கண்ணும் ஆகி,
ஏதிலர்க்கு இடும்பை ஆகி, இறைஞ்சினர்க்கு இன்பம் ஆகி,
ஆதுலர்க்கு அன்னை ஆகி, அரன் அடிக்கு அன்புமிக்கார்
பூதலத்து இறைவன் ஆணை பொதுஅற நடத்தும் நாளிலும்"

சிவபெருமானிடத்து அன்புமிக்கவராய், உலக வாழ்க்கையில் ஒட்டியும் ஒட்டாதும் இருந்து, தன்னை வீட்டு நெறியில் உய்க்கவல்ல ஞான குரவனை நாடிக்கொண்டே இருந்தார்.

இவ்வாறு நீத்த மனத்தராய் நின்று நீதி செலுத்திப் பாண்டியனுக்குப் பெருநிதியும் புகழும் மலியச் செய்து வரும்போது, ஒரு நாள், ஒற்றர் சிலர் வந்து, மன்னனைப் பணிந்து 'சோழநாட்டின் கடற்கரையில் ஆரியர் குதிரைகள் கொண்டு வந்து இறக்கி இருக்கின்றனர்' எனக்கூறினர். பாண்டியன், தன் உடலும் உயிரும் போன்ற சிவனடிக்கு அன்பராய திருவாதவூரரை, ஒற்றர்கள் குறிப்பிட்ட குதிரைகளுள் சிறந்தனவற்றைத் தக்க விலை கொடுத்துப் பெற்று வருமாறு பணித்து, 'வானவிமானம்' என்னும் தன் திருவாழ்கோயில் புகுந்து நாற்பத்தொன்பது கோடி பொன்

5. 'சுந்தரநாதர் என்ற ஆதிசைவர்' – வடமொழி ஆலாஸ்ய மான்மியம். தந்தையார் – 'சம்புபாதாசிரிதர்'. தாயார் – 'சிவஞானவதி'–திருப்பெருந்துறைப் புராணம். கைலாச மான்மியம், திருவாதவூரரைத் திருநந்திதேவர் அவதாரம் என்றும், வேறு சில புராணங்கள் 'கணநாதர்' என்றும் கூறுகின்றன.

கொடுத்து அனுப்பினான்.[6] திருவாதவூரரும் ஒரு நல்ல நாளில், தன் மாளிகையினின்றும் புறப்பட்டு, சொக்கரை வணங்கி,[7] படைகள் புடை சூழ, குதிரைகள் வந்து இறங்கியுள்ள துறையை நோக்கிச் சென்றார்.

திருவாதவூரர் செல்லும் வழியில் திருப்பெருந்துறையைச் சேர்ந்தனர். அங்கு, ஒரு சோலையில் சிவாகமங்கள் ஒலி கேட்டது. அவ்வொலியைக் கேட்ட வாதவூரர் சிவிகையை விட்டு இறங்கி சோலையின் உட்சென்றார்; அங்கு அடியவர் சூழ, ஒரு குருந்த மரத்தின் நிழலில் ஞானகுரவன் தோற்றத்தோடு வீற்றிருந்த சிவபெருமானைக் கண்டார். உள்ளத்தால் வணங்கி, தோற்றத்தால் வணங்காதவர் போல நின்று, வீற்றிருந்த ஞானதேசிகனை நோக்கி, "ஐயனே, தமது செங்கை மீது தங்கியுள்ள புத்தகம் யாது?" எனலும், ஐயன், "பொய்ம்மை இலாச் சிவஞான போதம்" என்றார். திருவாதவூரர் "சிவம் யாது? ஞானமாவது யாது? போதம் என்பது எது? இவற்றை விளக்கின் உமக்கு அடிமையாவேன்" என்றார். ஞானகுரவன், "சிவம் என்பது ஒப்பற்ற மெய்ப்பொருள்; ஞானம் என்பது அம்மெய்ப் பொருளை அறிதல்; போதம் என்பது தெளிதல்" என வினவினவர் சிந்தை உருகும் வண்ணம் திருவாய் மலர்ந்தருளினார்.[8]

---

6. 'பொற்குவியல் நிறைந்த நிதி அறையுட் புகுந்து, கண்காணியர்களை வைத்துக்கொண்டு ஒழுங்காகப் பல பெருங்கணக்குகளிலும் பதித்துப் பொருள் எடுத்துச் சென்றார்' – நம்பி. 'உள்ளம் வேறுபட்டு அமைச்சியல் நெறியில் ஒழுகினார்' – பரஞ்சோதியார்.

7. யானைமுகப்பெருமானையும் அங்கயற்கண்ணம்மையையும் வணங்கி - நம்பி. அம்மையைப் போற்றும் செய்யுள் மிகவும் இனிமை வாய்ந்தது.

"என்றூர் வரைமயிலே! ஏழ்பொழில் வாழ் கோகிலமே!
ஒன்றுய வேதாகம வாவி ஓதிமமே!
பொன்றாத எண்எண் கலை பேசும் பூவையே!
மன்றூர் கடம்பவன மானே! அடி போற்றி!"

'இப்பொருள் எல்லாம் நினக்கும் நின் அன்பர்க்கும் ஆக்குக' என வேண்டினார் – பரஞ்சோதியார்.

இறைவனை வணங்கியபோது ஒரு வேதியன் திருநீறு கொடுத்தான்–நம்பி. ஒரு ஆதிசைவனாகிய அருச்சகன் திருநீறு கொடுத்தான் – பரஞ்சோதியார்.

8. சுவடி யாது எனக் கேட்டதும் அதற்கு விடை கூறியதும் நம்பி திருவிளையாடலிற் காணப்பெறவில்லை.

இவ்வாறு ஞானகுரவன் உரைத்தலும், தன்னை ஆட்கொள்வதற்குச் சிவபெருமானே குருவாக எழுந்தருளியுள்ளார் என்பதை உணர்ந்த வாதவூரர், கண்ணீர் வார, முன் நின்று வணங்கி, "எம் உயிர்க்கு இறைவனே, உன் திருவடியை அணைந்து அடியேன் பிறப்பு ஒழிதல் வேண்டும்; என்னை ஆட்கொண்டருள்க" என விண்ணப்பித்தார். இவரதுஞான முதிர்ச்சியைக் கண்ட அடியருள் ஒருவர் எழுந்து "இவரது வினைகளை நீக்கிக் காத்தருள வேண்டும்" என ஞானதேசிகனை வேண்டினர்.

ஞானதேசிகனுக வந்த சிவபெருமான், வாதவூரரைக் கடைக்கணித்து, "அஞ்சற்க" நின்னை ஆட்கொள்ள வேண்டியே இக்கோலத்தோடு இவண் வந்தோம்" எனத் திருவாய் மலர்ந்து, அடியார்களில் ஒருவரை நோக்கி, "இவ் வாதவூரரை இன்று நாம் அடிமை கொள்ள வேண்டும்; முற்படச் செய்ய வேண்டியவைகளை முறையினுல் செய்க" எனக் கட்டளையிட்டார். அடியவரும், அச்சோலையில், மலர் மாலைகளாலும், பொன், முத்து முதலியன அழகு செய்யும், பட்டாலும் ஒரு பூங்கோயில் அமைத்து, அக்கோயிலின் நடுவண் ஒரு பொன் ஆசனம் இட்டு, ஞானதேசிகனிடம் திருச்செவி சாற்றினர். கதிரவன் மறைந்த பதினைந்து நாழிகைக்கு மேல், வாதவூரருக்கு மாயை தொலையும் காலம் அணுகியது. ஞானதேசிகன், வாச நீராடி, குங்குமம், புழுகு, சாந்தம் குழைத்து மெய்ம்முழுதும் பூசி, ஒப்பற்ற செம்பட்டாடை உடுத்தி, தவிசின்மேல் வீற்றருளினர். வாதவூரரும் தூநீராடி, வெண் துகில் புனைந்து நீறு விளங்கும் மெய்யராய் ஞானதேசிகன் திருமுன் பெரு மகிழ்ச்சியொடு சென்று அவருடைய திருவடிகளைப் புண்ணிய நீரால் கழுவி, பன்மலர் இட்டு இறைஞ்சி, மெய்ம்முழுதும் பனிநீர் தோய்ந்த சாந்தம் சாத்தி, செங்கழுநீர் மாலை அணிவித்து கண்குளிரக் கண்டு, திருவமுது படைத்து, அவர் அமுது செய்தபின், வெள்ளிலை, பழுக்காய், நறும்புகை, நற்சுடர் முதலிய காட்டி, திருநீறு சாத்தி, ஒளி விளங்கும் ஆடி முன் திகழ்வித்து, திருமுடிமேல் ஒளி வீசும் குடை கவித்து, வெண்கவரியும் ஆலவட்டமும் அசைத்து, மலர்களைக் கைகளில் ஏந்தி நின்ருர்.

ஞானதேசிகன் தோற்றத்தில் வந்த சிவபெருமான் வாதவூரரிடம் கருணை கூர்ந்து கடைக்கணித்து, திருஐந்

தெழுத்தை அறிவிக்கத் திருவுளங்கொண்டு சிவத்தை முன்னாக மாறி, செவி வழியாகச் சிந்தையுட் புகுமாறு திருவாய் மலர்ந்தருளினார். இவருடைய பிறவித்துன்பம், சிவபெருமான் அருள்நோக்கால் விளக்கின் முன் இருள்போல் அகன்றொழிந்தது. மெய்ம்முழுதும் நிலத்தில் படிய திருவடியில் விழுந்து வணங்கினார். சிவபெருமான், இவர்தலைமேல் தன் திருவடிகளை வைத்தார். தேசிகன் திருவடி தோய்ந்தவுடனே வாதவூரருக்கு மக்கட்கு உரிய பொய்ப்புலனும், பொய்யுணர்வும் மாய்ந்து சிவ கரணங்கள் தோன்றின. எல்லையில்லாத பேரானந்தத்தில் முழுகி, தன் சென்னிமிசைச்சூடிய சிவபெருமான் திருவடிகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு மார்போடு அணைத்து மெய்யுணர்வோடு எழுந்து நின்றார். தேவர்கள் மலர்மழை பொழிந்தனர்; அடியவர்கள் கைகளில் மலர்மாலைகள் ஒளி செய்தன; ஆலவட்டமும் கவரியும் இருபக்கமும் அசைந்தன; முனிவர் கூட்டம் வணங்கின.

மறுநாள், ஞானகுரவன், வாதவூரரைத் தனியே அழைத்து, சிவாகமங்களின் உண்மைகளைக் காட்டி, தன் உருவத்தை மனத்தில் வைப்பதே மெய்ப்பொருளுணர்வது என்று தெளிமொழிகள் கூறி அருளினார். வாதவூரர் மெய்ம்மறந்து, பலமுறையும் ஞானதேசிகனை வணங்கி, தன் உடல், பொருள், ஆவி எல்லாம் தேசிகன் திருவடிகளில் ஒப்புவித்து விட்டார். தான் குதிரை வாங்கக் கொண்டுவந்த பொற்குவியல் அனைத்தையும் குருவின் திருவடி காணிக்கையாக வைத்துவிட்டார்[9]. ஞானதேசிகனும், திருமுகம் மலர்ந்து, வாதவூரரது காணிக்கைகளை ஏற்று, பொற்குவியலை, திருக்கோயிற் பணிகளுக்கும், தவம் செய்வோர்க்கும், வறியவர்களுக்கும் பயன்படுத்துமாறு அடியவருள் சிறந்தவர் ஒருவருக்குக் கட்டளையிட்டார். வாதவூரரும் மக்கள் யாக்கையிலே இருந்தும் வீடு பெற்றவராயினர். சேனை புடைசூழ அரசரைப்போல் வந்த வாதவூரர், உருத்தெரியாமல் மெய்யெல்லாம் வெண்ணீறணிந்து, கோவண உடையும், விரித்த குஞ்சியும், தூயநீர் பொழியும் கண்ணும் உடையவரானார். இவ்வாறு மாறிய பின்னர், ஞானதேசிகனை அன்புடன் பார்த்து நிற்பார்; அழுவார்; கைகூப்பித் தொழுவார்; விழு

9. குதிரை வாங்கக் கொண்டுவந்த பொருளை எல்லாம் வாதவூரரே தம் மனம் சென்றவாறு பலருக்கும் வழங்கினார்-- நம்பி.

வார்; இன்பங்கொண்டு எழுவார்; புறங்காட்டாது பின்பால் செல்வார்; முன்வருவார்; பகல், இரவு என்பது அறியாதவராய் ஞானத் திருமேனியையே இடைவிடாது கண்டு, பாலர், பித்தர், பேயர் தன்மையராஞர்.

இவர் இவ்வாறு மாறியதைக் கண்ட உடன்வந்த படைத்தலைவர்கள் சுற்றத்தார் முதலியோர் நெருங்கி வந்துதொழுது, பாண்டியன் சினம் கொள்ளாவண்ணம் குதிரை வாங்கிக்கொண்டு போக வேண்டுமென்பதை அறவே மறந்து இருப்பது பெருங்குற்றம் என்பதை வற்புறுத்தி, இவரை வரவேண்டும் என்று அழைத்தபோது, அவர்களை நோக்கி, "மாசுமறைத்த உணர்வு மிக்கவர்களே, நீவிர் யாவர்? மாயையில் மருண்டு என்னிடம் பொய்யுரைகளைப் பேசன்மின், அகன்று சென்மின்" எனச் சொல்லிவிட்டார். உடன்வந்தோரும் ஒன்றும் தோன்ருது இரங்கி, பாண்டியனிடம் சென்று நிகழ்ந்தவற்றைத் தெரிவித்து வணங்கிஞர்கள்.[10]

இவ்வரலாறு கேட்ட பாண்டியன் உளம்நொந்து ஓலை ஒன்று எழுதி, அவ் ஓலையை வாதவூரருக்குக் காட்டி கைப்பிடியாகக் கொண்டுவருமாறு அவர்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களும் விரைந்தோடி வாதவூரரிடம் மன்னவன் திருமுகத்தை நீட்டிஞர்கள். வாதவூரர் "அஃது யாது" என "பாண்டியன் விடுத்த திருமுகம்" என்றனர். அரன் திருமுகம் அல்லாது வேறு ஒரு திருமுகமும் காண மனமில்லாது நின்ருர். ஒருவன், திருமுகத்தைப் படித்து எடுத்துரைத்தான். அது கேட்ட வாதவூரர் ஒருவாறு உலக ஞானம் உண்டானவராய், ஞானதேசிகனிடம் சென்று, பாண்டியன் திருமுகம் விடுத்தமையை விண்ணப்பித்தார். இது கேட்ட தேசிகன் புன்முறுவல் பூத்து "அஞ்சற்க, ஆவணி மூலத்தன்று நாமே குதிரைகளைக்கொண்டு வருவோம், ஆகையால், நீ மன்னனிடம் சென்று 'குதிரைகள் ஆவணி மூலத்தன்று இவ்விடம் வரவிருக்கின்றன; திருமுகம் கண்டு முன்னதாகவே

10. திருப்பெருந்துறையிலேயே பொற்குவியலோடு தங்கிவிட உறுதி செய்துகொண்டு, உடன்வந்தவர்களை அழைத்து, 'ஆடித் திங்களில் குதிரைகள் வாரா, ஆவணியில் துறைதொறும் வந்து இறங்கும், அப்போது நானே பார்த்து நல்ல குதிரைகள் வாங்கி வருகிறேன் என்று அரசனிடம் தெரிவியுங்கள்' என்ருர் – நம்பி.

வந்தேன் எனத் தெரிவித்து, இந்த விலையுயர்ந்த மாணிக்கத்தை[11] கையுறையாகக் கொடுத்து மன்னனைக் காண்பாயாக' எனத் திருவாய் மலர்ந்து, உயர்ந்த ஒரு மாணிக்க மணியை நல்கினார். வாதவூரர் விழிப்புனல் சிந்த, பிரிய மனம் இல்லாதவராய், நின்று நின்று வணங்கி, "ஐயனே என்னை நீத்தியோ?" என, மனம் கவன்று விடைபெற்றுப் புறப்பட்டார்.

வாதவூரர், முன்போல், அமைச்சர் கோலத்துடன் மதுரைக்குத் திரும்பிச் சென்று இறைவன் அருளிய மாணிக்க மணியை மன்னனுக்குக் கையுறையாகக் கொடுத்து மகிழ்வித்தார். பாண்டியனும் முன்னைய சினம் தணிந்து மகிழ்வொடு அவரைத் தன் அருகில் அமரச் செய்து நிகழ்ந்தன எல்லாம் வினவ, அமைச்சர் "குதிரைகள் யாவும் சிறப்புடையனவாயுள்ளன; நல்ல நாளில் இங்குக் கொண்டுவர எண்ணினேன்; ஆவணித் திங்கள் மூல நாள் மிகவும் நல்ல நாள் என, பூசுரர் புகன்றார்; அதுவரை, திருப்பெருந்துறையில் தங்க எண்ணினேன்; இதற்குள் 'விரைந்து வருக' என்னும் திருமுகம் பெற்று இவண் வந்தேன்" எனக் கூறினார். பாண்டியனும், அவரைத் தேற்றி, தன் திருமுகத்தைக் கருத்தில் கொள்ளாது, என்றும்போல் இருக்குமாறு பணித்து அவர் உள்ளத்தில் உவகை வரச் செய்தான்.

பாண்டியன் ஆவணி மூலத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அதற்கு இரண்டு நாள் முன்னதாகவே அமைச்சருள் ஒருவன் பாண்டியனிடம் சென்று, முதல் அமைச்சராகிய வாதவூரர் சொல்லியவனைத்தும் பொய்யுரை என்றும், அவர் குதிரையைக் கண்டதும் இல்லை, கொண்டதும் இல்லை என்றும், கொண்டு சென்ற பொற்குவியல் அனைத்தையும் திருப்பெருந்துறையில் சிவனடியார் ஒருவருக்குத் திருவடிக் காணிக்கையாகச் செலுத்திவிட்டார் என்றும் தெரிவித்தான். பாண்டியனும், இந்த அமைச்சன் சொல்லியவை யெல்லாம் உண்மை என்பதை ஒற்றர்களைக்கொண்டு அறிந்து, சீற்றம் மிக்கவனாய், வாதவூரர் கொண்டு சென்ற பொருளனைத்தையும் திருப்பிப்

---

11. மாணிக்கம் கொடுத்ததாக நம்பி திருவிளையாடல் கூறவில்லை.

பெற வேண்டி தண்டலாளரை ஏவினன். தண்டலாளர், மன்னவன் கட்டளையை வாதவூரருக்கு அறிவித்து, கொண்டு சென்ற பொருளைத் தருமாறு வற்புறுத்தினர். வாதவூரர் ஒன்றும் சொல்லவியலாது வாளாவிருந்தார். இரவே ஏவலர், அமைச்சர் தலைவரைக் கடுஞ்சிறையில் இட்டனர். பொழுது புலர்ந்ததும் தண்டலாளர், வாதவூரரை வெளியே கொணர்ந்து கடுவெயிலில் நிறுத்திக் கொடுமையாக வருத்தினர். மதுரை மக்கள் எல்லாம் இவருடைய நிலைமையைக் கண்டு மனம் வருந்தினார்கள். திருவாதவூரர் தன்னை ஆட்கொண்ட ஞானதேசிகன் தோற்றத்தில் எழுந்தருளிய சிவபெருமானை உள்ளத்தில் ஆழ நினைந்து "ஐயனே, ஆவணி மூலத்தில் குதிரைகொண்டு வருவதாகச் சொல்லிய உன் உரை பொய்யாகுமோ? உலக வாழ்வை வெறுத்து உன் திருவடிக்கு ஆளான நான் இவ்வாறு துன்புறுவதும் தகுதிதானே? இந்த நிலையில் என்னை வெறுத்துக் கைவிடில் உனக்கு யார் ஆளாவர்? சிவனடியான் ஒருவன் இவ்வாறு துன்பப்படுதல் உனக்கு இழிவல்லவா?" என்று பலவாறு வருந்தினார்.

இவ்வாறு வருந்தும் திருவாதவூரர் சிந்தை மெலிவை தீர்த்தற்குத் திருவுளம் கொண்ட ஞானதேசிகனாகிய சிவபெருமான், நரிகளை[12] யெல்லாம் குதிரைகளாக மாற்றி, தேவர்களைப் பாகர்களாக்கி அவற்றைச் செலுத்தி வரச் செய்து, தான் குதிரை வணிகன் கோலம் கொண்டு, வேதமாகிய குதிரையில் அமர்ந்து குதிரைப்பாகர் புடைசூழ ஒரு பெரிய குதிரைக் கூட்டத்தோடு மதுரையை நோக்கி வந்தார். இந்த நற்செய்தியை ஒற்றர்களால் அறிந்த பாண்டியன், மகிழ்ச்சியொடு வாதவூரரைத் தண்டத்தினின்றும் விடுவித்துத் தன்னுடன் அழைத்துக்கொண்டு செண்டுவெளிக்குச் சென்று மலர் மாலைகள் தொங்கும் குளிர்ந்த முத்துப் பந்தரின் நிழலில் பொன் தவிசில் அமர்ந்திருந்தான். தென்னவன் பிரமராயரும் மற்ற அமைச்சர் முதலியோரும் அவரவர்களுக்கு உரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தனர்.

தூசிப்படலம் வானில் பறந்தது. கடலில் அலைகள் வருவதுபோல் குதிரைகள் வருவதைக்கண்ட பாண்டியன் பெருங்களிப்படைந்தான்; வாதவூரருக்கு வியப்புத் தோன்றி

12. மிழலை நாட்டு நரிகள்—நம்பி.

யித்து ; குதிரைக் கூட்டம் செண்டுவெளியைக் குறுகியது. குதிரை வாணிகத் தலைவராக வந்த சிவபெருமான், மன்னன் மகிழும் வண்ணம் குதிரைகளைப் பலவகை நடைகளில் நடத்திக்காட்டி, முடிவில் தான் ஏறிய குதிரை ஆடிக் கொண்டுவர அரசனை அனுகினர். பாண்டியன் பேரானந்தம் கொண்டு, வணிகத் தலைவருக்கு ஒரு பட்டாடையைப் பரிசாகக் கொடுத்தான் ; அவர் அந்தப் பரிசை புன்னகையொடு தன் செண்டில் ஏற்ருர். தான் அன்புடன் அளித்த பரிசை அவர் செண்டில் ஏற்றது தன்னைத் தாழ்வு படுத்தியதாகும் என்று, பாண்டியன் வெகுண்டு நோக்கினன். அவ்வாறு கருதுவது சரியல்ல என்றும், பரிசுப் பொருளை செண்டு கொண்டு ஏற்பது அவர்களுடைய நாட்டு வழக்கு என்றும், வாதவூரர் அமைதி கூறி மன்னன் சினத்தைத் தணித்து மகிழ்வித்தார். பின்னர், பரிநூல் வல்ல அறிஞர்கள் குதிரைகளை எல்லாம் ஆராய்ந்து நோக்கி, "இவை நன்னிறமும், நன்னடையும், நற்சுழியும் பொருந்தியுள்ளன" எனச் சான்றளித்தனர். பாண்டியனும் தான் கொடுத்த பொன்னுக்கு எட்டுப் பங்கு விலை மதிப்புள்ள அரிய குதிரைகளைப் பெற்றதாக எண்ணி மகிழ்ந்து அவற்றைப் பந்தியில் சேர்க்குமாறு பணித்தான்.

குதிரை வாணிகத் தலைவனாக வந்த சிவபெருமான், குதிரைகளை எல்லாம் கயிறுமாறிக் கொடுக்கும்படிப் பாகருள் முதியவர்களைப் பணித்துவிட்டு அரசனிடம் விடைபெற்றுச் சென்ருர். பாண்டியனும், "பெறலரும் குதிரைகள் உம்மால் கிடைத்தன" என, வாதவூரரிடம் மகிழ்ச்சி கூறி, அவரை அவருடைய மாளிகைக்கு அனுப்பிவிட்டு, தன் பரிவாரங்களுடன் அரண்மனையை அடைந்தான்.

மறுநாட்காலையில் அந்தக் குதிரைகளெல்லாம் நரிகளாக மாறி, பந்தியிலிருந்த பழைய குதிரைகளையும் கொன்று, ஊரார் அஞ்சும்படி ஊளையிட்டு ஓடி மறைந்தன. குதிரைப்பாகர்கள் உளம்பதற உடல்பதற ஓடி அரசனிடம் முறையிட்டனர். இச்செய்தியைக் கேட்ட மன்னன் சினம் பெருகி வாதவூரரை அழைப்பித்து மற்றை அமைச்சர்களிடம் இவர் செய்த மாயத்தைக்கூறி, தண்டலாளரை நோக்கி 'நீவிர், இவரை, கடுவெயிலில் நிறுத்தித் தக்க தண்டம் செய்து அவர் கொண்டுசென்ற என் பொன் முழுதும்

பெற்று வருக' என, ஏவினன். தண்டலாளர் இவரை வெளியே அழைத்துச் சென்று பொன்னைக்கேட்டு வருத்தினர்கள்; கடுவெயிலில் ஒரு கோடிட்டு அதற்குள் நிறுத்தி ஒறுத்தார்கள். திருவாதவூரர் திருவருளை நினைந்து "உன்னையன்றி எத்துணையும் இல்லாத எனக்கு இத்துன்பம் வருவது முறையாகுமோ?" என, பலவாறு ஏங்கி நின்றார்.

திருவாதவூரர் படும் துன்பத்தை நீக்கத் திருவுளங் கொண்ட சிவபெருமான், அத்துன்பத்தை நீக்க வழிதேடுமாறு கங்கையைப்[13] பணித்தார். கங்கை விரைந்து வந்து[14] வையையில் கலந்து பெருவெள்ளமாகி மதுரை முழுதும் பரவத் தொடங்கியது. இதைக்கண்ட ஊர்மக்கள் எல்லாம் உலகை அழிக்கும் ஊழிக்கால வெள்ளமே வந்துவிட்டது என அஞ்சி, மன்னனிடம் சென்று முறையிட்டார்கள். பாண்டியனும் மிகவும் அஞ்சி வையை வெள்ளத்தின் அருகில் வந்து பொன், பூ, பட்டு, அணிகலம் முதலியவற்றைக் காணிக்கையாக ஆற்றில் விட்டுப் பணிந்தான். வெள்ளம் மேலும் மேலும் பெருகியதேயல்லாமல் ஒரு சிறிதும் தணியவில்லை. இதன் காரணம் தெரியாத மன்னன், அமைச்சரோடு உசாவி, சிவனடியாராகிய வாதவூரரைத் துன்புறுத்தியதன் விளைவே இவ்வெள்ளப் பெருக்கென நன்கு தெளிந்து உடனே அவரை வரவழைத்து "பெரியீர், நீவிர் சிவனடியாருக்குச் செலவிட்ட பொருளனைத்தும் என் பொருளேயாயின் அதனாற்பெறும் நற்பயனும் எனக்கு உரியதே என்பதை உணராது நும்மை ஒறுத்தேன். என் குறையைக் கொள்ளாது, இவ்வெள்ளப்பெருக்கு இவ்வூரை விழுங்காவண்ணம் காப்பாற்றவேண்டும்" என வேண்டினன். அரசன் தன்னை வெகுண்டபோதும், புகழ்ந்து போற்றிய போதும் உள்ளம் வேறுபாடடையாத வாதவூரர், திருவருளை நினைந்தார்; வெள்ளத்தின் வேகம் குறைந்தது. வாதவூரர் வையைக்கரையில் வந்து நின்று, அருகிலிருந்த காவலரை நோக்கி, "நீங்கள் முரசு அறைந்து மதுரை மக்களை எல்லாம் இங்குக் கூட்டி, ஒவ்வொருவருக்கும், இவ்வளவு என்று இடம் அளந்து கொடுத்து அணையிடச் செய்யுங்கள்" எனக் கட்டளையிட்டார். காவலர் முரசு அறைவித்தார்; ஊர்

13. வருணனைப் பணித்தார் – நம்பி.

14. மேகங்கள் காலூன்றிப் பெய்ய, வைகை பெருகியது–நம்பி.

முழுதும் வையைக்கரைக்கு அணையிடுவதற்கு ஏற்ற கருவிகளுடன் கூடி அணைகோலுவதில் முயன்று நின்றது.

இப்படி அணைகட்டும்போது, பிட்டுவிற்று வாழ்க்கை நடத்தும் செம்மனச்செல்வி[15] என்னும் பழுத்துநரைத்த கிழவி, தனக்கு அளவு செய்துவிட்ட பங்கை அடைக்க ஆள் இல்லாமல் வருந்தி நிற்க, காவலர்கள் அவளைச் சினந்து "நீ ஏன் உன் பங்கை அடைக்கவில்லை" என்று கேட்க, "ஐயா! நான் கூலியாகக் கொடுக்கும் பிட்டை வாங்கிக் கொண்டு என் பங்கை அடைக்க முன் வருவாரில்லையே" என்று மனம் தளர்ந்து சொல்லிவிட்டு, சொக்கநாதர் கோயிலுக்குச் சென்று, இறைவன் முன், தன் இயலா நிலையை எடுத்துரைத்து, வணங்கி, வருந்தி விண்ணப்பம் செய்ய, சிவபெருமானும், அவள்பால் அன்பும் கருணையும் கொண்டு, ஒரு கூலியாள் கோலத்தோடு அவள் எதிரே தோன்றி, "யாரேனும் என்னைக் கூலிக்கு அமர்த்திக் கொள்வாருளரோ?" எனக்கூற, அதுகண்ட கிழவி, அக மகிழ்ந்து, "மகனே நீ எனக்குக் கூலியாளாக வரவேண்டும்." என்று கூறினாள். ஆனால், கூலியாள், "என் கூலியை முன்னமே கொடுத்தால் அல்லாது நான் வர இயலாது" என்றான். கிழவியும், "முதலில் உன் பசிதீர பிட்டு தருகிறேன்; பிறகு, மாலையில் உன் கூலியைப் பெற்றுக்கொள்" எனக் கூறினாள்.

அதற்கிசைந்த சிவபெருமானாகிய கூலியாள், அவள் கொடுத்த பிட்டை வாங்கி உண்டு, "தாயே என் பசி தீர்ந்தது; இனி உன் பங்கு வேலையை நானே அடைக்கின்றேன்" என்று கூறி, பின்னும் சிறிது பிட்டு வாங்கி உண்டு, அவ்விடம் அகன்று, வையைக்கரையில் வந்து நின்று, முதியவளை நோக்கி, "உன் பங்கு எது?" என வினவ, அவளும் தன் பங்கான இடத்தைக் காட்டினாள். பிறகு, சிவபெருமான் வேலையைத் தொடங்கினார். ஒருசமயம் மண்ணைவெட்டி கூடையில் அள்ளித் தன் திருமுடிமேல் தாங்கிச்சென்று கரையில் கொட்டிவிட்டுத் திரும்புவார். பிறகு, களைத்தவர்போல் காணப்பட்டு ஒரு பிடி பிட்டை உண்டு சுவைப்பார்; பிறகு அக்கிழவியை அன்பால்

15. இப்பெயர் நம்பி திருவிளையாடலிற் காணப்பெறவில்லை. பரஞ்சோதியார் 'வந்தி' என்ற பெயரைக் கூறுகின்றார்.

நோக்குவார்; "சிவபெருமானுக்கு கண்ணப்பரளித்த மாமிசத்தைவிட, இப்பிட்டு மிக சுவையாய் இருக்கின்றது" என்பார். இப்படியாக ஆடியும், களித்தும், ஒருவேலையும் ஒழுங்காகச் செய்யாமல் இருப்பதைப் பார்த்த கிழவி, பாண்டியன் காவலாளர்களுக்குப் பயந்தும், கூலியாளையும் யாதும் கடிந்துசொல்ல முடியாதவளாயும் வாளாவிருக்க, கூலியாளான சிவபெருமான் "அம்மையே, நீ உன் வீட்டிற்குக் கவலையின்றிச் செல்; உன் பங்கை நான் செம்மையுற விரைவில் அடைத்து முடிப்பேன்" எனக்கூற, அவளும் அப்படியே வீட்டிற்குச் சென்றுள். அப்போது அவள் பங்கைக் கடவுளாகிய சிவபெருமான் அடைக்கக் கண்ட வையை நதியான பெண், தன் அலைக்கரங்களால் அவரை வணங்கிளுள். சிறிது நேரத்தில், கூலியாளாகிய சிவபெருமான் வேலைசெய்து இளைத்தவர்போல் கொன்றை மரநிழலில், மணற்பரப்பை பாயாகவும், தான் மண்சுமந்து வந்த கூடையைத் தலையணையாகவும் கொண்டு, உறங்கத் தொடங்கினர்.

அவர் உறங்கிக் கொண்டிருக்கும்பொழுது, பேரின்ப வாழ்வையுடைய திருவாதவூரர், ஒளியையுடைய பிரம்பை ஏந்தி அருகில் உள்ளோரைப் பார்த்து, "ஒவ்வொருவரும் அவரவர் பங்கைச் செம்மையுறச் செய்திருக்கின்றனரா?" எனப் பார்த்து வாருங்களெனப் பணிக்க, அவர்களும், அவ்வாறே சென்று பார்க்க, பிட்டு விற்கும் கிழவியின் பங்கு தவிர மற்றெல்லோர் பங்கும் ஒழுங்காய் முடித்திருப்பதைப் பார்த்து மகிழ்ந்தனர். அடைக்காமல் விட்டுவிட்ட அப்பகுதியினுல் மற்றப்பகுதிகளும் அரித்து ஓடத்தொடங்கின. அதைக்கண்டு அவர்கள், தங்கள் மேலாளிடம் அணையிருக்கும் நிலையை எடுத்துரைக்க அவனும், வெகுண்டு, அப்பங்கு அடைக்கவந்த கூலியாளை அழைத்து வரப் பணித்தான். ஓர் ஆள் ஓடி, அக்கூலியாளை அழைத்து வந்து தலைவன்முன் நிறுத்தினுன். அவன்மீது சீற்றம்கொண்ட மேலாள், அருகிலிருந்த ஒரு கொடியவனிடம் "இவனை உதிரம் சொட்ட அடி" என்று கூறினுன். அவனும் ஒரு அடி அடித்தான்.[16] அடித்த அளவில் கூலியாளாக வந்த சிவபெருமான் மறைந்துவிட்டார், அந்த அடி, அரசன்,

---

16. அரிமர்த்தன பாண்டியன் அடித்தான் – பரஞ்சோதி.

அரசி, காவலாளர், மற்றெல்லோர் மேலும் பட்டது. திருவாதவூரர் மேலும் பட்டது. அப்போது திருவாதவூரர், "நான் உய்யும்பொருட்டுச் சிவபெருமான் இவ்வேடம் கொண்டு வந்தனரோ!" என்று வருந்தி நிற்க, காவலாளர்கள் ஓடிவந்து இறைவனது திருவிளையாடலை எடுத்துரைத்தனர். அது கேட்ட திருவாதவூரர் மனம் வருந்தி, இறைவனைப் பார்த்து "என்னைத் தடுத்தாட்கொண்ட தெய்வமே" என்று புலம்பி, தொழுத கையும், அழுத கண்ணும் உடையவராய் நிலத்தில் வீழ்ந்து,

1. நீறுபடும் பொன்மேனி நின்மலனே! நெடுங் கங்கை
ஆறுபடும் சடைமுடியாய்! அடியவர்கட்கு எளியானே!
மாறுபடும் புரம் எரித்தாய்! மாறுபடும்போது உடலில்
கூறுபடும் சிவஞானக்கொம்பின் உளம் குழையாதோ?

2. பிரமன்-உடன் திருமாலும், பிறப்பு அகலப் பலகாலும்
பரவி இடும் நறுமலரோ? பத்தர் இடும் பச்சிலையோ?
புரிதரு செம்-சடையோ? நல் புது மதியோ? ஆயிரவாய்
வரி அரவின் பல படமோ? மண் சுமந்த சும்மாடு!

3. கலை அறியும் புகழ்வைகைக் கரைதிரு அம்பலமாக,
அலை எறியும் புனல் ஓசை அந்தர துந்துபி ஆக,
தலைவன் நடம் கண்டார்கள், அரவம் எனும் தவமுனியும்,
கொலை தவிரும் புலி என்னும் குலமுனியும் ஆன்றோ?

4. மீன் ஏறும் கொடித் தென்னன் விழிக்கு ஏற விரை துரகம்
தான் ஏறுவது கண்டு தரும் கலை, பொன்செண்டு ஏற,
தேன் ஏறு மலர்கொன்றைத் திருமுடிமேல் மண் ஏற,
யான் ஏறும் சிவபதமும் எனக்கு ஏற இன்றது.

5. பொன் உலகத்து உள்ளோரும், புரந்தரனும், திருமாலும்,
மன்னு மறைக்கு உரியோனும், வழி அடிமைத் தொழில்செய்ய
அன்னை தனக்கு ஆள் ஆகி அணிவைகை அடைத்து அடியுண்டு
என்னை அருட்பணி கொள்ள இசைந்தனையோ? இறையோனே!

6. கட்டும் அரைத்துணிச் சீரைக் கச்சையும், அத் திருத் தோளில்
கொட்டும், முடித்தலைமீது கவித்தது ஒரு கூடையும்-ஆய்,
பிட்டுஇடு நல்-தவம் உடையாள் பின்பு வரும் திருக்கோலம்
இட்டம் உறத் தொழும்படி நான் கண்டிலனே இறையோனே!

7. தார்ஊரும் சடைமுடியாய் ! தவம்பெரிது முயன்றவர்கள்
நீர்ஊரும் புகழ்வைகை நெடுங்கரைமேல் நின்றுரோ ?
சீர் ஊரும் கனகமுடித் தென்னவனே ? மதுரை எனும்
பேர்–ஊரில் இருப்பவரோ ? – பிட்டு–அமுது இட்டு-அருள்
வாளோ ?

8. பொன்–மௌலித் தலைமீது, புண்ணியர் மண்சுமந்து ஏறும்
கொன் மலியும் கோல்அறையும், குளிர்வைகைப் பேர்ஆறும்,
கன்மம் எனும் பகை நீங்கக் கண்நுதல்வெம்–பரிஏறும்
தென்மதுரை மூதூரும் அல்லவோ சிவலோகம் ?

இவ்வாறு, அவர் உளம் உருகி வருந்திக்கொண்டிருக்கும் போது, வையை நதியின் வெள்ளப் பெருக்கும் வடிந்தது. இவை அனைத்தும் திருவருட் செயல் என உணர்ந்த பாண்டியன், திருவாதவூரரை வணங்கி, " நற்றவப் பெரியீர், விண்ணுலகத்திலிருந்து இறங்கி அமாத்தியர் குலத்தில் தோன்றி, எனக்கு அமைச்சராய் அமர்ந்து, எம் குலதெய்வத்தை என் கண்காணக் காட்டி, மா ஏறச்செய்து, மாற்றரிய என்பிறவி மாசை ஒழித்தருளினீர். அந்தோ ! என்ன தவறு செய்தேன் ! திருமாலும் காண்பரிய பெருமானுக்கு சிறு ஆடை அளித்தேனே ! மெய்ப்பொருள் காட்டிய மேதகு முனிவனே ! பொய்ப்பொருள் கருதிப் பொல்லாங்கு செய்தேனே ! யான் நரகத்தில் வீழாவண்ணம் என் பிழையை எல்லாம் மன்னித்து அருளவேண்டும் ; அடியேன் நாளும் திருவடித்தொண்டு செய்யும் வண்ணம், தாம் இவ்வுலகை ஆள வேண்டும் " என வேண்டினான். திருவாதவூரர் " பின்னற்சடைப் பெருமான் நிலைத்துள்ள பெருந்துறைக்குச் செல்வதே எம் விருப்பம், அவ்வாறே எம்மைச் செலவிடுத்தலே, உலக ஆட்சியைக் கொடுத்ததாகும் " என்றார். மன்னவனும் மனம் நொந்து, அவர் விரும்பிய வாறே செல்ல விடுத்து,[17] தன் அரண்மனைக்குச் சென்றான்.

---

17. பாண்டியன், 'எது அழிந்தாலும், எது ஆனாலும், வேதியர், நீதியுடைய அரசர்களிடத்து அமைச்சனாக இருத்தற்கு ஆகார்' எனக் கூறினான் – நம்பி.

இங்கிருந்து 'நமச்சிவாயா வாஅழ்க' என்று பாடிக்கொண்டு சொக்கன் திருக்கோயிலுள் புகுந்து போற்றினார். சிவபெருமானும் வானத்திலிருந்து உரைத்தான்; உத்தரகோசமங்கை, கழுக்குன்றம் கண்டு அருந்தமிழ் பல பாடி, சித்திரக் கோவையும் அருளி, தில்லையம்பலத்துட் சென்று, புத்தன் வாதையும் வென்று பொற்பதம் அடைந்தார் – நம்பி.

திருவாதவூரர் அரசாங்கக் கோலத்தைக் களைந்து, தவ வேடம் தாங்கி மிக விரைந்து திருப்பெருந்துறையை அடைந்து, ஞானதேசிகன் திருவடிகளில் விழுந்து பலவாறு போற்றி செய்தார். தேசிகன், இவர் முடிமேல் தன் கையை வைத்து, திருநீறு புனைந்து, ஞானம் நிறைந்த அருட்பார்வையால் நோக்கினர். திருவாதவூரர் அடியவர் கூட்டத்தில் கலந்து இன்புற்றிருந்தனர்.

ஞானதேசிகன். தான் கயிலைக்குச் செல்ல வேண்டியதை அடியார்களுக்கு உணர்த்தி, அவர்களை இன்புற்று இருக்கும்படி பணித்தனர். பிரிய மனம் இல்லாமல் அடியார்கள் பெரிதும் வாடிப் புலம்பினர். அதைக்கண்ட தேசிகன் "இக்குருந்த மரத்தின் நிழலில் ஒரு தெய்வ பீடம் அமைத்து அதில் எம் திருவடிகளை எழுப்பி வழிபாடு செய்து வருவீர்களானல், எப்போதாவது ஒரு நாள், இத் திருக்குளத்தில் தீப்பிழம்பு ஒன்று தோன்றும், அதில் நீவிர் அனைவரும் மூழ்கி எம்மை அடைவீர்கள்" எனத் திருவாய் மலர்ந்தருளி, கயிலைக்குச் சென்றார். அடியார் எல்லாம் பின் தொடர்ந்தார்கள். "நீங்கரும் அன்பர் எல்லாம் நின்மின்" எனக் கட்டளையிட்டார்; அடியார் எல்லாம் நின்றனர்.

அடியார்கள் எல்லோரும் நின்ற பின்பும், திருவாதவூரர் மட்டும் விடாது தொடர்ந்து சென்றார். ஞானதேசிகனுகிய சிவபெருமான், அங்கு, ஒரு மரத்தின் அடியில் வீற்றருளினர்; கண்ணீர் விழ விழ, தன் திருவடியைத் தொழுது நிற்கும் அன்பரைக் கருணையொடு அருகில் அமர்த்தி "அன்பனே, யாம் எங்கும் இருப்போமெனினும், இக்குருந்த மரத்தின் நிழலில், இங்குள்ள அடியார்கள் வினையைப் போக்கி ஆட்கொள்ளவேண்டி உறைவோம்; நீ இவ்விடத்திலேயே இருப்பாயாக; பொய்கையில் தீப்பிழம்பு தோன்றும்போது எல்லோரும் முழுகுவார்கள்; நீ இங்கிருந்து உத்தரகோசமங்கை என்னும் திருப்பதிக்குச் சென்று அங்கு எண்வகைச் சித்திகளையும் பெற்று, மற்றும் நம். தெய்வீகக் குறிகளும், தெய்வீக அடையாளங்களும், தெய்வீகக் கோயில்களும் உள்ள திருப்பதிகளையும், திருக்கழுக்குன்றத்தையும் கண்டு வணங்கி, முடிவில் பொன்னம்பலத்தை அடைந்து, புத்தரை வாதில் வென்று, பின்னர் எம் பதமேயான பெரும்பதம் பெறுவாய்" எனத் திருவாய்மலர்ந்தருளி

மறைந்தனர். அவ்வாறே, திருவாதவூரரும் அடியார் திருக்கூட்டத்தை அடைந்து, குருந்த மரத்தின் கீழ் ஓர் தெய்வீகப் பீடம் அமைத்து, ஞானதேசிகனின் திருவடிகளை எழுந்தருளிச்செய்து, எப்போதும் வழிபட்டு வருவாராயினர்.

இவ்வாறு அடியார்களுடன் கூடிக்கலந்து வாழும்நாளில் திருவாதவூரர், ஞானதேசிகனாக வந்த சிவபெருமானிடத்து ஆராத காதலுடையவராய், 1. 'நமச்சிவாய வாஅழ்க' என்று ஒரு கலிவெண்பாவையும், 2. அற்புதப்பத்து, 3. அதிசயப் பத்து, 4. குழைத்த பத்து, 5. சென்னிப்பத்து, 6. ஆசைப் பத்து, 7. வாழாப்பத்து, 8. அடைக்கலப்பத்து, 9. செத்திலாப்பத்து, 10. புணர்ச்சிப்பத்து, 11. அருட்பத்து, 12. திருவார்த்தை, 13. எண்ணப்பதிகம், 14. வெண்பா இருபத்தெட்டு, 15. திருப்பள்ளி யெழுச்சி, 16. திருவேசறவு, 17. ஆனந்தமாலை, 18. உயிருண்ணிப்பத்து, 19. பிரார்த்தனைப்பத்து, 20. திருபாண்டி விருத்தம் முதலிய பதிகங்களையும் பாடியருளினார்.

இங்ஙனம் இருப்ப, ஒருநாள், திருக்குளத்தில் தீப்பிழம்பு ஒன்று தோன்றியதைக்கண்ட அடியார்கள் எல்லாம் திரு ஐந்தெழுத்தை ஓதி, அதில் மூழ்கினர். சிவபெருமான் அம்மையப்பராய் வெள்விடைமேல் தோன்றிக் காட்சியளித்தருளினார். அடியார்கள் சிவகணநாதராய் சிவபெருமானோடு மறைந்தனர். இந்நிகழ்ச்சியின்போது, திருவாதவூரர் கொன்றைமரத்தின் நிழலில் சிவயோகத்தில் அமர்ந்திருந்தார. இவையனைத்தையும் யோகக் காட்சியில் கண்ட திருவாதவூரர், தாம் தனியே நின்றதை எண்ணி வருந்தி எழுந்து குருந்தமரத்தின் நிழலில்வந்து ஞானதேசிகரின் பாதத்தைப்பற்றிக்கொண்டு அழுது, 21. திருச்சதகம், என்னும் பாமாலையைப் பாடியருளினர். பிறகு, ஞானதேசகரின் ஆணையை நினைந்து, திருவுத்தரகோசமங்கைக்குச் சென்று, அங்கும் தம்மை ஆட்கொண்ட ஞானதேசிகரின் திருவுருகாணுதவராய் பெருமூச்சுவிட்டு, என்னை நீத்தனையே! என்று வருத்தமுற்று, 22. நீத்தல் விண்ணப்பம் செய்தனர். உடனே தன்னை ஆட்கொண்ட கோலந்தோன்ற பேரானந்தத்துடன் வணங்கி நின்றனர். பின்னர்ப் பல திருப்பதிகளுக்கும் சென்று இறைவனை வணங்கிக்கொண்டு, திரு

விடைமருதூரை அடைந்து எம்பெருமானின் திருவருளை ஆனந்தத் தேனாக அருந்தி, திருவாரூருக்குச்சென்று புற்றிடங்கொண்ட பெருமான் திருமுன்பு, 23. திருப்புலம்பல் என்னும் பதிகத்தை அருளிச்செய்தார்.

அதன்பின்னர், சீர்காழிக்குச்சென்று தோணியப்பரைக் கண்டு வணங்கி, 24. பிடித்த பத்து என்னும் பதிகத்தைப் பாடியருளினர். அவ்விடத்திலிருந்து தில்லையைத் திக்கு நோக்கி வணங்கி, திருமுதுகுன்று, திருவெண்ணெய் நல்லூர் என்னும் திருப்பதிகளைப் பார்த்துக்கொண்டு, திரு வண்ணமலையை அடைந்து, அங்கே தன்னை ஆட்கொண்ட திருக்கோலத்தை எண்ணி வழிபட்டு வரும் நாட்களில், மார்கழித் திங்கள்வர, மகளிர், மார்கழி நீராடச்செல்லும் முறைமை நோக்கி, அவர்கள் பாடும் பாட்டுகளாக, 25. திரு வெம்பாவை என்னும் திருப்பாடலைப் பாடியருளினர். பின்னர் அவ்வூர்ப்பெண்கள் அம்மானை ஆடும் காட்சியைப் பார்த்து, அவர்கள் பாடுவதாக, 26. திருவம்மானை என்னும் செய்யுளைப் பாடியருளினர். அதன்பின், காஞ்சியென்னும் திருப்பதியைக்கண்டு களித்து, கழுக்குன்றம் என்னும் திருப் பதியை அடைந்தனர். அங்கு, 27. திருக்கழுக்குன்றப் பதிகம் பாடிச் சில காலம் எழுந்தருளியிருந்தனர். முடிவில், தில்லையை அடையும் எண்ணம் தோன்ற, விரைந்து அங்கு சென்று, தன்னை ஆட்கொண்ட திருக்கோலத்தைக்கண்டு பேரானந்தம் உற்று ஆனந்தக்கண்ணீர் பெருக, 28. கண்ட பத்து என்னும் பதிகம் பாடியருளினர். பின்பு, திருப்புலீச் சுரம், திருநாகேச்சுரம் என்னும் திருக்கோயில்களுக்குச் சென்று இறைஞ்சி தில்லை மூவாயிரவர் வாழும் திருவீதிகளில் செல்லும்பொழுது, 29. குலாப்பத்து 30. கோயிற்றிருப் பதிகம், 31. கோயின்மூத்ததிருப்பதிகம், 32 கீர்த்தித் திருவகவல், 33. திருவண்டப்பகுதி, 34. போற்றித்திரு வகவல் என்னும் பாடல்களைப் பாடியருளினர். அங்கு, பெண்கள் பொற்சுண்ணம் இடித்தலைக்கண்டு, அவர்கள் பாடுவதுபோல், 35. திருப்பொற்சுண்ணம் என்னும் பாடலைப் பாடியருனர். பிறகு, 36. திருத்தெள்ளேணம், 37 திரு வுந்தியார், 38. திருத்தோணோக்கம், 39. திருப்பூவல்லி, 40. திருப்பொன்னூசல், 41. அன்னைப்பத்து, 42. திருக் கோத்தும்பி, 43. குயிற்பத்து, 44. திருத்தசாங்கம், 45. அச்சப்பத்து என்னும் பாடல்களை அருளிச் செய்தனர். முடி

வாக, தில்லைமூதூரில், ஒரு தவச்சாலை அமைத்துக்கொண்டு, நாள்தோறும் கூத்தப்பிரானை ஆனந்தமாகக்கண்டு வழிபடும் கொள்கையில் உறைந்திருந்தனர்.

இவ்வாறு திருவாதவூரர், தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில், ஒரு சிவனடியார், எம்பெருமான் திருக்கோயில் கொண்டருளும் திருப்பதிகளை எல்லாம் சென்று வணங்கும் கருத்து உடையவராய், ஆங்காங்கே சென்று வணங்கி, சோழ நாட்டை அடைந்து, தில்லையில் பொன்னம்பலத்தைத் தொழுது பின், ஈழ நாட்டிற்குச் சென்றார். தான் செல்லும் இடங்களில் எல்லாம், உள்ளத்து உவகை மேலீட்டால் "எண்ணிலாத காலம் வாழி தில்லை மன்றம்" என்று சொல்லும் பழக்கமுடையவராயிருந்தார். ஈழ நாட்டு அரசன் இருக்கும் இடத்திற்குச் சென்றபோதும் அப்படியே சொன்னார். அங்கு புத்த சமயம் பரவியிருந்தமையால், அங்கிருந்த புத்தர்கள், இவர் எப்போதும் "பொன்னம்பலம், பொன்னம்பலம்" என்று கூறுவது ஏதோ ஒரு பெரும் தீச்செயல்போல் எண்ணி, இவரைத் தங்கள் மன்னனிடம் கொண்டு சென்றனர். அரசன் முன்னரும் இந்த சிவனடியார், "திருவம்பலம், திருவம்பலம்" என்று சொல்லிக்கொண்டே அமர்ந்தார். அரசன் வியந்து, "திருவம்பலம்" என்று இங்கு நீர் உரைப்பது எதனால் என்றான். சிவனடியார் பொன்னம்பலத்தின் பல சிறப்புக்களையும் எடுத்துரைத்து, எவரேனும் ஒருமுறை உள்ளன்போடு "பொன்னம்பலம் என்று உரைப்பாராயின், திருஐந்தெழுத்தை இருபத்து ஓராயிரத்து அறுநூறு முறை ஓதிய பலனைப் பெறுவார்கள்" என்று விடையளித்தார். அங்கிருந்த புத்தசமயக்குரு வெகுண்டு "திரிபிடகத்தை அருளிய தேவனை அல்லாது வேறு ஒரு தெய்வமும் உண்டோ? நான் தில்லைக்குச் சென்று வாது செய்து உலகோர் அறிய, ஒன்றே கடவுள்; அக்கடவுள் புத்தனே என்பதை நிலை நாட்டிப் பொன்னம்பலத்தையும், போதி நிழல் பெருமான் பள்ளியாக மூன்று நாட்களில் மாற்றி வருவேன்" எனச் சூள் உரைத்துத் தன்னைச் சார்ந்தார் சூழ தில்லையை நோக்கிப் புறப்பட்டான். ஈழத்து அரசனும், தன் ஊமைப்பெண்ணை அழைத்துக்கொண்டு நால்வகைப் படைகளுடனும், அமைச்சர் முதலானவர்களுடனும் உடன் எழுந்தான்.

இந்த ஈழ நாட்டுப் பெருங்கூட்டம் தில்லையுட் புகுந்தது. புத்த குரு, அரசன், அமைச்சர் முதலானவர்கள் திருக்கோயி

லினுட் புகுந்து, பொன்னினுல் செய்யப்பெற்ற மண்டபத்தில் அமர்ந்தார்கள். கோயிற்காப்பாளர், உள்ளம் கொதித்து புத்த குருவை நோக்கி "புத்தனே! கோயிலைவிட்டு ஓடிப்போ. உன்னை நாங்கள் இங்கு இருக்கவிடமாட்டோம்'' என்ருர்கள். புத்த குரு அவர்களைப் பார்த்து, ''சோழ மன்னன் முன்னிலை யில் வாது செய்து, உங்கள் சைவநெறி தாழ்ந்தது, புத்த சமயமே உயர்ந்தது என்று நிலைநாட்டி, பொன்னம்பலத்தில் புத்தபகவானை இருத்திய பின்புதான் அப்புறம் அகல்வேன்'' என்ருன்.

கோயிற்காப்பாளர் விரைந்து சென்று இந்நிகழ்ச்சியைத் தில்லை மூவாயிரவர்க்குத் தெரிவித்தார்கள்; அவர்களும் திரண்டு சபைக்கு வந்தார்கள். புத்த குரு அவர்களைப் பொருட்படுத்தாது இறுமாப்புடன் உட்கார்ந்திருந்தான். திருக்கோயிலுட்புகுந்ததோடு அல்லாமல், எவரையும் மதி யாது இறுமாப்புடன் அப்புத்த குரு இருப்பதற்குக் காரணம் என்ன என வினவினவர்க்கு, அவன், ''நீங்கள் உங்கள் தெய்வமே தெய்வமென்று தக்க சான்றுகளுடன் சொல்வீர் களாளுல், யான் அதை மறுத்து, எங்கள் தெய்வமே தெய்வ மென்று சொல்லுவேன்; இப்போது என்னை மறுத்துக் கூறுங்கள்'' என்ருன். அதுகேட்ட மூவாயிரவர், அவனேடு வாதாடுவது, சேற்றில் கல் எறிந்ததுபோலாகுமென எண்ணி "உன்னைத் தக்கவர்களைக்கொண்டு வெல்வோம்" எனக்கூறி, இச்செய்தியை சோழ மன்னனுக்கு ஓலை எழுதித் தெரிவித்து விட்டு, ஞானத்திலும் தவத்திலும் சிறந்த பெரியவர்களை எல்லாம் சிற்றம்பலத்தில் ஆனந்தக்கூத்தனைக்கண்டு, வழிபட வரவேண்டும் என்றும் ஓலை அனுப்பி வைத்தார்கள்.

ஈழ நாட்டுப் புத்த குருவும், அவனேடு வந்த அரசன், அமைச்சர் முதலிய கூட்டமும் தில்லை மூவாயிரவர் உள் ளத்தை நிலைகலங்கச் செய்துவிட்டது. அன்று இரவு, மூவா யிரவரும், துயிலும்போது, கடையாமத்தில் அப்பலவாணன், ஒவ்வொருவர் கனவிலும் தோன்றி, ''வருந்த வேண்டாம்; இத்தில்லைப்பதியில் திருவாதவூரன் என்னும் நம் அன்பன் வந்திருக்கின்ருன்; வாதநூல் வழக்குகளில் வல்லவன் நொடிப்பொழுதில் தக்க நூல் முறையாலே புத்தர்களை வென்று விடுவான் அவனை அழைத்து வருவீராக'' என திருவாய் மலர்ந்தருளினுர். அனைவரும் சபையில் கூடி இரவில் கண்ட கனவை மறுநாட்காலை ஒருவருக்கொருவர்

சொல்லி மகிழ்ந்தனர். பின்னர், அனைவரும் திருவாதவூரர் தங்கியிருந்த பன்னசாலையைத் தேடி அடைந்து நிகழ்ந்த வரலாற்றையும், சிவபெருமான் ஒவ்வொருவர் கனவிலும் தோன்றி உரைத்ததையும் தெரிவித்து அழைத்தனர். திருவாதவூரர், ஞானதேசிகன், திருப்பெருந்துறையில் தமக்கு உணர்த்தியருளியதை உள்ளத்தில் கொண்டு, அம்மூவாயிரவருடன் கூடிச்சென்று, கூத்தப்பெருமானை வணங்கி வாழ்த்தி, அவனது திருவருள்பெற்று, புத்தர் இருந்த மண்டபத்திற்குச் சென்று, தீயவர்களைக் காண்பது தீது என்று எண்ணி இடையே ஒரு திரையிட்டு அமர்ந்தார். சோழ மன்னனும் மறையோர், கலைவல்லோர் முதலிய நல்லோர் சூழ விரைந்து வந்து பொன்னம்பலத்தைத் தொழுது, மண்டபத்துட் சென்று, வாதவூரரை வணங்கி அவர் பக்கத்தில் ஒரு அணையில் அமர்ந்தான். ஈழ நாட்டு மன்னன் சோழ மன்னனைப் பணிந்து, "வாழிய" என வாழ்த்தி, திறை கொணர்ந்து வணங்கினான். சோழன், ஈழத்தரசனை மகிழ்ச்சியோடு நோக்கி, "திரையாகக் கொணர்ந்த யானைகள் மிகவும் நல்லன, மணிகள் மிகவும் விலையுயர்ந்தன" என, மகிழ்ச்சியுரை கூறினான். எல்லோரும் கூடியுள்ள கூட்டத்தில் சோழன் வாதவூரரை வணங்கி, "அடிகேள், சைவ சமயத்தை நிலைநிறுத்துவது அடிகள் கடமை, புத்தரை வெல்லுதல் என் கடமை" என்று கூறினான்.

சமய வாதம் தொடங்கியது, முதலில், திருவாதவூரர், புத்த குரு பொன்னம்பலத்துக்குள் வந்த காரணம் யாது என வினவ, புத்த குரு "எங்கள் புத்த பகவானே, உண்மையான கடவுள் என்பதை நிலைநாட்டி, இப்பொன்னம்பலத்தில் அவரை வைப்பதற்காக நேற்றுமுதல் தங்கியுள்ளேன்" என்றான். வாதவூரர் புன்னகைசெய்து, "புத்தனே உன் தெய்வத்தின் வரலாற்றையும் ஆன்மாக்கள் அவன் அடியில் சேரும் வகையையும் சொல்வாயாக" என்றார். இது கேட்டவுடன் சினங்கொண்ட புத்த குரு, "கண் இல்லாதவனுக்குக் கதிரவன் ஒளியைக் காட்ட முடியுமா? எங்கள் புத்த தேவனுடைய புகழைச் சொல்லவேண்டுமானால் பல்லாயிரம் நா வேண்டும். அவன், அறம் திகழும் பிடகம் என்னும் நல்ல நூலை ஓதி, உயிர்கள் இடத்து அன்பு உடையவனாய், பல பிறவிகளில் பிறந்து, உயிர்களுக்கு உறுதிசெய்து, கொலை, களவு, பொய், கள்ளருந்துதல் என்னும் நான்கு குற்றங்களையும் நீக்கி,

மேன்மையான அரசமரத்தின் நிழலில் வீற்றிருப்பவன்; கரு வில் சேருகின்ற, உருவம், வேதனை, குறிப்பு, பாவனை, விஞ் ஞானம் ஆகிய ஐந்து கந்தங்களும் கூடி ஒழிவில்லாத பல உணர்வு உண்டாகிப் பெருகிக்கொண்டே செல்லுவது பிறவித் துன்பம். ஐந்து கந்தங்களின் கூட்டம் அழிவது வீடு" என்று விடையளித்தான்.

இவ்விடையைக் கேட்ட வாதவூரர், புன்னகை செய்து, அவன் கூறிய நூல்களிலுள்ள குறைகளை எடுத்துக்காட்டிச் சிவபெருமானுடைய புகழையும், சைவ நெறியின் பெருமை யையும் விளக்கிக் கூறினார். புத்த குரு மறுபடியும் தொடர்ந்து "உம் கடவுள் ஆலின்கீழ் இருந்து அறம் உரைத்தான்" என்றீர்; ஆனால், அவன் கையில் சிவமணிமாலையைக் கொண்டிருப்பது கருதக்கூடிய வேறு ஒரு நல்ல கடவுள் உண்டு என்ற எண்ணமோ? வையகம் வணங்க தில்லை நாயகன் ஆனந்தக் கூத்தாடுவான் என்றுக் கூறினீர்; நல்ல அறிவு உடையவர் சிலர் பார்க்க ஆடுவதே யல்லாமல், தமது இச்சையினால் ஆடுவதும் உண்டோ? உலகம் உய்யும் வண்ணம், உம் கடவுள், திருமேனியில் நீறு அணிந் துள்ளான் என்றீர்; சிவந்த ஒளியுள்ள மேனியில் நீறு பூசுவது தூய்மையானதோ" எனப் பலவாறு கேள்விகளைக் கேட்டான். திருவாதவூரர், இகழ்ந்து நகைத்து, "அம்பலத் தாடும் எம் இறைவனது அடியார்கள் பெருவாழ்வு பெற்ற வர்கள்; நல்ல உபதேசங்களை நல்ல தவம் இல்லாத உன் னிடம் சொல்லுவது தகாது" எனச் சொல்லி "படைத் தொழில்கள் பயிற்றுவிக்கும் ஆசிரியன், மாணாக்கர்களுக்குக் காட்ட, தன் கையிலும் ஒரு படைக்கலம் வைத்திருப்பது போல், உலகத்தவர்க்கு தவம் செய்யும் முறையை காட்டு வதற்கே அவர் கையில் சிவமணிமாலை வைத்திருக்கின்றார். அவன் ஆடுவது ஊனக்கண் காண்பதற்கென எண்ணினை; விறகில் தீ போல் உள்கலந்து உயிர்த்தொகுதியை ஆட்டு விக்கும் ஆடலாசிரியன் எம் அண்ணல் என்பதை நீ உணர்ந் திலை; திருநீறு ஆன்மாக்களின் துன்பங்களை நீறுபடச் செய்வது; மக்கள் நோயைப் போக்குவதற்குத் தாய் மருந் துண்ணல் போல, உலகத்தவர் பிணி கெடுவதற்கே இறை வன் நீறணிந்தான்; திருநீற்றின் உண்மையை நான்கு மறைகளாலும் சொல்ல முடியாது" என அறிவுறுத் தினார்.

பின்னர் வாதவூரர் கலைமகளை நோக்கி, "நீ இப்பொய்யர் நாவில் பொருந்த ஒண்ணுமோ? தக்கன் வேள்வியில் நிகழ்ந்தது மறந்தனையோ? சிவபெருமான் திருவருள் இல்லை என்னும் இந்தக் கீழ்மக்கள் நாவைவிட்டு அகல்வாயாக, சிவபெருமான் ஆணை" எனக் கடிந்து கூறினார். நாமகளும் அவர்கள் நாவினின்றும் அகன்றாள்; புத்த சமயத்தார் எல்லோரும் ஊமைகளாயினர்.

இது கண்டு வியப்புற்ற ஈழமன்னன், வாதவூரரை வணங்கி, "சிவஞானச் செல்வரே, பேசவல்லவர் ஊமைகளாயினர்; என்னுடைய பெண், பிறவி முதல் ஊமையாக இருக்கின்றாள்; அவள் பேசும் வண்ணம் அருள் செய்தால், நான் உமக்கு அடிமையாவேன்" என்றான். வாதவூரர் அந்தப் பெண்ணை அவைக்கு வரவழைத்து, அமரும்படிச் செய்து "மகளே, இந்தப் புத்தன் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடை கூறுக" என்று கூற, அப்பெண்மணியும் யாவரும் வியந்து மகிழும் வண்ணம் விடையளித்தாள். அவ்விடையை, "சாழல்" விளையாட்டாகத் திருவாதவூரர் (46) திருச்சாழல் பாடினர்.

ஈழமன்னன், தன் பெண் பேசியதைக் கேட்டு எல்லையில்லாத மகிழ்ச்சி அடைந்து, வாதவூரரை வாயார வாழ்த்திப் புகழ்ந்து, திரு ஐந்தெழுத்தையும் முறையாக ஓதி, திருநீறு அணிந்து அவருக்குத் தொண்டனாகி, ஊமைகளாகிய புத்தர்கள் மீண்டும் பேசுதற்கு அருள் செய்ய வேண்டும் என்று பணிந்து கேட்டான். திருவாதவூரர் அருட்கண்ணால் நோக்கினார். புத்தர்கள் எல்லாம் ஊமைத் தன்மை நீங்கிப் பேசும் ஆற்றல் பெற்று, வாதவூரரடிகளில் விழுந்து வணங்கித் திருநீறும், சிவமணிமாலையும், கல்லாடையும் தங்களுக்கு வழங்கி ஆட்கொள்ளவேண்டும் என இரந்தனர். வாதவூரரும் அவ்வாறே அருள் செய்தார். ஈழமன்னன், பேரானந்தக் கடலில் மூழ்கி, அம்பலவாணன் திருமுன் தாழ்ந்து உளமுருகி,

1. "மணிவளர் ஒளியே, மலர்வளர் மணமே,
பொன்வளர் வாயுவே என்னத்
துனிவளர் அத்துவிதம் பொலிசுடரே!
தூய ஆனந்த வான்பெருக்கே!

கனிவளர் கடுக்கை, மதி, நதி, சடையில்
கலப்புறக்கொண்ட ஒண்பொருளே!
அணிவளர் அமுதே அம்பலத்து ஆடும்
ஐயனே உய்யுமாறு அருளே.[18]

2. "மண்ணிய மணியே மாசிலா முத்தே!
வான்பெரும் சுவையுடைக் கனியே!
கண்ணிய முக்கண் காமரு கரும்பே!
கற்பனை கடந்த மாமுதலே!
எண்ணிய எண்ணி யாங்குஅடி யவரே
எய்த, நன்கு அருள் அருட்கடலே!
அண்ணிய திருச்சிற்றம்பலத்து ஆடும்
ஐயனே உய்யுமாறு அருளே.[19]

எனப்புகழ்ந்து போற்றினன்.

சோழமன்னன் அளவிறந்த வியப்பும் மகிழ்ச்சியும் உடையவனாய் அவரைப் போற்றி வணங்கினன். தில்லை மூவாயிரவர், அங்கு கூடியிருந்த மறையோர், கலைஞர், தவ முனிவர், யாவரும் 'பொன்னம்பலம் வாழ்க, சிற்றம்பலம் வாழ்க, பேரம்பலம் வாழ்க' என வாழ்த்தி வணங்கினர். பின்னர், அனைவரும் மணிமன்றில் நடமாடும் ஐயர் திருமுன் சென்று வணங்கி, அவரவர் இடத்திற்குச் சென்றார்கள். ஈழ மன்னனும், ஈழ நாட்டிலிருந்து வந்த புத்தர்களும் சிவ நெறியைச் சார்ந்து தொண்டு செய்து கொண்டு திருத் தில்லையிலேயே தங்கியிருந்தனர்.

திருவாதவூரர் தம் பன்னசாலைக்குத் திரும்பிச் சென்று சிவானந்தத்தில் மூழ்கி அமர்ந்துவரும் நாட்களில் (47) திருப்படையாட்சி, (48) திருப்படையெழுச்சி, (49) அச்சோப்பத்து, (50) யாத்திரைப்பத்து என்பவற்றைப் பாடி யருளினர்.

சிவனடியே சிந்தித்து, ஞானவாழ்வினராய் வாதவூரர், தில்லையில் வாழ்ந்துவரும் நாட்களில், ஒரு நாள், அந்தணர் ஒருவர் அவரிடம் வந்து, தான் பாண்டியநாட்டைச் சேர்ந்த வர் என்றும், சிவபெருமான் வாதவூரருக்காகச் செய்த அருட் செயல் எல்லோரும் அறிய அவர் புகழ் நாடெங்கும் பரவி யுள்ளதென்றும், வியந்து கூறி, அவர் பல சமயங்களிலும்

18. திருப்பெருந்துறைப் புராணம். தில்லையை அடைந்த படலம் 50.

19 ஷை 51.

பாடியருளிய செய்யுள்களை முறையாகச் சொல்லும்படி வேண்டினார். வாதவூரரும், அந்தணரை அருகில் அமரச் செய்து பல சமயங்களில் பாடிய பாட்டுக்களை யெல்லாம் ஒரு முறையில் அமைத்துச் சொல்லியருள, அந்தணர் அன்புடனே எழுதி முடித்து, "பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக" எனக் கேட்ப, வாதவூரர், அம்பலத்தாடும் அண்ணல் புகழைப் பலகாலும் பல நிலைகளிலும் நினைவுக்குக் கொண்டு வருவதான இனிய கோவை ஒன்றினை அருளிச்செய்தார். இது, திருக்கோவையார் அல்லது திருச்சிற்றம்பலக்கோவை என்னும் பெயர் பெற்றது. வந்த அந்தணர், இந்தக் கோவையையும் எழுதிக் கொண்டனர். பின்னர், அந்தணர் உருவில் வந்த சிவபெருமான் தாம் எழுதிய நூல்களை அன்புடன் அணைத்துக்கொண்டு, திருவாதவூரர் காணும்போதே அவர் முன்பு மின்னலென மறைந்தார் அதுகண்ட திருவாதவூரர், எங்கும் தேடியும் அவரைக் காணாதவராய், தனக்குள் இதென்ன மாயம் என வியந்து, இப்படிச் செய்தவர் தன்னை ஆட்கொண்ட அண்ணலே என்று அறிந்து, ஆனந்தக் கண்ணீர்ப்பெருக "என்னை ஆட்கொண்ட தெய்வமே, எங்கு மறைந்தாய்" என, செயல் மறந்து நிலத்தில் விழுந்து வணங்கினார்.

திருவாதவூரரின் பெருமையை யாவரும் அறியவேண்டி அவர் சொல்ல தன் திருக்கையால் தான் எழுதிய நூலினை முனிவர்களும் விண்ணவர்களும் தொழும் அம்பலத்தின் வாயிற்படியில் வைத்து மறைந்தார். பின்னர், கோயிற் பூசை செய்யும் அந்தணர் பூசைக்கு வரும்போது, வாயிற் படியில் ஒரு புத்தகம் இருக்கக் கண்டார். இது இங்கிருப்பது ஆண்டவனின் அருள் தான் என்றும், இதை மக்கள் யாவரும் அறிய வேண்டும் என்றும் எண்ணி, சிற்சபையை விட்டு விலகி, எல்லோரிடமும் 'கோயில் வாயிற்படியில் சுவடி ஒன்று இருக்கிறது' என்று சொல்ல, மக்கள், இது மிக ஆச்சரியம் என வியந்து ஓடோடி வந்து சூழ்ந்து கொண்டு அப்புத்தகத்தைப் பார்த்து, இது கடவுளால் சொல்லப்பட்ட சிவாகமமோ, அன்றித் தெய்வத் தமிழ் நூலோ எனப் பலவாறு நினைந்து, அது என்ன நூல் என்று அறியும் ஆவலுடையவர்களாய் இருந்தனர். பின்னர், அக் கூட்டத்தில் ஒருவர் முன்வந்து, அந்நூலுக்கு மலர் இட்டு வழிபட்டு மிகுந்த பக்தியுடன் அப்புத்தகத்தைப் பிரித்து,

ஏடுகளைப் புரட்டி, முதலில் அகவல் நான்கையும், பின்னர் திருச்சதகம் முதலிய அறுநூறு பாடல்களையும், அகப்பொருட் கோவை நானூறு பாடல்களையும், படித்து முடிகின்ற இடத்தில், திருவாதவூரர் சொற்படித் திருச்சிற்றம்பலமுடையார் என கையொப்பம் இருந்தது என்றும் தெரிவித்தார்.[20]

அதுகேட்ட மக்கள் உடல் சிலிர்க்க, ஆனந்தத்தினால் கண்ணீர் சொரிய மனங்கசிந்து உருகி, திருவாதவூரர் சொன்ன இத்தெய்வத் தமிழ் நூல் அல்லாமல் இறைவன் திருவடி அடைதற்கு வேறு நூல்கள் உள்ளனவோ ? என்று நினைந்து அங்கிருந்து சென்று திருவாதவூரரை அடைந்து அவரை வணங்கி, கடவுளால் திருவாயிற்படியில் வைக்கப் பட்டிருந்த திருமுறையைப் பற்றித் தெரிவித்தார்கள். திருவாதவூரர், இதைக்கேட்டு, " சிறியேனாகிய என் பாடல்களை, எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படி இறைவன் அருளியதற்கு நான் செய்த புண்ணியந்தான் என்ன " என வருந்தி அழுது நிற்க, மக்கள் அவரை வணங்கி வரலாற்றை வினவ, திருவாதவூரரும் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் சொன்னார். மக்கள் ஆனந்தங் கொண்டு இதன் பொருளைத் தாங்களே விளக்கம் செய்ய வேண்டும் என்று வேண்டினர். திருவாதவூரரும் இதன் பொருளைப் பொன்னம்பலத்தின் முன் வந்து விளக்குகின்றேன் என்று சொல்லி மகிழ்ந்து அவர்கள் பின் தொடர சிற்சபையை நோக்கிச் சென்று, அங்கு அவர்களுக்கு, " இவர் தாம் பொருள் " என்று, தன்னை ஆட்கொண்டருளிய ஆனந்தக் கூத்தனைக் காண்பித்து, எல்லோரும் காணும்படி அவ்விடத்திலேயே மறைந்தார். சிவபெருமானும், அவர் அன்பின் தூய்மையை யாவருக்கும் காட்ட வேண்டி, பாலுடன் கலந்த நீர்போல், அவரைத் தம்முடன் ஒன்றுபடுத்திக் கொண்டார். இந்த அற்புத நிகழ்ச்சியைப் பார்த்த மக்கள் அனைவரும் ஆனந்தத்தால் மன மகிழ்ந்து தலை வணங்கித் தாழ்ந்து கண்ணீர் கசிய தொழுது நின்றனர். பூதங்கள் நடம் புரிய, கணநாதர்கள் புகழ, தும்புரு நாரதர் இசைபாட, வேதங்கள் முழங்க, முனிவர்களும், தேவர்களும் மலர் மழை பெய்ய, கடவுளின் திருநாமத்தையே வழிபடுபவர்களும், சிவபூசை செய்பவர்களும் தில்லையம்பதியில்

20. இவ்வரலாறுகள் ஒன்றும் நம்பி திருவிளையாடலிற் காணப் பெறவில்லை.

வாழ்ந்து சித்திபெற்றவர்களும், திருவாசகம் என்னும் இனிய சுவை அமுதாகிய தமிழ் நூலின் இன்பத்தை அள்ளிப் பருகினர்.

> "யாவரும் புகழ் சிவானுபவம் எவ்வாறு, இருக்கும்?" என்னின்,
> மே-வரும் உரு ஒன்று உற்று, பெருந்துறைக் கோயின் மேவி,
> தா-அரும் பூசையோடு சாறும்கொண்டு, அடைந்தோர்க்கு எல்லாம்
> ஓ-அரும் சோறு நல்கி, உவந்து வீற்றிருக்கும் அன்றே![21]

III

திருவாதவூரர், கி. பி. ஏழாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பாண்டிய நாட்டில் அரசுசெலுத்திய சடையவர்மன் என்னும் பட்டம் புனைந்த முதலாம் வரகுணபாண்டியன் காலத்தில் வாழ்ந்தவராவர். எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டுவரை இவ்வுலகில் வாழ்ந்தார் என்பதைத் திட்டமாகக் குறிப்பிட வியலாவிடினும், சிறிது முன்பின்னாக, கி. பி. 775-ல் பிறந்து 807-ல் சிவபெருமான் திருவடியிற் கலந்தனர் என்று கொள்ளலாம். இவர் காலத்தில், வெற்றிவீரனாகிய வரகுணனது போர்த்திறமையாலும் விடாமுயற்சியாலும் பாண்டியர் ஆட்சி மிகவும் பெருகியது; பகைமன்னர்கள் தனித்தனியாக எதிர்த்த போதும் பலர் ஒன்று கூடி எதிர்த்தபோதும் அவர்களை எல்லாம் புறங்கண்டு வெற்றிகொண்டான்; இதனால், அரிமர்த்தனன் என்னும் பெயரும் இவனுக்கு வழங்குவதாயிற்று. இவன் காலத்தில், சோழமண்டலமும், தொண்ட மண்டலமும், கொங்கு மண்டலமும், பாண்டியர் ஆட்சிக்கு உள்ளாயின.

இப்பேரரசன் சிறந்த சிவநெறிச் செல்வனாகவு மிருந்தான் என்பதை,

> "மன்னவன் தெம்முனைமேல் செல்லும் ஆயினும், மால்அரிஏறு
> அன்னவன் தேர், புறத்து அல்கல் செல்லாது, வரகுணனும்
> தென்னவன் ஏத்து சிற்றம்பலத்தான், மற்றைத் தேவர்க்கெல்லாம்
> முன்னவன் மூவல் அன்றாளும், மற்றோர் தெய்வம் உன்னலனே." (306)

---

21. திருப்பெருந்துறைப் புராணம் – வீரபத்திரப் படலம் 1.

"புயல் ஓங்கு அலர்சடை ஏற்றவன் சிற்றம்பலம் புகழும்
மயல் ஓங்கு இருங் களியானை வரகுணன் வெற்பின் வைத்த
கயல் ஓங்கு இருஞ்சிலை கொண்டு, மன் கோபமும்
காட்டி வரும்—
செயல் ஓங்கு எயில் எரி செய்தபின், இன்று ஓர் திருமுகமே"
(327)

என்னும் திருக்கோவையார் செய்யுட்களில், வாதவூரரே குறிப்பிடுகின்றார்.

வரகுணனது நாட்கள் பெரும்பகுதியும் போரிலேயே செலவாகவேண்டிய நெருக்கடி ஏற்பட்டமையால், நாட்டின் நலத்தைப் பாதுகாத்தற்குத் தனக்குத் தக்க துணையாக வாதஊரரைத் தேர்ந்தெடுத்து அமைச்சுரிமை அளித்தான். எல்லாவழியாலும் இந்த நியமனம் பொறுத்தமானதே. அரசனும் அமைச்சரும் சிவனடியார்களானபடியால் இவர்களுக்குள் மிகுதியான ஒற்றுமை இருக்கக்கூடியது இயற்கையேயாகும். வாதவூரர், கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆற்றல் முதலியவைகளில், அக்காலத்து தலைசிறந்து விளங்கியவர்; அமைச்சுரிமை பெறுங்காலத்தில் இருபத்தைந்து ஆண்டு அகவையினராக இருக்கலாம். இளைஞராயினும் அமைச்சுரிமையை ஆவலுடன் ஏற்றுக்கொள்ளவில்லை; தன் குறிக்கோளுக்கு அது தடையாகிவிடும் என்று அஞ்சினார். மன்னன் வற்புறுத்தலும் நெருங்கிய சுற்றத்தார் நண்பர்களது தடுக்கமுடியாத வேண்டுகோளும் ஏற்றுக்கொள்ளச் செய்தன.

சிறந்த சிவநெறிச் செல்வர்களாகிய அமைச்சரும், அரசரும் ஒத்த கருத்துடையவர்களாக இருப்பார்கள் என்று உலகம் எதிர்பார்க்கக் கூடும். அரசனும், தன் அமைச்சர், தன் கருத்துக்குத் துணையாக இருந்து பணிபுரிவார் என்று நம்பிக்கையுடன் இருந்திருக்கவும் கூடும். ஆனால், அரசாட்சி முறையில், இருவரும் அடிப்படையிலேயே ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துடையவர்களாக இருந்திருக்கிறார்கள். வீரவாள் ஏந்தி வெற்றிப் பறையறைய விரும்பும் வரகுணனும், ஞானவாள் ஏந்தி நாதப்பறையறைய விரும்பும் வாதவூரரும் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கக்கூடுமா? முன்னைய தன் அடிப்படை வீரமும் மறமும்; பின்னையதன் அடிப்படையோ அன்பும் அறிவும். தென்னவன் விரிவுபடுத்த விழைந்ததெல்லாம் பாண்டியர் பேரரசே;

தென்னவன் பிரமராயன் விழைந்ததோ, சிந்தை செல்லாச் சேண் நெடும் தூரத்து அந்தமில் இன்பத்து அருட்பேரரசு. இவர்கள் கருத்து வேறுபாட்டைக் கடுமையாக் வெளிக்குக் கொணர்ந்தது பாண்டியர் அரசின் பொருளாட்சி முறையே யாகும். இங்கு, பாண்டியர்களின் பொருள் நிலையையும் வரவுசெலவு வழிகளையும், ஒரு பகுதியைப் பொறுத்த அளவிலாவது பொதுவாக நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாண்டியர்களது பொருளாதார நிலை மிகவும் சிறந் திருந்தது; இவர்கள் துறைமுகங்களில் குவித்த முத்துக் களும், நாட்டில் நெய்த வேலைப்பாடு அமைந்த பல்வகை நுண்ணிய ஆடைகளும், மேல்நாடுகளில் ஆவலுடன் விலைக்கு வாங்கப்பெற்றன. பாண்டிய நாட்டுப் பொருள்களை வாங்குவதால் மேல்நாட்டுச் செல்வம் வறண்டுவிடுமோ என்று அக்காலத்திய அந்நாடுகளின் பொருள்நூல் வல்ல வர்களும் ஆட்சித்துறையில், உள்ளவர்களும் அஞ்சினர்கள் என்றால், மேல்நாட்டுச் செல்வத்தை எவ்வளவு அதிகமாகப் பாண்டி நாட்டுப் பொருள்கள் கவர்ந்திருக்கவேண்டும் என் பதை நாம் ஒருவாறு உணரலாம். பாண்டியநாட்டு ஏற்று மதியால் பாண்டியர் நிதிக் கருவூலத்தில் பொற்குவியல்கள் மலைமலையாகக் குவிந்திருக்கவேண்டும். ஆனால், நாம் எதிர் பார்க்கக் கூடிய அளவு நிதி வளரவில்லை. ஏற்றுமதிப் பொருள்கள் கொணர்ந்த செல்வ வளத்தில் பெரும்பகுதி சோனகத் தரகர்களுக்குச் சென்றது; பாண்டியர்கள் நிதிக்கு வந்த பொற்குவியல்களில் ஒரு பகுதி யவன நாட்டு மது, கலன் முதலிய இன்பம் துய்ப்பதற்கான பொருள்களை வாங்குவதிலும், பிறநாடுகளிலிருந்து கட்டமைந்த இருபால் மக்களையும், ஏவலாட்களாகவும், காவலாட்களாகவும், அரண் மனையில் பலவகை ஊழியக்காரர்களாகவும் சேர்த்துச் செல விடுவதில் கழிந்தது; பெரும்பகுதி, சோனக வணிகரிட மிருந்து, அரபிய, பாரசீகநாட்டுக் குதிரைகளை வாங்கிக் குதிரைப் பந்தியில் சேர்ப்பதில் கழிந்தது.

பாண்டியர்கள், சோனக வணிகர்களிடமிருந்து குதிரை கள் வாங்குவதற்குச் செய்துகொண்ட வாணிக ஏற்பாடு, கொள்வோர்க்குப் பொருட்கேடு பயக்கும் முறையில் அமைந் திருந்ததோடு வாணிகமுறை வல்லார் ஏளனம் செய்யத்தக்க தாகவும் இருந்தது. இவர்கள் செய்துகொண்ட உடன்

படிக்கைப்படி சோனகவணிகர்கள், உலக இலக்கியங்களில் சிறப்பித்துக்கூறப்படும் மரபினவாகிய குதிரைகளையும் குறைவாக மதிக்கக்கூடிய உயர்வுள்ள குதிரைகள் ஆண்டு ஒன்றுக்குக் பதினுயிரக்கணக்கில் முன்னரே முடிவுசெய்து கொண்ட விலைப்படி கொடுக்கவேண்டும். ஏற்றுமதியான குதிரைகள் அத்தனைக்கும் ஒப்புக்கொண்ட விலைப்படி பாண்டியர்கள் தொகை கொடுத்துவிடவேண்டும். வரும் வழியில் ஏற்படும் எந்தவிதக் கெடுதிகளுக்கும் குறைவுகளுக்கும் சோனகக் குதிரை வணிகர் கட்டுப்பட்டவரல்லர். குதிரை ஏற்றிவரும் கப்பல்கள் கடலில் ஆழ்ந்தாலும், கடற்கொள்ளைக் காரர்களால் கவரப்பட்டாலும், குதிரைகள் நோய்வாய்ப்பட்டு இறந்தாலும், வரும் பொருட்கேடுகள் எல்லாம் பாண்டியரைச் சேர்ந்ததேயாகும். இவ்வாறு, பெரும்பொருட் செலவில் குறைந்த எண்ணிக்கையுள்ள குதிரைகளே வந்து கொண்டிருந்தன. அக்கால் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, பாண்டியர் குதிரைப் பந்தியில் வந்து சேரும் ஒரு குதிரைக்கு பாண்டியர்கள் நூறு குதிரைகளின் விலை கொடுத்திருப்பார்கள் என்று எண்ண வேண்டியிருக்கிறது. சோனக வணிகர்கள், தங்கள் செல்வப்பெருக்குக்கு இம்முறையான குதிரை வணிகம் பெருந்துணையாக இருப்பதை மனதில் வைத்துக் கொண்டு வேறு சில சூழ்ச்சிகளும் செய்திருந்தார்கள்; அவற்றுள் முதலாவது, குதிரைக்கு இலாடம் கட்டுபவர்களும், வைத்தியம் செய்வோர்களும் தங்கள் ஊரைவிட்டு (அதாவது அரபியா, பாரசீகநாடு முதலியன) வெளியூர்களுக்கு, அதிலும் சிறப்பாகப் பாண்டி நாட்டுக்குச் செல்லக்கூடாது என்பது. இரண்டாவது, குதிரைகளைக் காப்பாற்றுவதற்கு மாருன முறைகளைப் பின்பற்றுமாறு செய்தது. பாண்டியர் பந்தியில் சேர்ந்த குதிரைகள், நெய்யில் பொறித்த கொள்ளும், வற்றக்காய்ச்சிய பாலும், இன்சுவைமிக்க தின்பண்டங்களும் உணவாகக் கொடுக்கப்பெற்று, நல்ல நிழலில் ஓய்வாகத் தங்கும்படி நாற்பது நாட்கள் அங்கும் இங்கும் அசையாமல் கட்டப்பெற்றன. பெருஞ்செலவில் வந்த குதிரைகள் சில திங்களுக்குள், இத்தகைய பாதுகாப்பில், நோய்வாய்ப்பட்டு மடிவனவாயின; மடியாது நின்றவை, பல நோய்களுக்கு உட்பட்டனவாகி என்பும் தோலுமாக முடிவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தன. பாண்டியர்களுக்குக் குதிரைப் பந்தியிலுள்ள ஆர்வம், தங்கள் நிதி பயனற்றுத் தொலை

வதை உணர்ந்தும், குதிரைகளைக் கொள்வதைக் கைவிட மனம் இடந்தரவில்லை. இவ்வாறே ஒவ்வொரு ஆண்டும் குதிரைகள் வாங்குவதில் பாண்டியர் நிதி குறைந்து கொண்டே வந்தது. தங்கள் கருவூலத்துப் பொற்குவியல்கள் குறைவதைப் பொறுக்கமுடியாமலும் குதிரைகள் வாங்கு வதைத் தடுக்க முடியாமலும் இடர்ப்பட்ட பாண்டியர், குதிரைக்ள் வாங்குவதற்குத் தங்கள் கருவூலத்தில் கைவைக் காமல், வேறுவழியில் பொருள்கூட்டமுயன்று, திருக்கோயில் களின் வருவாய்களையும், கோயிற் கணிகையர்களுக்கு வரி விதித்து அவ்வரிகளால் வந்த வருவாயையும், சோனகக் குதிரைகளை வழக்கம்போல் வாங்குவதில் செலவிட்டார்கள். இந்த ஒரு நிலையில், வரகுணனுக்கும், வாதவூரருக்கும் உள்ளீடாக இருந்த மாறுபாடு முற்றி வெளிவந்துவிட்டது.

பாண்டியர் பேரரசைப் பெருக்கி நிலைநிறுத்தும் குறிக் கோளுடைய வரகுணன், தன் நாட்டைக் காப்பாற்றுவதிலும், தனித்தும் பலர் ஒன்றுகூடியும் தன்னை எதிர்த்த மாற்றரசர் களை வெற்றிகாண்பதிலும் கண்ணும் கருத்துமாக நின்றவ னுனமையால், தன் படையை வலுப்படுத்திப் பெருக்குவதி லேயே பெருநோக்குடையவனாக இருந்தான். இத்தகைய வீரனுக்குப் பல நெருக்கடிகள் உண்டாவது இயற்கையே யாகும். ஒரு நெருக்கடியில், வழக்கமாகப் பாண்டியர் துறை முகங்களில் இறங்கும் குதிரைகள் சோழர் துறைமுகங்களில் இறங்கியுள்ளனவென்பதை அறிந்தான். இவனுக்குப் பல எண்ணங்கள் தோன்றின ; அக்குதிரைகள் மாற்றரசர்களால் கொள்ளப்பெறின் தன் வெற்றிக்கு இடையூறு உண்டாகும் என்னும் கருத்து தோன்றிற்று. உடனே அக்குதிரைகள் அனைத்தையும் எவ்வளவு பொன் கொடுத்தேனும் வாங்கி வருமாறு தென்னவன் பிரமராயராகிய வாதவூரரைப் பணித்தான்.

குதிரைகள் வாங்குவதற்காகச் சேர்த்துவைத்துள்ள பொற்குவியல்கள் அனைத்தும் திருக்கோயில்களின் வருவா யும், கணிகையர் செலுத்திய வரியின் வருவாயுமேயாகும். தெய்வ வழிபாட்டை அடிப்படையாகவைத்து மக்கள் ஒழுக் கத்தையும் பண்பையும் செம்மைப் படுத்துவதற்குப் பயன் படுத்தவேண்டிய நிதியை வேறு எந்தவழியில் செலவு செய் தாலும், மக்களுக்கும் தெய்வத்திற்கும் ஒரு தீங்கிழைக்கும் மாற்றொணுத் தீச்செயல் என்னும் கொள்கையில் உறைத்து

நின்ற வாதவூரர், ஒரு சிறிதும் அஞ்சாமலும் பின்வாங்காமலும், திருக்கோயில் நிதிகளைக் குதிரைகள் வாங்கப் பயன்படுத்தாமல், திருக்கோயில்கள் சார்பிலும், நாட்டில் நற்பண்புகளைப் பரவச்செய்யும் அடியார்கள் சார்பிலும் செலவிட்டார்.

படையால்தான் வெற்றிபெறலாம் என்று எண்ணினன் வரகுணன்; மக்கள் நடையால்தான் வெற்றி நிலைநிற்கும் என எண்ணினர் வாதவூரர். வரகுணன், தான் தோன்ற வேண்டிய காலத்தில் தோன்றிய வீரன்; வாதவூரர், தான் தோன்றவேண்டிய காலத்திற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிவிட்டவர். சுருங்கக்கூறின் இவர்களிடையுள்ள வேறுபாடு இதுதான். போர் நெருக்கடிகளில் நாடனைத்தையும் பலி கொடுத்தேனும் வெற்றிபெற எண்ஸ்ரியவன் வரகுணன்; எந்த நெருக்கடியிலும் விதித்த முறைகளிலிருந்து மாருமலும் மக்கள் நற்பண்புகள் கெடும் வழிகளில் கால்வைக்காமலும் வாழ்வதே வாழ்க்கை எனக் கொண்டவர் வாதவூரர்.

போர் நெருக்கடியில், வாதவூரர், தன் கட்டளையை மீறி, குதிரைகள் வாங்காது திருக்கோயிற்பணிகளில் பொருளைச் செலவிட்டது, வரகுணனுக்குப் பெரும் சீற்றத்தை விளைவித்துவிட்டது. இவ்வாறு அரசன் கட்டளையை மீறுபவர்களுக்குக் கொலைத்தண்டமே தக்க தண்டமாயினும், அந்தணரைக் கோறல் அறம் அன்று என்ற கொள்கையில், இவரைப் பல இன்னல்களுக்கு உள்ளாக்கினன். முடிவில் இவரை அமைச்சராகக் கொண்டது தன் தவறு என்னும் கருத்தினனாய் "நீதி வேந்தர்மாட்டு அமைச்சினுக்கு வேதியர் ஆகார்" எனக்கூறி வாதவூரரை அமைச்சர் பதவியிலிருந்து விலக்கி விட்டான். வாதவூரரைச் சேர்ந்தவர்களும் "மந்திரக்கிழமை பூண்டு மன்னவர் கருமம் செய்வது அந்தணர்க்கு அறனே அல்ல; அமைச்சியல் அறத்து நின்ருல், வெந்திறல் அரசர்க்கு ஏற்ற செய்வதே வேண்டும்" எனக்கூறி மனம் நொந்தனர். வாதவூரரும், "நாட்டின் ஞானச் செல்வத்தைப் பெருக்க வேண்டிய கடமையுடைய நான், நாட்டின் பொருட்செல்வத்தைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டது எவ்வளவு தவருனது; பொய்யாய செல்வத்தே புக்கு அழுந்தி மாளாது, ஐயா எனக்கு அறிவளித்தனையே" எனக் கூறி, துறவு பூண்டு சிவபெருமான் திருத்தொண்டிற்கே தன்னை உரிமையாக்கினர்.

வாதவூரர் அமைச்சராக இருந்த காலத்தில், குதிரைகளைக் கொள்வதில் தன் நாட்டுச் செல்வம் அழியாமல் தடுப்பதற்கும், குதிரைப் படைகள் நாட்டுக்கு வேண்டிய உறுப்புக்களில் ஒன்று என்பதை உள்ளத்தில் கொண்டும், உயிர் நூல் முறைகளில், செயற்கை முறைகளைப் பயன்படுத்தி உயர்ந்த, சோனகர் கொணரும் குதிரைகளை ஒத்த குதிரைகள் நம் நாட்டிலேயே உண்டாகிப் பெருகும்வண்ணம் திட்டம் வகுத்து, கலப்பு முறையில் குதிரைகள் தோன்றச் செய்தார். இந்தத் திட்டப்படி முதல் முதலாக விளைந்தவை எதிர் பார்த்தபடி இல்லாததால், பல கலப்புக்களுக்குப் பின்னர் தான் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும் என்பதைத் தெரியவியலாத பொதுமக்கள், வாதவூரர் 'நரியைப் பரியாக்க முயல்கின்றார்' என்று கூறிய ஏளனச் சொற்களே நரி பரியாக்கிய கதைக்கு வித்தாகவுள்ளது என்று நாம் கொள்ள வேண்டியிருக்கிறது. இயலாததை இயற்ற முன் வருவதை எள்ளுவோர் 'கருப்பை வெள்ளையாக்குதல்' என்பது போல, 'நரியைப் பரியாக்குவது' என்பதும் ஒரு வழக்கு மொழியாகும், இச்சொற்றொடர் தொன்று தொட்டு தமிழ் நாட்டில் வழங்கி வந்ததாகும்.

வாதவூரர் வரலாற்றோடு இணைக்கப்பெற்றுள்ள வையை வெள்ளப்பெருக்கும், அவ் வெள்ளத்துக்கு ஊர் மக்கள் கரையிட்டதும், அக்காலத்து போரில் முனைந்து நின்ற அரசன், நீர்ப்பாசனம், நீராணிக்க முறைகள் முதலியவற்றைப் போதிய அளவு பாதுகாவாததையே குறிப்பிடுவனவாகும். சிவபெருமான் கூலியாளாக வந்தார் என்பது உழைப்பின் உயர்வைக் காட்டவந்த கதை யென்று தோன்றுகிறது. உழைப்பிற்கு இதை விட வேறு என்ன ஏற்றம் கொடுக்க முடியும்?

அமைச்சுரிமையிலிருந்து விலகி, வாதவூரர் துறவு பூண்டது கி. பி. 804 என்று வைத்துக்கொள்ளலாம். பின்னர் கி. பி. 807-ல், சிவபெருமான் திருவடியிற் கலக்கும் வரை, திருத்தில்லையிலேயே தங்கியிருந்திருக்கிறார். அப்போது, புத்த சமயத்தைத் தமிழ்நாட்டில் பரவச் செய்வதற்குக் கால்கோள் விழாவாக, ஈழநாட்டுப் புத்தகுரு, அந்நாட்டு அரசனைத் துணைகொண்டு வந்து சைவ சமயத்தின் உயிர் நாடியாக விளங்கும் தில்லைத் திருச்சிற்றம்பலத்தில் புகுந்ததும், சமயவாதத்தில் வாதவூரருடன் நிற்கவியலாது

ஊமைகள் போல் மௌனமாக நின்றதும், புத்தர்கள் திருச்சிற்றம்பலத்தில் நிலைக்க முடியாதவண்ணம், தில்லை மூவாயிரவர், சோழமன்னன் துணைகொண்டு அவர்களை வெருட்டிச் சைவத் துறவிகளாக்கியதும், ஈழமன்னன் சோழமன்னனுக்குத் திறை செலுத்தியதும், அக்காலத்தில் பேரரசாக விளங்கிய பாண்டியர்களைப்பற்றி ஒரு சிறிதும் இந்நிகழ்ச்சிகளில் குறிப்பிடாததும், வரலாற்றுக் கண்கொண்டும் அரசியல் நிலை கொண்டும் கருதத் தக்கனவாகும்.

மாறுபட்ட இரு பெரியோர்களுள், வரகுணன் அன்றைய வெற்றியையே கருதி தன்னுடன் மாறுபட்ட அமைச்சரை விலக்கி வெற்றி கொண்டான். வாதவூரர், பின்றைய வெற்றியையே கருத்துள் வைத்துத் தன் நெறியால் வரகுணனை, தன்போல் செய்து வெற்றி க்ண்டார். திருவாதவூரடிகள், திருப்படை யெழுச்சியில் "ஆன நீற்றுக் கவசம் அடையப்புகுமின்கள்" என்று அருளினார். அத்தெய்வத் திருமொழியை அவ்வாறே பின்பற்றினான் வரகுணன். இவ்வுண்மையை நம்பியாண்டார் நம்பி, கற்போர் மனம் கசியும் வண்ணம்.

"பொடியேர் தருமே னியனாகிப் பூசல் புகவடிக்கே
கடிசேர் கணைகுளிப் பக்கண்டு கோயிற் கருவியில்லார்
அடியே படவமை யுங்கணை யென்ற வரகுணன்றன்
முடியே தருகழ லம்பலத் தாடிதன் மொய்கழலே" 22

எனப்போற்றுவது கருதத்தக்கது.

தூய துறவுக்குத் தலை சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழும் பட்டினத்தடிகள், வரகுணனைப் பற்றிப் பேசவந்த இடத்து,

"வெள்ளை நீறு மெய்யிற் கண்டு
கள்ளன் கையிற் கட்டவிழ்ப் பித்தும்
ஓடும் புன்னரி யூளைகேட் டரனைப்
பாடின வென்று படாம்பல வளித்தும்
குவளைப் புனலிற் றவளை யரற்ற
ஈசன் றன்னை யேத்தின வென்று
காசும் பொன்னுங் கலந்து தூவியும்
வழிபடு மொருவன் மஞ்சனத் தியற்றிய
செழுவிதை யெள்ளைத் தின்னக் கண்டு
பிடித்தலு மவனிப் பிறப்புக் கென்ன

22. கோயில் திருப்பண்ணியர் விருத்தம் – 62.

இடித்துக் கொண்டவ னெச்சிலை நுகர்ந்தும்
மருத வட்டத் தொருதனிக் கிடந்த
தலையைக் கண்டு தலையுற வணங்கி
உம்மைப் போல வெம்மித் தலையுங்
கிடக்க வேண்டுமென் றடுத்தடுத் திரந்துங்
கோயின் முற்றத்து மீமிசைக் கிடப்ப
வாய்த்த தென்று நாய்க்கட்ட மெடுத்துங்
காம்பவிழ்ந் துதிர்ந்த கனியுருக் கண்டு
வேம்புகட் கெல்லாம் விதான மமைத்தும்
விரும்பின கொடுக்கை பரம்பரற் கென்று
புரிகுழற் றேவியைப் பரிவுடன் கொடுத்த
பெரிய அன்பின் வரகுண தேவரும்'[23]

எனக்கூறும் உளங்கனிந்த சொற்களால் வரகுணனது தெய்வ நலச் சிறப்பைத் தெரிந்து கொள்வதோடு, வீரத்தை ஞானம் வென்ற உண்மையையும் உணர்ந்து நலம் பெறலாம்.

---

23. திருவிடைமருதூர் மும்மணிக்கோவை - 28.34–55.

திருவாசகப்பதிக

இப்பொழுது பதிப்புக்களில் காணும் முறை

திருப்பெருந்துறை
1. நமச்சிவாய வாஅழ்க

திருத்தில்லை
2. கீர்த்தித் திருவகவல்
3. திருவண்டப்பகுதி
4. போற்றித்திருவகவல்

திருப்பெருந்துறை
5. திருச்சதகம்

திருவுத்தரகோசமங்கை
6. நீத்தல் விண்ணப்பம்

திருவண்ணுமலை
7. திருவெம்பாவை
8. திருவம்மானை

திருத்தில்லை
9. திருப்பொற்சுண்ணம்
10. திருக்கோத்தும்பி
11. திருத்தெள்ளேணம்
12. திருச்சாழல்
13. திருப்பூவல்லி
14. திருவுந்தியார்
15. திருத்தோணேக்கம்
16. திருப்பொன்னூசல்
17. அன்னைப்பத்து
18. குயிற்பத்து
19. திருத்தசாங்கம்

திருப்பெருந்துறை
20. திருப்பள்ளியெழுச்சி

திருத்தில்லை
21. கோயின்மூத்ததிருப்பதிகம்
22. கோயிற்றிருப்பதிகம்

திருப்பெருந்துறை
23. செத்திலாப்பத்து
24. அடைக்கலபத்து
25. ஆசைப்பத்து
26. அதிசயப்பத்து
27. புணர்ச்சிப்பத்து
28. வாழாப்பத்து
29. அருட்பத்து

மகாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருப்பெருந்துறைப்புராணத்தில் காணும்முறை

திருப்பெருந்துறை
1. நமச்சிவாய வாஅழ்க
2. அற்புதப்பத்து
3. அதிசயப்பத்து
4. குழைத்தபத்து
5. சென்னிப்பத்து
6. ஆசைப்பத்து
7. வாழாப்பத்து
8. அடைக்கலப்பத்து
9. செத்திலாப்பத்து
10. புணர்ச்சிப்பத்து
11. அருட்பத்து
12. திருவார்த்தை
13. எண்ணப்பதிகம்
14. திருப்பள்ளியெழுச்சி
15. திருச்சதகம்

திருவுத்தரகோசமங்கை
16. நீத்தல் விண்ணப்பம்

திருவாரூர்
17. திருப்புலம்பல்

கழுமலம்
18. பிடித்தபத்து

திருவண்ணுமலை
19. திருவெம்பாவை
20. திருவம்மானை

திருக்கழுக்குன்றம்
21. திருக்கழுக்குன்றப்பதிகம்

திருத்தில்லை
22. கண்டப்பத்து
23. குலாப்பத்து
24. கோயிற்றிருப்பதிகம்
25. கோயில்மூத்ததிருப்பதிகம்
26. போற்றித்திருவகவல்
27. கீர்த்திக்திருவகவல்
28. திருவண்டப்பகுதி
29. திருப்பொற்சுண்ணம்
30. திருத்தெள்ளேணம்

அட்டவணை

திருவாதவூரர் புராணத்துக் காணும் முறை

திருப்பெருந்துறை

1. நமச்சிவாய வாஅழ்க
2. அற்புதப்பத்து
3. அதிசயப்பத்து
4. குழைத்தபத்து
5. சென்னிப்பத்து
6. ஆசைப்பத்து
7. வாழாப்பத்து
8. அடைக்கலப்பத்து
9. செத்திலாப்பத்து
10. புணர்ச்சிப்பத்து
11. அருட்பத்து
12. திருவார்த்தை
13. எண்ணப்பதிகம்
14. வெண்பா இருபத்தெட்டு
15. திருப்பள்ளியெழுச்சி
16. திருவேசறவு
17. ஆனந்தமாலை
18. உயிருண்ணிப்பத்து
19. பிரார்த்தனைப்பத்து
20. திருப்பாண்டி விருத்தம்
    இவை வாதவூரர் ஞானதேசிகனுடன் எழுந்தருளி இருந்தபோது பாடியவை.

21. திருச்சதகம்
    இது திருக்குளத்தின் தீப்பிழம்பில் அடியார்கள் அனைவரும் மூழ்கி மறையத்தான் தனித்து நின்றபோது பாடியது.

திருவுத்தரகோசமங்கை

22. நீத்தல் விண்ணப்பம்
    இது ஞானதேசிகனின் திருவுருவத்தைக் காணாது மூர்ச்சையுற்று பாடியது.

திருவாரூர்

23. திருப்புலம்பல்

சீர்காழி

24. பிடித்தபத்து

திருவண்ணாமலை

25. திருவெம்பாவை

திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துக் காணும் முறை

திருப்பெருந்துறை

1. அற்புதப்பத்து
2. சென்னிப்பத்து
3. அச்சோப்பத்து
   இவை ஞானதேசிகன் தம்மைப் பாடும்படி சொன்னபோது பாடியவை.
4. அதிசயப்பத்து
   இது ஞானதேசிகன் சுட்டிக் காட்டிய மாணாக்கர்களை நோக்கிப் பாடியது.
5. கோயிற்பத்து
6. புணர்ச்சிப்பத்து
7. செத்திலாப்பத்து
8. பிரார்த்தனைப்பத்து
9. ஆசைப்பத்து
10. உயிருண்ணிப்பத்து
11. திருப்புலம்பல்
12. வாழாப்பத்து
13. எண்ணப்பத்து
    இவை ஞானதேசிகன் மறைந்தருளின போதும் பிறகும் பாடியவை.
14. திருவம்மானை
15. திருப்பொற்சுண்ணம்
16. திருக்கோத்தும்பி
17. திருத்தெள்ளேணம்
18. திருப்பூவல்லி
19. திருவுந்தியார்
20. திருத்தோணோக்கம்
21. திருவெம்பாவை
22. திருச்சதகம்
    இவை திருப்பெருந்துறை நகருட் சென்று அவ்விடம் கண்ட நிகழ்ச்சிகளைப் பாடியவை.

23. திருப்பள்ளியெழுச்சி
    இது பாண்டியனிடமிருந்து திருமுகம்வந்து கோயிலுள்சென்று முறையிடுங்காலத்துப் பாடியது.

மதுரை

24. குழைத்தபத்து
25. அருட்பத்து
    இவை குறித்த நாளில் குதிரைகள் வாராத போது பாடியவை.

இப்பொழுது பதிப்புக்களில் காணும் முறை	மகாவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் திருப்பெருந்துறைப்புராணத்தில் காணும்முறை
திருக்கழுக்குன்றம்	31. திருவுந்தியார்
30. திருக்கழுக்குன்றப்பதிகம்	32. திருத்தோணோக்கம்
	33. திருப்பூவல்லி
திருத்தில்லை	34. திருப்பொன்னூசல்
	35. திருக்கோத்தும்பி
31. கண்டப்பத்து	36. அன்னைப்பத்து
	37. குயில்பத்து
திருப்பெருந்துறை	38. அச்சப்பத்து
32. பிரார்த்தனைப்பத்து	39. திருத்தசாங்கம்
33. குழைத்த பத்து	40. திருச்சாழல்
34. உயிருண்ணிப்பத்து	
திருத்தில்லை	
35. அச்சப்பத்து	
திருப்பெருந்துறை	
36. திருப்பாண்டிப்பதிகம்	
திருத்தோணிபுரம்	
37. பிடித்தபத்து	
திருப்பெருந்துறை	
38. திருவேசறவு	
திருவாரூர்	
39. திருப்புலம்பல்	
திருத்தில்லை	
40. குலாப்பத்து	
திருப்பெருந்துறை	
41. அற்புதப்பத்து	
42. சென்னிப்பத்து	
43. திருவார்த்தை	
திருத்தில்லை	
44. எண்ணப்பதிகம்	
45. யாத்திரைப்பத்து	
46. திருப்படையெழுச்சி	
திருப்பெருந்துறை	
47. திருவெண்பா	
48. பண்டாய நான்மறை	
திருத்தில்லை	
49. திருப்படையாட்சி	
50. ஆனந்தமாலை	
51. அச்சோப்பதிகம்	

திருவாதவூரர் புராணத்துக் காணும் முறை	திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்துக் காணும் முறை
26. திருவம்மானை இது மார்கழித்திங்கள் நீராடச் செல்லும் மகளிர் பாடுவதாகப் பாடியது. **திருக்கழுக்குன்றம்** 27. திருக்கழுக்குன்றப்பதிகம் **திருத்தில்லை** 28. கண்டபத்து இது ஞானதேசிகன் திருவுருவங் கண்டு பாடியது. 29. குலாப்பத்து 30. கோயிற்றிருப்பதிகம் 31. கோயின்மூத்ததிருப்பதிகம் 32. கீர்த்தித் திருவகவல் 33. திருவண்டப்பகுதி 34. போற்றித்திருவகவல் இவை தில்லைத்திருவீதிகளில் செல்லும் போது பாடியவை 35. திருபொற்சுண்ணம் இது மகளிர் பொற்சுண்ணம் இடித்தலைக்கண்டு பாடியது 36. திருத்தெள்ளேணம் 37. திருவுந்தியார் 38. திருத்தோணோக்கம் 39. திருப்பூவல்லி 40. திருப்பொன்னூசல் 41. அன்னைப்பத்து 42. திருக்கோத்தும்பி 43. குயிற்பத்து 44. திருத்தசாங்கம் 45. அச்சப்பத்து 46. திருச்சாழல் இது ஊமைப்பெண் கூறிய விடையை சாழல் விளையாட்டாகப் பாடியது. 47. திருப்படையாட்சி 48. திருப்படையெழுச்சி 49. அச்சோப்பத்து 50. யாத்திரைப்பத்து	26. அடைக்கலப்பத்து இது குதிரைகள் வாராமையால் சிறையிலடைத்தபோது பாடியது. 27. குயிற்பத்து இது சிறையின் அருகே உள்ள மரத்திலிருந்த குயிலைப்பார்த்துப் பாடியது. 28. அன்னைப்பத்து இது குதிரைமேலமர்ந்துவந்த வாணிபத் தலைவனைப்பார்த்து மதுரைமாநகர் மகளிர் கூறியதாகப் பாடியது. 29. பிடித்தபத்து இது குதிரைத்தலைவனுக்கு பாண்டியமன்னன் பரிசளித்த போது பாடியது. 30. திருவேசறவு இது குதிரைகள் எல்லாம் நரிகளானபோது பாடியது. 31. நமச்சிவாய வாஅழ்க இது பாண்டியன் தம்மைச் செல்லும்படி விட்டபோது பாடியது. **திருவுத்தரகோசமங்கை** 32. நீத்தல் விண்ணப்பம் **திருக்கழுக்குன்றம்** 33. திருக்கழுக்குன்றப் பதிகம் மற்ற 18 பதிகங்களுக்குக் குறிப்புக்கள் இல்லை.

திருவாசக அமைப்பும் அழகும்*

உலக இலக்கியங்களிலுள்ள தெய்வக் கவிதைகளுள், திருவாசகம் ஒரு தனியிடம் பெறத் தக்கது. எந்த எந்த கவிதைகள் கற்போர் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தி உயர்ந்த நெறிக்கண் செலுத்துகின்றனவோ அவை எல்லாம் தெய்வக் கவிதைகள் என்னும் சிறப்புக்கு உரியனவாகும். இக் கவிதைகள், எளிய இனிய சொற்களால் உள்ளத்தை மெல்ல மெல்லக் கரைத்து, உணர்வை ஊக்கிச் செம்மையாக்கி உண்மையைக் காணும் வழியில் செலுத்தி, சித்தம் செல்ல இயலாத செய்மையிலுள்ள, சொல்லும், மனமும், உணர்வும் கடந்த ஒரு தொன்மைப் பேரின்பத்தைப் பெறச் செய்கின்றன. அறிவு நிலையில் அகப்பட்ட வரையில் இக் கவிதைகள், பொருள் உரைப்பதற்கும், ஆராய்வதற்கும், நலம் கண்டு இன்புறுவதற்கும், அவரவர்கள் கண்ட இன்பத்தை மற்றவர்களும் காணும்வண்ணம் வெளியிடுவதற்கும் இடந்தருகின்றன ; உணர்வு நிலையில் புகுந்துவிட்டாலோ, இவ் உலகத்தையே கடந்த நிலையில் புகுத்திவிடுகின்றது. அந்த நிலையில் பல பல படிகளுள்ளன; முடிவான படியை அடைந்தவர்களே அருள் நிலையின் அடிப்படையைத் தொட்டவராவர். அறிவு நிலைக்கு மேற்சென்ற நிலைகளை எல்லாம், முழுவதும் தெளிவாகப் பிறர் அறியும் வகையில் பேசுதற்குச் சொற்கள் இடந்தருவனவல்ல; ஒவ்வொருவரும் அவரவர்கள் பயிற்சி முதிர்ச்சிக்கு ஏற்ப ஆழ்ந்துணர வேண்டியனவேயாகும்.

'திருவாசகம்' என்னும் பெயரிலுள்ள, 'திரு' என்னும் அடைமொழியும், 'வாசகம்' என்னும் சொல்லும் பல கருத்துக்களைத் தம்முள் அடக்கியுள்ளனவாகும். 'திரு' என்னும் சொல்லுக்குக் 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்பது பேராசிரியர் கண்ட உரை ; 'வாசகம்' என்ற சொல், 'தோத்திரம்' என்ற பொருளில் திருவாத

* சிறு குறிப்புக்கள் முறையில் எழுதப் பெற்றுள்ளது ; தொடர்ந்த ஆராய்ச்சி முறையிலோ வரலாற்று முறையிலோ எழுதப்பெற்றதல்ல.

ஆரடிகள் காலத்திலேயே வழக்கிலிருந்திருக்கிறது. கம்பர், இச்சொல்லால் பண் இனிமை மிக்க செஞ்சொற்கள் என்னும் கருத்தைப் பெறவைப்பதோடு, 'வாசகம் வல்லார் முன் நின்று யாவர் வாய் திறக்க வல்லார்?' எனக் கேள்விமுகத் தாலும் விளக்கம் கூறுகின்றார். மேற்கூறிய பொருள்களையும் இச்சொற்கள் விளைவித்துள்ள ஏனைய கருத்துக்களையும் ஒன்றுகூட்டி 'யாவரும் விரும்பும் பண் இனிமை மிக்க தெய்வப் புகழ்மாலை' எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம். எனினும், இந்நூற்றாண்டில் சில ஆண்டுகளுக்கு முன்வரை வாழ்ந்திருந்தவர்களும், திருவாசகத்துள் சில பகுதிகளுக்குச் சிறந்த உரை கண்டவர்களுமான இரு பேரறிஞர்கள் விளக்க மாகக் கூறியுள்ள இனிய உரைகளைத் தெரிந்துகொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும்.

சிவத்திரு மறைமலை அடிகளார், "இனித் 'திருவாசகம்' என்பது 'பிறிதொன்றற் கில்லாத அழகினை உடைய வாசகம்' என்னும் பொருட்டாம். "திருவென்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம், என்றது அழகு" எனப் பேராசிரியர் திருச்சிற்றம்பலக் கோவையாருரையுள் உரைத்ததூஉங் காண்க. பிறிதொன்றற் கில்லாத சிறப்பினையுடையது இத்திருவாசகம் என்பது அதனாற் பெற்றாம். 'வாசகம்' என்பது சொல் என்னும் பொருட்டாதல் "மண்டிலமே பணியாய் தமியேற்கொருவாசகமே" என்னுந் திருச் சிற்றம்பலக்கோவையார் உரையிற் காண்க, 'திருவாசகம்' வேற்று மைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை; இதனை ஆகுபெயர் என்பாரு முளர்; ஆயினும், உண்மையான் நோக்கு வார்க்கு இஃது அன்மொழித் தொகையே யாவதல்லது ஆகுபெய ராகாமை யுணர்க என்று ஆசிரியர் சிவஞானயோகிகள் கூறுதலின் ஈண்டுக் கூறியதே பொருத்தமாமென்க.

இனித் திருவாசகம் என்பதில் அடைமொழியாய் நின்ற திரு வென்னுஞ் சொல் கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்க மாகிய அழகினை உணர்த்தவே, பேரின்பப் பேற்றைக் காதலிப்பா ரெல்லாராலும் விரும்பப்படும் அழகினை உடைத்து இவ்வாசகம் என்பது பெற்றும். எல்லாரும் ஒன்றை விரும்புதல் அது பிறிதொன்றற் கில்லாத அழகினை உடைமையினாலேயாம். தன்னைக் கற்பார் உள் ளத்தை உருகச் செய்து அவரைப் பேரின்பப் பெருக்கின்கண் ஆழ்த்துதற்கட் பிறிது எந்நூலுக்கும் இல்லாத அழகினை இத் திருவாசக நூல் உடைமையால், இதனினும் மேலான அழகினைப் பெற்ற வேறொரு நூல் இல்லையென்பது தேற்றமாம். அன்பு பொதிந்த இதன் செய்யுட்களை ஓதுந்தோறும், நினைக்குந்தோறும் நெஞ்சம் நெக்குருகக் கண்ணீர் பெருக நாவுரை குழற மெய்ம்மயிர் சிலிர்ப்பப் பேரின்ப வெள்ளங்கிளர்ந்து எழுதல் யாவர் மாட்டுங்

காணப்படுதலானும், தொடர்பு பட்டு நிகழும் இத்தகைய பேரின்ப நிகழ்ச்சி மற்றை நூல்களை ஓதுவார், நினைப்பாரிடத்துக் காணப் படாமையாலும் இத்திருவாசகம் ஒன்றே ஏனை நூல்களுக்கில்லாத அழகினை உடைத்தென்பது தெளியப்படும் ", எனத் தமது திருவாசக விரிவுரையிற் கூறுகின்றார்கள்.

பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள், " திருவாசகம் என்பது அழகிய தெய்வத் தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் எனனும் பொருளையுடையதாகும். இது, திருவென் னும் அடையடுத்த வாசகம் என்னும் முதற்கருவியின் பெயர், அதன் காரியமாகிய செய்யுட்கு ஆயினமையின், கருவி ஆகுபெயராம் என்ப. சிவஞான முனிவரர் பிறர் கொள்கையை மறுக்குங்கால் ஆகுபெயர் என்பதை உடன்பட்டுப் பின் " உண்மையான் நோக்குவார்க்கு அன்மொழித்தொகையாகுமன்றி. ஆகுபெயராகாமையுணர்க " என வுங் கூறியுள்ளார். திரு என்பது தெய்வத் தன்மை, அழகு என்னும் பொருளுடையதாகும். " திரு கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் என்றது அழகு " என்று பேராசிரியர் உரை கூறினரா யினும், ஈண்டுத் தெய்வத் தன்மை என்று கொள்ளுதல் சிறப்புடைத் தாம். வாசகம் – சொல். இத்திருவாசகத் திருப்பாட்டுக்கள், தெய்வ நலங் கனிந்த சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைந்தவை ; இனிமை, எளிமை, ஆழமுடைமை யென்னுங் குணங்கள் தம்பால் அமையப் பெற்றவை ; மெய்யன்புடன் ஓதுவார், கேட்பார், உணர் வார் எல்லோரையும் மிக்க பேரின்பத்தில் திளைப்பித்துப் பரவசப் படுத்தும் இயல்பின; அனுபவ உண்மைகளைத் தெளிவுண்டாகும்படி விளக்குவன ", எனத் தமது திருவாசகம் கதிர்மணி விளக்கப் பேருரையில் கூறியிருக்கின்றார்கள்.

திருவாசகம், தமிழகத்திலும் தமிழ்மக்கள் வாழும் வெளி நாடுகளிலும், சைவசமயத்தாரால் வழிபாட்டு நூலாகப் பயிலப்பெற்று வருகின்றது. தமிழ்நாட்டிலுள்ள சிவன் கோயில்களிலும், சைவசமயத்தாரது இல்லங்களிலும், ஆயிரம் ஆண்டுகளாக இடையறாது ஓதப்பெற்றுவரும் இந் நூலின் அருமை பெருமைகளைத் தமிழ்மக்கள் எவ்வாறு போற்றிவந்துள்ளார்கள் என்பதைப் பிற்சேர்க்கையில் காணும் செய்யுட்களில் ஒருவாறு காணலாம். இது சமய நூல் என்ற அளவில் நின்றுவிடாமல், தத்துவக்கருத்துக்கள் மலிந்த நூலாகவும், இலக்கியநலம் செறிந்த நூலாகவும், தமிழ்மக்கள் எல்லோராலும் பயிலப்பெற்றுவரும் தனிச் சிறப்பும் உடையதாகும். திணிந்த இருளில் கட்டுண்டு கிடக்கும் ஓர் ஆன்மா, பேர் ஒளியைத் தேடிச் செல்லுங்கால் தோன்றும் பலவகையான நிகழ்ச்சிகளையும் தெள்ளும் ஓசைத் திருப்பதிகங்களால் எடுத்தோதும் இத்தெய்வக்

கவிதை, திருவாதவூரடிகள் தன் வரலாற்றைத் தானே எழுதிய ஞானவரலாருகத் திகழ்கின்றது. பலவகையான தளைகளால் கட்டுப்பட்டு அறியாமையாகிய திணிந்த காரிருளுள் முழுகிப் போக்கிடங்காணுது திகைத்துநின்ற ஓர் ஆன்மா, திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந்துறையில் செழுமலர்க் குருந்தம் மேவிய பேரருள் ஒளிப்பிழம்பின் வழிவந்த ஒரு தெய்வ நிகழ்ச்சியே, இந்த ஞானவரலாற்றின் தோற்றுவாயாகும். இந் நிகழ்ச்சியை, அடிகள் தான் உணர்ந்தவாறே குறிப்பிடும் உண்மை, இக்காலத் தன் வரலாற்றுநூல்களின் (auto-biography) முறைப்படியே அமைந்துள்ளது இந் நிகழ்ச்சியை, ஓர் இடத்தில் அவர் கூறுவதின் விளக்கம் "பேரின்பம் பெருகியது, எவ்வாறு இது நிகழ்ந்தது எனப்பார்த்தேன்; என்னைத் தொன்று தொட்டு சூழ்ந்துவந்த எனதாகிய இருள் எங்கோ ஓடி விட்டது; எவ்வாறு இருள் அகன்றது எனப்பார்த்தால் என்னோடு இடையீடின்றி தொடர்ந்துவந்த துன்பம் அறவே தொலைந்து விட்டது; இது என்ன! நிகழக்கூடாதது நிகழ்ந்துள்ளதே எனப்பார்த்தேன்; என் வலிய உள்ள மாகிய இருட்டறை அன்புமலிந்த ஞானப் பேரூராக மாறி விட்டது; எதனுல்? குருந்தமர்ந்த பெருந்துறைப்பெருமான் திருவருளால்" என்பதேயாகும். இவ் இனிய தெய்வக் கருத்தை,

> *இன்பம் பெருக்கி, இருள் அகற்றி, எஞ்ஞான்றும்*
> *துன்பம் தொடர்வு அறுத்து, சோதி ஆய், அன்பு அமைத்து,*
> *சீர்ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே*
> *ஊர் ஆகக் கொண்டான், உவந்து.* (625)

என எளிமையாகச் செய்யுள்நலம் மலியக் கூறுகின்ருர்.

திருவருளின் பேரொளியால் பார்க்கும் இவருக்கு, வாழ்க்கையில் அகத்தும் புறத்தும் தோன்றுவனவும் ஒன்றுக் கொன்று தொடர்பில்லாமல் பலவகையாகச் சிதறுண்டு கிடப்பனபோல் காணப்பெறுவனவுமான பலவேறு நிகழ்ச்சி களின் உண்மைகள் புலனுகின்றன; அவற்றையெல்லாம் ஒருமுறையாகக் கோத்து இறைவன் திருவடிப் புகழ்ச்சியில் கலந்து பாடுகின்ருர். எனவே, இவர் பாடல்கள் மக்கள் முன்னேறுதற்கான உண்மைகளுள் இன்றியமையாதன வற்றைக் கற்போர் உள்ளத்தில் பதியவைக்கின்றன; வாழ்க்கையைச் செம்மைப் படுத்துகின்றன; தெய்வநெறி

யைத் தெளிவாகக்காட்டி அந்நெறியிலேயே அழைத்துச் செல்கின்றன; திருவருளின் அளப்பரும் ஆற்றலையும், அவ் ஆற்றலாலன்றி ஆன்மா ஈடேறுதல் இயலாதென்னும் உண்மையையும் உலகறியச் செய்கின்றன.

சிவபெருமான் தன்னை ஆட்கொண்டருளியதின் விளைவாகிய பேரானந்தத்தையும், அப்பேரருளுக்கு எவ்வாறு கைம்மாறு செய்யப் போகின்றோம் என்ற ஏக்கத்தையும் இஞ் ஞானநூலின் பல பகுதிகளிலும் காணலாம். ஞானப் பேரொளியிற் கலந்து நிற்கும்போதுள்ள, எல்லாவற்றையும் மறந்த பேரானந்தமும், அந்நிலையிலிருந்து ஒரு சிறிது விலகினும் ஏற்படும் பொறுக்க ஒண்ணாத் துன்பமும், மீண்டும் அந்த ஞானப்பேரொளியின் வழியிற் கலக்க வேண்டும் என்ற பதைபதைப்பும், நெறியில் நின்று அருள் நிழலடைந்து இன்புற்று ஏமாந்திருக்கும் பல அடியார்களின் நினைவும், அத்தகைய அடியார்களுடன் மீண்டும் கலந்து வாழ வேண்டும் என்ற வேட்கையும், தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் தோன்றுகின்றன. இவ்வாறு பல திறப்பட்ட உள்ள நிலையை மிகவும் சுருக்கமாகக் கற்போர் உள்ளம் கனியும்படி,

நான் ஆர், அடி அணைவான்? ஒரு நாய்க்குத் தவிசு இட்டு, இங்கு
ஊன் ஆர் உடல் புகுந்தான்; உயிர் கலந்தான்; உளம் பிரியான்;
தேன் ஆர் சடை முடியான்; மன்னு திருப்பெருந்துறை உறைவான்;
வானோர்களும் அறியாதது ஓர் வளம் ஈந்தனன், எனக்கே. (505)

எனை, நான் என்பது அறியேன்; பகல் இரவு, ஆவதும் அறியேன்;
மன-வாசகம் கடந்தான், எனை, மத்த-உன்மத்தன் ஆக்கி;-
சின மால் விடை உடையான், மன்னு திருப்பெருந்துறை உறையும்
பனவன்,-எனைச் செய்த படிறு அறியேன்; பரம் சுடரே! (506)

சூடுவேன் பூங்கொன்றை; சூடி, சிவன் திரள் தோள்
கூடுவேன்; கூடி மயங்கி, மயங்கி நின்று,
ஊடுவேன்; செவ்-வாய்க்கு உருகுவேன்; உள் உருகித்
தேடுவேன்; தேடி, சிவன் கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே-பாடுதும்காண்; அம்மானாய்! (191)

மை இலங்கு நல் கண்ணி பங்கனே!
வந்து எனைப் பணிகொண்டபின், மழக்
கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்,
அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்;-

மெய் இலங்கு வெள்—நீற்று மேனியாய்,
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினர் ;
பொய்யில் இங்கு எனைப் புகுதவிட்டு, நீ
போவதோ? சொலாய் ; பொருத்தம் ஆவதே? (96)

என்னால் அறியாப் பதம் தந்தாய் ;
யான் அது அறியாதே கெட்டேன் ;
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை ;
உடையாய், அடிமைக்கு யார்? என்பேன் ;
பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும்
பழைய அடியரொடும் கூடாது,
என் நாயகமே! பிற்பட்டு, இங்கு,
இருந்தேன்—நோய்க்கு விருந்தாயே.

என்னும் செய்யுட்கள் தெரிவிக்கின்றன.

எந் நாட்டவராலும், எக்காலத்தவராலும், உள்ளம் உகந்து ஏற்றுக்கொள்ளுமாறு, என்றும் நிலைத்த பண்புகளையோ, உண்மைகளையோ, நெறிகளையோ, சிந்தைக்கும் செவிக்கும் இனிய செஞ்சொற்களால் உரைப்பதே சிறந்த இலக்கியம் என, அறிஞர், இலக்கணம் வகுப்பாரானால், திருவாசகம், உலக இலக்கியங்களுள் தலைசிறந்த ஒன்று என, நாம் உறுதியாகக் கொள்ளலாம். திருவாசகத்தில் பேசப்பெறும் செய்தி, காலம் இடம் என்னும் பாகுபாடுகளைக் கடந்த சிந்தைசெல்லா சேணகத்ததாய் முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பின்னைப் புதுமையாய் நின்ற ஒரு பேரருட் பிழம்பைப் பற்றியதும், அவ் அருள்ஒளியை நாடிச்சென்று கலந்த ஒரு சிற்றுயிர்க்கு உற்ற பலதிறப்பட்ட நிகழ்ச்சிகளைப் பற்றியதுமாகும். மேற்குறித்த பொருளையும் நிகழ்ச்சிகளையும் உலகத்தவர் ஓரளவேனும் உணர்ந்து இன்பமும் நலனும் பெறவேண்டும் என்பதே ஆசிரியரின் உட்கோளாகும். பேசவந்த பொருளோ, உலகம் எல்லாம் தானேயாகியும், உலகத்தோடு ஒன்றியும், உலகத்திற்குப் புறம்பாகவும் நிற்கின்றதெனினும், எந்த நிலையிலும், கட்டுகளுக்குள் அகப்பட்ட சிற்றுயிர்களின் சிந்தை அப்பொருளிடம் செல்லவியலாதிருக்கிறது ; சிந்தை அறியாத ஒன்றைச் சொல் எவ்வாறு சொல்லவியலும்? இச் சிந்தைகடந்த செல்வத்தை நாடிச் செல்லும் சிற்றுயிர்க்கு உற்ற நிகழ்ச்சிகளுள், சிந்தை சிற்றுயிர்வழி நின்ற நிலையில் நிகழ்ந்தவை ஒருவாறு சொற்களால் குறிப்பிடக்கூடியனவாக விருக்கலாம் ; சிந்தை

கழன்றவழி நிகழ்ந்தனவற்றைக் குறிப்பிடச் சொல்லால் இயலுமா? ஆனால், சிந்தைசென்று அணுகிலாதவைகளைப் பண்இனிமையும் பொருட்செறிவும் மிக்க சொற்களால் அமைத்து, கற்பவர் பயிற்சிக்கும் பண்புக்கும் முதிர்ச்சிக்கும் ஏற்பப் பொருள்தருமாறு மக்களுலகத்துக்கு அளித்த வள்ளன்மை, திருவாசகத்துக்கு உரியதாகும். இது, மண்ணுலகத்தோர் ஞானவானுலகத்திற்கு ஏற அமைத்த தோர் ஏணிபோல் விளங்குகின்றது. திருவாதவூரடிகளது, இச் செயற்கரும் செயல், உலகத்தில் திங்களிற்சென்று தங்க முயல்பவர் வீரச்செயல் எவ்வாறு போற்றப்பெறு கிறதோ, அவ்வாறு, ஞான உலகத்தில் போற்றற்குரிய தாகும்.

இம் மண்ணுலகவாழ்க்கையில் பல அல்லல்களில் அடி பட்டுப் பிறவியை ஒரு பிணியாகக் கருதுவோர்க்குப் புகலிட மாகவும், ஞானநெறியிற் செல்வோர்க்கு வழிகாட்டியாகவும் அமைந்த இத் தெய்வக் கவிதை, பலதிறப்பட்ட மக்களுக்கும் வாழ்க்கையில் பல படியிலுள்ளவர்களுக்கும் ஞானநெறியில் விருப்பம் உண்டாகும் முறையில் அமைந்துள்ளது. பெண்கள் விளையாடும் பலவகையான விளையாட்டுகளில் இறைவன் புகழைப் பாடுவதாக அமைந்துள்ளன பல; அரசர்களது வீரம், புகழ் முதலியனவற்றைப் பாடுவது போல் அமைந்தன சில; குயிலை நோக்கிப் பாடுவன வாகவும், தும்பியைப் பார்த்துப் பாடுவனவாகவும், சிறு குழந்தைகள் பேசுவனபோலவும், இன்னும் பல எளிய முறைகளிலும் நிற்பன பல. எல்லோருக்கும் எளிதில் விளங்குமாறு நாட்டில் வழங்கிவரும் புராணக் கதைகளும், பழைய கருத்துக்களும் இடையிடையே ஒளிவீசுகின்றன. இயற்கையிலும் வாழ்க்கையிலும் நாள்தோறும் காணப் பெறும் பல செய்திகள் உவமைகளாக நின்று நூலின் உட்கருத்தை அணிபெறத் தெரிவிக்கின்றன.

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரால் இருள் நீங்கப் பெற்று இறைவன் திருவருளில் திளைத்து, அவன் பெருமை யையும், தன் சிறுமையையும், ஆட்கொண்ட கருணையையும் நினைந்து நினைந்து உருகித் திருவாய்மலர்ந்த இப்பாடல்கள் பல காலங்களில் பல திருப்பதிகளில் எழுந்தனவாயிருக்கும் எனினும், தில்லையம்பொதுவில் திருநடஞ்செய்யும் ஞான ஆனந்தக் கூத்தன் திருவடியில் காணிக்கையாக வைத்த

போது, ஒரு, முழு நூலின் தன்மையைப் பெற்றுவிட்டது. திருவாசகத்தில் ஒப்பற்ற ஒரு தனி நூலின் பண்புகளை எல்லாம் காணலாம். திருவாதவூரடிகளின் பேரன்பின் நோக்கம், தான் பெற்ற சிவானந்தத்தை உலகம் எல்லாம் பெறவேண்டும் என்பதே. "தன் அடியவர்க்கு மூலபண்டாரம் வழங்குகின்றான்; வந்து முந்துமினே" என எல்லோரையும் அழைக்கின்றார். எவ்வாறு அவன் அருள் செய்கின்றான் என்பதை எல்லோருக்கும் எடுத்துரைத்து விரைந்து வம்மின், விரைந்து வம்மின், என்பார் போன்று

> அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த
> வெள்ளத்திடை அழுத்தி,
> கழிவு இல் கருணையைக் காட்டி,
> கடிய வினை அகற்றி,
> பழ மலம் பற்று அறுத்து, ஆண்டவன்,
> பாண்டிப் பெரும் பதமே,
> முழுது உலகும் தருவான்; -கொடையே
> சென்று முந்துமினே. (531)

என விரைந்து கூப்பிடுகின்றார்.

வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனாகிய மணிவாசகப்பெருமான், சிவானந்த வெள்ளத்தில் திளைத்து அருளிய இம் முழு முதல் நூலாகிய திருவாசகம், 'நமச்சிவாய' என இறைவனை வணங்கித் தொடங்கி, முதலாய முதல்வன், 'அம்மை எனக்கு அருளிய ஆறு ஆர் பெறுவார் அச்சோவே' எனப் பேரின்பப் பேறு பெற்றதைப் பேரானந்தம் பெறக் கூறி முடிக்கின்றது. இத்தெய்வக் கவிதையின் 51 பதிகங்களும், 656 செய்யுட்களும், நூல் இலக்கணத்திற்கியைய ஒன்றற்கொன்று இயைபும் தொடர்பும் உடையனவாய் வகுத்துக் கூறியும், தொகுத்துச் சுட்டியும், விரித்து விளக்கியும், தேசகத்தில் இனிக்கின்ற தெள்ளமுதாம் மாணிக்கவாசகருடைய எல்லா அநுபவங்களையும் நாம் உணரும்வண்ணம் செய்து, அவர் பெற்ற பேரின்பத்தை நாம் பெறுதற்கான வழியைக் காட்டுகின்றன. இவ் அருள் நூலின் இனிய எளிய சொற்கள், சென்று செவியளக்கும் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே நின்று அளவில் இன்பம் நிறைக்கும் தன்மையன. சீர்ஆர் திருவடித் திண் சிலம்பின் சிலம்பு ஒலிபோல் ஆராத ஆசையை எழுப்பித் தேனும் பாலும் கன்னலுமென்னத் தீஞ்சுவை பொதிந்த சிவஞான அருள் அமுதை ஊட்டும் வன்மை வாய்த்த இம்மணி

வார்த்தைகள், தம்மை அடைந்தார்க்கு முதற்கண் தம் செம் பொருளைத் தெரிவித்து, அஃது தெளிந்தார்க்குக் கருத்துப் பொருளை உணர்த்தி, அக்கருத்தில் ஊன்றி நின்றார்க்குக் காட்சிப்பொருளைக் காட்டி, அக்காட்சியில் சிந்தையைப் பறி கொடுத்தார்க்கு முடிவான செம்பொருளைக் கூட்டும் சிறப்பு வாய்ந்தன என்பது திருவாசகத்தைப் பலகால் பயின்றவர்கள் கண்ட உண்மையாகும். சித்தம் சிவமான செம்மலின் செஞ் சொற்களல்லவா? சுருங்கச் சொல்லின், பொருள் விளங்கும் முன்பே அருள் வழங்கும் ஆற்றலுடையது இம்மணிவாசகம்.

அவரவர் நிலைக்கேற்பப் பொருள்தரும் இவ் அருள் நூலின் பொதுவான பெருமையை, திருக்கோவையாரைப் பற்றி வழங்கும்

'ஆரணம் காண்' என்பர் அந்தணர்; யோகியர் 'ஆகமத்தின்
காரணம் காண்' என்பர்; காமுகர் 'காம நன்னூல் அது' என்பர்;
'ஏரணம் காண்' என்பர் எண்ணர்; 'எழுத்து' என்பர்
இன்புலவோர்;
சீர் அணங்கு ஆய சிற்றம்பலக்கோவையைச் செப்பிடினே.

என்னும் தனியனை இதற்கும் ஏற்றிச் சொல்லிவிடலாம்.

இதுகாறும் திருவாசக முழு முதல் நூலின் தன்மை சுருக்கமாகப் பேசப்பெற்றது; இனி, இதன் 51 பகுதிகளும் தனித்தனியாக மிகச் சுருங்கிய அளவில் மேலோட்டமாகப் பார்க்கப் பெறுகிறது.

1. **சிவபுராணம்:** சிவபெருமானது காலங் கடந்த பழமை எனப் பொருள்தரும் இப்பகுதி, ஈற்றடி முச்சீரடியாக வும் ஏனைய நாற்சீரடியாகவுமுள்ள 95 அடிகள் கொண்ட கலிவெண்பாட்டால், இத்தெய்வ காதைக்கு நான்முகம்போல் அமைந்துள்ளது. முதல் இருபத்தைந்து அடிகளில், வாழ்த்து, வணக்கம், வருபொருள் உரைத்தல், அவையடக்கம் முதலிய நூன்முக உறுப்புக்கள் காணப் பெறுகின்றன. 26ஆவது அடியிலிருந்து 31ஆவது அடியில் 'இளைத்தேன்' என்பது வரையில், பலவகையான பழம்பிறவிகளில் பிறந்து அலுத்தது பேசப் பெறுகிறது. 31ஆவது அடியில் 'எம்பெரு மான்' என இறைவனை விளித்து, 32ஆவது அடியில் தான் பெற்ற திருவருட்பேற்றை ஆசிரியர் குறிப்பிடுகின்றார். 33ஆவது அடியில், இறைவன் தன் உள்ளத்தில் ஓங்காரமாய் நின்றதை மகிழ்ந்து உரைத்துப் பின்னர் 50ஆவது அடி வரை, இறைவனது பலதிறப்பட்ட தோற்றங்களையும், பண்பு

களையும், ஐந்தொழில் இயற்றும் அருளையும், அடியார்க்குக் காட்டும் கருணையையும் வாயாரப் பேசுகின்றார். பின்னர், 61ஆவது அடி வரையில் மாய இருளில் உழன்று இறைவன்பால் உருகும் பண்பில்லாத தனக்குத் தலையளி செய்த தாயன்பை வியந்து, மெய்மறந்த நிலை தெரிகிறது; பின்னர் 83ஆவது அடிவரையில் இறைவனது பொதுவான பல அருட் பண்புகளையும், தனக்கு அருள்செய்த பல சிறப்பு நிகழ்ச்சிகளையும் கூட்டி, உளங்கனிய இறைவனை அழைத்துப் புகழ்கின்றார். (இவ்வாறு பல இடங்களிலும் இப்பகுதியில் இறைவனை அழைத்துப் பேசுகின்றமையின், முன்னோர்கள் இப்பகுதியை 'அகவல்' எனக் கொண்டார்களோ என்பதும் கருதவேண்டியிருக்கிறது) 84 முதல் இறுதி அடியாகிய 95ஆவது அடி வரையில், இத்தெய்வப் பாடலைப் பயில்வோர் நிலையும், பயிலும் திறனும், பயில்வதின் பயனும் பேசப் பெற்று, "நூன்முக" இலக்கணத்திற்கு இயைய முடிகின்றது.

இத்தெய்வக் காதையில் விளக்கமாகவும், விரிவாகவும் பல இடங்களில் காணப்பெறும் கருத்துக்கள் அனைத்தும், சிவபுராணத்துள் தொகுத்துச் செறிவாகக் கூறப் பெற்றிருக்கும் உண்மை, திருவாசகம் முழுவதையும் இடைவிடாது தொடர்ந்து நாள்தோறும் ஓதும் கடப்பாடுடையவர்களுக்கு நன்கு புலனாகும். இதனாலேயே, சிவபுராணத்தைக் கருத்தூன்றிச் சொற்களின் ஆற்றலை உணர்ந்து பயில்வோர், திருவாசகம் முழுவதும் பயிலும் பயனை அடைவார் என்ற ஒரு வழக்கு நிலையுற்றுள்ளது.

2. **கீர்த்தித் திருவகவல்:** இறைவனது புகழைக் கூறும் அகவற்பா எனப் பொருள்தரும் இப்பகுதி, 146 நாற்சீரடிகளுள்ள ஒரு நிலைமண்டில ஆசிரியப்பாவில் அமைந்துள்ளது; தில்லைமூதூரில் நிகழும் இறைவனது திருக்கூத்து, உலகங்களையும் உயிர்களையும் இயங்கச் செய்கின்றது எனத் தொடங்கி, பொதுவாக அடியவர்களையும், சிறப்பாக இவ் ஆசிரியரையும் ஆட்கொண்ட சிறப்பையும் வகையையும் பலவாறு விரித்து, முதல் 99 அடிகளில் கூறுகிறது; பின்னர்; 126ஆவது அடி வரை, இவ் ஆசிரியரை இறைவன் தேவர் கோனாக வந்து ஆட்கொண்டதைக் கூறுமுகத்தால், சிவபெருமானுக்குப் பத்து அரசச் சின்னங்கள் கூறப்பெறுகின்றன. 127 முதல் 129ஆவது அடிவரை, சிவபெருமான் மணிவாசகரைத் தில்லைக்கு வருக எனப் பணித்து இந்நிலவுலகில் நிற்க

வைத்தமையும், பின்னர் 139 அடிவரை சிவபெருமானுடன் சென்ற அடியார் நிலையும், செல்ல இயலாத அடியார்களின் பரிவும், பின்னர் 146 அடி வரையில் பொன்னம்பலம் பொலியும் புலியூரின் பெருமையும் பேசப் பெறுகின்றன. இப்பகுதியில் சிவபெருமான் ஆட்கொண்ட பல அடியார்களின் செய்தி குறிப்பிடப் பெறுகிறது; இவ்வரலாற்றின் விரிவு எல்லாம் திருவாசகக் கதைகள் என்ற பகுதியில் தரப் பெற்றுள்ளன. உலகு உயிர் அனைத்தையும் தோற்றலும், போற்றலும், அளித்தலும், மறைத்தலும், அருளலும் ஆகிய ஐந்தொழில்களையும் ஒரு பெரும் கூத்தாக இறைவன் நிகழ்த்துகின்றான் என்னும் தத்துவப் பேருண்மை இப்பகுதியில் குறிப்பாகக் காட்டப் பெற்றுள்ளது கருதத் தக்கது. அரச சின்னங்களாக இங்கு கூறப் பெற்றுள்ள பத்துறுப்புக்களுக்கும், திருத்தசாங்கப் பகுதியில் கூறியுள்ளவைகளுக்கும் வைப்பு முறையில் சில வேறுபாடுகள் உள. இங்கு, கொடி, யாறு, முரசு, படை, மாலை, ஊர்தி, நாடு, ஊர், பேர், மலை என்ற முறையில் வைக்கப்பெற்றுள்ளது; திருத்தசாங்கத்தில் பெயர், நாடு, ஊர், யாறு, மலை, ஊர்தி, படை, முரசு, மாலை கொடி என்ற முறையில் காணப்பெறுகிறது. திருவருளிற் கலந்த பேரானந்தத்தை, இந்த இரண்டு இடங்களிலும் கூறும் முறை உள்ளத்தை ஊக்குவிப்பனவாகும் "வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும் ஆனந்தம்காண் யாறு" எனத் திருத்தசாங்கத்திலும், "ஊனம் – தன்னை ஒருங்கு உடன் அறுக்கும் ஆனந்தம்மே, ஆறு அருளியும்" என இவ்விடத்தும், பெருமிதத்துடன் பேசப்பெறுகிறது. 'ஆனந்தம்மே' என ஒற்றுமிகக் கூறியிருப்பது ஆசிரியர் உள்ளத்தைக் காட்டுவதாகும். இறைவனைப் பிரிந்த அடியவர்களின் நிலையும், பொன்னம்பலம் பொலியும் புலியூரின் புனிதமும் சில சொற்களால் பல கருத்துக்களும் காட்சிகளும் உளத்தே தோன்றக் கூறியிருப்பது இன்புறற்பாலது. 'கனிதரு செவ்வாய் உமையொடு, காளிக்கு அருளிய திருமுகத்து அழகு உறு சிறு நகை' என்ற சொற்கள் ஆழ்ந்த ஒரு உலக உண்மையை என்றும் அழியாத ஒரு சிற்பத்தில் உருப்படுத்திக் காட்டுவதுபோல் முன்வந்து உள்ளத்தைக் கவர்ந்து உணர்வை மேம்படுத்துகின்றன.

3. திரு அண்டப்பகுதி: பாட்டின் முதல் நின்ற சொற்றொடரால் இப்பெயர் பெற்ற இப்பகுதி, இருசீர் முச்

சீரடிகள் இடையிடையே விரவிவந்த 182 அடிகளையுடைய இணைக்குறள் ஆசிரியப்பாவில் அமைந்து பொருட்செறிவும் ஓசைநயமும் மிகுதியாகக்கொண்டு மிளிர்கின்றது. முதல் 12 அடிகளில் இறைவனது பெருமையையும் ஆற்றலையும் பெருமிதத்துடன் பேசி, 12ஆவது அடியின் ஈற்றயல் சீராகிய ஒரு சொல்லால் இறைவனது பேரழகோடு, பெருங்கருணை, எண்ணவியலா இனிமை, எவர்க்கும் இணங்கும் எளிமை முதலிய இறைமைக்குணங்களைப் பெறவைக்கும் அழகு ஈடற்றதாகும்; 'சிறிய ஆகப் பெரியோன்' என்ற தொடரும், 'கொட்கப் பெயர்க்கும் குழகன்' என்ற தொடரும் ஒன்றுக்கொன்று நேர்நின்று இத்தெய்வக் கவிதையின் ஓட்டத்தை ஒரு நொடியில் அறியத் துணைசெய்கின்றன. பின்னர் 28ஆவது அடிவரையில், சிவபெருமான் முத்தொழிலுக்கும், வீடுபேற்றுக்கும், ஐம்பூதங்களுக்கும் முதல்வன் என்பது குறிப்பிடப் பெறுகிறது. பின்னர் 65ஆவது அடிவரையில், உள்ளம் ஒரு சிறிதும் பிறநோக்கிற் செல்லாதவண்ணம் ஒரே மூச்சாகச் சிவபெருமானது பல்வகைப் பண்புகளை, இடையிடையே தான் பெற்ற பேரின்பத்தோடு கூட்டி, அடிகள் உலகறிய ஓதுகின்றார். 66 முதல் 96ஆவது அடிவரையில், பரம ஆனந்தப் பழங்கடல் பேரின்பமுகிலாய்த்தோன்றி, தீமை ஒழியவும் நன்மை பெருகவும், பேரானந்தப் பெருவெள்ளமாய்க் கரைபுரண்டு ஓடும் காட்சிகளைக் கண்முன் காண்கிறோம். இப்பகுதி, இயற்கை எழிலும் திருவருட் பொலிவும் ஒன்று கலந்து கற்பவர் உள்ளத்தை ஆனந்த வெள்ளத்தில் திளைக்கச் செய்கின்றது. ஓசையும் பொருளும் ஒன்றி, விரைந்து ஓடும் செய்யுள் இனிமை துய்த்துணர வேண்டுவதொன்றாம்; இது, பாநலம் கனிந்த பகுதியாகும். 95 முதல் 120ஆவது அடிவரை ஆனந்தக் கடலில் மூழ்கி ஆற்றாமைமேலிட்ட அடிகள், இறைவனைப் பலவாறு வாழ்த்தி வணங்குகின்றார். பின்னர் இரண்டு அடிகளில் திருவருளளித்த பேரானந்தத்தில் திளைத்தற்கு ஆற்றலில்லாத யாக்கையை வெறுக்கின்றார். 124 முதல் 162ஆவது அடிவரையில் எவர்க்கும் காணவியலாத இறைவன் தனக்கு உள்ளங்கை நெல்லிக்கனியாக உள்புகுந்து அருள் செய்தமையையும் அப்போது தன் உடலில் தோன்றிய உணர்ச்சிகளையும் தெளிவாகக் கூறுகின்றார். 163 முதல் இறுதி அடியாகிய 182ஆவது அடிவரையில், இறைவனது கருணைத்

தேன் விளைத்த ஆனந்தத்தையும், அப்போது தன் யாக்கையின் இன்பநிலையையும், தெளிந்த சொற்களால் விளம்புகின்றார். இப்பகுதி, ஞானிகளது அநுபவத்தை நிகழ்ந்த வண்ணம் கூற, உலகில் இதுகாறும் எழுந்துள்ள பனுவல்களின் தலைமணியாகப் போற்றத்தக்கது. ஒவ்வொரு சொல்லும், தொடரும் பன்முறை சிந்தித்துப் பயிலவேண்டுவது. இப்பகுதியில் 120, 122, 123, 153–157, 175–177, அடிகள், திருவருளில் திளைக்கும் ஒரு சிவஞானியின் திருவுருவப் பொலிவை நமக்குக் காட்டுகின்றன.

4. **போற்றித் திருவகவல் :** நாற்சீரடி 225 கொண்ட நிலைமண்டில ஆசிரியப்பாவால் அமைந்தது; போற்றி என்னும் சொல் பெரிதும் பயின்றுள்ளமையால் இப்பெயர் பெற்றது, முதல் 10 அடிகளில், அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்களுக்கும் அரிய திருவடி தனக்கு எளிதானதைக் கூறுகின்றார். 11 முதல் 25 வரை, கருவிலிருந்து பிறவி வரை உள்ள துன்பத்தையும், பின்னர் 41ஆவது அடிவரையில் பிறந்தபின் உள்ள இடர்களையும், பின்னர் 58ஆவது அடிவரையில், மெய்ப்பொருள் காணத் தடையாகவுள்ளவைகளையும், பின்னர் 85ஆவது அடிவரை, ஞானாசிரியனாக அருளிய இறைவனை உறுதியாகப் பற்றியதையும், அப்போது உடலிலும் உள்ளத்திலும் நிகழ்ந்தவைகளையும் விளம்பி, பின்னர், செய்யுளின் இறுதியாகிய 275ஆவது அடிவரையில், சிவபெருமானது திருவிளையாடல்களையும், பண்பையும், அருளையும் பலவாறு புகழ்ந்து உளங்குளிரப் போற்றுகின்றார். போற்றி என்னும் சொல், வணக்கம் என்றும், காத்தருள் என்றும் பொருள் தருவதாகும். இச்சொல்லின் இகரத்தை வியங்கோளாகக்கொண்டு 'போற்றுவாயாக' எனப்பொருள் கொண்டார் அடியார்க்கு நல்லார்.

5. **திருச்சதகம் :** இது நூறு செய்யுட்களால் அமைந்துள்ளது. சதகம் என்ற வடசொல் நூறு என்ற பொருள் தருமாகலின் இப்பகுதி இப்பெயர் பெற்றது. இச்செய்யுள்கள் யாப்புவகையால் பல திறப்படும். எனினும், அந்தாதித் தொடையால் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்கின்றன. இப்பகுதி, பத்து பத்துச் செய்யுட்களைக் கொண்ட பத்துப் பிரிவுகளாக ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனித் தலைப்புடன் வகுக்கப் பெற்றிருக்கிறது. முன்னோர், இப்பகுதி பத்தி வைராக்கிய விசித்திரத்தை உணர்த்துவது என்றும், ஞான

சிரியர் பத்துவகையாக இரட்சித்த முறைமையை உரைப் பது என்றும் குறிப்பு எழுதியுள்ளார்கள். பத்தி—வைராக்கிய- விசித்திரம் என்பது இறைவனிடத்திலுள்ள மெய்யன்பு— உலகப்பற்றுவிடுதல்—என்று இவைகளின் வியக்கத்தக்க பலவேறு தன்மை என்ற பொருள்படும். இத்தன்மை இப் பகுதி முழுவதும் விரவியுள்ளதெனினும், இதன் உட்பகுதி கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக இயைபுடைய பொருள் களை விளக்கி உரைக்கின்றது.

1. மெய்யுணர்தல்: இவ் உட்பகுதி பத்துகட்டளைக் கலித் துறையில் அமைந்துள்ளது. உலக நிலையாமையை உணர்ந்து உலகப் பற்றுக்களைவிட்டு இறைவனை இறுகிய அன்பால் பிணித்துத் திருவருளுக்கு ஆளாகுதல்.

2. அறிவுறுத்தல்: பத்து தரவுகொச்சகக்கலிப்பாவில் அமைந்துள்ளது. மெய்ப்பொருளை நாடுவதில் ஊக்கம் தளர்ந்த உள்ளத்தை நல்லுரை வல்லுரைகளால் வழிப்படுத்தல்.

3. சுட்டறுத்தல்: பத்து எண்சீர் விருத்தத்தில் அமைந் துள்ளது. தன் செயல் அறுத்தல் என்பது முன்னோர் குறிப்பு. இறைவன் திருவருளில் திளைக்கும் ஆன்மா, இன்பம் கொடுக்கும் இறைவன் வேருகவும் இன்பம் துய்க்கும் ஆன்மா வேருகவும் பிரித்து உணர்கின்ற நிலையை அறவே ஒழித்தல் என்பது பொருள். நுகர் வான் நுகர் பொருள் என, வேறு சுட்டி உணர்வது சுட்டறிவு அல்லது சுட்டு எனப் பெயர் பெற்றது.

4. ஆன்ம சுத்தி: பத்து அறுசீர் விருத்தத்தில் அமைந்தது. தன் நிகர் இல்லாத் தலைவன் அருளிய தண்ணளிக்குத் தக்கவாறு நடவாத உள்ளத்தைப் பலவாறு கடிந்து தூய்மை செய்தல். இம்மி இறைவனைப் பிரியினும் மனம் வருந்தி, பிரிவது என்பது அவன் திருவுளக் குறிப்பு அன்று, தன் மாசுநீங்காத் தன்மையே என உணர்தல்.

5. கைம்மாறு கொடுத்தல்: பத்து கலிவிருத்தத்தில் அமைந் தது. தன்னையே எனக்குத் தந்த தலைவனுக்கு யான் செய் கைம் மாறு, என்னையே அவனுக்கு அளித்தல் அல்லவா? அவ்வாறின்றி கழல் கண்டும் பிரிந்த கடையேன் அல்லவா நான்? கண்டும் காணது இருந்தேனே! அறிவனே? அல்லனே? அறியேன்; அறியாமையே என் ஆராதனை! எனத் தன் தகுதியின்மையை எண்ணி அழுங்கல்.

6. அநுபோக சுத்தி: பத்து அறுசீர்விருத்தத்தில் அமைந் தது. சிவனடிக் கீழ்த் தன்னைச் சேரவொட்டாது தடுத்திருந்த உலக நுகர்ச்சிகளை எண்ணி வருந்தி இறைவனிடம் முறையிட்டுத் தூய்மையாதல்.

7. காருணியத்து இரங்கல்: பத்து அறுசீர்விருத்தத்தில் அமைந்தது. தன் சிறுமையை எல்லாம் புறக்கணித்துத் தன்னை ஆட்கொள்ளவேண்டும் என இறைவன் கருணையை வேண்டல்.

8. ஆனந்தத்து அழுந்தல்: பத்து எழுசீர்விருத்தத்தில் அமைந்தது. எல்லாம் அவனே; அவனடிக்கு மாறாத அன்பு வேண்டும்; அந்த அன்பே பேரின்பவெள்ளமாம் என உறுதி கொண்டு தன்னைப் பாதுகாத்துத் தனக்கு இரங்கு என வேண்டல்.

9. ஆனந்த பரவசம்: பத்து கலிநிலைத்துறையில் அமைந்தது. இறைவன் திருவருளைப் பெறுதற்குத் தன் குறைகளையெல்லாம் உளங்கனிந்து உரைத்து அழுது ஆனந்தத்து ஆழ்தல்.

10. ஆனந்தாதீதம்: பத்து எண்சீர்விருத்தத்தால் அமைந்தது. ஏதுகொண்டு ஏதுசெய்யினும் எல்லையில்லாத அவன் கருணையினால் ஞானநாடகம் ஆடுவித்து அடிமைகொண்டு பிச்சனாக்கினான் என வியந்து உரைத்து, "ஊன் கூடு நீக்கு; வீடுதந்து அருளு" என மெய்யர் மெய்யன் திருவடிகளில் முடிவற்ற பேரின்பமுற்று நிற்றல்.

திருச்சதகம், ஒரு மாசுநீக்கிய ஆன்மா இறைவன் திருவருள் வேட்டு, அதனை ஒருவாறு பெற்று, உலகநிலையும் ஞானநிலையும் மாறிமாறி உள்ளத்தே தோன்றியும் மறைந்தும் இருந்த நிலையில் எழுந்த ஓர் அருளுரையாகும். முன்னோர்கள் இப்பகுதி முழுவதற்கும் உட்பகுதிகளுக்கும் வழங்கிய தலைப்புகளெல்லாம் நூல் நுதலிய பொருள் எனக் கொள்ளாது, அப்பகுதிகளுள் பதிந்து பயிலுங்கால் பயில்வோர் அடையும் பயன்களின் பலதிறப்பட்ட நிலைகள் என்றே கொள்ளுவது பொருத்தமாகும். இச்செய்யுளெல்லாம் அறிவாற் சிவனே என ஆன்றோர் புகழ்ந்த அடியாரின் திருவுளத்திலிருந்து எழுந்தவையாகலின் பயில்வோரைப் பண்பாக்கும் ஆற்றலுடையன என்பது ஆயிரம் ஆண்டுகளாக ஆன்றோர் கண்ட உண்மை.

6. **நீத்தல் விண்ணப்பம்:** இப் பகுதி ஐம்பது கட்டளைக் கலித்துறையால் அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. இறைவன் திருமுன் மெய்யடியார்களுடன் தெய்வ நினைவு ஒன்றிலேயே சிந்தனையைச் செலுத்தி வந்த அடிகள், இறைவனும் அடியார்களும் மறைந்தவுடன், உலக இன்பங்களால் ஈர்க்கப் பெற்று, தன்னை இறைவன் கை விட்டு விட்டாரோ எனக் கவன்று, அவ்வாறு தன்னைக் கைவிடக்கூடாது என மன்றாடி வேண்டிக் கொள்ளுவதே இப் பகுதியின் உள்ளுறையாகும். பெரியவர்களுக்குத் தம்

பாலுள்ள சிறிய குறையும் பெரிதாகத் தோன்றுவது இயல்பாதலால், அடிகள் தன்னிடம் ஐம்புலப்பற்று, காமம், நெறியின்மை, செருக்கு, பொய்யொழுக்கம் முதலிய தீய பண்புகள் மிகுதியாக இருப்பதனுலேயே இறைவன் தன்னை விட்டு அகன்ருன் என எண்ணித் தான் திருவருளுக்குப் புறம்பாகி விட்டதாக நைந்துருகிக் கருணையினுல் தன்னை ஆட்கொள்ள வேண்டுமென விண்ணப்பிக்கின்ருர். உள்ளம் உருகி மலர்ந்த இத்தெய்வப் பாட்டுக்கள் எவர் மனத்தையும் உருக்கும் தன்மையன என்பது பயின்றே அறியவேண்டும். முதல் இருபது செய்யுள்களிலும் நாற்பத்தெட்டாம் செய்யுளிலுமே உத்தரகோசமங்கை குறிப்பிடப்பெறுகிறது. சிவானுபவத்திற்குத் தடையாக இருக்கும் இவ்வுடல் நீங்கவில்லையே என வருந்தும் செய்யுட்பகுதிகள் உலகத்தி லுள்ள உண்மை அனுபவ நூல்களில் உயர்ந்த இடம் பெறத்தக்கன. தன்னுடைய உள் நிகழ்ச்சிகளை உண்மை யாகவும் கேட்போர் உள்ளம் கொண்டு நலம் பெறும் வழியிலும், இவ்வளவு தெளிவாகக் கூறிய ஞானிகள் உலகத்தில் மிகமிகச் சிலரோ, அன்றி இவரோ, சொல்லவியலாது.

7. திருஎம்பாவை : 'எம்பாவாய்' என்னும் தொடர், செய்யுளின் இறுதியில் வருகின்றமையால் திரு என்னும் அடைமொழி கூட்டி, திருஎம்பாவை எனப் பெயர் பெற்றது. இது, வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா இருபதால் அமைந்துள்ளது. மார்கழித் திங்களில் திருவாதிரைக்குமுன் பத்து நாள் தொடங்கி, வைகறைப் பொழுதாகிய விடியற் காலத்தில், கன்னிப்பெண்கள் பலர் துயில் எழுந்து ஒருத்தியும் பலருமாக இல்லங்கள் தோறும் சென்று தம் தோழிகளைத் துயில் எழுப்பிக்கொண்டு சிவ பெருமான் புகழை மனமார வாயாரப் பாடியவராய் நீர் நிலைக்குச் சென்று நீராடும் ஒரு பழைமையான வழக்கத்தை அடிப்படையாக வைத்து, உரையாடல் முறையிலும், வணங்கி வாழ்த்தும் முறையிலும், மக்களுக்குத் தெய்வ உணர்ச்சியை ஊட்டும் பகுதியாகும். பெண்கள் ஒருவருடன் ஒருவர் உரையாடுவது அவரவர் நிலைமைக்கேற்ப இயற்கை யாக அமைந்துள்ளது. காலைக் காட்சியும் நீராடும் சூழ் நிலையும், சில சொற்களால் உளம் உவக்கும் வகையில் சொல்லப்பட்டுள்ளன. இறைவன் புகழைப்பாடும் முறையும், இறைவனையும் இறைவியையும் வேண்டிக்கொள்ளும் முறை

யும், எல்லோர் உளத்தையும் உருக்கும் தகைமைய. இறைவனிடத்து உள்ளத்தைப் பறிகொடுத்த ஒரு பெண்ணின் ஓவியம் 15ஆவது செய்யுளில் உயிர் ஓட்டத்துடன் தீட்டப் பெற்றிருக்கிறது. பூம்புனலை அம்மையப்பன் தோற்றமாகக் கூறும் 13ஆவது செய்யுளும், உலகன்னையைப் போற்றும் 14ஆவது செய்யுளும், எளிமையும் இனிமையும் வாய்ந்தன. சிவபெருமானது ஐந்தொழில் 12-வது 20ஆவது செய்யுட்களில் போற்றப்பெற்றுள்ளது. அருள் மழையாக அன்னையின் திருவருளை உவமித்துப்பாடும் 16ஆவது செய்யுள் கடுங் கோடையிலும் கற்பவர் உள்ளத்தைக் குளிர்விக்கும் தன்மையது. "அமளிக்கே நேசமும் வைத்தனையோ?" "போன திசை பகராய்" போன்ற பல சொற்றொடர்கள், பெண்கள் பேச்சு முறையைக் காட்டுகின்றன. "இவையும் சிலவோ?" "விளையாடி ஏசும் இடம் ஈதோ?" என்பன பெண்களது தூய பண்பையும் நடைமுறையையும் விளக்குகின்றன. இறைவனை, "ஏழை பங்காளன்", "கண்ணுக்கு இனியான்", "கண்ணார் அமுதம்" என அவர்கள் அழைப்பது, உள்ளத்தின் இனிமையையும் கனிவையும் புலப்படுத்துகின்றது. இவற்றையெல்லாம்விட மேலாக, இயற்கையாகவே அழகு செய்து கொள்ளுவதில் ஆர்வமுடைய அப்பெண்கள், எது உண்மையான அழகு என்பதை எண்ணி, சிந்தையின் அழகே அழகு எனத் தேர்ந்து, அந்தச் சிந்தைக்கு அழகு சிவனைப்பாடுதலே எனத் துணிந்ததை எண்ண எண்ண, எவர் மனந்தான் இறும்பூதெய்தாது? இச்சிறு தொடரின் கருத்தை விரித்து ஆயிரம் ஆயிரம் ஏடுகளில் எழுதிப்பார்த்தாலும் உள்ளம் அமைதி கொள்ளுமா? பொருள் விளக்கம் முற்றுப்பெற்றதாகுமா?

முன்னோர்கள் மரபாக இப்பகுதிக்குச் சொல்லிவந்த சமய தத்துவ விளக்கம், இப்பதிப்பின் பிற்சேர்க்கை ஆ. 2இல் தரப்பெற்றுள்ளது.

8. **திரு அம்மானை:** இது ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா இருபது கொண்டது. அம்மானை என்பது மகளிர் விளையாட்டுக்களுள் ஒன்று. அவ்வாறு விளையாடும்போது பாடுகிற பாட்டிற்கு வழங்கிப் பின்னர் சிற்றிலக்கியங்களுள் ஒன்றன் பெயராகவும் வழங்குவதாயிற்று. திருவருளில் திளைக்கும் தன் நிலையை, அடிகள், இப்பகுதியில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பாடல்களினால் தெரிவிக்

கின்றார். இப்பகுதி முழுவதும் உள்ளத்தை அடிப்படுத்தி உணர்ச்சி மேலோங்கி ஓடுகின்றது. உணர்ச்சியும் ஓசையும் ஒன்றிச் சொற்களைச் சேய்மையில் ஒலிக்கும் சிலம்பொலி போல் நம் செவியில் ஒலிக்கச் செய்கிறதோடு, உள்ளக் கண்ணுக்கு இறைவனது அருவ, உருவ, அருவுருவத் திரு மேனிகளைப் புலப்படுத்தி ஆனந்தத்தில் அழுத்துகிற பாக்களில் பல இப்பகுதியில் எளிதிற் கிடைக்கின்றன. 6ஆவது செய்யுள் இறைவன், அடிகளை ஞானோபதேசம் செய்து ஆட்கொண்டதைத் தெளிவாக, விரைந்து இயங்கும் நிழற் படம்போல் காட்டுகின்றது. 10ஆவது செய்யுள், கழல்காட்டி ஆண்டபெருமான் எத்தகையான் என்பதை விளக்கும் போது, அவன் "தண்ஆர் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டான்" என உளங்கனிந்து உரைக்கின்றார். 17ஆவது செய்யுள், திருவாசகம் முழுவதையுமே சுருக்கிச் சொல்லியதுபோல் இன்பம் அளிக்கின்றது; உள்ளத்தை நெகிழ்வித்தும் மகிழ்வித்தும் அவன் அருளை முகிழ்விக்கின்றது. 8ஆவது செய்யுளில், 'புண் சுமந்த பொன்மேனி' என்ற தொடரை எளிதில் மறக்க முடியுமா? 3ஆவது செய்யுளில், சிந்தனையை வந்து உருக்கும் தோட்கொண்ட நீற்றன் நம்மை நீருக்குகின்றானே! அவன் தந்த ஆனந்தத்திற்கு அந்தமும் உண்டோ? 20ஆவது செய்யுளில், இறைவன் குற்றங்கள் நீக்கி, குணம் கொண்டு, நம்மோடு கொஞ்சிக் குலாவுகின்றானே! அதனினும் பேரானந்தம் உளதோ? இதனாலன்றோ இப்பகுதிக்கு ஆன்றோர் ''ஆனந்தக்களிப்பு' எனத் தலைப்பிட்டனர்.

9. திருப்பொற் சுண்ணம்: இது அறுசீரடி விருத்தம் இருபது கொண்டது. உரற்பாட்டு, உலக்கைப்பாட்டு முதலியவை போன்றது; சுண்ணம் இடிப்போர் சோர்வு தோன்றாது இசையுடன் பாடுவதற்கு ஏற்றது. இங்கு, சிவபெருமானுக்குத் திருமுழுக்காட்டப் பெண்கள் பலர் கூடிப் பொற் சுண்ணம் இடிக்கும்போது பாடுவதாக இப்பகுதி அமைந்துள்ளதாகலின், திரு என்னும் அடையுடன் திருப்பொற் சுண்ணம் என்னும் பெயர் பெறுவதாயிற்று, இப்பகுதி மிகவும் ஆரவாரமுடையது; பெண்கள் சுண்ணம் இடிப்பதற்காக இடத்தை அணிசெய்து, தெய்வங்களைப் பல்லாண்டிசைக்கவும் கவரி இரட்டவும் நியமித்து, அயன், அரி, இந்திரன் முதலியோர்க்குத் திருப்பணியில் முதலிடம்

தீர்ாது தாங்களே முந்திப் பணியாற்றுவது முதலியவெல்லாம் பெரிதும் பரபரப்பு உடையனவாக ஏற்ற சொற்களுடனும் ஓசையுடனும் செல்கின்றன. தெய்வ உணர்ச்சியை வானுலகத்தும் மண்ணுலகத்தும் பரப்புவனவாகப் பல செய்யுட் பகுதிகள் ஒளிர்கின்றன. எல்லாம் இறைவனே, இரண்டு என்பது அவனை அணுகும் நிலையில் இல்லை என்னும் உண்மையை, 20ஆவது செய்யுள், தெளிந்த மொழியில் விதந்து கூறுகின்றது. 10ஆவது செய்யுள் இசையுடன் படிப்போரை ஒரே ஞானச் சுழலில் சுழல்விக்கின்றது; 'சித்தம் சிவனொடும் ஆட, ஆட' என்பதன் தெய்வீகப் பெருமிதம், 'பிறவி பிறரொடும் ஆட ஆட' என்பதை எதிர்த்து நிற்பது முன்னையதன் பெருமையை நொடிப்பொழுதில் நம் உள்ளத்தில் பதிய வைத்து விடுகிறது. 'அத்தன் கருணையொடு ஆட ஆட' என்பது ஞான முடியாய் ஒளி வீசுகின்றது. 11ஆவது செய்யுள் அமைதியாகச் சென்று சித்தத்தைக் களிக்கச் செய்கின்றது. 14ஆவது செய்யுளின் பொங்கியகாதல், ஆண்டவனையும் அடியார்களையும் ஒன்று கூட்டுவதுபோல் ஒலிக்கின்றது. சித்தம் புகுந்து தித்திக்கவல்ல ஞானக்கரும்பின் அரிய நலத்தை, இப்பகுதி, நாடோறும் உடல் உழைத்து உயிர்வாழ வேண்டிய எளிய மக்களிடத்தும் சேர்த்து விடுகின்றது.

10. திருக்கோத்தும்பி: நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா இருபது கொண்டு, தும்பியை நோக்கிக் கூறியதாக அமைந்துள்ளது இப்பகுதி; செய்யுளின் இறுதிச்சீர் 'கோத்தும்பீ' என முடிவதால் திரு என்னும் அடைமொழியோடு இப்பெயர் பெற்றது. தும்பி என்பது வண்டு வகைகளுள் ஒன்று; தேனையும் நறுமணத்தையும் நாடிச்செல்லும் இயல்புடையது. கோத்தும்பி என்றால், அரசவண்டு எனப் பொருள்படும். ஆன்மாவையே வண்டாக உருவகப்படுத்தி அடிகள் பேசுகிறார்; அவர் பேசும் வண்டு, பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை வாசத்தார் நீங்காத வண்டு அல்ல; தினைத்தனைத் தேனுள்ள மலர்களையே சுற்றும் வண்டு, எனவே அதை அழைத்து 'ஆனந்தக் கூத்தன் தேன் ஆர் கமலமே சென்று ஊது' (3ஆவது செய்யுள்) எனப் பணிக்கின்றார். இப்பகுதி, பெரிதும் அமைதி நிலவுவது. உலகத்தில், எக்காலத்திலும் ஞானிகள் கேட்கும் கேள்விகளெல்லாம் இங்கே கேட்கப் பெறுகின்றன (2ஆவது

செய்யுள்); அடிகள், பரபரப்பெல்லாம் ஒடுங்கி உள்ளத்தைக் குளிரச் செய்கின்ருர் (13ஆவது செய்யுள்); கல் நெஞ்சை உருக்கிய கருணையில் களிக்கின்ருர் (11ஆவது செய்யுள்); கண்ணப்பன் பேரன்பையும் தன் அன்பு இன்மையையும் கருதுகின்ருர் (4ஆவது செய்யுள்); சித்தம் தெளிகின்ருர் (6ஆவது செய்யுள்); ஆட்கொண்ட கருணையையும் பிழை பொறுக்கும் பெருமையையும் போற்றித் தன்னை உலகில் இருத்தியதின் பொருளைத் தெரிந்து இறுமாந்து நிற்கின்ருர் (12ஆவது செய்யுள்). இப்பகுதி மன அலைவெல்லாம் ஒடுக்கிச் சித்தத்தைத் தெளிவித்துச் சிவன் சேவடியில் ஈடுபடுத்துகின்றது.

11. திருத்தெள்ளேணம்: இது, நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா இருபது கொண்டது. தெள்ளேணம் என்பது, மகளிர் தாளத்திற்கேற்ப பாடிக்கொண்டு கைகொட்டி ஆடும் விளையாட்டு. இப்போது கும்மி என்று வழங்கும் விளையாட்டைப் போன்றது; கைகொட்டுவதற்குப் பதிலாக சிறுபறை கொட்டி விளையாடுவதாகவும் இருக்கக் கூடும் என்பது சிலர் கருத்து. கும்மி, ஏணம் என்னும் சொற்கள், கொம்மை, ஏண் என்னும் ஒத்தபொருள் உணர்த்தும் அடிப்படையிலிருந்து தோன்றியனவாகவிருக்கலாம். இவ் ஆடலின் பெயரே இப்பகுதிக்குத் திரு என்னும் அடைமொழி சேர்த்து வழங்குவதாயிற்று. பாடுகின்ற பனுவலார்கள் தேடுகின்ற செல்வமாகிய சிவபெருமான் கருணையைப் பல்வகையிலும் எண்ணி, மீண்டும் அவனைப் பாடுவதையே விரும்புவது இப்பகுதி, சிவபெருமான் தனக்கு ஞானதேசிகனாக வந்து திருவருள் செய்த எண்ணற்கரிய நிகழ்ச்சியை இப்பகுதியில் நினைந்து நினைந்து உருகுகின்ருர். வானவர்களுக்கு எல்லாம் அணுக முடியாத இறைவன், தன்னை வலிய ஆண்டுகொண்டதை எண்ண எண்ண, இவ் உலகம் எள்ளி நகைக்கும் எனக் கூறும் 3ஆவது செய்யுள் எத்தனை சுவைகளைக் கொண்டுள்ளது எனச் சொல்லவியலுமா? அம்மையப்பன் ஆட்கொண்ட செயலை உரைக்க எண்ணுவாராஞல் என்ன என்ன மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன என்பதைப் பேசும் 6ஆவது செய்யுளில் 'உள் ஒளி ஆட' என்பதைப் பன்முறை ஆழ்ந்து சிந்திப்போர்க்கு உள் ஒளி பெருகுதல் உண்மையே என்பதில் ஐயம் தோன்றுமா? 7ஆவது செய்யுளில் அவன்

திருவடி தலைமேல் சூட்டியவுடன் நிகழ்ந்தவைகளையும், 11ஆவது செய்யுளில் அவன் தன்னோடு கலந்தவுடன் நிகழ்ந்தவைகளையும் பேசும் தெளிவு, தெய்வக்கவிகளுக்குத்தான் இயலும் 15ஆவது செய்யுளின் ஓட்டத்தை நினைப்பதே ஒரு 'திரு' என்பதை சொல்லவும் வேண்டுமா? அவன் திருவடியைத் தான் மறந்தும் மறவாவண்ணம் செய்த திறத்தைச் செப்பும் 8ஆவது செய்யுளும், ஏனையோர் வாடவும் தன்னைப்பத்திக்கடலுள் பதித்த பரஞ்சோதியின் தித்திப்பை சொல்லும் 12ஆவது செய்யுளும், ஐம்பெரும்பூதங்கள் அழிந்த காலத்தும் அழியாது நிற்பான் ஒருவனுக்குத் தான் அழிந்ததைக் கூறும் 18ஆவது செய்யுளும், தன் கண்ணுற நின்றவன் யாவன் என்பதை பெருமிதத்துடன் பேசும் 19ஆவது செய்யுளும், தத்துவ ஒளியால் நமக்கு வழிகாட்டுகின்றனவா? செஞ்சொற்கவியின்பத்தால் நம்மைச் சுமந்து செல்கின்றனவா? தெரிவார் யார்?

12. திருச்சாழல்: இது நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா பத்தொன்பது கொண்டது; பல்வரிக்கூத்துள் ஒன்று என அடியார்க்குநல்லாரின் மேற்கோள்நூல் ஒன்று கூறுகிறது. இக்காலத்து வழங்கும் ஏசல் பாட்டுக்களை ஒத்தது. ஒரு தலைவனை ஒருவர் இகழ்ந்தும் மற்றொருவர் அந்த இகழ்ச்சிக்கு அமைதிகூறிப் புகழ்ந்தும், வினாவிடையாகப் பாடி, கைகொட்டி ஆடும் விளையாட்டு 'சாழல்' என்று அடிகள் காலத்து வழங்கியது. இங்கு, சிவபெருமானைப் பற்றி வழங்கும் பல புராணக்கதைகளின் செய்திகளை ஒரு பெண் இகழ்ந்து கூறுவதாகவும் மற்றொரு பெண் அச்செய்திகளின் உட்கருத்தான உண்மைகளை எடுத்துரைத்துப் புகழ்வதுமாக அமைந்து, பல சமய உண்மைகளையும் தத்துவத்தையும் எளிமையாக எவரும் தெரிந்துகொள்ளும் முறையில் எடுத்துரைக்கப் பெற்றிருக்கின்றது. தில்லையில், புத்தர்களை வாதில் வென்றபோது, ஈழத்தரசன் மகளாகிய ஊமைப்பெண், திருவருளால் பாடியதாகவும், அப்பாட்டுக்களின் கருத்துக்களை அடிகள் சாழல் விளையாட்டில் அமைத்துப் பாடியதாகவும் பழங்கதைகள் வழங்குகின்றன. 10ஆவது செய்யுள் வினாவிடையாக இல்லாமல், அடிகள் பெற்ற அந்தமிலா ஆனந்தத்தைப் போற்றுகின்றது. இப்பகுதி, தம்பெருமை தான் அறியாத் தன்மையன் (19ஆவது செய்யுள்), தான் தனியனாகி (3ஆவது

செய்யுள்) எல்லார்க்கும் ஈசனும் (2ஆவது செய்யுள்) இயல்பும் ஆகி (1ஆவது செய்யுள்) மறக்கருணையால் (5ஆவது செய்யுள்) ஆணவம் ஒழித்து (6ஆவது செய்யுள்), வெள்ளமும், நஞ்சும் உலகை அழிக்காமல் காத்து (7, 8ஆவது செய்யுட்கள்), கலைமணம் காக்கத் திருமணம் செய்து (13ஆவது செய்யுள்), உலகம் காக்கும் எருதை உகந்து (15ஆவது செய்யுள்), உலக இயற்கையை உணர்த்தி (20ஆவது செய்யுள்), வெறிக்கூத்தை ஞானக்கூத்தால் வென்று (14ஆவது செய்யுள்), உலகங்களின் இறுதியைத் தன் அணிகளால் எடுத்துக் காட்டி (11ஆவது செய்யுள்), எம்பெருமானே! ஈசனே! என மறைகள் ஏத்த (17ஆவது செய்யுள்), வானவர் மலரிட்டு வழிபட (12, 18ஆவது செய்யுட்கள்), அறமும் மறமும் கைக்கொண்டு (16ஆவது செய்யுள்), தென்பால், திருச்சிற்றம்பலத்து உகந்து ஆடி (9ஆவது செய்யுள்), அன்பரை ஆனந்த வெள்ளத்துள் அழுந்துவிக்கும் திருவடிகளைக் காட்டி வான்பொருளாய் நிற்கின்முன் எனத் தெளிவாக விளம்புகின்றது.

13. திருப்பூவல்லி : இது நாலடித்தரவுகொச்சகக் கலிப்பா இருபது கொண்டது. அடியார்க்குநல்லார் மேற்கோளில் காணப்பெறும் வரிக்கூத்தின் வகைகளில் ஒன்றாகிய 'அந்தியம்போது ஆடும் களி, கொய்யும் முள்ளிப்பூ' என்பதனோடு இயைபு உடையதாகத் தோன்றுகிறது. நீர்ப்பூ கொடிப்பூ முதலியவைகளைக் கொய்தல்போல் பாடி ஆடும் கூத்து இப்பெயர் பெற்று, பின்னர் அதனோடு இயைந்த பாட்டும் இப்பெயர் பெறுவதாயிற்று. கூத்தின் வகையில் சேர்க்காமல், இப்பாடல்கள், இறைவன் திருவடியை மலர்சாத்தி வழிபடுவதற்குப் பெண்கள் மலர்கொய்யும் போது பாடுவதற்காக அடிகள் அருளியதாகக் கொள்ளுவது பொருத்தமுடையதாகத் தெரிகிறது. நீர்ப்பூ ஆகிய அல்லிப் பூவை நீரில் நீந்திக் கொய்வதாகவோ, வல்லிப்பூ ஆகிய கொடிப்பூவைத் தாவியும் குனிந்தும் கொய்வதாகவோ கொள்ளலாம். இறைவன் திருவடி, தன் தலைமேல் வைத்தலும் மாறுபாடான தொடர்கள் எல்லாம் ஒழிந்தன என, இப்பகுதியை அடிகள் தொடங்குகின்றார்; சிவபெருமான் தனக்குத் தந்தையாய், தாயாய் மற்றுள சுற்றமும் செல்வமுமாய் (2ஆவது செய்யுள்), தன்னை நாடிவந்து கோலம் குளிர்ந்து உட்புகுந்து (5ஆவது 11ஆவது செய்யுட்கள்),

கட்டுக்களை அறுத்து (2ஆவது செய்யுள்), வல்வினைகளை ஒழித்து (3ஆவது செய்யுள்), புத்தியுள் புகுந்து (19ஆவது செய்யுள்), நெறி அருளி (8ஆவது செய்யுள்), வணங்கத் தலை வைத்து, வாழ்த்த வாய் வைத்து இணங்க அடியார் கூட்டமும் வைத்து 27ஆவது செய்யுள்), தான் அடியும் பட்டு தன்னை ஆட்கொண்டு (16ஆவது செய்யுள்), அவன் சீர் ஆர் திருவடிச் சிலம்பு ஒலிக்கே தனக்கு ஆராத ஆசை அருளி (18ஆவது செய்யுள்) ஆண்டுகொண்டான் (17ஆவது செய்யுள்) என்பதை மிகவும் இனிமையாகப் பேசி நம்மை நல்வழிப்படுத்துகிறார். சில செய்யுள்கள் (4, 6, 15)), இறைவன் மறக்கருணையைக் காட்டுகின்றன, மாமுனிவர் ஏத்த மறைஅருளும் அழகை 13ஆவது செய்யுள் தெரிவிக்கின்றது. உள்ளக்கிழியில் உருவு எழுதத் திருவடிப்போது அளித்ததை ஆனந்தமாகப் பேசும் 14 ஆவது செய்யுளும், தேரார்ந்த விதிப் பெருந்துறை எனப் பெருமிதத்துடன் ஓதும் 18 ஆவது செய்யுளும், திண்போர்விடையானைப் பாடும் 16ஆவது செய்யுளும் கற்பவரை எங்கெங்கோ கொண்டுபோய்விடுகின்றன.

14. **திருவுந்தியார் :** இது பத்தொன்பது கலித்தாழிசையால் அமைந்தது. உந்தி என்பது மகளிர் விளையாட்டுகளில் ஒன்று; பறவைபோல் கைகளை விரித்துக் கால்களை உந்தி ஆடும் விளையாட்டு; உள்ளக்கிளர்ச்சியை விளக்கும் ஆடல்களில் ஒன்று; ஆடலின்பெயர் அதன்கண் பாடும் பாடல்களுக்கு ஆகிப் பின்னர் அப்பாடல்களைக் கொண்ட நூற்பகுதிக்கு ஆகி இப்பெயர் பெற்றுள்ளது. இப்பகுதி தொடங்கும்போதே போரில் வெற்றிகொண்டவர்களுடைய வீர மகிழ்ச்சியை வெளியிடும் வீறுதோன்ற ஓசை எழுகின்றது. இப்பகுதியில் சிவபெருமானது ஐந்து வெற்றிகள் புராண முறைப்படி சொல்லப் பெறுகின்றன; முதல் நான்கு தாழிசைகள் முப்புரங்களை எரித்ததைக் கூறுகின்றன. இரண்டாவதாக, ஐந்துமுதல் பதினாறுவது தாழிசை வரையில், தக்கன் வேள்வியைத் தகர்த்தமை பேசப்பெறுகிறது. மூன்றுவதாக, பதினேழாவது தாழிசை, பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பரங்கருணை நினைவுபடுத்தப் படுகிறது ; ஐந்தாவதாக, பத்தொன்பதாவதான இறுதித் தாழிசையில், இராவணன் தலை இருபதும் அற்றதும் குறிப்பிடப் பெற்றுள்ளன. இப்பகுதி வீரச்சுவையையே மிகுதியாகத் தருகிறது. பாலகனுக்குப் பாற்கடல் ஈந்தவன்

குமரன் தாதை என்பனபோன்ற நயம் ஒவ்வொரு தாழிசை யிலும் ஊடுருவிச்செல்வது ஊன்றிப் பார்ப்போர் உணர்வார். இப்பகுதியில் அறியாமையிற் பிறந்த ஆணவத்தின் அழிவும் அறிந்த அழுகையிற் பிறந்த பாற்கடலின் ஆனந்தத் தோற் றமும் நன்கு தெரிக்கப் பெற்றுள்ளன. இது ஞான வெற்றியே.

15. திருத்தோள் நோக்கம்: இது நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா பதினொன்கு கொண்டது. தோள்நோக்கம் என்பது தோள்தொட்டும், தோள்வீசியும் ஆடும் மகளிர் விளையாட்டுகளில் ஒன்று; 'நல்லார் தம் தோள்வீச்சு' எனும் வரிக்கூத்து வகையைச் சேர்ந்ததாக இருக்கலாம். இப்பகுதி யில் இறைவனுடைய எண் குணங்கள் (5ஆவது செய்யுள்), அரியும் பிரமனும் அறியவொண்ணுமல் நின்ற அழலுருவம் (12ஆவது செய்யுள்), மாறுபட்டோரை மறக்கருணையால் தூய்மை செய்யும் தன்மை (11ஆவது செய்யுள்), கண்ணப்பர் (3ஆவது செய்யுள்), சண்டேசர் (7ஆவது செய்யுள்), திரு மால் (10ஆவது செய்யுள்), இராக்கதர் மூவர் (9ஆவது செய் யுள்), இவர்களுக்கு அருளியமை முதலிய பொதுவான இறை மைப் பண்புகள் பாடப்பெறுகின்றன. கானலை நீராகக் கருதும் பொய்யறிவைத் தன்னிடமிருந்து ஒழித்தமையும், காலம் எல்லாம் பாழுக்கு உழைத்த (13ஆவது செய்யுள்) தன் சித்தத்தைச் சிவமாக்கி (6ஆவது செய்யுள்), அவன் உள்புகுந்தவுடன் பொறிபுலன்கள் உணவின்றி மாய்ந்ததும் (14ஆவது செய்யுள்), தான் உலகம் எல்லாம் மறந்ததும் (8ஆவது செய்யுள்), இறப்புபிறப்புக்களை கடந்து (2ஆவது செய்யுள்), ஆனந்தம் ஆகிநின்றதும், அடிகள் பேசுகின்றார். கண்ணப்பர், சண்டேசர் மூவர் இராக்கதர், திருமால் இவர் களைப் பற்றிக் கூறும் பாக்கள் பல தத்துவ உண்மைகளையும் மெய்யன்பின் ஆற்றலையும் காட்டுவனவாய் அமைந் துள்ளன.

"உலக இன்பங்களாகிய கரைகாணு முடியாத பெருங் கடலில், ஐம்பொறிகளாகிய கழுகுகளுக்குத் தகுந்த உண வாகத் திளைத்துக் கொண்டிருந்தேன்; இந்த இன்பக்கட லுக்கு எல்லையுமில்லை, இந்தக் கழுகுகளுக்கு உணவுப் பஞ்ச மும் இல்லை என்பதே என் எண்ணமாக இருந்தது. என்ன வியப்பு; ஓர் பேர் ஒளி என் உள்ளம் புகுந்தது; காமக் கடலைக் கடந்தேன்; கழுகுகள் உணவற்று ஓடின;என் வாழ்க்கையின்

வழி மாண்புற்றது; உள்புகுந்த ஒளியோ சொல்லின் எல்லையைக் கடந்தது'' என இயம்பும் இறுதிச் செய்யுள் அடிகளது சிவஞான முதிர்ச்சியின் ஆழத்தையும், செஞ்சொற்கவியின் செழுமையையும் ஒருசேரக் காட்டுகிறது.

தன்னுடைய கல்நெஞ்சம் கனியவே, சொல்லின் எல்லையைக் கடந்தவன் சொல்லுக்குள் அகப்பட்டுவிட்டான் என்னும் நான்காவது செய்யுளின் ஆழமும் அகலமும் ஆழ்ந்தும் பரந்தும் சிந்திக்கத்தக்கன; அடிகளுக்குத் தான் மக்கள் இனத்திற்கு வழி காட்டலாம் என்ற இன்பத் துணிவு தந்த பேரானந்தம் அமைதியாக அனுபவிக்க வேண்டுவது.

16. **திருப் பொன்னூசல்:** இது ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா ஒன்பது கொண்டுள்ளது. இத்தகைய பாட்டுக்கள் தமிழ்நாட்டில் பண்டுதொட்டுப் பயில்வன; ஊசல்வரி, ஊஞ்சற்பாட்டு என்றும் வழங்கப் பெறுவன. இங்கு, இறைவன் புகழைப் பாடிக்கொண்டு பெண்கள் ஊஞ்சலாடுவதாகப் பாடப்பெற்றுள்ளது. இறைவனையும் இறைவியையும் ஊஞ்சலில் எழுந்தருளுவித்து அவர்கள் புகழைப் பாடிக்கொண்டு தோழியர் ஊஞ்சலை ஆட்டுவதாக அமைந்த ஊஞ்சற் பாடல்களுமுள. இப் பகுதி, ஒரு அமைந்த அசைவுடன் ஊஞ்சல் ஆட்டம் போன்ற உணர்ச்சியையும் இன்பத்தையும் தருகின்றது. தனக்கு இறைவன் செய்த பல நன்மைகளையும் அமைதியாக சிந்திக்கும் அடிகளுக்கு, தான் செய்யும் கைம்மாருனது, தன்னைத் திருநீறு பூசி (3ஆவது செய்யுள்), குற்றங்கள் நீக்கி அடியாருடன் கூட்டிக்குலாவி (6ஆவது செய்யுள்), உய்யக்கொண்ட (5ஆவது செய்யுள்), ஆரஅமுதின் அருளை (1ஆவது செய்யுள்), தேன் தங்கும் திருவடிகளை (2ஆவது செய்யுள்), தூய புகழை (4ஆவது செய்யுள்) வாயாரப்பாடி, அகம் குழைந்து ஆடுவதே (8ஆவது செய்யுள் எனப்பாடி, அம்சொலாள் தன்னோடும் (4ஆவது செய்யுள்) குண்டலங்கள் காதில் பொலிந்து ஆட அவன் கண்முன் நின்ற காட்சியில் ஆழ்ந்து ஆனந்த முறுகின்றார். 'அன்னத்தின்மேல் ஏறி ஆடும் அணிமயில்' என்பது பல்வகையாலும் சிந்தனைக்குரியது. 'மலர் அடிகள், தேன் தங்கித் தித்தித்து அமுதூறித் தான் தெளிந்து, அங்கு ஊன் தங்கி நின்று உருக்கும் தன்மை, அன்புடன் பயில்வோர் எவரையும் உருக்கும் என்பது உண்மை, மொழிக்கு மொழி தேன் ஒழுகுகின்றது,

17. அன்னைப் பத்து : இது, பத்து கலிவிருத்தம் கொண்டது. தான் பெற்ற சிவஞானப் பேரின்பத்தைத் ஏனையோரும் பெற வேண்டும் என்னும் ஆசையால், பல திறத்து மக்களும் உணருமாறு பல முறைகளிற் பேசி வந்த வாதவூரர், இங்கு, ஒரு சிறு பெண், தன் தாயிடம் பேசுகின்ற முறையில், எளிமையாகவும் கள்ளமற்ற மொழியாலும் விழியாலும் பேசுகிருர். " ஒரு சிறு பெண், காட்சிக்கு எளியனாய் தன் கண்முன் நின்ற நாதனது திருமேனிப் பொலிவையும் பெருமித இன்சொல்லையும், நாட்டையும், ஊரையும், ஊர்தியையும், செயல்களையும் கூறி, 'தாயே, அவர் திருவேடம் கண்டு என் உள்ளம் வாடுகிறதே; எத்துணைப் பெரியார் இவர்; என்ன வியம்பு! என் உள்ளத்தில் நிலைபேருகத் தங்கி விட்டாரே! எங்கெங்கோ அலைந்து கொண்டிருந்த என் உள்ளமும் அவருக்கு அடிமையாகி ஒரு வழியாக நின்று விட்டதே!' என ஆனந்தமாகப் பேசிக்கொண்டே வருகிறவள், உடனே திகைக்கின்ருள்; அம்மம்மா! ஐயோ! அவர் போய் விட்டாரே! என் உள்ளம் உடைந்து விட்டதே! 'எனக் கதறிப் பிச்சியாகி விடுகின்ருள்' என்பதே இப்பகுதியின் பொருள். இப்பகுதியில், சில எளிய சொற்கள் ஓசையமைப்பின் திறனால், ஒரு கள்ளமற்ற பெண்ணின் தூய அன்பையும், குழந்தை உள்ளத்தையும், நையும் மனத்தையும், இயற்கைக் கனிவையும், ஓடும் மனம் ஒடுங்கும் மாண்பையும், இனிமையாகவும், எடுப்பாகவும் தெரிவிப்பது பல்காலும் பயின்று நலனுறத்தக்கது.

18. குயில் பத்து : இது பத்து அறுசீர் ஆசிரிய விருத்தம் கொண்டது. குயிலை அழைத்து, இறைவன் புகழை எடுத்து ஓதி, அவன் வந்தருளும்படி கூவுவாயாக எனக் கேட்பதாக அமைந்துள்ளது. அடிகள் எல்லா உயிர்களிடத்தும் பரந்த அன்புள்ளவர்; குயிலை எவ்வளவு இனிமையாக அழைக்கின்ருர் என்பதைப் பார்ப்போமானல் பறவைகளிடம் அவருக்கு இருந்த அன்பையும் இயற்கைக் காட்சிகளைக் கூர்ந்துணர்ந்து மகிழ்ந்த பாவலர் பண்பும் தெரிந்து கொள்ளலாம். 'இனிமையாகப் பாடவல்ல அழகிய நீல நிறமுள்ள சிறு குயிலே' என்னும் கருத்தைச் சிறுகச் சிறுகப் பலவிடங்களிலும் பரவ வைத்து அழைப்பது மிகவும் இனிமையாக இருக்கிறது; மேலும், 'தேனினும் இனிய பழங்கள் நெருங்கிய சோலையில் வாழும் குயிலே' என்றும்,

'பூங்கொத்துக்கள் நிறைந்த மரச்செறிவான சோலையில், மரக்கிளைகளில் வாழும் குயிலே' என்றும் அழைக்கும்போது, அழகிய அடர்ந்த கனி நிறைந்த, மலர் நிறைந்த, சோலைகளை நம் கண்முன் கொண்டு வந்து கனிவிக்கின்றார். உள்ளத்தின் உவகை பொங்க, இறைவன் பெருமையையும், அடைந்தோர்க்கு இன்பம் அளிக்கும் பண்பையும், தன்னையும் ஒரு பொருளாக எண்ணி மண்ணுலகில் எழுந்தருளிப் பல்வகையாகக் காட்சி கொடுத்து ஆட்கொண்ட பேரருளையும் பன்முறையும் பாடி மகிழ்கின்றார். சிவபெருமான் எழுந்தருளிய திருப்பதியையும், அவன் ஊர்ந்துவந்த பரிமாவையும், அவன் திருமேனிப் பொலிவையும், ஓவியம் வரைந்தாற்போல் நம் முன் காட்டுகின்றார். பொருள் ஆழமும், சொல் இனிமையும், இரண்டும் சேர்ந்துள்ள தொடர் அழகும், ஒவ்வொரு செய்யுளிலும் மிளிர்கின்றது. குயிலிடம் பேசும்போது வரும் சொற்கள், இனிமை, பெருமிதம், கனிவு எல்லாம் கலந்துள்ளன. 'உன்னை உகப்பன்; குயிலே! உன் துணைத் தோழியும் ஆவன்', 'வா, இங்கே, நீ, குயில் பிள்ளாய்!' என்பன போன்ற தொடர்களின் எளிமை எவ்வளவு இனிமையாய் உள்ளத்தில் பதிகின்றது. இறைவன் புகழை சில சிறு சொற்களால் பேசும்போது நம் உள்ளத்தில் வெள்ளம் வெள்ளமாகத் தெய்வீக நினைவுகள் தோன்றுகின்றன. 'இன்பம் தருவன்; குயிலே! (இவன்) ஏழ் உலகும் முழுது ஆளி'; 'சிறு குயிலே! இது கேள் நீ, (இவன்) வான் பழித்து, இம் மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்' எவ்வளவு எளிமை! இந்த எளிமை தான் தெய்வ இனிமை.

19. திருத்தசாங்கம்: இது பத்து வெண்பாக்களில் சிவபெருமானுக்கு உரிய பத்து அடையாளச் சிறப்புக்களை எடுத்து ஓதுகின்றது; தலைவியின் வினாவிற்குக் கிளி விடை கூறுவது போலவோ, தலைவி கிளிக்கு வினாவிடை முகமாக அறிவுறுத்துவது போலவோ கொள்ளும்படி அமைந்துள்ளது. முன் பதிகத்தில் குயிலை எவ்வளவு அழகாகப் பாராட்டியிருக்கிறதோ அவ்வளவு அழகாய் இங்கு கிளி பாராட்டப்பெற்றுள்ளது. அரசர்க்குரிய சிறப்புக்களைத் தெய்வத்திற்கும் செய்வது என்ற ஒரு வழிபாட்டு மரபு உலகில் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு காலத்தில் பரவி இருந்தது. அந்த வழிபாட்டு மரபை 'தேவராஜ' மரபு என வழங்குவர். அம்மரபோடு ஒத்தது தசாங்கம் பாடுதல்.

அடிகள் தேவர்கோனைத் தன்னை வந்து ஆண்ட சிவபெருமானுக்குக் கூறும் தசாங்கம் தெய்வீகச் சிறப்பு உடையது என்பதை அவர் கூறும் உறுப்புக்களால் தெரியலாம். முன்னரும், கீர்த்தித் திருவகவல் 104 முதல் இருபது அடிகளில் தசாங்கம் கூறப்பெற்றுள்ளது.

20. திருப்பள்ளி எழுச்சி: இது, பத்து எண்சீர் விருத்தம் கொண்டது. அரசர்களைத் துயில் எழுப்புவதாகப் பாடும் துயிலெடைநிலை போன்று தெய்வத்திற்கு பாடுவது; முன் பதிகம் போல இதுவும் தேவராஜ வழிபாட்டு மரபை ஒட்டியதேயாகும். அடியவர்க்கு அருளும்வண்ணம் துயில் எழுந்தருளவேண்டும் எனச் சிவபெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்ளுவதே இப்பகுதியின் நோக்கம். வானம் வறிதாகும்படி மண்ணகத்தில் எழுந்தருளித் தன் அடியார்களை வாழவைக்கின்றான் என்ற கருத்தை இங்கு வற்புறுத்துகின்றார். மூவரும் அறிகிலா இறைவனும் இறைவியும் தன் அடியார் பழங்குடில் தோறும் எழுந்தருளியுள்ளார் என்ற கருத்துப் பலவகையாலும் ஆழ்ந்து சிந்தித்து, இக்கருத்தையே வேறுவேறு வெளியிட்ட உலகஞானிகளது சொற்களொடு ஒப்பிட்டு மகிழத்தக்கது. காலைப்பொழுதின் இயற்கைக் காட்சியும், திருக்கோயிலிலும் அடியவர் இல்லங்களிலும் எழுந்தருளிச் செய்துள்ள இறைவன் திருமுன் நிகழும் வழிபாட்டு முறைகளும், இப்பகுதியில் நம் கண்முன் வந்து மகிழ்விக்கின்றன. 'போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!' எனத் தொடங்கும்போதே தெய்வப் பெருமிதத்துடன் தொடங்குகின்றது. சிவபெருமானைப் போற்றி அழைக்கும் சொற்கள், சொற்றொடர்களின் கவி இன்பமும், ஞான ஆனந்தமும் அளவிடக்கூடியவை அல்ல. "அருள் நிதி தரவரும் ஆனந்த மலையே;" "யாவரும் அறிவு அறியாய் எமக்கு எளியாய்;" "சித்தனைக்கும் அரியாய்;" "என் அகத்தாய்;" "கண்ணகத்தே நின்று களிதரு தேனே" என்பன சில. வாதவூரடிகள் சித்தமே சிவமாகலின், சிவத்தைத் துயில் எழுப்புவது என்பது சித்தத்தைத் துயிலெழுப்புவதையே உட்கிடையாகக் கொண்டதென்றே தெளியலாம். ஏன் எழுப்புகின்றார்? "எது எமைப் பணி கொளும் ஆறு?" எனத் தெரிய; தெரிந்தால்? "அது கேட்போம்" கேட்போம்! சிந்திப்போம்! சொல்லுவோம்! செய்வோம்! சிலகாலத்துக்கு முன்வரை, திருப்பள்ளி

எழுச்சியில் ஒன்றிரண்டு செய்யுளேனும், ஒவ்வொரு நாளும் திருக்கோயில்களிலும், சைவ நன்மக்கள் இல்லங்களிலும் பாடப்பெற்று வந்தன. இப்போது மார்கழித் திங்களி லேனும் தமிழ்நாடெங்கும் கேட்கப் பெறுவது மகிழத்தக்கதே.

21. கோயில் மூத்த திருப்பதிகம்: இது, அறுசீர் ஆசிரிய விருத்தம் பத்துக்கொண்டு அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. மூத்த என்ற சொல் முது என்னும் பகுதியடியாகப் பிறந்து, 'முதிய, முன்னைய, ஞானம் பொதிந்த, பிரணவம் அமைந்த, என்ற கருத்துப்பொருள் களைத் தருவதாகக் கொண்டு பதிகத்தொடு இணைத்து. ஞானப்பொருள் கூறும் பதிகம் எனக் கொள்ளலாம். இரண்டு பதிகங்களுள் முன்னையது என்றும், முதற் பொருளைக் கூறுவது என்றும், பொருள் கொள்வதும் உண்டு. இப்பதிகத்தின் முதற் செய்யுளுள், சத்தி சிவத்துள் ஒடுங்கிய அகநிலையும், சிவம் சக்தியுள் ஒடுங்கிய புறநிலையும், சத்தியும் சிவமும் தன்னுள் அடங்கியுள்ளதாகப் பேசும் அருள்நிலையும், தான் அடியார் நடுவுள் இருக்க விரும்பும் அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டு நிலையும், மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இது திருவாசகத்தின் உயிர்நாடியெனச் சமயத்தத்துவக் கண்கொண்டு பார்க்கும் ஆன்றோர் கருதியுள்ளார். இருபுடையும் சிவசத்திகளின் மறைஎழுத்து நிற்க, நடுவண் ஆன்மாவின் எழுத்து நிற்கும் 'சிவயசிவ' என்னும் திருவைந்தெழுத்து, 'இருதலை மாணிக்கம்' எனப் போற்றப்பெறும். இறைவன் திருவரு ளுக்குத் தக்கவாறு தான் நடந்துகொள்ளவில்லையென்று தன்னை, திருவருளுக்கு அயலாக இறைவன் நிறுத்தி விட்டாரோ என மிகக் கனிவுடன் அடிகள் வருந்துகின்றார். பொன்னம்பலத்தான் இன்அருள் இல்லையேல் தானும் இல்லை என்ற முடிவுக்கு வந்துப் பலவாறு அவன் அருளை வேண்டுகின்றார். 'அழும் அதுவே அன்றி மற்று என் செய்கேன் ?' (4ஆவது செய்யுள்), 'எந்தாய் ! இனித்தான் இரங்காயே' (6ஆவது செய்யுள்), 'உன்முகம்-தான் தாரா விடின் முடிவேன்' (3ஆவது செய்யுள்), என்று பலவாறு கனிந்து உருகுகின்றார்; மிகவும் அஞ்சி, 'ஆள்வார் இல்லாத மாடுபோல் புறக்கணிக்கப் படுவேனோ' (7ஆவது செய்யுள்) என வருந்துவது எவர் உள்ளத்தையும் வருத்தும். கரைசேர்ந்த அடியார் நிலையையும் தன் நிலையையும் பேசும்

(5ஆவது) செய்யுளும், அடியார்களது ஆனந்த மேலீட்டுச் செய்கைகளைக் கூறும் (9ஆவது) செய்யுளும், என்னை 'வா' என்று அருளாயே! என வருந்தும் (7, 8ஆவது) செய்யுள் களும் படிப்பவர் உள்ளத்தை ஊசலாட்டுவனவாகும். முடிவாக, 'நாம் அவனை விடாவிடின் நம்மை அவன் விடமாட்டான்' என்று, தன் ஒசிந்துவிழும் உயிர்நிலையைக் கூறும் 10ஆவது செய்யுள் பல்கால் படித்துப் பயன் பெறத்தக்கது.

22. **கோயில் திருப்பதிகம்:** எழுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்ட இப்பதிகம் சைவர்கள் சிறப்பாக நாள் தோறும் வழிபாட்டில் பயின்று வருவது. "வஞ்சப்புலன் களின் வழி தூர்ந்தன, தெளிந்த தேன் என இனிக்கும் அமுதமயமான ஓர் பேர்ஒளி உள்ளே எழுந்தது (1ஆவது செய்யுள்), பொய் இருள் மறைந்து (3ஆவது செய்யுள்), மறையின் பொருள் எல்லாம் உள்ளே ஊன்றி நின்றன (5ஆவது செய்யுள்); ஐம்பெரும்பூதமாய்க் கரந்த ஓர் உரு (6ஆவது செய்யுள்) கோதிலா அமுதாய் குறைவிலா நிறைவாய் (5ஆவது செய்யுள்) கரை உடைத்த வெள்ளமாய் என் உள் புகுந்து (6ஆவது செய்யுள்) என் கண்களிக்கக் காட்சி கொடுத்தது (6ஆவது செய்யுள்) என வியந்து மகிழ் கின்றார் அந்த ஆனந்த ஒளியை (8ஆவது செய்யுள்)ப் பலவாறு போற்றுகின்றார். 7ஆவது செய்யுளில் நினைப்பற நினைந்த நினைவின் காட்சிகளை விளக்கி, இறுதிச் செய்யுளில் (10ஆவது செய்யுள்) இறைவனும் தானும் செய்துகொண்ட ஒரு பண்டமாற்றை வெளியிட்டு, இருவரில் எவர் சதுரர் என வினவுகின்றார். இப்பதிகத்தில், தன் தெய்வம் 'அன்பு' என்பதை அழகாக விளக்கி, அன்பைப் பெருக்கி ஆருயிரை ஆண்டுகொண்ட இன்பப் பெருக்கில் திளைக்கின்றார்.

23. **செத்திலாப் பத்து:** எண்சீர் ஆசிரியவிருத்தம் பத்து கொண்டது. ஞானச் செல்வர்களுக்கு உலகில் உள்ளவரை இருளும் ஒளியும் மாறி மாறி தோன்றுவது இயல்பே. அடிகள் இறைவனைப் பிரிந்து பலவாறு வருந்து கின்றார். அருள்பெற்ற நிலையில் களித்துக் தலையினால் நடந்தேன் (3ஆவது செய்யுள்), இப்போது களிப்பெல்லாம் கலக்கமாய் முடிந்தது (10ஆவது செய்யுள்), செய்வகை அறியேன் (1ஆவது செய்யுள்), நெருங்கியிருந்த நான் மிகத்.

தொலேவிலிருந்து அலருகின்றேன் (7ஆவது செய்யுள்) யாது செய்வது? (8-வது செய்யுள்) என் செய்கேன்? 'இது செய்க' என அருளாய் (6ஆவது செய்யுள்) அடியனேன் இடர்ப்படுவதும் அழகோ? (8ஆவது செய்யுள்) எனப் பலவாறு முறையிடுகின்றார். 'உனேப் பிரிந்து இறவாமல் இருக்கின்றேன்; இனி இவ் உடலேப் பொறுக்க மாட்டேன் (6ஆவது செய்யுள்) ஆட்கொண்ட பேரருளே மறந்து இன்னும் திரிகின்றேனே! (2ஆவது செய்யுள்), நீ, காலன் உயிரையும்கொண்ட பூங்கழலோனல்லவா? (9ஆவது செய்யுள்) என்னேச் செத்திடப் பணித்து (3ஆவது செய்யுள்) உன் மலரடிக்கே வர அருளாயோ?' எனப் புலம்புகின்றார். "என்னே ஓர் வார்த்தையுட் படுத்துப் பற்றிஞய்; பதையேன் மனம் மிக உருகேன்" (2ஆவது செய்யுள்) என்பது போல்வன பழநிலேயையும் இப்போதைய நிலேயையும் எண்ணி உள்ளம் உடைவதைத் தெரிவிப்பன. இப்பதிகம் உயிர் தாங்கியுள்ளமைக்கு வருந்துகின்றமையால், இப்பெயர் பெற்றது.

24. அடைக்கலப் பத்து: கலவைப்பாட்டு பத்து கொண்டது. தன் செயல் ஒன்றும் இல்லே என்பதை உணர்ந்து இறைவன் திருவடிகளில் அடைக்கலம் புகுதல். அடியாரெல்லாம் இன்புற்றிருக்கவும் தான் இடர்ப்படுவதை எண்ணி வருந்தியும் (1, 4, 9ஆவது செய்யுள்கள்), தான் சிற்றின்பங்களிற் பட்டு உழல்வதை எண்ணி இரங்கியும் (5, 6ஆவது செய்யுள்கள்), ஒரு நெறியும் அறியாமலும் (9ஆவது செய்யுள்) ஞானம் இல்லாமல் மாசுமறைத்த மனத்தோடு (1ஆவது செய்யுள்) பா இடை ஆடு குழல்போல் பின்னிப் பின்னி அலேயும் தன்னே, அவன் திருவடியிற் கூட்டிஞலும் சரி, இன்றி நரகில் தள்ளிஞலும் சரி (8ஆவது செய்யுள்) அவனே தனக்குப் புகல்இடம் என நைந்து சரண் அடைகின்றார். இறுதிச் செய்யுள் அடிகள் நிலேயைத் தெளிவாக விளக்குவது; அவருடைய ஞானவாழ்க்கையின் சுருக்கவரலாறுபோல் அமைந்துள்ளது.

25. ஆசைப் பத்து: இது, அறுசீர் ஆசிரியவிருத்தம் பத்துக்கொண்டது. இப்பதிகத்தில், இறைவனேக் காண வேண்டும் என்ற அடிகளது ஆசை, பொங்கிஎழுந்து அலே வீசுகின்றது; உலக இயற்கைக்கு மேம்பட்ட ஒரு திருவுள்ளத்திலிருந்து எழுந்த பேர் அலேகள், நம்மீதும் திவலேகள் வீசி.

வெளியிட முடியாத ஓர் இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்றன். பொன், புகழ், கல்வி, பதவி முதலியவற்ருல் வரும் பெருமிதத்தையும், உள்ளத்தாலும், உடலாலும் பெறும் இன்பங்களையும், நன்கு துய்த்த அடிகளுக்கு, ஞானதேசிகனது அருள்கநாக்கால் அவையனைத்தும் வெறுக்கத்தக்க பொய்ப் பொருள் என்றும், திருவருள் ஒன்றே மெய்ப்பொருள் என்றும் புலனாகிவிட்டது. இப்பதிகச் செய்யுள்கள், இறைவனைக் காணத் தடையாகவுள்ள இந்த உடலில் அடிகளுக்குள்ள வெறுப்பையும் இறைவனைக்காண எழுந்த ஆராத காதலையும், ஓர் உயர்ந்த நிலையிலிருந்து தெரிவிக்கின்றன. உலக வாழ்வில் இருந்தபோதும் அடிகள் பற்றற்றே இருந்தார் என்பதை, ''புளியம் பழம் ஒத்து இருந்தேன்'' என்னும் தொடர் காட்டுகின்றது. இப்பதிகத்தைத் தொகுத்துச் சுருக்கி, ''குருமணியே! சிவனே! சோத்தம்! இனி இங்கு இருக்ககில்லேன்; உன் ஒளி நோக்கி, உன் சேவடிகளைக் கையால் தொழுது தலைமேல் வைத்து, பேர் ஆயிரமும் பரவி, அழல்சேர் மெழுகு ஒப்ப நின்றிடுவான் ஆசைப்பட்டேன்; உன் முக ஒளி நோக்கி முறுவல் நகை காண ஆசைப்பட்டேன்; உன் பழ அடியார் கூட்டம் காண ஆசைப்பட்டேன்; வார உலகம் தந்து ஆட்கொள்வானே! வாராய், நான் ஓர் துணை காணேன்; அஞ்சேல் என்னாய்; இருளைத் துரந்து 'இங்கே வா' என்று அங்கே கூவும் அருளைப் பெறுவான் ஆசைப்பட்டேன்,'' எனக் கூறலாம். ஆருவது செய்யுளும் எட்டாவதுசெய்யுளும் நமக்கு எட்ட வியலாத ஒரு திருவுள்ள நிகழ்ச்சியைக் காட்டுகின்றன.

26. அதிசயப் பத்து: அறுசீர் ஆசிரியவிருத்தம் பத்துக் கொண்டது. இப்பதிகத்தில், தாழ்ந்த வழிகளிலேயே சென்றுகொண்டிருந்த தன்னை உயர்ந்த நெறியில் கொணர்ந்து வாழ்வித்த திருவருளை வியந்து பேசுகிருர். நீதி நெறியிலும் தெய்வ நெறியிலும் செல்லாமலும் செல்பவர்களுடன் கூடாமலும் மண்ணிலே பிறந்து இறந்து நரகிலே விழுவதற்கு ஒருப்பட்டு நிற்கும் என்னை, பொய்ந்நெறி நீக்கி மெய்ந்நெறி அருளி என் அப்பனும் அன்னையுமாகிய அத்தன் ஆண்டு அடியவர்களோடு கூட்டிய அதிசயம் எத்தகையது?'' என அடிகள் வியந்து கூறுகின்ருர். 7வது செய்யுளில் பொத்தை ஊன் சுவர் பொய்க்கூரையைக் கூறும் சொற்களும் அடியரில் கூட்டிய அத்தனைப் பாராட்டும் சொற்களும்,

ஒரு பகுதிக்கு ஒரு பகுதி மாறுகநின்று செய்யுளை இனிமைப் படுத்துவதோடு கருத்தையும் வலியுறச்செய்கின்றன.

இப்பதிகத்துள் 9-வது செய்யுளின் "உற்ற ஆக்கையின் உறுபொருள் நறுமலர் எழுதரு நாற்றம்போல், பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் பரம்பொருள்' என்னும் பகுதி, தத்துவ நுண்மையும் தமிழ் இனிமையும் செறிந்து இறை இலக்கணம் வகுக்கும் சூத்திரம் போல் ஒளிர்கின்றது. இதனைத் திருவாசகத்துள் ஒருவாசகம் எனப் போற்றலாம். நச்சினார்க்கினியர் "கந்தழியாவது ஒரு பற்றுமற்று அரு வாய்த்தானே நிற்கும் தத்துவங் கடந்த பொருள்; .... இதனை, 'உற்றவாக்கையின் .... பரம்பொருள்' என அதனை உணர்ந்தோர் கூறியவாற்றானுணர்க" எனக் கூறுவது இங்கு நினைக்கத்தக்கது.

இப்பதிகத்தின் எட்டாவது செய்யுள் சைவ சித்தாந்தத்தின் அடிப்படை உண்மையின் நுண்மையைச் சுருக்கமாகத் தெளிவிக்கின்றது. இறை, உயிர், கட்டு, என்னும் முடிவில்லா முப்பொருள்களில், உயிரை, இறை கட்டுக்குள், ஆக்கியதும், பின்னர், கட்டவிழ்த்து வீடளித்ததும் இச்செய்யுளில் செறிவுபடப் பொதிந்துள்ளது.

'தன்னொடு நிலாவகை', 'நுண்ணிய நொாடியன', 'நுகம் இன்றி விளாக்கைத்து', 'சோதி ஆக்கி', என்ற தொடர்களிலுள்ள தத்துவக் கருத்துக்கள் யாவும் விளங்க வேண்டுமானால், ஒரு உமாபதிசிவமோ, ஒரு தாயுமானச் செல்வமோ, அல்லது ஒரு சிவஞானமுனிவரோ வேண்டும். ஷேக்ஸ்பியர், கதே முதலிய மேல் நாட்டுக் கவிஞர்களோ, காளிதாசன், வேதாந்த தேசிகர் போன்ற நம் நாட்டுப் பெருமான்களோ இச்செய்யுளைப் பார்த்திருக்கக்கூடுமானால், இதன் அடிப்படையில் உலகம் போற்றும் சில நாடகங்கள் எழுதியிருப்பார்கள்.

27. புணர்ச்சிப் பத்து: ஆசிரிய விருத்தங்கள் பத்து கொண்டது; இந்த ஆசிரிய விருத்தங்களின் யாப்பு அமைதி ஒரு படித்தாகவில்லை; அடிக்கு ஆறு முதல் எட்டு சீர்வரை இருக்கின்றன. ஆன்மா கலந்து ஆனந்திக்கக்கூடிய எல்லையும் முடிவும் அற்ற ஒரு மேலான தத்துவத்தை உணர்ந்து, அதனோடு ஒன்றியிருக்க வேண்டும் என்பதே ஞானிகளுடைய குறிக்கோளாகும். இப்பதிகத்துள், அடிகள்

எளிய மொழியில் தன் உள்ளத்தை உள்ளபடியே நமக்குத் திறந்து காட்டுகின்றார். இறைவனைக் குறிக்கும் சொற்கள் உள்ளத்தின் ஆழத்திலிருந்து அடிகளுடைய அநுபவங்களை எல்லாம் திரட்டிக்கொண்டு அமுதமயமாய் வெளிவரு கின்றன என்பதை, 'கருணாலயன்' 'சொல்லும் பொருளும் இறந்த சுடர்' (4ஆவது செய்யுள்), 'அமுதின் சுவை' (4ஆவது செய்யுள்), 'பிறவிப் பிணிக்கு மருந்து' (9ஆவது செய்யுள்), என்னும் தொடர்கள் தெரிவிக்கின்றன. இறை வனை நெருங்கி, நெக்கு நெக்கு உள் உருகி உருகி, நின்றும் இருந்தும், கிடந்தும், எழுந்தும், நக்கும், அழுதும், தொழு தும், வாழ்த்தியும், பலவகையாகக் கூத்து ஆடியும் அவன் செவ்வானம் போன்ற திருமேனியைத் திகழ நோக்குவது என்று? (8ஆவது செய்யுள்) என நைகின்றார். அடிகளுடைய ஆற்றாமையாலும் உள்ளத்தின் விரைவாலும் சொற்கள் மலையிலிருந்து விழும் தேன் அருவிபோல் ஓடுகின்றன. 'திருவடி மலரை அணைவது என்று?' (8, 10 செய்யுட்கள்) மணம் நிறைந்த மலர்கள் தூவிக்கட்டிக் கொள்வது என்று?' (3ஆவது செய்யுள்) ஊற்று மணல்போல் உள்ளே உருகி ஓலம் இட்டுப் போற்றுவது என்று?' என்னும் வேட்கையின் விரைவையும் மாசற்ற மாண்பையும் எண்ண எண்ண எவர் உள்ளந்தான் உருகாது?

28. வாழாப் பத்து: இது எழுசீர் விருத்தம் பத்து கொண்டது. 'உலகினில் வாழ்கிலேன்' என்ற தன் முடிவை ஒவ்வொரு செய்யுளிலும் வற்புறுத்திக் கூறுதலால் வாழாப்பத்து எனப்பெயர் பெற்றது. இறைவனோடு கலந்து அருளமுதப் பெருங்கடலில் திளைப்பதற்கு உடலோடு கூடிய வாழ்க்கை இடையூறாகவுள்ளது என்ற தோற்றம் மிகுந்தமையால், நில உலக வாழ்விற்கு ஒரு முடிவு வேண்டுகின்றார். திருவருளுக்குப் புறம்பாகவுள்ள நொடிப்பொழுதும் அவர் உள்ளத்தை வருத்துவதாயிற்று; தானே தன்னைத் தூற்றிக்கொள்கின்றார். தன்னை, இறைவன் அளித்த அருளினை மருளினால் மறந்த வஞ்சனேன் (6ஆவது செய்யுள்) என நொந்து கொள்கின்றார்; அஞ்சுகின்றார். கருணையிற் கசிந்து கலந்து வாழத் தெரியாத கடையனேன்; இங்கு வாழ்கிலேன் (7ஆவது செய்யுள்) எனத் துயரொடு முறையிடுகின்றார். சின்னஞ் சிறு குழந்தைகள்போல் "நீ அருளவில்லை என்றால் யாரை நொந்துகொள்வேன்; என்

குறையை யாரிடம் சொல்வேன்' எனத் தேம்புகின்றார். மற்றொரு சமயம், தலைவி தலைவனிடம் கூறுவதுபோல் "ஊடுவதும் உவப்பதும் உன்னோடுதான்; வாடினேன்; எனக்கு உறுதி உணர்த்துவது உன் கடன்" என்று உரிமையுடன் பேசுகிறார். பின்னர், ஆண்டான் அடிமை முறையில், தன் மாறாத உறுதியை "அரசே, தொழுவனோ பிறரை? துதிப்பனோ? எனக்கு ஓர் துணை என நினைவனோ? என்னை நன்கறிந்த தேவரீரே திருவாய் மலர்க" எனத் தெரிவிக்கின்றார். 'மற்று நான் பற்றிலேன்' என்பதும் 'பற்று நான் மற்றிலேன்' என்பதும் அவருடைய உறுதியை இரண்டு கோணங்களிலிருந்து கவி இன்பத்தோடு வற்புறுத்துகின்றன. 5ஆவது செய்யுளில் இறுதி இரண்டு அடிகள் உளநூல் நிலையில் ஆழ்ந்து சிந்தித்துப் பயன்பெறத்தக்கன. இப்பகுதி, மக்கள் யாக்கையிற் புக்கு இருப்பினும் ஆன்மா ஆண்டவனிடம் கொண்டுள்ள மாறாத அன்பையும், அந்த அன்பில் சாயைகாட்டும் தெய்வஞானச் சுடரின் ஒளியையும் எல்லோரும் உணரக் காட்டுகின்றது.

29. அருட் பத்து: எழுசீர் ஆசிரியவிருத்தம் பத்து கொண்டது. திருப்பெருந்துறையில் ஞானதேசிகனாக எழுந்தருளிய சிவபெருமானைத் தன் முறையீட்டுக்குத் திருச்செவி சாய்த்து, 'ஏன்' என்று கேட்டருளவேண்டும் என, விண்ணப்பித்துக்கொள்வதே இப்பதிகத்தின் நோக்கம். "அருட்செல்வமும், பொருட்செல்வமும், மறைபயிலும் மாண்பும் அமைந்து, செழுமையான பொழில்களும் திருந்திய பொய்கைகளும் சூழ்ந்த, திருப்பெருந்துறையில், மலர்கள் நிறைந்த குருந்தமரத்து நிழலில் எழுந்தருளி எளியேனை ஆட்கொண்ட, உள்குவார் மனத்தின் உறுசுவை அளிக்கும் அமுதே, பத்தியாய் நினைத்துப் பரவுவார் தமக்குப் பரகதி கொடுத்து அருள் செய்யும் சித்தனே, ஓலமிட்டு அலறி உலகெலாம் தேடியும் காணேன்; என் அப்பனும் அத்தனும் எனக்கு ஆதியும் நீதியும் ஆகிய தேவரீரைப் பண்டைப் பரிசனைத்தும் உள்ளத்து எண்ணி உருகி அடியேன் அழைத்தால், 'பிறவிக் கடலிலிருந்து இங்கு பொருந்தும்படி வா, இதுதான் கயிலைக்கு வழி, இவ்வழிச் செல்' எனத் திருவருள் செய்யாயோ?" என்பதே இப்பகுதியின் திரண்ட கருத்து.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்: எழுசீர் ஆசிரிய விருத்தம் ஏழு கொண்டது. திருக்கழுக்குன்றத்தில், சிவபெருமான் காட்சிகொடுத்தபோது அருளியது. இப் பகுதி, பெரிதும் அடிகளது ஞானவாழ்வின் நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகின்றது. திருப்பெருந்துறையில் தான் பெற்ற சிவஞானச் செல்வத்தை இடைஇடையே நேர்ந்த பல அல்லல்களிலும் கைவிடாது தொடர்ந்து, அடியார் கூட்ட மும் ஆண்டவன் காட்சியும் பெறவேண்டும் என்ற பேர் ஆவலால் அலைந்து, அவன் திருவடிகளை எழுந்தருளிச் செய்வதற்குத் தன் உள்ளம் தக்கதோ எனக் கலங்கிநின்று, அழிவற்ற, தீமையற்ற, ஒப்பற்ற திருவடியே, புகலாகப் புகுந்தபின், இறைவன், அடியார் முன்னே, தான் சிறப்புறு மாறு காட்சி கொடுத்தான் என்பது இப்பகுதியின் சுருக்கம். 'உணக்கிலாதது ஓர் வித்து', 'வினை ஒத்தல்', 'மலம் கெடுத்த பெருந்துறை', 'நான் உனை நச்சி நச்சிட வந்திடுங் காலம்', 'மும்மலப் பழ வல்வினை' என்ற சொற்றொடர்கள், சைவசித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்துக்களைக் குறிக்கும் மரபை ஒட்டியவை. பெருந்துறைப் பெருமானைப் பற்றிப் பேசும் சொற்கள், அடிப்படை தத்துவக் கருத்துக்களையும், அடிகளார் ஞான அநுபவங்களையும், குறிப்பாகக் காட்டு கின்றன. இப்பகுதி, ஆன்மாவின் இடைவிடா இறை அன்பையும், அதற்கு இரங்கும் ஆண்டவனது பேர் அருளை யும், அடிகள் காலத்தில் சைவசித்தாந்தம் பெற்றிருந்த நிலையையும், அடியவர் கூட்டுறவின் மாண்பையும் தெரிவிக் கின்றது.

31. கண்ட பத்து: கொச்சகக் கலிப்பா பத்து கொண்டது. இப்பதிகம், ஞானதேசிகன் கட்டளைப்படி தில்லையைக் கண்டவுடனே அடிகளது உள்ளத்துக் கிளர்ந்து எழுந்த பேரானந்தத்தைத் தெரிவிக்கின்றது. இங்கு, ஆனந்தக்கிளர்ச்சிக்கேற்ற ஓசையுடன் பாடல்கள் துள்ளிக் குதித்து ஓடுகின்றன. ஆனந்த மேலீட்டிலும் செய்யுள் வரையறையோடு செல்வதைப் பார்த்தால், பாட்டிற்குரிய எல்லா இலக்கணங்களும் பொருந்திய பகுதி இது என்பதை யும், பாட்டின் பயனை நாம் அறியாமலே நமக்கு ஊட்டு கின்றது என்பதையும் உணரலாம். மேல்நிலத்து வீசும் மெல்லிய பூங்காற்றில் தெய்வமணம் கலந்துள்ளதுபோல் ஒளிர்கின்றது. பூங்காற்றைக் கண்ணால் காணுமலே இன்பம்

அடைகின்றதுபோல் இப்பாடல்களையும் பொருளுள் புகு முன்னரே உணர்ந்து இன்புறுகிறோம். இத்தகைய செய்யுள்கள் எல்லா வழியாலும் 'அரிய' என்னும் சிறப்புக்கு உரியன.

இப்பதிகத்துள், மூன்றாவது, பத்தாவது பாக்கள் தவிர, எல்லாப் பாக்களிலும் ஒரு படித்தாக, அடிகள், முதலில் திருவருளுக்கு இலக்காகுமுன்னிருந்த தன் வாழ்க்கையின் குறைபாடுகளைக் கூறுகின்றார்; பின்னர், இறைவன் தன்னை ஆட்கொண்ட பேரருளைப் பேசுகின்றார்; இறுதியாகத் தனக்குக் காட்சியளித்த தில்லையம்பலத்தைப் போற்றிப் புகழ்கின்றார்.

முதலில், சாதி, குலம், பிறப்பு என்னும் சுழியில் அகப் பட்டு, இந்திரியங்களின் இன்பத்திலேயே மயக்கமுற்று, அம்மயக்கத்தால் கொடிய நரகில் விழுவதற்கே தகுதி யுடையனாகி, இப்பிறவி ஒரு வேதனை என்பதை உணரா மலும், தான் எத்தகையோன் என்பதை நினையாமலும், இறைவனிடத்துப் பற்றில்லாமலும் நல்ல நெறிகளில் நாட்டமில்லாமலும், எண்ணங்களைப் பலவாறு விரித்துப் பாவனைகள் செய்து அப்பாவனைகளுள் அழுந்தி, மெய்யறி வும் உணர்வும் ஒருசிறிதும் இன்றிப் பொய்யை மெய்யாகக் கொள்ளும் அறிவிலே நின்று, பிணிக்கும் மூப்புக்கும் உறவாகி இறப்பதற்கே ஆளாகித் தீய இருளிலேயே, தான், நிலைகெட்டு உழல்வதாக அடிகள் வருந்துகின்றார். மேற் கூறியுள்ளன யாவும் உலகவாழ்வில் மக்களுடைய பொது இயல்பே; ஆனால், ஞானநாட்டம் பெற்றவர்களுக்கு, தவிர வேண்டிய தீச்செயல்களென்று தோன்றுவது உலகத்து ஞானியர் எல்லோரிடமும் காணக்கூடியது; எனினும், இதனை உலகம் சிந்தித்து நல்வழிப்பட எடுத்துரைத்தோர் ஒரு சிலரேயாவர்.

இரண்டாவதாக, தளர்வு அடைந்து கடைப்பட்ட நாய் போல் கிடந்த தான், ஞானவீரனாய்த் தெய்வப்பேரழகுடன் பல்லோரும் காணத் திகழும்படி, தன்னைப் பேரிருட்செறி வாகிய ஒரு தூணத்தில் கட்டியிருந்த சித்தம் என்னும் கயிற்றைக் கட்டவிழ்த்துத் தன் திருவடியில் பேராமல் திண்மையாகக் கட்டுவித்துத் தன் மாசுகளை அறவே ஒழித்து, சிந்தையைத் தெளிவடையச் செய்து, உளத்தில்

தெய்வ ஒளி ஓங்கி வளரும் வண்ணம், ஓய்வும் மாய்வும் தேய்வும் சாய்வும் அற்ற ஓர் அன்பை அளித்து, கருணையினால் ஆண்டு அளவில்லாத ஆனந்தம் அருளிய நிகழ்ச்சி, கனிந்த மொழிகளால் சொல்லப்பெறுகிறது.

மூன்றாவதாக, மேற்கண்டவாறு அருள்செய்த இடம், வேதங்களும், வானவர்களும், மறையவர்களும் ஏனைய உலகத்தவரும் நெருங்கிக் கூடி இறைஞ்சும் பேரழகு வாய்ந்ததும், வளம்மிக்க பொழில்கள் சூழ்ந்ததுமான தில்லைத் திருப்பதியிலுள்ள திருச்சிற்றம்பலம் என உரைக்கின்றார். தன்னை ஆட்கொண்டவன், உலகுடைய ஒரு முதலாகிய இணையற்ற கோது இல்லாத அமுதாகிய கருணை வள்ளல் எனப் போற்றுகின்றார்.

சிவஞானப்பேறு எவ்வாறு அடிகள் பெற்றார் என்பதையும், அது எவ்வாறு இருந்தது என்பதையும் விளக்கும் ' உருத்தெரியா ' எனத் தொடங்கும் மூன்றாவது செய்யுளும், அடிகள் தில்லையில் கண்ட பொருள் எவ்வாறு இருந்தது என்பதை நம் உள்ளம் கொண்டு உணர்ச்சி ஓங்கும் வண்ணம் மொழியும் ' பூதங்கள் ஐந்தாகி ' எனத்தொடங்கும் பத்தாவது செய்யுளும், திருவாசகக் கருத்துக்களைச் சுருக்கி விளக்கும் சுடர்மணிகளாகும்.

32. **பிரார்த்தனைப் பத்து :** அறுசீர் ஆசிரியவிருத்தம் பதினொன்று கொண்டது, அந்தாதித்தொடையில் அமைந்துள்ளது. அடிகள் நிலைத்த அருள் தனக்கு அருளுமாறு இறைவனை வேண்டிக்கொள்வதால் இப்பெயர் பெற்றது ; பிரார்த்தனை என்பது வேண்டுகோள் எனப் பொருள்படும் வடசொல். உலகத்தில், ஒருநிலை வரையில், உண்மை ஞானிகள் உள்ளத்தில் ஒளியும் இருளும் மாறிமாறித் தோன்றும்; அம்மாறுதலுக்கு இயைய இன்பமும் துன்பமும், கிளர்ச்சியும் தளர்ச்சியும், பெருமையும் சிறுமையும், மாறி மாறித் தோன்றுவதும் இயற்கையே. ஒளி மிகுவதற் கேற்பவே இருளும் மிகும். பேரொளிக்கேற்ற கார்இருள் என்பது உலகறிந்த உண்மை. இப்பதிகத்தில் மெய்யடியாரெல்லாம் பேரின்பமுறுவதாகவும் தான்மட்டும் இடர்ப்படுவதாகவும் வருந்துகிறார் ; அவ்வாறு தான் வருந்துவதற்குத் தன்னிடத்தில் அன்பும் மெய்யும் அரைகுறையாக இருப்பது தான் என்று கருதி, இரண்டும் முற்றிய நிலையைத் தனக்கு

அருளவேண்டும் என்று வேண்டுகின்றார். மெய்யும் அன்பும் அரைகுறை நிலையில் தூய்மையையும் உலவா இன்பத்தையும் தரவல்லனவல்லாததோடு தீமையையும் விளைவிக்கும். உண்மையும், அன்பும் முற்றுப்பெற்ற நிலையில் வாழ்க்கையை மாற்றிப் பேராற்றலை நல்கும் வன்மையனவாகலின், அவையிரண்டும் பூரண நிலையிலுள்ள இறைவன் திருவடியை வணங்குகின்றார். "எம்மானே! அருள் ஆர் அமுதப் பெருங்கடல்வாய் அடியார் எல்லாம் புக்கு அழுந்த இடரே பெருக்கி, அடியநேன் எய்த்துஇங்கு இருத்தல் அழகோ? பேரா, ஒழியா, பிரிவு இல்லா, மறவா, நினையா, அளவுஇலா, மாளா, மெய் அன்பு பெறவே வேண்டும்" என்பதே இப் பகுதி முழுவதும் பரவியுள்ள கருத்து. செய்யுள்கள் அனைத்தும் படித்துப் பயன் பெறவேண்டியவைகள். 'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்ற பழமொழி இப்பகுதியில் நன்கு விளங்கும். "பாவியேற்கும் உண்டாமோ? – பரம – ஆனந்தப் பழங்கடல் சேர்ந்து, ஆவி, யாக்கை, யான், எனது என்று யாதும் இன்றி அறுதலே" (5ஆவது செய்யுள்) என, அழுது அழுது உள்ளத்தைத் தூய்மை செய்கின்றார்.

33. **குழைத்த பத்து:** அறுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்டது. அந்தாதித் தொடையில் அமைந்துள்ளது. தன்னை ஆண்டவனிடத்தில் ஒப்புவித்துவிட்டதை, இனிமையோடும் கனிவோடும் விண்ணப்பிக்கும் இப்பகுதி, ஒப்புயர்வு அற்றது என்றே கூறலாம். இவ் உலகவாழ்வை அறவே ஒழிக்கவேண்டும் என்ற தடுக்க முடியாத விருப்பமும், அவன் திருவடியை அடையவேண்டும் என்ற தாங்கமுடியாத வேட்கையும், இப்பகுதி முழுவதும் பரந்து காணப்பெறுகின்றன. உன்னையன்றி எனக்கு ஒன்றும் இல்லை (5ஆவது செய்யுள்), நான் வேண்டுவது எல்லாம் உன்னையே (6ஆவது செய்யுள்), என்னும் செய்யுள்கள் அவர் விருப்பை அழுத்தமாகத் தெரிவிக்கின்றன. எனக்கு இனி இடைறு இல்லை; நான் என ஒன்று இலை; எல்லாம் உனது எனக்கூறும் 7ஆவது செய்யுளில் தன்னைத் தானே மாய்த்துக் கொள்கிறார். "குன்றேயனைய குற்றங்கள் குணம் ஆம் என்றே நீ கொண்டால், என் – தான் கெட்டது? இரங்கிடாய்" "பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ", "பணிகொள்ளாது

ஒறுத்தால் ஒன்றும் போதுமே?" என்னும் சொற்றொடர்கள் ஆண்டவனிடத்து அவருக்கு உள்ள உரிமையைக் காட்டு கின்றன. 4-வது செய்யுள் சைவ சித்தாந்தக் கருத்து ஒன்றை இலக்கியநயம் தோன்றக் காட்டுகின்றது.

34. உயிருண்ணிப் பத்து: இப்பகுதி, பத்து கலி விருத்தம் கொண்டது; தன் உயிரை அறவே ஆட்கொண்ட நன்மையை நன்றியோடு புகழ்ந்து பிரியாத பேரின்பத்தில் அமர்ந்த நிலையைப் பேசுகின்றது. "நான் எவ்வளவு தாழ்ந்தவன்; அவ்வாறு இருந்தும் என் உடல் புகுந்து, உயிர் கலந்து, உளம் பிரியாது நின்று வானவர்களும் அறிய வியலாத ஒரு பெருவளத்தை எனக்கு ஈந்தான்; என்ன வியப்பு! எனை நான் என்பது மறந்தேன். பகல் இரவு ஆவதும் மறந்தேன்; என்போல் பழவினை மாய்ந்து தூய ராஞர் யாவர்? என் என்பின் உள்துளை யெல்லாம் உருகு கின்றது. அவன் எங்குள்ளான்? என் மனத்துள்ளான்; கண்ணினுள் உள்ளான்; சொல்லில் உள்ளான்; புகழ் வேண்டேன்; செல்வம் வேண்டேன்; மண் வேண்டேன்; விண் வேண்டேன்; ஏன்? – அவன் தாள் பூண்டேன்; என் சொல்வேன்! தேனும், அமுதமுமாய் அருமருந்தாய் சுவைக்கின்றது; இனி என் பிடியை விடேன். என் நெஞ்சில் நிலைபெற்றான்" என்பதே திரண்ட கருத்து. "அனைவரும் வம்மின்" என, அருளோடு அழைக்கின்றார்; "அவன் அடியாரோடு யாவரும் ஒன்று கூடி அவன் புகழைப் பரவுமின்" எனப் பணிக்கின்றார். இப்பகுதியில் செய்யுள்கள் ஆனந்தமாக் கடலை நோக்கி ஓடும் அன்பு வெள்ளம்போல் ஓடுகின்றன. "எந்நாள் களித்து, எந்நாள் இறுமாக்கேன் இனியானே?" என்ற தொடர், வானையும் மண்ணையும் ஒன்று சேர்க்கின்றது. சென்ற காலம், நிகழ் காலம், வருங்காலம் எனும் முப்பகுதியையும் கூட்டுகின்றது; அருளையும் மருளையும் ஆட்டி வைக்கின்றது. எந்த மன நிலையில் இவ்வாறு வாய்விட்டிருப்பார் என்று எண்ணிச் செல்வதே ஒரு பேரின்பமாகும்.

35. அச்சப் பத்து: அறுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்டது. இப்பகுதியில் இயற்கையாகவே அஞ்சக்கூடிய பலவற்றைக்கூறி அவற்றுக்கெல்லாம் அஞ்சேன், சிவபெரு மானிடத்து அன்பில்லாதவர்களைக் காணுவதுதான் அஞ்சத் தக்கதாயிருக்கிறது எனக் கூறுகின்றார். இயற்கையாக

அஞ்சவேண்டுவனவாக அடிகள் கருதுவது : 1. அரசர்களுடைய தொடர்பு 2. பொய்யர்கள் கூறும் மெய், 3. பெண்களது கடைக்கண் பார்வை, அவருடைய இனிய பேச்சு, புன்முறுவல் முதலியன, 4. உலகத்திலுள்ள ஆசை, 5. வினையின் தொகுதி, 6. பொய்ப்பழி, 7. நோய், 8. இடி, 9. பாம்பு, 10. புலி, 11. களிறு, 12. எரி, 13. மலை வீழ்வது, 14. அம்பு, 15. எமனுடைய கோபம், 16. பிறப்பு, 17. இறப்பு, 18. உயிர்விடல்.

36. **திருப்பாண்டிப் பதிகம் :** கட்டளைக் கலித்துறை பத்து கொண்டது. இதில், அடிகள், " பாண்டியர்க்கு அமுது போன்ற சிவபெருமான், குதிரையின் மீதேறி வருகிறார் ; மாயையின் பிடியிலிருந்து நீங்கிப் பேரின்ப வெள்ளத்துள் மூழ்க விரும்புகின்றவர்கள் அனைவரும் அவன் திருவடியைப் பணியுங்கள் " என்கிறார் ; " விரைந்து வருவீராக காலம் கிடைத்தபோதே அன்பு செய்து நன் நெறியிற் சேர்வீராக " என மக்களை அழைக்கின்றார். சிவபெருமானை அரசனாகவும் வீரனாகவும் பேசுவது அக்காலத்துப் பரவியிருந்த தேவராஜ வழிபாட்டு மரபைக் காட்டுகிறது. எட்டாவது செய்யுளும் பத்தாவது செய்யுளும் அவன் கொடையையும் திருவோலக்கத்தையும் குறிப்பிடுகின்றன. ஐந்தாவது செய்யுளின் ஓசையும் பொருளும் பெருமிதமாகச் செல்கின்றது. 'பரிமேற் கொண்ட பாண்டியனார்', 'நெடும் கொடைத் தென்னவன்', 'பாண்டியனார் புரவியின் மேல்வர', 'பாண்டிப் பெரும்பதம்' போன்ற சொற்றொடர்கள் சமய வளர்ச்சியோடு இணைத்து கருதற்பாலன. இது ஒரு தனி வழக்கு என்றே கொள்ளலாம்.

37. **பிடித்த பத்து :** எழுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்டது. " எல்லாமாய் அல்லவுமாய் நின்று, நான் கடைபடாவண்ணம் காத்து, சிந்தையுள் புகுந்து பூங்கழல் காட்டி, சிவபதம் அளித்த கருணைமா கடலே, இடைவிடாது உன்னை அழுத்தமாகப் பற்றிக்கொண்டேன் ; இனி நீ எங்கு செல்வது ?" என்பதே பதிகம் முழுவதும் விரவிய பொருள். ஆனால் ஒவ்வொரு பாடலும் தனித்தனி ஒன்றுக்கொன்று தொடர்ந்த உணர்ச்சியை ஊக்கி முடிவில் எல்லாம் சேர்ந்து ஒன்றி, அருட்சுடராய், அளிந்த கனியாய், தெய்வக் கலையாய் புகழ்ச்சியின் பொலிவாய், போகமாய், யோகத்தின் பயனாய், விழுமியது அளிக்கும் ஓர் அன்பாய் விளங்குகின்றது.

இங்கு ஞானிகளின் முதிர்ந்த ஞானம் குழந்தைகளின் பேச்சில் தரப்பெற்றுள்ளது. நாள்தோறும் திருவாசகம் பயிலும் கொள்கையுடையாரது உரிமைப்பதிகங்களுள் இது ஒன்று. தேன் துளிக்கும் பாடல்கள்.

38. திரு ஏசறவு: பத்து கொச்சகக் கலிப்பா கொண்டது. இறைவன் செய்த நன்மைகளை எல்லாம் அமைதியாகப் பலவாறு உள்ளத்தில் எண்ணி, எத்துணையும் தகுதியற்ற தன்னை ஆட்கொண்ட கருணையை வியந்து மெலிகின்றார். பத்தாவது செய்யுளில் மனம் உருகி, "நான் ஏதேனும் தவம் செய்தேனா? அல்லது திருஐந்தெழுத்தை யாவது முறைப்படி ஓதினேனா? – அவன், தானே வந்து ஊன் உடல் வாழ்க்கையை உதறித் தள்ளுமாறு என் உள்ளம் புகுந்து, தேனாய் இன்னமுதமாய்த் தித்தித்து அருள் செய்தான்" என உரைப்பதே, இப்பதிகத்தின் பரந்த கருத்தாகும். 9ஆவது செய்யுள் மனம் கனிந்து இறைவனை வேண்டுகின்றது – 'மருவு இனிய மலர்ப்பாதம் மனத்தில் வளர்ந்து உள் உருக'.

39. திருப்புலம்பல்: இது மூன்று கொச்சகக் கலிப்பா கொண்டது. "இறைவனே, உன் திருவடிகளை அன்றி எதையும் புகழேன், ஏன் எனில், உனை அல்லது வேறு துணை அறியேன்; ஆதலால் உன் திருவடிக்கே கசிந்து உருக வேண்டுவன்" எனப் புலம்புகின்றார். இது எல்லாத் தொடர்புகளிலிருந்தும் விலகித் தனித்து நின்று விண்ணப்பித்ததாகும். மூன்றாவது திருச்செய்யுளில் மிக விரைவாக 'உற்றாரை வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;' என விடுத்துச் சென்றவர், 'கற்றாரை யான் வேண்டேன்' என்று சொல்லும்போது சிறிது தயங்குகின்றார்; கலைச்சூழலில் பயின்றவரல்லவா? கற்றாரைவிட மனம் வரவில்லை; எனினும், விட்டு விடுகின்றார். மற்றவற்றை விடுவதற்குச் சிறிதும் தயங்காதவர் கற்றாரை விடுவதற்கு மட்டில் ஒரு அமைதி செய்து கொள்ளுகிறார். 'கற்றதனால் ஆய பயன் என்?' என வினவுகின்றார். 'கல்வியின் பயன் தூய ஞானமாய் விளங்கும் இறைவன் திருவடிகளை வணங்குவதே' என்ற உண்மையைத் தெரிந்து கொள்ளுகிறார். 'அவ்வாறாயின், நான் இறைவன் திருவடிகளுக்கு, கன்று பிரிந்த பசுப்போல் கசிந்து உருகுவதை வேண்டி நின்றேன்; கற்பன இனி அமையும்' என ஒருவாறு அமைதி செய்து

கொள்ளுகின்றார். முற்றத்துறந்த முனிவருக்கும் கற்றவரைப் பிரிதல் எளிதாக இல்லை – உண்மையான கல்வி உடையவரை.

40. குலாப் பத்து: பத்து கொச்சகக் கலிப்பா கொண்டது. தில்லைப்பெருமான் திருவடிகளில் திளைத்து இடையறாத இன்பம் துய்த்தலின் பேரானந்தத்தை இப்பதிகம் தெரிவிக்கின்றது. "என் உடலம், அரும்பாய், மலராய், காயாய், முதிர்ந்து கனியாகாமல் வெம்பி அழியாது, அவன் திருவடிகளில் உறுதி கொண்ட என் உள்ளம் ஒன்று சேரும் வண்ணம் அணுகினேன்; இலங்கையர்கோன் இருபது தோளும் நெரியவைத்த சிவபெருமான் திருவடிகள் மென் மலர்போல் என் தலைமேல் வீறுகொண்டு வீற்றிருப்பதாயின இதுகாறும் தலைவன் என ஒருவனைக்கொண்டு அவனுக்கும் அவன் வரையறைகளுக்கும் உட்பட்டுப் பழகாத, என்னுள் இருந்து முன்போல் என்னைத் துன்புறுத்திய கொடியவர் ஐவர் குறும்பும் ஒழிந்தது; என் தீய வினைகளும் ஒழிந்தன; உள்ளத்தில் அமுதமே உருக்கொண்டது போல் நிலைபெற்றான்; எல்லாவற்றையும் முழுதும் அறியும் அறிவையும் நல்கினான்; அப்பெரியனாகிய சிவபெருமானது கருணையாகிய தேனைப் பருகி, எனக்கு அம்மையும், அப்பனுமாகத் தில்லையில் எழுந்தருளியிருக்கும் அவனுக்கு, செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்து இடைவிடாது ஆனந்தத்திலமர்ந்தேன்." என்பதே இப்பதிகத்தில் பேசப்பெறுவது. மிகவும் அமைதியான ஆனந்தத்தையும் உண்மையறிவால் உணரச் செய்யும் பகுதி. மூன்றாவது செய்யுள், சைவ சித்தாந்த முறைகளின் சாயை உடையது. ஐந்தாவது செய்யுளில், அடிகள், தொண்டர் எல்லாம் சேரும் வகையால் சிவன் கருணைத் தேன் பருகி ஆரும் பேரானந்தம், உலகத்தை உய்விப்பதற்கே என்பது உளங்கொளத்தக்கது.

41. அற்புதப் பத்து: அறுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்டது. திருவருளுக்கு எவ்வாற்றானும் தகுதியில்லாதவனும், திருவருளைப் பற்றிய எண்ணம் என்பதே ஒரு சிறிதும் இல்லாமல் பொய்யையே மெய் எனக்கொண்டு உலக இன்பங்களிலேயே உழன்று கிடந்த தன்னை இறைவன் ஆண்டுகொண்ட அற்புதத்தை விளம்புகின்றது. அற்புதம் வேறு அதிசயம் வேறு. வியந்து வெளியிடக்கூடியது அதிசயம், இன்னதென்று வெளியிடக்கூடாத ஆனந்த

அநுபவம் அற்புதம், எனச் சுருங்கக் கூறலாம். இப்பதிகக் கருத்தனைத்தும் பத்தாவது செய்யுளில் தெளிவாகக் கூறப் பெற்றுள்ளது. "என்னை நெருக்கியிருக்கும் பிறப்பு இறப்புக்களின் இயல்பை நினையாது கீழ்மையான சிற்றின் பத்திலே அழுந்தி உழன்று கிடக்கும் என்னை, எம் தலைவனாக எங்கும் நிறைந்த சிவபெருமான், தன்னை அறியும் அறிவு தந்து, திருவருளாகிய திருவடித் தாமரைகளைக் காட்டி, ஆண்டுகொண்ட அற்புதம் எத்தகையது என்பது எளியேன் அறியேன்".

42. **சென்னிப் பத்து:** எழுசீர் ஆசிரிய விருத்தம் பத்து கொண்டது. இப்பகுதியில் மலர்ச்சோதியானுடைய மலர்ச் சேவடி, தன் சென்னி மலரும் பேசமுடியாப் பேரானந்தத்தை, நம் அறிவுகொள்ளும் வகையில் எடுத்துக்கூறி இன்புறுகிறார். "நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதுதானே ஞானிகளது இறுதியான உலகப்பற்று.

"தில்லை மூதூரில் திருநடம் செய்யும் எம் இறைவன், பத்தர்களும் சித்தர்களும் சூழ ஞானதேசிகனாய்த் திருப்பெருந்துறையில் எழுந்தருளி உடலும் உளமும் அமுத ஊற்றெடுக்க, 'நீ கண்டுகொள்' என்று காட்டிய, கையாரத் தொழுது கண்ணார நீர்மல்கும் அடியவர்களுக்கு என்றும் பொய்யாத, உண்மையில் முழு உருவான, முத்திதந்து எம்மை மூவுலகுக்கும் அப்புறம் வைக்கவல்ல, மலர்ச் சேவடிகளில் நம் சென்னி நிலைப்பெற்றுத் தெய்வமணமும் பேரொளியும் கொண்டு திகழ்கின்றது. அவன் திருப்புகழைப்பாடும் அடியவர்களே இங்கே வருவீர்களாக! உங்கள் பாசம் முடிவடையும்" என்பது இப்பகுதியில் பரவியுள்ள கருத்து. மூன்றாவது செய்யுள் பெண் மக்களை அழைத்துப் பேசுகின்றது.

43. **திரு வார்த்தை:** அறுசீர் விருத்தம் பத்து கொண்டது. இறைவன் தாயாய், தலைவனாய், தேசிகனாய் அருள்செய்த உண்மைகளை உணர்ந்தவர்கள் தனக்குத் தலைவர் எனப் பணிந்து கூறித் தனக்கு அருள் செய்த முறையையும் பேசுவது.

மயேந்திர மாமலையில் ஆகமம் அருளியவனும், தென்நாடு உடையவனும், திருப்பெருந்துறைப் பெருமானும்

ஆகிய இறைவன், வெண்ணீறு சண்ணித்த மேனியனாய் எழுந்தருளித் தேவர் எல்லாம் தொழச் சிவந்த திருவடியை என் தலைமேல் வைத்து, என் தூராத மனக்காதல் பெருகும் வண்ணம் கருணைசெய்து, நான் கசிந்துருகும்வண்ணம் ஞானவீரக்கழல் அணிந்த திருவடிகளைக் காட்டி, தொன்று தொட்டு எத்தனையோ வகையாக என்னைப் பீடித்துவந்த துன்பங்களை எல்லாம் அறவே ஒழிந்து, என்னை ஆண்டருளிய நிலையை அறிவார் எமக்குத் தலைவராவர் என்றும், மலர்ப்பொழில் மல்கும் திருப்பெருந்துறையில், கோதிலாக் கருணையும் நீதியுமாக எழுந்தருளித் தொன்மைப் பெருங் கோலத்தை வெளிப்படுத்திய பேரருளை அறியும் ஆற்றலுடையார் எம் தலைவராவார் என்றும் கூறுகின்றார்.

இப்பகுதியில் இறைவன் பேரன்புக்கு எல்லையும் வரையறையும் இல்லை என்பதும், அன்பு உடையாரும் இரங்கத் தக்க நிலையிலுடையாரும், அதற்கு உரியார் என்பதும் தெளிய வைத்து, எல்லோரும் அன்புடையராகவேண்டும் என்பதைப் பல பழங்கதைகள் வழியாகவும் வற்புறுத்தி கின்றார்.

44. **எண்ணப் பதிகம்**: ஆசிரிய விருத்தம் (சீர் சிறிது வேறுபாடுடையன) ஆறு கொண்டது. இப்பகுதியில் தன்னை அடியவர் நடுவில் கூட்டவேண்டும் என்றும், இறைவனைப் பிரிந்து, நொடியும், பிரிவின் துயரைத் தாங்கமுடியாது என்றும், ஏன் அவ்வாறு தோன்றுகிறது என்பது தனக்குத் தோன்றவில்லை என்றும், பலவாறாக 'தன் ஆற்றாமையைத் தெரிவித்து, ஒரு முதிர்ந்த ஞான நிலையை விளக்குவதற்குச் சொல் இல்லாமல், உளம் கிளர்ந்தும் தளர்ந்தும் பேசுகிறார். "பெரியோன் ஒருவன், 'கண்டுகொள்' என்று, உன் பெய் கழல் அடிகாட்டி, 'பிரியேன்' என்று அருளிய அருளும் பொய்யோ?" என்பது சிந்திக்கத்தக்கது. இங்கு பேசப் பெறும் பெரியோன் ஒருவன் யார்? ஐந்தாவது செய்யுள் ஒரு முதிர்ந்த ஞான அநுபவத்தையும் அவ் அநுபவத்தில் நிகழ்ந்த பல திரிபுகளையும் காட்டுகிறது. பலவாறு மாறி மாறி மகிழ்ந்தும் புலந்தும் ஓடிய உள்ளம் ஒரே உறுதியாக 'என் அமுதை நினைந்து அழைத்து உள்ளே ஆற்றுவன் ஆக' அவன் அருள் செய்யா தொழியான் என்னும் அமைதிக் குறிப்போடு நிற்கின்றது.

45. யாத்திரைப் பத்து: அறுசீர் விருத்தம் பத்து கொண்டது. இறைவனை நாடிச்சென்ற ஆன்மா பல இடையூறுகளையும் கடந்து இறைவன் திருவோலக்கக் காட்சியைச் சேய்மையில் பார்க்கக் கூடிய அளவுக்கு வந்துவிட்டது. சிவபுரத்தின் திருக்கதவம் திறந்துள்ளது. விரைந்து ஓடி உட்புகுந்து விடலாம். புகுந்துவிட்டால் இனித் திரும்புவது இல்லை. இந்த அருட்பேற்றை எல்லோரும் அடைய வேண்டும் என்ற ஆர்வம் மிகுந்துவிடுகிறது. "காலம் இனி இல்லை; ஒருப்படுமின்; அவன் திருக்குறிப்பைக் கடைப் பிடித்து, நெஞ்சம் உருகி, சிந்தனையைத் திருந்தவைத்து, அவன் கழலையே எண்ணி, கழலில் புகுவோம்; இனி நாம் நில்லா உலகில் நில்லோம்; இன்றே வம்மின்; வந்து ஆள் ஆகாதீர் எல்லாம் மருள்வீர்; பின்னர் கலங்கி மயங்குவீர்; தெருள்வீர் ஆகில் வம்மின்; அருள் யார் பெறுவார் அகல் இடத்தே? அந்தோ! அந்தோ! அந்தோ!!" எனப் பெருங்கருணையோடு அழைக்கின்றார்.

46. திருப்படை எழுச்சி. இரண்டு கலிவிருத்தம் கொண்டது. வீட்டுலகத்தைக் கைப்பற்றுவதற்காக இந்தப் படை திரட்டப்படுகிறது; இப்படைக்கு எதிரியாகவுள்ள படை மாயப்படை. இப்படை வீரர்கள் வாளாகத் தாங்க வேண்டியது ஞானமாகிய மெய்யறிவு; இப்படைக்குத் தலைவனது வாளும் ஞானமே, பறையோ, பிறவிப் பகை கலங்கப் பேரின்பத்து ஓங்கும் பருமிக்க நாதப்பறை, படையிற் சேர்ந்துள்ளவர்களோ, தொண்டர்களும், பத்தர்களும், யோகிகளும், சித்தர்களுமேயாம்; இவர்களுடைய கவசமோ திருநீறு. ஒவ்வொரு வகையினருக்கும் படையில் ஒவ்வொரு இடம் வகுக்கப்பெற்றுள்ளது. கவனிக்கத்தக்கது ஒன்று இருக்கிறது: இப்போது கூட்டப்பெறும் ஞானப்படையின் குறிக்கோள் வீட்டுலகத்தைக் கொண்டு தமக்கு உரிமையாக்கிக்கொள்ளுவது, ஆனால், மாயப்படையோ வீட்டுலகத்துப் படையல்லவே! வீட்டுலகத்தை நெருங்கும் ஆற்றலும் அப்படைக்கு இல்லையே! இப்பகுதியும் தேவராஜ வழிபாட்டு மரபின் சாயையுடையது. இப்படை விடுதலைப் புரட்சிப் படை.

47. திருவெண்பா: பதினொரு வெண்பாக்களைக் கொண்ட இப்பகுதி அடிகளது முதிர்ந்த ஞானத்தெளிவில் தோன்றிய நினைவுகளில் உலகத்திற்கு வழிகாட்டியாகச் சிலவற்றைச் சிந்தனையும் உணர்வும் பெருகும் முறையில்

மொழிந்தது. ஒவ்வொரு வெண்பாவும் தனித் தனியும் ஒன்ளேடு ஒன்று மாற்றி மாற்றிக் கூட்டியும், பலமுறையாகப் பல்லாயிரம் வகையில் பெருக்கிப் பொருள் அறியவேண்டிய தகுதியிலுள்ளது இப்பகுதி.

48. பண்டாய நான்மறை: இப்பகுதி ஏழு வெண்பாக்கள் கொண்டது; முற்பகுதி போன்றது.

49. திருப்படை ஆட்சி: பன்னிருசீர் ஆசிரியவிருத்தம் எட்டு கொண்டது. வானுலகவரம்பிலிருந்து அருளியது. தேடிய பொருள் கிட்டிவிட்டது. ஆனந்தம் பெருகுகின்றது. விட்ட உலகமும் தொட்ட உலகமும் ஒரே பார்வையில் தெரிகின்றது. ஒரு உலகவாழ்வின் காட்சிகள் படிப்படியாக மறைகின்றன; மற்றொரு உலக வாழ்வின் காட்சிகள் படிப்படியாகத் தெரிகின்றன. பழைய வாழ்வை விடுகின்ற ஞான வாழ்வின் ஒலியும் ஒளியும் ஒன்றித் தரும் இப்பகுதி, திருவாதவூரர் பொய்யுலகவாழ்விற்குக் கூறிய பிரிவு உபசாரமும் மெய்யுலக வாழ்விற்குக் கூறிய வரவேற்பும் எனச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம்,

50. ஆனந்த மாலை: அறுசீர் விருத்தம் ஏழு கொண்டது. இப் பகுதி ஆனந்தமான ஒரு மாலைப்பொழுதின் மகிழ்ச்சியைத் தருகின்றது. பட்ட பாடு எல்லாம் பகல் முழுவதும் பட்டாகிவிட்டது. இன்பமும் துன்பமும் தோய்ந்தாகிவிட்டது. ஆனல் இன்பம் என்று எண்ணியவை எல்லாம் துன்பம் ஒரு சிறிதும் கலவாதனவும் அல்ல, அவ்வாறே துன்பமும் இன்பம் கலவாததல்ல. வைகறை எழுந்து அருள்நிதி தரவரும் ஆனந்தமலையை வழிபட்டு நின்று, பணிகொள்ளும் வழிகளையும் கேட்டு, கேட்டபடி சிறிது நடந்தும், சிறிது நடவாமலும், பெரும்பகுதி நம் மனம்போன போக்கிலே சென்றும், பகல் பொழுதைக் கழித்தாகிவிட்டது. மாலை வந்துவிட்டது; விரைவில் எல்லாம் ஒடுங்கி ஓய்வு பெறும் காலம் வந்துவிடும்; நம்மைச் சூழ்ந்துள்ள அனைத்தும் ஓய்வு பெறுவதற்கே முந்துகின்றன. மாலைப்பொழுதில், பகல் முழுவதும் நிகழ்ந்தனயாவும் நினைவுக்கு வந்து உள்ளத்தைப் பலவழியாக ஆட்டிவைக்கின்றது. ஆட்டம் எல்லாம் எவ்வளவு நாழி? இனி அமைதி வரவேண்டியது தானே! இந்த மன நிலையிலிருந்து மணிவாசகப் பெருமான் தன் உணர்ச்சிகளை வெளியிட்டு நமக்கு நல்ல வழியைக் காட்டுகின்ருர்.

ஞான நெறியிலேயே நிலைத்து நின்ற அடியார்களின் நினைவு வருகிறது ; அவர்கள் மலர்ந்த பேர் ஒளி போன்ற இறைவனது ஞானப் பூங்கழல்களை அடைந்துவிட்டார்கள்; மாயையின் கடக்கமுடியாத ஆழ்ந்த அலைகடலை எளிதாகக் கடந்துவிட்டார்கள் ; பூங்கழல் புகுந்த அடியார்களை வான் - உலகத்தோர் எல்லாம் பொன் மலர் தூவிப் போற்றி வர வேற்கின்றார்கள். மணிவாசகர் தன் நிலையை இந்த மாலைப் பொழுதில் கருதுகின்றார். தான் கடலைக் கடக்க முடியாமல் ஆழ்ந்து திகைக்கின்றார். உடனே வேறு நினைவுகள் வரு கின்றன, "எல்லாம் என் அறியாமையே அன்றி அவன் குறை ஒன்றுமே இல்லையே. நான் அறிந்து கொள்ள விய லாத பதவியை எனக்குத் தந்தான் ; அறிவிலி, அப்பதத்தின் பெருமை யறியாது கெட்டேன். ஏன் கெட்டேன் ? வழிவழி யாக அவன் திருவடித் தொண்டிலேயே நின்ற பழைய அடி யாருடன் கூடாமல், வேறு பிற நோக்கங்களில் உள்ளத்தை விட்டுக் கெட்டேன்" என்று, சென்ற நிகழ்ச்சிகளை எண்ணு கிறார். இவ்வாறு எண்ணும்போதும் ஏதோ ஒரு இன்பம் உள்ளீடகவே கலந்து கரந்து செல்கின்றது. சீலம் இல் லாமல், நோன்பு இல்லாமல், செறிவு இல்லாமல், அறிவு இல்லாமல், தோற்பாவைக் கூத்தாகச் சென்றபொழுது அனைத்தும் ஒரு நொடியில் மனக்கண்ணில் தோன்று கிறது ; உடனடியாக அவ்வாறு மாயையில் சுழன்று விழுந்து கிடந்த தன்னை, வாரா உலக நெறியில் ஏற வழிகாட்டித் தன் திருக்கோலம் காட்டி ஆண்ட அருள் உள்ளத்துள் மின்னல்போல் ஒளி வீசுகின்றது. இந்த மின்னல் ஒளி இருண்டு செல்கின்ற மாலைப் பொழுதை மேலும் மகிழ்ச்சிக்கு உரியதாக்கி வேறு சில தோற்றங் களை எழுப்பி ஆனந்தமாகச் செய்து விடுகிறது. உடனே குழந்தையாய் மாறி விடுகின்றது உள்ளம் ; 'தாயே பால் கொடு ! தாயே பால் கொடு ! என்று கதறுகின்றது. பால் கொடுக்கும் காலத்தைத் தானே நினைந்து ஊட்டும் தாய் என்ன செய்வாள் ?–"பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிவுடையவன், செய்வது ஒன்றும் அறியாது திகைத்த என்னைத் தேற்றித் தன்னோடு கூட்டாது ஒழி வானோ ?" என்று உறுதி பிறக்கின்றது. இன்ப நினைவும் துன்ப நினைவும் மாறி மாறி வந்தாலும், நினைவுட்பட்டு, இனிவர இருக்கும் ஒய்வையும் ஒடுக்கத்தையும் எண்ணும்

எண்ணத்தோடு கலந்து, சிறுபொழுதே நின்ற மாலையை ஆனந்தமாகச் செய்து விட்டது. இனி? – ஓய்வு; பேரின்ப ஓய்வு; துன்பம் எல்லாம் விட்ட பேரின்ப வீடு என்ற உறுதி ஓங்கத் தொடங்கி விட்டது.

51. அச்சோப் பதிகம்: கலிவிருத்தம் ஒன்பது கொண்டது. தன் சிறுமையை எண்ணுகிறார். இனி, சிறுமை ஏது? சிவமாக்கி ஆட்கொண்டான். கூத்தன், கூத்தை அறியும் வண்ணம் அருளினன்; அவன் கழலே சேர்ந்தார். சேர்ந்தவர் திருவடி நமக்குத்துணை.

மேலே சொல்லியவைகளும், இனி ஒவ்வொரு செய்யுளுக்கும் தலைப்பாகச் சொல்லியுள்ளவைகளும், திருவாசகம் என்னும் தெய்வப் பனுவலையும், அதன் பெரும் பிரிவுகளையும், செய்யுள்களையும் ஒருவாறு அறிமுகப் படுத்துவதற்கு எழுதப்பெற்றுள்ளனவேயன்றி, இத்தெய்வக் கவிதையின் நுட்பங்களையோ, கருத்துக்களையோ, நயங்களையோ, தத்துவங்களையோ, உணர்வைவூக்கும் பண்புகளையோ பேசத்துணிந்தனவல்ல என்பதை மீண்டும் வற்புறுத்திக் கூறவேண்டியிருக்கிறது. உலக இலக்கியங்களில் இத் தெய்வநூல் ஒரு தனி நிலைமை வாய்ந்தது; மொழிக்கு மொழி தேன் ஒழுகும் தன்மையது; பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பேசும் பான்மையது. பல முகங்களும் பட்டைகளும் தீர்ந்த ஒரு வைரக்குன்றம் எவ்வாறு கதிர் ஒளிக்கு ஏற்பவும், காண்போர் நிற்கும் கோணத்திற்கு ஏற்பவும் தன் ஒளியின் பகுதிகளைக் காட்டுமோ அவ்வாறு பொருள் காட்டி உணர்வூட்டுவது இத்தெய்வநூல். ஒவ்வொரு சொல்லும் நம்மை உணர்வு தந்து உய்யக் கொள்ளத்தக்கது. சித்தம் சிவமான செம்மலின் செஞ்சொற்களின் தொகுதி இவை. "சொல்லிய சொல் ஒரு சொல்லே! அச்சொல்லால் விளைந்த சுகத்தை என் சொல்வேன்?" அன்பர்கள் பன்முறை பயின்று பயன் துய்க்கத் திருவருள் கைகூட்டுக.

திருவாதவூரர் திருவடிகளே துணை.

திருவாசகச் சிறப்பு


அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால் — கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்.

கற்பாந்த காலங் கடவாக் கடல்கடக்கத்
தெப்பமாய் வந்தெனக்குச் சேர்ந்ததே — அப்பன்
உருவா சகங்கொண் டுரைத்த தமிழ்மாலைத்
திருவா சகம்என்னும் தேன்.

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே — எல்லை
மருவா நெறிஅளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம்என்னும் தேன்.

போதலர்ந்து தேன்சொரியும் பொன்னம் பலத்திலுறை
வாதவூர் எங்கோமான் வாசகத்தை — ஓதிப்
பிறவிப் பிணிநீக்கிப் பேரின்ப வெள்ளச்
செறிவுக்குள் செல்வர் சிறந்து.


சில்பி



திருச்சிற்றம்பலம்

திருவாசகம்

முதலாவது

சிவபுராணம்

[சிவன தநாதி முறைமையான பழமை]

கலிவெண்பா

க. நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
வாகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
வேக னநேக னிறைவ னடிவாழ்க

முதலாவது

சிவபுராணம்

[சிவனது அநாதி முறைமையான பழமை]

வாழ்த்தும் வணக்கமும்

1. நமச்சிவாய[1] வாஅழ்க! நாதன்[2] தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம்[3] ஆகிநின்று அண்ணிப்பான்[4] தாள் வாழ்க!
ஏகன்,[5] அநேகன்,[6] இறைவன்,[7] அடி வாழ்க.

1 சிவனுக்கு வணக்கம் என்னும் ஐந்தெழுத்துள்ள மறைமொழி
2 ஒலிக்கு மூலமாக விளங்கும் தலைவன்
3 ஞானத்தின் நுண்பொருள்
4 அணுகி வருவோன், இனிமை செய்வோன்
5 ஒன்றாக வுள்ளவன்
6 பலவாக வுள்ளவன்
7 எங்கும் நிறைந்தவன்

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குஞ் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
கய. சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
வீச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
கரு. சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
யாராத வின்ப மருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையு ணின்ற வதனு
லவனரு ளாலே யவன்றாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
உய. முந்தை வினைமுழுது மோய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
யெண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியா
யெண்ணிறைந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
உரு. பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
ஙய. செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்

வேகம்[1] கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்[2]-தன் பெய்-கழல்கள் வெல்க!
புறத்தார்க்கும் சேயோன்-தன் பூம்கழல்கள் வெல்க!
கரம்-குவிவார் உள்மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம்-குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன்[3] அடிபோற்றி! சிவன் சேவடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன்[4] அடிபோற்றி!
மாயப்பிறப்பு அறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீர்ஆர் பெருந்துறை நம்தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி!

வருபொருள் உரைத்தல்

சிவன், அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,
சிந்தை மகிழ, சிவபுராணம்-தன்னை,
முந்தை வினை முழுதும் ஓய, உரைப்பன் யான்—
கண்-நுதலான்[5] தன் கருணைக்கண் காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி—

அவையடக்கம்

விண்நிறைந்து மண்நிறைந்து, மிக்காய், விளங்குஒளியாய்,
எண் நிறைந்து, எல்லை இலாதானே! நின் பெரும்சீர்,
பொல்லா வினையேன், புகழும்ஆறு ஒன்று அறியேன்;

சென்ற நிலைகளும் இன்றைய நிலையும்

புல்ஆகி, பூடுஆய், புழுஆய், மரம்ஆகி,
பல்விருகம்ஆகி, பறவைஆய், பாம்புஆகி,
கல்ஆய், மனிதர்ஆய், பேய்ஆய், கணங்கள்[6] ஆய்,
வல்அசுரர்ஆகி, முனிவர்ஆய், தேவர்ஆய்,
செல்லாஅ நின்ற இத்தாவர-சங்கமத்துள்,[7]
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்; எம்பெருமான்!

1 பிறவியின் கொடுமை, உள்ளத்தின் ஓட்டம்
2 பொனநிறம் உடையவன, அழிபபவன், வள்ளல், வலியவன்—சிவபெருமான்
3 ஒளிக்கு மூலமாகவுள்ளவன்
4 மாசு நீககுபவன், மாசு அணுகாதவன
5 நெற்றிககணணன-சிவபெருமான
6 பூத கணங்கள்
7 நிலையாகவுள்ளனவும் இயங்குவனவும்

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென் னுள்ளத்து ளோங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்க
ளையா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞான மில்லாதே னின்பப் பெருமானே
யஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
யாக்க மளவிறுதி யில்லா யனைத்துலகு
மாக்குவாய் காப்பா யழிப்பா யருடருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமா
னிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்க ளேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன் றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
யறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்குமூடி
மலஞ்சோரு மொன்பது வாசற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

மெய்யே, உன்பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்;

பொய் அகல வந்த மெய்ச்சுடர்

உய்ய, என் உள்ளத்துள், ஓங்காரம்[1] ஆய் நின்ற
மெய்யா! விமலா![2] விடைப்பாகா! வேதங்கள்
"ஐயா" என, ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!
வெய்யாய்! தணியாய்! இயமானன்[3] ஆம் விமலா!
பொய்ஆயின எல்லாம் போய்அகல, வந்தருளி,
மெய்ஞ்ஞானம்ஆகி, மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம்-தன்னை அகல்விக்கும் நல்-அறிவே!

1 'ஓம்' என்னும் மூல மறையொலி-பிரணவம்
2 மாசு அடையாதவன்
3 வேள்வியின்தலைவன்

ஐந்தொழில்

ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்துஉலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்.

சிந்தனையுள் ஊறும் தேன்

நாற்றத்தின்-நேரியாய்![4] சேயாய்![5] நணியானே![6]
மாற்றம்,[7] மனம், கழிய நின்ற மறையோனே!
கறந்தபால், கன்னலொடு, நெய்கலந்தால் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று,
பிறந்தபிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!

4 பூவின் மணம் போல நுண்ணியனே
5 தூரத்திலுள்ளவனே
6 அருகிலுள்ளவனே
7 சொல்

மாய இருள் போக்கிய மாசற்ற சோதி

நிறங்கள் ஓர் ஐந்துஉடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன்-தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை,
அறம், பாவம், என்னும் அரும்கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்குமூடி,
மலம் சோரும் ஒன்பது வாசல் குடிலை
மலங்க, புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகு
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
யாரா வமுதே யளவிலாப் பெம்மானே
யோராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
யின்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
யன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்த நடுவாகி யல்லானே
யீர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தி
னோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
யாற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையு
ளூற்றான வுண்ணா ரமுதே யுடையானே

விலங்கு[1] மனத்தால், விமலா![2] உனக்குக்
கலந்த அன்புஆகி, கசிந்து உள்உருகும்
நலம்-தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம்-தன்மேல் வந்தருளி, நீள்கழல்கள் காஅட்டி,
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு,
தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!

ஆட்கொண்ட பெருங் கருணை

தேசனே![3] தேன்ஆர்அமுதே! சிவபுரனே!
பாசம்ஆம்பற்று அறுத்து, பாரிக்கும்[4] ஆரியனே!
நேச அருள்புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,
பேராது நின்ற பெருங் கருணைப் பேர்-ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார்[5] உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆர்உயிர்ஆய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!
அன்பருக்கு அன்பனே! யாவையும்ஆய், அல்லையும்ஆம்
சோதியனே! துன்இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடு ஆகி, அல்லானே!
ஈர்த்து என்னை, ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால்கொண்டு உணர்வார்-தம் கருத்தின்
நோக்கு அரியநோக்கே! நுணுக்குஅரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும், இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு-அரிய பேர்-ஒளியே!
ஆற்று இன்பவெள்ளமே! அத்தா! மிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளிஆய், சொல்லாத நுண்உணர்வுஆய்
மாற்றம்[6]ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து, அறிவுஆம்,
தேற்றனே![7] தேற்றத்தெளிவே! என்சிந்தனையுள்
ஊற்று ஆன உண்ஆர்அமுதே! உடையானே!

1 மாறுபடுகின்ற
2 மாசு அணுகாதவனே
3 ஒளிக்கு முதல்வனே
4 காப்பாற்றும், தாங்கும்
5 நினையாதார்
6 மாறுபடும் இயல்பு
7 தெளிவானவனே, தெளிவு செய்பவனே

வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
யல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

கீர்த்தித் திருவகவல்

(சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை)

தில்லை மூதா ராடிய திருவடி
பல்லுயி ரெல்லாம் பயின்றன னாகி
யெண்ணில் பல்குண மெழில்பெற விளங்கி
மண்ணும் விண்ணும் வானோ ருலகுந்
துன்னிய கல்வி தோற்றியு மழித்து
மென்னுடை யிருளை யேறத் துரந்து
மடியா ருள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையுஞ் சிறப்பு

இத் தெய்வப் பாடலைப் பயில்வோரும், பயிலும் திறனும், பயனும்

வேற்று விகார விடக்கு[1] உடம்பின் உள்கிடப்ப — 1 ஊன்
ஆற்றேன்; ' " எம்ஐயா! அரனே! ஓ!" என்று என்று
போற்றி, புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்ஆனார்,
மீட்டு இங்குவந்து, வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பை[2] கட்டழிக்க வல்லானே! — 2 சிறுகுடில் – உடல்
நள்இருளில் நட்டம்பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டிநாட்டானே!
அல்லல்-பிறவி அறுப்பானே! ஓ!' என்று'
சொல்லற்கு அரியானைச்சொல்லி, திருவடிக்கீழ்ச்
சொல்லியபாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர்-சிவபுரத்தின் உள்ளார், சிவன்அடிக்கீழ்,
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

இரண்டாவது

கீர்த்தித் திருஅகவல்

அடியாரை ஆட்கொண்ட சிறப்பு

தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி,
எண் இல் பல் குணம் எழில் பெற விளங்கி,
மண்ணும், விண்ணும், வானோர் உலகும்,
துன்னிய கல்வி தோற்றியும், அழித்தும்,
என்னுடை இருளை ஏறத் துரந்தும்,[3] — 3 பறித்து எறிந்தும்
அடியார் உள்ளத்து அன்பு மீதூரக்
குடியாக் கொண்ட கொள்கையும், சிறப்பும்,

மன்னு மாமலை மயேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியுங்
கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்
பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு
மெஞ்சா தீண்டு மின்னருள் விளைத்துங்
கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்
விராவு கொங்கை நற்றடம் படிந்துங்
கேவேட ராகிக் கெளிறது படுத்து
மாவேட் டாகிய வாகமம் வாங்கியு
மற்றவை தம்மை மயேந்தி ரத்திருந்
துற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியு
நந்தம் பாடியி னான்மறை யோனா
யந்தமி லாரிய னாயமர்ந் தருளியும்
வேறுவே றுருவும் வேறுவே றியற்கையு
நூறுநூ றாயிர மியல்பின தாகி
யேறுடை யீசனிப் புவனியை யுய்யக்
கூறுடை மங்கையுந் தானும்வந் தருளிக்
குதிரையைக் கொண்டு குடநா டதன்மிசைச்
சதிர்படச் சாத்தாய்த் தானெழுந் தருளியும்
வேலம் புத்தூர் விட்டே றருளிக்
கோலம் பொலிவு காட்டிய கொள்கையுந்
தர்ப்பண மதனிற் சாந்தம் புத்தூர்
விற்பொரு வேடற் கீந்த விளைவு
மொக்கணி யருளிய முழுத்தழன் மேனி
சொக்க தாகக் காட்டிய தொன்மையு
மரியொடு பிரமற் களவறி யொண்ணா
னரியைக் குதிரை யாக்கிய நன்மையு
மாண்டுகொண் டருள வழகுறு திருவடி
பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னங்கோ ரருள்வழி யிருப்பத்

மன்னும் மாமலை மயேந்திரம்-அதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும் ;
கல்லாடத்துக் கலந்து, இனிது அருளி,
நல்லாளோடு நயப்புறவு[1] எய்தியும் ;
பஞ்சப்பள்ளியில் பால்மொழி தன்னொடும்
எஞ்சாது ஈண்டும் இன் அருள் விளைத்தும் ;
கிராத[2] வேடமொடு கிஞ்சுக-வாயவள்[3]
விராவு கொங்கை நல்-தடம் படிந்தும் ;
கேவேடர்[4] ஆகி, கெளிறு-அது படுத்தும் ;
மாவேட்டு ஆகிய ஆகமம்[5] வாங்கியும் ;
மற்று, அவை-தம்மை மயேந்திரத்து இருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும் ;
நந்தம்பாடியில் நான்மறையோன் ஆய்,
அந்தம்இல்ஆரியன் ஆய், அமர்ந்தருளியும் ; .
வேறு வேறு உருவும், வேறு வேறு இயற்கையும்,
நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி,
ஏறுஉடை ஈசன், இப்புவனியை உய்ய,
கூறுஉடை மங்கையும் தானும் வந்தருளி,
குதிரையைக் கொண்டு, குடநாடு-அதன்மிசை,
சதிர்பட, சாத்து[6] ஆய், தான் எழுந்தருளியும் :
வேலம்புத்தூர் விட்டேறு[7] அருளி,
கோலம் பொலிவு காட்டிய கொள்கையும் ;
தர்ப்பணம்-[8] அதனில் சாந்தம் புத்தூர்
வில் பொரு வேடற்கு ஈந்தவிளைவும் ;
மொக்கணி[9] அருளிய முழுத்தழல் மேனி
சொக்கு[10]-அது ஆகக் காட்டிய தொன்மையும் ;
அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண்ணான்
நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும் ;
ஆண்டு கொண்டருள அழகுஉறு திருவடி
பாண்டியன் தனக்குப்பரிமா விற்று,
ஈண்டு கனகம்[11] இசையப் பெறுஅது,
ஆண்டான் அங்குஓர் அருள்வழி இருப்ப,

1 தூய இன்பம்
2 வேட்டுவ
3 முருக்கமலர் போன்ற சிவந்த வாயினை உடையவள் – உமையம்மை
4 வலைஞர்
5 ஞான நூல்
6 வணிகர் கூட்டம்
7 வேல்
8 கண்ணாடி
9 கொள் முதலிய தீனி வைக்கும் பை
10 கண்டார் மயங்கும் அழகு
11 பொன

தூண்டு சோதி தோற்றிய தொன்மையு
மந்தண னாகி யாண்டுகொண் டருளி
யிந்திர ஞாலங் காட்டிய வியல்பு
மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையு
மாங்கது தன்னி லடியவட் காகப்
பாங்காய் மண்சுமந் தருளிய பரிசு
முத்தர கோச மங்கையு ளிருந்து
வித்தக வேடங் காட்டிய வியல்பும்
பூவண மதனிற் பொலிந்தினி தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்
வாத வூரினில் வந்தினி தருளிப்
பாதச் சிலம்பொலி காட்டிய பண்புந்
திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியிற் கரந்த கள்ளமும்
பூவல மதனிற் பொலிந்தினி தருளிப்
பாவ நாச மாக்கிய பரிசுந்
தண்ணீர்ப் பந்தர் சயம்பெற வைத்து
நன்னீர்ச் சேவக னாகிய நன்மையும்
விருந்தின னாகி வெண்கா டதனிற்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்
பட்ட மங்கையிற் பாங்கா யிருந்தங்
கட்டமா சித்தி யருளிய வதுவும்
வேடுவ னாகி வேண்டுருக் கொண்டு
காடது தன்னிற் கரந்த கள்ளமு
மெய்க்காட் டிட்டு வேண்டுருக் கொண்டு
தக்கா னொருவ னாகிய தன்மையு
மோரி யூரி னுகந்தினி தருளிப்
பாரிரும் பாலக னாகிய பரிசும்
பாண்டூர் தன்னி லீண்ட விருந்துந்
தேவூர்த் தென்பாற் றிகழ்தரு தீவிற்
கோவார் கோலங் கொண்ட கொள்கையுந்

தூண்டு சோதி தோற்றிய தொன்மையும் ;
அந்தணன் ஆகி, ஆண்டு கொண்டருளி,
இந்திர-ஞாலம்[1] காட்டிய இயல்பும் ;
மதுரைப் பெருநல் மாநகர் இருந்து,
குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும் ;
ஆங்கு, அது தன்னில், அடியவட்கு ஆக,
பாங்கு ஆய் மண் சுமந்தருளிய பரிசும் ;
உத்தரகோசமங்கையுள் இருந்து,
வித்தக[2] வேடம் காட்டிய இயல்பும் ;
பூவணம்-அதனில் பொலிந்து, இனிது அருளி,
தூவண மேனி காட்டிய தொன்மையும் ;
வாதவூரினில் வந்து, இனிது அருளி,
பாதச் சிலம்பு ஒலி காட்டிய பண்பும் ;
திருஆர் பெருந்துறைச் செல்வன் ஆகி,
கருஆர் சோதியில் கரந்த கள்ளமும் ;
பூவலம்-அதனில் பொலிந்து, இனிது அருளி,
பாவம் நாசம் ஆக்கிய பரிசும் ;
தண்ணீர்ப் பந்தர் சயம் பெற வைத்து,
நல்நீர்ச் சேவகன் ஆகிய நன்மையும் ;
விருந்தினன் ஆகி, வெண்காடு-அதனில்,
குருந்தின்கீழ், அன்று, இருந்த கொள்கையும் ;
பட்டமங்கையில் பாங்காய் இருந்து, அங்கு
அட்டமா சித்தி அருளிய அதுவும் ;
வேடுவன் ஆகி, வேண்டு உருக்கொண்டு,
காடு-அது-தன்னில், கரந்த கள்ளமும் ;
மெய்க் காட்டிட்டு, வேண்டு உருக்கொண்டு,
தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும் ;
ஓரியூரில் உகந்து, இனிது அருளி,
பார் இரும் பாலகன் ஆகிய பரிசும் ;
பாண்டூர்-தன்னில் ஈண்ட இருந்தும் ;
தேவூர்த் தென்பால் திகழ்தரு தீவில்
கோஆர் கோலம் கொண்ட கொள்கையும் ;

1 இந்திரஜாலம், மாய வித்தை
2 ஞான

தேனமர் சோலைத் திருவா ரூரின்
ஞானந் தன்னை நல்கிய நன்மையு
மிடைமரு ததனி லீண்ட விருந்து
படிமப் பாதம் வைத்தவப் பரிசு
மேகம் பத்தி னியல்பா யிருந்து
பாகம் பெண்ணோ டாயின பரிசுந்
திருவாஞ் சியத்திற் சீர்பெற விருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமுஞ்
சேவக னாகித் திண்சிலை யேந்திப்
பாவகம் பலபல காட்டிய பரிசுங்
கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்து
மீங்கோய் மலையி லெழிலது காட்டியு
மையா றதனிற் சைவ னாகியுந்
துருத்தி தன்னி லருத்தியோ டிருந்துந்
திருப்பனை யூரில் விருப்ப னாகியுங்
கழுமல மதனிற் காட்சி கொடுத்துங்
கழுக்குன் றதனில் வழுக்கா திருந்தும்
புறம்பய மதனி லறம்பல வருளியுங்
குற்றா லத்துக் குறியா யிருந்து
மந்தமில் பெருமை யழலுருக் கரந்து
சுந்தர வேடத் தொருமுத லுருவுகொண்
டிந்திர ஞாலம் போலவந் தருளி
யெவ்வெவர் தன்மையுந் தன்வயிற் படுத்துத்
தானே யாகிய தயாபர னெம்மிறை
சந்திர தீபத்துச் சாத்திர னாகி
யந்தரத் திழிந்துவந் தழகமர் பாலையுட்
சுந்தரத் தன்மையொடு துதைந்திருந் தருளியு
மந்தர மாமலை மயேந்திர வெற்ப
னந்தமில் பெருமை யருளுடை யண்ண
லெந்தமை யாண்ட பரிசது பகரி

தேன் அமர் சோலைத் திருவாரூரில்
ஞானம்-தன்னை நல்கிய நன்மையும் ;
இடைமருது-அதனில் ஈண்ட இருந்து,
படிமம் பாதம்[1] வைத்த அப் பரிசும் ;
ஏகம்பத்தில் இயல்பாய் இருந்து,
பாகம் பெண்ணோடு ஆயின பரிசும் ;
திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து,
மரு ஆர் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும் ;
சேவகன் ஆகி, திண்சிலை[2] ஏந்தி,
பாவகம்[3] பல-பல காட்டிய பரிசும் ;
கடம்பூர்-தன்னில் இடம் பெற இருந்தும் ;
ஈங்கோய் மலையில் எழில்-அது காட்டியும் ;
ஐயாறு-அதனில் சைவன் ஆகியும் ;
துருத்தி-தன்னில் அருத்தியோடு இருந்தும் ;
திருப்பனையூரில் விருப்பன் ஆகியும் ;
கழுமலம்-அதனில் காட்சி கொடுத்தும் ;
கழுக்குன்று-அதனில் வழுக்காது இருந்தும் ;
புறம்பயம்-அதனில் அறம்பல அருளியும் ;
குற்றாலத்துக் குறியாய் இருந்தும் ;
அந்தம் இல் பெருமை அழல் உருக் கரந்து,
சுந்தர வேடத்து ஒரு முதல் உருவுகொண்டு
இந்திர-ஞாலம் போல வந்தருளி,
எவ்எவர் தன்மையும் தன்வயின் படுத்து,
தானே ஆகிய தயாபரன்,[4] எம்இறை
சந்திர தீபத்து, சாத்திரன் ஆகி,
அந்தரத்து இழிந்து வந்து, அழகு அமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்து, இருந்தருளியும் ;
மந்தர மாமலை மயேந்திர வெற்பன்,
அந்தம் இல் பெருமைஅருள் உடை அண்ணல்,
எம்-தமை ஆண்ட பரிசு-அது பகரின்-

1 தெய்வத்திருவடி
2 வில்
3 வெளித் தோற்றம்
4 பேரருளாளன

னாற்ற லதுவுடை யழகமர் திருவுரு
நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியு
மூனந் தன்னை யொருங்குட னறுக்கு
மானந் தம்மே யாறா வருளியு
மாதிற் கூறுடை மாப்பெருங் கருணைய
னாதப் பெரும்பறை நவின்று கறங்கவு
மழுக்கடை யாம லாண்டுகொண் டருள்பவன்
கழுக்கடை தன்னைக் கைக்கொண் டருளியு
மூல மாகிய மும்மல மறுக்குந்
தூய மேனிச் சுடர்விடு சோதி
காதல னாகிக் கழுநீர் மாலை
யேல்வுடைத் தாக வெழில்பெற வணிந்து
மரியொடு பிரமற் களவறி யாதவன்
பரிமா வின்மிசைப் பயின்ற வண்ணமு
மீண்டு வாரா வழியருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி யாகவும்
பத்திசெய் யடியரைப் பரம்பரத் துய்ப்பவ
னுத்தர கோச மங்கையூ ராகவு
மாதி மூர்த்திகட் கருள்புரிந் தருளிய
தேவ தேவன் றிருப்பெய ராகவு
மிருள்கடிந் தருளிய வின்ப வூர்தி
யருளிய பெருமை யருண்மலை யாகவு
மெப்பெருந் தன்மையு மெவ்வெவர் திறமு
மப்பரி சதனா லாண்டுகொண் டருளி
நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
வேல வென்னை யீங்கொழித் தருளி

அவனுடைய கொடி, யாறு, முரசு, படை, மாலை,
ஊர்தி, நாடு, ஊர், பேர், மலை என்னும் பத்துச் சிறப்பு

ஆற்றல்-அது உடை, அழகு அமர் திருஉரு,
நீற்றுக்கோடி[1] நிமிர்ந்து, காட்டியும் ;
ஊனம்-தன்னை ஒருங்கு உடன் அறுக்கும்
ஆனந்தம்மே, ஆறு அருளியும் ;
மாதில் கூறுஉடை மாப்பெரும் கருணையன்
நாதப் பெரும்பறை நவின்று கறங்கவும் ;[2]
அழுக்கு அடையாமல் ஆண்டுகொண்டருள்பவன்
கழுக்கடை[3] தன்னைக் கைக்கொண்டருளியும் ;
மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்,
தூயமேனி, சுடர்விடு சோதி
காதலன் ஆகி, கழுநீர் மாலை
ஏல்வு[4] உடைத்து ஆக, எழில்பெற, அணிந்தும் ;
அரியொடு பிரமற்கு அளவு அறியாதவன்
பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும் ;
மீண்டு வாராவழி அருள் புரிபவன்
பாண்டி நாடே பழம்பதி ஆகவும்,
பத்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்
உத்தரகோச மங்கை ஊர் ஆகவும்,
ஆதிமூர்த்திகட்கு அருள்புரிந்தருளிய
தேவ-தேவன் திருப்பெயர் ஆகவும்,
இருள் கடிந்தருளிய இன்ப ஊர்தி
அருளிய பெருமை அருள்மலை ஆகவும்,
எப் பெருந் தன்மையும், எவ்எவர் திறனும்,
அப் பரிசு-அதனால் ஆண்டு கொண்டருளி ;

என்னை இங்கு இருத்தினன்

நாயினேனை நலம் மலி தில்லையுள்,
கோலம் ஆர் தரு பொதுவினில்,[5] ' வருக ' என,
ஏல,[6] என்னை ஈங்கு ஒழித்தருளி ;

1 திருநீற்றின் கோடுகள், கொடி.
2 ஒலிக்கவும்.
3 முத்தலைவேல்.
4 பொருத்தம்.
5 அம்பலத்தில்.
6 பொருந்த.

யன்றுடன் சென்ற வருள்பெறு மடியவ
ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியு
மெய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாதமெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்தநின் றேங்கின ரேங்கவு
மெழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
யிறைவ னீண்டிய வடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளின
னொலிதரு கைலை யுயர்கிழ வோனே.

திருச்சிற்றம்பலம்.

உடன் செல்ல இயலாத அடியார்களின் பரிவு

அன்று உடன் சென்ற அருள்பெறும் அடியவர்
ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியும் ;
எய்த வந்திலாதார் எரியில் பாயவும்,
மால்[1] - அது ஆகி, மயக்கம் எய்தியும்,
பூதலம்-அதனில் புரண்டு வீழ்ந்து அலறியும்,
கால் விசைத்து ஓடி, கடல்புக மண்டி,
'நாத! நாத!' என்று அழுது அரற்றி,
பாதம் எய்தினர் பாதம் எய்தவும் ;
'பதஞ்சலிக்கு அருளிய பரம-நாடக' என்று
இதம்[2] சலிப்பு எய்த நின்று ஏங்கினர் ஏங்கவும் ;

புலியூரின் பொலிவு

எழில் பெறும் இமயத்து இயல்பு உடை அம்பொன்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில்,[3] நடம்நவில்
கனிதரு செவ்வாய் உமையொடு, காளிக்கு,
அருளிய திருமுகத்து, அழகு உறுசிறு நகை,
இறைவன், ஈண்டிய அடியவரோடும்,
பொலிதரு புலியூர்ப்புக்கு, இனிது அருளினன்-
ஒலி[4] தரு கைலை' உயர் கிழவோனே.

1 வேட்கை

2 இருதயம், உள்ளம்

3 அம்பலத்தில

4 தெய்வப்பாடல்களின் ஒலி, இசை ஒலி, சிவ சிவ எனனும ஒலி

திருச்சிற்றம்பலம்

மூன்றுவது

திருவண்டப் பகுதி

(சிவனது தூலசூக்குமத்தை வியந்தது)

அண்டப் பகுதியி னுண்டைப் பிறக்க
மளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
யொன்றனுக் கொன்று நின்றெழில் பகரி
னூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
விண்ணுழை கதிரின் றுண்ணணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன் றெரியின்
வேதியன் றொகையொடு மாலவன் மிகுதியுந்
தோற்றமுஞ் சிறப்பு மீற்றொடு புணரிய
மாப்பே ரூழியு நீக்கமு நிலையுஞ்
சூக்கமொடு தூலத்துச் சூறை மாருதத்
தெறியது வளியிற்
கொட்கப் பெயர்க்குங் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவு டிருத்தகு
மறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடு பேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னுடொறு
மருக்கனிற் சோதி யமைத்தோன் றிருத்தகு

மூன்றாவது

திருஅண்டப் பகுதி

பெருமையும் ஆற்றலும்

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்,[1]
அளப்பு-அரும் தன்மை, வளப் பெரும் காட்சி-
ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில்பகரின்-
நூற்று ஒரு கோடியின் மேற்பட விரிந்தன ;
இல்நுழை கதிரின் துன் அணுப் புரைய ;
சிறிய ஆகப் பெரியோன். தெரியின்-
வேதியன்[2] தொகையோடு மால்-அவன் மிகுதியும்,
தோற்றமும், சிறப்பும், ஈற்றொடு புணரிய
மாப் பேர் ஊழியும்,[3] நீக்கமும், நிலையும்,
சூக்கமொடு,[4] தூலத்து,[5] சூறை-மாருதத்து[6]
எறியது வளியின்[7]
கொட்கப்[8] பெயர்க்கும் குழகன்;[9] முழுவதும்

முத்தொழிலுக்கும், வீடு பேற்றுக்கும், ஐம்பூதங்களுக்கும் முதல்வன்.

படைப்போன் படைக்கும் பழையோன் ; படைத்தவை
காப்போன் காக்கும் கடவுள் ; காப்பவை
கரப்போன் ; கரப்பவை கருதாக்
கருத்துடைக் கடவுள் ; திருத்தகும்
அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்
வீடு-பேறு ஆய், நின்ற விண்ணோர் பகுதி
கீடம்[10] புரையும் கிழவோன் ; நாள் தொறும்
அருக்கனில்[12] சோதி அமைத்தோன் திருத்தகு

1 பெருக்கம், மிகுதி, தொகுதி.
2 பிரமன
3 அழியுங்காலமும்
4 நுண்மையொடு
5 பருமையும்
6 சுழல காற்றினது
7 சிறுகாற்றுப்போல
8 சுழல
9 அழகன, இளைஞன்—சிவபெருமான்
10 புழு
11 கதிரவனிடத்தில்

மதியிற் றண்மை வைத்தோன் றிண்டிறற்
றீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழறிகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவு
மனைத்தனைத் தவ்வயி னடைத்தோ னஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னே ரில்லோன் றானே காண்க
வேனத் தொல்லெயி றணிந்தோன் காண்க
கானப் புலியுரி யரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறு நினைதொறு
மாற்றேன் காண்க வந்தோ கெடுவே
னின்னிசை வீணையி லிசைந்தோன் காண்க
வன்னதொன் றவ்வயி னறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
வற்புதன் காண்க வனேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லாச் சேட்சியன் காண்க
பத்தி வலையிற் படுவோன் காண்க
வொருவ னென்னு மொருவன் காண்க
விரிபொழின் முழுதாய் விரிந்தோன் காண்க
வணுத்தருந் தன்மையி லையோன் காண்க
வினைப்பரும் பெருமையீசன் காண்க
வரியதி லரிய வரியோன் காண்க
மருவியெப் பொருளும் வளர்ப்போன் காண்க
நூலுணர் வுணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
வந்தமு மாதியு மகன்றோன் காண்க

மதியில் தண்மை வைத்தோன்; திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன்; பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன்; மேதகு
காலின் ஊக்கம் கண்டோன்; நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்-என்று என்று
எனைப் பல கோடி, எனைப் பல பிறவும்,
அனைத்து-அனைத்து, அவ்வயின் அடைத்தோன்-அஃதான்று-

புகழ்தல்

முன்னோன் காண்க! முழுதோன் காண்க!
தன் நேர் இல்லோன்-தானே காண்க!
ஏனத்[1] தொல் எயிறு[2] அணிந்தோன் காண்க!
கானப் புலி உரி அரையோன் காண்க!
நீற்றோன் காண்க! நினைதொறும் நினைதொறும்,
ஆற்றேன் காண்க! அந்தோ! கெடுவேன்!
இன் இசை வீணையில் இசைந்தோன் காண்க!
அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன் காண்க!
பரமன் காண்க! பழையோன் காண்க!
பிரமன், மால், காணாப் பெரியோன் காண்க!
அற்புதன் காண்க! அநேகன்[3] காண்க!
சொல்-பதம் கடந்த தொல்லோன்[4] காண்க!
சித்தமும் செல்லாச் சேட்சியன்[5] காண்க!
பத்தி-வலையில் படுவோன் காண்க!
ஒருவன் என்னும் ஒருவன் காண்க!
விரி பொழில் முழுதாய் விரிந்தோன் காண்க!
அணுத் தரும் தன்மையில் ஐயோன்[6] காண்க!
இணைப்பு-அரும் பெருமை ஈசன் காண்க!
அரியதில் அரிய அரியோன் காண்க!
மருவி[7] எப் பொருளும் வளர்ப்போன் காண்க!
நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க!
மேலொடு, கீழாய், விரிந்தோன் காண்க!
அந்தமும், ஆதியும், அகன்றோன்[8] காண்க!

1 பன்றியின்
2 பல்
3 பலவாகவுள்ளவன்
4 பழமையாகவுள்ளவன்
5 சேய்மையிலுள்ளவன்
6 நுண்ணியோன்
7 கலந்து
8 கடந்தவன்

பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வது மானோன் காண்க
கற்பமு மிறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறு மீசன் காண்க
தேவரு மறியாச் சிவனே காண்க
பெண்ணா ணலியெனும் பெற்றியன் காண்க
கண்ணா லியானுங் கண்டேன் காண்க
வருணனி சுரக்கு மமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
வவனெனை யாட்கொண் டருளினன் காண்க
குவளைக் கண்ணி கூறன் காண்க
வவளுந் தானு முடனே காண்க
பரமா னந்தப் பழங்கட லதுவே
கருமா முகிலிற் றோன்றித்
திருவார் பெருந்துறை வரையி லேறித்
திருத்தகு மின்னொளி திசைதிசை விரிய
வைம்புலப் பந்தனை வாளர விரிய
வெந்துயர்க் கோடை மாத்தலை கரப்ப
நீடெழிற் றோன்றி வாளொளி மிளிர
வெந்தம் பிறவியிற் கோப மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரை யஞ்சலி காந்தள் காட்ட
வெஞ்சா வின்னரு ணுண்டுளி கொள்ளச்
செஞ்சுடர் வெள்ளந் திசைதிசை தெவிட்டவரையுறக்
கேதக் குட்டங் கையற வோங்கி
யிருமுச் சமயத் தொருபேய்த் தேரினை
நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணந்

பந்தமும், வீடும், படைப்போன் காண்க!
நிற்பதும், செல்வதும், ஆனோன் காண்க!
கற்பமும்,[1] இறுதியும், கண்டோன் காண்க!
யாவரும் பெறஉறும் ஈசன் காண்க!
தேவரும் அறியாச் சிவனே காண்க!
பெண், ஆண், அலி, எனும் பெற்றியன் காண்க!
கண்ணால் யானும் கண்டேன் காண்க!
அருள் நனிசுரக்கும் அமுதே காண்க!
கருணையின் பெருமை கண்டேன் காண்க!
புவனியில் சேவடி தீண்டினன் காண்க!
சிவன்என யானும் தேறினன் காண்க!
அவன்எனை ஆட்கொண்டு அருளினன் காண்க!
குவளைக் கண்ணி – கூறன்[2] காண்க!
அவளும், தானும், உடனே காண்க!

ஆனந்த மழை பொழியும் கடல்

பரம–ஆனந்தப் பழம் கடல்—அதுவே
கரு மா முகிலின்[3] தோன்றி,
திரு ஆர் பெருந்துறை வரையில் ஏறி,
திருத்தகு மின் ஒளிதிசை–திசைவிரிய,
ஐம் புலப் பந்தனை வாள் அரவு இரிய,
வெம் துயர்க் கோடை மாத்தலை கரப்ப,
நீடு எழில்தோன்றி, வாள்ஒளி மிளிர,
எம்–தம் பிறவியில் கோபம்[4] மிகுத்து,
முரசு எறிந்து, மாப்பெரும் கருணையின் முழங்கி,
பூப் புரை அஞ்சலி[5] காந்தள்[6] காட்ட,
எஞ்சா இன் அருள் நுண் துளி கொள்ள,
செம்சுடர் வெள்ளம் திசை–திசை தெவிட்ட,[7] வரைஉறக்
கேதக்குட்டம்[8] கையற ஓங்கி,
இருமுச் சமயத்து ஒரு பேய்த்தேரினை,[9]
நீர்நசை தரவரும், நெடும் கண், மான் கணம்

1 கற்பகாலம்
2 நீல மலர் போன்ற கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகத்தில் உடையவன் – சிவபெருமான
3 மேகத்தைப்போல்
4 இந்திரகோபப் பூச்சி, பட்டுப் பூச்சி
6 கைகூப்பி வணங்கல்
5 காந்தள் மலர்
7 திரண்டு பெருக
8 துன்பமாகிய சிறு குளம்
9 கானல் நீரை

தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடு
மவப்பெருந் தாப நீங்கா தசைந்தன
வாயிடை வானப் பேரியாற் றகவயின்
பாய்ந்தெழுந் தின்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தமாக் கரைபொரு தலைத்திடித்
தூழூ ழோங்கிய நங்க
ளிருவினை மாமரம் வேர்ப றித்தெழுந்
துருவ வருணீ ரோட்டா வருவரைச்
சந்தின் வான்சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க் குளவாய் கோலி நிறையகின்
மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலி னோக்கி
யருச்சனை வயலு ளன்புவித் திட்டுத்
தொண்ட வுழவ ராரத் தந்த
வண்டத் தரும்பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
வருந்தவர்க் கருளு மாதி வாழ்க
வச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலு மீர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழிருந் துன்பந் துடைப்போன் வாழ்க
வெய்தினர்க் காரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
வேதிலர்க் கேதிலெம் மிறைவன் வாழ்க
காதலர்க் கெய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சர வாட்டிய நம்பன் போற்றி
பிச்சைமை யேற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய்க் கிடப்பன கிடாஅய்
நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோ

தவப் பெரு வாயிடைப் பருகி, தளர்வொடும்,
அவப் பெரும் தாபம் நீங்காது அசைந்தன;
ஆயிடை, வானப்பேர்-யாற்று அகவயின்
பாய்ந்து, எழுந்து இன்பப் பெரும்சுழி கொழித்து,
சுழித்து எம்பந்தம் மாக்கரைபொருது, அலைத்து, இடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம்வேர் பறித்து, எழுந்து
உருவ,[1] அருள்-நீர்ஓட்டா, அருவரைச்
சந்தின்[2] வான்சிறை[3] கட்டி, மட்டு[4] அவிழ்
வெறி[5] மலர்க்குளவாய்[6] கோலி,[7] நிறை அகில்
மாப்புகைக்கரைசேர் வண்டுஉடைக் குளத்தின்
மீக் கொள மேல்-மேல் மகிழ்தலின் நோக்கி,
அருச்சனை வயலுள் அன்புவித்து இட்டு,
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத்து அரும் பெறல் மேகன்,[8] வாழ்க!

பேரின்பத்தில் திளைத்துத் திருவருளைப் புகழ்தல்

கரும்-பணக்-கச்சைக்-கடவுள்,[9] வாழ்க!
அரும்-தவர்க்கு அருளும் ஆதி, வாழ்க!
அச்சம் தவிர்த்த சேவகன், வாழ்க!
நிச்சலும் ஈர்த்து ஆட்கொள்வோன், வாழ்க!
சூழ் இரும் துன்பம் துடைப்போன், வாழ்க!
எய்தினர்க்கு ஆர்அமுது அளிப்போன், வாழ்க!
கூர் இருள் கூத்தொடு குனிப்போன்,[10] வாழ்க!
பேர்-அமைத்-தோளி-காதலன்,[11] வாழ்க!
ஏதிலார்க்கு ஏதில் எம் இறைவன், வாழ்க!
காதலர்க்கு எய்ப்பினில்-வைப்பு[12]-வாழ்க!
நச்சு அரவு ஆட்டிய நம்பன், போற்றி!
பிச்சு அமை ஏற்றிய பெரியோன், போற்றி!
நீற்றொடு தோற்ற வல்லோன், போற்றி!-நால்-திசை
நடப்பன நடாஅய், கிடப்பன கிடாஅய்,
நிற்பன நிறீஇ,
சொல்-பதம்[13] கடந்த தொல்லோன்;

1 அழகிய
2 சந்தன மரங்கள்
3 பெரிய அணை
4 தேன
5 மணம்
6 குளத்தின் உள்ளிடம்
7 வளைத்து
8 மேகம் போல் அருள் மழை பொழிபவன்-சிவபெருமான
9 கரிய படத்தையுடைய பாமபை அரைககசசையாக அணிந்தவன்
10 ஆடுவோன்
11 இளமூங்கில போன்ற தோளை யுடையவளின (உமையம்மை) கணவன-சிவபெருமான
12 இளைதத காலததில் உதவும பொருள, சேமநிதி.
13 சொல்லின் ஆற்றல்

ணுள்ளத் துணர்ச்சியிற் கொள்ளவும் படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியு மில்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவி னாற்றம் போன்றுயர்ந் தெங்கு
மொழிவற நிறைந்து மேவிய பெருமை
யின்றெனக் கெளிவந் தருளி
யழிதரு மாக்கை யொழியச் செய்த வொண்பொரு
ளின்றெனக் கெளிவந் திருந்தனன் போற்றி
யளிதரு மாக்கை செய்தோன் போற்றி
யூற்றிருந் துள்ளங் களிப்போன் போற்றி
யாற்றா வின்ப மலர்ந்தலை செய்யப்
போற்றா வாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக் குவாஅன் மாமணிப் பிறக்க
மின்னொளி கொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க் கொளித்து
முறையுளி யொற்றி முயன்றவர்க் கொளித்து
மொற்றுமை கொண்டு நோக்கு முள்ளத்
துற்றவர் வருந்த வுறைப்பவர்க் கொளித்து
மறைத்திற நோக்கி வருந்தினர்க் கொளித்து
மித்தந் திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்
கத்தந் திரத்தி னவ்வயி னொளித்து
முனிவற நோக்கி நனிவரக் கௌவி
யாணெனத் தோன்றி யலியெனப் பெயர்ந்து
வாணுதற் பெண்ணென வொளித்துஞ் சேண்வயி
னைம்புலன் செலவிடுத் தருவரை தொறும்போய்த்
துற்றவை துறந்த வெற்றுயி ராக்கை
யருந்தவர் காட்சியுட் டிருந்த வொளித்து
மொன்றுண் டில்லை யென்றறி வொளித்தும்
பண்டே பயிறொறு மின்றே பயிறொறு
மொளிக்குஞ் சோரனைக் கண்டன

உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படாஅன்;
கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்;
விண்முதல்பூ,தம் வெளிப்பட வகுத்தோன்;
பூவில் நாற்றம்[1] போன்று உயர்ந்து, எங்கும்
ஒழிவு அற நிறைந்து, மேவிய பெருமை;
இன்று எனக்கு எளிவந்து, அருளி,
அழிதரும் ஆக்கை[2] ஒழியச் செய்த ஒண் பொருள்;
இன்று எனக்கு எளிவந்து, இருந்தனன் - போற்றி!
அளிதரும் ஆக்கை[3] செய்தோன், போற்றி!
ஊற்றிருந்து உள்ளம் களிப்போன், போற்றி!-
ஆற்றா இன்பம் அலர்ந்து அலை செய்ய,
போற்றா ஆக்கையைப் பொறுத்தல் புகலேன் :

காணா மாணிக்கம் கைநெல்லி ஆயிற்று

மரகதக் குவாஅல்,[4] மாமணிப் பிறக்கம்,[5]
மின் ஒளி கொண்ட பொன்ஒளி திகழ,
திசைமுகன்[6] சென்று தேடினர்க்கு ஒளித்தும்;
முறையுளி ஒற்றி முயன்றவர்க்கு ஒளித்தும்;
ஒற்றுமை கொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த, உறைப்பவர்க்கு[7] ஒளித்தும்;
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கு ஒளித்தும்;
'இத்தந்திரத்தில் காண்டும்' என்று இருந்தோர்க்கு,
அத் தந்திரத்தில், அவ்வயின், ஒளித்தும்;
முனிவு[8] அற நோக்கி, நனிவரக் கௌவி,
ஆண் எனத் தோன்றி, அலி எனப் பெயர்ந்து,
வாள்நுதல் பெண் என ஒளித்தும்; சேண்வயின்,
ஐம்புலன் செலவிடுத்து, அருவரை தொறும்போய்,
துற்றவை[9] துறந்த வெற்று உயிர் ஆக்கை
அரும் - தவர் காட்சியுள் திருந்த ஒளித்தும்;
ஒன்று உண்டு, இல்லை, என்ற அறிவு ஒளித்தும்;
'பண்டேபயில் தொறும், இன்றேபயில் தொறும்,
ஒளிக்கும் சோரனைக் கண்டனம்;

1 மணம்
2 அழியும் உடல்
3 அன்பினால் குழையும் உடல்
4 குவியல்
5 கூட்டம், பெருக்கம்
6 பிரமன்
7 உறுதியாக நிற்பவருக்கு
8 வெறுப்பு
9 நுகர்ந்தவை

மார்மி னார்மி னாண்மலர்ப் பிணையலிற்
றாடளை யிடுமின்
சுற்றுமின் சூழ்மின் றொடர்மின் விடேன்மின்
பற்றுமி னென்றவர் பற்றுமுற் றொளித்துந்
தன்னே ரில்லோன் றானே யான தன்மை
யென்னே ரனையோர் கேட்கவந் தியம்பி
யறைகூவி யாட்கொண் டருளி
மறையோர் கோலங் காட்டி யருளலு
முலையா வன்பென் புருக வோலமிட்
டலைகடற் றிரையி னார்த்தார்த் தோங்கித்
தலைதடுமாறா வீழ்ந்து புரண்டலறிப்
பித்தரின் மயங்கி மததரின் மதித்து
நாட்டவர் மருளவுங் கேட்டவர் வியப்பவுங்
கடக்களி றேற்றாத் தடப்பெரு மதத்தி
னாற்றே னாக வவயவஞ் சுவைதரு
கோற்றேன் கொண்டு செய்தன
னேற்றார் மூதூ ரெழினகை யெரியின்
வீழ்வித் தாங்கன்
றருட்பெருந் தீயி னடியோ மடிக்குடி
லொருத்தரும் வழாமை யொடுக்கினன்
றடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்
சொல்லுவ தறியேன் வாழி முறையோ
தரியே னாயேன் றானெனைச் செய்தது
தெரியே னாவா செத்தே னடியேற்
கருளிய தறியேன் பருகியு மாரேன்
விழுங்கியு மொல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடற் றிரை புரைவித்
துவாக்கட னள்ளுநீ ருள்ளகந் ததும்ப
வாக்கிறந் தமுத மயிர்க்கா றோறுந்

ஆர்மின்! ஆர்மின்! நாள் மலர்ப் பிணையலில்
தாள் தளை இடுமின்!
சுற்றுமின்! சூழ்மின்! தொடர்மின்! விடேன்மின்!
பற்றுமின்!' என்றவர் பற்றுமுற்று ஒளித்தும்;
தன்நேர் இல்லோன் தானே ஆன தன்மை
என்நேர் அனையார் கேட்கவந்து இயம்பி,
அறைகூவி,[1] ஆட்கொண்டருளி, [1] வலிய அழைத்து
மறையோர் கோலம் காட்டி அருளலும்;—
உலையா அன்பு என்பு உருக ஓலம் இட்டு,
அலைகடல் திரையின் ஆர்த்து—ஆர்த்து ஓங்கி,
தலைதடுமாறு வீழ்ந்து, புரண்டு அலறி,
பித்தரின் மயங்கி: மத்தரின் மதித்து;
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்,
கடக்களிறு ஏற்றத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேன் ஆக, அவயவம் சுவை தரு
கோல்-தேன் கொண்டு செய்தனன்;
ஏற்றார்-மூதூர்[2] எழில் நகை எரியின் [2] முப்புரம்
வீழ்வித்தாங்கு, அன்று,
அருள் பெருந் தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வழாமை ஒடுக்கினன்;
தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்:

கருணைத் தேன் விளைத்த ஆனந்தம்

சொல்லுவது அறியேன்; வாழி! முறையோ!
தரியேன் நாயேன்; தான்எனைச் செய்தது
தெரியேன்; ஆ! ஆ! செத்தேன்; அடியேற்கு
அருளியது அறியேன்; பருகியும் ஆரேன்;
விழுங்கியும் ஒல்லகில்லேன்:
செழும், தண் பால்-கடல்திரை புரைவித்து,[3] [3] போலச் செய்து
உவாக்கடல் நள்ளும் நீர் உள்-அகம் ததும்ப,
வாக்கு இறந்து, அமுதம், மயிர்கால்தோறும்,

தேக்கிடச் செய்தனன் கொடியே னூன்றழைக்
குரம்பை தோறு நாயுட லகத்தே
குரம்பு கொண்டின்றேன் பாய்த்தினனி ரம்பிய
வற்புத மான வமுத தாரைக
ளெற்புத் துளைதொறு மேற்றின னுருகுவ
துள்ளங் கொண்டோ ருருச்செய் தாங்கெனக்
கள்ளூ றாக்கை யமைத்தன னொள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
யென்னையு மிருப்ப தாக்கின னென்னிற்
கருணை வான்றேன் கலக்க
வருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றியோனே.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

போற்றித் திருவகவல்

(அரிய திருவடி எளிதாயிற்று)

நான்முகன் முதலா வானவர் தொழுதெழ
வீரடி யாலே மூவுல களந்து
நாற்றிசை முனிவரு மைம்புலன் மலரப்
போற்றிசெய் கதிர்முடித் திருநெடு மாலன்
றடிமுடி யறியு மாதர வதனிற்
கடுமுர ணேன மாகிமுன் கலந்
தேழ்தல முருவ விடந்து பின்னெய்த்
தூழி முதல்வ சயசய வென்று
வழுத்தியுங் காணா மலரடி யிணைகள்
வழுத்துதற் கெளிதாய் வார்கட லுலகினில்
யானை முதலா வெறும்பீ றாய
வூனமி லியோனியி னுள்வினை பிழைத்து
மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத்
தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்து

தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்-தழைக்[1]
குரம்பை[2] தோறும், நாய்-உடல் அகத்தே
குரம்பு[3] கொண்டு, இன்தேன் பாய்த்தினன்; நிரம்பிய
அற்புதமான அமுத-தாரைகள்,
எற்பு[4]த் துளைதொறும், ஏற்றினன்; உருகுவது
உள்ளம் கொண்டு ஓர்உருச் செய்தாங்கு-எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்; ஒள்ளிய
கன்னல்[5] கனிதேர் களிறுஎன, கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன்; என்னில்
கருணை வான் தேன் கலக்க,
அருளொடு பரா-அமுது ஆக்கினன்-
பிரமன், மால், அறியாப் பெற்றியோனே

1 ஊறுகிய கூரையை யுடைய
2 குடில், சிறு வீடு.
3 செய்கரை, அணை, வரப்பு, நீர்பாயும் மதகு.
4 எலும்பு
5 கரும்பு

திருச்சிற்றம்பலம்

நான்காவது

போற்றித் திருஅகவல்

அரிய திருவடி எளிதாயிற்று.

நான்முகன் முதலா வானவர் தொழுது எழ,
ஈர்-அடியாலே மூ-உலகு அளந்து,
நால்திசை முனிவரும் ஐம்புலன் மலர,
போற்றிசெய் கதிர்முடித் திருநெடுமால், அன்று
அடி, முடி, அறியும் ஆதரவு-அதனில்,
கடுமுரண் ஏனம் ஆகி, முன் கலந்து,
ஏழ்தலம் உருவ இடந்து, பின் எய்த்தும்,
ஊழிமுதல்வ, சய! சய! என்று,
வழுத்தியும் காணா மலர்அடி-இணைகள்,
வழுத்துதற்கு எளிது ஆய்-வார் கடல் உலகினில்,

கருவிலிருந்து பிறப்புவரை உள்ள இடர்

யானை முதலா எறும்பு ஈறாய,
ஊனம் இல், யோனியின் உள்வினை பிழைத்தும்;
மானிடப் பிறப்பினுள், மாதா உதரத்து,
ஈனம் இல் கிருமிச் செருவினில்[6] பிழைத்தும்;

6 நுண்ணிய புழுக்களின் மாறுபாட்டில்

கரு. மொருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்து
மிருமதி விளைவி னொருமையிற் பிழைத்து
மும்மதி தன்னு ளம்மதம் பிழைத்து
மீரிரு திங்களிற் பேரிருள் பிழைத்து
மஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்து
உ0. மாறு திங்களி னூறலர் பிழைத்து
மேழு திங்களிற் றாழ்புவி பிழைத்து
மெட்டுத் திங்களிற் கட்டமும் பிழைத்து
மொன்பதில் வருதரு துன்பமும் பிழைத்துந்
தக்க தசமதி தாயொடு தான்படுந்
உரு. துக்க சாகரத் துயரிடைப் பிழைத்து
மாண்டுக டோறு மடைந்தவக் காலை
யீண்டியு மிருத்தியு மெனைப்பல பிழைத்துங்
காலை மலமொடு கடும்பகற் பசிநிசி
வேலை நித்திரை யாத்திரை பிழைத்துங்
௩0. கருங்குழற் செவ்வாய் வெண்ணகைக் கார்மயி
லொருங்கிய சாய னெருங்கியுண் மதர்த்துக்
கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்
தெய்த்திடை வருந்த வெழுந்து புடைபரந்
தீர்க்கிடை போகா விளமுலை மாதர்தங்
௩ரு. கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்
பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுண்
மத்தக் களிறெனு மவாவிடைப் பிழைத்துங்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்துஞ்
செல்வ மென்னு மல்லலிற் பிழைத்தும்
௪0. நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புலவரம் பாய பலதுறை பிழைத்துந்
தெய்வ மென்பதோர் சித்த முண்டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலு

ஒருமதித் தான்றியின்[1] இருமையில் பிழைத்தும்;
இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்;
மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்;
ஈர்இரு திங்களில் பேர்இருள் பிழைத்தும்;
அஞ்சு திங்களில் முஞ்சுதல்[2] பிழைத்தும்;
ஆறு திங்களில் ஊறுஅலர் பிழைத்தும்;
ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்;
எட்டுத் திங்களில் கட்டமும்[3] பிழைத்தும்;
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்;
தக்க தச-மதி[4] தாயொடு தான்படு
துக்க-சாகரத்[5] துயரிடைப் பிழைத்தும்

பிறந்த பின் உள்ள இடர்

ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
ஈண்டியும், இருத்தியும், எனைப்பல பிழைத்தும்;
காலை மலமொடு, கடும்பகல்பசி, நிசி-
வேலை நித்திரை, யாத்திரை, பிழைத்தும்;
கரும்குழல்,[6] செவ்வாய்; வெள்-நகை; கார்மயில்
ஒருங்கிய சாயல்; நெருங்கிய, உள்மதர்த்து,
கச்சு அறநிமிர்ந்து, கதிர்த்து, முன்பணைத்து,
எய்த்து[7] இடைவருந்த எழுந்து, புடைபரந்து,
ஈர்க்கு இடைபோகா இளமுலை மாதர்-தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்;
பித்த உலகர் பெரும் துறைப் பரப்பினுள்
மத்தக் களிறு[8]எனும் அவாவிடைப் பிழைத்தும்;
கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்;
செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்;
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்;
புலவரம்பு[9] ஆகிய பலதுறை பிழைத்தும்;

மெய்ப்பொருள் காணத் தடையாக வுள்ளவை

தெய்வம் என்பது ஓர்சித்தம் உண்டாகி,
முனிவு[10] இலாதது ஓர்பொருள்-அது கருதலும்

1 எல்லையில் தான்றிக் காய் போல
2 சாதல்
3 கஷ்டம், துன்பம்.
4 பத்தாம் மாதம்
5 துன்பக்கடல்
6 கரிய கூந்தல்
7 கவலையுற்று
8 மதம்கொண்ட யானை
9 அறிவின் எல்லை
10 வெறுப்பு

மாறு கோடி மாயா சத்திகள்
சரு. வேறு வேறுதம் மாயைக டொடங்கின
வாத்த மாஞு ரயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
ருய. விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிக டத்த மதங்களே
வமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
ருரு. சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
யதிற்பெரு மாயை யெனைப்பல சூழவுந்
தப்பா மேதாம் பிடித்தது சலியாத்
சூய. தழலது கண்ட மெழுகது போலத்
தொழுதுள முருகி யழுதுடல் கம்பித்
தாடியு மலறியும் பாடியும் பரவியுங்
கொடிறும் பேதையுங் கொண்டது விடாதெனும்
படியே யாகிநல் லிடையறு வன்பிற்
சூரு. பசுமரத் தாணி யறைந்தாற் போலக்
கசிவது பெருகிக் கடலென மறுகி
யகங்குழைந் தனுகுல மாய்மெய் விதிர்த்துச்
சகம்பே யென்று தம்மைச் சிரிப்ப
நாணது வொழிந்து நாடவர் பழித்துரை
எய. பூணது வாகக் கோணுத லின்றிச்
சதிரிழந் தறிமால் கொண்டு சாருங்
கதியது பரம வதிசய மாகக்
கற்ரு மனமெனக் கதறியும் பதறியு

ஆறு கோடி மாயா-சத்திகள்

வேறு வேறு தம்மாயைகள் தொடங்கின;
ஆத்தம்[1] ஆனார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி, நாத்தழும்பு ஏறினர்;
சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
பற்றி அழைத்துப் பதறினர்; பெருகவும்
விரதமே[2] பரம் ஆக, வேதியரும்,
சரதம்[3] ஆகவே, சாத்திரம் காட்டினர்;
சமய-வாதிகள் தம்-தம் மதங்களே
அமைவதுஆக, அரற்றி, மலைந்தனர்
மிண்டிய மாயா-வாதம் என்னும்
சண்ட-மாருதம்[4] சுழித்து அடித்து, ஆஅர்த்து,
உலோகாயதன் எனும் ஒள் திறல் பாம்பின்
கலா-பேதத்த[5] கடுவிடம்[6] எய்தி,
அதில்பெரு மாயை எனைப் பலசூழவும்,

ஞானாசிரியனை உறுதியாகப் பற்றல்

தப்பாமே, தாம்பிடித்தது சலியா,
தழல்-அது கண்ட மெழுகு-அது போல,
தொழுது, உளம்உருகி, அழுது, உடல் கம்பித்து,[7]
ஆடியும், அலறியும், பாடியும், பரவியும்,
'கொடிறும்,[8] பேதையும், கொண்டது விடாது' எனும்
படியே ஆகி, நல்இடை அறா அன்பின்,
பசுமரத்து ஆணி அறைந்தால் போல,
கசிவது பெருகி, கடல்என மறுகி,
அகம் குழைந்து, அனுகுலம்[9] ஆய், மெய்விதிர்த்து,
சகம்[10] பேய், என்று தம்மைச் சிரிப்ப,
நாண்-அது ஒழிந்து, நாடவர் பழித்துரை
பூண்-அதுவாக, கோணுதல் இன்றி,
சதிர் இழந்து, அறி-மால் கொண்டு, சாரும்
கதியது பரம-அதிசயம் ஆக,
கற்றா[11] மனம் எனக் கதறியும், பதறியும்,

1 ஆப்தம், உண்மை அன்பு.
2 நோன்புகளே
3 உண்மை
4 கடுங்காற்று
5 மாறுமாறான பிரிவுகளை யுடைய
6 கொடிய நஞ்சு
7 நடுங்கி, ஆட்டங் கொண்டு.
8 குறடு
9 சார்வு, இசைவு.
10 உலகம்-உலகத்தவர்
11 (கன்று+ஆ) கன்றுள்ள பசு

மற்றோர் தெய்வங் கனவிலு நினையா
தருபரத் தொருவ னவனியில் வந்து
குருபர னாகி யருளிய பெருமையைச்
சிறுமையென் றிகழாதே திருவடி யிணையைப்
பிறிவினை யறியா நிழலது போல
முன்பின் னாகி முனியா தத்திசை
யென்புநைந் துருகி நெக்குநெக் கேங்கி
யன்பெனு மாறு கரையது புரள
நன்புல னொன்றி நாதவென் றரற்றி
யுரைதடு மாறி யுரோமஞ் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித் திருதய மலரக்
கண்களி கூர நுண்டுளி யரும்பச்
சாயா வன்பினை நாடொறுந் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி
மெய்தகு வேதிய னாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி
யாடக மதுரை யரசே போற்றி
கூட லிலங்கு குருமணி போற்றி
தென்றில்லை மன்றினு ளாடி போற்றி
யின்றெனக் காரமு தானாய் போற்றி
மூவா நான்மறை முதல்வா போற்றி
சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின்னா ருருவ விகிர்தா போற்றி
கன்னா ருரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
யாவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
யிடரைக் களையு மெந்தாய் போற்றி
யீசா போற்றி யிறைவா போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி

மற்றும்ஓர் தெய்வம் கனவிலும் நினையாது,
அருபரத்து ஒருவன் அவனியில்[1] வந்து,
குருபரன் ஆகி, அருளிய பெருமையை,
சிறுமை என்று இகழாதே, திருவடி-இணையை,
பிறிவினை அறியா நிழல்-அதுபோல,
முன் பின் ஆகி, முனியாது,[2] அத்திசை
என்பு[3] நைந்து உருகி, நெக்கு-நெக்கு ஏங்கி,
அன்பு எனும் ஆறுகரை-அதுபுரள,
நன்புலன் ஒன்றி 'நாத' என்று அரற்றி,
உரை தடுமாறி, உரோமம் சிலிர்ப்ப,
கர-மலர்[4] மொட்டித்து,[5] இருதயம் மலர,
கண்களி கூர, நுண் துளி அரும்ப,
சாயா[6] அன்பினை, நாள்தொறும் தழைப்பவர்
தாயே ஆகி, வளர்த்தனை-போற்றி!

போற்றி வணங்குதல்

மெய்தகு வேதியன் ஆகி, வினைகெட,
கைதரவல்ல கடவுள், போற்றி!
ஆடக[7] மதுரை அரசே, போற்றி!
கூடல் இலங்கு குருமணி, போற்றி!
தென் தில்லை மன்றினுள் ஆடி, போற்றி!
இன்று எனக்கு ஆர்அமுது ஆனாய், போற்றி!
மூவா[8] நான்மறை முதல்வா, போற்றி!
சே[9] ஆர் உருவ விகிர்தா, போற்றி!
கல் நார் உரித்த கனியே, போற்றி!
காவாய், கனகக் குன்றே,[10] போற்றி!
ஆ! ஆ! என்-தனக்கு அருளாய், போற்றி!
படைப்பாய், காப்பாய், துடைப்பாய், போற்றி!
இடரைக் களையும் எந்தாய், போற்றி!
ஈசா, போற்றி! இறைவா, போற்றி!
தேசப்[11] பளிங்கின் திரளே, போற்றி!

1 நிலவுலகில்
2 வெறுத்துத் தளராது
3 எலும்பு
4 கையாகிய மலர்
5 மொட்டுபோல் குவித்து
6 கெடாத, தளராத
7 பொன்மயமான
8 மூப்படையாத-என்றும் பயனுள்ள, நிலைத்த, ஒரு தன்மைத்தான
9 எருது
10 பொன்மலையே
11 ஒளியுள்ள

யரைசே போற்றி யமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதீ போற்றி விமலா போற்றி
யாதீ போற்றி யறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
யுடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி
யையா போற்றி யணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி
நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
யேனோர்க் கெளிய விறைவா போற்றி
மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை
யாழா மேயரு ளரசே போற்றி
தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
யத்தா போற்றி யரனே போற்றி
யுரையுணர் விறந்த வொருவா போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி
யருமையி லெளிய வழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருண் மலையே போற்றி
யென்னையு மொருவ னாக்கி யிருங்கழற்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பந் துடைப்பாய் போற்றி
வழுவிலா வானந்த வாரி போற்றி
யழிவது மாவதுங் கடந்தாய் போற்றி
முழுவது மிறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி

அரைசே, போற்றி! அமுதே; போற்றி!
விரை[1] சேர் சரண விகிர்தா,[2] போற்றி!
வேதி,[3] போற்றி!, விமலா,[4] போற்றி!
ஆதி, போற்றி! அறிவே, போற்றி!
கதியே, போற்றி! கனியே, போற்றி!
நதிசேர் செம்சடை நம்பா, போற்றி!
உடையாய், போற்றி! உணர்வே, போற்றி!
கடையேன் அடிமை கண்டாய், போற்றி!
ஐயா, போற்றி! அணுவே, போற்றி!
சைவா, போற்றி! தலைவா, போற்றி!
குறியே, போற்றி! குணமே, போற்றி!
நெறியே, போற்றி! நினைவே, போற்றி!
வானோர்க்கு அரிய மருந்தே, போற்றி!
ஏனோர்க்கு எளிய இறைவா, போற்றி!
மூ-ஏழ் சுற்றமும் முரண் உறு நரகிடை
ஆழாமே அருள் அரசே, போற்றி!
தோழா, போற்றி! துணைவா, போற்றி!
வாழ்வே, போற்றி! என்வைப்பே, போற்றி!
முத்தா, போற்றி! முதல்வா, போற்றி!
அத்தா, போற்றி! அரனே, போற்றி!
உரை, உணர்வு, இறந்த ஒருவ, போற்றி!
விரிகடல் உலகின் விளைவே, போற்றி!
அருமையில் எளிய அழகே, போற்றி!
கருமுகில்[5] ஆகிய கண்ணே, போற்றி!
மன்னிய திரு அருள் மலையே, போற்றி!
என்னையும் ஒருவன் ஆக்கி, இரும் கழல்
சென்னியில்[6] வைத்த சேவக, போற்றி!
தொழுதகை துன்பம் துடைப்பாய், போற்றி!
வழுவு இலா ஆனந்த-வாரி,[7] போற்றி!
அழிவதும், ஆவதும், கடந்தாய், போற்றி!
முழுவதும் இறந்த முதல்வா, போற்றி!
மான் நேர் நோக்கி மணாளா, போற்றி!

1 மணம்
2 வேறுவேறு தோற்றமாக விளங்குபவனே
3 நடுநாயகமாக உள்ளவனே, எல்லாம் அறிந்தவனே, வேதத்தால் போற்றப் படுபவனே.
4 மாசு அணுகாதவனே
5 சூல் முதிர்ந்த மேகம்
6 தலையில்
7 ஆனந்தககடல்

வானகத் தமரர் தாயே போற்றி
பாரிடை யைந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்ருய்த் திகழ்ந்தாய் போற்றி
கச0. வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்ருய் விளைந்தாய் போற்றி
யளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி
நனவிலு நாயேற் கருளினை போற்றி
கசரு. யிடைமரு துறையு மெந்தாய் போற்றி
சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
யாரூ ரமர்ந்த வரசே போற்றி
சீரார் திருவை யாரு போற்றி
யண்ணு மலையெம் மண்ணு போற்றி
கரு0. கண்ணு ரமுதக் கடலே போற்றி
யேகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானுய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
கருரு. மற்ருேர் பற்றிங் கறியேன் போற்றி
குற்ரு லத்தெங் கூத்தா போற்றி
கோகழி மேவிய கோவே போற்றி
யீங்கோய் மலையெம் மெந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கசூ0 கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
யடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
யித்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னு டுடைய சிவனே போற்றி
கசூரு. யெங்நாட் டவர்க்கு மிறைவா போற்றி
யேனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி

வானகத்து அமரர் தாயே, போற்றி!
பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய், போற்றி!
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய், போற்றி!
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய், போற்றி!
வளியிடை[1] இரண்டாய் மகிழ்ந்தாய், போற்றி!
வெளியிடை[2] ஒன்றாய் விளைந்தாய், போற்றி!
அளிபவர் உள்ளத்து அமுதே, போற்றி!
கனவிலும் தேவர்க்கு அரியாய், போற்றி!
நனவிலும் நாயேற்கு அருளினை, போற்றி!
இடை மருது உறையும், எந்தாய் போற்றி!
சடையிடைக் கங்கை தரித்தாய், போற்றி!
ஆரூர் அமர்ந்த அரசே, போற்றி!
சீர்ஆர் திருவையாறா, போற்றி!
அண்ணாமலை எம்அண்ணா, போற்றி!
கண்ஆர் அமுதக் கடலே, போற்றி!
ஏகம்பத்து உறை எந்தாய், போற்றி!
பாகம் பெண்உரு ஆனாய், போற்றி!
பராய்த்துறை மேவிய பரனே, போற்றி!
சிராப்பள்ளி மேவிய சிவனே, போற்றி!
மற்று ஓர்பற்று இங்கு அறியேன், போற்றி!
குற்றாலத்து எம் கூத்தா, போற்றி!
கோகழி மேவிய கோவே, போற்றி!
ஈங்கோய்மலை எம் எந்தாய், போற்றி!
பாங்குஆர் பழனத்து அழகா, போற்றி!
கடம்பூர் மேவிய விடங்கா, போற்றி!
அடைந்தவர்க்கு அருளும் அப்பா, போற்றி!
இத்தி[3] தன்னின்கீழ் இரு-மூவர்க்கு
அத்திக்கு[4] அருளிய அரசே, போற்றி!
தென்நாடு உடைய சிவனே, போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா, போற்றி!
ஏனக்-குருளைக்கு[5] அருளினை, போற்றி!
மானக் கயிலை மலையாய, போற்றி!

1 காற்றில்
2 வானவெளியில்
3 கல்லால மரம்
4 யானைக்கு
5 பன்றிக்குட்டிக்கு.

யருளிட வேண்டு மம்மான் போற்றி
யிருள்கெட வருளு மிறைவா போற்றி
தளர்ந்தே னடியேன் றமியேன் போற்றி
களங்கொளக் கருத வருளாய் போற்றி
யஞ்சே லிங்கென் றருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
யத்தா போற்றி யையா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி
பெரியாய் போற்றி பிரானே போற்றி
யரியாய் போற்றி யமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
யுறவே போற்றி யுயிரே போற்றி
சிறவே போற்றி சிவமே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
யலந்தே னாயே னடியேன் போற்றி
யிலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையா ரரிகே சரியா போற்றி
திருக்கழுக் குன்றிற் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தானே போற்றி
யருவமு முருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி
தோளா முத்தச் சுடரே போற்றி
யாளா னவர்கட் கன்பா போற்றி
யாரா வமுதே யருளே போற்றி

அருளிட வேண்டும் அம்மான், போற்றி!
இருள்கெட அருளும் இறைவா, போற்றி!
தளர்ந்தேன், அடியேன், தமியேன், போற்றி!
களம்[1] கொளக் கருத அருளாய், போற்றி!
'அஞ்சேல்' என்று இங்கு அருளாய், போற்றி!
நஞ்சே அமுதா நயந்தாய், போற்றி!
அத்தா போற்றி! ஐயா போற்றி!
நித்தா, போற்றி! நிமலா, போற்றி!
பத்தா, போற்றி! பவனே, போற்றி!
பெரியாய், போற்றி! பிரானே, போற்றி!
அரியாய், போற்றி! அமலா, போற்றி!
மறையோர் கோல நெறியே, போற்றி!
முறையோ? தரியேன்! முதல்வா போற்றி!
உறவே போற்றி! உயிரே, போற்றி!
சிறவே[2] போற்றி! சிவமே, போற்றி!
மஞ்சா,[3] போற்றி! மணாளா, போற்றி!
பஞ்சுஏர் அடியாள் பங்கா, போற்றி!
அலந்தேன், நாயேன், அடியேன், போற்றி!
இலங்குசுடர் எம்ஈசா, போற்றி!
கவைத்தலை மேவிய கண்ணே, போற்றி!
குவைப்பதி மலிந்த கோவே, போற்றி!
மலைநாடு உடைய மன்னே, போற்றி!
கலைஆர் அரிகேசரியாய், போற்றி!
திருக்கழுக்குன்றில் செல்வா போற்றி!
பொருப்பு[4] அமர் பூவணத்து அரனே, போற்றி!
அருவமும்,[5] உருவமும்[6] ஆனாய், போற்றி!
மருவிய[7] கருணை மலையே போற்றி!
துரியமும்[8] சிறந்த சுடரே, போற்றி!
தெரிவு-அரிது ஆகிய தெளிவே, போற்றி!
தோளா[9] முத்தச் சுடரே, போற்றி!
ஆள் ஆனவர்கட்கு அன்பா, போற்றி!
ஆரா-அமுதே, அருளே, போற்றி!

1 இடம், அறிஞர் கூட்டம்-சிவனடியார் திருக்கூட்டம் உள்ளம்
2 சிறப்பாக வுள்ளவனே; உயர்வாக வுள்ளவனே
3 மேகம் போன்ற அருளாளனே, அழகனே, வலிமையுடையவனே.
4 மலை
5 தோன்றாநிலை
6 தோன்றும நிலை
7 பொருந்திய, கலந்த.
8 நான்காவது நிலை
9 தொளைக்கப்படாத

பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி யறுகின் றாராய் போற்றி
நீளொளி யாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி
யெந்தமை யுய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
யலைகடன் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
யிரும்புலன் புலர விசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
யடியொடு நடுவீ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்க நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி
யொழிவற நிறைந்த வொருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மைய றுணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்தசொன் மாலை கொண்டருள் போற்றி
புரம்பல வெரித்த புராண போற்றி
பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி.

திருச்சிற்றம்பலம்.

பேர்ஆயிரம் உடைப் பெம்மான், போற்றி !
தாளி[1] அறுகின் தாராய், போற்றி !
நீள் ஒளி ஆகிய நிருத்தா, போற்றி !
சந்தனச் சாந்தின்[2] சுந்தர, போற்றி !
சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி !
மந்திர மாமலை மேயாய், போற்றி !
எம்-தமை உய்யக் கொள்வாய் போற்றி !
புலிமுலை புல்வாய்க்கு[3] அருளினை, போற்றி !
அலைகடல் மீமிசை நடந்தாய், போற்றி !
கரும் குருவிக்கு அன்று அருளினை போற்றி !
இரும் புலன் புலர இசைந்தனை, போற்றி !
படி[4] உறப்பயின்ற பாவக,[5] போற்றி !
அடியொடு, நடு, ஈறு, ஆனாய், போற்றி !
நரகொடு, சுவர்க்கம் நால்-நிலம், புகாமல்,
பரகதி[6] பாண்டியற்கு அருளினை, போற்றி !
ஒழிவு அறநிறைந்த ஒருவ, போற்றி !
செழு மலர்ச் சிவபுரத்து அரசே, போற்றி !
கழுநீர் மாலைக் கடவுள், போற்றி !
தொழுவார் மையல் துணிப்பாய், போற்றி !
பிழைப்பு, வாய்ப்பு, ஒன்று அறியா நாயேன்
குழைத்த சொல்-மாலை கொண்டருள் போற்றி !
புரம் பல எரித்த புராண,[7] போற்றி !
பரம்-பரம் சோதிப் பரனே, போற்றி !
போற்றி ! போற்றி ! புயங்கப்[8] பெருமான் !
போற்றி ! போற்றி ! புராண-காரண ![9]
போற்றி ! போற்றி ! சய, சய, போற்றி !

1 இலைக்கும் கணு ஒரு வகைப் படர்கொடி அதன இலை
2 திருநீற்றின்
3 மானுக்கு
4 நிலவுலகம்
5 தோற்றம் உடையவனே
6 உயர்ந்தநிலை-வீடு
7 பழமையானவனே
8 பாம்புகளை அணிந்த
9 பழமைக்கும் பழமையான மூலப்பொருளே

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது

திருச்சதகம்

(பத்தி வைராக்கிய விசித்திரம்)

க. மெய்யுணர்தல்

க

ரு. மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன்விரை யார்கழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதா னெகிழ விடேனுடை
யாயென்னைக் கண்டுகொள்ளே

உ

சா. கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினு
நள்ளே னினதடி யாரொடல்
லானரகம் புகினு
மெள்ளேன் றிருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
வுள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே.

ஐந்தாவது

திருச்சதகம்

1. மெய்யுணர்தல்

என் செயலும் சிந்தையும் சொல்லும் உனக்கே ; ஏற்றருள்க

5. மெய்-தான் அரும்பி, விதிர் விதிர்த்து,
உன் விரை[1] ஆர் கழற்கு,[2] என்
கை-தான் தலை வைத்து, கண்ணீர்
ததும்பி, வெதும்பி, உள்ளம்
பொய்-தான் தவிர்ந்து, உன்னை, 'போற்றி,
சய, சய, போற்றி !' என்னும்
கை-தான் நெகிழவிடேன்; உடையாய் !
என்னைக் கண்டு கொள்ளே. (1)

1 மணம்
2 கழல் அணிந்த திருவடிகளுக்கு

வேறு தெய்வத்தை எண்ணேன்

6. கொள்ளேன் புரந்தரன்,[3] மால், அயன்[4]
வாழ்வு ; குடி கெடினும்,
நள்ளேன்[5] நினது அடியாரொடு
அல்லால் ; நரகம்புகினும்,
எள்ளேன்[6] திருஅருளாலே
இருக்கப்பெறின் ; இறைவா !
உள்ளேன்[7] பிற தெய்வம், உன்னை அல்லாது ;
எங்கள் உத்தமனே ! (2)

3 இந்திரன்
4 பிரமன்
5 நட்புக்கொள்ளேன்
6 இழிவாக எண்ணேன்
7 மனத்திற்கொள்ளேன்

௩.

எ. உத்தம னத்த னுடையா
னடியே நினைந்துருகி
மத்த மனத்தொடு மாலிவ
னென்ன மனநினைவி
லொத்தன வொத்தன சொல்லிட
வூரூர் திரிந்தெவருந்
தத்த மனத்தன பேசவெஞ்
ஞான்றுகொல் சாவதுவே.

௪

அ. சாவமுன் னூட்டக்கன் வேள்வித்
தகர்தின்று நஞ்சமஞ்சி
யாவவெந் தாயென் றவிதா
விடுநம் மவரவரே
மூவரென் றேயெம்பி ரானொடு
மெண்ணிவிண் ணாண்டுமண்மேற்
றேவரென் றேயிறு மாந்தென்ன
பாவந் திரிதவரே

௫

கூ. தவமே புரிந்திலன் றண்மல
ரிட்டுமுட் டாதிறைஞ்சே
னவமே பிறந்த வருவினை
யேனுனக் கன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
லேனின் றிருவடிக்காம்
பவமே யருளுகண் டாயடி
யேற்கெம் பரம்பரனே.

உனக்கே பித்தாகி ஒழிவது என்றோ ?

7. உத்தமன், அத்தன், உடையான்
அடியே நினைந்து உருகி,
மத்த [1] மனத்தொடு, 'மால் இவன்' [2]
என்ன, மன நினைவில்
ஒத்தன ஒத்தன சொல்லிட,
ஊர் ஊர் திரிந்து, எவரும்
தம் தம் மனத்தன பேச,
எஞ்ஞான்று-கொல் சாவதுவே ? (3)

1. பித்தேறிய
2. மயககம் கொண்டவன்

எம்பிரானும் ஏனைய தெய்வமும் ஒன்றுகுமோ ?

8. சாவ, முன்நாள் தக்கன் வேள்வித்
தகர் [3] தின்று, நஞ்சம் அஞ்சி,
'ஆவ ! எந்தாய் !' என்று அவிதா [4]
இடும் நம்மவர்–அவரே,
மூவர் என்றே எம்பிரானொடும்
எண்ணி விண் ஆண்டு, மண்மேல்
தேவர் என்றே இறுமாந்து, என்ன
பாவம் திரிதவரே ! (4)

3. ஆடு
4. முறை, குறைகூறி விண்ணப்பித்தல்.

தகுதியில்லேன் எனினும் ஏற்றருள்க.

9. தவமே புரிந்திலன் ; தண்மலர் இட்டு
முட்டாது இறைஞ்சேன் ;
அவமே பிறந்த அருவினையேன்,
உனக்கு அன்பர் உள்ஆம்
சிவமேபெறும் திரு எய்திற்றிலேன் ;
நின் திருவடிக்குஆம்
பவமே [5] அருளு–கண்டாய் அடியேற்கு ;
எம் பரம்பரனே ! (5)

5. பிறப்பையே

௬

௧௰. பரந்து பல்லாய்மல ரிட்டுமுட்
டாதடியே யிறைஞ்சி
யிரந்தவெல் லாமெமக் கேபெற
லாமென்னு மன்பருள்ளங்
கரந்துநில் லாக்கள்வ னேநின்றன்
வார்கழற் கன்பெனக்கு
நிரந்தர மாயரு ளாய்நின்னை
யேத்த முழுவதுமே.

எ

௧௧. முழுவதுங் கண்டவனைப் படைத்தான்
முடிசாய்த் துமுன்னாட்
செழுமலர் கொண்டெங்குந் தேடவப்
பாலனிப் பாலெம்பிரான்
கழுதொடு காட்டிடை நாடக
மாடிக் கதியிலியா
யுழுவையின் றோலுடுத் துன்மத்த
மேற்கொண் டுழிதருமே.

அ

௧௨. உழிதரு காலுங் கனலும்
புனலொடு மண்ணும்விண்ணு
மிழிதரு காலமெக் காலம்
வருவது வந்ததற்பி
னுழிதரு காலத்த வுன்னடி
யேன்செய்த வல்வினையைக்
கழிதரு காலமு மாயவை
காத்தெம்மைக் காப்பவனே.

நிலைத்த அன்பு அருளுக

10. பரந்து பல் ஆய்மலர் இட்டு
முட்டாது, அடியே இறைஞ்சி,[1]
'இரந்த[2] எல்லாம் எமக்கே பெறலாம்'
என்னும் அன்பர் உள்ளம்
கரந்து[3] நில்லாக் கள்வனே ! நின்-தன்
வார்[4] கழற்கு[5] அன்பு, எனக்கும்
நிரந்தரமாய் அருளாய்—நின்னை
ஏத்த[6] முழுவதுமே. (6)

1 வணங்கி
2 வேண்டிய
3 மறைந்து
4 புகழால் நீண்ட
5 கழலணிநத திருவடிகளுக்கு
6 புகழ்ந்து வணங்க

அரியவன் எளியவனே

11. முழுவதும் கண்டவனைப் படைத்தான்,[7]
முடிசாய்த்து, முன்நாள்,
செழு மலர் கொண்டு எங்கும் தேட,
அப்பாலன்; இப்பால், எம்பிரான்,
கழுதொடு[8] காட்டிடை நாடகம்
ஆடி, கதி-இலியாய்,
உழுவையின்[9] தோல் உடுத்து, உன்மத்தம்[10]
மேல்கொண்டு உழிதருமே[11] (7)

7 திருமால்
8 பேயோடு
9 புலியின்
10 மிகக களிப்பு ஏறிய பித்து
11 உலாவும்

கடையூழியில் காப்பவன்

12. உழிதரு காலும்,[12] கனலும்,[13]
புனலொடு,[14] மண்ணும், விண்ணும்
இழிதரு காலம், எக்காலம்
வருவது ? வந்ததன்பின்,
உழிதரு[15] காலத்த ![16] உன் அடியேன்
செய்தவல் வினையைக்
கழி, தரு காலமும்[17] ஆய் அவை காத்து,
எம்மைக் காப்பவனே ! (8)

12 காற்றும்
13 தீயும
14 நீரொடு
15 நிலைத்திருக்கும்
16 காலதத்துவத்தின் தலைவனே
17 கடையூழிக்குப்பின்னுள்ளகாலங் கடந்த காலம்

க௩

க௩. பவனெம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவனெம் பிரானென்னை யாண்டுகொண்
டானென் சிறுமைகண்டு
மவனெம் பிரானென்ன நானடி
யேனென்ன விப்பரிசே
புவனெம் பிரான்றெரி யும்பரி
சாவதி யம்புகவே

க௪

க௪. புகவே தகேனுனக் கன்பருள்
யானென் பொல்லாமணியே
தகவே யெனையுனக் காட்கொண்ட
தன்மையெப் புன்மையரை
மிகவே யுயர்த்திவிண் ணோரைப்
பணித்தியண் ணாவமுதே
நகவே தகுமெம் பிரானென்னை
நீசெய்த நாடகமே

உ. அறிவுறுத்தல்

கக

க௫. நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றே
னாடகச்சீர் மணிக்குன்றே யிடையறு வன்புனக்கென்
னூடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே.

சிறுமைக்கும் ஒரு பெருமை

13. பவன்,[1] எம்பிரான், பனி[2] மாமதிக்
கண்ணி[3] விண்ணோர் பெருமான்,
சிவன், எம்பிரான், என்னை ஆண்டு
கொண்டான்-என் சிறுமை கண்டும்-
அவன் எம்பிரான் என்ன, நான்
அடியேன் என்ன, இப் பரிசே,
புவன்,[4] எம்பிரான், தெரியும்
பரிசு ஆவது-இயம்புகவே. (9)

1 நீலத்தவன்-சிவபெருமான
2 குளிர்ந்த
3 முடியில் சூடும் மாலை
4 தானேதோன்றியவன், சுயம்பு-சிவபெருமான்

ஒரு வியப்பு

14. புகவே தகேன் உனக்கு அன்பருள்,
யான் ; என் பொல்லா மணியே !
தக்வே எனை உனக்குஆட்கொண்ட
தன்மை ? எப் புன்மையரை[5]
மிகவே உயர்த்தி, விண்ணோரைப்
பணித்தி ;[6] அண்ணா[7] அமுதே !
நகவே[8] தகும் – எம்பிரான் ! என்னை
நீ செய்த நாடகமே. (10)

5 தாழ்மையாக வுள்ளவரை
6 தாழச்செய்கின்றாய்
7 கிட்டககூடாத
8 நகைக்கவே

2. அறிவுறுத்தல்

இடையறு அன்பு அருளுக

15. நாடகத்தால்[9] உன் அடியார்போல் நடித்து, நான் நடுவே
வீடு-அகத்தே புகுந்திடுவான், மிகப்பெரிதும் விரைகின்றேன் ;
ஆடக[10]ச்சீர் மணிக்குன்றே ! இடைஅறு அன்பு உனக்குஎன்
ஊடுஅகத்தே[11]நின்று, உருகத்தந்தருள்; எம்உடையானே !
(11)

9 பொய்யான தோற்றத்தால்
10 பொன்னாலான
11 அகத்து — ஊடேஅகம்-உள்ளம்

கஉ

கசு. யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
றேனேயு மலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

கங

கஎ. வருந்துவனின் மலர்ப்பாத மவைகாண்பா னுயடியே
னிருந்துநல மலர்புனையே னேத்தேனுத் தழும்பேறப்
பொருந்திய பொற்சிலைகுனித்தா யருளமுதம் புரியாயேல்
வருந்துவனற் றமியேன்மற் றென்னேநா னுமாறே.

கச

கஅ. ஆமாறுன் றிருவடிக்கே யகங்குழையே னன்புருகேன்
பூமாலை புனைந்தேத்தேன் புகழ்ந்துரையேன் புத்தேளிர்
கோமானின் றிருக்கோயி றூகேன் மெழுகேன் கூத்தாடேன்
சாமாறே விரைகின்றேன் சதுராலே சார்வானே.

கரு

கசு. வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி
யூனாகி யுயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே

கசா

உ௰. வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான் மனநின்பாற்
றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே.

அருள் பெறும் நாள் என்று ?

16. யான் ஏதும் பிறப்பு அஞ்சேன்; இறப்பு-அதனுக்கு என் கடவேன் ?
வானேயும் பெறில் வேண்டேன்; மண் ஆள்வான் மதித்தும் இரேன்;
தேன் ஏயும் மலர்க் கொன்றைச் சிவனே! எம்பெருமான்! எம்
மானே! 'உன் அருள் பெறும் நாள் என்று?' என்றே, வருந்துவனே. (12)

பாடின்றிப் பயன் வேண்டுகிறேன்

17. வருந்துவன், நின் மலர்ப்பாதம்-அவை காண்பான்; நாய்-அடியேன்
இருந்து நலமலர் புனையேன்; ஏத்தேன்[1] நாத்தழும்பு ஏற;
பொருந்திய பொன் சிலை[2] குனித்தாய்! அருள் அமுதம் புரியாயேல்,
வருந்துவன் அத்தமியேன்; மற்று என்னே நான் ஆம் ஆறே ? (13)

1 புகழ்ந்து போற்றேன் 2 மலை, வில்.

அகம் குழையாது அழிகின்றேன்

18. ஆம்ஆறு உன் திருவடிக்கே அகம்[3] குழையேன்; அன்பு உருகேன்;
பூமாலை புனைந்து ஏத்தேன்; புகழ்ந்து உரையேன்; புத்தேளிர்[4]
கோமான்! நின் திருக்கோயில் தூகேன், மெழுகேன், கூத்துஆடேன்,
சாம்-ஆறே விரைகின்றேன்-சதுராலே[5] சார்வானே! (14)

3 உள்ளம 4 தேவர் 5 நானகாவது நிலையாலே

எல்லாம் நீயே: வாழ்த்துவது எப்படி ?

19. வான்ஆகி, மண்ஆகி, வளிஆகி, ஒளிஆகி,
ஊன்ஆகி, உயிர்ஆகி, உண்மையும்ஆய், இன்மையும்ஆய்க்,
கோன்ஆகி, 'யான் எனது' என்று அவர்-அவரைக் கூத்தாட்டு-
வான்ஆகி நின்றாயை, என் சொல்லி வாழ்த்துவனே ! (15)

பயன் கருதாது பணிவார் யார் ?

20. வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்; மனம் நின்பால்
தாழ்த்துவதும், தாம் உயர்ந்து, தம்மை எல்லாம் தொழவேண்டி;
சூழ்த்து மதுகரம்[6] முரலும்[7] தாரோயை,[8] நாய்-அடியேன்,
பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான், யானும் உன்னைப் பரவுவனே. (16)

6 வண்டு 7 ஒலிக்கும் 8 மாலையை உடைய உன்னை

கஎ

உக. பரவுவா ரிமையோர்கள் பாடுவன நால்வேதங்
குரவுவார் குழன்மடவாள் கூறுடையா னொருபாகம்
விரவுவார் மெய்யன்பி னடியார்கண் மேன்மேலுன்
னரவுவார் கழலிணைகள் காண்பாரோ வரியானே.

கஅ

உஉ. அரியானே யாவர்க்கு மம்பரவா வம்பலத்தெம்
பெரியானே சிறியேனை யாட்கொண்ட பெய்கழற்கீழ்
விரையார்ந்த மலர்தூவேன் வியந்தலறே னயந்துருகேன்
றரியேனு ஞமாறென் சாவேனுன் சாவேனே

கசு

உங. வேனில்வேண் மலர்க்கணைக்கும் வெண்ணகைச்செவ் வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும் பாழ்நெஞ்சே
யூனெலா நின்றுருகப் புகுந்தாண்டா னின்றுபோய்
வானுளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே.

உ௦

உச. வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றா யாழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே.

ங. சுட்டறுத்தல்

உக

உரு. வெள்ளந்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே யெனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழுறு புனலிற் கீழ்மே லாகப்
பதைத்துருகு மவர்நிற்க வென்னை யாண்டாய்க்
குள்ளந்தா ணின்றுச்சி யளவு நெஞ்சா
யுருகாதா லுடம்பெல்லாங் கண்ணா யண்ணா
வெள்ளந்தான் பாயாதா னெஞ்சங் கல்லாங்
கண்ணிணையு மரமாந்தீ வினையி னேற்கே.

காண்பவர் யார்?

21. பரவுவார் இமையோர்கள்; பாடுவன நால்வேதம்;
குரவு[1]வார் குழல் மடவாள் கூறு உடையாள், ஒருபாகம்; 1 குராமலர்
விரவுவார் மெய்அன்பின் அடியார்கள், மேன்மேல்; உன்
அரவு[2]வார்[3] கழல்-இணைகள்[4] காண்பாரோ, அரியானே?(17) 2 ஒலி, அராவிய. 3 புகழால் நீண்ட 4 கழல் பூண்ட திருவடிகள்

நன்றியில்லேன்

22. அரியானே யாவர்க்கும்! அம்பரவா![5] அம்பலத்து எம் 5 [ஞான] வெளியாக உள்ளவனே
பெரியானே! சிறியேனை ஆட்கொண்ட பெய்-கழல்கீழ்
விரை[6]ஆர்ந்த மலர் தூவேன்; வியந்து அலறேன்; நயந்து உருகேன்; 6 மணம்
தரியேன்; நான் ஆம் ஆறுஎன்? சாவேன்; நான் சாவேனே!(18)

சிற்றின்பத்துக்கு உருகிப் பேரின்பத்தை விடுவதா?

23. வேனில்-வேள்[7] மலர்க்கணைக்கும், வெள்-நகை, செவ்-வாய், கரிய 7 காமன்
பானல்[8]ஆர் கண்ணியர்க்கும், பதைத்து உருகும் பாழ் நெஞ்சே! 8 நீலமலர்
ஊன் எலாம் நின்று உருக, புகுந்து ஆண்டான்; இன்றுபோய்
வான் உளான்; காணாய்; நீ, மாளாவாழ்கின்றாயே. (19)

அவலக்கடலில் வீழாதே

24. வாழ்கின்றாய்! வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய்; ஆழாமல் காப்பானை ஏத்தாதே,
சூழ்கின்றாய் கேடு உனக்கு; சொல்கின்றேன், பல்காலும்;
வீழ்கின்றாய் நீ, அவலக்கடல்[9] ஆய வெள்ளத்தே. (20) 9 துன்பக்கடல்

3. சுட்டறுத்தல்

கல்நெஞ்சம்

25. வெள்ளம்[10] தாழ்விரிசடையாய்! விடையாய்! விண்ணோர் 10 கங்கை
பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளம் தாழ்உறு புனலில், கீழ்மேலாக,
பதைத்து உருகும்-அவர் நிற்க, என்னை ஆண்டாய்க்கு,
உள்ளம்தாள் நின்று உச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால், உடம்பு எல்லாம் கண்ணாய், அண்ணா!
வெள்ளம்-தான் பாயாதால், நெஞ்சம் கல்ஆம்;
கண்-இணையும் மரம் ஆம்-தீவினையினேற்கே. (21)

உ௨

உ௬. வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
போதுநான் வினைக்கேட னென்பாய் போல
வினையறு னென்றுன்னை யறிவித் தென்னை
யாட்கொண்டெம் பிரானானாய்க் கிரும்பின் பாவை
யனையநான் பாடேனின் றாடே னந்தோ
வலறிடே னுலறிடே னாவி சோரேன்
முனைவனே முறையோநா னான வாறு
முடிவறியேன் முதலந்த மாயி னானே.

உ௩

உ௭. ஆயநான் மறையவனு நீயே யாத
லறிந்தியா னியாவரினுங் கடைய னாய
நாயினே னாதலையு நோக்கிக் கண்டு
நாதனே நானுனக்கோ ரன்ப னென்பே
னாயினே னாதலா லாண்டு கொண்டா
யடியார்தா மில்லையே யன்றி மற்றோர்
பேயனே னிதுதானின் பெருமை யன்றே
யெம்பெருமா னென்சொல்லிப் பேசுகேனே.

உ௪

உ௮. பேசிற்றா மீசனே யெந்தா யெந்தை
பெருமானே யென்றென்றே பேசிப் பேசிப்
பூசிற்றான் றிருநீறே நிறையப் பூசிப்
போற்றியெம் பெருமானே யென்று பின்று
நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார் தம்மை
யாண்டானே யவாவெள்ளக் கள்வனேனை
மாசற்ற மணிக்குன்றே யெந்தா யந்தோ
வென்னைநீ யாட்கொண்ட வண்ணந்தானே.

நான் இவ்வாறு ஆகலாமோ?

26. வினையிலே கிடந்தேனை, புகுந்து நின்று,
'போது, நான் வினைக்கேடன்' என்பாய் போல,
'இனையன் நான்' என்று உன்னை அறிவித்து, என்னை-
ஆட்கொண்டு, எம்பிரான் ஆனாய்க்கு, இரும்பின் பாவை
அனைய நான், பாடேன்; நின்று ஆடேன்; அந்தோ!
அலறிடேன்; உலறிடேன்; ஆவி சோரேன்;
முனைவனே! முறையோ, நான் ஆன ஆறு?
முடிவு அறியேன்; முதல், அந்தம், ஆயினானே. (22)

அணுகும்முன் அருள் செய்தாயே!

27. ஆய நான் மறையவனும்[1] நீயே ஆதல்
அறிந்து, யான் யாவரினும் கடையன் ஆய
நாயினேன் ஆதலையும் நோக்கிக் கண்டும்,
'நாதனே! நான் உனக்கு ஓர் அன்பன் என்பேன்'
ஆயினேன்; ஆதலால், ஆண்டு கொண்டாய்;
அடியார்-தாம் இல்லையே? அன்றி மற்றுஓர்
பேயனேன்? இது-தான் நின்பெருமை அன்றே!
எம்பெருமான்! என்சொல்லிப் பேசுகேனே? (23)

1 நான்கு வேதங்களாலும் போற்றப்பெற்றவனும

தலையாயவர் நிற்கக் கடையேனை ஆண்டாய்

28. பேசின், தாம் 'ஈசனே, எந்தாய், எந்தை
பெருமானே!' என்று என்றே பேசிப்பேசி;
பூசின், தாம் திருநீறே நிறையப்பூசி;
'போற்றி எம்பெருமானே' என்று; பின்றா[2]
நேசத்தால் பிறப்பு இறப்பைக் கடந்தார்-தம்மை
ஆண்டானே! அவா வெள்ளக் கள்வனேனை,
மாசு அற்ற மணிக்குன்றே! எந்தாய்! அந்தோ!
என்னைநீ ஆட்கொண்ட வண்ணம் தானே? (24)

2 பின்வாங்காத

உரு

உக. வண்ணந்தான் சேயதன்று வெளிதே யன்ற
னேக னேக னணுவணுவி லிறந்தா யென்றங்
கெண்ணந்தான் றடுமாறி யிமையோர் கூட்ட
மெய்துமா றறியாத வெந்தா யுன்றன்
வண்ணந்தா னதுகாட்டி வடிவு காட்டி
மலர்க் கழல்க ளவைகாட்டி வழியற் றேனைத்
திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டா
யெம்பெருமா னென்சொல்லிச் சிந்திக் கேனே.

உசு

நo. சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தெனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே.

உஎ

நக. தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டுபற்றொன் றின்றிக்
கனியினேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா றென்றென்றெண்ணி
யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்த மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே.

இமையவர்க்கு அரியவன் எளியனை ஆண்டான்

29. வண்ணம்-[1] தான், சேயது[2] அன்று; வெளிதே அன்று;
அனேகன்;[3] ஏகன்;[4] அணு; அணுவில் இறந்தாய்; என்று அங்கு
எண்ணம்-தான் தடுமாறி, இமையோர் கூட்டம்
எய்தும் ஆறு அறியாத எந்தாய்! உன்-தன்
வண்ணம்-தான்-அது காட்டி, வடிவு காட்டி,
மலர்க்கழல்கள்-அவை காட்டி, வழி அற்றேனை,
திண்ணம்-தான் பிறவாமல் காத்து ஆட்கொண்டாய்;
எம்பெருமான்! என் சொல்லிச் சிந்திக்கேனே? (25)

1 நிறம்
2 சிவந்தது
3 பலவாகவுள்ளவன்
4 ஒன்றாகவுள்ளவன்

ஆட்கொண்ட அமுதக் கடல்

30. சிந்தனை நின்-தனக்கு ஆக்கி, நாயினேன்-தன்
கண்-இணை நின்-திருப்பாதப் போதுக்கு ஆக்கி,
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி, வாக்கு, உன்
மணி-வார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்து, எனை ஆட்கொண்டு, உள்ளே புகுந்த விச்சை
மால்[5] அமுதப் பெருங் கடலே! மலையே! உன்னைத்
தந்தனை; செம்-தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டும்இல் இத்தனியனேற்கே. (26)

5 ஆசைகொள்ளுதற்கு உரிய

கடலில் ஆழாமல் கரை காட்டினான்

31. தனியனேன், பெரும் பிறவிப் பௌவத்து,[6] எவ்வம்[7]
தடம் திரையால்,[8] எற்றுண்டு, பற்று ஒன்று இன்றிக்,
கனியின்நேர் துவர்வாயார் என்னும் காலால்[9]
கலக்குண்டு, காம வான்சுறவின் வாய்ப்பட்டு,
'இனி, என்னே உய்யும் ஆறு?' என்று என்று எண்ணி,
அஞ்சு எழுத்தின்[10] புணை[11] பிடித்துக் கிடக்கின்றேனை,
முனைவனே! முதல், அந்தம், இல்லா மல்லல்[12]
கரை காட்டி, ஆட்கொண்டாய், மூர்க்கனேற்கே. (27)

6 கடலில்
7 துன்பம்
8 அலையால்
9 காற்றால்
10 'நமசிவாய' என்னும் மறைமொழியாகிய
11 தெப்பம்
12 வளப்பம்

உ௮

௩௨. கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்
கிளையிலான் கேளாதே யெல்லாங் கேட்டா
ளுட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே
காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்
கேளா தனவெல்லாங் கேட்பித் தென்னை
மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டா
னெம்பெருமான் செய்திட்ட விச்சை தானே.

உ௯

௩௩. விச்சைதா னிதுவொப்ப துண்டோ கேட்கின்
மிகுகாத லடியார்தம் மடிய னாக்கி
யச்சந்தீர்த் தாட்கொண்டா னமுத மூறி
யகநெகவே புகுந்தாண்டா னன்பு கூர
வச்சனுண் பெண்ணலியா காச மாகி
யாரழலா யந்தமா யப்பா னின்ற
செச்சைமா மலர்புரையு மேனி யெங்கள்
சிவபெருமா னெம்பெருமான் றேவர் கோவே.

௩௦

௩௪. தேவர்கோ வறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத் தழிக்கு மற்றை
மூவர்கோ னாய்நின்ற முதல்வன் மூர்த்தி
மூதாதை மாதாளும் பாகத்தெந்தை
யாவர்கோ னென்னையும்வந் தாண்டு கொண்டான்
யாமார்க்குங் குடியல்லோம் யாது மஞ்சோ
மேவினோ மவனடியா ரடியா ரோடு
மேன்மேலுங் குடைந்தாடி யாடு வோமே.

புலனாகாதன எல்லாம் புலப்படுத்தினான்

32. கேட்டு ஆரும் அறியாதான்; கேடு ஒன்று இல்லான்;
கிளை[1] இலான்; கேளாதே எல்லாம் கேட்டான்; — 1 சுற்றம்
நாட்டார்கள் விழித்திருப்ப, ஞாலத்துள்ளே
நாயினுக்குத் தவிசு இட்டு, நாயினேற்கே
காட்டாதன எல்லாம் காட்டி, பின்னும்
கேளாதன எல்லாம் கேட்பித்து, என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்து, ஆட்கொண்டான் -
எம்பெருமான் செய்திட்ட விச்சை[2] - தானே! (28) — 2 வித்தை

அச்சம் தீர்த்தான்

33. விச்சை-தான் இது ஒப்பது உண்டோ? கேட்கின்-
மிகு காதல் அடியார்-தம் அடியன் ஆக்கி,
அச்சம் தீர்த்து ஆட்கொண்டான்; அமுதம் ஊறி,
அகம் நெகவே புகுந்து, ஆண்டான், அன்பு கூர;
அச்சன், ஆண், பெண், அலி, ஆகாசம் ஆகி,
ஆர் அழல்-ஆய், அந்தம்-ஆய், அப்பால் நின்ற
செச்சை[3] மா-மலர் புரையும் மேனி, எங்கள் — 3 வெட்சி
சிவபெருமான், எம்பெருமான், தேவர்-கோவே!(29)

அருளால் விளைந்த பெருமிதம்

34. தேவர்-கோ அறியாத தேவ-தேவன்
செழும்பொழில்கள்[4] பயந்து,[5] காத்து, அழிக்கும் மற்றை — 4 உலகங்கள் 5 தோற்றுவித்து
மூவர் கோனாய் நின்ற முதல்வன்; மூர்த்தி;
மூதாதை; மாது ஆளும் பாகத்து எந்தை;
யாவர் கோன்; என்னையும் வந்து ஆண்டுகொண்டான்;
யாம் ஆர்க்கும் குடி அல்லோம்; யாதும் அஞ்சோம்;
மேவினோம்[6] அவன் அடியார் அடியாரோடு; — 6 கலந்தோம்
மேன் மேலும் குடைந்து ஆடி, ஆடுவோமே. (30)

ச. ஆன்மசுத்தி

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

ரு.க

ரு௫. ஆடு கின்றிலை கூத்துடை யான்கழற்
கன்பிலை யென்புருகிப்,
பாடு கின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை,
பணிகிலை பாதமலர்
சூடு கின்றிலை சூட்டுகின் றதுமிலை
துணையிலி பிணநெஞ்சே,
தேடு கின்றிலை தெருவுதோ றலறிலை
செய்வதொன் றறியேனே.

ரு.உ

ருசா. அறிவி லாதவெ னைப்புகுந் தாண்டுகொண்
டறிவதை யருளிமெய்ந்
நெறியெ லாம்புல மாக்கிய வெந்தையைப்
பந்தனை யறுப்பானைப்
பிறிவி லாதவின் னருள்கள் பெற்றிருந்து
மாறுடுதி பிணநெஞ்சே
கிறியெ லாமிகக் கீழ்ப்படுத் தாய்கெடுத்
தாயென்னைக் கெடுமாறே.

ரு.௩

ருஎ. மாறி நின்றெனைக் கெடக்கிடந் தனையையெம்
மதியிலி மடநெஞ்சே
தேறு கின்றில மினியுனைச் சிக்கெனச்
சிவனவன் றிரடோண்மேல்
நீறு நின்றது கண்டனை யாயினு
நெக்கிலை யிக்காயம்
கீறு கின்றிலை கெடுவதுன் பரிசிது
கேட்கவுங் கில்லேனே.

4. ஆன்ம சுத்தி

மடிந்த மனம்

35. ஆடுகின்றிலை; கூத்து உடையான் கழற்கு
அன்பு இலை; என்பு உருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை;
பணிகிலை; பாத-மலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதும் இலை!
துணை இலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை; தெருவுதோறு அலறிலை;
செய்வது ஒன்று அறியேனே. (31)

மாறுபட்ட மனம்

36. அறிவு இலாத எனை, புகுந்து ஆண்டுகொண்டு
அறிவதை அருளி, மெய்ந்-
நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையை,
பந்தனை[1] அறுப்பானை,
பிறிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும்
மாறு ஆடுதி; பிண நெஞ்சே!
கிறி[2] எலாம் மிக, கீழ்ப்படுத்தாய்;
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே. (32)

நம்பத்தகாத மனம்

37. மாறி நின்று எனைக் கெடக் கிடந்தனையை,
எம் மதி இலி மட நெஞ்சே!
தேறுகின்றிலம் இனி உனை சிக்கென[3] சிவன்-
அவன் திரள் தோள் மேல்
நீறு நின்றது கண்டனை; ஆயினும்,
நெக்கிலை;[4] இக் காயம்
கீறுகின்றிலை; கெடுவது உன் பரிசு-இது;
கேட்கவும் கில்லேனே.[5] (33)

1 கட்டு
2 பொய் நடை
3 உறுதியாக
4 நெகிழவில்லை
5 ஆற்றலில்லாதவனாக இருக்கின்றேன்

௩௪

௩௮. கிற்ற வாமண மேகெடு வாயுடை
யானடி நாயேனை
விற்றெ லாமிக வாள்வதற் குரியவன்
விரைமலர்த் திருப்பாத
முற்றி லாவிளந் தளிர்பிரிந் திருந்துநீ
யுண்டன வெல்லாமுன்
னற்ற வாறுநின் னறிவுநின் பெருமையு
மளவறுக் கில்லேனே.

௩௫

௩௯. அளவ றுப்பதற் கரியவ னிமையவர்க்
கடியவர்க் கெளியானங்
களவ றுத்துநின் றுண்டமை கருத்தினுட்
கசிந்துணர்ந் திருந்தேயும்
உளக றுத்துனை நினைந்துளம் பெருங்களன்
செய்ததுமிலநெஞ்சே
பளக றுத்துடை யான்கழல் பணிந்திலை
பரகதி புகுவானே.

௩௬

௪௰. புகுவ தாவதும் போதர வில்லதும்
பொன்னகர் புகப்போதற்
குகுவதாவது மெந்தையெம் பிரானென்னை
யாண்டவன் கழற்கன்பு
நெகுவ தாவது நித்தலு மமுதொடு
தேனொடு பால்கட்டி
மிகுவ தாவது மின்றெனின் மற்றிதற்
கென்செய்கேன் வினையேனே.

ஒய்வற்ற மனம்

38. கிற்றவா[1] மனமே!(?) கெடுவாய்; உடையான்
அடி-நாயேனை
விற்று எலாம் மிக ஆள்வதற்கு உரியவன்
விரை மலர்த் திருப்பாதம்
முற்று இலா இளம் தளிர் பிரிந்திருந்து,
நீ உண்டன எல்லாம் முன்
அற்ற ஆறும், நின் அறிவும், நின் பெருமையும்
அளவு அறுக்கில்லேனே. (34)

1 இல் + தவா = செயல் ஒழியாத
இற்று+அவாம்=அற்பமானவற்றை விரும்பும்
இற்றவா=செய்ததென்ன

கருணைக்குக் கசியா மனம்

39. அளவு அறுப்பதற்கு அரியவன், இமையவர்க்கு;
அடியவர்க்கு எளியான்; நம்
களவு[2] அறுத்து நின்று ஆண்டமை, கருத்தினுள்
கசிந்து உணர்ந்திருந்தேயும்,
உள[3] கறுத்து,[4] உனை நினைந்து, உளம் பெரும்களன்
செய்ததும் இலை; நெஞ்சே!
பளகு[5] அறுத்து உடையான் கழல் பணிந்திலை-
பரகதி புகுவானே. (35)

2 பொய்ம்மை
3 உள்ளனபோல் தோன்றுபவைகளை
4 சினநது விலக்கி
5 குற்றம்

என் செய்வேன்?

40. புகுவதும் ஆவதும், போதரவு இல்லதும்
பொன்-நகர் புகப் போதற்கு
உகுவது[6] ஆவதும், எந்தை, எம்பிரான்,
என்னை ஆண்டவன் கழற்கு அன்பு
நெகுவது[7] ஆவதும், நித்தலும் அமுதொடு,
தேனொடு, பால், கட்டி,[8]
மிகுவது ஆவதும், இன்று எனின், மற்று இதற்கு
என் செய்கேன் வினையேனே? (36)

6 உள்ளம் குழைவது
7 நெகிழுவது, உருகுவது
8 கற்கண்டு, கருப்புக்கட்டி

௩௭

சக. வினையென் போலுடை யார்பிற ராருடை
யானடி நாயேனைத்,
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்
பன்றுமற் றதனாலே,
முனைவன் பாதநன் மலர்பிரிந் திருந்துநான்
முட்டிலேன் றலைகீறே
னினையன் பாவனை யிரும்புகன் மனஞ்செவி
யின்னதென் றறியேனே.

௩௮

சஉ. ஏனை யாவரு மெய்திட லுற்றுமற்
றின்னதென் றறியாத
தேனை யானெயைக் கரும்பினின் றேறலைச்
சிவனையென் சிவலோகக்
கோனை மானன நோக்கிதன் கூறனைக்
குறுகிலே னெடுங்காலம்
ஊனை யானிருந் தோம்புகின் றேன்கெடு
வேனுயி ரோயாதே,

௩௯

சங. ஓய்வி லாதன வுவமனி லிறந்தன
வொண்மலர்த் தாடந்து
நாயி லாகிய குலத்தினுங் கடைப்படுமென்னை
நன்னெறி காட்டித்
தாயி லாகிய வின்னருள் புரிந்தவென்
றலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் றிண்வரை யுருள்கிலேன்
செழுங்கடல் புகுவேனே.

பிரியாதவனைப் பிரிந்து வாழ்வதா ?

41. வினை என்போல் உடையார் பிறர் ஆர் ?
உடையான், அடி-நாயேனைத்
தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பு அன்று ;
மற்று அதனாலே,
முனைவன் பாத நல்-மலர் பிரிந்திருந்தும்,
நான் முட்டிலேன், தலை கீறேன் ;
இனையன் பாவனை, இரும்பு ; கல், மனம் ; செவி,
இன்னது என்று அறியேனே. (37)

அவனை அணுகா உயிர் எதற்கு ?

42. ஏனை யாவரும் எய்திடல் உற்று, மற்று
இன்னது என்று அறியாத
தேனை, ஆன் நெயை, கரும்பின் இன் தேறலை,[1]
சிவனை, என் சிவலோகக்
கோனை[2] மான் அன நோக்கி-தன் கூறனை[3]
குறுகிலேன் ; நெடும் காலம்,
ஊனை[4] யான் இருந்து ஓம்புகின்றேன் ;
கெடுவேன் உயிர் ஓயாதே. 38

1 சாற்றை
2 இறைவனை
3 மான் போன்ற பார்வையை யுடைய உமையம்மையாரைப் பாகத்திலுள்ளவனை — சிவபெருமானை
4 ஊனாகிய உடலை

தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ ?

43. ஒய்வு இலாதன உவமனில் இறந்தன
ஒள்-மலர்த் தாள் தந்து,
நாயில் ஆகிய குலத்தினும் கடைப்படும் என்னை,
நல்-நெறி காட்டி,
தாயில் ஆகிய இன்-அருள் புரிந்த,
என் தலைவனை நனி காணேன் ;
தீயில் வீழ்கிலேன் ; திண் வரை[5] உருள்கிலேன் ;
செழும்-கடல் புகுவேனே ? (39)

5 மலை

௪௰

௪௪. வேனில் வேள்கணை கிழித்திட மதிசுடு
மதுதனை நினையாதே
மானி லாவிய நோக்கியர் படிறிடை
மத்திடு தயிராகித்
தேனி லாவிய திருவருள் புரிந்தவென்
சிவனகர் புகப்போகேன்
ஊனிலாவியை யோம்புதற் பொருட்டினு
முண்டுடுத் திருந்தேனே.

௫. கைம்மாறு கொடுத்தல்

(கலிவிருத்தம்)

௪௧

௪௫. இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்ப னுண்ணவே.

௪௨

௪௬. உண்டொ ரொண்பொரு ளென்றுணர் வார்க்கெலாம்
பெண்டி ராணலி யென்றறி யொண்கிலை
தொண்ட னேற்குள்ள வாவந்து தோன்றினாய்
கண்டுங் கண்டிலே னென்னகண் மாயமே.

சிற்றின்ப வாழ்வுக்கு அடிமையானேன்

44. வேனில்-வேள்[1] கணை கிழித்திட, மதி சுடும்
அது-தனை நினையாதே,
மான் நிலாவிய நோக்கியர் படிறிடை
மத்து இடு தயிர் ஆகி,
தேன் நிலாவிய திரு அருள் புரிந்த,
என்சிவன்-நகர் புகப் போகேன்;
ஊனில் ஆவியை ஓம்புதல்[2] பொருட்டு,
இனும் உண்டு உடுத்து இருந்தேனே. (40)

1 காமன்
2 காப்பாற்றுதல்

5. கைம்மாறு கொடுத்தல்

'வருக' என்றான்; என் செய்தேன்?

45. இரு கை யானையை ஒத்து இருந்து என் உளக்
கருவை[3] யான் கண்டிலேன்; கண்டது எவ்வமே;[4]
'வருக' என்று பணித்தனை; வான் உளோர்க்கு
ஒருவனே! கிற்றிலேன்[5] கிற்பன்[6] உண்ணவே. (41)

3 மறைந்துள்ள ஆற்றலை
4 துன்பமே
5 ஆற்றலில்லேனா
6 ஆற்றலுள்ளேன்

கண் மாயம்

46. 'உண்டு ஓர் ஒள்-பொருள்' என்று உணர்வார்க்கு எலாம்
பெண், திர், ஆண், அலி, என்று அறி ஒண்கிலை;
தொண்டனேற்கு உள்ளவா வந்து தோன்றினாய்;
கண்டும் கண்டிலேன்; என்ன கண் மாயமே![7] (42)

7 மயக்கமே

சங

சஎ. மேலை வானவ ரும்மறி யாததோர்
கோல மேயெனை யாட்கொண்ட கூத்தனே
ஞால மேவிசும் பேயிவை வந்துபோம்
கால மேயுனை யென்றுகொல் காண்பதே.

சச

சஅ. காணை லாம்பர மேகட் கிறந்ததோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாண னேன்படிற் றாக்கையை விட்டுனைப்
பூணு மாறறி யேன்புலன் போற்றியே.

சரு

சகூ. போற்றி யென்றும் புரண்டும் புகழ்ந்துநின்
றேற்றன் மிக்கவன் பாலழைக் கின்றிலேன்
ஏற்று வந்தெதிர் தாமரைத் தாளுறும்
கூற்ற மன்னதொர் கொள்கையென் கொள்கையே.

சகூ

ருO. கொள்ளுங் கில்லெனை யன்பரிற் கூய்ப்பணி
கள்ளும் வண்டு மறுமலர்க் கொன்றையான்
நள்ளுங் கீழுளு மேலுளும் யாவுளும்
எள்ளு மெண்ணெயும் போனின்ற வெந்தையே.

சஎ

ருக. எந்தை யாயெம்பி ரான்மற்று மியாவர்க்கும்
தந்தை தாய்தம்பி ரான்றனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலு மறிவருஞ் செல்வனே.

என்று காண்பேன் ?

47. மேலை வானவரும் அறியாதது ஓர்
கோலமே, எனை ஆட்கொண்ட கூத்தனே,
ஞாலமே,[1] விசும்பே,[2] இவை வந்து போம்
காலமே !-உனை என்று-கொல் காண்பதே? (43)

1 உலகமே
2 வானமே

முட்டைக்குள் குஞ்சு

48. காணல் ஆம் பரமே,[3] கட்கு இறந்தது ஓர்
வாள்-நிலாப் பொருளே, இங்கு, ஓர் பார்ப்பு[4] என,
பாணனேன்[5] படிற்று[6] ஆக்கையை விட்டு, உனைப்
பூணும் ஆறு அறியேன்-புலன் போற்றியே. (44)

3 மேலான பொருளே
4 பறவைக் குஞ்சு
5 வீணன்
6 வஞ்சகமாகிய, பொய்யாகிய

ஆற்றல் மிக்க அன்பு இல்லையே !

49. 'போற்றி' என்றும், புரண்டும், புகழ்ந்தும் நின்று,
ஆற்றல் மிக்க அன்பால் அழைக்கின்றிலேன்;
ஏற்று வந்து எதிர், தாமரைத் தாள் உறும்
கூற்றம்[7] அன்னது ஓர் கொள்கை-என் கொள்கையே.(45)

7 யமன்

என்னையும் பணி கொள்ளுவாரோ ?

50. கொள்ளும்-கில், எனை அன்பரில் கூய்ப் பணி-
கள்ளும், வண்டும், அறு மலர்க் கொன்றையான்:
நள்ளும்,[8] கீழ் உளும், மேல் உளும், யா உளும்,
எள்ளும் எண்ணெயும் போல், நின்ற எந்தையே? (46)

8 நடுவிலும்

எல்லாம் அவனே !

51. எந்தை, யாய், எம்பிரான்; மற்றும் யாவர்க்கும்
தந்தை, தாய், தம்பிரான்; தனக்கு அஃது இலான்;
முந்தி என்னுள் புகுந்தனன்-யாவரும்
சிந்தையாலும் அறிவு-அரும் செல்வனே. (47)

சஅ

ருஉ. செல்வ நல்குர வின்றிவிண் ணோர்புழுப்
புல்வ ரம்பின்றி யார்க்கு மரும் பொருள்
எல்லை யில்கழல் கண்டும் பிரிந்தனன்
கல்வ கைமனத் தேன்பட்ட கட்டமே.

சகூ

ருங. கட்ட றுத்தெனை யாண்டுகண் ணாரநீ
றிட்ட வன்பரொடி யாவருங் காணவே
பட்டிமண்டப மேற்றினை யேற்றினை
எட்டி னோடிரண் டும்மறி யேனையே.

ருய

ருச. அறிவ னேயமு தேயடி நாயினேன்
அறிவ னாகக்கொண் டோவெனை யாண்டது
அறிவி லாமையன் றேகண்ட தாண்டநான்
அறிவ னோவல்ல னேவரு ளீசனே.

ரு. அநுபோகசுத்தி

(அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

ருக

ருரு. ஈச னேயென் னெம்மானே
யெந்தை பெருமா னென்பிறவி
நாச னேநான் யாதுமொன்
றல்லாப் பொல்லா நாயான
நீச னேனை யாண்டாய்க்கு
நினைக்க மாட்டேன் கண்டாயே
தேச னேயம் பலவனே
செய்வ தொன்று மறியேனே.

கண்டும் கைவிட்டேனே !

52. செல்வம், நல்குரவு,[1] இன்றி; விண்ணோர், புழு,
புல், வரம்பு இன்றி; யார்க்கும் அரும் பொருள்
எல்லை இல் கழல் கண்டும் பிரிந்தனன்;
கல் வகை மனத்தேன் பட்ட கட்டமே![2] (48)

1 வறுமை

2 கஷ்டம, துன்பம.

பெருமிதம்

53. கட்டு அறுத்து, எனை ஆண்டு, கண் ஆர, நீறு[3]
இட்ட அன்பரொடு, யாவரும், காணவே,
பட்டிமண்டபம்[4] ஏற்றினை, ஏற்றினை[5]
எட்டினோடு இரண்டும்[6] அறியேனையே. (49)

3 திருநீறு

4 சமய உண்மைகளை ஆய்ந்து முடிவுசெய்யும் மனறம்

5 எருதை ஊர்தியாக வுடைய நீ

6 'அ' 'உ' என்னும் மூல மறை ஒலிகள்

நான் அறிவனோ ?

54. அறிவனே! அமுதே! அடி—நாயினேன்
அறிவன் ஆகக் கொண்டோ, எனை ஆண்டதும்?
அறிவு இலாமை அன்றே கண்டது, ஆண்ட நாள்?
அறிவனோ, அல்லனோ? அருள், ஈசனே! (50)

6. அநுபோக சுத்தி

ஆட்கொண்டவனை நினைக்கவில்லையே !

55. ஈசனே ! என் எம்மானே !
எந்தை பெருமான் ! என் பிறவி--
நாசனே ![7] நான் யாதும் ஒன்று
அல்லாப் பொல்லா நாய் ஆன
நீசனேனை[8] ஆண்டாய்க்கு,
நினைக்கமாட்டேன் கண்டாயே;
தேசனே ![9] அம்பலவனே !
செய்வது ஒன்றும் அறியேனே. (51)

7 பிறவியை ஒழிப்பவனே

8 தாழ்நதவனாகிய என்னை

9. ஒளிக்கு மூலமாக வுள்ளவனே

௫௨

௫௬. செய்வ தறியாச் சிறுநாயேன்
செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பே றத்தனையும்
பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத
மேவக் கண்டுங் கேட்டிருந்தும்
பொய்ய னேனு னுண்டுடுத்திங்
கிருப்ப தானேன் போரேறே.

௫௩

௫௭. போரே றேநின் பொன்னகர்வாய்
நீபோந் தருளி யிருணீக்கி
வாரே றிளமென் முலையாளோ
டுடன்வந் தருள வருள்பெற்ற
சீரே றடியார் நின்பாதஞ்
சேரக்கண்டுங் கண்கெட்ட
ஊரே றாயிங் குழல்வேனோ
கொடியே னுயிர்தா னுலவாதே.

௫௪

௫௮. உலவாக் காலந் தவமெய்தி
யுறுப்பும் வெறுத்திங் குனைக்காண்பான்
பலமா முனிவர் நனிவாடப்
பாவி யேனைப் பணிகொண்டாய்
மலமாக் குரம்பை யிதுமாய்க்க
மாட்டேன் மணியே யுனைக்காண்பான்
அலவா நிற்கு மன்பிலே
னென்கொண் டெழுகே னெம்மானே.

உடலைப் பேணும் பொய்யன்

56. செய்வது அறியாச் சிறு நாயேன்,
செம் பொன் பாத மலர் காணாப்
பொய்யர் பெறும் பேறு அத்தனையும்
பெறுதற்கு உரியேன்; பொய் இலா
மெய்யர் வெறி–ஆர்[1] மலர்ப் பாதம்
மேவக் கண்டும், கேட்டிருந்தும்,
பொய்யனேன் நான் உண்டு, உடுத்து, இங்கு
இருப்பது ஆனேன்; போர் ஏறே![2] (52)

1 மணம் நிறைந்த
2 ஆண்சிங்கம் போன்றவனே

கண்கெட்ட நாயாய் அலைவதா?

57. போர் ஏறே! நின் பொன்-நகர்வாய்
நீ போந்தருளி, இருள் நீக்கி,
வார்[3] ஏறு இள மென் முலையாளோடு
உடன் வந்தருள, அருள் பெற்ற
சீர் ஏறு அடியார் நின் பாதம்
சேரக் கண்டும், கண் கெட்ட
ஊர்–ஏறு[4] ஆய், இங்கு உழல்வேனோ?
கொடியேன் உயிர்–தான் உலவாதே![5] (53)

3 கச்சு
4 நாய்
5 நீங்காத

அன்பிலாப் பாவி எதுகொண்டு உய்வேன்?

58. உலவாக் காலம்[6] தவம் எய்தி,
உறுப்பும் வெறுத்து, இங்கு உனைக் காண்பான்,
பல மா முனிவர் நனி வாட,
பாவியேனைப் பணி கொண்டாய்;
மல மாக் குரம்பை[7] – இது மாய்க்க
மாட்டேன்; மணியே, உனைக் காண்பான்,
அலவாநிற்கும்[8] அன்பு இலேன்;
என் கொண்டு எழுகேன், எம்மானே? (54)

6 அளவுகடந்த காலம்
7 சிறுகுடில்—உடல்
8 ஆசையோடு அங்காந்து நிற்பேன்

௫௫

௫௯. மானேர் நோக்கி யுமையாள்
பங்கா வந்திங் காட்கொண்ட
தேனே யமுதே கரும்பின்
தெளிவே சிவனே தென்றில்லைக்
கோனே யுன்றன் றிருக்குறிப்புக்
கூடு வார்நின் கழல்கூட
ஊனூர் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தானே னுடையானே.

௫௬

௬0. உடையா னேநின் றனையுள்கி
யுள்ள முருகும் பெருங்காதல்
உடையா ருடையாய் நின்பாதஞ்
சேரக் கண்டிங் கூர்நாயின்
கடையா னேனெஞ் சுருகாதேன்
கல்லா மனத்தேன் கசியாதேன்
முடையார் புழுக்கூ டிதுகாத்திங்
கிருப்ப தாக முடித்தாயே.

௫௭

௬௧. முடித்த வாறு மென்றனக்கே
தக்க தேமுன் னடியாரைப்
பிடித்த வாறுஞ் சோராமற்
சோர னேனிங் கொருத்திவாய்
துடித்த வாறுந் துகிலிறையே
சோர்ந்த வாறு முகங்குறுவேர்
பொடித்த வாறு மிவையுணர்ந்து
கேடென் றனக்கே சூழ்ந்தேனே

ஊன் கூடு காப்பதானேன்

59. மான் நேர் நோக்கி உமையாள்
பங்கா! வந்து இங்கு ஆட்கொண்ட
தேனே! அமுதே! கரும்பின்
தெளிவே! சிவனே! தென் தில்லைக்
கோனே! உன்–தன் திருக்குறிப்புக்
கூடுவார் நின் கழல் கூட,
ஊன் ஆர் புழுக்கூடு[1] – இது காத்து, இங்கு
இருப்பது ஆனேன்; உடையானே! (55)

1 உடல்

கசியா உள்ளத்தின் கதி இதுதானே!

60. உடையானே! நின்–தனை உள்கி,[2]
உள்ளம் உருகும், பெரும் காதல்
உடையார், உடையாய்! நின் பாதம்
சேரக் கண்டு, இங்கு ஊர் நாயின்
கடை ஆனேன், நெஞ்சு உருகாதேன்,
கல்லா மனத்தேன், கசியாதேன்,
முடை ஆர் புழுக் கூடு––இது காத்து, இங்கு
இருப்பது ஆக முடித்தாயே. (56)

2 எண்ணி

சிறு நினைவு கேடாய் முடிந்தது

61. முடித்த ஆறும், என்––தனக்கே
தக்கதே; முன், அடியாரைப்
பிடித்த ஆறும், சோராமல் —
சோரனேன்––இங்கு, ஒருத்திவாய்
துடித்த ஆறும், துகில்[3] இறையே[4]
சோர்ந்த[5] ஆறும், முகம் குறு வேர்[6]
பொடித்த[7] ஆறும், இவை உணர்ந்து,
கேடு என்-தனக்கே சூழ்ந்தேனே. (57)

3 ஆடை
4 சிறிதே
5 நெகிழ்ந்த
6 வியர்வை
7 அரும்பிய

௫அ

௬௨ தேனைப் பாலைக் கன்னலின்
றெளியை யொளியைத் தெளிந்தார்தம்
ஊனை யுருக்கு முடையானை
யும்ப ரானை வம்பனேன்
நானின் னடியே னீயென்னை
யாண்டா யென்றா லடியேற்குத்
தானுஞ் சிரித்தே யருளலாந்
தன்மை யாமென் றன்மையே.

௫௯

௬௩. தன்மை பிறரா லறியாத
தலைவா பொல்லா நாயான
புன்மை யேனை யாண்டையா
புறமே போக விடுவாயோ
என்னை நோக்கு வார்யாரே
யென்னான் செய்கே னெம்பெருமான்
பொன்னே திகழுந் திருமேனி
யெந்தா யெங்குப் புகுவேனே.

௬0

௬௪. புகுவே னெனதே நின்பாதம்
போற்று மடியா ருண்ணின்று
நகுவேன் பண்டு தோணோக்கி
நாண மில்லா நாயினேன்
நெகுமன் பில்லை நினைக்காண
நீயாண் டருள வடியேனும்
தகுவ னேயென் றன்மையே
யெந்தா யந்தோ தரியேனே.

'நான் ஒரு அடியான்' என்றல் - நகைதான்

62. தேனை, பாலை, கன்னலின்
தெளியை, ஒளியை, தெளிந்தார்-தம்
ஊனை உருக்கும் உடையானை,
உம்பரானை,[1] வம்பனேன்,
'நான் நின் அடியேன்; நீ என்னை
ஆண்டாய்,' என்றல், அடியேற்கு,
தானும் சிரித்தே அருளலாம்
தன்மை ஆம், என் தன்மையே. (58)

1 மேலாகவுள்ளவனை, எண்ணத்துக்கு மேற பட்டவனை

புகலிடம் ஏது?

63. தன்மை பிறரால் அறியாத
தலைவா! பொல்லா நாய் ஆன
புன்மையேனை[2] ஆண்டு, ஐயா!
புறமே போக விடுவாயோ?
என்னை நோக்குவார் யாரே?
என் நான் செய்கேன்? எம்பெருமான்!
பொன்னே திகழும் திருமேனி
எந்தாய்! எங்குப் புகுவேனே? (59)

2 கீழ்ப்பட்டவனை

அன்பிலேன் எனினும் அருளுக

64. புகுவேன், எனதே நின் பாதம்;
போற்றும் அடியார் உள் நின்று
நகுவேன்,[3] பண்டு[4] தோள் நோக்கி,[5]
நாணம் இல்லா நாயினேன்.
நெகும் அன்பு இல்லை, நினைக்காண;
நீ ஆண்டு அருள, அடியேனும்
தகுவனே? என் தன்மையே!
எந்தாய், அந்தோ! தரியேனே! (60)

3 நகைப்பேன்
4 முன்பு
5 செருக்குக்கொண்டு

எ. காருணியத் திரங்கல்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

சுக

சுரு. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி யெங்கள்
விடலையே போற்றி யொப்பில்
ஒருத்தனே போற்றி யும்பர்
தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி யெங்க
ணின்மலா போற்றி போற்றி.

சுஉ

சுசு. போற்றியோ நமச்சி வாய
புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றியோ நமச்சி வாய
புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றியோ நமச்சி வாய
புறமெனைப் போக்கல் கண்டாய்
போற்றியோ நமச்சி வாய
சயசய போற்றி போற்றி.

சுங

சுஎ. போற்றியென் போலும் பொய்யர்
தம்மையாட் கொள்ளும் வள்ளல்
போற்றிநின் பாதம் போற்றி
நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப்
புதுமதுப் புவன நீர்தீக்
காற்றிய மானன் வான
மிருசுடர்க் கடவு ளானே.

7. காருணியத்து இரங்கல்

உடல் தாங்கேன்

65. தரிக்கிலேன் காய வாழ்க்கை
சங்கரா, போற்றி! வான
விருத்தனே,[1] போற்றி! எங்கள்
விடலையே,[2] போற்றி! ஒப்புஇல்
ஒருத்தனே, போற்றி! உம்பர்[3]
தம்பிரான், போற்றி! தில்லை
நிருத்தனே,[4] போற்றி! எங்கள்
நின்மலா,[5] போற்றி! போற்றி! (61)

1 முதியவனே
2 திணணியனே
3 மேலுள்ளார்
4 கூத்தனே
5 மாசு அறுப்பவனே

புறம் போக்காதே

66. போற்றி! ஓ, நமச்சிவாயா!
புயங்கனே,[6] மயங்கு கின்றேன்;
போற்றி! ஓ, நமச்சிவாய!
புகல் இடம் பிறிது ஒன்று இல்லை;
போற்றி! ஓ, நமச்சிவாய!
புறம் எனைப் போக்கல், கண்டாய்;
போற்றி! ஓ, நமச்சிவாய!
சய! சய! போற்றி! போற்றி! (62)

6 பாம்பை அணிந்தவனே

வள்ளலுக்குப் பொய்யர் விலக்காகுமோ?

67. போற்றி! என்போலும் பொய்யர்–
தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்
போற்றி! நின்பாதம் போற்றி!
நாதனே,[7] போற்றி! போற்றி!
போற்றி! நின்கருணை வெள்ளப்
புதுமது; புவனம்,[8] நீர், தீ,
காற்று, இயமானன்,[9] வானம்,
இருசுடர்,[10] கடவுளானே! (63)

7 தலைவனே
8 உலகம்
9 ஆனமா
10 கதிரவனும் திங்களும்

கூச

கூஅ. கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே யுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி.

கூ௫

கூகூ. சங்கரா போற்றி மற்றோர்
சரணிலேன் போற்றி கோலப்
பொங்கரா வல்குற் செவ்வாய்
வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி
மால்விடை யூர்தி போற்றி
இங்கிவாழ் வாற்ற கில்லே
னெம்பிரா னிழித்திட் டேனே.

கூகூ

எ0. இழித்தன னென்னை யானே
யெம்பிரான் போற்றி போற்றி
பழித்திலே னுன்னை யென்னை
யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கை யெல்லாம்
பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி
யும்பர்நாட் டெம்பி ரானே.

விரைவில் அருளுக

68. கடவுளே போற்றி என்னைக்
கண்டுகொண்டு, அருளு, போற்றி!
விட, உளே[1] உருக்கி என்னை
ஆண்டிட வேண்டும், போற்றி!
உடல்-இது களைந்திட்டு, ஒல்லை[2]
உம்பர்[3] தந்து அருளு, போற்றி!
சடையுளே கங்கை வைத்த
சங்கரா, போற்றி! போற்றி! (64)

1 உள்ளே
2 விரைவில்
3 மேலான நிலை, வீடு

இங்கு வாழமாட்டேன்

69. சங்கரா, போற்றி! மற்று ஓர்
சரண் இலேன்; போற்றி! கோலப்
பொங்கு அரா[4] அல்குல், செவ்வாய்,
வெள்நகை, கரியவாள் கண்,
மங்கை ஓர்பங்க, போற்றி!
மால்விடை[5] ஊர்தி, போற்றி!
இங்கு, இவ்வாழ்வு ஆற்றகில்லேன்;
எம்பிரான்! இழித்திட்டேனே. (65)

4 சீறுகின்ற பாம்பு-பாம்பின் படம்
5 காளை

பிழைத்தவை பொறுத்தருள்க

70. இழித்தனன் என்னை யானே;
எம்பிரான், போற்றி! போற்றி!
பழித்திலேன் உன்னை; என்னை
ஆளுடைப் பாதம் போற்றி!
பிழைத்தவை பொறுக்கை எல்லாம்
பெரியவர் கடமை; போற்றி!
ஒழித்திடு இவ்வாழ்வு; போற்றி!
உம்பர் நாட்டு[6] எம்பிரானே![7] (66)

6 வீட்டுலகத்து
7 எமது தலைவனே

சூஎ

எக. எம்பிரான் போற்றி வானத்
தவரவ ரேறு போற்றி
கொம்பரார் மருங்குன் மங்கை
கூறவெண் ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை
யாளுடை யொருவ போற்றி.

சூஅ

எஉ. ஒருவனே போற்றி யொப்பி
லப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி யெங்கள்
கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால்
வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி
தமியனேன் றனிமை தீர்த்தே.

சூகூ

எஙு. தீர்ந்தவன் பாய வன்பர்க்
கவரினு மன்ப போற்றி
பேர்ந்துமென் பொய்ம்மை யாட்கொண்
டருளிடும் பெருமை போற்றி
வார்ந்தநஞ் சயின்று வானோர்க்
கமுதமீ வள்ளல் போற்றி
ஆர்ந்த நின்பாத நாயேற்
கருளிட வேண்டும் போற்றி.

திருச்சிற்றம்பலவன் என்னை ஆளுடையான்

71. எம்பிரான்,[1] போற்றி! வானத்தவர்–
அவர் ஏறு, போற்றி!
கொம்பர்-ஆர்[2] மருங்குல்[3] மங்கை கூற,[4]
வெள்-நீற, போற்றி!
செம்பிரான், போற்றி! தில்லைத்
திருச்சிற்றம் பலவ, போற்றி!
உம்பராய்,[5] போற்றி! என்னை
ஆளுடை ஒருவ, போற்றி! (67)

1 எமது தலைவனே
2 கொடிபோன்ற
3 இடை
4 பெண்ணொரு பாகத்தனே–சிவபெருமானே
5 எண்ணவியலாத மேல் நிலையிலுள்ளவனே

திருவடி அருளுக

72. ஒருவனே போற்றி! ஒப்புஇல்
அப்பனே, போற்றி! வானோர்
குருவனே, போற்றி! எங்கள்
கோமளக் கொழுந்து[6] போற்றி!
'வருக' என்று, என்னை நின்பால்
வாங்கிட வேண்டும், போற்றி!
தருக நின் பாதம் போற்றி! –
தமியனேன் தனிமை தீர்த்தே. (68)

6 இளமை அழகு மாறாத தளிர்

அன்பருக்கு அன்பன்

73. தீர்ந்த அன்பாய அன்பர்க்கு
அவரினும் அன்ப, போற்றி!
பேர்ந்தும், என்பொய்ம்மை ஆட்கொண்டு
அருளிடும் பெருமை, போற்றி!
வார்ந்த நஞ்சு அயின்று,[7] வானோர்க்கு
அமுதம் ஈ வள்ளல், போற்றி!
ஆர்ந்த[8] நின்பாதம், நாயேற்கு
அருளிட வேண்டும், போற்றி! (69)

7 உண்டு
8 அருள் நிறைந்த

எ௰

எச. போற்றியிப் புவன நீர்தீக்
காலொடு வான மானாய்
போற்றியெவ் வுயிர்க்குந் தோற்ற
மாகிநீ தோற்ற மில்லாய்
போற்றி யெல்லா வுயிர்க்கு
மீறாயீ றின்மை யானாய்
போற்றியைம் புலன்க ணின்னைப்
புணர்கிலாப் புணர்க்கை யானே.

அ. ஆனந்தத்தழுந்தல்

(எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

எக

எரு. புணர்ப்ப தொக்க வெந்தை யென்னை
யாண்டு பூண நோக்கினாய்
புணர்ப்ப தன்றி தென்ற போது
நின்னொ டென்னொ டென்னிதாம்
புணர்ப்ப தாக வன்றி தாக
வன்பு நின்க ழற்கணே
புணர்ப்ப தாக வங்க ணாள
புங்க மான போகமே.

எஉ

எசா. போகம் வேண்டி வேண்டி லேன்பு
ரந்த ராதி யின்பமும்
ஏக நின்க ழலிணை
யலாதி லேனெ னெம்பிரான்
ஆகம் விண்டு கம்பம் வந்து
குஞ்சி யஞ்ச லிக்கணே
ஆக வென்கை கண்க டாரை
யாற தாக வையனே.

எல்லாம் அவனே

74 போற்றி! இப்புவனம், நீர் தீ
காலொடு,[1] வானம் ஆனாய்;
போற்றி! எவ்உயிர்க்கும் தோற்றம்
ஆகி, நீ, தோற்றம் இல்லாய்;
போற்றி! எல்லா உயிர்க்கும்
ஈறு[2] ஆய், ஈறு இன்மை ஆனாய்;
போற்றி! ஐம்புலன்கள் நின்னைப்
புணர்கிலா[3]ப் புணர்க்கையானே. (70)

1 காற்றோடு
2 முடிவு
3 சேரவியலா

8. ஆனந்தத்து அழுந்தல்

அன்பே ஆனந்தம்

75. புணர்ப்பது ஒக்க, எந்தை! என்னை
ஆண்டு, பூண நோக்கினாய்;
புணர்ப்பது அன்று இது என்ற போது,
நின்னொடு என்னொடு, என் இது ஆம்?
புணர்ப்பது ஆக, அன்று இது ஆக,
அன்பு நின் கழல்கணே
புணர்ப்பு அது ஆக, அம் கணாள,
புங்கம்[4] ஆன போகமே! (71)

4 உயர்வு

திருவடியல்லாது துணையில்லை

போகம் வேண்டி, வேண்டிலேன்
புரந்தர்-ஆதி[5] இன்பமும்;
ஏக![6] நின்கழல்-இணை அலாது
இலேன், என் எம்பிரான்;
ஆகம்[7] விண்டு,[8] கம்பம்[9] வந்து
குஞ்சி[10] அஞ்சலி[11]க் கணே
ஆக, என் கை; கண்கள் தாரை-
ஆறு-அது ஆக; ஐயனே! (72)

5 இந்திரன முதலியோர்
6 ஒப்பற்ற ஒருவனே
7 உடல்
8 நெகிழ்நது
9 நடுக்கம
10 தலை உச்சி
11 கூப்பித்தொழுதல்

எ௩

எஎ. ஐய நின்ன தல்ல தில்லை
மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை
பொய்மை யேனெ னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க
வந்து நின்க ழற்கணே
மெய்க லந்த வன்ப ரன்பெ
னக்கு மாக வேண்டுமே.

எச

எஅ. வேண்டு நின்க ழற்க ணன்பு
பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே
ஆண்டு கொண்டு நாயி னேனை
யாவ வென்ற ருளுநீ
பூண்டு கொண்ட டியனேனும்
போற்றி போற்றி யென்று மென்று
மாண்டு மாண்டு வந்து வந்து
மன்ன நின்வ ணங்கவே.

எரு

எகூ. வணங்கு நின்னை மண்ணும் விண்ணும்
வேத நான்கு மோலமிட்
டுணங்கு நின்னை யெய்த லுற்று
மற்றொ ருண்மை யின்மையின்
வணங்கி யாம்வி டேங்க ளென்ன
வந்து நின்ற ருளுதற்
கிணங்கு கொங்கை மங்கை பங்க
வென்கொ லோநி னைப்பதே.

மெய்யன்பு வேண்டும்

77. ஐய, நின்னது அல்லது இல்லை,
மற்று ஓர் பற்று, வஞ்சனேன்,
பொய் கலந்தது அல்லது இல்லை,
பொய்மையேன் , என் எம்பிரான்,
மை கலந்த கண்ணி[1] பங்க,
வந்து நின் கழல்-கணே[2]
மெய் கலந்த அன்பர் அன்பு,
எனக்கும் ஆக வேண்டுமே. (73)

எப்பிறவியிலும் உன்னையே வணங்கவேண்டும்

78. வேண்டும், நின் கழல் கண் அன்பு;
பொய்மை தீர்த்து, மெய்ம்மையே
ஆண்டுகொண்டு, நாயினேனை,
'ஆவ'[3] என்று அருளு, நீ;
பூண்டு கொண்டு அடியனேனும்
'போற்றி! போற்றி!' என்றும், என்றும்
மாண்டு மாண்டு, வந்து வந்து,
மன்ன! நின் வணங்கவே. (74)

நீயே மெய்ப்பொருள்

79. வணங்கும் நின்னை, மண்ணும், விண்ணும்;
வேதம் நான்கும் ஓலம் இட்டு
உணங்கும்,[4] நின்னை எய்தல் உற்று,
மற்று ஓர் உண்மை இன்மையின்;
வணங்கி, யாம் விடேங்கள் என்ன,
வந்து நின்று அருளுதற்கு
இணங்கு[5] கொங்கை மங்கை பங்க!
என் - கொலோ நினைப்பதே? (75)

1. கண்ணையுடையவள் - உமையம்மை
2. கழலணிந்த திருவடி.
3. இரக்கக் குறிப்பு
4. தளரும்
5. நெருங்கிய

எசு

அ௰. நினைப்ப தாக சிந்தை செல்லு
மெல்லை யேய வாக்கினால்
தினைத்த னையு மாவ தில்லை
சொல்ல லாவ கேட்பவே
எனைத் துலகு மாய நின்னை
யைம்பு லன்கள் காண்கிலா
எனைத்தெ னைத்த தெப்பு றத்த
தெந்தை பாத மெய்தவே.

எஎ

அக. எய்த லாவ தென்று நின்னை
யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி
மற்றொ ருண்மை யின்மையிற்
பைத லாவ தென்று பாது
காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்க ணொன்றும்
வண்ண மில்லை யீசனே.

எஅ

அஉ. ஈச னேநீ யல்ல தில்லை
யிங்கு மங்கு மென்பதும்
பேசி னேனொர் பேத மின்மை
பேதை யேனெ னெம்பிரான்
நீச னேனை யாண்டு கொண்ட
நின்ம லாவொர் நின்னலால்
தேச னேயொர் தேவ ருண்மை
சிந்தி யாது சிந்தையே.

ஐம்புலன்களுக்கு அப்பாலுள்ளவன்

80. நினைப்பது ஆக சிந்தை செல்லும்
எல்லை, ஏய வாக்கினால்
தினைத் தனையும் ஆவது இல்லை
சொல்லல் ; ஆவ கேட்பவே
அனைத்து உலகும் ; ஆய நின்னை
ஐம்புலன்கள் காண்கிலா ;
எனைத்து, எனைத்து அது, எப்புறத்து அது-
எந்தை பாதம் எய்தவே?[1] (76)

1 அடையவே

பாவியேனுக்கு இரங்கு

81. எய்தல் ஆவது என்று நின்னை,
எம்பிரான்? இவ் வஞ்சனேற்கு
உய்தல்[2] ஆவது உன்கண் அன்றி,
மற்று ஓர் உண்மை இன்மையின்,
பைதல்[3] ஆவது என்று பாதுகாத்து
இரங்கு ; பாவியேற்கு
ஈது அலாது, நின்கண் ஒன்றும்
வண்ணம் இல்லை ; ஈசனே ! (77)

2 ஈடேறல்

3 துன்பம்

நீ அல்லது இல்லை

82. ஈசனே ! நீ அல்லது இல்லை
இங்கும் அங்கும் என்பதும்,
பேசினேன் – ஓர்பேதம்[4] இன்மை
பேதையன் என் எம்பிரான் !
நீசனேனை[5] ஆண்டு கொண்ட
நின்மலா ![6] ஓர் நின் அலால்,
தேசனே ![7] ஓர் தேவர் உண்மை
சிந்தியாது, சிந்தையே. (78)

4 வேற்றுமை

5 இழிந்தோனாகிய என்னை

6 மாசிலாதவன்

7 ஒளிகளுக்கு முதலாகவுள்ளவனே

எக

அங. சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரி லைம்பு லன்களால்
முந்தை யான கால நின்னை
யெய்தி டாத மூர்க்கனேன்
வெந்தை யாவி ழுந்தி லேனெ
னுள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை யாய நின்னை யின்ன
மெய்த லுற்றி ருப்பனே.

அல

அச. இருப்பு நெஞ்ச வஞ்ச னேனை
யாண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய்ம டுத்தெ
னைக்க லந்து போகவும்
நெருப்பு முண்டி யானு முண்டி
ருந்த துண்ட தாயினும்
விருப்பு முண்டு நின்க ணென்க
ணென்ப தென்ன விச்சையே.

க. ஆநந்த பரவசம்

(கலிநிலைத்துறை)

அக

அரு. விச்சுக் கேடு பொய்க்காகா
தென்றிங் கெனைவைத்தாய்
இச்சைக் கானா ரெல்லாரும்
வந்துன் றாள்சேர்ந்தார்
அச்சத் தாலே யாழ்ந்திடு
கின்றே னாரூ ரெம்
பிச்சைத் தேவா வென்னான்
செய்கேன் பேசாயே.

முன்பு அறியாதிருந்தேன்

83. சிந்தை, செய்கை, கேள்வி, வாக்கு,
சீர் இல் ஐம் புலன்களால்
முந்தை[1] ஆன காலம் நின்னை
எய்திடாத மூர்க்கனேன்,
வெந்து, ஐயா, விழுந்திலேன்; என்
உள்ளம் வெள்கி[2] விண்டிலேன்;[3]
எந்தை ஆய நின்னை, இன்னம்
எய்தல் உற்று, இருப்பனே. (79)

1 முன
2 நாணி
3 அலறிடேன நெகிழ்ந்திலேன்

கலந்தது பிரிந்தும் வாழ்வா?

84. இருப்பு நெஞ்ச வஞ்சனேனை
ஆண்டு கொண்ட நின்ன தாள்
கருப்பு மட்டு[4] வாய் மடுத்து,[5]
எனைக் கலந்து போகவும்,
நெருப்பும் உண்டு; யானும் உண்டு—
இருந்தது, உண்டது—ஆயினும்,
விருப்பும் உண்டு நின்கண் என்கண்
என்பது, என்ன விச்சையே! (80)

4 தேன்போன்ற சாறு
5 பருகி

9. ஆனந்த பரவசம்

பொய் வளரவோ என்னை வைத்தாய்?

85. விச்சுக்[6] கேடு பொய்க்கு ஆகாது
என்று, இங்கு எனைவைத்தாய்;
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
வந்து, உன் தாள் சேர்ந்தார்;
அச்சத்தாலே, ஆழ்ந்திடுகின்றேன்;
ஆரூர் எம்
பிச்சைத்தேவா,[7] என் நான்
செய்கேன்? பேசாயே. (81)

6 வித்து
7 சிவபெருமானே

அஉ

அசு, பேசப் பட்டே னின்னடி
யாரிற் றிருநீறே
பூசப் பட்டேன் பூதல
ராலுன் னடியானென்
றேசப் பட்டே னினிப்படு
கின்ற தமையாதால்
ஆசைப் பட்டே னுட்பட்
டேனுன் னடியேனே.

அங

அஎ. அடியே னல்லேன் கொல்லோ தானெனை
யாட்கொண் டிலைகொல்லோ
அடியா ராஞ ரெல்லாரும்
வந்துன் றுள்சேர்ந்தார்
செடிசே ருடல மிதுநீக்க மாட்டே
னெங்கள் சிவலோகா
கடியே னுன்னைக் கண்ணாரக்
காணுமாறு காணேனே.

அச

அஅ. காணு மாறு காணே னுன்னை
யந்நாட் கண்டேனும்
பாணே பேசி யென்றன்னைப்
படுத்த தென்ன பரஞ்சோதி
ஆணே பெண்ணே யாரமுதே
யத்தா செத்தே போயினேன்
ஏணுணில்லா நாயினே னென்கொண்
டெழுகே னெம்மானே.

ஏசப்பட்டேன்; ஆட்பட்டேன்

86. பேசப்பட்டேன் நின் அடியாரில்;
திரு நீறே
பூசப்பட்டேன்; பூதலரால்,[1]
உன் அடியான் என்று,
ஏசப்பட்டேன்;[2] இனிப் படுகின்றது
அமை யாதால்;
ஆசைப்பட்டேன்; ஆட்பட்டேன்;
உன் அடியேனே. (82)

ஆட்கொள்ள வில்லையோ?

87. அடியேன் அல்லேன்—கொல்லோ? தான், எனை
ஆட்கொண்டிலை—கொல்லோ?
அடியார் ஆனார் எல்லாரும் வந்து,
உன்தாள் சேர்ந்தார்;
செடி[3] சேர் உடலம்—இது, நீக்க மாட்டேன்;
எங்கள் சிவலோகா!
கடியேன்[4] உன்னை, கண்ஆரக்
காணும் ஆறு, காணேனே. (83)

கண்டேன்; காணும் வழி காணேன்

88. காணும் ஆறு காணேன்; உன்னை
அந்நாள் கண்டேனும்
பாணே[5] பேசி, என்—தன்னைப் படுத்தது
என்ன? பரஞ்சோதி![6]
ஆணே[7] பெண்ணே, ஆர்அமுதே, அத்தா
செத்தே போயினேன்
ஏண் நாண்[8] இல்லா நாயினேன், என்கொண்டு
எழுகேன், எம்மானே? (84)

1 உலகத்தவரால
2 இகழப்பட்டேன்
3 துன்பம்
4 இளக்கமற்ற மன முள்ளவனாகிய நான்
5 வெறும பேச்சே
6 மேலான ஒளி – சிவபெருமான்
7 திண்மை
8 நாணம், வெட்கம்

அரு

அசு. மானேர் நோக்கி யுமையாள் பங்கா
மறையீ றறியா மறையோனே
தேனே யமுதே சிந்தைக் கரியாய்
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே சிறிதென் கொடுமை பறைந்தேன்
சிவமா நகர் குறுகப்
போனா ரடியார் யானும் பொய்யும்
புறமே போந்தோமே.

அசா

கூ௰. புறமே போந்தோம் பொய்யும்
யானு மெய்யன்பு
பெறவே வல்லே னல்லா
வண்ணம் பெற்றேன்யான்
அறவே நின்னைச் சேர்த்த வடியார்
மற்றொன் றறியாதார்
சிறவே செய்து வழுவா து
சிவனே நின்றாள் சேர்ந்தாரே.

அள

கூக. தாரா யுடையா யடியேற்
குன்றா ளிணையன்பு
போரா வுலகம் புக்கா ரடியார்
புறமே போந்தேன்யான்
ஊரா மிலைக்கக் குருட்டா மிலைத்தாங்
குன்றா ளிணையன்புக்
காரா யடியே னயலே
மயல் கொண் டழுகேனே.

பொய்யால் புறம் போந்தேன்

89. மான்நேர் நோக்கி உமையாள் பங்கா,
மறைஈறு அறியா மறையோனே,
தேனே, அமுதே, சிந்தைக்கு அரியாய்,
சிறியேன் பிழை பொறுக்கும்
கோனே, சிறிது என்கொடுமை பறைந்தேன்;[1]
சிவ மாநகர் குறுகப்
போனார் அடியார்; யானும், பொய்யும்,
புறமே போந்தோமே. (85)

1 சொல்லினேன

மெய்யன்பு பெற வியலாதோ?

90. புறமே போந்தோம் பொய்யும்,
யானும்; மெய்அன்பு
பெறவே வல்லேன் அல்லா
வண்ணம் பெற்றேன் யான்.
அறவே நின்னைச் சேர்ந்த அடியார்
மற்று ஒன்று அறியாதார்;
சிறவே[2] செய்து வழுவாது, சிவனே!
நின்தாள் சேர்ந்தாரே. (86)

2 சிறந்த செயல்களையே

மயல்கொண்டு அழுகின்றேன்

91. தாராய், உடையாய்! அடியேற்கு உன்
தாள்-இணை அன்பு;
போரா[3] உலகம் புக்கார் அடியார்;
புறமே போந்தேன்யான்;
ஊர் ஆமிலைக்க,[4] குருட்டு ஆமிலைத் தாங்கு,
உன் தாள்-இணை அன்புக்கு
ஆரா அடியேன், அயலே
மயல்கொண்டு அழுகேனே. (87)

3 மீளா

4 கனைக்க, மருள.

அஅ

௬௨. அழுகே னின்பா லன்பா
மனமா யழல் சேர்ந்த
மெழுகே யன்னார் மின்னார்
பொன்னார் கழல்கண்டு
தொழுதே யுன்னைத் தொடர்ந்தா
ரோடுந் தொடராதே
பழுதே பிறந்தே னென்கொண்
டுன்னைப் பணிகேனே.

அ௯

௬௩. பணிவார் பிணிதீர்த் தருளிப்
பழைய வடியார்க்குன்
அணியார் பாதங் கொடுத்தி
யதுவு மரிதென்றால்
திணியார் மூங்கி லனையேன்
வினையைப் பொடியாக்கித்
தணியார் பாதம் வந்தொல்லை
தாராய் பொய்தீர் மெய்யானே.

௯௰

௬௪. யானே பொய்யென் னெஞ்சும்
பொய்யென் னன்பும்பொய்
யானால் வினையே னழுதா
லுன்னைப் பெறலாமே
தேனே யமுதே கரும்பின்
றெளிவே தித்திக்கும்
மானே யருளா யடியே
னுனைவந் துறுமாறே

பழுதானேன்

92. அழுகேன், நின்பால் அன்புஆம்
மனம் ஆய்; அழல் சேர்ந்த
மெழுகே அன்னார், மின் ஆர்
பொன் ஆர் கழல் கண்டு
தொழுதே, உன்னைத் தொடர்ந்தா
ரோடும் தொடராதே,
பழுதே பிறந்தேன்; என் கொண்டு
உன்னைப் பணிகேனே? (88)

என் வினையைப் பொடியாக்கு

93. பணிவார் பிணி தீர்த்தருளி,
பழைய அடியார்க்கு உன்
அணி ஆர் பாதம் கொடுத்தி;
அதுவும் அரிது என்றால்,
திணி ஆர் மூங்கில் அனையேன்,
வினையைப் பொடி ஆக்கி,
தணி ஆர் பாதம், வந்து, ஒல்லை[1] தாராய்;
பொய்தீர் மெய்யானே! (89)

1 விரைவில்

அழுதால் அடையலாம்

94. யானே பொய்; என் நெஞ்சும்
பொய்; என் அன்பும் பொய்;
ஆனால், வினையேன் அழுதால்,
உன்னைப் பெறலாமே?
தேனே, அமுதே, கரும்பின்
தெளிவே, தித்திக்கும்,
மானே,[2] அருளாய்-அடியேன்
உனைவந்து உறுமாறே. (90)

2 மகானே–பெரியவனே

கஎ. ஆனந்தாதீதம்

(எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

கூக

கூரு. மாறி லாதமாக் கருணை வெள்ளமே
வந்து முந்திநின் மலர்கொ டாளிணை
வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
ஈறி லாதநீ யெளியை யாகிவந்
தொளிசெய் மானுட மாக நோக்கியும்
கீறி லாதநெஞ் சுடைய னாயினேன்
கடைய னாயினேன் பட்ட கீழ்மையே.

கூஉ

கூகூ. கையி லங்குநற் கண்ணி பங்கனே
வந்தெனைப்பணி கொண்ட பின்மழக்
கையி லங்குபொற் கிண்ண மென்றலா
லரியை யென்றுனைக் கருது கின்றிலேன்
மெய்யி லங்குவெண் ணீற்று மேனியாய்
மெய்ம்மை யன்பருன் மெய்ம்மை மேவினார்
பொய்யி லிங்கெனைப் புகுத விட்டுநீ
போவதோ சொலாய் பொருத்த மாவதே.

கூங

கூஎ. பொருத்த மின்மையேன் பொய்ம்மை யுண்மையேன்
போத வென்றெனைப் புரிந்து நோக்கவும்
வருத்த மின்மையேன் வஞ்ச முண்மையேன்
மாண்டி லேன்மலர்க் கமல பாதனே
அரத்த மேனியா யருள்செ யன்பரும்
நீயு மங்கெழுந் தருளி யிங்கெனை
இருத்தி னாய்முறை யோவெ னெம்பிரான்
வம்ப னேன்வினைக் கிறுதி யில்லையே.

10. ஆனந்தாதீதம்

மெய் மெய்யே : கடையவன் கடையவனே

95. மாறு இலாத மாக் கருணை வெள்ளமே !
வந்து முந்தி நின் மலர் கொள் தாள்-இணை,
வேறு இலாப் பதப் பரிசுபெற்ற, நின்
மெய்ம்மை அன்பர், உன் மெய்ம்மை மேவினார்;
ஈறு[1] இலாத நீ, எளிமை ஆகி வந்து,
ஒளிசெய்[2] மானிடம் ஆக, நோக்கியும்,
கீறு[3] இலாத நெஞ்சு உடையன் ஆயினேன்:
கடைய நாயினேன்-பட்டகீழ்மையே. (91)

1 முடிவு
2 ஞானஒளி பரப்புகின்ற
3 பிளவு, வாளால் கீறுதல், பிளத்தல்

பொய்யில் என்னைப் புகவிடலாமா ?

96. மை இலங்கு நல் கண்ணி பங்கனே !
வந்து எனைப் பணிகொண்டபின், மழக்[4]
கை இலங்கு பொன் கிண்ணம் என்று அலால்,
அரியை என்று உனைக் கருதுகின்றிலேன்;
மெய் இலங்கு வெள்-நீற்று மேனியாய்,
மெய்ம்மை அன்பர் உன் மெய்ம்மை மேவினார் ;
பொய்யில் இங்கு எனைப் புகுதவிட்டு, நீ
போவதோ ? சொலாய், பொருத்தம் ஆவதே ? (92)

4 குழந்தைகளுடைய

என் வினைக்கு ஒரு முடிவு இல்லையா ?

97. பொருத்தம் இன்மையேன் ; பொய்ம்மை உண்மையேன் ;
'போத' என்று எனைப் புரிந்து[5] நோக்கவும்,
வருத்தம் இன்மையேன் ; வஞ்சம் உண்மையேன்;
மாண்டிலேன்; மலர்க் கமல பாதனே,
அரத்த[6] மேனியாய், அருள் செய் அன்பரும்,
நீயும், அங்கு எழுந்தருளி, இங்கு எனை
இருத்தினாய் ; முறையோ ? என் எம்பிரான்,
வம்பனேன்[7] வினைக்கு இறுதி[8] இல்லையே ? (93)

5 விரும்பி
6 செந்நிறமான
7 பொய்யனாகிய என்
8 முடிவு

கூச

கூஅ. இல்லை நின்கழற் கன்ப தென்கணே
யேல மேலுநற் குழலி பங்கனே
கல்லை மென்கனி யாக்கும் விச்சைகொண்
டென்னை நின்கழற் கன்ப னாக்கினாய்
எல்லை யில்லைநின் கருணை யெம்பிரா
னேது கொண்டுநா னேது செய்யினும்
வல்லை யேயெனக் கின்னு முன்கழல்
காட்டி மீட்கவும் மறுவில் வானனே.

கூரு

கூகூ. வான நாடரு மறியொ ணாதநீ
மறையி லீறுமுன் றொடரொ ணாதநீ
ஏனை நாடருந் தெரியொ ணாதநீ
யென்னை யின்னிதா யாண்டு கொண்டவா
ஊனை நாடக மாடு வித்தவா
வுருகி நானுனைப் பருக வைத்தவா
ஞான நாடக மாடு வித்தவா
நைய வையகத் துடைய விச்சையே.

கூசா

கூOO. விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய் வஞ்ச கப்பெரும்
புலைய னேனையும் கோயில் வாயிலில்
பிச்ச னாக்கினாய் பெரிய வன்பருக்
குரிய னாக்கினாய் தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமர மாயி னுங்கொலார்
நானு மங்ஙனே யுடைய நாதனே.

கருணைக்கும் எல்லை உண்டோ?

98. *இல்லை நின் கழற்கு அன்பு-அது, என்-கணே;*
ஏலம்[1] ஏலும்[2] நல் குழலி[3] பங்கனே!
கல்லை மென்கனி ஆக்கும் விச்சை கொண்டு,
என்னை நின் கழற்கு அன்பன் ஆக்கினாய்;
எல்லை இல்லை நின் கருணை; எம்பிரான்!
ஏதுகொண்டு, நான் ஏதுசெய்யினும்,
வல்லையே[4] எனக்கு இன்னும் உன் கழல்
காட்டி, மீட்கவும், மறு[5] இல்வானனே? (94)

1 *மயிர்ச் சாந்து*
2 *பொருந்திய*
3 *கரிய கூந்தலையுடையவள்—உமையம்மை*
4 *வல்லவனாக இருக்கின்றாய்*
5 *குற்றம்*

ஞான நாடகம் ஆடுவித்தான்

99. *வான நாடரும் அறி-ஒணாத நீ,*
மறையில் ஈறும்[6] முன்தொடர் ஒணாத நீ,
ஏனை நாடரும் தெரி-ஒணாத நீ,
என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா,
ஊனை நாடகம் ஆடுவித்தவா,
உருகி, நான் உனைப் பருக வைத்தவா,
ஞான நாடகம் ஆடுவித்தவா-
நைய[7] வையகத்துடைய விச்சையே[8] (95)

6 *முடிவும்*
7 *அற்றுப்போக*
8 *பற்று, ஆசை, அஞ்ஞானம்*

பிச்சன் ஆக்கினான்

100. *விச்சு[9] அது இன்றியே, விளைவு செய்குவாய்;*
விண்ணும், மண்ணகம் முழுதும், யாவையும்,
வைச்சு வாங்குவாய்; வஞ்சகப் பெரும்
புலையனேனை, உன் கோயில் வாயிலில்
பிச்சன்[10] ஆக்கினாய்; பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்; தாம் வளர்த்தது, ஓர்
நச்சு[11] மாமரம் ஆயினும், கொலார்;[12]
நானும் அங்ஙனே-உடைய நாதனே! (96)

9 *வித்து*
10 *பித்தன்*
11 *நஞ்சு*
12 *வெட்டார்*

கூஎ

கஶக. உடைய நாதனே போற்றி நின்னலாற்
பற்று மற்றெனக் காவ தொன்றினி
உடைய னுபணி போற்றி யும்பரார்
தம்ப ராபரா போற்றி யாரினும்
கடைய னுயினேன் போற்றி யென்பெருங்
கருணை யாளனே போற்றி யென்னைநின்
அடிய னுக்கினுய் போற்றி யாதியு
மந்த மாயினுய் போற்றி யப்பனே.

கூஅ

கஶஉ. அப்பனே யெனக் கமுத னேயா
னந்த னேயக நெகவள் ளூறுதேன்
ஒப்ப னேயுனக் குரிய வன்பரி
லுரிய னுயுனைப் பருக நின்றதோர்
துப்ப னேசுடர் முடிய னேதுணை
யாள னேதொழும் பாள ரெய்ப்பினில்
வைப்ப னேயெனை வைப்ப தோசொலாய்
நைய வையகத் தெங்கண் மன்னனே.

கூகூ

கஶங. மன்ன வெம்பிரான் வருக வென்னெனை
மாலு நான்முகத் தொருவன் யாரினும்
முன்ன வெம்பிரான் வருக வென்னெனை
முழுதும் யாவையு மிறுதி யுற்றநாள்
பின்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பெய்க ழற்கணன் பாயெ னுவினுல்
பன்ன வெம்பிரான் வருக வென்னெனைப்
பாவ நாசநின் சீர்கள் பாட வே.

அடியன் ஆக்கினுன்

101. உடையநாதனே, போற்றி, நின் அலால்
பற்று, மற்று எனக்கு ஆவது ஒன்று இனி
உடையனே? பணி; போற்றி! உம்பரார்[1] —
தம்பரா – பரா[2] போற்றி! யாரினும்
கடையன் ஆயினேன்; போற்றி! என்பெரும்
கருணையாளனே, போற்றி! என்னை, நின்
அடியன் ஆக்கினாய்; போற்றி! என்னை, நின்
அடியன் ஆக்கினாய்; போற்றி! ஆதியும்
அந்தம்[3] ஆயினாய், போற்றி! அப்பனே! (97)

1 வானவர்
2 மிக்க மேலானவனே
3 முடிவு

எய்ப்பில் வைப்பு

102. அப்பனே, எனக்கு அமுதனே,
ஆனந்தனே, அகம்[4] நெக[5] அள்ளூறு[6] தேன்
ஒப்பனே, உனக்கு உரிய அன்பரில்
உரியனாய், உனைப்பருக நின்றது ஓர்
துப்பனே[7] சுடர் முடியனே, துணையாளனே,
தொழும்பாளர்[8] எய்ப்பினில் —
வைப்பனே,[9] எனை வைப்பதோ, சொலாய்—
நைய[10] வையகத்து, எங்கள் மன்னனே? (98)

4 உள்ளம்
5 இளக
6 வாயூறுகின்ற
7 உணவாகவுள்ளவனே
8 தொண்டர்
9 இளைத்தகாலத்தில் உதவும் பொருளாக வுள்ளவனே
10 துன்புற

என்னை அழையாயோ?

103 மன்ன' எம்பிரான், 'வருக' என் எனை;
மாலும், நான் முகத்து ஒருவன்,[11] யாரினும்
முன்ன[12] எம்பிரான், 'வருக' என் எனை;
முழுதும் யாவையும் இறுதி உற்ற நாள்
பின்ன[13] எம்பிரான், 'வருக' என் எனை;
பெய் கழற் கண் அன்பாய், என் நாவினால்
பன்ன[14] எம்பிரான், 'வருக' என் எனை —
பாவநாச; நின்சீர்கள் பாடவே (99)

11 பிரமன்
12 முன்புள்ளவனே
13 பின்புள்ளவனே
14 புகழ

கயம

கயச. பாட வேண்டுநான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்
காட வேண்டுநான் போற்றி யம்பலத்
தாடுநின்கழற் போது நாயினேன்
கூட வேண்டுநான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டுநான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே

திருச்சிற்றம்பலம்

உன்னைக் கூடவேண்டும்

104. பாடவேண்டும் நான் போற்றி! நின்னையே
பாடி, நைந்து – நைந்து உருகி, நெக்கு – நெக்கு
ஆடவேண்டும் நான்; போற்றி! அம்பலத்து
ஆடும் நின் கழல்போது[1] நாயினேன்
கூடவேண்டும்நான்; போற்றி! இப்புழுக்
கூடு[2] நீக்குஎனை; போற்றி! பொய் எலாம்
வீட[3] வேண்டும் நான்; போற்றி வீடுதந்து
அருளு; போற்றி! நின்மெய்யர் மெய்யனே (100)

1 கழல் அணிந்த திருவடி மலர்
2 உடல்
3 விட்டொழிய

திருச்சிற்றம்பலம்

ஆறாவது

நீத்தல் விண்ணப்பம்

பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோசமங்கையி லருளிச் செய்யப்பட்டது)

(கட்டளைக் கலித்துறை.)

௧

௧௱௫. கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டு கொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோ
லுடையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேனெம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

௨

௧௱௬. கொள்ளேர் பிளவக லாத்தடங்
கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளே னெனினும் விடுதிகண்
டாய்நின் விழுத்தொழும்பின்
உள்ளேன் புறமல்லே னுத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளே னொழியவுங் கண்டுகொண்
டாண்டதெக் காரணமே.

ஆறுவது

நீத்தல் விண்ணப்பம்

(பிரபஞ்ச வைராக்கியம்)

தளர்ந்தேன் தாங்கிக்கொள்

105. கடையவனேனைக் கருணையினால்
கலந்து, ஆண்டுகொண்ட
விடையவனே[1], விட்டிடுதிகண்டாய்? —
விறல்[2] வேங்கையின்தோல்
உடையவனே, மன்னும் உத்தர
கோசமங்கைக்கு அரசே,
சடையவனே[3], தளர்ந்தேன்; எம்பிரான்,
என்னைத் தாங்கிக்கொள்ளே. (1)

1 எருதை ஊர்தியாக உடையவனே—சிவபெருமான்
2 வலிமை
3 சடைக்கற்றையை உடையவனே — சிவபெருமான்

புறம் அல்லேன்

106. கொள்ஏர் பிளவு அகலாத் தடம்
கொங்கையர் கொவ்வை[4]ச் செவ்வாய்
விள்ளேன்[5] எனினும் விடுதிகண்டாய்? —
நின் விழுத்தொழும்பின்[6]
உள்ளேன்; புறம் அல்லேன்; உத்தர
கோசமங்கைக்கு அரசே,
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு
ஆண்டது எக்காரணமே? (2)

4 கோவைப்பழம் போன்ற
5 விடமாட்டேன்
6 சிறந்த தொண்டில்

௩

கUள. காருறு கண்ணிய ரைம்புல
ஞற்றங் கரைமரமாய்
வேருறு வேனை விடுதிகண்
டாய்விளங் குந்திருவா
ருருறை வாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
வாருறு பூண்முலை யாள்பங்க
வென்னை வளர்ப்பவனே

௪

கUஅ. வளர்கின்ற நின்கரு ணைக்கையில்
வாங்கவு நீங்கியிப்பான்
மிளிர்கின்ற வென்னை விடுதிகண்
டாய்வெண் மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்ற நீண்முடி யுத்தர
கோசமங் கைக்கரசே
தெளிகின்ற பொன்னுமின் னும்மன்ன
தோற்றச் செழுஞ்சுடரே.

௫

கUகூ. செழிகின்ற தீப்புகு விட்டிலிற்
சின்மொழி யாரிற்பன்னாள்
விழுகின்ற வென்னை விடுதிகண்
டாய்வெறி வாயறுகால்
உழுகின்ற பூமுடி யுத்தர
கோசமங் கைக்கரசே
வழிநின்று நின்னரு ளாரமு
தூட்ட மறுத்தனனே.

ஆற்றங்கரை மரம்

107. கார்[1] உறு கண்ணியர்[2] ஐம் - புலன்
ஆற்றங்கரை மரமாய்
வேர் உறுவேனை விடுதி கண்டாய்? -
விளங்கும் திருவா -
ரூர் உறைவாய், மன்னும் உத்தர -
கோசமங்கைக்கு அரசே,
வார்[3] உறு பூண் முலையாள் பங்க,
என்னை வளர்ப்பவனே. (3)

1 கருமை
2 கண்களை உடையவர்
3 கச்சு

விலகி விளங்குகின்றேன்

108. வளர்கின்ற நின் கருணைக் கையில்
வாங்கவும் நீங்கி, இப்பால்
மிளிர்கின்ற என்னை விடுதி கண்டாய்?-
வெண் மதிக் கொழுந்து[4] ஒன்று
ஒளிர்கின்ற நீள்-முடி உத்தர -
கோசமங்கைக்கு அரசே,
தெளிகின்ற பொன்னும், மின்னும்,
அன்ன தோற்றச் செழும் சுடரே. (4)

4 பிறைமதி

ஊட்டிய அமுதை மறுத்தேன்

109. செழிகின்ற தீப் புகு விட்டிலின்[5]
சில் மொழியாரில்[6] பல் நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்? -
வெறி-வாய்[7] அறுகால்[8]
உழுகின்ற[9] பூ முடி உத்தர -
கோசமங்கைக்கு அரசே,
வழிநின்று, நின் அருள் ஆர்-
அமுது ஊட்ட மறுத்தனனே. (5)

5 விட்டில் பூச்சிபோல
6 கொஞ்சும் பேச்சு உடையவர்
7 மணம் பொருந்திய
8 வண்டு
9 கிண்டுகின்ற

சா

கக௰. மறுத்தனன் யானுன் னருளறி
யாமையி லென்மணியே
வெறுத்தெனை நீவிட் டிடுதிகண்
டாய்வினை யின்றொகுதி
ஒறுத்தெனை யாண்டு கொளுத்தர
கோசமங் கைக்கரசே
பொறுப்பரன் றேபெரி யோர்சிறு
நாய்கடம் பொய்யினையே.

எ

கக்க. பொய்யவ னேனைப் பொருளென
வாண்டொன்று பொத்திக்கொண்ட
மெய்யவ னேவிட் டிடுதிகண்
டாய்விட முண்மிடற்று
மையவ னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
செய்யவ னேசிவ னேசிறி
யேன்பவந் தீர்ப்பவனே.

அ

ககஉ. தீர்க்கின்ற வாறென் பிழையைநின்
சீரரு ளென்கொலென்று
வேர்க்கின்ற வென்னை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
ஆர்க்கின்ற தார்விடை யுத்தர
கோசமங் கைக்கரசே
ஈர்க்கின்ற வஞ்சொடச் சம்வினை
யேனை யிருதலையே.

மறுத்தவனை வெறுக்காதே

110. மறுத்தனன் யான், உன் அருள்
அறியாமையின், என் மணியே;
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய்? –
வினையின் தொகுதி
ஒறுத்து[1], எனை ஆண்டுகொள்; உத்தர –
கோசமங்கைக்கு அரசே,
பொறுப்பர் அன்றே பெரியோர்,
சிறு நாய்கள் – தம் பொய்யினையே? (6)

1 கடிந்து

என் குறையை மறைத்து ஆண்டான்

110. பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு,
ஒன்று பொத்திக்கொண்ட[2]
மெய்யவனே, விட்டிடுதி கண்டாய்? –
விடம்[3] உண் மிடற்று[4]
மையவனே[5], மன்னும் உத்தர –
கோசமங்கைக்கு அரசே,
செய்யவனே[6], சிவனே,
சிறியேன் பவம்[7] தீர்ப்பவனே[8] (7)

2 மறைத்து ஏற்றுக் கொண்ட, சீர்திருத்தி ஏற்றுக்கொண்ட
3 விஷம, நஞ்சு
4 கண்டத்து
5 கருநிறமுள்ளவனே
6 சிவந்த நிறமுடையவனே–சிவபெருமான்
7 பிறப்பு, நிலை
8 ஒழிப்பவனே

என் பிழையை ஒழிக்கின்ற வழி எது?

112. தீர்க்கின்ற ஆறு என் பிழையை,
'நின் சீர் அருள் என்-கொல்?' என்று
வேர்க்கின்ற[9] என்னை விடுதி கண்டாய்?-
விரவார்[10] வெருவ[11],
ஆர்க்கின்ற[12] தார்[13] விடை[14] உத்தர-
கோசமங்கைக்கு அரசே,
ஈர்க்கின்ற[15] – அஞ்சொடு[16] அச்சம்
வினையேனை இருதலையே[17]. (8)

9 மனம் புழுங்குகின்ற
10 பகைவர்
11 அஞ்ச
12 ஒலிக்கின்ற
13 கிண்கிணிமாலை
14 காளை
15 இழுக்கின்ற
15 ஐம்புலன்களோடு
17 இரண்டு பக்கத்திலும்

௯

௧௧௩. இருதலைக் கொள்ளியி னுள்ளெறும்
பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்
டாய்வியன் மூவுலகுக்
கொருதலை வாமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
பொருதலை மூவிலை வேல்வல
னேந்திப் பொலிபவனே.

௧௦

௧௧௪. பொலிகின்ற நின்றாள் புகுதப்பெற்
றாக்கையைப் போக்கப்பெற்று
மெலிகின்ற வென்னை விடுதிகண்
டாயளி தேர்விளரி
ஒலிநின்ற பூம்பொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
வலிநின்ற திண்சிலை யாலெரித்
தாய்புர மாறுபட்டே.

௧௧

௧௧௫. மாறுபட் டஞ்சென்னை வஞ்சிப்ப
யானுன் மணிமலர்த்தாள்
வேறுபட் டேனை விடுதிகண்
டாய்வினை யேன்மனத்தே
ஊறுமட் டேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
நீறுபட் டேயொளி காட்டும்பொன்
மேனி நெடுந்தகையே.

இருதலைக் கொள்ளியுள் எறும்பு

113. இருதலைக் கொள்ளியின்–உள் எறும்பு ஒத்து,
நினைப் பிரிந்த
விரிதலையேனை[1] விடுதி கண்டாய்? —
வியன்[2] மூ–உலகுக்கு
ஒரு தலைவா, மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே
பொரு[3]–தலை மூ[4]–இலைவேல்
வலன்[5] ஏந்திப் பொலிபவனே.[6] (9)

1 தலைவிரி கோலமாக இடர்ப்படுகின்றவனை
2 அகன்ற, பலதிறப்பட்ட
3 போர செய்தற்குரிய
4 மூன்று (பொரு-தலை-மூஇலை-வேல)-சூலம்
5 வெற்றியுடன
6 விளங்குபவனே

அருள் பெற்றும் பிறவியை வீணாக்குகின்றேன்

114. பொலிகின்ற நின் தாள் புகுதப்பெற்று,
ஆக்கையைப்[7] போக்கப் பெற்று,
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய்? —
அளி[8] தேர் விளரி[9]
ஒலி நின்ற பூம்–பொழில் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
வலி நின்ற திண் சிலையால்[10]
எரித்தாய் புரம்,[11] மாறுபட்டே. (10)

7 உடலை
8 வணடு
9 ஒருவகை இசை
10 வில்லால்
11 முப்புரம்

வேறுபட்டேனை விடாதே

115. மாறுபட்டு அஞ்சு[12] என்னை வஞ்சிப்ப,
யான் உன் மணி மலர்த் தாள்
வேறுபட்டேனை விடுதி கண்டாய்? —
வினையேன் மனத்தே
ஊறும் மட்டே,[13] மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
நீறு[14] பட்டே ஒளி காட்டும்
பொன் மேனி நெடுந்தகையே. (11)

12 ஐம்புலன்
13 தேனே
14 திருநீறு

கஉ

ககசு. நெடுந்தகை நீயென்னை யாட்கொள்ள
யானெம் புலன்கள் கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
டாய்விர வார்வெருவ
வடுந்தகை வேல்வல்ல வுத்தர
கோசமங் கைக்கரசே
கடுந்தகை யேனுண்ணுந் தெண்ணீ
ரமுதப் பெருங்கடலே.

கந

ககஎ. கடலினுள் நாய்நக்கி யாங்குன்
கருணைக் கடலினுள்ளம்
விடலரி யேனை விடுதிகண்
டாய்விட லில்லடியார்
உடலில மேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மடலின்மட் டேமணி யேயமு
தேயென் மதுவெள்ளமே.

கச

ககஅ. வெள்ளத் துறுவற்றி யாங்குன்
அருள்பெற்றுத் துன்பத்தினின்றும்
விள்ளக் கிலேனை விடுதிகண்
டாய்விரும் பும்மடியார்
உள்ளத்துள் ளாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
கள்ளத்து ளேற்கரு ளாய்களி
யாத களியெனக்கே.

பொறிவழி நின்று அருளை இழந்தேன்

116. நெடுந்தகை, நீ, என்னை ஆட்கொள்ள, யான்
ஐம்-புலன்கள் கொண்டு
விடும் தகையேனை விடுதி கண்டாய்?
விரவார்[1] வெருவ,[2]
அடும்-தகை-வேல்[3] வல்ல உத்தர
கோசமங்கைக்கு அரசே,
கடும்[4] தகையேன்[5] உண்ணும் தெள்-நீர்
அமுதப் பெருங் கடலே. (12)

1 பகைவர்
2 அஞ்ச
3 அழிக்கும் தன்மையை யுடைய சூலம்
4 இளக்கமற்ற
5 தன்மையுடையேன

கருணைக்கு இணங்காதேன்

117. கடலினுள் நாய் நக்கி — ஆங்கு, உன்
கருணைக் கடலின் உள்ளம்
விடல் அரியேனை விடுதி கண்டாய்? —
விடல் இல் அடியார்
உடல் இலமே[6] மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
மடலின்[7] மட்டே,[8] மணியே, அமுதே,
என் மது-வெள்ளமே.[9] (13)

6 இல்லமே
7 பூ இதழின்
8 தேனே
9 தேன் பெருக்கே

அருள் பெற்றும் துன்பத்தை விடமுடியவில்லையே

118. வெள்ளத்துள் நா வற்றி — ஆங்கு, உன்
அருள் பெற்றுத் துன்பத்தின் [நின்]றும்
விள்ளக்கிலேனை[10] விடுதி கண்டாய்? —
விரும்பும் அடியார்
உள்ளத்து உள்ளாய், மன்னும் உத்தர —
கோச மங்கைக்கு அரசே,
கள்ளத்து[11] உளேற்கு, அருளாய்
களியாத களி,[12] எனக்கே. (14)

10 நீங்க இயலாதவனை
11 பொய்மையில்
12 பேரானந்தம்

கரு

ககக. களிவந்த சிந்தையொ டுன்கழல்
கண்டுங் கலந்தருள
வெளிவந்தி லேனை விடுதிகண்
டாய்மெய்ச் சுடருக்கெல்லாம்
ஒளிவந்த பூங்கழ லுத்தர
கோசமங் கைக்கரசே
எளிவந்த வெந்தைபி ரானென்னை
யாளுடை யென்னப்பனே.

கசு

கஉ0. என்னையப் பாவஞ்ச லென்பவ
ரின்றிநின் றெய்த்தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண்
டாயுவ மிக்கின்மெய்யே
உன்னையொப் பாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாயெனக் கத்தனொப்
பாயென் னரும்பொருளே.

கஎ

கஉக. பொருளே தமியேன் புகலிட
மேநின் புகழிகழ்வார்
வெருளே யெனைவிட் டிடுதிகண்
டாய்மெய்மை யார்விழுங்கும்
அருளே யணிபொழி லுத்தர
கோசமங் கைக்கரசே
இருளே வெளியே யிகபர
மாகி யிருந்தவனே.

அருள் அணுகியும் நான் விலகினேன்

119. களிவந்த சிந்தையொடு உன் கழல்
கண்டும், கலந்தருள
வெளி வந்திலேனை விடுதி கண்டாய்? —
மெய்ச் சுடருக்கு எல்லாம்
ஒளிவந்த பூம் கழல் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
எளிவந்த எந்தை பிரான், என்னை
ஆளுடை என் அப்பனே! (15)

அலுத்தேன் 'அஞ்சேல்' என்னுய்

120. என்னை 'அப்பா, அஞ்சல்,' என்பவர் இன்றி,
நின்று[1] எய்த்து அலைந்தேன்;
மின்னை ஒப்பாய், விட்டிடுதி கண்டாய்? —
உவமிக்கின், மெய்யே
உன்னை ஒப்பாய்; மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
அன்னை ஒப்பாய்; எனக்கு அத்தன் ஒப்பாய்;
என் அரும்-பொருளே! (16)

1 இளைத்து

நீயே புகலிடம்

121. பொருளே, தமியேன் புகல்-இடமே,
நின் புகழ் இகழ்வார்
வெருளே,[2] எனை விட்டிடுதி கண்டாய்?
மெய்ம்மையார் விழுங்கும்
அருளே, அணி பொழில் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
இருளே, வெளியே, இக-பரம்[3]
ஆகி இருந்தவனே. (17)

2 அச்சம் தோற்றும் பொருளே

3 இம்மை மறுமை

கஅ

கஉஉ. இருந்தென்னை யாண்டுகொள் விற்றுக்கொள்
ஒற்றிவை யென்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய்மிக்க நஞ்சமுதா
வருந்தின னேமன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே.

கக

கஉங. மடங்கவென் வல்வினைக் காட்டைநின்
மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென் றன்னை விடுதிகண்
டாயென் பிறவியையே
ரொடுங்களைந் தாண்டுகொ ளுத்தர
கோசமங் கைக்கரசே
கொடுங்கரிக் குன்றுரித் தஞ்சுவித்
தாய்வஞ்சிக் கொம்பினையே.

உய

கஉச. கொம்பரில் லாக்கொடி போலல
மந்தனன் கோமளமே
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணர் நண்ணுகில்லா
வும்பருள் ளாய்மன்னு முத்தர
கோசமங் கைக்கரசே
யம்பர மேநில னேயனல்
காலொடப் பானவனே.

திருவுள்ளம் எப்படியோ அப்படியே

122. இருந்து என்னை ஆண்டுகொள்; விற்றுக்கொள்;
ஒற்றி[1] வை; என்னின் அல்லால்,
விருந்தினனேனை,[2] விடுதி கண்டாய்? —
மிக்க நஞ்சு அமுதா
அருந்தினனே, மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
மருந்தினனே, பிறவிப் பிணிப்பட்டு
மடங்கினர்க்கே.[3] (18)

1 அடைமானம்
2 புதியவனாகிய என்னை
3 ஒடுங்கினவர்களுக்கே

என் வினையை ஒழி

123. மடங்க என் வல் வினைக் காட்டை,
நின் மன் அருள் தீக் கொளுவும்
விடங்க,[4] என்–தன்னை விடுதி கண்டாய்?
என் பிறவியை வே —
ரொடும் களைந்து ஆண்டுகொள்; உத்தர
கோச மங்கைக்கு அரசே,
கொடும் கரிக்குன்று[5] உரித்து, அஞ்சுவித்தாய்,
வஞ்சிக் கொம்பினையே.[6] (19)

4 ஆண்மைகொண்ட அழகனே
5 மலைபோன்ற யானை
6 பிரப்பங்கொடி போன்றவள்–உமையம்மை

கொழுகொம்பில்லாக் கொடி

124. கொம்பர்[7] இல்லாக் கொடிபோல்,
அலமந்தனன்;[8] கோமளமே,[9]
வெம்புகின்றேனை விடுதி கண்டாய்? —
விண்ணர் நண்ணுகில்லா
உம்பர்[10] உள்ளாய்; மன்னும் உத்தர —
கோசமங்கைக்கு அரசே,
அம்பரமே,[11] நிலனே, அனல்,[12] காலொடு,[13]
அப்பு,[14] ஆனவனே. (20)

7 கொழுகொம்பு
8 மனம் சுழல்கின்றேன்
9 இளமைச்செவ்வியுடையவனே
10 மேல்
11 வானம்
12 தீ
13 காற்றோடு
14 நீர்

உக

கஉரு. ஆனைவெம் போரிற் குறுந்தூ
றெனப்புல னாலலைப்புண்
டேனையெந் தாய்விட் டிடுதிகண்
டாய்வினை யேன்மனத்துத்
தேனையும் பாலையுங் கன்னலை
யும்மமு தத்தையுமொத்
தூனையு மென்பினை யும்முருக்
காநின்ற வொண்மையனே.

உஉ

கஉசு. ஒண்மைய னேதிரு நீற்றையுத்
தூளித் தொளிமிளிரும்
வெண்மைய னேவிட் டிடுதிகண்
டாய்மெய் யடியவர்கட்
கண்மைய னேயென்றுஞ் சேயாய்
பிறர்க்கறி தற்கரிதாம்
பெண்மைய னேதொன்மை யாண்மைய
னேயலிப் பெற்றியனே.

உ௩

கஉஎ. பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்குமன்பின்
வெற்றடி யேனை விடுதிகண்
டாய்விடி லோகெடுவேன்
மற்றடி யேன்றன்னைத் தாங்குந
ரில்லையென் வாழ்முதலே
உற்றடி யேன்மிகத் தேறிநின்
றேனெனக் குள்ளவனே.

புலன்கள் துலைக்கின்றன

125. ஆனை வெம் போரில், குறும்-தூறு[1] எனப்
புலனால் அலைப்புண்-
டேனை, எந்தாய், விட்டிடுதி கண்டாய்?-
வினையேன் மனத்துத்
தேனையும், பாலையும், கன்னலையும்
அமுதத்தையும், ஒத்து,
ஊனையும், என்பினையும், உருக்காநின்ற
ஒண்மையனே.[2] (21)

1 சிறு புதர்
2 ஞானவடிவாக உள்ளவனே

அறிதற்கு அரியவன் அருகிலுள்ளான்

126. ஒண்மையனே, திருநீற்றை உத்தூளித்து[3]
ஒளி மிளிரும்
வெண்மையனே, விட்டிடுதி கண்டாய்?-
மெய் அடியவர்கட்கு
அண்மையனே,[4] என்றும் சேயாய்[5] பிறர்க்கு;
அறிதற்கு அரிது ஆம்
பெண்மையனே, தொன்மை ஆண்மையனே,
அலிப் பெற்றியனே. (22)

3 நீரில் குழையாது பொடியாகப் பூசுதல்
4 அருகிலுள்ளவனே
5 எட்டாத தொலைவில் உள்ளவனே

நல்லன கொண்டு தீயன செய்தேன்

127. பெற்றது கொண்டு, பிழையே பெருக்கி,
சுருக்கும் அன்பின்
வெற்று அடியேனை, விடுதி கண்டாய்? —
விடிலோ கெடுவேன்;
மற்று, அடியேன்-தன்னை, தாங்குநர் இல்லை;
என் வாழ் - முதலே,[6]
உற்று, அடியேன், மிகத் தேறி நின்றேன்;
எனக்கு உள்ளவனே. (23)

6 அடிப்படையாக வுள்ளவனே

உச

கஉஅ. உள்ளன வேநிற்க வில்லன
செய்யுமை யற்றுழனி
வெள்ளன லேனை விடுதிகண்
டாய்வியன் மாத்தடக்கைப்
பொள்ளனல் வேழத் துரியாய்
புலனின்கட் போத லொட்டா
மெள்ளன வேமொய்க்கு நெய்க்குடந்
தன்னை யெறும் பெனவே.

உரு

கஉகூ. எறும்பிடை நாங்கூ ழெனப்புல
னலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண்
டாய்வெய்ய கூற்றொடுங்க
வுறுங்கடிப் போதவை யேயுணர்
வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய
ராத பெருமையனே.

உசா

கநய. பெருநீ ரறச்சிறு மீன்றுவண்
டாங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண் மலைச்சிறு
தோணி வடிவின் வெள்ளைக்
குருநீர் மதிபொதி யுஞ்சடை
வானக் கொழுமணியே,

தக்கன விடுத்துத் தகாதனவே செய்தேன்

128. உள்ளனவே நிற்க, இல்லன
செய்யும் மையல்[1] துழனி[2]
வெள்ளனலேனை[3] விடுதி கண்டாய்?
வியன் மாத்தடக்கைப்
பொள்ளல்[4] நல்வேழத்து[5] உரியாய்,[6]
புலன், நின்கண் போதல் ஒட்டா,
மெள்ளெனவே மொய்க்கும் நெய்க்குடம்
தன்னை எறும்பு எனவே. (24)

1 மயக்கம்
2 ஆரவாரம்; பேரொலி
3 வெள்ளன = மிகுதியாகவுடையவன, வஞ்சமில்லாதவன், வெள்ளன+அலேன் வெள்+அனலேன எரிகின்ற நெருப்புப் போன்றவன்.
4 தொளை
5 யானையது
6 தோலை உடையவனே

எறும்பிடை நாங்கூழ்

129. எறும்பிடை நாங்கூழ்[7] என, புலனால்
அரிப்புண்டு, அலந்த
வெறும் தமியேனை விடுதிகண்டாய்?
வெய்ய கூற்று ஒடுங்க,
உறும் கடிப்போது[8]-அவையே உணர்வு
உற்றவர் உம்பர் உம்பர்[9]
பெறும்பதமே, அடியார் பெயராத
பெருமையனே. (25)

7 நாகப்பூச்சி
8 மணமுள்ள மலர்-திருவடி
9 மேலுககு மேல்

அருள்விலக அச்சம் பெருகுகின்றது

130. பெருநீர் அற, சிறுமீன் துவண்டு-
ஆங்கு, நினைப் பிரிந்த
வெரு[10] நீர்மையேனை விடுதி கண்டாய்?
வியன்[11] கங்கை பொங்கி
வரும் நீர்மடுவுள், மலைச்சிறு
தோணி வடிவின், வெள்ளைக்
குரு[12] நீர்[13] மதி பொதியும் சடை,
வானக் கொழு மணியே! (26)

10 அஞ்சுகின்ற
11 சிறப்புடைய; அகன்ற
12 ஒளி
13 நீர்மை; தண்மை

உஎ

கங.க. கொழுமணி யேர்நகை யார்கொங்கைக்
குன்றிடைச் சென்றுகுன்றி
விழுமடி யேனை விடுதிகண்
டாய்மெய்ம் முழுதுங்கம்பித்
தழுமடி யாரிடை யார்த்துவைத்
தாட்கொண் டருளியென்னைக்
கழுமணி யேயின்னுங் காட்டுகண்
டாய்நின் புலன்கழலே.

உஅ

கங.உ. புலன்கடி கைப்பிக்க யானுந்
திகைத்திங்கொர் பொய்ந்நெறிக்கே
விலங்குகின் றேனை விடுதிகண்
டாய்விண்ணு மண்ணுமெல்லாங்
கலங்கமுந் நீர்நஞ் சமுதுசெய்
தாய்கரு ணாகரனே
துலங்குகின் றேனடி யேனுடை
யாயென் றொழுகுலமே.

உகூ

கங.ங. குலங்களைந் தாய்களைந் தாயென்னைக்
குற்றங்கொற் றச்சிலையாம்
விலங்கலெந் தாய்விட் டிடுதிகண்
டாய்பொன்னின் மின்னுகொன்றை
அலங்கலந் தாமரை மேனியப்
பாவொப்பி லாதவனே
மலங்களைந் தாற்சுழல் வன்றயி
ரிற்பொரு மத்துறவே

இன்பத்தில் இழிந்தேன்: தூய்மை செய்

131. கொழுமணி ஏர்நகையார் கொங்கைக்
குன்றிடைச் சென்று, குன்றி
விழும் அடியேனை விடுதி கண்டாய்?
மெய்ம் முழுதும் கம்பித்து,[1]
அழும் அடியாரிடை ஆர்த்து[2] வைத்து,
ஆட் கொண்டருளி, என்னைக்
கழுமணியே, இன்னும்காட்டு கண்டாய்
நின் புலன் கழலே.[3] (27)

1 நடுங்கி
2 சேர்த்து, இணைத்து
3 ஞானமயமான திருவடி

பொய் நெறியில் மயங்குகின்றேன்

132. புலன்கள்[4] திகைப்பிக்க, யானும் திகைத்து,
இங்குஓர் பொய்ந் நெறிக்கே
விலங்குகின்றேனை[5] விடுதி கண்டாய்?
விண்ணும், மண்ணும், எல்லாம்
கலங்க, முந்நீர் நஞ்சு அமுது செய்தாய்;
கருணாகரனே!
துலங்குகின்றேன்[6] அடியேன்; உடையாய்,
என் தொழுகுலமே.[7] (28)

4 ஐம்புலன்கள்
5 விலகிச்செல்கின்ற என்னை
6 நிலைகலங்குகின்றேன்
7 குலதெய்வமே

குற்றம் களைந்தாய்

133. குலம்களைந்தாய்; களைந்தாய் என்னைக்
குற்றம்; கொற்றச் சிலை[8] ஆம்
விலங்கல்[9] எந்தாய், விட்டிடுதி கண்டாய்?
பொன்னின் மின்னு கொன்றை
அலங்கல்[10] அம்-தாமரை மேனி அப்பா,
ஒப்பு இலாதவனே,
மலங்கள் ஐந்தால் சுழல்வன், தயிரில்
பொரு மத்து உறவே. (29)

8 வெற்றி தரும் வில்
9 மலை
10 மாலை

௩௰

கஙச. மத்துறு தண்டயி ரிற்புலன்
தீக்கது வக்கலங்கி
வித்துறு வேணை விடுதிகண்
டாய்வெண் டலைமிலைச்சிக்
கொத்துறு போது மிலைந்து
குடர்நெடு மாலைசுற் றித்
தத்துறு நீறுட ஞரச்செஞ்
சாந்தணி சச்சையனே.

௩௧

கஙரு. சச்சைய னேமிக்க தண்புனல்
விண்கால் நிலநெருப்பாம்
விச்சைய னேவிட் டிடுதிகண்
டாய்வெளி யாய்கரியாய்
பச்சைய னேசெய்ய மேனிய
னேயொண் படவரவக்
கச்சைய னேகடந் தாய்தடந்
தாள வடற்கரியே.

௩௨

கஙசா. அடற்கரி போலைம் புலன்களுக்
கஞ்சி யழிந்தவென்னை
விடற்கரி யாய்விட் டிடுதிகண்
டாய்விழுத் தொண்டர்க்கல்லால்
தொடற்கரி யாய்சுடர் மாமணி
யேசுடு தீச்சுழலக்
கடற்கரி தாயெழு நஞ்சமு
தாக்குங் கறைக்கண்டனே.

கடையும் தயிர்போல் கலங்குகின்றேன்

34. மத்து உறு தண் தயிரின், புலன்
தீக் கதுவக்[1] கலங்கி,
வித்து உறுவேனை[2] விடுதி கண்டாய்?
வெண்தலை மிலைச்சி,[3]
கொத்து[4] உறு போது[5] மிலைந்து,
குடர் நெடுமாலை சுற்றி,
தத்துறு[6] நீறுடன்[7] ஆரச்[8] செம் -
சாந்து[9] அணி சச்சையனே.[10] (30)

1 தீப்பற்ற
2 (உலக வாழ்க்கையைப்) பல்கச் செய்வேனை
3 அணிந்து
4 பூங்கொத்து
5 மிக்க மலர்
6 பரந்து பூசிய
7 திருநீறுடன
8 சந்தனம்
9 குழம்பு
10 சாரமாகவுள்ளவன், வலு அளிப்பவன், மெய்ப்பொருள்.

அனைத்தும் நீயே

135. சச்சையனே, மிக்கதண் புனல்,
விண், கால்,[11] நிலம், நெருப்பு, ஆம்
விச்சையனே,[12] விட்டிடுதி கண்டாய்?
வெளியாய், கரியாய்,
பச்சையனே, செய்ய[13] மேனியனே,
ஒண்[14] பட[15] அரவக்[16]
கச்சையனே[17] - கடந்தாய்[18] தட[19]
தாள[20] அடல்[21] கரி[22]யே. (31)

11 காற்று
12 வித்தையை உடையவனே
13 சிவந்த
14 விளங்குகின்ற
15 படமுடைய
16 பாம்பாகிய
17 அரைப்பட்டிகை உடையவனே
18 கொன்றாய்
19 பெரிய
20 அடியையுடைய
21 வலிமையுள்ள
22 யானை

அஞ்சி அழிந்தேன்

136. அடல் கரிபோல், ஐம்புலன்களுக்கு
அஞ்சி அழிந்த என்னை
விடற்கு அரியாய், விட்டிடுதி கண்டாய்?
விழுத்[23] தொண்டர்க்கு அல்லால்
தொடற்கு அரியாய், சுடர் மாமணியே,
சுடுதீச் சுழல,
கடல் கரிது ஆய் எழு நஞ்சு அமுது
ஆக்கும் கறைக் கண்டனே.[24] (32)

23 மேன்மையான
24 நீலகண்டனே - சிவபெருமானே

௩.௩

௧௩௭. கண்டது செய்து கருணைமட்
டுப்பருகிக் களித்து
மிண்டுகின் றேனை விடுதிகண்
டாய்நின் விரைமலர்த்தாள்
பண்டுதந் தாற்போற் பணித்துப்
பணிசெயக் கூவித்தென்னைக்
கொண்டெனெந் தாய்களை யாய்களை
யாய குதுகுதுப்பே.

௩.௪

௧௩௮. குதுகுதுப் பின்றிநின் றென்குறிப்
பேசெய்து நின்குறிப்பில்
விதுவிதுப் பேனை விடுதிகண்
டாய்விரை யார்ந்தினிய
மதுமதுப் போன்றென்னை வாழைப்
பழத்தின் மனங்கனிவித்
தெதிர்வதெப் போது பயில்விக்
கயிலைப் பரம்பரனே

௩.௫

௧௩௯. பரம்பர னேநின் பழவடி
யாரொடு மென்படிறு
விரும்பர னேவிட் டிடுதிகண்
டாய்மென் முயற்கறையின்
அரும்பர நேர்வைத் தணிந்தாய்
பிறவியை வாயரவம்
பொரும்பெரு மான்வினை யேன்மன
மஞ்சிப் பொதும்புறவே.

கருணையில் களித்தேன் : கண்டது செய்கின்றேன்

137. கண்டது செய்து, கருணை - மட்டுப்[1]
பருகிக் களித்து,
மிண்டு கின்றேனை விடுதி கண்டாய் ?
நின் விரை[2] மலர்த்தாள்
பண்டு[3] தந்தால் போல் பணித்து,
பணிசெயக் கூவித்து, என்னைக்
கொண்டு, என் எந்தாய், களையாய்
களை ஆய குது குதுப்பே.[4] (33)

1 திருவருட்கனிவாகிய தேன்
2 மணம்
3 முன்பு
4 ஆர்வம், மகிழ்ச்சி

ஆசையோ உன் குறிப்பில்: செய்கையோ என் குறிப்பே !

138. குது குதுப்பு இன்றி நின்று, என் குறிப்பே
செய்து, நின் குறிப்பில்
விது விதுப்பேனை[5] விடுதி கண்டாய் ?
விரை ஆர்ந்து,[6] இனிய
மது - மதுப் போன்று, என்னை வாழைப்
பழத்தின் மனம் கனிவித்து,
எதிர்வது எப்போது ? பயில்வி,
கயிலைப் பரம்பரனே ! (34)

5 ஆராத ஆசை கொள் வேனை
6 பொருந்தி

பிறவி என்னும் பெரும்பாம்பு சீறுகின்றது

139. பரம்பரனே, நின் பழ அடியாரொடும்
என் படிறு[7]
விரும்பு அரனே, விட்டிடுதி கண்டாய் ?
மென்முயல் - கறை[8] யின்
அரும்பு, அர,[9] நேர் வைத்து அணிந்தாய்,
பிறவி ஐவாய் அரவம்
பொரும், பெருமான் - வினையேன் மனம்
அஞ்சி, பொதும்பு[10] உறவே. (35)

7 வஞ்சம்
8 திங்களில் தோன்றும் களஙகம்-முயல் வடிவம்போல் தோனறுவது-சந்திரன
9 பாமபு
10 மரப்பொநது – ஒதுககிடம் – புகலிடம்

௩௬

௧௪௰. பொதும்புறு தீப்போற் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்விரை யார்நறவந்
ததும்புமந் தாரத்திற் றாரம்
பயின்றுமந் தம்முரல்வண்
டதும்புங் கொழுந்தே னவிர்சடை
வானத் தடலரைசே.

௩௭

௧௪௧. அரைசே யறியாச் சிறியேன்
பிழைக்கஞ்ச லென்னினல்லால்
விரைசேர் முடியாய் விடுதிகண்
டாய்வெண் ணகைக்கருங்கட்
டிரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா
வரைசேர்ந் தடர்ந்தென்ன வல்வினை
தான்வந் தடர்வனவே.

௩௮

௧௪௨. அடர்புல னாற் பிரிந்தஞ்சி
யஞ்சொன லாரவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்விரிந் தேயெரியுஞ்
சுடரனை யாய்சுடு காட்டர
சேதொழும் பார்க்கமுதே
தொடர்வரி யாய்தமி யேன்றனி
நீக்குந் தனித்துணையே.

மூளாத்தீயில் உள்ளே கனன்று வாடுகின்றேன்

140. பொதும்பு[1] உறுதீப்போல் புகைந்து எரிய,
புலன்தீக் கதுவ,[2]
வெதும்புறுவேனை[3] விடுதி — கண்டாய்?
விரை[4]ஆர் நறவம்[5]
ததும்பும் மந்தாரத்தில்[6] தாரம்[7] பயின்று,
மந்தம்[8] முரல்[9] வண்டு
அதும்பும்[10] கொழும் தேன் அவிர்[11] சடை
வானத்து அடல்[12]அரைசே. (36)

1 மரப்பொந்து
2 தீப்பற்ற
3 சுடப்படுகின்றவனை
4 மணம
5 தேனை
6 மந்தார மலரில் – வான நாட்டுமலர்களுள் ஒருவகை
7 எடுத்தலோசை – இசை வகையுள் ஒன்று
8 படுத்தலோசை
9 ஒலிக்கின்ற
10 படியும்
11 விளங்குகின்ற
12 வலிமைமிக்க

'அஞ்சல்' என அருள்க

141. அரைசே, அறியாச் சிறியேன் பிழைக்கு
'அஞ்சல்' என்னின் அல்லால்,
விரைசேர் முடியாய், விடுதிகண்டாய்?
வெள்-நகை, கரும்-கண்
திரை[13]சேர் மடந்தை மணந்த
திருப்பொன் பதப்புயங்கா,[14]
வரை[15]சேர்ந்து அடர்ந்து[16] என்ன,
வல்வினை: தான்வந்து அடர்வனவே.[17] (37)

13 கண்ணுறிய கருங்கடல் திரை–அலை–கடல்
14 பாம்பை அணிந்தவனே
15 மலை
16 நெருங்கி
17 துன்புறுத்துகின்றன

சிற்றின்பம் விழைந்து பேரின்பம் விடுத்தேன்

142. அடர் புலனால், நின்பிரிந்து அஞ்சி,
அம்–சொல் நல்லார் – அவர் – தம்
விடர்[18] விடலேனை விடுதி கண்டாய்?
விரிந்தே எரியும்
சுடர் அனையாய், சுடுகாட்டு அரசே,
தொழும்பார்க்கு[19] அமுதே,
தொடர்வு–அரியாய், தமியேன் தனி
நீக்கும் தனித்[20] துணையே. (38)

18 இருக்கை, தங்கும் தனியிடம்
19 தொண்டர்களுக்கு
20 ஒப்பற்ற

௩௯

கசந. தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யானடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய்வினை யேனுடைய
மனத்துணை யேயென்றன் வாழ்முத
லேயெனக் கெய்ப்பில்வைப்பே
தினைத்துணை யேனும் பொறேனென்றுய
ராக்கையின் திண்வலையே.

௪௰

கசச. வலைத்தலை மானன்ன நோக்கியர்
நோக்கின் வலையிற்பட்டு
மிலைத்தலைந் தேனை விடுதிகண்
டாய்வெண் மதியினொற்றைக்
கலைத்தலை யாய்கரு ணாகர
னேகயி லாயமென்னும்
மலைத்தலை வாமலை யாண்மண
வாளவென் வாழ்முதலே.

௪௧

கசரு. முதலைச்செவ் வாய்ச்சியர் வேட்கைவெந்
நீரிற் கடிப்பமூழ்கி
விதலைச் செய்வேனை விடுதிகண்
டாய்விடக் கூன்மிடைந்த
சிதலைச்செய் காயம் பொறேன்சிவ
னேமுறை யோமுறையோ
திதலைச் செய் பூண்முலை மங்கைபங்
காவென் சிவகதியே.

என்னை நினைத்து உன்னை மறந்தேன்

143. தனித்துணை நீ நிற்க, யான் தருக்கி,[1]
தலையால் நடந்த
வினைத்துணையேனை விடுதி கண்டாய்?
வினையேனுடைய
மனத்துணையே, என்–தன் வாழ்–முதலே,
எனக்கு எய்ப்பில் – வைப்பே,[2]
தினைத்துணையேனும் பொறேன், துயர்
ஆக்கையின் திண்வலையே. (39)

1 செருக்கடைந்து

2 இளைத்த காலத்தில உதவும பொருளே, சேமநிதியே

இழிந்தன விழைந்தேன்

144. வலைத்தலை மான் அன்ன நோக்கியர்
நோக்கின் வலையில் பட்டு,
மிலைத்து[3] அலைந்தேனை விடுதி கண்டாய்?
வெள்மதியின் ஒற்றைக்
கலைத்தலையாய், கருணாகரனே,
கயிலாயம் என்னும்
மலைத்தலைவா, மலையாள் மணவாள,
என் வாழ் – முதலே. (40)

மயங்கி, மருண்டு

சிறியன சூழ நடுங்குகின்றேன்

145. முதலைச் செவ்-வாய்ச்சியர் வேட்கை
வெந்நீரில் கடிப்ப மூழ்கி,
விதலைச்[4] செய்வேனை விடுதி கண்டாய்?
விடக்கு[5] ஊன் மிடைந்த
சிதலைச்[6] செய் காயம் பொறேன்;
சிவனே, முறையோ? முறையோ?
திதலைச்[7] செய் பூண்முலை மங்கை'பங்கா,
என் சிவகதியே! (41)

4 நடுக்கம

5 இறைச்சி

6 நோய

7 தேமல்

சஉ

கசசு. கதியடி யேற்குன் கழறந்
தருளவு மூன்கழியா
விதியடி யேனை விடுதிகண்
டாய்வெண் டலைமுழையிற்
பதியுடை வாளரப் பார்த்திறை
பைத்துச் சுருங்கவஞ்சி
மதிநெடு நீரிற் குளித்தொளிக்
குஞ்சடை மன்னவனே.

சங

கசஎ. மன்னவ னேயொன் றுமாறறி
யாச்சிறி யேன்மகிழ்ச்சி
மின்னவ னேவிட் டிடுதிகண்
டாய்மிக்க வேதமெய்ந்நூல்
சொன்னவ னேசொற் கழிந்தவ
னேகழி யாத்தொழும்பர்
முன்னவ னேபின்னு மானவ
னேயிம் முழுதையுமே.

ச்ச

கசஅ. முழுதயில் வேற்கண் ணியரென்னு
மூரித் தழன்முழுகும்
விழுதனை யேனை விடுதிகண்
டாய்நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வானத் தொழும்பரிற்
கூட்டிடு சோத்தம்பிரான்
பழுதுசெய் வேனை விடேலுடை
யாயுன்னைப் பாடுவனே.

ஞானக்கழல் அடைவேனுக்கு ஊன உடல் ஏன்?

146. கதி அடியேற்கு உன் கழல் தந்தருளவும்,
ஊன் கழியா
விதி அடியேனை விடுதி-கண்டாய்?
வெள்-தலை முழையில்[1]
பதிஉடைவாள் அரப் பார்த்து,
இறை[2] பைத்துச்[3] சுருங்க, அஞ்சி,
மதிநெடு நீரில் குளித்து, ஒளிக்கும்
சடை மன்னவனே. (42)

1 பொந்தில்
2 சிறிது
3 படம் விரித்து

அறியாதேன் பெற்ற ஆனந்த ஒளி

147. மன்னவனே, ஒன்றும்[4] ஆறு அறியாச்
சிறியேன் மகிழ்ச்சி
மின்னவனே, விட்டிடுதி கண்டாய்?
மிக்கவேத மெய்ந்நூல்
சொன்னவனே, சொல்கழிந்தவனே,
கழியாத் தொழும்பர்
முன்னவனே, பின்னும் ஆனவனே,
இம் முழுதையுமே. (43)

4 கூடுகின்ற

காமக் கனலில் விழுந்த வெண்ணெய்

148. முழுது அயில்[5] வேல் கண்ணியர் என்னும்
மூரித் தழல்[6] முழுகும்
விழுது[7] அனையேனை விடுதி-கண்டாய்?
நின்வெறி[8] மலர்த்தாள்
தொழுது செல்வானத் தொழும்பரில்[9]
கூட்டிடு; 'சோத்தம்'[10]பிரான்;
பழுது செய்வேனை விடேல்; உடையாய்,
உன்னைப் பாடுவனே. (44)

5 கூர்மை
6 பெருந்தீ
7 வெண்ணெய்
8 மணம்
9 அடியவரில்
10 வணக்கம்

௪௫

கசகூ. பாடிற்றி லேன்பணி யேன்மணி
நீயொளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத்
தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுரு
கேனின் றுழைத்தனனே.

௪௬

கரு௰. உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத் தீயினொப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்விடின் வேலைநஞ்சுண்
மழைதரு கண்டன் குணமிலி
மானிடன் தேய்மதியன்
பழைதரு மாபர னென்றென்
றறைவன் பழிப்பினையே.

௪௭

கருக. பழிப்பினின் பாதப் பழந்தொழும்
பெய்தி விழப்பழித்து
விழித்திருந் தேனை விடுதிகண்
டாய்வெண் மணிப்பணிலங்
கொழித்துமந் தாரமந் தாகினி
நுந்தும்பந் தப்பெருமை
தழிச்சிறை நீரிற் பிறைக்கலஞ்
சேர்தரு தாரவனே.

மறைந்தாய் மறந்தேன்

149. பாடிற்றிலேன்; பணியேன்; மணி,
நீ ஒளித்தாய்க்குப் பச்சூன்[1]
வீடிற்றிலேனை[2] விடுதி கண்டாய்?
வியந்து, ஆங்கு அலறித்
தேடிற்றிலேன்; 'சிவன் எவ்இடத்தான்?
எவர் கண்டனர்?' என்று
ஓடிற்றிலேன்; கிடந்து உள் உருகேன்;
நின்று உழைத்தனனே. (45)

1 பசிய இறைச்சி–உடல்
2 அழிககாதவனுகிய என்னை

காமக்கனியை மொய்க்கும் ஈ

150. உழை தரு[3] நோக்கியர் கொங்கை,
பலாப் பழத்து ஈயின் ஒப்பாய்,
விழை தருவேனை[4] விடுதி கண்டாய்?
விடின், 'வேலை நஞ்சுஉண்
மழைதரு[5] கண்டன், குணம் இலி,
மானிடன்,[6] தேய்மதியன்,
பழைதரு மா பரன்' என்று என்று
அறைவன், பழிப்பினையே.[7] (46)

3 மான போன்ற
4 விரும்புவேனை
5 நீலமேகம் போன்ற
6 மான+இடன்
7 புகழை

தொண்டு மறந்த தொண்டன்

151. பழிப்பு[8] இல் நின் பாதப் பழம் தொழும்பு[9]
எய்தி, விழ, பழித்து,
விழித்திருந்தேனை விடுதி கண்டாய்?
வெண் மணி[10]ப் பணிலம்[11]
கொழித்து, மந்தாரம்[12] மந்தாகினி[13]
நுந்தும்,[14] பந்தப் பெருமை[15]
தழி[16]ச் சிறைநீரில், பிறைக்கலம்[17]
சேர்தரு தாரவனே.[18] (47)

8 நிந்தை
9 தொண்டு
10 முத்து
11 சங்கு
12 மநதார மலர்
13 கங்கை
14 தளளிவரும்
15 சிவபெருமானது சடைக்கற்றையே அணையாகவுள்ள பெருமை; பந்தம் = அணை
16 தழீஇ (தழுவி)
17 பிறையாகிய தோணி
18 மாலையை உடையவனே

௪௮

க௫௨. தாரகை போலுந் தலைத்தலை
மாலைத் தழலரப்பூண்
வீரவென் றன்னை விடுதிகண்
டாய்விடி னென்னைமிக்கார்
ஆரடி யானென்னி னுத்தர
கோசமங் கைக்கரசின்
சீரடி யாரடி யானென்று
நின்னைச் சிரிப்பிப்பனே.

௪௯

க௫௩. சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையு மீசற்கென்று
விரிப்பிப்ப னென்னை விடுதிகண்
டாய்விடின் வெங்கரியின்
உரிப்பிச்சன் றோலுடைப் பிச்சனஞ்
சூண்பிச்ச னூர்ச்சுடுகாட்
டெரிப்பிச்ச னென்னையு மாளுடைப்
பிச்சனென் றேசுவனே.

௫௰

க௫௪. ஏசினும் யானுன்னை யேத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசறு வேனை விடுதிகண்
டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை யாளுடை
யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின வாலமுண் டாயமு
துண்ணக் கடையவனே.

திருச்சிற்றம்பலம்.

உன் அடியார்க்கு அடியேன்

152. தாரகை[1] போலும் தலைத்தலை-மாலை,
தழல்[2] அராப்பூண்[3]
வீர, என்-தன்னை விடுதி கண்டாய்?
விடின், என்னை மிக்கார்
'ஆர் அடியான்?' என்னின்,
'உத்தரகோச மங்கைக்கு அரசின்
சீர் அடியார் அடியான்' என்று,
நின்னைச் சிரிப்பிப்பனே. (48)

1 விண்மீன், நக்ஷத்திரம்
2 தீப்போன்ற நஞ்சு
3 பாம்பாகிய அணியைப் பூண்ட

உனக்கே ஆளானேன்

153. சிரிப்பிப்பன், சீறும்[4] பிழைப்பை;
தொழும்பையும்[5] ஈசற்கு என்று
விரிப்பிப்பன்; என்னை விடுதி கண்டாய்?
விடின், 'வெம்[6] கரியின்[7]
உரிப்[8]பிச்சன்,[9] தோல் உடைப்பிச்சன்,
நஞ்சு ஊண்பிச்சன், ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன், என்னையும் ஆளுடைப்பிச்சன்'
என்று ஏசுவனே. (49)

4 வெறுக்கும்
5 தொண்டையும்
6 கொடிய
7 யானையின
8 தோல
9 பித்தன்

என் பிழைக்கு மனம் உடைந்தேன்: கைவிடுவாயோ?

154. ஏசினும், யான், உன்னை ஏத்தினும்,
என்பிழைக்கே குழைந்து
வேசறுவேனை[10] விடுதி கண்டாய்?
செம்பவள வெற்பின்[11]
தேசு[12] உடையாய்; என்னை ஆளுடையாய்;
சிற்றுயிர்க்கு இரங்கி
காய்சின ஆலம்[13] உண்டாய்-அமுது
உண்ணக் கடையவனே. (50)

10 வருந்துவேனை
11 மலைபோன்ற
12 ஒளி, அழகு
13 கொதித்து எழுந்த கொடிய நஞ்சு

திருச்சிற்றம்பலம்

ஏழாவது

திருவெம்பாவை

சத்தியை வியந்தது

(வெண்டளையான் வந்த இயற்றரவிணைக் கொச்சகக் கலிப்பா)

க

கருரு. ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

உ

கருசா. பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனும்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்து
ளீசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய்

ஏழாவது

திருஎம்பாவை

சத்தியை வியந்தது

முதலும் முடிவும் இல்லாப் பேர்-ஒளி

155. 'ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெரும்
சோதியை யாம் பாடக் கேட்டேயும், வாள்தடம்[1]-கண்
மாதே! வளருதியோ? வன் செவியோ நின் செவி-தான்?
மாதேவன் வார்[2] கழல்கள்[3] வாழ்த்திய வாழ்த்து ஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி மெய்ம் மறந்து,
போது[4] ஆர் அமளியின்[5] மேல் நின்றும் புரண்டு இங்ஙன்
ஏதேனும் ஆகாள், கிடந்தாள்; என்னே! என்னே!!
ஈதே எம்தோழி பரிசு ?'-ஏல் ஓர் எம்பாவாய் ! (1)

1 ஒளியுள்ள அகன்ற
2 நீண்ட
3 கழலணிந்த திருவடிகள
4 மலர்
5 படுக்கை

அருள் தரவரும் ஒளி

156. "பாசம் பரஞ்சோதிக்கு" என்பாய், இராப்பகல் நாம்
பேசும் போது; எப்போது இப் போது-ஆர் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேரிழையாய்!'-'நேரிழையீர்!
சீ! சீ!! இவையும் சிலவோ? விளையாடி
ஏசும் இடம் ஈதோ? விண்ணோர்கள் ஏத்துதற்குக
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்
தேசன்,[6] சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்புஆர்? யாம்ஆர்?'-ஏல் ஓர் எம்பாவாய்! (2)

6 ஒளியாயுள்ளவன்

௩

கருஎ. முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
வெத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
யித்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

௪

கருஅ. ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய்.

௫

கருக. மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோ மென்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்
கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

உள்ளத்தின் அழகு

157. ‘முத்து அன்னவெள்-நகையாய்! முன்வந்து, எதிர்எழுந்து, “என்
அத்தன், ஆனந்தன், அமுதன்” என்று அள்ளூறித்[1]
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்’—
‘பத்து[2] உடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்கு உடையீர்!
புத்து அடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ?’–
‘எத்தோ நின் அன்புடமை? எல்லோம் அறியோமோ?’–
‘சித்தம் அழகியார் பாடாரோ, நம் சிவனை?’—
‘இத்தனையும் வேண்டும் எமக்கு’-ஏல் ஓர் எம்பாவாய்! (3)

1 வாயூறி
2 பக்தி

கண்ணுக்கு இனியான்

158. ‘ஒள்-நித்தில[3] நகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?!–
‘வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?’–
‘எண்ணிக் கொடு உள்ளவா சொல்லுகோம்: அவ்வளவும்
கண்ணைத் துயின்று, அவமே காலத்தைப் போக்காதே’—
‘விண்ணுக்கு ஒரு மருந்தை, வேதவிழுப் பொருளை,
கண்ணுக்கு இனியானை, பாடிக் கசிந்து, உள்ளம்
உள்நெக்கு நின்று உருக யாம் மாட்டோம்; நீயேவந்து
எண்ணி, குறையில், துயில்’-ஏல் ஓர் எம்பாவாய்! (4)

3 ஒளியுள்ள முத்தைப் போன்ற

குற்றங்களைப் போக்கவந்த குணம்

159. ‘மால்அறியா, நான்முகனும் காணா, மலையினை, “நாம்
போல் அறிவோம்,” என்று-உள்ள பொக்கங்களே[4] பேசும்
பால்ஊறு தேன்வாய்ப்படிறீ![5] கடை திறவாய்
ஞாலமே, விண்ணே, பிறவே, அறிவு-அரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்[6]
சீலமும் பாடி, “சிவனே! சிவனே!” என்று
ஓலம்[7] இடினும், உணராய், உணராய்காண்!
ஏலக்குழலி[8] பரிசு’-ஏல் ஓர் எம்பாவாய்! (5)

4 பொய்யானவைகளே
5 வஞ்சகமுடையவளே
6 குற்றங்களைப் போக்கும்
7 முறையிட்டுக் கதறினும்
8 மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடையவள்

௬

௧௬௰. மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கு
மேனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்

௭

௧௬௧. அன்னே யிவையுஞ் சிலவோ பலவமர
ருன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியா
லென்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

௮

௧௬௨. கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கு
மேழி லியம்ப வியம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவா
யாழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
யேழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்

தானே வந்து அருள் செய்யும் தலைவன்

160\. 'மானே! நீ, நென்னலை,[1] "நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன்" என்றலும், நாணுமே
போன திசை பகராய்; இன்னம் புலர்ந்தின்றோ?
வானே, நிலனே, பிறவே, அறிவு-அரியான்
தானே வந்து, எம்மைத் தலையளித்து,[2] ஆட்கொண்டருளும்
வான்[3] வார்கழல்[4] பாடிவந்தோர்க்கு, உன்வாய் திறவாய்!
ஊனே உருகாய், உனக்கே உறும்; எமக்கும்
ஏனோர்க்கும் தம் கோனைப்பாடு'-ஏல் ஓர் எம்பாவாய்! (6)

1 நேற்று
2 பேரருள் செய்து
3 மிக வுயாநத
4 நெடிய கழல் அணிநத திருவடிகள்

சின்னங்கள் கேட்டால் சிவன் என்று தொழுவோம்

161\. 'அன்னே, இவையும் சிலவோ? பல அமரர்
உன்னற்கு[5] அரியான், ஒருவன், இரும் சீரான்,
சின்னங்கள்[6] கேட்ப, "சிவன்" என்றேவாய் திறப்பாய்;
"தென்னா" என்னா முன்னம், தீசேர் மெழுகு ஒப்பாய்;
"என்னானை, என் அரையன், இன் அமுது," என்று எல்லோமும்
சொன்னோம் கேள், வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ?[7]
வன்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின்பரிசு?'-ஏல் ஓர் எம்பாவாய்! (7)

5 எண்ணுதற்கு
6 காளம் ஊதும் ஒலி
7 உறங்குகின்றாயோ

அருட்பெருங்கடல்-ஏழைபங்காளன்

162\. 'கோழி சிலம்ப,[8] சிலம்பும் குருகு[9] எங்கும்;
ஏழில்[10] இயம்ப,[11] இயம்பும் வெண்சங்கு எங்கும்;
கேழ்[12] இல் பரஞ்சோதி, கேழ் இல் பரங்கருணை,
கேழ் இல் விழுப்பொருள்கள் பாடினோம்; கேட்டிலையோ?
வாழீ! ஈதுஎன்ன உறக்கமோ? வாய் திறவாய்!
ஆழியான்[13] அன்புடைமை ஆம்ஆறும் இவ்வாறோ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு!'-ஏல் ஓர் எம்பாவாய்! (8)

8 ஒலி செய்ய-கூவ
9 பறவைகள்
10 ஏழு இசையுடைய இசைக்கருவி
11 இசைக்க
12 ஒப்பு
13 அருட்கடலாக வுள்ளவன

கூ

க்கூங. முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானுகப் பெற்றவுன் சீரடியோ
முன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோ
மன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியே
லென்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய்.

கய

ககூச. பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் ரொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூ ரேதவன்பே ராருற்ரு ராரயலா
ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.

கக

ககூரு. மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீருடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டி
னுய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோ
மெய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய்.

அடியார் தாள் பணிவோம்

163. 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே!
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே !
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீர்அடியோம்
உன் அடியார் தாள்[1] பணிவோம் ; ஆங்கு அவர்க்கே பாங்கு[2] ஆவோம் ;
அன்னவரே எம்கணவர் ஆவார் ; அவர் உகந்து
சொன்னபரிசே தொழும்பாய்[3] பணிசெய்வோம் ;
இன்னவகையே எமக்கு எம்கோன் நல்குதியேல்,[4]
என்ன குறையும் இலோம்'– ஏல் ஓர் எம்பாவாய் ! (9)

1 அடி
2 தோழமை
3 பணிவாயும் அன்பாயும்
4 அருளுவாயானால

அவனைப் பாடும் பரிசு எது ?

164. 'பாதாளம்[5] ஏழினும் கீழ் சொல்-கழிவு பாதமலர்;
போதுஆர்[6] புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே !
பேதை ஒரு பால் ; திருமேனி ஒன்று அல்லன் ;
வேத முதல் ; விண்ணோரும், மண்ணும், துதித்தாலும்,
ஓத உலவா[7] ஒரு தோழன் தொண்டர் உளன்;
கோது[8] இல் குலத்து, அரன்-தன் கோயில் பிணாப்[9] பிள்ளைகாள் !
ஏது அவன் ஊர் ? ஏது அவன் பேர் ? ஆர் உற்றார் ? ஆர் அயலார் ?
ஏது அவனைப்பாடும் பரிசு?' ஏல் ஓர் எம்பாவாம்! (10)

5 கீழுலகம்
6 ஆர் – போது = ஆத்தி மலா
7 முற்றுப்பெறாத
8 குற்றம்
9 பெண

வழிவழி அடியோம் வாழ்ந்தோம்

165. 'மொய்[10] ஆர் தடம்[11] பொய்கைபுக்கு, முகேர்[12] என்னக்
கையால் குடைந்து குடைந்து, உன் கழல் பாடி,
ஐயா ! வழி அடியோம் வாழ்ந்தோம் காண் ; ஆர் அழல் போல்
செய்யா ![13] வெள்-நீறு ஆடி ! செல்வா ! சிறுமருங்குல்[14]
மைஆர் தடம் கண் மடந்தை மணவாளா !
ஐயா ! நீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும்வகை எல்லாம், உய்ந்து ஒழிந்தோம் ;
எய்யாமல்[15] காப்பாய் எமை'– ஏல் ஓர் எம்பாவாய் ! (11)

10 கூட்டம், சிறப்பு
11 அகன்ற
12 ஒலிக்குறிப்பு
13 செந்நிறத்தவனே
14 இடை
15 தளராமல்

கஉ

கசுசு. ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமுங்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைக
ளார்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாத
மேத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்

கங

கசுஎ. பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதா
லங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தால்
தங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினு
லெங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

கச

கசுஅ. காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
யாதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய்.

புடைத்தலும் காத்தலும் கரத்தலும் ஓர் விளையாட்டு

166. 'ஆர்த்த[1] பிறவித்துயர்கெட, நாம் ஆர்த்து[2] ஆடும்
தீர்த்தன்[3]; நல் தில்லைச்சிற்றம்பலத்தே தீ ஆடும்
கூத்தன்; இவ்வானும், குவலயமும்,[4] எல்லாமும்,
காத்தும், படைத்தும், கரந்தும்,[5] விளையாடி,
வார்த்தையும் பேசி, வளை சிலம்ப,[6] வார்[7] கலைகள்[8]
ஆர்ப்பு அரவம்[9] செய்ய, அணிகுழல்[10] மேல் வண்டு ஆர்ப்ப,
பூத்திகழும் பொய்கை குடைந்து,[11] உடையான்-பொன்பாதம்
ஏத்தி, இரும்சுனை நீர் ஆடு'-ஏல் ஓர் எம்பாவாய்! (12)

1 கட்டிய, பிணித்த
2 மகிழ்ந்து, ஆரவாரம் செய்து
3 தூயவன்
4 நிலவுலகமும்
5 ஒளித்தும்
6 ஒலிக்க
7 நீண்ட
8 மேகலைகள்
9 ஒலி
10 கூந்தல்
11 மூழ்கி

பூம் புனலே! நீ அம்மையப்பனோ?

187. 'பைம்-குவளைக் கார்மலரால், செம்கமலப்பைம் போதால்
அங்கம் குருகு[12] இனத்தால், பின்னும் அரவத்தால்,[13]
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எம்கோனும் போன்று இசைந்த
பொங்கு மடுவில், புகப் பாய்ந்து பாய்ந்து; நம்
சங்கம்[14] சிலம்ப;[15] சிலம்பு[16] கலந்து ஆர்ப்ப;
கொங்கைகள் பொங்க; குடையும் புனல் பொங்க;
பங்கயப்பூம்-புனல் பாய்ந்து ஆடு'-ஏல் ஓர் எம் பாவாய்! (13)

12 பறவை
13 ஒலியால், பாம்பால்
14 வளையல்
15 ஒலிக்க
16 காலிலணியும் சிலம்பு

அன்னையைப் பாடுவோம்

168. 'காது ஆர் குழை ஆட, பைம்-பூண் கலன் ஆட,
கோதை குழல் ஆட, வண்டின் குழாம் ஆட,
சீதப்புனல் ஆடி, சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள் பாடி, அப்பொருள் ஆமா பாடி,
சோதி திறம் பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி, அந்தம் ஆமா பாடி,
பேதித்து[17] நம்மை, வளர்த்து எடுத்தபெய்வளை[18]-தன்
பாதத்திறம்[19] பாடி, ஆடு'-ஏல் ஓர் எம்பாவாய்! (14)

17 வேறுபடுத்தி
18 வளையலணிந்தவள் உமையம்மை
19 திருவடியின் அருள் திறத்தை

கரு

கசுரு. ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்.
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறு
மாரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
யேருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

கசு

களம். முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையா
ளென்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவ
மென்னச் சிலைகுலவி நந்தம்மை யாளுடையா
டன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கு
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
யென்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்

களஎ

களக. செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பா
லெங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
யிங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
யங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

பித்தாக ஆட்கொண்ட வித்தகர்

169. 'ஓர் ஒரு கால் ''எம்பெருமான்'' என்று என்றே, நம்பெருமான்
சீர் ஒரு கால் வாய் ஓவாள்[1] ; சித்தம் களிகூர,
நீர் ஒரு கால் ஓவா[2] நெடும் தாரை[3] கண் பனிப்ப,[4]
பார் ஒரு கால் வந்தனையாள் ; விண்ணோரைத் தான்பணியாள்;
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆம் ஆறும்
ஆர் ஒருவர் ? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்[5] தான்,
வார்[6] உருவப்[7] பூண் முலையீர், வாய்ஆர நாம் பாடி,
ஏர்[8] உருவப்[9] பூம் புனல் பாய்ந்து ஆடு'-ஏல் ஓர் எம்பாவாய் (15)

1 நீங்காள்
2 இடையறு
3 நீர்–தாரை
4 துளி செய்ய
5 ஞானவடிவினர்; ஆற்றலுடையவர்
6 கச்சு
7 உருவு+அ
8 அழகு
9 நிறமுள்ள

அருள் மழை

170. 'முன்னி, கடலைச் சுருக்கி எழுந்து, உடையாள்[10]
என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேல்
பொன் அம் சிலம்பில் சிலம்பி, திருப்புருவம்
என்னச்சிலை[11] குலவி,[12] நம்-தம்மை ஆள் உடையாள்-
தன்னில் பிரிவு இலா எம் கோமான் அன்பர்க்கு
முன்னி,[13] அவள், நமக்குமுன் சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய்மழை'-ஏல் ஓர் எம்பாவாய் ! (16)

10 உமையம்மை
11 வானவில
12 வளைதது
13 முற்படடு

வீடு வீடாகத் தேடி ஆட்கொண்டான்

171. 'செங் கண் - அவன்[14] பால், திசைமுகன்[15] பால், தேவர்கள்பால்,
எங்கும் இலாதது ஓர் இன்பம் நம்பாலதா,
கொங்கு[16]-உண் கரும் குழலி! நம்-தம்மைக் கோதாட்டி[17]
இங்கு, நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி,
செம்-கமலப் பொன்பாதம் தந்தருளும் சேவகனை,
அம் கண் அரசை, அடியோங்கட்கு ஆர்அமுதை
நங்கள் பெருமானை, பாடி, நலம் திகழ,
பங்கயப்பூம்-புனல்[18] பாய்ந்து ஆடு'-ஏல் ஓர் எம்பாவாய் (17)

14 திருமால்
15 பிரமன்
16 மணம்
17 குற்றம் நீக்கி
18 தாமரையுள்ள அழகிய நீர் நிலை

கஅ

கஎஉ. அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கலப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொலிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

ககூ

கஎங. உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கே
ளெங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியே
லெங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

உ௰

கஎச. போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணார் அமுதம்

172. அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு[1] அற்றாற்போல் 1 ஒளி
கண்ஆர் இரவிக்[2] கதிர்வந்து கார்[3] கலப்ப, 2 கதிரவன்
தண்ஆர் ஒளிமழுங்கி, தாரகைகள் தாம்அகல, 3 மேகம்
பெண்ஆகி, ஆண்ஆய், அலிஆய், பிறங்கு ஒலிசேர்
விண்ஆகி, மண்ஆகி, இத்தனையும் வேறுஆகி,
கண்ஆர் அமுதமும்ஆய், நின்றான் கழல்பாடி,
பெண்ணே! இப் பூம்-புனல்பாய்ந்து ஆடு'-ஏல்ஓர் எம்பாவாய்! (18)

எது எவ்வாறாயினும் நமக்கு என்ன ?

173. "உம்கையில்பிள்ளை உனக்கே அடைக்கலம்," என்று
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள்பெருமான், உனக்கு ஒன்று உரைப்போம் கேள்!
எம்கொங்கை நின் அன்பர்அல்லார் தோள் சேரற்க ;
எம்கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க ;
கங்குல், பகல் எம் கண் மற்று ஒன்றும் காணற்க.
இங்கு இப்பரிசே எமக்கு எம்கோன் நல்குதியேல்,
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு?'-ஏல்ஓர்எம்பாவாய்! (19)

ஐந்தொழில் இயற்றும் திருவடி காப்பதாக

174. 'போற்றி! அருளுக, நின்ஆதிஆம் பாதமலர்.
போற்றி! அருளுக, நின் அந்தம் ஆம்செம்-தளிர்கள்.
போற்றி! எல்லா உயிர்க்கும் தோற்றம் ஆம் பொன்பாதம்.
போற்றி! எல்லா உயிர்க்கும் போகம் ஆம்பூம்கழல்கள்.
போற்றி! எல்லா உயிர்க்கும் ஈறுஆம் இணை-அடிகள்.
போற்றி! மால், நான்முகனும், காணாதபுண்டரிகம்.[4] 4 தாமரை-திருவடி மலர்
போற்றி! யாம்உய்ய, ஆட்கொண்டருளும் பொன்மலர்கள்.[5] 5 பொன்னார்
போற்றி! யாம் மார்கழிநீர் ஆடு'-ஏல்ஓர் எம்பாவாய்! (20) திருவடி

திருச்சிற்றம்பலம்

எட்டாவது

திருவம்மானை

ஆனந்தக்களிப்பு

(திருவண்ணுமலையி லருளிச் செய்யப்பட்டது.)

(ஒப்புமை பற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)

க

களரு. செங்க ணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கண னந்தணனு யறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்கா ணம்மானுய்

உ

களசுா. பாரார் விசும்புள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியா னெமக்கெளிய
பேராளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் னுளம்புகுந்த
ஆரா வமுதா யலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்கா ணம்மானுய்.



திருவண்ணமலைத் திருக்கோபுரங்கள்

௩

௧௭௭. இந்திரனும் மாலயனு மேனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவனவனி வந்தருளி
எந்தரமு மாட்கொண்டு தோட்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்குஞ் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேற்கொண் டான்றந்த
வந்தமிலா வானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்

௪

௧௭௮. வான்வந்த தேவர்களு மாலயனோ டிந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய
தான்வந்து நாயேனைத் தாய்போற் றலையளித்திட்
டூன்வந் துரோமங்க ளுள்ளே யுயிர்ப்பெய்து
தேன்வந் தமுதின் றெளிவி னொளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதுங்கா ணம்மானாய்.

௫

௧௭௯. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் றென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத் தழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

௬

௧௮௰. கேட்டாயோ தோழீ கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாமேலை வீடெய்த
வாட்டான்கொண் டாண்டவா பாடுதுங்கா ணம்மானாய்.

சிந்தனையை உருக்கும் சிவபெருமான்

177. இந்திரனும், மால், அயனும்,[1] ஏனோரும், வானோரும், — 1 பிரமனும்
அந்தரமே நிற்க, சிவன் அவனிவந்தருளி
எம்தரமும்[2] ஆட்கொண்டு, தோள்கொண்ட நீற்றன் ஆய் — 2 தகுதியும்
சிந்தனையை வந்துஉருக்கும் சீர்ஆர் பெருந்துறையான்
பந்தம்[3] பறிய[4] பரிமேல்கொண்டான், தந்த — 3 கட்டு, பிணிப்பு 4 விலக
அந்தம்இலா ஆனந்தம்-பாடுதும்காண்; அம்மானாய்!(3)

தானே வந்து அருள் செய்த தாய்

178. வான்வந்த தேவர்களும், மால், அயனோடு, இந்திரனும்
கான்நின்றுவற்றியும், புற்றுஎழுந்தும், காண்பு-அரிய
தான் வந்து, நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு[5] — 5 பேரருள் செய்தது
ஊன்வந்து உரோமங்கள், உள்ளே உயிர்ப்பு எய்து -
தேன்வந்து, அமுதின்தெளிவின் ஒளிவந்த,
வான்வந்த, வார்கழலே-பாடுதும்காண் ; அம்மானாய் !(4)

கல்லைக் கனியாக்கும் கருணை

179. கல்லாமனத்துக் கடைப்பட்ட நாயேனை,
வல்லாளன், தென்னன், பெருந்துறையான், பிச்சுஏற்றி,
கல்லைப்பிசைந்து கனிஆக்கி, தன்கருணை
வெள்ளத்துஅழுத்தி, வினைகடிந்த வேதியனை,
தில்லைநகர் புக்கு, சிற்றம்பலம் மன்னும்
ஒல்லை[5] விடையானை-பாடுதும்காண்; அம்மானாய்!(5) — 5 விரைந்து செல்லும்

கேட்டாயோ? அவன் செய்தவை

180. கேட்டாயோதோழி! கிறி[6] செய்த ஆறு ஒருவன்- — 6 மாயம்
தீட்டு[7] ஆர் மதில்புடைசூழ் தென்னன்பெருந்துறையான் — 7 ஓவியங்கள் எழுதப் பெற்ற
காட்டாதனஎல்லாம்காட்டி, சிவம் காட்டி,
தாள்-தாமரை காட்டி, தன்கருணைத்தேன் காட்டி,
நாட்டார் நகைசெய்ய, நாம் மேலை வீடு எய்த,
ஆள்-தான்கொண்டுஆண்டவா-பாடுதும்காண்; அம்மானாய்! (6)

எ

கஅக. ஓயாதே யுள்குவா ருள்ளிருக்கு முள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையில்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை யாட்கொண்ட நாயகனைத்
தாயானைத் தத்துவனைத் தானே யுலகேழும்
ஆயானை யாள்வானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

அ

கஅஉ. பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்கா ணம்மானாய்.

கூ

கஅ௩. துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்டபுரி நூலான் கோலமா ஆர்த்தியான்
கண்டங் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுத லாயினா னந்தமிலா வானந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க் கீந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்கா ணம்மானாய்.

க௰

கஅச. விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை யாட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

உள்குவார் உள்ளத்தான்

181. ஓயாதே உள்குவார்[1] உள் இருக்கும் உள்ளானை,
சேயானை,[2] சேவகனை,[3] தென்னன் பெருந்துறையின்
மேயானை, வேதியனை, மாது இருக்கும் பாதியனை,
நாய்ஆன நம்-தம்மை ஆட்கொண்ட நாயகனை,
தாயானை, தத்துவனை, தானே உலகுஏழும்
ஆயானை, ஆள்வானை-பாடுதும்காண்; அம்மானாய்! (7)

1 சிந்திப்பார்
2 சேய்மையிலுள்ளவனை
3 வீரனை

மண் சுமந்து புண் சுமந்தான்

182. பண்சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன், பெம்மான், பெருந்துறையான்,
விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசன்,
கண்சுமந்த நெற்றிக் கடவுள், கலி[4] மதுரை
மண்சுமந்து கூலிகொண்டு, அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி-பாடுதும்காண்; அம்மானாய்! (8)

4 செழுமை

அண்டம் வியப்புறும்

183. துண்டப் பிறையான், மறையான், பெருந்துறையான்,
கொண்ட புரிநூலான், கோலமா ஊர்தியான்,
கண்டம் கரியான், செம்மேனியான், வெள்-நீற்றான்,
அண்டம் முதல் ஆயினான், அந்தம் இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே, பழ அடியார்க்கு ஈந்தருளும்;
அண்டம் வியப்பு உறுமா-பாடுதும் காண் அம்மானாய்! (9)

தமிழ் அளிக்கும் தெய்வம்

184. விண் ஆளும் தேவர்க்கும் மேல்ஆய வேதியனை,
மண் ஆளும் மன்னவர்க்கும் மாண்புஆகி நின்றானை,
தண் ஆர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானை,
பெண் ஆளும் பாகனை, பேணு[5] பெருந்துறையில்
கண் ஆர் கழல்காட்டி, நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலையானை-பாடுதும் காண்; அம்மானாய்!(10)

5 விரும்பும்

கக

கஅரு. செப்பார் முலைபங்கன் றென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினுன்
அப்பாண்டி நாட்டைச் சிவலோக மாக்குவித்த
அப்பார் சடையப்ப னுனந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த வுள்ளத்தா ருள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்கா ணம்மானாய்.

கஉ

கஅசு. மைப்பொலியுங் கண்ணிகேண் மாலயனே டிந்திரனும்
எப்பிறவி யும்தேட வென்னையுந்தன் னின்னருளால்
இப்பிறவி யாட்கொண் டினிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கட் டோற்றமாய் மெய்யே நிலைபேருய்
எப்பொருட்குந் தானேயா யாவைக்கும் வீடாகும்
அப்பொருளா நஞ்சிவனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

கங

கஅஎ. கையார் வளைசிலம்பக் காதார் குழையாட
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்
செய்யானை வெண்ணீ றணிந்தானைச் சேர்ந்தறியாக்
கையானை யெங்குஞ் செறிந்தானை யன்பர்க்கு
மெய்யானை யல்லாதார்க் கல்லாத வேதியனை
ஐயா றமர்ந்தானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

கச

கஅஅ. ஆனையாய்க் கீடமாய் மானிடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந் தெய்த்தேனை
ஊனையு நின்றுருக்கி யென்வினையை யோட்டுகந்து
தேனையும் பாலையுங் கன்னலையு மொத்தினிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்றொழும்பிற் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்கா ணம்மானாய்

அப்பாலைக்கு அப்பாலாம் ஆனந்தம்

185. செப்பு-ஆர் முலைபங்கன், தென்னன், பெருந்துறையான்,
தப்பாமே தாள் அடைந்தார் நெஞ்சு உருக்கும் தன்மையினன்,
அப் பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பு[1] ஆர் சடைஅப்பன், ஆனந்த வார்கழலே
ஒப்புஆக ஒப்புவித்த உள்ளத்தார் உள் இருக்கும்
அப்பாலைக்கு அப்பாலை-பாடுதும்காண்; அம்மானாய்! (11)

1 நீர்-கங்கை

உண்மையின் காட்சி

186. மைப்பொலியும் கண்ணி![2] கேள்; மால், அயனோடு, இந்திரனும்,
எப்பிறவியும்தேட, என்னையும் தன் இன் அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு, இனிப்பிறவாமே காத்து,
மெய்ப்பொருட்கண் தோற்றம்ஆய், மெய்யே நிலைபேறுஆய்,
எப்பொருட்கும் தானேஆய், யாவைக்கும் வீடுஆகும்
அப்பொருள்ஆம் நம்சிவனை-பாடுதும்காண்; அம்மானாய்! (12)

2 கண்ணையுடையவளே

அன்பர்க்கு மெய்யன்

187. கைஆர் வளை சிலம்ப, காதுஆர் குழைஆட,
மை[3] ஆர் குழல்[4] புரள, தேன்பாய, வண்டுஒலிப்ப,
செய்யானை, வெள்-நீறு அணிந்தானை, சேர்ந்துஅறியாக்
கையானை, எங்கும் செறிந்தானை, அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை,
ஐயாறு அமர்ந்தானை-பாடுதும்காண்; அம்மானாய்! (13)

3 கருமை
4 கூந்தல்

தொண்டுகொண்ட வானவன்

188. ஆனைஆய், கீடம்[5] ஆய், மானிடர்ஆய், தேவர்ஆய்,
ஏனைப்பிறவுஆய், பிறந்து, இறந்து, எய்த்தேனை-[6]
ஊனையும் நின்றுஉருக்கி, என்வினையை ஓட்டுஉகந்து,
தேனையும், பாலையும், கன்னலையும[7] ஒத்து, இனிய
கோன்-அவன் போல்வந்து, என்னை, தன்தொழும்பில்[8] கொண்டருளும்
வானவன் பூம்கழலே-பாடுதும்காண்; அம்மானாய்! (14)

5 புழு
6 அலுத்தேனை
7 கருமபையும்
8 தொண்டில்

கரு

க௲அ௯. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்றன் வேள்வியினில்
இந்திரனைத் தோணெரித்திட் டெச்சன் றலையரிந்
தந்தரமே செல்லு மலர்கதிரோன் பற்றகர்த்துச்
சிந்தித் திசைதிசையே தேவர்களை யோட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்கா ணம்மானாய்.

கசா

கக௲. ஊனாய் யுயிரா யுணர்வாயென் னுட்கலந்து
தேனா யமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோ ரறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா வறிவா யளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவா கூறுதுங்கா ணம்மானாய்.

கஎ

கக௲க. சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன்றிரடோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கிநின்
றூடுவேன் செவ்வாய்க் குருகுவே னுள்ளுருகித்
தேடுவேன் றேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்
வாடுவேன் பேர்த்து மலர்வே னனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்கா ணம்மானாய்.

கஅ

கக௲உ. கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனுங் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையி
லெளிவந் திருந்திரங்கி யெண்ணரிய வின்னருளா
லொளிவந்தெ னுள்ளத்தி னுள்ளே யொளிதிகழ
வளிவந்த வந்தணனைப் பாடுதுங்கா ணம்மானாய்.

மறக்கருணை

189. சந்திரனைத் தேய்த்தருளி, தக்கன்–தன் வேள்வியினில்
இந்திரனைத்தோள் நெரித்திட்டு, எச்சன்[1] தலைஅரிந்து, 1 வேள்வித் தலைவன்
அந்தரமே செல்லும் அலர் கதிரோன் பல் தகர்த்து, 2 செழிப்பான பூங்கொத்து
சிந்தித் திசை–திசையே தேவர்களை ஓட்டு உகந்த,
செம்-தார்ப்[2]பொழில்[3]புடைசூழ் தென்னன் பெருந்துறையான் 3 சோலை
மந்தார[4] மாலையே–பாடுதும் காண் ; அம்மானாய்! (15) 4 வானுலக மலர்வகை

உள் கலந்த தேன்

190. ஊன்ஆய், உயிர்ஆய், உணர்வுஆய், என்னுள் கலந்து
தேன் ஆய், அமுதமும் ஆய், தீம் கரும்பின் கட்டியும் ஆய்
வானோர் அறியா வழி எமக்குத் தந்தருளும்,
தேன் ஆர் மலர்க் கொன்றைச் சேவகனார், சீர் ஒளிசேர்
ஆனா[5] அறிவு ஆய், அளவு இறந்த பல் உயிர்க்கும் 5 கெடாத
கோன்ஆகி நின்றவா-கூறுதும்காண்; அம்மானாய்! (16)

என்ன என்ன செய்வேன்?

191. சூடுவேன் பூங்கொன்றை; சூடி சிவன் திரள் தோள்
கூடுவேன்; கூடி, முயங்கி,[6] மயங்கி நின்று, 6 கலந்து
ஊடுவேன்; செவ்-வாய்க்கு உருகுவேன்; உள் உருகித்
தேடுவேன்; தேடி, சிவன் கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல் ஏந்தி
ஆடுவான் சேவடியே-பாடுதும்காண்; அம்மானாய்! (17)

அருளால் வந்த ஒளி

192. கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை,
வெளிவந்த மால், அயனும், காண்பு-அரிய வித்தகனை, 7 தேனை
தெளிவந்த தேறலை,[7] சீர் ஆர் பெருந்துறையில்
எளிவந்து, இருந்து, இரங்கி,எண்-அரிய இன் அருளால்
ஒளிவந்து, என் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ,
அளி[8] வந்த அந்தணனை-பாடுதும் காண்; அம்மானாய்! (18) 8 அருள்

க௯

க௯௩. முன்னானை மூவர்க்கு முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதியலும் பாதியனைத்
தென்னானைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை யென்னப்ப னென்பார்கட் கின்னமுதை
அன்னானை யம்மானைப் பாடுதுங்கா ணம்மானாய்.

உ௦

க௯௪. பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித் தன்னடியார்
குற்றங்க ணீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் றொல்புகழே
பற்றியிப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்
பற்றியபே ரானந்தம் பாடுதுங்கா ணம்மானாய்.

திருச்சிற்றம்பலம்

இன்-அமுது

193. முன்னானை, மூவர்க்கும்; முற்றும் ஆய், முற்றுக்கும்
பின்னானை; பிஞ்ஞகனை;[1] பேணு பெருந்துறையின்
மன்னானை; வானவனை; மாது இயலும் பாதியனை;
தென் ஆனைக் காவானை; தென்பாண்டி நாட்டானை;
'என்னானை, என் அப்பன்' என்பார்கட்கு இன் அமுதை
அன்னானை; அம்மானை-பாடுதும்காண்; அம்மானாய்! (19)

மாசு நீக்கிய மாண்பு

194. பெற்றி[2] பிறர்க்கு அரிய பெம்மான், பெருந்துறையான்,
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளி, தன் அடியார்
குற்றங்கள் நீக்கி, குணம்கொண்டு, கோதாட்டி,
சுற்றிய சுற்றத் தொடர்வு அறுப்பான் தொல்புகழே
பற்றி, இப்பாசத்தைப் பற்று அற நாம் பற்றுவான்,
பற்றிய, பேர் ஆனந்தம்-பாடுதும் காண்; அம்மானாய்! (20)

திருச்சிற்றம்பலம்

1 பொன்னிறமுடையவனை—சிவபெருமானை

2 பெருமை; தன்மை

ஒன்பதாவது

திருப்பொற்சுண்ணம்

ஆனந்தமனோலயம்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

(அறுசீரடி யாசிரிய விருத்தம்)

க

கசுரு. முத்துநற் றாமம்பூ மாலை தூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம் வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மி
னத்தனை யாறனம் மானைப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

உ

கசுசு. பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ண மிடிக்கவேண்டு
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் றொண்டர் புறநிலாமே
குனிமின் றொழுமினெங் கோனெங்கூத்தன்
றேவியுந் தானுவந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.

ஒன்பதாவது

திருப்பொற் சுண்ணம்

ஆனந்த மனோலயம்.

தெய்வத் தாயர் துணை செய்க

195. முத்து நல் தாமம்,[1] பூமாலை, தூக்கி,
முளைக்குடம், தூபம், நல்தீபம், வைம்மின் !
சத்தியும், சோமியும், பார் – மகளும்,[2]
நா – மகளோடு[3] பல்லாண்டு இசைமின் !
சித்தியும், கௌரியும், பார்ப்பதியும்,
கங்கையும், வந்து, கவரி[4] கொள்மின் !
அத்தன், ஐயாறன், அம்மானைப் பாடி,
ஆட, பொற் சுண்ணம் இடித்தும், நாமே ! (1)

1 மாலை
2 பூமி தேவியும், நில மகளும்
3 சரஸ்வதியோடு; கலைமகளோடு
4 சாமரை

எல்லீரும் வம்மின்

196. பூ இயல் வார் சடை எம்பிராற்கு,
பொன் திருச் சுண்ணம் இடிக்க வேண்டும்,
மாவின் வடு வகிர்[5] அன்ன கண்ணீர் ![6]
வம்மின்கள், வந்து, உடன் பாடுமின்கள் ;
கூவுமின், தொண்டர் புறம் நிலாமே ;
குனிமின்,[7] தொழுமின் ; எம்கோன், எம் கூத்தன்,
தேவியும் தானும் வந்து, எம்மை ஆள,
செம்பொன் செய் சுண்ணம் இடித்தும், நாமே ! (2)

5 பிளவு
6 கணணையுடையவர்களே
7 ஆடுங்கள்

௩

௧௧௭. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
யிந்திரன் கற்பக நாட்டியெங்கு
மெழிற்சுடர் வைத்துக் கொடியெடுமி
னந்தரர் கோனயன் றன்பெருமா
ளாழியா னாதனல் வேலன்றாதை
யெந்தர மாளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ண மிடித்துநாமே.

௪

௧௧௮. காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலை
நேச முடைய வடியவர்க
ணின்று நிலாவுக வென்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

௫

௧௧௯. அறுகெடுப் பாரய னும்மரியு
மன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லா
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோஞ்
செறிவுடை மும்மதி லெய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

இடத்தைத் தூய்மை செய்வோம்

197. சுந்தர நீறு[1] அணிந்து, மெழுகி,
தூய பொன் சிந்தி, நிதிபரப்பி,
இந்திரன் கற்பகம் நாட்டி, எங்கும்
எழில்[2] சுடர் வைத்து, கொடி எடுமின் ;
அந்தரர் கோன், அயன்-தன் பெருமான்,
ஆழியான்[3] நாதன், நல்வேலன்[4] தாதை,
எம்தரம்[5] ஆள் உமையாள் கொழுநற்கு,
ஏய்ந்த[6] பொற் சுண்ணம் இடித்தும், நாமே! (3)

1 திருநீறு
2 அழகு
3 சக்கரப படையான்—திருமால
4 முருகன்
5 எம்மைப் போன்றவர்கள்
6 பொருந்திய

கருவிகளை அழகுபடுத்துவோம்

198. காசு[7] அணிமின்கள், உலக்கை எல்லாம் ;
காம்பு[8] அணிமின்கள், கறை உரலை ;
'நேசம் உடைய அடியவர்கள்
நின்று நிலாவுக' என்று வாழ்த்தி,
தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் கச்சித்
திரு ஏகம்பன் செம்பொன் கோயில்பாடி,
பாச வினையைப் பறித்து நின்று,
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (4)

7 மணிவடம்
8 பட்டாடை

தொண்டு செய்ய முந்துவோம்

199. அறுகு எடுப்பார் அயனும், அரியும் ;[9]
அன்றி, மற்று இந்திரனோடு, அமரர்,[10]
நறு முறு[11] தேவர் கணங்கள் எல்லாம்,
நம்மில்பின்பு அல்லது, எடுக்க ஒட்டோம் ;
செறிவு உடை மும்-மதில் எய்த வில்லி,
திரு ஏகம்பன், செம்-பொன் கோயில்பாடி,
முறுவல்[12] செவ் வாயினீர்! முக்கண் அப்பற்கு,
ஆட, பொற் சுண்ணம் இடித்தும் நாமே! (5)

9 திருமாலும்
10 தேவர்
11 முணு முணுக்கும்
12 நகை

சா

உ௰௰. உலக்கை பலவோச்சு வார்பெரிய
ருலகமெ லாமுரல் போதாதென்றே
கலக்க வடியவர் வந்துநின்ருர்
காண வுலகங்கள் போதாதென்றே
நலக்க வடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலேக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ண மிடித்துநாமே

எ

உ௰க. சூடகந் தோள்வளே யார்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை யார்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை யார்ப்பவார்ப்பப்
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கின னெங்கள் பராபரனுக்
காடக மாமலே யன்னகோவுக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

அ

உ௰உ. வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளே யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
யாட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

காண உலகங்கள் போதாது

200. உலக்கை பல ஓச்சுவார்[1] பெரியோர்,
உலகம் எலாம் உரல்போதாது என்றே;
கலக்க[2] அடியவர் வந்து நின்றார்,
காண உலகங்கள் போதாது என்றே;
நலக்க,[3] அடியோமை ஆண்டு கொண்டு
நாள் மலர்ப்[4] பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப் பாடி,
மகிழ்ந்து, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (6)

1 உயர்த்துவர்
2 நெருங்கி, கலந்து
3 நன்மை உண்டாக
4 அன்று அலர்ந்த மலர்

எங்கும் ஓரே ஆரவாரம்

201. சூடகம்,[5] தோள்வளை, ஆர்ப்ப-ஆர்ப்ப,[6]
தொண்டர்-குழாம்எழுந்து ஆர்ப்ப-ஆர்ப்ப,[7]
நாடவர் நம்-தம்மை ஆர்ப்ப-ஆர்ப்ப,[8]
நாமும் அவர்-தம்மை ஆர்ப்ப-ஆர்ப்ப,
பாடகம்[9] மெல்அடி ஆர்க்கும் மங்கை-
பங்கினன், எங்கள் பரா-பரனுக்கு,
ஆடக[10] மாமலை அன்ன கோவுக்கு
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (7)

5 கைவளை
6 ஒலி செய்ய
7 மகிழ்ந்து ஆரவாரம் செயய
8 எளனம செய்ய
9 மகளிர் காலணி
10 பொன்னுலியன்ற

ஆனந்தம் பொங்குகிறது

202. வாள்தடம்கண் மட மங்கை நல்லீர்!
வரிவளை ஆர்ப்ப, வண்கொங்கை பொங்க,
தோள்திரு முண்டம்[11] துதைந்து[12] இலங்க,
'சோத்தம்,[13] பிரான்!' என்று சொல்லிச்சொல்லி,
நாள்கொண்ட நாண்[14]மலர்ப் பாதம் காட்டி,
நாயின் கடைப்பட்ட நம்மை, இம்மை,
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப் பாடி,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (8)

11 திருநீற்றை மூன்று வரிகளாக நீரில குழைதது்ப் பூசிய குறி
12 படிநது
13 வணக்கம்
14 மலர்-நாண்; தாமரை மலரும் நாளும்

௯

உ௰௩. வையக மெல்லா முரலதாக
மாமேரு வென்னு முலக்கைநாட்டி
மெய்யெனு மஞ்ச ணிறையவட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொ னுலக்கைவ லக்கைபற்றி
ஐயன ணிதில்லை வாணனுக்கே
யாடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

௰

உ௰௪. முத்தணி கொங்கைக ளாடவாட
மொய்குழல் வண்டின மாடவாடச்
சித்தஞ் சிவனொடு மாடவாடச்
செங்கயற் கண்பனி யாடவாடப்
பித்தெம் பிரானொடு மாடவாடப்
பிறவி பிறரொடு மாடவாட
வத்தன் கருணையோ டாடவாட
வாடப்பொற் சுண்ண மிடித்து நாமே.

௧௧

உ௰௫. மாடு நகைவா ணிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமி னந்தம்மை யாண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமி னெம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
யாடுமி னம்பலத் தாடினுக்
காடப் பொற்சுண்ண மிடித்துநாமே.

மெய் எனும் மஞ்சளைப் பூசுவோம்

203. வையகம் எல்லாம் உரல்-அது ஆக.
மாமேரு என்னும் உலக்கை நாட்டி,
மெய்எனும் மஞ்சள் நிறைய அட்டி;[1]
மேதகு தென்னன், பெருந்துறையான்,
செய்ய திருவடி பாடிப் பாடி,
செம்-பொன் உலக்கை வலக்கை பற்றி,
ஐயன், அணி தில்லைவாணனுக்கே,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (9)

1 பூசி

எல்லாம் ஒரே ஆட்டம்-சித்தம் சிவனோடு ஆட

204. முத்து அணி கொங்கைகள் ஆட-ஆட,
மொய்[2] குழல்[3] வண்டுஇனம் ஆட-ஆட,
சித்தம் சிவனொடும் ஆட-ஆட,
செம்-கயல்[4] கண் பனி ஆட-ஆட,
பித்து எம்பிரானொடும் ஆட-ஆட
பிறவி பிறரொடும் ஆட-ஆட,
அத்தன் கருணையொடு ஆட-ஆட,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (10)

2 நெருங்கிய
3 கூந்தல்
4 செவ்வரிகளையுடைய கெண்டை மீன

தேடுவோம்-பாடுவோம்-ஆடுவோம்

205. மாடு,[5] நகைவாள்[6] நிலா எறிப்ப,
வாய் திறந்து அம்[7]பவளம் துடிப்ப,
பாடுமின், நம்-தம்மை ஆண்ட ஆறும்,
பணிகொண்ட வண்ணமும்; பாடிப் பாடித்
தேடுமின், எம் பெருமானை; தேடி,
சித்தம் களிப்ப, திகைத்து, தேறி,[8]
ஆடுமின்; அம்பலத்து ஆடினுனுக்கு,
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (11)

5 பக்கத்தில்
6 ஒளி
7 அழகிய
8 தெளிந்து

கஉ

உ௰௬. மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன் றன்னை
யையனை யையர்பி ரானைநம்மை
யகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யினை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குன்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

கங

உ௰௭. மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீ
ரென்னுடை யாரமு தெங்களப்ப
னெம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன்ம கன்றகப்பன்
றமையனெம் மையன் றாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

கச

உ௰அ. சங்கம ரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை யிரைப்ப வராவிரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கைபொங்கப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

மாணிக்கக் கூத்தன்

206. மை[1] அமர் கண்டனை, வான நாடர் — 1 கருமை
மருந்தினை, மாணிக்கக் கூத்தன்-தன்னை,
ஐயனை, ஐயர்பிரானை, நம்மை
அகப்படுத்து[2] ஆட்கொண்டு அருமைகாட்டும் — 2 உட்படுத்தி
பொய்யர்-தம் பொய்யினை, மெய்யர் மெய்மை ; — 3 மலர் போனற
போது[3] அரிக்[4] கண்-இணை, பொன்தொடித்தோள், — 4 செவ்வரி பரந்த
பை[5] அரவு[6] அல்குல், மடந்தை-நல்லீர்! — 5 படம்
பாடி; பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (12) — 6 பாம்பு, அரவு+பை

இது என்ன உறவு ?

207. மின்இடை, செம்துவர்[7] வாய், கரும்கண், — 7 பவளம்
வெள்-நகை, பண்அமர்மென்மொழியீர் !
என்னுடை ஆர் அமுது, எங்கள் அப்பன்,
எம்பெருமான், இமவான் மகட்குத்
தன்னுடைக் கேள்வன், மகன், தகப்பன்,
தமையன், எம்ஐயன் தாள்கள்பாடி,
பொன்னுடைப் பூண்முலை மங்கை–நல்லீர் !
பொன் திருச்சுண்ணம்இடித்தும், நாமே ! (13)

பொங்கிய காதல்

208. சங்கம்[8] அரற்ற,[9] சிலம்பு ஒலிப்ப, — 8 வளையல்; 9 ஒலிக்க
தாழ்குழல்[10] சூழ்தரும் மாலைஆட, — 10 நீண்ட கூந்தல்
செம்-கனிவாய் இதழும் துடிப்ப,
சேயிழையீர்[11] சிவலோகம்பாடி, — 11 அழகிய அணிகளை அணிந்தவாகளே — பெணகளே
கங்கை இரைப்ப[12] அராஇரைக்கும்[13] — 12 ஒலி செய்ய; 13 பெருமூச்சுவிடும்
கற்றைச் சடைமுடியான் கழற்கே,
பொங்கியகாதலின் கொங்கை பொங்க,
பொன்திருச்சுண்ணம்இடித்தும், நாமே ! (14)

கரு

உ௰கூ. ஞானக் கரும்பின் றெளியைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை யாயினானைச்
சித்தம்பு குந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானற் றடங்கண்ம டந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ண மிடித்துநாமே.

கசா

உக௰. ஆவகை நாமும்வந்தன் பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேற்
றேவர்க ளுவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவல னேந்தியவெல் கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவக னுமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ண மிடித்துநாமே.

கஎ

உகக. தேனக மாமலர்க் கொன்றை பாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடை மேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடிவ லக்கையேந்து
மூனக மாமழுச் சூலம்பாடி
யும்பரு மிம்பரு முய்யவன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ண மிடித்துநாமே.

சித்தம் புகுந்த இனிமை

209. ஞானக் கரும்பின் தெளியை, பாகை,
நாடற்கு அரிய நலத்தை, நந்தாத்[1]
தேனை, பழச் சுவை ஆயினானை,
சித்தம் புகுந்து தித்திக்க வல்ல
கோனை, பிறப்பு அறுத்து, ஆண்டுகொண்ட
கூத்தனை; நாதழும்பு ஏற வாழ்த்தி,
பானல்[2] தடம்[3] கண் மடந்தை-நல்லீர்!
பாடி, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (15)

1 சுவை குன்று
2 நீலமலர்—குவளை
3 அகன்ற

ஆட்கொண்ட வகையைப் பாடுவோம்

210. ஆவகை, நாமும் வந்து, அன்பர்-தம்மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடி, விண்மேல்
தேவர் கனாவிலும் கண்டு அறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும் செல்வச்
சே[4] வலன் ஏந்திய வெல்கொடியான்,
சிவபெருமான், புரம்[5] செற்ற[6] கொற்றச்[7]
சேவகன்,[8] நாமங்கள் பாடிப்பாடி,
செம்-பொன்செய் சுண்ணம் இடித்தும், நாமே! (16)

4 எருது—எருது உருவம் எழுதிய கொடி
5 முப்புரம்
6 அழித்த
7 வெற்றியுள்ள
8 வீரன்

சார்ந்தவற்றை எல்லாம் பாடுவோம்

211. தேன் அகம் மா மலர்க் கொன்றைபாடி,
சிவபுரம் பாடி, திருச்சடைமேல்
வான்-அகம் மா மதிப் பிள்ளை[9] பாடி,
மால்விடை[10]பாடி, வலக்கை ஏந்தும்
ஊன் அகம் மா மழு, சூலம், பாடி,
உம்பரும்[11] இம்பரும்[12] உய்ய, அன்று,
போனகம்[13] ஆக, நஞ்சு உண்டல் பாடி,
பொன்திருச் சுண்ணம் இடித்தும், நாமே! (17)

9 பிறைத்திங்கள்
10 ஊர்தியாகிய சிறந்த எருது
11 மேலுலகத்தார்
12 இவ்வுலகத்தார்
13 உணவு

கஅ

உகஉ. அயன்றலை கொண்டுசெண் டாடல்பாடி
யருக்க னெயிறுப றித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலா லுதைத்தல் பாடி
யியைந்தன முப்புர மெய்தல்பாடி
யேழை யடியோமை யாண்டு கொண்ட
நயந்தனைப் பாடிநின் றுடியாடி
நாதற்குச் சுண்ண மிடித்துநாமே.

கக

உகங. வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் றில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மே
லிட்டுநின் றுடு மரவம்பாடி
யீசற்குச் சுண்ண மிடித்துநாமே.

உ௦

உகச வேதமும் வேள்விய மாயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினருக்
காதியு மந்தமு மாயினருக்
காடப்பொற் சுண்ண மிடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்.

வெம்மையும் தண்மையும் பாடுவோம்

212. அயன் தலை கொண்டு-ஆடல்[1] பாடி,
அருக்கன்[2] எயிறு[3] பறித்தல் பாடி,
கயம்[4]—தனைக்கொன்று, உரி[5] போர்த்தல் பாடி,
காலனைக்[6] காலால் உதைத்தல் பாடி,
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி,
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயம்-தனைப் பாடி நின்று, ஆடி-ஆடி,
நாதற்கு,[7] சுண்ணம் இடித்தும், நாமே! (18)

1 பந்தாடுதல்—செண்டு
2 கதிரவன
3 பல
4 யானை
5 தோல
6 எமனை
7 தலைவனுக்கு

எங்கள் செல்வத்தைப் பாடுவோம்

213. வட்ட மலர்க் கொன்றை மாலை பாடி,
மத்தமும்[8] பாடி, மதியும் பாடி,
சிட்டர்கள்[9] வாழும் தென் தில்லை பாடி,
சிற்றம்பலத்து எங்கள் செல்வம் பாடி,
கட்டிய மாசுணக்[10] கச்சை[11] பாடி,
கங்கணம் பாடி, கவித்த கைம்மேல்
இட்டு நின்று ஆடும் அரவம்[12] பாடி,
ஈசற்கு, சுண்ணம் இடித்தும், நாமே! (19)

8 ஊமத்தமலரும
9 நலலொழுககம் உடையவர்கள்
10 பாம்பாலியன்ற
11 அரைக்கச்சை
12 பாம்பு

வேறுபாடு ஏது?

214. வேதமும், வேள்வியும்[13] ஆயினார்க்கு;
மெய்ம்மையும், பொய்ம்மையும், ஆயினார்க்கு;
சோதியும் ஆய், இருள் ஆயினார்க்கு;
துன்பமும் ஆய், இன்பம் ஆயினார்க்கு;
பாதியும் ஆய், முற்றும் ஆயினார்க்கு;
பந்தமும்[14] ஆய், வீடும் ஆயினாருக்கு;
ஆதியும், அந்தமும், ஆயினாருக்கு;
ஆட, பொற்சுண்ணம் இடித்தும், நாமே! (20)

13 யாகமும்
14 பிணிப்பும்

திருச்சிற்றம்பலம்

பத்தாவது

திருக்கோத்தும்பி

சிவனோடைக்கியம்

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

(நாலடித் தரவுகொச்சகக் கலிப்பா)

க

உகரு. பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த
நாவேறு செல்வியு நாரணனு நான்மறையு
மாவேறு சோதியும் வானவருந் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

உ

உகசா. நானாரென் னுள்ளமார் ஞானங்க ளாரென்னை யாரறிவார்
வானோர் பிரானென்னை யாண்டிலனேல் மதிமயங்கி
யூனா ருடைதலையி லுண்பலிதே ரம்பலவன்
றேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

ங

உகஎ. தினைத்தனை யுள்ளதோர் பூவினிற் றேனுண்ணாதே
நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போது
மனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியுங்
குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

பத்தாவது

திருக்கோத்தும்பீ

சிவனோடு ஐக்கியம்

அறியாப் பெரியோன்

215. பூ ஏறு கோனும்,[1] புரந்தரனும்,[2] பொற்பு[3] அமைந்த
நா ஏறு செல்வியும்,[4] நாரணனும், நான்மறையும்,
மா[5] ஏறு சோதியும்,[6] வானவரும், தாம் அறியாச்
சே[7] ஏறு சேவடிக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (1)

1 பிரமனும்
2 இந்திரனும்
3 அழகு
4 கலைமகளும்
5 பெருமை
6 சுடர்களும்-கதிரவனும் [திங்களும்
7 எருது

ஆண்டிலனேல் நான் யார்?

216. நான் ஆர்? என் உள்ளம் ஆர்? ஞானங்கள் ஆர்? என்னை யார் அறிவார்
வானோர்பிரான் என்னை ஆண்டிலனேல்? மதிமயங்கி
ஊன் ஆர் உடை தலையில்[8] உண் பலி[9] தேர் அம்பலவன்
தேன் ஆர் கமலமே[10]-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (2)

8 உடைந்த தலை ஓட்டில்
9 உண்ணுவதற்கான பிச்சை
10 தாமரையே-திருவடி மலரையே

ஓய்விலா ஆனந்தம்

217. தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே,
நினைத்தொறும், காண்தொறும், பேசும்தோறும், எப்போதும்,
அனைத்து எலும்பு உள்நெக, ஆனந்தத்தேன் சொரியும்
குனிப்பு[11] உடையானுக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (3)

11 கூத்து

ச

உகஅ. கண்ணப்ப ளொப்பதோ ரன்பின்மை கண்டபி
னென்னப்ப னென்னொப்பி லென்னையுமாட் கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

ரு

உகக. அத்தேவர் தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேது மில்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

சா

உஉ௰. வைத்தநிதி பெண்டீர் மக்கள்குலங் கல்வியென்னும்
பித்த வுலகிற் பிறப்போ டிறப்பென்னுஞ்
சித்த விகாரக் கலக்கந் தெளிவித்த
வித்தகத் தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

எ

உஉக. சட்டோ நினைக்க மனத்தமுதாஞ் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
யொட்டாத பாவித் தொழும்பரைநா முருவறியோஞ்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

அ

உஉஉ. ஒன்றாய் முளைத்தெழுந் தெத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை யேற்றுவித்த
வென்றாதை தாதைக்கு மெம்மனைக்குந் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கண்ணப்பன் எங்கே நான் எங்கே

218. கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின்,
என் அப்பன், என் ஒப்பு இல் என்னையும் ஆட்கொண்டருளி,
வண்ணப் பணித்து,[1] என்னை 'வா' என்ற வான் கருணைச்
சுண்ணப்[2]பொன் நீற்றற்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (4)

[1] நலமுற என் ஆணவத்தைக் குறைத்து
[2] பொடியாக வுள்ள

பற்றற்றார் பற்று

219. 'அத்தேவர் தேவர்; அவர் தேவர்;' என்று, இங்ஙன்,
பொய்த்தேவு பேசி, புலம்புகின்ற பூதலத்தே,
பத்து[3] ஏதும் இல்லா, என் பற்று அற, நான் பற்றி நின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (5)

[3] பற்று

சித்தம் தெளிந்தேன்

220. வைத்த நிதி,[4] பெண்டிர், மக்கள், குலம், கல்வி, என்னும்
பித்த உலகில், பிறப்போடு இறப்பு, என்னும்
சித்த விகாரக் [5]கலக்கம் தெளிவித்த
வித்தகத்[6]தேவற்கே-சென்று-ஊதாய்; கோத்தும்பீ! (6)

[4] பொருள்
[5] உள்ளத்தில் தோன்றும் வேறுபாட்டின்
[6] ஞானமயமான

மனத்து அமுதை மறப்பேனோ?

221. சட்டோ[7] நினைக்க, மனத்து அமுது ஆம் சங்கரனை,
கெட்டேன், மறப்பேனோ? கேடுபடாத் திருவடியை
ஒட்டாத[8]பாவித் தொழும்பரை நாம் உரு அறியோம்;
சிட்டாய[9]சிட்டற்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (7)

[7] சற்றே
[8] சேராத
[9] மேன்மையாகிய

222. ஒன்று ஆய், முளைத்து, எழுந்து, எத்தனையோ கவடு[10]விட்டு,
நன்று ஆக வைத்து, என்னை நாய் சிவிகை[11]ஏற்று வித்த
என் தாதை; தாதைக்கும், எம் அனைக்கும், தம்பெருமான்!
குன்றாத செல்வற்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (8)

[10] கிளை
[11] பல்லக்கு

௯

உ௨௩. கரணங்க ளெல்லாங் கடந்துநின்ற கறைமிடற்றன்
சரணங்க ளேசென்று சார்தலுமே தானெனக்கு
மரணம் பிறப்பென் றிவையிரண் டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

௰

உ௨௪. நோயுற்று மூத்துநா னுந்துகன்றா யிங்கிருந்து
நாயுற்ற செல்வ நயந்தறியா வண்ணமெல்லாந்
தாயுற்று வந்தென்னை யாண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

௧௧

உ௨௫. வன்னெஞ்சக் கள்வன் மனவலியை னென்னாதே
கன்னெஞ் சுருக்கிக் கருணையினா லாண்டுகொண்ட
வன்னந் திளைக்கு மணிதில்லை யம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

௧௨

உ௨௬. நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேது மில்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான வீசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

௧௩

உ௨௭. நான்றனக் கன்பின்மை நானுந்தா னும்மறிவோந்
தானென்னை யாட்கொண்ட தெல்லாருந் தாமறிவா
ரான கருணையு மங்குற்றே தானவனே
கோனென்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

இறப்பு ஏது? பிறப்பு ஏது?

223. கரணங்கள்[1] எல்லாம் கடந்துநின்ற கறை-மிடற்றன்
சரணங்களே[2] சென்று சார்தலுமே, தான் எனக்கு
மரணம், பிறப்பு, என்று, இவை இரண்டின் மயக்கு அறுத்த
கருணைக் கடலுக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பி! (9)

1 அகக்கரணம் புறக்கரணம்
2 திருவடிகளே

நடவாக் கன்றின் தாய்

224. நோய்உற்று, மூத்து, நான் நுந்து[3] கன்றாய் இங்குஇருந்து,
நாய்உற்ற செல்வம் நயந்து அறியாவண்ணம் எல்லாம்,
தாய்உற்று வந்து என்னை ஆண்டுகொண்ட தன் கருணைத்
தேய்[4] உற்ற செல்வற்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (10)

3 மெலிந்து நடக்க வியலாமல் தள்ளிக் கொண்டு போகக்கூடிய
4 ஒளி

கல் நெஞ்சு உருக்கிய கருணை

225. 'வல்நெஞ்சக் கள்வன், மனவலியன்,' என்னாதே
கல்நெஞ்சு உருக்கி, கருணையினால் ஆண்டுகொண்ட,
அன்னம் திளைக்கும் அணி தில்லைஅம்பலவன்
பொன் அம் கழலுக்கே-சென்றுஊதாய்; கோத்தும்பீ! (11)

பிழை பொறுக்கும் பெருமை

226. நாயேனைத் தன்அடிகள் பாடுவித்த நாயகனை,
பேயேனது உள்ளப்பிழை பொறுக்கும் பெருமையனை,
'சீ'ஏதும் இல்லாது என் செய்பணிகள் கொண்டருளும்
தாய்ஆன ஈசற்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (12)

இருவரே அறிந்ததும் உலகமெல்லாம் அறிந்ததும்

227. நான்தனக்கு அன்புஇன்மை நானும், தானும், அறிவோம்;
தான்என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாம்அறிவார்;
ஆன கருணையும் அங்குஉற்றே-தான்; அவனே
கோன் என்னைக்கூட-குளிர்ந்து ஊதாய்; கோத்தும்பீ! (13)

கச

உஉஅ. கருவா யுலகினுக் கப்புறமா யிப்புறத்தே
மருவார் மலர்க்குழன் மாதினொடும் வந்தருளி
யருவாய் மறைபயி லந்தணனா யாண்டுகொண்ட
திருவான தேவற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கரு

உஉக. நானுமென் சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந்
தானுந்தன் றையலுந் தாழ்சடையா னுண்டிலனேல்
வானுந் திசைகளு மாகடலு மாயபிரான்
றேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கசு

உ௩௰. உள்ளப் படாத திருவுருவை யுள்ளுதலுங்
கள்ளப்படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரானெம் பிரானென்னை வேறேயாட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கஎ

உ௩க. பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறு
மெய்யாக் கருதிக் கிடந்தேனை யாட்கொண்ட
வையாவென் னுருயிரே யம்பலவா வென்றவன்றன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

கஅ

உ௩உ. தோலுந் துகிலுங் குழையுஞ் சுருடோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

அப்புறமும் இப்புறமும்

228. கரு[1] ஆய், உலகினுக்கு அப்புறம் ஆய், இப் புறத்தே
மரு[2] ஆர் மலர்க் குழல்[3] மாதினொடும் வந்தருளி,
அரு ஆய், மறை பயில் அந்தணன் ஆய், ஆண்டு கொண்ட
திரு ஆன தேவற்கே-சென்று ஊதாய் ; கோத்தும்பீ ! (14)

1 பிறப்பிடமாய்
2 மணம்
3 கூந்தல்

தேன் உந்து சேவடி

229. நானும், என் சிந்தையும், நாயகனுக்கு எவ் இடத்தோம்-
தானும், தன் தையலும்,[4] தாழ் சடையோன் ஆண்டிலனேல்?
வானும், திசைகளும், மா கடலும், ஆய பிரான்
தேன் உந்து சேவடிக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (15)

4 கட்டழகுவாய்ந்த பெண்—உமையம்மை

வான் கருணை

230. உள்ளப்படாத[5] திருஉருவை உள்ளுதலும்,
கள்ளப்படாத களிவந்த வான் கருணை
வெள்ளப் பிரான், எம்பிரான், என்னை வேறே ஆட்-
கொள் அப் பிரானுக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ! (16)

5 எண்ணத்திற்கு அடங்காத

என் ஆருயிர்

231. பொய் ஆய செல்வத்தே புக்கு, அழுந்தி, நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை, ஆட்கொண்ட,
ஐயா! என் ஆர் உயிரே! அம்பலவா![6] என்று, அவன்-தன்
செய்[7] ஆர் மலர் அடிக்கே-சென்று ஊதாய் கோத்தும்பீ! (17)

6 அம்பலத்தில் ஆடுகின்றவனே
7 செம்மை

பழங்கோலம்

232. தோலும், துகிலும்; குழையும், சுருள் தோடும்;
பால் வெள்ளை நீறும், பசும் சாந்தும்; பைங் கிளியும்,
சூலமும்; தொக்க வளையும்; உடைத் தொன்மைக்
கோலமே நோக்கி-குளிர்ந்து ஊதாய்; கோத்தும்பீ ! (18)

௧௯

உ௩௩. கள்ளன் கடியன் கலதியிவ னென்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தா னென்மனத்தே
உள்ளத் துறுதுய ரொன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளுங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

௨௰

உ௩௪. பூமேலை யனோடு மாலும் புகலரிதென்
றேமாறி நிற்க வடியே னிறுமாக்க
நாய்மேற் றவிசிட்டு நன்றாய்ப் பொருட்படுத்த
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்

இகழாது வந்தான்

233. 'கள்ளன், கடியன், கலதி,[1] இவன்' என்னாதே,
வள்ளல், வரவர வந்து ஒழிந்தான் என் மனத்தே
உள்ளத்து உறு துயர், ஒன்று ஒழியாவண்ணம், எல்லாம்
தெள்ளும்[2] கழலுக்கே[3] -சென்று ஊதாய்; கோத்தும்பீ! (19)

1 தீயவன்
2 தெளிவாகும்-தெளியும்
3 கழல்அணிந்த திருவடி.

இறுமாந்தேன்

234. பூ மேல் அயனோடு மாலும் "புகல் அரிது" என்று
ஏமாறி[4] நிற்க, அடியேன் இறுமாக்க,[5]
நாய் மேல் தவிசு[6] இட்டு, நன்றாய்ப் பொருட்படுத்த
தீ மேனியானுக்கே-சென்று ஊதாய்; கோத்தும்பீ!(20)

4 மனம் கலங்கி
5 களிப்படைய
6 யானைமேல இடும் மெல் லணை, அம்பாரி

திருச்சிற்றம்பலம்.

பதினொன்றாவது

திருத்தெள்ளேணம்

சிவனோடடைவு

(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

க

உருரு. திருமாலும் பன்றியாய்ச் சென்றுணராத் திருவடியை
யுருநாமறியவோ ரந்தணனா யாண்டு கொண்டா
னொருநாம மோருருவ மொன்றுமில்லாற் காயிரந்
திருநாமம் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

உ

உருசா. திருவார் பெருந்துறை மேயபிரா னென்பிறவிக்
கருவே ரறுத்தபின் யாவரையுங் கண்டதில்லை
யருவா யுருவமு மாயபிரா னவன்மருவுந்
திருவாரூர் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

ந

உருஎ. அரிக்கும் பிரமற்கு மல்லாத தேவர்கட்குந்
தெரிக்கும் படித்தன்றி நின்ற சிவம் வந்துநம்மை
யுருக்கும் பணிகொள்ளு மென்பதுகேட் டுலகமெல்லாஞ்
சிரிக்குந் திறம்பாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

பதினொன்றுவது

திருத்தெள்ளேணம்

சிவனோடு அடைவு

பேராயிரமுடைய பெருமான்

235. திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை,
உரு நாம் அறிய, ஓர் அந்தணன் ஆய், ஆண்டுகொண்டான்;
ஒரு நாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடி, நாம்-தெள்ளேணம் கொட்டாமோ! (1)

பிறவி ஒழித்தான்

236. திரு ஆர் பெருந்துறை மேய பிரான் என் பிறவிக்
கரு[1] வேர் அறுத்தபின், யாவரையும் கண்டது இல்லை;
அரு ஆய், உருவமும்-ஆய பிரான், அவன் மருவும்[2]
திருவாரூர் பாடி, நாம்-தெள்ளேணம் கொட்டாமோ! (2)

1 மூலம்
2 விரும்பி உறையும்

நம்மை உருக்கும் சிவம்

237. அரிக்கும், பிரமற்கும், அல்லாத தேவர்கட்கும்,
தெரிக்கும் படித்து அன்றி நின்ற சிவம், வந்து, நம்மை
உருக்கும், பணிகொள்ளும், என்பது கேட்டு, உலகம் எல்லாம்
சிரிக்கும் திறம் பாடி-தெள்ளேணம் கொட்டாமோ! (3)

௪

உ௩அ. அவமாய தேவ ரவகதியி லழுந்தாமே
பவமாயங் காத்தென்னை யாண்டுகொண்ட பரஞ்சோதி
நவமாய செஞ்சுடர் நல்குதலு நாமொழிந்து
சிவமான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௫

உ௩௯. அருமந்த தேவ ரயன்றிருமாற் கரியசிவ
முருவந்து பூதலத்தோ ருகப்பெய்தக் கொண்டருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்தென் னுளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௬

உ௪0. அரையாடு நாக மசைத்தபிரா னவனியின்மேல்
வரையாடு மங்கைதன் பங்கொடும்வந் தாண்டதிற
முரையாட வுள்ளொளியாட வொண்மாமலர்க் கண்களினீர்
திரையாடு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௭

உ௪க. ஆவா வரியயனிந் திரன்வானோர்க் கரியசிவன்
வாவாவென் றென்னையும் பூதலத்தேவலித் தாண்டுகொண்டான்
பூவா ரடிச்சுவ டென்றலைமேற் பொறித்தலுமே
தேவான வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௮

உ௪உ. கறங்கோலை போல்வதோர் காயப்பிறப் போ டிறப்பென்னு
மறம்பாவ மென்றிரண் டச்சந் தவிர்த்தென்னை யாண்டுகொண்டான்
மறந்தேயுந் தன்கழலுன் மறவாவண்ணா நல்கியவத்
திறம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

புது ஒளி

238. அவம்[1] ஆய தேவர் அவ கதியில் அழுந்தாமே 1 பயனற்றத
பவ-மாயம்[2] காத்து, என்னை ஆண்டுகொண்ட பரஞ்சோதி 2 பிறவியாகிய மாயை
நவம்[3] ஆய செம்-சுடர் நல்குதலும், நாம் ஒழிந்து, 3 புதிது
சிவம் ஆன வா பாடி-தெள்ளேணம் கொட்டாமோ! (4)

உளம் புகுந்த திரு

239. அருமந்த[4] தேவர், அயன், திருமாற்கு, அரிய சிவம் 4 அருமருந்து அன்ன
உருவந்து, பூதலத்தோர் உகப்பு[5] எய்த, கொண்டருளி, 5 பெருமகிழ்ச்சி
கரு[6] வெந்து வீழக் கடைக்கணித்து,[7] என் உளம் புகுந்த 6 பிறவிக்கு மூலம்
திரு[8] வந்தவா பாடி-தெள்ளேணம் கொட்டாமோ! (5) 7 கடைக்கண்ணால் நோக்கி-அருள் செய்து
8 அருட்செல்வம்

ஆனந்தக்கண்ணீர்

240. அரை ஆடு[9] நாகம் அசைத்த[10]பிரான், அவனி[11]யின்மேல், 9 ஆடுகின்ற
வரை[12]ஆடு மங்கை[13]-தன் பங்கொடும், வந்து, ஆண்ட திறம் 10 கட்டிய
உரை ஆட, உள் ஒளி ஆட, ஒள்-மா-மலர்க் கண்களில்நீர் 11 பூமி, நிலவுலகம்,
திரை[14]ஆடுமா பாடி-தெள்ளேணம் கொட்டாமோ! (6) 12 மலை
13 உமையம்மை
14 அலை

வலிந்து ஆண்டு கொண்டான்

241. ஆ! ஆ! அரி,[15] அயன், இந்திரன், வானோர்க்கு, அரிய சிவன், 15 திருமால்
'வா, வா' என்று என்னையும் பூதலத்தே வலிந்து ஆண்டுகொண்டான்;
பூ ஆர் அடிச் சுவடு என் தலைமேல் பொறித்தலுமே,[16] 16 பதித்தலுமே
தே ஆன வா பாடி-தெள்ளேணம் கொட்டாமோ! (7)

மறந்தும் மறவேன்

242. கறங்கு[17] ஓலை போல்வது ஓர் காயப் பிறப்போடு இறப்பு என்னும் 17 சுழலும்
அறம், பாவம், என்று இரண்டு அச்சம் தவிர்த்து, என்னை ஆண்டு
மறந்தேயும் தன் கழல் நான் மறவாவண்ணம் நல்கிய, அத் [கொண்டான்
திறம் பாடல் பாடி, நாம்-தெள்ளேணம் கொட்டாமோ! (8)

௯

உ௪௩. கன்ஞ ருரித்தென்ன வென்னையுந்தன் கருணையினல்
பொன்ஞர் கழல்பணித் தாண்டபிரான் புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய் வெண்ணகையீர்
தென்ஞ தென்ஞவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

௰

உ௪௪. கனவேயுந் தேவர்கள் காண்பரிய கனைகழலோன்
புனவே யனவளைத் தோளியொடும் புகுந்தருளி
நனவே யெனைப்பிடித் தாட்கொண்டவா நயந்து நெஞ்சஞ்
சினவேற்க ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

௧௧

உ௪௫. கயன்மாண்ட கண்ணிதன் பங்கனெனைக்கலந் தாண்டலுமே
யயன்மாண் டருவினைச் சுற்றமுமாண் டவனியின்மேன்
மயன்மாண்டு மற்றுள்ள வாசகமாண் டென்னுடைய
செயன்மாண்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௧௨

உ௪௬. முத்திக் குழன்று முனிவர்குழா நனிவாட
வத்திக் கருளி யடியேனை யாண்டுகொண்டு
பத்திக் கடலுட் பதித்த பரஞ்சோதி
தித்திக்கு மாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

௧௩

உ௪௭. பார்பாடும் பாதாளர் பாடும்விண்ணேர் தம்பாடு
மார்பாடுஞ் சாரா வழியருளி யாண்டுகொண்ட
நேர்பாடல் பாடி நினைப்பரிய தனிப்பெரியோன்
சீர்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

கல்லில் நார் உரித்தான்

243\. கல் நார் உரித்து என்ன, என்னையும் தன் கருணையினால்
பொன்-ஆர் கழல் பணித்து,[1] ஆண்ட பிரான் புகழ் பாடி,
மின் நேர்[2] நுடங்கு[3] இடை, செம்-துவர்[4] வாய், வெள்நகையீர்!
'தென்னா, தென்னா' என்று-தெள்ளேணம் கொட்டாமோ! (9)

1 பணியச் செய்து
2 ஒத்த
3 துவளுகின்ற
4 பவளம்

கனவு அல்ல

244\. கனவேயும் தேவர்கள் காண்பு-அரிய கனை[5] கழலோன்
புன-வேய்[6] அன வளைத் தோளியொடும் புகுந்தருளி,
நனவே[7] எனைப் பிடித்து, ஆட்கொண்டவா நயந்து, நெஞ்சம்,
சின-வேல்-கண் நீர் மல்க—தெள்ளேணம் கொட்டாமோ! (10)

5 ஒலிக்கின்ற
6 காட்டு மூங்கில்
7 விழித்திருக்கும் போதே

மயல் மாண்டது

245\. கயல்[8] மாண்ட[9] கண்ணி-தன் பங்கன்[10] எனைக் கலந்து ஆண்டலுமே,
அயல் மாண்டு,[11] அருவினைச் சுற்றமும் மாண்டு, அவனியின்[12] மேல்
மயல்[13] மாண்டு, மற்று உள்ள வாசகம் மாண்டு, என்னுடைய
செயல் மாண்டவா[14] பாடி—தெள்ளேணம் கொட்டாமே! (11)

8 சேல் மீன்
9 மாட்சிமையுடைய
10 சிவபெருமான்
11 ஒழிந்து
12 உலகம்
13 மயக்கம்
14 சிறப்புற்றவாறு

தித்திக்கும் பத்திக் கடல்

246\. முத்திக்கு[15] உழன்று முனிவர் குழாம் நனி வாட,
அத்திக்கு[16] அருளி; அடியேனை ஆண்டு கொண்டு,
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி,
தித்திக்குமா பாடி—தெள்ளேணம் கொட்டாமோ! (12)

15 வீட்டின்பப் பேற்றுக்கு
16 யானைக்கு

தன் அடிக்கே ஆளாக்கினான்

247\. பார்[17] பாடும், பாதாளர்[18] பாடும், விண்ணோர்[19]-தம் பாடும்,
ஆர் பாடும், சாரா வழி அருளி, ஆண்டு கொண்ட
நேர் பாடல் பாடி, நினைப்பு-அரிய தனிப் பெரியோன்
சீர் பாடல் பாடி, நாம்-தெள்ளேணம் கொட்டாமோ! (13)

17 உலகம்-உலகத்தவர்
18 கீழுலகத்தார்
19 வானுலகத்தார்

கச

உசஅ. மாலே பிரமனே மற்றொழிந்த தேவர்களே
நூலே நுழைவரிய நுண்ணியனாய் வந்தடியேன்
பாலே புகுந்து பரிந்துருக்கும் பாவகத்தாற்
சேலேர்கண் ணீர்மல்கத் தெள்ளேணங் கொட்டாமோ.

கரு

உசகூ. உருகிப் பெருகி யுளங்குளிர முகந்துகொண்டு
பருகற் கினிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்தடியோம்
திருவைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

கசா

உருய. புத்தன் புரந்தராதிய வயன்மால் போற்றிசெயும்
பித்தன் பெருந்துறை மேயபிரான் பிறப்பறுத்த
வத்த னணிதில்லை யம்பலவ னருட்கழல்கள்
சித்தம் புகுந்தவா தெள்ளேணங் கொட்டாமோ.

கஎ

உருக. உவலைச் சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க் கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைக டந்தருளுஞ்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

கஅ

உருஉ. வான்கெட்டு மாருதமாய்ந் தழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட்டெ னுள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ.

நுண்ணியனாய் வந்தான்

248. மாலே, பிரமனே, மற்று ஒழிந்த தேவர்களே,
நூலே, நுழைவு-அரிய நுண்ணியன் ஆய் வந்து, அடியேன்-
பாலே புகுந்து, பரிந்து[1] உருக்கும் பாவகத்தால்,[2]
சேல்[3]-ஏர்[4]-கண் நீர் மல்க—தெள்ளேணம் கொட்டாமோ! (14)

1 கருணைகொண்டு
2 இயல்பினால்
3 கெண்டை மீன்
4 பெருமை மிக்க

பருகற்கு இனிய கருணை

249. உருகிப் பெருகி, உளம் குளிர முகந்து கொண்டு,
பருகற்கு இனிய பரம்[5] கருணைத் தடம் கடலை
மருவி,[6] திகழ் தென்னன் வார் கழலே[7] நினைந்து, அடியோம்
திருவைப்[8] பரவி, நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! (15)

5 மேலான
6 சேர்ந்து
7 திருவடியையே
8 அருட் செல்வத்தை

என்றும் புதியவன்

250. புத்தன்;[9] புரந்தர-ஆதிய[10] அயன் மால் போற்றி செயும்
பித்தன்; பெருந்துறை மேய பிரான்; பிறப்பு அறுத்த
அத்தன்; அணி தில்லை அம்பலவன்; அருள்-கழல்கள்
சித்தம் புகுந்தவா—தெள்ளேணம் கொட்டாமோ! (16)

9 புதியவன
10 இந்திரன் முதலிய

தடுமாற்றம் தவிர்ந்தது

251. உவலைச்[11] சமயங்கள், ஒவ்வாத சாத்திரம், ஆம்
சவலைக்[12] கடல் உளனாய்க் கிடந்து, தடுமாறும்
கவலைக் கெடுத்து, கழல்-இணைகள் தந்தருளும்
செயலைப் பரவி, நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! (17)

11 இழிந்த
12 உள்ளத்தைக் கலக்கும்

எல்லாம் அவன் அடியில் ஒடுங்கியது

252. வான் கெட்டு, மாருதம்[13] மாய்ந்து, அழல், நீர், மண், கெடினும்,
தான் கெட்டல் இன்றி, சலிப்பு அறியாத் தன்மையனுக்கு,
ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய்
நான்[14] கெட்டவா பாடி—தெள்ளேணம் கொட்டாமோ! (18)

13 காற்று
14 நான என்னும் முனைப்பு

கக

உ௫௩. விண்ணோர் முழுமுதல் பாதாளத்தார் வித்து
மண்ணோர் மருந்தயன் மாலுடைய வைப்படியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னாதென் னாவென்று தெள்ளேணங் கொட்டாமோ.

உய

உ௫௪. குலம்பாடிக் கொக்கிற கும்பாடிக் கோல்வளையா
ளலம்பாடி நஞ்சுண்ட வாபாடி நாடோறு
மலம்பார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
சிலம்பாடல் பாடிநாந் தெள்ளேணங் கொட்டாமோ.

திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாவது

திருச்சாழல்

சிவனுடைய காருணியம்

(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

க

உ௫௫. பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதுந் திருவாயான் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
யீசனவ னெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

உ

உ௫௬. என்னப்ப னெம்பிரா னெல்லார்க்குந் தானீசன்
றுன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது வென்னேடீ
மன்னுகலை துன்னுபொருண் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ.

கண்ணார வந்து நின்றான்

253. விண்ணோர் முழு-முதல்; பாதாளத்தார்[1] வித்து;
மண்ணோர் மருந்து; அயன், மால், உடைய வைப்பு; அடியோம்
கண்-ஆர, வந்து நின்றான்; கருணைக் கழல் பாடி,
'தென்னா, தென்னா' என்று—தெள்ளேணம் கொட்டாமோ! (19)

1 கீழுலகத்தார்

அவன் ஆடலைப் பாடுவோம்

254. குலம்[2] பாடி, கொக்கு-இறகும்[3] பாடி, கோல் வளையாள்[4]
நலம் பாடி, நஞ்சு உண்டவா பாடி, நாள் தோறும்
அலம்பு[5] ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்பு[6] ஆடல் பாடி, நாம்—தெள்ளேணம் கொட்டாமோ! (20)

2 மேன்மை
3 சிவபெருமான் சூடியுள்ள கொக்கு இறகு
4 திரண்ட வளையலணிந்தவள்—உமையம்மை
5 ஒலி
6 திருவடிச்சிலம்பு

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாவது

திருச்சாழல்

சிவனுடைய காருணியம்

எல்லா உயிர்க்கும் இயல்பு ஆனான்

255. பூசுவதும் வெள்-நீறு, பூண்பதுவும் பொங்கு அரவம்,
பேசுவதும் திருவாயால் மறை போலும்? காண், ஏடீ! —
பூசுவதும், பேசுவதும், பூண்பதுவும், கொண்டு என்னை?
ஈசன்-அவன், எவ் உயிர்க்கும் இயல்பு ஆனான்; சாழலோ! (1)

எல்லார்க்கும் ஈசன்

256. என் அப்பன், எம்பிரான், எல்லார்க்கும் தான் ஈசன்;
துன்னம்பெய்[7] கோவணமாக் கொள்ளும்-அது என்? ஏடீ! —
மன்னு கலை, துன்னு பொருள் மறை நான்கே, வான்சரடா,
தன்னையே கோவணமா, சாத்தினன், காண்; சாழலோ! (2)

7 தைக்கப்பட்ட

ரு

உருஎ. கோயில் சுடுகாடு கொல்புலித்தோ னல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்றனியன் காணேடீ
தாயுமிலி தந்தையிலி தான்றனிய னாயிடினும்
காயி லுலகனைத்துங் கற்பொடிகாண் சாழலோ.

சு

உருஅ. அயனை யனங்கனை யந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றே வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ.

ரு

உருகூ. தக்கனையு மெச்சனையுந் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதா னென்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்
கெச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ.

சா

உசுய. அலரவனு மாலவனு மறியாமே யழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதா னென்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனே லிருவருந்தஞ்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ.

எ

உசுக. மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது வென்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேற் றரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாஞ் சாழலோ.

தான் தனியன் : ஆனால்?

257. கோயில் சுடுகாடு, கொல் புலித் தோல் நல் ஆடை,
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் காண் ; ஏடீ! –
தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் ; ஆயிடினும்,
காயில்,[1] உலகு அனைத்தும் கல்-பொடி, காண் ; சாழலோ ! (3)

1 சினங்கொண்டால்

தண்டித்தால் வெற்றியே

258. அயனை, அனங்கனை,[2] அந்தகனை,[3] சந்திரனை,
வயனங்கள்[4] மாயா வடுச் செய்தான் ; காண், ஏடீ! –
நயனங்கள்[5] மூன்று உடைய நாயகனே தண்டித்தால்,
சயம்[6] அன்றோ வானவர்க்கு, தாழ்குழலாய்? சாழலோ ! (4)

2 காமனை
3 எமனை
4 பழிச்சொல்
5 கண்கள்
6 வெற்றி

மறக் கருணை

259. தக்கனையும், எச்சனையும்,[7] தலை அறுத்து, தேவர் கணம்
தொக்கன[8] வந்தவர்-தம்மைத் தொலைத்தது தான் என் ? ஏடீ! –
தொக்கன வந்தவர்-தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்து, அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினன், காண்; சாழலோ ! (5)

7 யாகம் செய்வோனையும்
8 திரண்டன

ஆணவம் ஒழித்த அழல்

260. அலரவனும்,[9] மாலவனும், அறியாமே, அழல் உரு ஆய்,
நிலம் முதல், கீழ் அண்டம் உற, நின்றது-தான் என் ? ஏடீ! –
நிலம் முதல், கீழ் அண்டம் உற, நின்றிலனேல், இருவரும் தம்
சலமுகத்தால்,[10] ஆங்காரம் தவிரார், காண் ; சாழலோ ! (6)

9 பிரமனும்
10 சீற்றங்காரணமாக

வெள்ளம் காத்த சடை

261. மலை-மகளை ஒரு பாகம் வைத்தலுமே, மற்று ஒருத்தி
சலமுகத்தால்,[11] அவன் சடையில் பாயும்-அது என் ? ஏடீ! –
சலமுகத்தால் அவன் சடையில் பாய்ந்திலளேல், தரணி[12] எல்லாம்
பிலமுகத்தே[13] புகப் பாய்ந்து, பெருங் கேடு ஆம் ; சாழலோ ! (7)

11 நீர் உருவாக
12 உலகம்
13 பாதாளத்திலே

அ

உசுஉ. கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
வாலால முண்டா னவன்சதுர்தா னென்னேடீ
யாலால முண்டிலனே லன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ.

கூ

உசுக. தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேற் பேதா யிருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவர்காண் சாழலோ.

கய

உசுச. தானந்த மில்லான் றனையடைந்த நாயேனை
யானந்த வெள்ளத் தழுந்துவித்தான் காணேடீ
யானந்த வெள்ளத் தழுந்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ.

கக

உசுரு. நங்காயி தென்னதவ நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ.

கஉ

உசுசு. கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
யானா லவனுக்கிங் காட்படுவா ராரேடீ
யானாலுங் கேளா யயனுந் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ.

உலகம் பிழைக்க உண்ட நஞ்சு

262. கோலாலம்[1] ஆகி, குரை[2] கடல்வாய், அன்று, எழுந்த
ஆலாலம்[3] உண்டான்; அவன் சதுர்[4]—தான் என்? ஏடீ!-
ஆலாலம் உண்டிலனேல், அன்று, அயன் மால் உள்ளிட்ட
மேல் ஆய தேவர் எல்லாம் வீடுவர்[5] காண்; சாழலோ! (8)

1 பெரிய ஆரவாரம் 2 ஒலிக்கின்ற 3 கொடிய நஞ்சு 4 ஆற்றல 5 ஒழிவர்

உலகம் வாழப் பெண் உகந்தான்

263. தென்பால் உகந்து[6] ஆடும் தில்லைச் சிற்றம்பலவன்
பெண்பால் உகந்தான்; பெரும் பித்தன் காண்; ஏடீ!-
பெண்பால் உகந்திலனேல், பேதாய்! இரு நிலத்தோர்
விண்பால் யோகு எய்தி வீடுவர் காண்; சாழலோ! (9)

6 விரும்பி

ஆனந்தவான் பொருள்

264. தான் அந்தம் இல்லான், தனை அடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்தான், காண்; ஏடீ!-
ஆனந்த வெள்ளத்து அழுந்துவித்த திருவடிகள்,
வான் உந்து[7] தேவர்கட்கு ஓர் வான்[8] பொருள், காண்; சாழலோ! (10)

7 செல்லும் 8 மேலான

இறுதியின் நினைவு

265. நங்காய்! இது என்ன தவம்? நரம்போடு எலும்பு அணிந்து, (11)
கங்காளம்[9] தோள்மேலே காதலித்தான் காண்; ஏடீ!-
கங்காளம் ஆமா கேள்; கால-அந்தரத்து[10] இருவர்[11]
தம் காலம்[12] செய்யத்[13] தரித்தனன் காண்; சாழலோ!

9 எலும்புக்கூடு 10 எல்லையில் 11 திருமாலும் பிரமனும் 12 வாழ்நாள் 13 முடிவு செய்ய

ஆட்படுவார் யார்?—வழியடியாரைப் பார்

266. கான் ஆர் புலித் தோல், உடை; தலை, ஊண்;[14] காடு, பதி;
ஆனால், அவனுக்கு இங்கு ஆட்படுவார் ஆர்? ஏடீ!-
ஆனாலும், கேளாய்; அயனும், திருமாலும்,
வான் நாடர் கோவும், வழி அடியார்; சாழலோ! (12)

14 உண்ணும் கலம்

கங

உசுஎ. மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை
யுலகறியத் தீவேட்டா னென்னுமது வென்னேடீ
யுலகறியத் தீவேளா தொழிந்தனனே லுலகனைத்துங்
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண் சாழலோ.

கச

உசுஅ. தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
றான்புக்கு நட்டம் பயிலுமது வென்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேற் றரணியெல்லா
மூன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ.

கரு

உசுகூ. கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேறாதே
யிடபமுகந் தேறியவா றெனக்கறிய வியம்பேடீ
தடமதில்க ளவைமூன்றுந் தழலெரித்த வந்நாளி
லிடபமதாய்த் தாங்கினான் றிருமால்காண் சாழலோ

கசு

உஎ0. நன்றாக நால்வர்க்கு நான்மறையி னுட்பொருளை
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
யன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தா னாயிடினுங்
கொன்றான்காண் புரமூன்றுங் கூட்டோடே சாழலோ.

கஎ

உஎக. அம்பலத்தே கூத்தாடி யமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையுந் தேவனென்று நண்ணுமது வென்னேடீ
நம்பனையு மாமாகே ளான்மறைக டாமறியா
வெம்பெருமா னீசாவென் றேத்தினகாண் சாழலோ.

கலைமணம் காத்த திருமணம்

267. மலை அரையன் பொன் பாவை, வாள்-நுதலாள், பெண் திருவை[1]
உலகு அறிய, தீ-வேட்டான்[2] என்னும்-அது என்? ஏடீ!-
உலகு அறிய, தீ வேளாது ஒழிந்தனனேல், உலகு அனைத்தும்
கலை நவின்ற பொருள்கள் எல்லாம் கலங்கிடும்காண்; சாழலோ!

1 உமையம்மையை
2 திருமணம் செய்தான்

வெறியாட்டம் வென்ற களியாட்டம்

268. தேன் புக்க தண்[3]பணை[4] சூழ் தில்லைச் சிற்றம்பலவன்,
தான் புக்கு நட்டம்[5] பயிலும்-அது என்? ஏடீ!-
தான் புக்கு நட்டம் பயின்றிலனேல், தரணி[6] எல்லாம்,
ஊன் புக்க வேல் காளிக்கு ஊட்டு[7] ஆம் காண்; சாழலோ! (14)

3 குளிர்ந்த
4 வயல்
5 கூத்து
6 உலகம்
7 உணவு

உகந்தது உலகம் காக்கும் எருது

269. கட கரியும்,[8] பரி மாவும்[9] , தேரும், உகந்து[10] ஏருதே,
இடபம்[11] உகந்து ஏறிய ஆறு, எனக்கு அறிய இயம்பு; ஏடீ!-
தட மதில்கள்-அவை மூன்றும் தழல் எரித்த அந் நாளில்
இடபம்-அது ஆய்த் தாங்கினான் திருமால் காண்; சாழலோ! (15)

8 மதமுள்ள யானையும்
9 குதிரையும்
10 விரும்பி
11 எருது, ரிஷபம்

அறமும் வேண்டும் மறமும் வேண்டும்

270. நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை,
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு, அறம் உரைத்தான் காண்; ஏடீ!-
அன்று, ஆலின்கீழ் இருந்து, அங்கு, அறம் உரைத்தான் ஆயிடினும்,
கொன்றான் காண், புரம் மூன்றும் கூட்டோடே; சாழலோ! (16)

அம்பலத்தானை யாவர் அறிவார்?

271. அம்பலத்தே கூத்து ஆடி, அமுது செயப் பலி[12] திரியும்
நம்பனையும்[13] தேவன் என்று நண்ணும்-அது என்? ஏடீ!-
நம்பனையும் ஆமாகேள்; நான் மறைகள் தாம் அறியா,
'எம்பெருமான், ஈசா' என்று ஏத்தின காண்; சாழலோ! (17)

12 பிச்சை
13 சிவபெருமானையும்

க௮

உ௭உ. சலமுடைய சலந்தரன்ற னுடறடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்ற னயனமிடந் தரனடிக்கீ
ழலராக விட.வாழி யருளினன்காண் சாழலோ.

க௯

உ௭௩. அம்பரமாம் புள்ளித்தோ லாலால மாரமுதம்
எம்பெருமா னுண்டசது ரெனக்கறிய வியம்பேடீ
எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ.

உ௰

உ௭௪. அருந்தவருக் காலின்கீ ழறமுதலா நான்கனையு
மிருந்தவருக் கருளுமது வெனக்கறிய வியம்பேடீ
யருந்தவருக் கறமுதனுன் கன்றருளிச் செய்திலனே
றிருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ.

திருச்சிற்றம்பலம்.

மலர் வழிபாட்டின் பயன்

272. சலம்[1] உடைய சலந்தரன்-தன் உடல் தடிந்த[2] நல் ஆழி,[3]
நலம் உடைய நாரணற்கு, அன்று, அருளிய ஆறு என்? ஏடீ!
நலம் உடைய நாரணன், தன் நயனம்[4] இடந்து,[5] அரன் அடிக்கீழ்
அலர்[6] ஆக இட, ஆழி அருளினன் காண்; சாழலோ! (18)

1 ஆருச் சினம் 2 கொன்ற 3 ஆழிப்படை 4 கண் 5 தோண்டி எடுத்து 6 மலர்

தன் பெருமை தான் அறியான்

273. அம்பரமாம்[7] ஆம், புள்ளித்தோல்; ஆலாலம்,[8] ஆர் அமுதம்;
எம்பெருமான் உண்ட சதுர், எனக்கு அறிய இயம்பு; ஏடீ—
எம்பெருமான் ஏது உடுத்து, அங்கு ஏது அமுது செய்திடினும்
தம் பெருமை தான் அறியாத் தன்மையன் காண்; சாழலோ! (19)

7 ஆடை 8 கொடும் நஞ்சு

உலகு இயற்கை உணர வேண்டாமா?

274. அரும் தவருக்கு,[9] ஆலின் கீழ், அறம் முதலா நான்கினையும்
இருந்து, அவருக்கு அருளும்-அது எனக்கு அறிய இயம்பு; ஏடீ!
அரும் தவருக்கு, அறம் முதல் நான்கு அன்று அருளிச் செய்திலனேல்
திருந்த, அவருக்கு, உலகு இயற்கை தெரியா, காண்; சாழலோ! (20)

9 தவம் செய்வோருக்கு

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்றுவது

திருப்பூவல்லி

மாயாவிசய நீக்குதல்

(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

க

உஎரு. இணையார் திருவடி யென்றலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையுந் துறந்தொழிந்தே
னணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

உ

உஎசு. எந்தையெந்தாய் சுற்றமற்று மெல்லா மென்னுடைய
பந்த மறுத்தென்னை யாண்டுகொண்ட பாண்டிப்பிரா
னந்த விடைமருதி லானந்தத் தேனிருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ.

ந

உஎஎ. நாயிற் கடைப்பட்ட நம்மையுமோர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதுந் தயாவுடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டானென் வல்வினையின்
வாயிற் பொடியட்டிப் பூவல்லி கொய்யாமோ.

ச

உஎஅ. பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்க னருக்கனெச்ச னிந்துவனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திரராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

பதின்மூன்றுவது

திருப் பூவல்லி

மாயா விசய நீக்குதல்

அவன் அருள் பெற்றேன் பிற ஒழிந்தன

275. இணை ஆர் திருவடி என் தலைமேல் வைத்தலுமே,
துணை ஆன சுற்றங்கள் அத்தனையும், துறந்தொழிந்தேன் ;
அணை ஆர் புனல் தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன்[1] சீர் பாடி-பூவல்லி கொய்யாமோ ! (1)

1 கரைசேர்க்கும் தோணிபோன்றவன்

கட்டு அறுத்த தேன்

276. எந்தை, எம் தாய், சுற்றம், மற்றும் எல்லாம், என்னுடைய
பந்தம்[2] அறுத்து, என்னை ஆண்டுகொண்ட பாண்டிப் பிரான் ;
அந்த இடைமருதில், ஆனந்தத் தேன் இருந்த
பொந்தைப்[3] பரவி, நாம்-பூவல்லி-கொய்யாமோ ! (2)

2 கட்டு, பிணிப்பு.
3 குடைவை

வினை ஒழிந்தது

277. நாயின் கடைப்பட்ட நம்மையும் ஓர் பொருட்படுத்து,
தாயின் பெரிதும் தயா[4] உடைய தம் பெருமான்,
மாயப் பிறப்பு அறுத்து ஆண்டான் ; என் வல் வினையின்
வாயில் பொடி-அட்டி[5]-பூவல்லி கொய்யாமோ ! (3)

4 அருள்
5 மண்ணைப் போட்டு

மறக்கருணை

278. பண்[6] பட்ட தில்லைப் பதிக்கு அரசைப் பரவாதே,[7]
எண்[8] பட்ட தக்கன், அருக்கன்,[9] எச்சன்,[10] இந்து,[11] அனல்,[12]
விண் பட்ட பூதப் படை வீரபத்திரரால்
புண் பட்டவா பாடி-பூவல்லி கொய்யாமோ ! (4)

6 அணி, செம்மை
7 புகழ்ந்து வணங்காது
8 மதிப்பு
9 கதிரவன்
10 வேள்வி நடத்துவோன்
11 திங்கள், சந்திரன்
12 தீக்கடவுள்

௫

உ௭௯. தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமா
னூனாடி நாடிவந் துள்புகுந்தா னுலகர்முன்னே
நானாடி யாடிநின் றோலமிட நடம்பயிலும்
வானாடர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ.

௬

உ௮௰. எரிமூன்று தேவர்க் கிரங்கியருள் செய்தருளிச்
சிரமூன் றறத்தன் றிருப்புருவ நெரித்தருளி
யுருமூன்று மாகி யுணர்வரிதா மொருவனுமே
புரமூன் றெரித்தவா பூவல்லி கொய்யாமோ.

௭

உ௮௧. வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத்தன் சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமா
னணங்கோ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

௮

உ௮௨. நெறிசெய் தருளித்தன் சீரடியார் பொன்னடிக்கே
குறிசெய்து கொண்டென்னை யாண்டபிரான் குணம்பரவி
முறிசெய்து நம்மை முழுதுழற்றும் பழவினையைக்
கிறிசெய்த வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

௯

உ௮௩. பன்னாட் பரவிப் பணிசெய்யப் பாதமல
ரென்னாகந் துன்னவைத்த பெரியோ னெழிற்சுடராய்க்
கன்னா ருரித்தென்னை யாண்டுகொண்டான் கழலிணைகள்
பொன்னான வாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

நாடி வந்தான்—ஆடி நின்றேன்

279. தேன் ஆடு கொன்றை சடைக்கு அணிந்த சிவபெருமான்
ஊன் நாடி நாடி வந்து, உட்புகுந்தான் ; உலகர் முன்னே
நான் ஆடி-ஆடி நின்று, ஓலம்[1] இட: நடம் பயிலும்
வான் நாடர் கோவுக்கே[2] பூவல்லி கொய்யாமோ ! (5)

1 முறை
2 சிவபெருமான்

நான்கு மூன்று

280. எரி மூன்று,[3] தேவர்க்கு இரங்கி அருள் செய்தருளி,
சிரம் மூன்று[4] அற, தன் திருப் புருவம் நெரித்தருளி,
உரு மூன்றும்[5] ஆகி, உணர்வு-அரிது ஆம் ஒருவனுமே
புரம் மூன்று எரித்தவா-பூவல்லி கொய்யாமோ ! (6)

3 காருகபத்தியம் ஆகவநீயம், தக்ஷிணாக்கினி.
4 தககன, எச்சன், இநதிரன்.
5 உருவம், அருவம், உருவ-அருவம்

வணங்க-வாழ்த்த-இணங்க

281. வணங்க, தலை வைத்து ; வார் கழல், வாய் வாழ்த்த வைத்து ;
இணங்க,[6] தன் சீர் அடியார் கூட்டமும் வைத்து ;-எம்பெருமான்,
அணங்கோடு[7] அணி தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம் கூர[8] பாடி, நாம்-பூவல்லி கொய்யாமோ ! (7)

6 கூடிப்பழக
7 பெண்ணோடு – உமையம்மை
8 மிகுதியாக

நெறி அருளினான் : முறிமுறிந்தது

282. நெறி செய்தருளி, தன் சீர் அடியார் பொன் அடிக்கே
குறி செய்து கொண்டு, என்னை ஆண்ட பிரான் குணம் பரவி,[9]
முறி[10] செய்து நம்மை முழுது உழற்றும்[11] பழ வினையைக்
கிறி[12] செய்தவா பாடி-பூவல்லி கொய்யாமோ !

9 புகழ்ந்து
10 உடன்படிக்கைச் சீட்டு
11 துன்புறுத்தி அலையச் செய்யும்
12 ஏமாற்றம்

பல் நாள் பரவப் பாதமலர் அருளினான்

283. பல் நாள் பரவிப் பணி செய்ய, பாத மலர்
என் ஆகம்[13] துன்ன வைத்த[14] பெரியோன், எழில் சுடர் ஆய்,
கல் நார் உரித்து, என்னை ஆண்டுகொண்டான்; கழல்-இணைகள்
பொன் ஆனவா பாடி-பூவல்லி கொய்யாமோ ! (9)

13 மனம்
14 தைக்க

க0

உஅச. பேராசை யாமிந்தப் பிண்டமறப் பெருந்துறையான்
சீரார் திருவடி யென்றலைமேல் வைத்தபிரான்
காரார் கடனஞ்சை யுண்டுகந்த காபாலி
போரார் புரம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

கக

உஅரு. பாலு மமுதமுந் தேனுடனும் பராபரமாய்க்
கோலங் குளிர்ந்துள்ளங் கொண்டபிரான் குரைகழல்கள்
ஞாலம் பரவுவார் நன்னெறியா மந்நெறியே
போலும் புகழ்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

கஉ

உஅசு. வானவன் மாலயன் மற்றுமுள்ள தேவர்கட்குங்
கோனவனாய் நின்று கூடலிலாக் குணக்குறியோ
னூனை நெடுங்கட லாலால மமுதுசெய்யப்
போனக மானவா பூவல்லி கொய்யாமோ.

கங.

உஅஎ. அன்றால நீழற்கீ ழருமறைக ளானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாடோறும்
நின்றார வேத்து நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்றாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

கச

உஅஅ படமாக வென்னுள்ளே தன்னிணைப்போ தவையளித்திங்
கிடமாகக் கொண்டிருந் தேகம்ப மேயபிரான்
தடமார் மதிற்றில்லை யம்பலமே தானிடமா
நடமாடு மாபாடிப் பூவல்லி கொய்யாமோ.

என் தலைமேல் வைத்த திருவடி

284. பேர் ஆசை ஆம் இந்தப் பிண்டம்[1] அற, பெருந்துறையான்,
சீர் ஆர் திருவடி என் தலைமேல் வைத்த பிரான்,
கார் ஆர் கடல் நஞ்சை உண்டு உகந்த காபாலி,[2]
போர் ஆர் புரம் பாடி-பூவல்லி கொய்யாமோ ! (10)

1 உடலும் அதன் பிணிப்பும்
2 சிவபெருமான்

குளிர்ந்த கோலம்

285. பாலும், அமுதமும், தேனுடன் ஆம் பரா-பரம்[3] ஆய்,
கோலம்[4] குளிர்ந்து, உள்ளம் கொண்ட பிரான் குரை கழல்கள்[5]
ஞாலம்[6] பரவுவார்[7] நல்-நெறி ஆம்; அந் நெறியே
போலும் புகழ் பாடி-பூவல்லி கொய்யாமோ ! (11)

3 மிகமிக உயர்ந்த
4 திருவுருவம்
5 ஒலிக்கின்றகழல்கள் அணிந்த திருவடி
6 உலகத்தில்
7 போற்றுவார்

கூடுதல் இயலுமோ ?

286. வானவன்,[8] மால், அயன், மற்றும் உள்ள தேவர்கட்கும்
கோன்-அவன் ஆய் நின்று, கூடல்[9] இலாக் குணக்குறியோன்
ஆன நெடும் கடல் ஆலாலம்[10] அமுது செய்ய,
போனகம்[11] ஆனவா-பூவல்லி கொய்யாமோ ! (12)

8 இந்திரன்
9 பொருந்துதல்
10 கொடிய நஞ்சு
11 உணவு

மாமுனிவர் ஏத்த மறை அருளினன்

287. அன்று, ஆல நீழல் கீழ் அரு மறைகள், தான் அருளி,
நன்று ஆக வானவர், மாமுனிவர், நாள் தோறும்,
நின்று, ஆர[12] ஏத்தும் நிறை கழலோன் புனை கொன்றைப்
பொன் தாது[13] பாடி, நாம்-பூவல்லி கொய்யாமோ ! (13)

12 நிறைய
13 பூ, பூ இதழ், பூந்தாது

என் உள்ளத்தில் தீட்டிய ஓவியம்

288. படம்[14] ஆக, என் உள்ளே தன் இணைப் போது[15]-அவை அளித்து, இங்கு
இடம் ஆகக் கொண்டிருந்த, ஏகம்பம் மேய பிரான்,
தடம்[16] ஆர் மதில் தில்லை அம்பலமே தான் இட மா,
நடம்[17] ஆடுமா பாடி-பூவல்லி கொய்யாமோ ! (14)

14 ஓவியம்
15 இரண்டு மலர்-திருவடி மலர்
16 இடம் அகன்ற
17 கூத்து

கரு

உஅகூ. அங்கி யருக்க னிராவணனந் தகன்கூற்றன்
செங்க ணரியய னிந்திரனுஞ் சந்திரனும்
பங்கமி றக்கனு மெச்சனுந்தம் பரிசழியப்
பொங்கியசீர் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

கசா

உகூ௦. திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பான் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

கஎ

உகூக. முன்னாய மாலயனும் வானவருந் தானவரும்
பொன்னார் திருவடி தாமறியார் போற்றுவதே
யென்னாகம் முள்புகுந் தாண்டுகொண்டா னிலங்கணியாம்
பன்னாகம் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

கஅ

உகூஉ. சீரார் திருவடித் திண்சிலம்பு சிலம்பொலிக்கே
யாராத வாசையதா யடியே னகமகிழத்
தேரார்ந்த வீதிப் பெருந்துறையான் றிருநடஞ்செய்
பேரானந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

ககூ

உகூங. அத்தி யுரித்தது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்த வடிவுகொண் டிவ்வுலகிற் பிள்ளையுமாய்
முத்தி முழுமுதலுத் தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா பூவல்லி கொய்யாமோ.

திருச்சிற்றம்பலம்.

மறக்கருணை

289. அங்கி,[1] அருக்கன்,[2] இராவணன், அந்தகன்,[3] கூற்றன்,[4]
செம்-கண் அரி,[5] அயன், இந்திரனும், சந்திரனும்,
பங்கம் இல் தக்கனும், எச்சனும்,[6] தம் பரிசு[7] அழிய,
பொங்கிய[8] சீர் பாடி, நாம்-பூவல்லி கொய்யாமோ! (15)

1 தீ-தெய்வம்
2 கதிரவன்
3 யமன், ஒரு அசுரன
4 யமன், யமதூதன்
5 திருமால்
6 யாகம் நடத்துவோன்
7 பெருமை
8 சிறந்த

பணி செய்து பணி கொண்டான்

290. திண் போர் விடையான்,[9] சிவபுரத்தார் போர் ஏறு,[10]
மண்பால்,[11] மதுரையில் பிட்டு அமுது செய்தருளி,
தண்டாலே[12] பாண்டியன்-தன்னைப் பணிகொண்ட,
புண்[13] பாடல் பாடி, நாம்-பூவல்லி கொய்யாமோ! (16)

9 எருதை உடையவன்
10 ஆண் சிங்கம் போன்றவன்
11 நிலவுலகில்
12 பிரம்பாலே
13 மனம் புண் படக்கூடிய

என் உள்ளத்து உளான்

291. முன் ஆய மால் அயனும், வானவரும், தானவரும்,[14]
பொன் ஆர் திருவடி தாம் அறியார்; போற்றுவதே?
என் ஆகம்[15] உள் புகுந்து ஆண்டுகொண்டான் இலங்கு அணியாம்
பல் நாகம் பாடி, நாம்-பூவல்லி கொய்யாமோ! (17)

14 அசுரரும்
15 உள்ளம்

அகம் மகிழும் சிலம்பு ஒலி

292. சீர் ஆர் திருவடித் திண்[16] சிலம்பு சிலம்பு ஒலிக்கே
ஆராத ஆசை-அது ஆய், அடியேன் அகம் மகிழ,
தேர் ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திரு நடம் செய்
பேரானந்தம் பாடி-பூவல்லி கொய்யாமோ! (18)

16 வலிய

புத்தி புகுந்தான்

293. அத்தி[17] உரித்து, அது போர்த்தருளும் பெருந்துறையான்,
பித்த வடிவு கொண்டு, இவ் உலகில் பிள்ளையும் ஆய்,
முத்தி முழு-முதல், உத்தரகோச மங்கை வள்ளல்,
புத்தி புகுந்தவா-பூவல்லி கொய்யா மோ! (19)

17 யானை

திருச்சிற்றம்பலம்

பதினுன்காவது

திருவுந்தியார்

ஞானவெற்றி

(கலித்தாழிசை)

க

உகூச. வளைந்தது வில்லு விளைந்தது பூச
லுளைந்தன முப்புர முந்தீபற
வொருங்குடன் வெந்தவா றுந்தீபற.

உ

உகூரு. ஈரம்பு கண்டில மேகம்பர் தங்கையி
லோரம்பே முப்புர முந்தீபற
வொன்றும் பெருமிகை யுந்தீபற.

ங

உகூசா. தச்சு விடுத்தலுந் தாமடியிட்டலு
மச்சு முறிந்ததென் றுந்தீபற
வழிந்தன முப்புர முந்தீபற.

ச

உகூள. உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற
விளமுலை பொங்கனின் றுந்தீபற.

ரு

உகூஅ. சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி யுந்தீபற
வுருத்திர நாதனுக் குந்தீபற.

சா

உகூகூ. ஆவா திருமா லவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் ருதையென் றுந்தீபற.

பதினொன்காவது

திருவுந்தியார்

ஞானவெற்றி

வில் வளைந்தது முப்புரம் உளைந்தது

294. வளைந்தது வில்லு ; விளைந்தது பூசல் ;[1]
உளைந்தன[2] முப்புரம்-உந்தீ பற!
ஒருங்கு உடன் வெந்தவாறு-உந்தீ பற! (1)

1 போர்
2 அழிந்தன

அம்பும் வேண்டுமோ ?

295. ஈர் அம்பு கண்டிலம், ஏகம்பர் தம் கையில் ;
ஓர் அம்பே முப்புரம்-உந்தீ பற!
ஒன்றும் பெரு மிகை[3] -உந்தீ பற! (2)

3 வேண்டப் பெறுதது

அச்சு முறிந்தது அழிந்தன முப்புரம்

296. தச்சு[4] விடுத்தலும்,[5] தாம் அடியிட்டலும்,[6]
அச்சு விடுத்தது என்று-உந்தீ பற!
அழிந்தன முப்புரம்-உந்தீ பற! (3)

4 தச்சு வேலை
5 செய்து முடித்தலும்
6 ஏறி திருவடிகளை வைத்தவுடன்

காவலுக்கு மூவர்

297. உய்ய[7] வல்லார் ஒரு மூவரைக்[8] காவல் கொண்டு
எய்ய வல்லானுக்கே-உந்தீ பற!
இளமுலை பொங்க நின்று-உந்தீ பற! (4)

7 பிழைக்க
8 மூன்று அசுரர்களை தாரகாக்ஷன கமலாக்ஷன் வித்யுன்மாலி

ஓடினர் தேவர்கள்

298. சாடிய[9] வேள்வி சரிந்திட,[10] தேவர்கள்
ஓடியவா பாடி-உந்தீ பற!
உருத்திர-நாதனுக்கு[11]-உந்தீ பற! (5)

9 தாக்கிய
10 அழிந்திட
11 உருத்திரர்கள் தலைவன—சிவபெருமான்

திருமால் பிழைத்தார்

299. ஆ! ஆ! திருமால், அவிப்[12] பாகம் கொண்டு, அன்று,
சாவாது இருந்தான் என்று-உந்தீ பற!
சதுர் முகன்[13] தாதை என்று-உந்தீ பற! (6)

12 வேள்வியிலளித்த உணவு
13 நான்முகன்—பிரமன்

எ

௩௰௰. வெய்யவ னங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

அ

௩௰க. பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற.

கூ

௩௰உ. புரந்தர னாரொரு பூங்குயி லாகி
மரந்தனி லேறினா ருந்தீபற
வானவர் கோனென்றே யுந்தீபற.

க௰

௩௰௩. வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி யுந்தீபற
தொடர்ந்த பிறப்பற வுந்தீபற.

கக

௩௰ச. ஆட்டின் றலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற.

கஉ

௩௰ரு. உண்ணப் புகுந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற
கருக்கெட நாமெலா முந்தீபற.

கை இழந்த தீக்கடவுள்

300. வெய்யவன்[1] அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தான்[2] என்று—உந்தீ பற!
கலங்கிற்று வேள்வி என்று – உந்தீபற! (7)

[1] வெம்மையுடையவன்
[2] வெட்டினன

மகளை இகழலாமா?

301. பார்பதியைப்[3] பகை சுற்றிய[4] தக்கனைப்
பார்ப்பது என்னே? ஏடி!—உந்தீ பற!
பணை முலை பாகனுக்கு—உந்தீ பற! (8)

[3] உமையம்மையை
[4] சூழந்த

இந்திரன் குயிலானான்

302. புரந்தரனார்[5] ஒரு பூம் குயில் ஆகி,
மரம்-தனில் ஏறினார்—உந்தீ பற!
வானவர்-கோன்[6] என்றே—உந்தீ பற! (9)

[5] இந்திரன்
[6] இந்திரன

தலைவன் தலை இழந்தான்

303. வெம் சின வேள்வி வியாத்திரனார்[7] தலை
துஞ்சினவா[8] பாடி—உந்தீ பற!
தொடர்ந்த பிறப்பு அற—உந்தீ பற! (10)

[7] வேள்வி நடத்துபவன்
[8] தொங்கியவிதம்

ஆட்டுத்தலையைக் கூட்டியது

304. ஆட்டின் தலையை விதிக்குத்[9] தலை ஆகக்
கூட்டியவா பாடி—உந்தீ பற!
கொங்கை குலுங்க நின்று—உந்தீ பற (11)

[9] சிறுவிதி – தக்கன்

ஒருவன் கண் இழந்தான்

305. உண்ணப் புகுந்த பகன்[10] ஒளித்து ஓடாமே,
கண்ணைப் பறித்தவாறு—உந்தீ பற!
கருக்[11]கெட, நாம் எல்லாம்—உந்தீ பற! (12)

[10] கதிரவன்
[11] பிறவியின் மூலம்

கங

௩௰௬. நாமக ளாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட வுந்தீபற.

கச

௩௰௭. நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியி லுந்தீபற.

கரு

௩௰௮. சூரிய னார்தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற.

கசு

௩௰௯. தக்கனு ரன்றோத லையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற.

கஎ

௩௧௰. பாலக னார்க்கன்று பாற்கட லீந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்றன் றாதைக்கே யுந்தீபற.

கஅ

௩௧௧. நல்ல மலரின்மே னான்முக னார்தலை
ஒல்லைய ரிந்ததென் றுந்தீபற
உகிரா லரிந்ததென் றுந்தீபற.

கக

௩௧௨. தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்து மிற்றவா றுந்தீபற
இருபது மிற்றதென் றுந்தீபற.

திருச்சிற்றம்பலம்.

எவ்வளவு கேடு

306. நா-மகள்[1] நாசி, சிரம் பிரமன், பட,
சோமன்[2] முகம் நெரித்து—உந்தீ பற!
தொல்லை[3] வினை கெட—உந்தீ பற! (13)

1 கலைமகள்
2 திங்களை; சந்திரன்
3 பழைய

ஓட வழி எங்கே ?

307. நான் மறை யோனும்,[4] மகத்து[5] இயமான்[6] பட,
போம் வழி தேடும் ஆறு—உந்தீ பற!
புரந்தரன்[7] வேள்வியில்—உந்தீ பற! (14)

4 பிரமனும்
5 வேள்வியில்
6 தலைவன
7 இந்திரன்

பல் இழந்தான்

308. சூரியனார் தொண்டை[8] வாயினில் பற்களை
வாரி, நெரித்த ஆறு—உந்தீ பற!
மயங்கிற்று வேள்வி என்று—உந்தீ பற! (15)

8 கொவ்வைக்கனி

வேள்வி தொலைந்தது

309. தக்கனார், அன்றே, தலை இழந்தார் ; தக்கன்
மக்களைச் சூழ நின்று—உந்தீ பற!
மடிந்தது வேள்வி என்று—உந்தீ பற! (16)

பால் கொடுத்த தாதை

310. பாலகனார்க்கு,[9] அன்று, பால்-கடல் ஈந்திட்ட
கோலச்[10] சடையற்கே—உந்தீ பற!
குமரன்-தன் தாதைக்கே—உந்தீ பற! (17)

9 உபமன்யு
10 அழகிய

நான் முகன்-அந்தோ!

311. நல்ல மலரின்மேல் நான்முகனார் தலை
ஒல்லை[11] அரிந்தது என்று—உந்தீ பற!
உகிரால்[12] அரிந்தது என்று—உந்தீ பற! (18)

11 விரைவில்
12 நகத்தால்

இராவணன் ஆணவத்தால் வந்த கேடு

312. தேரை நிறுத்தி, மலை எடுத்தான்[13] சிரம்
ஈர்-ஐந்தும் இற்ற ஆறு—உந்தீ பற!
இருபதும் இற்றது என்று—உந்தீ பற! (19)

13 இராவணன்

திருச்சிற்றம்பலம்.

பதினைந்தாவது

திருத்தோணோக்கம்

பிரபஞ்சசுத்தி

(நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா)

௧

௩௧௩. பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும் பேதைகுண மாகாமே
தீர்த்தாய் திகழ்தில்லை யம்பலத்தே திருநடஞ்செய்
கூத்தா வுன்சேவடி கூடும்வண்ணந் தோணோக்கம்.

௨

௩௧௪. என்றும் பிறந்திறந் தாழாமே யாண்டுகொண்டான்
கன்றால் விளவெறிந்தான் பிரமன் காண்பரிய
குன்றாத சீர்த்தில்லை யம்பலவன் குணம்பரவித்
துன்றார் குழலினீர் தோணோக்க மாடாமோ.

௩

௩௧௫. பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புற்ற சீரடி வாய்க்கலச மூனமுதம்
விருப்புற்று வேடனார் சேவெடறிய மெய்குளிர்ந்தங்
கருட்பெற்று நின்றவா தோணோக்க மாடாமோ.

௪

௩௧௬. கற்போலு நெஞ்சங் கசிந்துருகக் கருணையினால்
நிற்பானைப் போலவென் னெஞ்சினுள்ளே புகுந்தருளி
நற்பாற் படுத்தென்னை நாடறியத் தானிங்ஙன்
சொற்பால தானவா தோணோக்க மாடாமோ.

பதினைந்தாவது

திருத்தோள்-நோக்கம்

பிரபஞ்சசுத்தி

பொய்யை மெய் என மயங்கோம்

313. பூத்து ஆரும்[1] பொய்கைப் புனல் இதுவே, எனக் கருதி,
பேய்த்தேர்[2] முகக்க உறும் பேதை குணம் ஆகாமே,
தீர்த்தாய்; திகழ் தில்லை அம்பலத்தே திரு நடம் செய்
கூத்தா! உன் சேவடி கூடும் வண்ணம்–தோள்-நோக்கம்! (1)

1 நிறைந்த
2 கானல் நீர்

பிறப்பு இறப்பு ஒழிந்தது

314. என்றும் பிறந்து, இறந்து, ஆழாமே, ஆண்டுகொண்டான்;
கன்றால் விளவு எறிந்தான்,[3] பிரமன், காண்பு–அரிய
குன்றாத சீர்த் தில்லை அம்பலவன்; குணம் பரவி,
துன்று[4] ஆர் குழலினீர்!–தோள்-நோக்கம் ஆடாமோ! (2)

3 திருமால்
4 நெருங்கி

கோடையைக் குளிர்வித்த சேடை

315. பொருள் பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்க,
செருப்பு உற்ற சீர் அடி, வாய்க் கலசம், ஊன் அமுதம்,
விருப்பு உற்று, வேடனார்,[5] சேடு[6] எறியமெய் குளிர்ந்து, அங்கு,
அருள் பெற்று, நின்றவா–தோள்-நோக்கம் ஆடாமோ! (3)

5 கண்ணப்பர்
6 புதுப்புனல்

சொல்ல வழிதந்த கருணை

316. கல் போலும் நெஞ்சம் கசிந்து உருக, கருணையினால்
நிற்பானைப் போல, என் நெஞ்சின் உள்ளே புகுந்தருளி,
நல்-பால் படுத்து என்னை, நாடு அறியத் தான் இங்ஙன்,
சொல்-பாலது[7] ஆனவா–தோள்-நோக்கம் ஆடாமோ! (4)

7 சொல்லால வெளியிடக் கூடியவகை

௫

௩௧௭. நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்
உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

௬

௩௧௮. புத்தர் முதலாய புல்லறிவிற் சில்சமயம்
தத்த மதங்களிற் றட்டுளுப்புப் பட்டுநிற்கச்
சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே தவமாக்கு
மத்தன் கருணையினாற் றோணோக்க மாடாமோ

௭

௩௧௯. தீதில்லை மாணி சிவகருமஞ் சிதைத்தானைச்
சாதியும் வேதியன் றாதைதனைத் தாளிரண்டுஞ்
சேதிப்ப வீசன் றிருவருளாற் றேவர்தொழப்
பாதகமே சோறு பற்றினவா தோணோக்கம்.

௮

௩௨௰. மான மழிந்தோ மதிமறந்தோ மங்கைநல்லீர்
வானந் தொழுந்தென்னன் வார்கழலே நினைந்தடியோ
மானந்தக் கூத்த னருள்பெறினா மவ்வணமே
யானந்த மாகிநின் றாடாமோ தோணோக்கம்.

௯

௩௨௧. எண்ணுடை மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுதல் லெந்தை கடைத்தலைமு னின்றதற்பி
னெண்ணிலி யிந்திர ரெத்தனையோ பிரமர்களு
மண்மிசை மால்பலர் மாண்டனர்காண் டோணோக்கம்.

ஒருவன் பலவானுன்

317. நிலம், நீர், நெருப்பு, உயிர், நீள் விசும்பு, நிலா, பகலோன்,
புலன்[1] ஆய மைந்தனோடு,[2] எண் வகையாய்ப் புணர்ந்து நின்றான்;
உலகு ஏழ் என, திசை பத்து என, தான் ஒருவனுமே
பல ஆகி, நின்றவா-தோள்-நோக்கம் ஆடாமோ! (5)

1 அறிவு
2 ஆன்மாவோடு

சித்தத்தைச் சிவமாக்கிய கருணை

318. புத்தர்[3] முதல் ஆய புல் அறிவின் சில் சமயம்,
தம்-தம் மதங்களில் தட்டுளுப்புப்[4] பட்டு நிற்க,
சித்தம் சிவம் ஆக்கி, செய்தனவே தவம் ஆக்கும்
அத்தன் கருணையினால்-தோள்-நோக்கம் ஆடாமோ! (6)

3 புத்தசமயத்தார
4 தடுமாற்றம்

சண்டீசர்

319. தீது இல்லை; மாணி,[5] சிவகருமம்,[6] சிதைத்தானை,
சாதியும் வேதியன்-தாதை-தனை, தாள் இரண்டும்
சேதிப்ப,[7] ஈசன் திருவருளால் தேவர் தொழ-
பாதகமே சோறு[8] பற்றினவா-தோள்-நோக்கம்! (7)

5 வேதிய மாணவனை
6 சிவ வழிபாடு
7 துண்டிக்க
8 வழிபாட்டின் உளளீடான வீடுபேறு

எல்லாம் மறந்தோம்

320. மானம் அழிந்தோம்; மதி மறந்தோம்; மங்கை-நல்லீர்!-
வானம் தொழும் தென்னன் வார்[9] கழலே[10] நினைந்து அடியோம்;
ஆனந்தக் கூத்தன் அருள் பெறின், நாம், அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று-ஆடாமோ தோள்-நோக்கம்! (8)

9 சிவபெருமான்
10 நீண்ட கழல் அணிந்த திருவடிகளையே

காவலரின் தொன்மை

321. எண் உடை மூவர் இராக்கதர்கள், எரி[11] பிழைத்து,
கண்-நுதல்[12] எந்தை கடைத்தலை[13] முன் நின்றதன் பின்,
எண் இலி இந்திரர், எத்தனையோ பிரமர்களும்,
மண்மிசை மால் பலர், மாண்டனர் காண்-தோள்-நோக்கம் (9)

11 தீ
12 நெற்றிக் கண்ணன் -சிவபெருமான்
13 தலைவாயில்

கம

௩௨௨. பங்கய மாயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்க ணிடந்தரன் சேவடிமேற் சாத்தலுமே
சங்கர னெம்பிரான் சக்கரமாற் கருளியவா
றெங்கும் பரவிநாந் தோணோக்க மாடாமோ.

கக

௩௨௩. காம னுடலுயிர் காலன்பற் காய்கதிரோன்
நாமக ளுசி சிரம்பிரமன் கரமெரியைச்
சோமன் கலைதலை தக்கனையு மெச்சனையுந்
தூய்மைகள் செய்தவா தோணோக்க மாடாமோ.

கஉ

௩௨௪. பிரம னரியென் றிருவருந்தம் பேதைமையாற்
பரம மியாம்பரம மென்றவர்கள் பதைப்பொடுங்க
வரஞ்ஞ ரழலுருவா யங்கே யளவிறந்து
பரமாகி நின்றவா தோணோக்க மாடாமோ.

கங

௩௨௫. ஏழைத் தொழும்பனே னெத்தனையோ காலமெல்லாம்
பாழுக் கிறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
யூழிமுதற் சிந்தாத நன்மணிவந் தென்பிறவித்
தாழைப் பறித்தவா தோணோக்க மாடாமோ.

கச

௩௨௬. உரைமாண்ட வுள்ளொளி யுத்தமன்வந் துளம்புகலுங்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
யிரைமாண்ட விந்திரியப் பறவை யிரிந்தோடத்
துரைமாண்ட வாபாடித் தோணோக்க மாடாமோ.

திருச்சிற்றம்பலம்.

கண்மலர் அளித்த கண்ணன்

322. பங்கயம்[1] ஆயிரம் பூவினில், ஓர் பூக் குறைய,
தம் கண் இடந்து,[2] அரன் சேவடிமேல் சாத்தலுமே,
சங்கரன், எம்பிரான், சக்கரம் மாற்கு[3] அருளிய ஆறு,
எங்கும் பரவி, நாம்-தோள்-நோக்கம் ஆடாமோ! (10)

1 தாமரை
2 தோண்டி
3 திருமாலுக்கு

தூய்மையாயின

323. காமன் உடல்; உயிர், காலன்; பல் காய் கதிரோன்;
நா-மகள்[4] நாசி;[5] சிரம்,[6] பிரமன்; கரம்,[7] எரியை;
சோமன்[8] கலை; தலை தக்கனையும், எச்சனையும்;[9]
தூய்மைகள்[10] செய்தவா-தோள்-நோக்கம் ஆடாமோ! (11)

4 சரஸ்வதி, கலைமகள்
5 மூக்கு
6 தலை
7 கை
8 திங்கள், சந்திரன்
9 வேள்வி நடத்துவோனையும்
10 மாசு இன்மை, அழிவு

ஆணவம் தொலைத்த அழல்

324. பிரமன், அரி,[11] என்ற இருவரும், தம் பேதைமையால்
'பரமம்,[12] யாம் பரமம்' என்றவர்கள் பதைப்பு ஒடுங்க,
அரனார்,[13] அழல்[14] உருஆய், அங்கே, அளவு இறந்து,
பரம்ஆகி, நின்றவா-தோள்-நோக்கம் ஆடாமோ! (12)

11 திருமால்
12 உயர்ந்த பொருள்
13 சிவபெருமானார்
14 தீ

பொழுது போக்கிப் புறக்கணித்தேன்

325. ஏழைத் தொழும்பனேன்,[15] எத்தனையோ காலம் எல்லாம்
பாழுக்கு இறைத்தேன், பரம்பரனைப் பணியாதே;
ஊழி முதல், சிந்தாத[16] நல்மணி, வந்து, என் பிறவித்
தாழைப்[17] பறித்தவா-தோள்-நோக்கம் ஆடாமோ! (13)

15 தொண்டனேன்
16 கெடாத
17 வேரை

உளம் புகுந்தான்–உயர்ந்தேன்

326 உரை மாண்ட[18] உள்ஒளி உத்தமன் வந்து, உளம் புகலும்,
கரை மாண்ட[19] காமப் பெருங் கடலைக் கடத்தலுமே,
இரை மாண்ட இந்திரியப்[20] பறவை இரிந்து[21] ஓட,
துரை[22] மாண்டவா[23] பாடி-தோள்-நோக்கம் ஆடாமோ! (14)

18 சிறந்த
19 கடந்த, ஒழிந்த
20 ஐம்பொறி புலன்களாலான
21 கெட்டு
22 துறை-வாழ்க்கை நெறி
23 மாட்சிமைப்பட்ட வழி

திருச்சிற்றம்பலம்

பதினாறுவது

திருப்பொன்னூசல்

அருட்சுத்தி

(ஒற்றுமை பற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா)

க

௩௨௭. சீரார் பவளங்கால் முத்தங் கயிறாக
வேராரும் பொற்பலகை யேறி யினிதமர்ந்து
நாரா யணனறியா நாண்மலர்த்தா ளடியேற்
கூராகத் தந்தருளு முத்தர கோசமங்கை
யாரா வமுதி னருட்டா ளிணைபாடிப்
போரார்வேற் கண்மடவீர் பொன்னூச லாடாமோ.

௨

௩௨அ. மூன்றங் கிலங்கு நயனத்தன் மூவாத
வான்றங்கு தேவர்களுங் காணா மலரடிக
டேன்றங்கித் தித்தித் தமுதூறித் தான்றெளிந்தங்
கூன்றங்கி நின்றுருக்கு முத்தர கோசமங்கைக்
கோன்றங் கிடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங் கனநடையீர் பொன்னூச லாடாமோ.

௩

௩௨௯. முன்னீறு மாதியு மில்லான் முனிவர்குழாம்
பன்னூறு கோடி யிமையோர்க டாநிற்பத்
தன்னீ றெனக் கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி யுத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ

பதினாறுவது

திருப்பொன்-ஊசல்

அருட்சுத்தி

ஆரா அமுதின் அருள்

327. சீர் ஆர் பவளம் கால், முத்தம் கயிறு, ஆக
ஏர்[1] ஆரும் பொன்-பலகை ஏறி, இனிது அமர்ந்து,
நாராயணன் அறியா நாள் மலர்த்தாள், நாய்-அடியேற்கு
ஊர்[2] ஆகத் தந்தருளும் உத்தரகோச மங்கை
ஆரா அமுதின் அருள்-தாள்-இணை பாடி,
பேர் ஆர் வேல் கண் மடவீர்!-பொன்-ஊசல் ஆடாமோ! (1)

1 அழகு
2 வாழும் இடம்

திருவடித்தேன் தித்திக்கின்றது

328. மூன்று, அங்கு இலங்கு நயனத்தன்,[3] மூவாத
வான் தங்கு தேவர்களும் காணா மலர்-அடிகள்,
தேன் தங்கி, தித்தித்து, அமுது ஊறி, தான் தெளிந்து, அங்கு,
ஊன் தங்கி நின்று, உருக்கும் உத்தரகோச மங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடி, குல மஞ்ஞை[4]
போன்று, அங்கு, அன நடையீர்-பொன்-ஊசல் ஆடாமோ! (2)

3 கண்ணை யுடையவன்
4 மயில்

திருநீறு பூசப்பட்டேன்

329. முன்,[5] ஈறும், ஆதியும் இல்லான்; முனிவர் குழாம்,[6]
பல் நூறு கோடி இமையோர்கள், தாம் நிற்ப,
தன் நீறு எனக்கு அருளி, தன் கருணை வெள்ளத்து
மன் ஊற, மன்னும் மணி உத்தரகோச மங்கை
மின் ஏறும் மாட[7] வியல்[8] மாளிகை பாடி,
பொன் ஏறு பூண் முலையீர்!-பொன்-ஊசல் ஆடாமோ! (3)

5 எண்ணுகின்ற
6 கூட்டம்
7 மேல் அடுக்கு களுள்ள
8 சிறந்த, பெரிய

ச

௩௩0. நஞ்சமர் கண்டத்த னண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி யுத்தர கோசமங்கை
யஞ்சொலா டன்னோடுங் கூடி யடியவர்க
ணெஞ்சுளே நின்றமுத மூறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் றூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூச லாடாமோ

ரு

௩௩க. ஆனை வலியோ வரிவையோ வென்றிருவர்
காணுக் கடவுள் கருணையினாற் றேவர்குழா
நாணுமே யுய்யவாட் கொண்டருளி நஞ்சுதனை
யூணுக வுண்டருளு முத்தர கோசமங்கைக்
கோனார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூச லாடாமோ.

சா

௩௩உ. மாதாடு பாகத்த னுத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையா னடியாருட்
கோதாட்டி நாயேனை யாட்கொண்டென் றொல்பிறவித்
தீதோடா வண்ணந் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்தன்பாற்
போதாடு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

எ

௩௩௩. உன்னற் கரியதிரு வுத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் றன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பா
னன்னத்தின் மேலேறி யாடு மணிமயில்போ
லென்னத்த னென்னையுமாட் கொண்டா னெழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

தூய புகழ் பாடுவோம்

330. நஞ்சு அமர் கண்டத்தன் ; அண்டத்தவர் நாதன்;
மஞ்சு[1] தோய் மாட, மணி உத்தரகோசமங்கை
அம்-சொலாள் தன்னோடும் கூடி, அடியவர்கள்
நெஞ்சுளே நின்று, அமுதம் ஊறி, கருணைசெய்து,
துஞ்சல்,[2] பிறப்பு அறுப்பான்; தூய புகழ் பாடி,
புஞ்சம்[3] ஆர் வெள்[4] வளையீர் !-பொன்-ஊசல் ஆடாமோ! (4)

1 மேகம்
2 இறப்பு
3 திரட்சி, கூட்டம், தொகுதி.
4 வெண்மையான — சங்கால் இயன்ற

உய்யக்கொண்ட கூத்தன்

331. ஆணோ, அலியோ, அரிவையோ,[5] என்று இருவர்
காணாக் கடவுள்; கருணையினால், தேவர் குழாம்[6]
நாணாமே[7] உய்ய, ஆட்கொண்டருளி, நஞ்சு-தனை
ஊண் ஆக உண்டருளும் உத்தரகோசமங்கைக்
கோண் ஆர் பிறைச் சென்னிக் கூத்தன்; குணம் பரவி,
பூண் ஆர் வன[8] முலையீர்!-பொன்-ஊசல் ஆடாமோ! (5)

5 பெண்ணோ
6 கூட்டம்
7 அஞ்சி அழியாமல்
8 அழகிய

குற்றம் நீக்கி ஆண்டான்

332. மாது[9] ஆடு[10]பாகத்தான் ; உத்தரகோசமங்கைத்
தாது[11] ஆடு கொன்றைச் சடையான்; அடியாருள்
கோதாட்டி[12]நாயேனை ஆட்கொண்டு, என் தொல் பிறவித்
தீது ஓடாவண்ணம் திகழ, பிறப்பு அறுப்பான்;
காதுஆடு குண்டலங்கள் பாடிக்கசிந்து அன்பால்
போது[13]ஆடு பூண் முலையீர்!-பொன்-ஊசல் ஆடாமோ! (6)

9 உமையம்மை
10 விளங்குகின்ற
11 பூந்தாது
12 குற்றம் களைந்து
13 தாமரை மொட்டு

பணிந்தார் பாவங்கள் போக்குவான்

333. உன்னற்கு[14] அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப்[15] பொலிந்து இருந்த. மா மறையோன்—தன் புகழே
பன்னிப்[16]பணிந்து இறைஞ்ச, பாவங்கள் பற்று அறுப்பான்;
அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணி மயில் போல்—
என் அத்தன்; என்னையும் ஆட்கொண்டான்; எழில்[17] பாடி—
பொன் ஒத்த பூண் முலையீர் !-பொன்-ஊசல் ஆடாமோ !

14 எண்ணுதற்கு
15 நிலைபெற்று
16 பலகால் பேசி
17 திருக்கோலம்

௮

௩௩௪. கோல வரைக் குடுமி வந்து குவலயத்துச்
சால வமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலந் திகழுந் திருவுத்தர கோசமங்கை
மாலுக் கரியானை வாயார நாம்பாடிப்
பூலித் தகங்குழைந்து பொன்னூச லாடாமோ.

௯

௩௩௫. தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட் டெந்தரமு மாட்கொள்வான்
பங்குலவு கோதையுந் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூச லாடாமோ.

திருச்சிற்றம்பலம்.

அகம் குழைந்து ஆடுவோம்

334. கோல வரைக் குடுமி[1] வந்து, குவலயத்துச்[2]
சால அமுது உண்டு, தாழ் கடலின் மீது எழுந்து,
ஞாலம்[3] மிக,[4] பரி[5] மேற்கொண்டு, நமை ஆண்டான்;
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை,
மாலுக்கு அரியானை வாய் ஆர நாம் பாடி,
பூலித்து,[6] அகம் குழைந்து-பொன்-ஊசல் ஆடாமோ! (8)

1 அழகிய கைலைமலையின் உச்சி
2 நிலவுலகில்
3 நிலவுலகம்
4 உய்ய
5 குதிரை
6 புளகித்து, பூரித்து

கொன்றைச் சடையான் குணம் பரவுவோம்

335. தெங்கு[7] உலவு[8] சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்கு, உலவு[9] சோதித் தனி உருவம் வந்தருளி,
எங்கள் பிறப்பு அறுத்திட்டு, எம் தரமும்[10] ஆட்கொள்வான்,
பங்கு உலவு கோதையும், தானும், பணி கொண்ட
கொங்கு[11] உலவு[12] கொன்றைச் சடையான், குணம் பரவி,
பொங்கு உலவு பூண் முலையீர்!-பொன்-ஊசல் ஆடாமோ! (9)

7 தென்னை
8 காற்றால் அசைகின்ற
9 சூழ்ந்த, சோதிஉலவு
10 தகுதியும், வகையும்
11 மணம்
12 வீசுகின்ற

திருச்சிற்றம்பலம்

பதினேழாவது

அன்னைப்பத்து

ஆத்துமபூரணம்

(கலிவிருத்தம்)

க

௩௩௯. வேத மொழியர்வெண் ணீற்றர்செம் மேனியர்
நாதப் பறையின ரன்னே யென்னும்
நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கு
நாதரிந் நாதனா ரன்னே யென்னும்

உ

௩௪௦. கண்ணஞ் சனத்தர் கருணைக் கடலின
ருண்ணின் றுருக்குவ ரன்னே யென்னு
முண்ணின் றுருக்கி யுலப்பிலா வானந்தக்
கண்ணீர் தருவரா லன்னே யென்னும்.

௩

௩௪௧. நித்த மணாளர் நிரம்ப வழகியர்
சித்தத் திருப்பரா லன்னே யென்னுஞ்
சித்தத் திருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தரா னந்தரா லன்னே யென்னும்.

௪

௩௪௨. ஆடரப் பூணுடைத் தோல்பொடிப் பூசிற்றோர்
வேட மிருந்தவா றன்னே யென்னும்
வேட மிருந்தவா கண்டுகண் டென்னுள்ளம்
வாடு மிதுவென்னே யன்னே யென்னும்.

பதினேழாவது

அன்னைப் பத்து

ஆத்தும பூரணம்

இந்நாதனாரே நாதர்

336. வேத மொழியர், வெள்-நீற்றர், செம்-மேனியர்,
நாதப்[1] பறையினர் ; அன்னே !—என்னும் :
நாதப் பறையினர், நான்முகன் மாலுக்கும்
நாதர்,[2] இந் நாதனார் ; அன்னே !—என்னும். (1)

ஆனந்தக் கண்ணீர் தருகிறார்

337. கண் அஞ்சனத்தர்,[3] கருணைக் கடலினர்,
உள் நின்று உருக்குவர் ; அன்னே !—என்னும் :
உள் நின்று உருக்கி, உலப்பு[4] இலா ஆனந்தக்
கண்ணீர் தருவரால் ; அன்னே !—என்னும். (2)

சித்தத்து அழகியார்

338. நித்த மணாளர், நிரம்ப அழகியர்,
சித்தத்து இருப்பரால் ; அன்னே !—என்னும் :
சித்தத்து இருப்பவர் தென்னன் பெருந்துறை
அத்தர், ஆனந்தரால் ; அன்னே !—என்னும். (3)

என் உள்ளம் வாடும்

339. ஆடு அர, பூண்;[5] உடை, தோல்;பொடிப்[6]பூசிற்று ஓர்
வேடம் இருந்த ஆறு ! அன்னே !—என்னும் :
வேடம் இருந்தவா, கண்டு-கண்டு, என் உள்ளம்
வாடும் ; இது என்னே ! அன்னே !—என்னும். (4)

1 நாத தத்துவத்தின் ஓங்கார ஒலி
2 தலைவர்
3 மைதீட்டப் பெற்றவர்
4 அளவு
5 பாம்பு
6 திருநீறு

௫

௩௪௰. நீண்ட கரத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநன் னாடரா லன்னே யென்னும்
பாண்டிநன் னாடர் பரந்தெழு சிந்தையை
யாண்டன்பு செய்வரா லன்னே யென்னும்.

௬

௩௪௧. உன்னற் கரியசீ ருத்தர மங்கையர்
மன்னுவ தென்னெஞ்சி லன்னே யென்னும்
மன்னுவ தென்னெஞ்சின் மாலயன் காண்கிலா
ரென்ன வதிசய மன்னே யென்னும்.

௭

௩௪௨. வெள்ளைக் கலிங்கத்தர் வெண்டிரு முண்டத்தர்
பள்ளிக்குப் பாயத்த ரன்னே யென்னும்
பள்ளிக்குப் பாயத்தர் பாய்பரி மேல்கொண்டென்
னுள்ளங் கவர்வரா லன்னே யென்னும்.

௮

௩௪௩. தாளி யறுகினர் சந்தனச் சாந்தின
ராளெம்மை யாள்வரா லன்னே யென்னும்
ஆளெம்மை யாளு மடிகளார் தங்கையி
ருள மிருந்தவா றன்னே யென்னும்.

௯

௩௪௪. தையலோர் பங்கினர் தாபத வேடத்த
ரையம் புகுவரா லன்னே யென்னும்
ஐயம் புகுந்தவர் போதலு மென்னுள்ளம்
நையுமிது வென்னே யன்னே யென்னும்.

௧௰

௩௪௫. கொன்றை மதியமுங் கூவிள மத்தமுந்
துன்றிய சென்னிய ரன்னே யென்னுந்
துன்றிய சென்னியின் மத்தமுன் மத்தமே
யின்றெனக் கானவா றன்னே யென்னும்.

திருச்சிற்றம்பலம்

ஓடும் உள்ளத்தை ஒடுக்கினர்

340. நீண்ட கரத்தர்,[1] நெறிதரு[2] குஞ்சியர்,[3]
பாண்டி நல் நாடரால்; அன்னே !-என்னும்:
பாண்டி நல் நாடர் பரந்து எழு சிந்தையை
ஆண்டு அன்பு செய்வரால்; அன்னே !-என்னும். (5)

1. கையை உடையவர்
2 நெருங்கிய
3 தலைமயிரை உடையவர்

என்ன அதிசயம்

341. உன்னற்கு[4] அரிய சீர் உத்தர மங்கையர்
மன்னுவது[5] என் நெஞ்சில்; அன்னே !-என்னும்:
மன்னுவது என் நெஞ்சில்; மால், அயன், காண்கிலார்;
என்ன அதிசயம்! அன்னே!-என்னும். (6)

4 எண்ணுதற்கு
5 நிலைத்திருப்பது

உள்ளம் கவர்ந்தார்

342. வெள்ளைக் கலிங்கத்தர்,[6] வெண் திருமுண்டத்தர்,[7]
பள்ளிக் குப்பாயத்தர்;[8] அன்னே!-என்னும்:
பள்ளிக் குப்பாயத்தர் பாய்பரி[9] மேற்கொண்டு, என்
உள்ளம் கவர்வரால்; அன்னே!-என்னும். (7)

6 ஆடையை உடையவர்
7 மூன்று வரிகளாக அணிந்த திருநீற்றை உடையவர்
8 அரசாக்குரியசட்டை அணிந்தவர்
9 தாவும் குதிரை

ஆளும் அடிகளார்

343. தாளி[10] அறுகினர், சந்தனச் சாந்தினர்,[11]
ஆள் எம்மை ஆள்வரால்; அன்னே!-என்னும்:
ஆள் எம்மை ஆளும் அடிகளார்-தம் கையில்
தாளம் இருந்த ஆறு! அன்னே!-என்னும். (8)

10 கணுக்களில் இலைக்கும் இயல்புடையது
11 திருநீற்றினர்; குழம்பணிந்தவர்

என் உள்ளம் நைகின்றதே!

344. தையல்[12] ஓர் பங்கினர், தாபத,[13] வேடத்தர்,
ஐயம் புகுவரால்! அன்னே!-என்னும்:
ஐயம் புகுந்து அவர் போதலும், என் உள்ளம்
நையும்; இது என்னே! அன்னே!-என்னும். (9)

12 பெண்-உமையம்மை
13 தவ

பித்தேறினேன்!

345. கொன்றை மதியமும்,[14] கூவிளம்[15] மத்தமும்,[16]
துன்றிய[17] சென்னியர்; அன்னே!-என்னும்:
துன்றிய சென்னியின் மத்தம் உன்மத்தமே,[18]
இன்று எனக்கு ஆன ஆறு! அன்னே!-என்னும். (10)

14 திங்களும், பிறையும்
15 வில்வம்
16 ஊமத்தம்
17 நெருங்கிய
18 பெரும்பித்து

திருச்சிற்றம்பலம்.

பதினெட்டாவது

குயிற்பத்து

ஆத்துமவிரக்கம்

(ஆசிரிய விருத்தம்)

க

௩௪௬. கீத மினிய குயிலே கேட்டியே லெங்கள் பெருமான்
பாத மிரண்டும் வினவிற் பாதாள மேழினுக் கப்பாற்
சோதி மணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்ற தொன்மை
யாதிகுண மொன்று மில்லா னந்தமி லான்வரக் கூவாய்.

உ

௩௪௭. ஏர்தரு மேழுல கேத்த வெவ்வுரு வுந்தன் னுருவா
யார்கலி சூழ்தென் னிலங்கை யழகமர் வண்டோ தரிக்குப்
பேரரு ளின்ப மளித்த பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயாற் குயிலே தென்பாண்டி நாடனைக் கூவாய்.

௩

௩௪௮. நீல வுருவிற் குயிலே நீண்மணி மாட நிலாவுங்
கோல வழகிற் றிகழுங் கொடிமங்கை யுள்ளுறை கோயிற்
சீலம் பெரிது மினிய திருவுத் தரகோச மங்கை
ஞாலங் விளங்க விருந்த நாயக னைவரக் கூவாய்.

௪

௩௪௯. தேன்பழச் சோலை பயிலுஞ் சிறுகுயி லேயிது கேணீ
வான்பழித் திம்மண் புகுந்து மனிதரை யாட்கொண்ட வள்ள
லூன்பழித் துள்ளம் புகுந்தென் னுணர்வது வாய வொருத்தன்
மான்பழித் தாண்டமென் றோக்கி மணாளனை நீவரக் கூவாய்.

பதினெட்டாவது

குயில்-பத்து

ஆத்தும இரக்கம்

சொல்லுக்கு அடங்காது

346. கீதம் இனிய குயிலே! கேட்டியேல், எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின், பாதாளம்[1] ஏழினுக்கு அப்பால்;
சோதி மணிமுடி சொல்லின், சொல் இறந்து நின்ற தொன்மை;[2]
ஆதி; குணம் ஒன்றும் இல்லான்; அந்தம் இலான்; வரக் கூவாய்! (1)

1 கீழுலகம்
2 காலம் கடந்த பழமை

வண்டோதரிக்கு அருளினன்

347. ஏர்[3] தரும் ஏழ் உலகு ஏத்த, எவ்உருவும் தன் உரு ஆய்,
ஆர்கலி[4] சூழ் தென் இலங்கை,' அழகு அமர் வண்டோதரிக்கு,
பேர் அருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரானை,
சீரிய[5] வாயால், குயிலே! தென் பாண்டி நாடனை; கூவாய் (2)

3 அழகு
4 கடல்
5 சிறந்த

ஞாலம் விளங்க இருந்தான்

348. நீல உருவின் குயிலே! நீள் மணி மாடம் நிலாவும்
கோல அழகின் திகழும் கொடி மங்கை[6] உள்ளுறை கோயில்,
சீலம்[7] பெரிதும் இனிய திரு-உத்தரகோச மங்கை,
ஞாலம்[8] விளங்க இருந்த நாயகனை, வரக் கூவாய்! (3)

6 கொடிபோன்ற பெண் – உமையம்மை
7 நற்பணபும் நெறியும்
8 உலகம

வான் பழித்து மண் புகுந்தான்

349. தேன் பழச் சோலை பயிலும்[9] சிறு குயிலே! இது கேள் நீ,
வான் பழித்து, இம் மண் புகுந்து, மனிதரை ஆட்கொண்ட வள்ளல்;
ஊன் பழித்து, உள்ளம் புகுந்து, என் உணர்வு-அது ஆய ஒருத்தன்;
மான் பழித்து ஆண்ட மென் நோக்கி மணாளனை, நீ வரக் கூவாய்! (4)

9 தங்கும் ஒலிக்கும்

௫

௩௫௰. சுந்தரத் தின்பக் குயிலே சூழ்சுடர் ஞாயிறு போல
அந்தரத் தேநின் றிழிந்திங் கடியவ ராசை யறுப்பான்
முந்து நடுவு முடிவு மாகிய மூவ ரறியாச்
சிந்துரச் சேவடி யானைச் சேவக னைவரக் கூவாய்.

௬

௩௫௧. இன்பந் தருவன் குயிலே யேழுல கும்முழு தாளி
அன்ப னமுதளித் தூறு மானந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவ டொத்த நற்பரி மேல்வரு வானைக்
கொம்பின் மிழற்றுங் குயிலே கோகழி நாதனைக் கூவாய்.

௭

௩௫௨. உன்னை யுகப்பன் குயிலே யுன்றுணைத் தோழியு மாவன்
பொன்னை யழித்தநன் மேனிப் புகழிற் றிகழு மழகன்
மன்னன் பரிமிசை வந்த வள்ளல் பெருந்துறை மேய
தென்னவ னசேரலன் சோழன் சீர்ப்புயங் கன்வரக் கூவாய்.

௮

௩௫௩. வாவிங்கே நீகுயிற் பிள்ளாய் மாலொடு நான்முகன் றேடி
யோவிய வருன்னி நிற்ப வொண்டழல் விண்பிளந் தோங்கி
மேவியன் றண்டங் கடந்து விரிசுட ராய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன் றாழ்சடை யோன்வரக் கூவாய்.

௯

௩௫௪. காருடைப் பொன்றிகழ் மேனிக் கடிபொழில் வாழுங் குயிலே
சீருடைச் செங்கம லத்திற் றிகழுரு வாகிய செல்வன்
பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாச மறுத்தெனை யாண்ட
ஆருடை யம்பொனின் மேனி யமுதினை நீவரக் கூவாய்.

௧௰

௩௫௫. கொந்தண வும்பொழிற் சோலைக் கூங்குயி லேயிது கேணீ
யந்தண னாகிவந் திங்கே யழகிய சேவடி காட்டி
யெந்தம ராமிவ னென்றிங் கென்னையு மாட்கொண் டருளுஞ்
செந்தழல் போற்றிரு மேனித் தேவர் பிரான்வரக் கூவாய்.

திருச்சிற்றம்பலம்.

வான் நின்று இழிந்த ஞாயிறுவோ?

350. சுந்தரத்து இன்பக் குயிலே! சூழ் சுடர் ஞாயிறு போல,
அந்தரத்தே[1] நின்று இழிந்து, இங்கு, அடியவர் ஆசை அறுப்பான்;
முந்தும், நடுவும், முடிவும், ஆகிய மூவர் அறியாச்
சிந்துரச்[2] சேவடியானை, சேவகனை,[3] வரக் கூவாய்! (5)

1 வானத்திலே
2 சிவப்பு நிறமுடைய
3 வீரனை-சிவபெருமானை – காப்பவனை.

இன்பம் தரும் அன்பன்

351. இன்பம் தருவன்; குயிலே! ஏழ் உலகும் முழுது ஆளி;[4]
அன்பன்; அமுது அளித்து ஊறும் ஆனந்தன்; வான் வந்த தேவன்;
நன் பொன் மணிச் சுவடு[5] ஒத்த நல் பரிமேல் வருவானை,
கொம்பின்[6] மிழற்றும்[7] குயிலே! கோகழி நாதனை, கூவாய்! (6)

4 ஆளுகின்றவன்
5 அங்கவடி, சேணத்தின் இருபுறமும் தொங்கும அடிவைக்கும்படி
6 மரக்கிளைகளில
7 கூவும்

மூவேந்தன்

352. உன்னை உகப்பன்;[8] குயிலே! உன் துணைத் தோழியும் ஆவன்;
பொன்னை அழித்த நல் மேனிப் புகழின் திகழும் அழகன்,
மன்னன், பரிமிசை[9] வந்த வள்ளல், பெருந்துறை மேய
தென்னவன், சேரலன், சோழன், சீர்ப புயங்கன்,[10] வரக் கூவாய்! (7)

8 விரும்புவேன
9 குதிரையின மேல்
10 பாம்புகளை அணிந்தவன்

அண்டம் கடந்த விரிசுடர்

353. வா, இங்கே, நீ, குயில்-பிள்ளாய்! மாலொடு நான்முகன் தேடி,
ஓவி,[11] அவர் உன்னி[12] நிற்ப, ஒண் தழல் விண் பிளந்து ஓங்கி,
மேவி, அன்று, அண்டம் கடந்து, விரி சுடர் ஆய், நின்ற மெய்யன்;
தாவிவரும் பரிப்பாகன்; தாழ் சடையோன்; வரக் கூவாய்! (8)

11 இளைத்து
12 எண்ணி

பொன்மேனி அமுது

354. கார்[13] உடைப் பொன் திகழ் மேனி, கடி[14] பொழில் வாழும், குயிலே!
சீர் உடைச் செம்-கமலத்தில் திகழ் உரு ஆகிய செல்வன்;
பாரிடைப்[15] பாதங்கள் காட்டி, பாசம் அறுத்து, எனை ஆண்ட
ஆர்[16] உடை அம்பொனின் மேனி அமுதினை, நீ, வரக் கூவாய்! (9)

13 கருமை
14 மணம்
15 உலகததில்
16 ஆத்தி மலர்

'என் தமராம் இவன்' என்றுன்

355. கொந்து[17] அணவும்[18] பொழில் சோலைக் கூம்[19] குயிலே! இது கேள் நீ;
அந்தணன் ஆகி வந்து, இங்கே, அழகிய சேவடி காட்டி,
'எம் தமர்[20] ஆம் இவன்' என்று, இங்கு, என்னையும் ஆட்கொண்டருளும்
செம்-தழல் போல் திருமேனித் தேவர் பிரான், வரக் கூவாய்! (10)

17 பூங்கொத்து
18 மேல் நோக்கிச் செல்லும
19 கூவும்
20 உறவினர் சோந்தவர்

திருச்சிற்றம்பலம்

பத்தொன்பதாவது

திருத்தசாங்கம்

அடிமை கொண்ட முறைமை

(நேரிசை வெண்பா)

க

௩௫௬. ஏரார் இளங்கிளியே யெங்கள் பெருந்துறைக்கோன்
சீரார் திருநாமந் தேர்ந்துரையாய்—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோ
லெம்பெருமான் றேவர் பிரானென்று.

உ

௩௫௭. ஏதமிலா வின்சொன் மரகதமே யேழ்பொழிற்கும்
நாதனமை யாளுடையா னூரரையாய்—காதலவர்க்
கன்பாண்டு மீளா வருள்புரிவா னூ டென்றும்
தென்பாண்டி நாடே தெளி.

௩

௩௫௮. தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமையாளும்
மாதாடும் பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம் பார்மேற் சிவபுரம்போற் கொண்டாடும்
உத்தர சோசமங்கை யூர்.

௪

௩௫௯. செய்யவாய்ப் பைஞ்சிறகிற் செல்வீநஞ் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையா னாறுரையாய்—தையலாய்
வான்வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியு
மானந்தங் காணுடையா னாறு.

பத்தொன்பாதாவது

திருத்தசாங்கம்

அடிமை கொண்ட முறைமை

பெயர்

356. ஏர்[1] ஆர் இளம் கிளியே! எங்கள் பெருந்துறைக் கோன்
சீர் ஆர் திரு நாமம் தேர்ந்து உரையாய்-'ஆரூரன்,
செம்-பெருமான்', வெள்-மலரான், பால்-கடலான், செப்புவ போல்,
'எம்-பெருமான், தேவர் பிரான்', என்று. (1)

1 அழகு

நாடு

357. ஏதம்[2] இலா இன்சொல் மரகதமே![3] ஏழ்பொழிற்கும்
நாதன், நமை ஆளுடையான், நாடு உரையாய்-காதலவர்க்கு
அன்பு ஆண்டு, மீளா அருள் புரிவான் நாடு, என்றும்,
தென் பாண்டி நாடே, தெளி. (2)

2 குற்றம்
3 பச்சை மணியே-பைங்கிளியே

ஊர்

358. தாது[4] ஆடு பூஞ்சோலைத் தத்தாய்! நமை ஆளும்
மாது ஆடும் பாகத்தன்[5] வாழ் பதி என்?-கோதாட்டிப்[6]
பத்தர்[7] எல்லாம் பார்மேல், சிவபுரம் போல், கொண்டாடும்
உத்தரகோச மங்கை ஊர். (3)

4 பூந்தாது பூவிதழ்
5 சிவபெருமான்
6 சீராட்டி
7 அடியார்

யாறு

359. செய்ய[8] வாய்ப் பைம்-சிறகின் செல்வீ![9] நம் சிந்தை சேர்
ஐயன், பெருந்துறையான், ஆறு உரையாய்-தையலாய்![10]
வான் வந்த சிந்தை மலம் கழுவ வந்து இழியும்
ஆனந்தம் காண், உடையான் ஆறு. (4)

8 சிவந்த
9 கிளியே
10 பெண்ணே

ரு

௩௬௰. கிஞ்சுகவா யஞ்சுகமே கேடில் பெருந்துறைக்கோன்
மஞ்சு மருவு மலைபகராய் – நெஞ்சத்
திருளகல வாள்வீசி யின்பமரு முத்தி
யருளுமலை யென்பதுகா ணுய்ந்து.

சா

௩௬௧. இப்பாடே வந்தியம்பு கூடுபுக லென்கிளியே
ஒப்பாடாச் சீருடையா னூர்வதென்னே – எப்போதும்
தேன்புரையுஞ் சிந்தையராய்த் தெய்வப்பண் ணேத்திசைப்ப
வான்புரவி யூரு மகிழ்ந்து.

எ

௩௬௨. கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோதில் பெருந்துறைக்கோன்
மாற்றுரை வெல்லும் படைபகராய் – ஏற்றார்
அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை.

அ

௩௬௩. இன்பான் மொழிக்கிள்ளா யெங்கள் பெருந்துறைக்கோன்
முன்பான் முழங்கு முரசியம்பாய் – அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் பறை.

கூ

௩௬௪. ஆய மொழிக்கிள்ளா யள்ளூறு மன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தாரென் – தீயவினை
நாளுமணு காவண்ண நாயேனை யாளுடையான்
தாளியறு காமுவந்த தார்.

௰

௩௬௫. சோலைப் பசுங்கிளியே தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியுங் கொடிகூறாய் – சாலவும்
ஏதிலார் துண்ணென்ன மேல்விளங்கி யேர்காட்டுங்
கோதிலா வேறுங் கொடி

திருச்சிற்றம்பலம்.

மலை

360. கிஞ்சுக[1]வாய் அம்-சுகமே ![2] கேடு இல் பெருந்துறைக் கோன்
மஞ்சு[3] மருவு மலை பகராய்—நெஞ்சத்து
இருள் அகல வாள்[4] வீசி, இன்பு அமரும் முத்தி
அருளும் மலை என்பது காண், ஆய்ந்து. (5)

1 முருக்கம் பூ போன்ற
2 அழகிய கிளியே
3 மேகம்
4 ஒளி

ஊர்தி

361. இப் பாடே[5] வந்து, இயம்பு ; கூடு புகல் என் ? கிளியே !
ஒப்பு ஆடாச் சீர் உடையான் ஊர்வது என்னே ?—எப்போதும்
தேன் புரையும்[6]சிந்தையர் ஆய், தெய்வப் பண் ஏத்து இசைப்ப,
வான் புரவி[7] ஊரும், மகிழ்ந்து. (6)

5 பக்கமே
6 ஒத்த
7 குதிரை

படை

362. கோல்-தேன் மொழிக் கிள்ளாய் ! கோது[8] இல் பெருந்துறைக் கோன்,
மாற்றுரை வெல்லும் படை பகராய்—ஏற்றுர்
அழுக்கு அடையா நெஞ்சு உருக, மும் மலங்கள் பாயும்
கழுக்கடை[9] காண், கைக்கொள் படை. (7)

8 குற்றம்
9 சூலம்

முரசு

363. இன் பால்மொழிக்[10]கிள்ளாய் ! எங்கள் பெருந்துறைக் கோன்
முன் பால் முழங்கும் முரசு இயம்பாய்—அன்பால்,
பிறவிப் பகை கலங்க, பேரின்பத்து ஓங்கும்,
பரு மிக்க நாதப்[11]பறை. (8)

10 பால்போன்ற இனிய மொழி
11 நாததத்துவ மாகிய

மாலை

364. ஆய மொழிக் கிள்ளாய் ! அள்ளூறும்[12]அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த் தார் என் ?—தீயவினை
நாளும் அணுகாவண்ணம் நாயேனை ஆளுடையான்,
தாளி அறுகு ஆம், உவந்த தார். (9)

12 மிகவும் உள் ளம் உருகும்

கொடி

365. சோலைப் பசும்-கிளியே ! தூ நீர்ப் பெருந்துறைக் கோன்
கோலம்[13]பொலியும் கொடி கூறாய்,—சாலவும்,
ஏதிலார்[14]துண்-என்ன[15]மேல் விளங்கி ஏர் காட்டும்
கோது இலா ஏறு[16]ஆம், கொடி. (10)

13 அழகு
14 பகைவர்
15 திடுக்கிட
16 எருது

திருச்சிற்றம்பலம்.

இருபதாவது

திருப்பள்ளி யெழுச்சி

திரோதானசுத்தி

(ஆசிரிய விருத்தம்)

க

௩௬௬. போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் றிருமுகத் தெமக்கருண் மலரு
மெழினகை கண்டுநின் றிருவடி தொழுகோஞ்
சேற்றிதழ்க் கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

உ

௩௬௭. அருணனிந் திரன்றிசை யணுகின னிருள்போ
யகன்றது வுதயநின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரிய னெழவெழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணலங் கண்ணாந்
திரணிரை யறுபத முரல்வன விவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யருணிதி தரவரு மானந்த மலையே
அலைகட லேபள்ளி யெழுந்தரு ளாயே.

இருபதாவது

திருப்பள்ளி எழுச்சி

திரோதான சுத்தி

புலர்ந்தது பொழுது

366. போற்றி! என் வாழ் முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது; பூம்-கழற்கு இணை துணை மலர் கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கண்டு, நின் திருவடி தொழுகோம்-
சேற்று இதழ்க் கமலங்கள்[1] மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஏற்று[2] உயர் கொடி உடையாய்! எமை உடையாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (1)

1 தாமரை மலர்கள்
2 எருது எழுதிய

அகன்றது இருள்

367. அருணன்,[3] இந்திரன்-திசை[4] அணுகினன்; இருள் போய்
அகன்றது; உதயம் நின் மலர்த் திருமுகத்தின்
கருணையின் சூரியன் எழ-எழ, நயனக்[5]
கடி[6] மலர் மலர, மற்று அண்ணல்-அம்-கண் ஆம்
திரள்[7] நிரை[8] அறுபதம்[9] முரல்வன[10] இவை ஓர்[11]—
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
அருள் நிதி[12] தர வரும் ஆனந்த மலையே!
அலை கடலே! பள்ளி எழுந்தருளாயே! (2)

3 கதிரவனுடைய தேர்ப்பாகன்
4 கீழைத்திசை
5 கண்ணாகிய
6 மணமுள்ள
7 கூட்டம்
8 வரிசை
9 வண்டு
10 ரீங்காரம் செய்கின்றன
11 திருவுளங் கொள்க
12 செல்வம்

௩

௩௬அ. கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுக ளியம்பின வியம்பின சங்க
மோவின தாரகை யொளியொளி யுதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழற் றாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரு மறிவரி யாயெமக் கெளியா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

௪

௩௬௯. இன்னிசை வீணைய ரியாழின ரொருபால்
இருக்கொடு தோத்திர மியம்பின ரொருபாற்
றுன்னிய பிணைமலர்க் கையின ரொருபாற்
றொழுகைய ரழுகையர் துவள்கைய ரொருபாற்
சென்னியி லஞ்சலி கூப்பின ரொருபாற்
றிருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யென்னையு மாண்டுகொண் டின்னருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

௫

௩௭௰. பூதங்க டோறுநின் றாயெனி னல்லாற்
போக்கிலன் வரவில னெனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுத லாடுத லல்லாற்
கேட்டறி யோமுனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயற்றிருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்மரி யாயெங்கண் முன்வந்
தேதங்க ளறுத்தெம்மை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

எழுந்தன அனைத்தும்

368. கூவின பூம்-குயில்; கூவின கோழி;
குருகுகள்[1] இயம்பின;[2] இயம்பின சங்கம்;
ஓவின[3] தாரகை[4] ஒளி; ஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு, நமக்கு-
தேவ! நல் செறி கழல் தாள்-இணை காட்டாய்!
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
யாவரும் அறிவு-அரியாய்! எமக்கு எளியாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (3)

1 பறவைகள்
2 பாடின
3 மங்கின
4 விண்மீன் நக்ஷத்திரம்

இயம்பினர் வாழ்த்து

369. இன் இசை வீணையர், யாழினர், ஒருபால்;
இருக்கொடு[5] தோத்திரம் இயம்பினர், ஒருபால்;
துன்னிய பிணை மலர்க் கையினர், ஒருபால்;
தொழுகையர், அழுகையர், துவள்கையர், ஒருபால்;
சென்னியில்[6] அஞ்சலி[7] கூப்பினர், ஒருபால்.
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
என்னையும் ஆண்டுகொண்டு, இன் அருள் புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (4)

5 இருக்குவேத மந்திரங்களோடு
6 தலைமேல்
7 கைகூப்பி

பாடுகின்றார் ஆடுகின்றார்

370. பூதங்கள்[8] தோறும் நின்றாய்' எனின், அல்லால்,
‘ போக்கு இலன், வரவு இலன், என, நினைப் புலவோர்,
கீதங்கள்[9] பாடுதல், ஆடுதல், அல்லால்,
கேட்டு அறியோம், உனைக் கண்டு அறிவாரை:-
சீதம் கொள் வயல் திருப்பெருந்துறை மன்னா!
சிந்தனைக்கும் அரியாய்! எங்கள் முன் வந்து,
ஏதங்கள்[10] அறுத்து, எம்மை ஆண்டு, அருள்புரியும்
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (5)

8 ஐம்பூதங்கள்
9 இசைப்பாட்டுகள்
10 குற்றங்கள்

௬


௩௭௧. பப்பற வீட்டிருந் துணருநின் னடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரு
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றூரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கண் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யிப்பிறப் பறுத்தெமை யாண்டருள் புரியு
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

௭

௩௭௨. அதுபழச் சுவையென வமுதென வறிதற்
கரிதென வெளிதென வமரரு மறியார்
இதுவவன் றிருவுரு விவனவ னெனவே
யெங்களை யாண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழிற்றிரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
வெதுவெமைப் பணிகொளு மாறது கேட்போ
மெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

௮

௩௭௩. முந்திய முதனடு விறுதியு மானாய்
மூவரு மறிகில ரியாவர்மற் றறிவார்
பந்தணை விரலியு நீயுமின் னடியார்
பழங்குடி றொறுமெழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
யந்தண னாவதுங் காட்டிவந் தாண்டா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.



திரு உத்தரகோசமங்கை

வணங்குவதே இனிமையும் இயல்பும்

371. பப்பு[1] அற வீட்டு இருந்து உணரும் நின் அடியார்,
பந்தனை[2] வந்து அறுத்தார் ;—அவர்பலரும்,
மைப்பு[3] உறு கண்ணியர், மானிடத்து இயல்பின்
வணங்குகின்றார். — அணங்கின்[4] மணவாளா !
செப்பு[5] உறு கமலங்கள்[6] மலரும் தண் வயல் சூழ்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே !
இப்பிறப்பு அறுத்து, எமை ஆண்டு, அருள் புரியும்
எம்பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே ! (6)

1 மனப் பரபரப்பு
2 பிறவிப்பிணி-கட்டு
3 மைதீட்டிய கருமை
4 தெய்வப்பெண் – உமையம்மை
5 இண்ணம்
6 தாமரை மலர்கள்

இவன் அவன்

372. அது, பழச் சுவை என, அமுது என ; அறிதற்கு
அரிது என, எளிது என ; அமரரும் அறியார் :
இது, அவன் திரு உரு ; இவன், அவன் ; எனவே
எங்களை ஆண்டு கொண்டு, இங்கு எழுந்தருளும்,
மது[7] வளர் பொழில் திரு உத்தர கோச –
மங்கை உள்ளாய் ! திருப்பெருந்துறை மன்னு !
எது எமைப் பணி கொளும் ஆறு ? அது கேட்போம் :
எம் பெருமான் ! பள்ளி எழுந்தருளாயே ! (7)

7 தேன்

தேடி வந்த தெய்வம்

373. முந்திய முதல், நடு, இறுதியும், ஆனாய் ;
மூவரும் அறிகிலர் ; யாவர் மற்று அறிவார் ? —
பந்து அணை விரலியும், நீயும், நின் அடியார்
பழம் குடில்[8] தொறும் எழுந்தருளிய பரனே !
செம்-தழல் புரை[9] திருமேனியும் காட்டி,
திருப்பெருந்துறை உறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி, வந்து ஆண்டாய் !
ஆர் அமுதே ! பள்ளி எழுந்தருளாயே ! (8)

8 சிறுவீடுகள்
9 ஒத்த

கூ

௩௭௪. விண்ணகத் தேவரு நண்ணவு மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கண்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்டிருப் பெருந்துறை யாய்வழி யடியோங்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியா
ரெண்ணகத் தாயுல குக்குயி ரானா
யெம்பெரு மான்பள்ளி யெழுந்தரு ளாயே.

கய

௩௭௫. புவனியிற் போய்ப்பிற வாமையி னாணும்
போக்குகின் றேமவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலா
மவன்விருப் பெய்தவு மலரவ னாசைப்
படவுநின் னலர்ந்தமெய்க் கருணையு நீயு
மவனியிற் புகுந்தெமை யாட்கொள்ள வல்லா
யாரமு தேபள்ளி யெழுந்தரு ளாயே.

திருச்சிற்றம்பலம்.

உலகுக்கு உயிர்

374. விண்ணகத்[1] தேவரும் நண்ணவும்[2] மாட்டா
விழுப்பொருளே![3] உன தொழுப்பு அடியோங்கள்,
மண்ணகத்தே வந்து, வாழச் செய்தானே!
வண் திருப்பெருந்துறையாய்! வழி அடியோம்
கண் அகத்தே நின்று, களிதரு தேனே!
கடல் அமுதே! கரும்பே! விரும்பு அடியார்
எண்[4] அகத்தாய்! உலகுக்கு உயிர் ஆனாய்!
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே! (9)

1 வானுலக
2 அனுகவும்
3 மேன்மையானவனே
4 உள்ளத்தின்

மாண்புற்றது மண்ணுலகம்

375. 'புவனியில்[5] போய்ப் பிறவாமையின், நாள் நாம்
போக்குகின்றோம் அவமே; இந்தப் பூமி,
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' என்று நோக்கி,
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், அலரவன்[6] ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்,
அவனியில்[7] புகுந்து, எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே! (10)

5 நிலவுலகில்
6 பிரமன்
7 உலகததில

திருச்சிற்றம்பலம்

இருபத்தொன்றுவது

கோயின் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம்

ஆசிரிய விருத்தம்

க

௩௭௬. உடையா ளுன்ற னடுவிருக்கு
முடையா ணடுவு ணீயிருத்தி
யடியே னடுவு ளிருவீரு
மிருப்ப தானு லடியேனுன்
னடியார் நடுவு ளிருக்குமரு
ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து
முடியும் வண்ண முன்னின்றே.

உ

௩௭௭. முன்னின் ருண்டா யெனைமுன்ன
மியானு மதுவே முயல்வுற்றுப்
பின்னின் றேவல் செய்கின்றேன்
பிற்பட் டொழிந்தேன் பெம்மானே
யென்னென் றருளி வரநின்று
போந்தி டென்னு விடிலடியா
ருன்னின் றிவனு ரென்னுரோ
பொன்னம் பலக்கூத் துகந்தானே.

இருபத்தொன்றுவது

கோயில் மூத்த திருப்பதிகம்

அநாதியாகிய சற்காரியம்

அடியார் நடுவுள் இருக்க வேண்டும்

376. உடையாள்,[1] உன்-தன் நடுவு, இருக்கும் ;
உடையாள் நடுவுள், நீ இருத்தி ;
அடியேன் நடுவுள், இருவீரும்
இருப்பதானுல், அடியேன், உன்
அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரியாய்-பொன்னம் பலத்து எம்
முடியா[2] முதலே! என் கருத்து
முடியும் வண்ணம், முன் நின்றே! (1)

1 உமையம்மை
2 ஈறில்லாத

வழுவினேன் வா என்று அருளாயோ?

377. முன் நின்று ஆண்டாய், எனை முன்னம் ;
யானும், அதுவே முயல்வு உற்று,
பின் நின்று, ஏவல் செய்கின்றேன் ;
பிற்பட்டு ஒழிந்தேன் ; பெம்மானே !
'என் ?' என்று, அருள் இவர[3] நின்று,
'போந்திடு' என்னுவிடில், அடியார்,
உன் நின்று, 'இவன் ஆர்' என்னுரோ ?
பொன்னம்பலக் கூத்து உகந்தானே ! (2)

3 ஓங்க

௩

௩எஅ. உகந்தானே யன்புடை யடிமைக்
குருகா வுள்ளத் துணர்விலியேன்
சகந்தா னறிய முறையிட்டாற்
றக்க வாறன் றென்னுரோ
மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தா யடியேற்குன்
முகந்தான் றாரா விடின்முடிவேன்
பொன்னம் பலத்தெம் முழுமுதலே.

௪

௩எ௯. முழுமுத லேயைம் புலனுக்கு
மூவர்க்கு மென்ற னக்கும்
வழிமுத லேநின் பழவடியார்
திரள் வான் குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக்க
விரங்குங் கொல்லோ வென்
றழுமது வேயன்றி மற்றென்
செய்கேன் பொன்னம் பலத்தரைசே

௫

௩அ௦. அரைசே பொன்னம் பலத்தாடு
மமுதே யென்றுன் னருணோக்கி
யிரைதேர் கொக்கொத் திரவுபக
லேசற் றிருந்தே வேசற்றேன்
கரைசே ரடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்துன் னடியேன்பால்
பிரைசேர் பாலி னெய்போலப்
பேசா திருந்தா லேசாரோ.

திருமுகம் அல்லால் திக்கு எனக்கு ஏது ?

378. உகந்தானே ! அன்பு உடை அடிமைக்கு ;
உருகா உள்ளத்து உணர்வு இலியேன்,
சகம்[1]–தான் அறிய முறையிட்டால்,
'தக்க ஆறு அன்று' என்னாரோ ?
மகம்[2]–தான் செய்து வழிவந்தார்
வாழ, வாழ்ந்தாய் ; அடியேற்கு உன்
முகம்–தான் தாராவிடின், முடிவேன் ;
பொன்னம் பலத்து எம் முழு-முதலே ! (3)

1 உலகம்
2 வேள்வி

அருள் நினைந்து அழுவது அல்லால் என் செய்வேன் ?

379. முழு-முதலே ![3] ஐம் புலனுக்கும்,
மூவர்க்கும்,[4] என்–தனக்கும்,
வழி முதலே ![5] நின் பழ அடியார்
திரள், வான்[6] குழுமிக்[7]
கெழு[8] முதலே ! அருள் தந்து இருக்க
இரங்கும்-கொல்லோ ?' என்று
அழும்–அதுவே அன்றி, மற்று என்
செய்கேன் ? பொன்னம்பலத்து அரைசே ! (4)

3 முதற்காரணமாக வுள்ளவனே
4 மும்மூர்த்திகள்
5 நிமித்த காரணமாக வுள்ளவனே
6 சிறப்பாக, மிகுதியாக
7 கூடி
8 பொருந்து

மறைய நின்ற மாமணி

380. 'அரைசே ! பொன்னம் பலத்து ஆடும்
அமுதே !' என்று உன் அருள் நோக்கி,
இரை தேர் கொக்கு ஒத்து, இரவு பகல்,
ஏசற்று[9] இருந்தே வேசற்றேன் ;[10]
கரை[11]சேர் அடியார் களி சிறப்ப,
காட்சி கொடுத்து, உன் அடியேன் பால்,
பிரை சேர் பாலின் நெய் போல,
பேசாது[12] இருந்தால், ஏசாரோ ? (5)

9 வருந்தி
10 வாடினேன்
11 வீட்டின்பத்தை
12 மறைந்து

௬

௩௮௧ ஏசா நிற்ப ரென்னையுனக்
கடியா னென்று பிறரெல்லாம்
பேசா நிற்ப ரியான்றானும்
பேணா நிற்பே னின்னருளே
தேசா நேசர் சூழ்ந்திருக்குந்
திருவோ லக்கஞ் சேவிக்க
வீசா பொன்னம் பலத்தாடு
மெந்தா யினித்தா னிரங்காயே.

௭

௩௮௨. இரங்கு நமக்கம் பலக்கூத்த
னென்றென் றேமாந் திருப்பேனை
யருங்கற் பனைகற் பித்தாண்டா
யாள்வா ரிலிமா டாவேனோ
நெருங்கு மடியார் களுநீயு
நின்று நிலாவி விளையாடு
மருங்கே சார்ந்து வரவெங்கள்
வாழ்வே வாவென் றருளாயே.

௮

௩௮௩. அருளா தொழிந்தா லடியேனை
யஞ்சே லென்பா ராரிங்குப்
பொருளா வென்னைப் புகுந்தாண்ட
பொன்னே பொன்னம் பலக்கூத்தா
மருளார் மனத்தோ டுனைப் பிரிந்து
வருந்து வேனை வாவென்றுன்
றெருளார் கூட்டங் காட்டாயேற்
செத்தே போனாற் சிரியாரோ.

திருவோலக்கம் சேவிப்பது எப்போது?

381. ஏசா நிற்பர், என்னை; உனக்கு
அடியான் என்று, பிறர் எல்லாம்
பேசா நிற்பர்; யான்-தானும்
பேணு[2] நிற்பேன், நின் அருளே;
தேசா! நேசர் சூழ்ந்து இருக்கும்
திருவோலக்கம் சேவிக்க,
ஈசா! பொன்னம் பலத்து ஆடும்
எந்தாய்! இனித்தான் இரங்காயே! (6)

1 தூற்றுவார்
2 விரும்பி

அருகில் வர அழையாயோ?

382. 'இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன்'
என்று-என்று, ஏமாந்திருப்பேனை,[3]
அரும் கற்பனை[4] கற்பித்து, ஆண்டாய்;
ஆள்வார்[5] இலி மாடு ஆவேனோ?
நெருங்கும் அடியார்களும், நீயும்,
நின்று, நிலாவி, விளையாடும்
மருங்கே[6] சார்ந்து வர, எங்கள்
வாழ்வே, 'வா' என்று அருளாயே! (7)

3 மகிழ்ச்சியாக விருக்கும் என்னை
4 ஏற்பாட்டை, முறையை
5 உரியவர்
6 அருகே

பிரிந்தால் கூடலாகாதா?

383. அருளாது ஒழிந்தால், அடியேனை,
'அஞ்சேல்' என்பார் ஆர், இங்கு?
பொருளா, என்னைப் புகுந்து, ஆண்ட
பொன்னே! பொன்னம்பலக் கூத்தா!
மருள்[7] ஆர் மனத்தோடு, உனைப் பிரிந்து,
வருந்துவேனை, 'வா' என்று, உன்
தெருள்[8] ஆர் கூட்டம் காட்டாயேல்,
செத்தே போனால், சிரியாரோ? (8)

7 மயக்கம், தெளிவின்மை
8 ஞானத்தால் தெளிந்த தெளிவு.

௯

௩௮௪. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் றிருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வே றிருந்துன் றிருநாமந்
தரிப்பார் பொன்னம் பலத்தாடுந்
தலைவா வென்பா ரவர்முன்னே
நரிப்பாய் நாயே னிருப்பேனோ
நம்பீ யினித்தா னல்காயே.

௰

௩௮௫. நல்கா தொழியா னமக்கென்றுன்
னாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்த வாய்குழறா
வணங்கா மனத்தா னினைந்துருகிப்
பல்கா லுன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலமென்றே
யொல்கா நிற்கு முயிர்க்கிரங்கி
யருளா யென்னை யுடையானே.

திருச்சிற்றம்பலம்.

திருவருளில் திளைக்கும் அடியார்

384. சிரிப்பார் ; களிப்பார் ; தேனிப்பார் ;[1]
திரண்டு, திரண்டு, உன் திருவார்த்தை
விரிப்பார் ; கேட்பார் ; மெச்சுவார் ;
வெவ்வேறு இருந்து, உன் திருநாமம்[2]
தரிப்பார் ;[3] 'பொன்னம்பலத்து ஆடும்
தலைவா' என்பார் ; அவர் முன்னே
நரிப்பு[4] ஆய், நாயேன் இருப்பேனு ?
நம்பி ! இனித்தான் நல்காயே ! (9)

1 தியானிப்பார்; ஒருமை யுடன் உள்ளத்தில் கொள்வார்
2 தி வைந்தெழுத்து
3 ளத்துக் .ான்னுவார்
4 இக

உறுதியுள்ளேன் உயிர்தாங்கேன்

385. 'நல்காது[5] ஒழியான் நமக்கு' என்று உன்
நாமம் பிதற்றி, நயனநீர்[6]
மல்கா,[7] வாழ்த்தா, வாய்குழறு,
வணங்கா, மனத்தால் நினைந்து உருகி,
பல்கால் உன்னைப் பாவித்து,[8]
பரவி, 'பொன்னம்பலம்' என்றே
ஓல்கா[9] நிற்கும் உயிர்க்கு இரங்கி,
அருளாய் ! என்னை உடையானே ! (10)

5 அருளாது
6 கண்ணீர்
7 பெருக
8 உள்ளததில் உருசெய்து
9 தளர்ந்து, ஒடிந்து

திருச்சிற்றம்பலம்

இருபத்திரண்டாவது

கோயிற்றிருப்பதிகம்

அநுபோகவிலக்கணம்

ஆசிரிய விருத்தம்

க

௩௮௬. மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
யூறிநின் றென்னு ளெழுபரஞ் சோதி
யுள்ளவா காணவந் தருளாய்
தேறலின் றெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
யீறிலாப் பதங்க ளாயவை கடந்த
வின்பமே யென்னுடை யன்பே.

உ

௩௮௭. அன்பினா லடியே னாவியோ டாக்கை
யானந்த மாய்க்கசிந் துருக
வென்பர மல்லா வின்னரு டந்தா
யானிதற் கிலனொர் கைம்மா று
முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

இருபத்திரண்டாவது

கோயில் திருப்பதிகம்

அனுபோக இலக்கணம்

உள் எழுந்த அமுது

386. மாறி நின்று, என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து ; அமுதே
ஊறி நின்று ; என் உள் எழு பரஞ்சோதி !
உள்ளவா காண வந்தருளாய் ;
தேறலின்[1] தெளிவே ! சிவபெருமானே !
திருப்பெருந்துறை உறை சிவனே !
ஈறு[2] இலாப் பதங்களாய்[3] அவைகடந்த
இன்பமே ! என்னுடை அன்பே ! (1)

1 தேர்ந்த பொருளின்
2 முடிவு
3 நிலைகள்

கைம்மாறும் உண்டோ ?

387. அன்பினால், அடியேன் ஆவியோடு, ஆக்கை,
ஆனந்தமாய்க் கசிந்து உருக,
என்பரம்[4] அல்லா இன் அருள் தந்தாய் ;
யான், இதற்கு இலன் ஓர் கைம்மாறு ;
முன்பும் ஆய், பின்பும் முழுதும் ஆய், பரந்த
முத்தனே ![5] முடிவு இலாமுதலே !
தென்பெருந்துறையாய் ! சிவபெருமானே !
சீர் உடைச் சிவபுரத்து அரைசே ! (2)

4 என்னுடைய ஆற்றல்
5 முத்தி தருபவன்

௩.

௩அஅ. அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
யுரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

௪

௩அகூ. உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தா
ருணர்வுக்குந் தெரிவரும் பொருளே
யிணாங்கிலி யெல்லா வுயிர்கட்கு முயிரே
யெனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்ததோ ரிருளிற் றெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே.

௫

௩கூ0. குறைவிலா நிறைவே கோதிலா வமுதே
யீறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபொரா நீர்போற் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யிறைவனே நீயென் னுடலிடங் கொண்டா
யினியுன்னை யென்னிரக் கேனே.

உரைப்பது எப்படி?

388. அரைசனே! அன்பர்க்கு; அடியனேன் உடைய
அப்பனே! ஆவியோடு ஆக்கை
புரை புரை[1] கனியப் புகுந்து நின்று, உருக்கி,
பொய்இருள் கடிந்த மெய்ச்சுடரே!
திரை பொரா[2] மன்னும்[3] அமுதத் தெண்கடலே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
உரை, உணர்வு, இறந்து நின்று, உணர்வது ஓர் உணர்வே!
யான், உன்னை உரைக்கும் ஆறு, உணர்த்தே, (3)

1 எலும்பின் உட்கூடு எல்லாம்
2 அலையற்று; கலக்கமில்லாமல
3 நிலைபெற்ற

திணிந்த இருளில் தெளிந்த ஒளி

389. உணர்ந்த மாமுனிவர், உம்பரோடு,[4] ஒழிந்தார்
உணர்வுக்கும், தெரிவு-அரும் பொருளே!
இணங்கு[5] இலி! எல்லா உயிர்கட்கும் உயிரே!
எனைப் பிறப்புஅறுக்கும் எம்மருந்தே!
திணிந்தது ஓர் இருளில், தெளிந்த தூ ஒளியே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
குணங்கள்-தாம் இல்லா இன்பமே! உன்னைக்
குறுகினேற்கு இனி என்ன குறையே? (4)

4 தேவர்களோடு
5 ஒப்பு

அணை கடந்த அருள் வெள்ளம்

390. குறைவு இலா நிறைவே! கோது இலா அமுதே!
ஈறு இலாக் கொழும் சுடர்க் குன்றே!
மறையும் ஆய், மறையின் பொருளும் ஆய், வந்து என்
மனத்திடை மன்னிய மன்னே!
சிறை பொரு[6] நீர் போல், சிந்தை வாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே!
இறைவனே! நீ, என் உடல் இடம் கொண்டாய்;
இனி, உன்னை என் இரக்கேனே? (5)

6 கட்டில் நிற்காத

சா

௩௬௧. இரந்திரந் துருக வென்மனத் துள்ளே
யெழுகின்ற சோதியே யிமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறை யுறை சிவனே
நிரந்தவா காய நீர்நிலந் தீகா
லாயவை யல்லையா யாங்கே
கரந்ததோ ருருவே களித்தன னுன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

எ

௩௬௨. இன்றெனக் கருளி யிருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் றன்மை நினைப்பற நினைந்தே
னீயலாற் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாந்
திருப்பெருந் துறையுறை சிவனே
யொன்றுநீ யல்லை யன்றியொன் றில்லை
யாருன்னை யறியகிற் பாரே.

அ

௩௬௩. பார்பத மண்ட மனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதே லரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை யெழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் காரய லுள்ளா
ரானந்த மாக்குமென் சோதீ.



சிதம்பரம் தெற்கு கோபுரம்

கரந்தது கண்டு களித்தேன்

391. இரந்து – இரந்து[1] உருக, என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே! இமையோர்
சிரம் – தனில் பொலியும் கமலச் சேவடியாய்!
திருப்பெருந்துறை உறை சிவனே!
நிரந்த[2] ஆகாயம், நீர், நிலம், தீ, கால்
ஆய், அவை அல்லை ஆய் ஆங்கே,
கரந்தது[3] ஓர் உருவே! களித்தனன், உன்னைக்
கண் உறக்[4] கண்டுகொண்டு, இன்றே. (6)

1 வேண்டி வேண்டி
2 கலந்த
3 மறைந்து நின்றது
4 கண்ணார

உள் எழுந்த ஞாயிறு

392. இன்று, எனக்கு அருளி, இருள் கடிந்து[5], உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்;
நீ அலால் பிறிது மற்று இன்மை;
சென்று - சென்று, அணுவாய்த் தேய்ந்து - தேய்ந்து, ஒன்று ஆம்
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஒன்றும் நீ அல்லை; அன்றி ஒன்று இல்லை
யார் உன்னை அறியகிற்பாரே? (7)

5 விலக்கி, போக்கி

ஆனந்த ஒளியில் அயல் ஏது?

393. பார்,[6] பதம்,[7] அண்டம், அனைத்தும் ஆய் முளைத்துப்
படர்ந்தது ஓர் படர் ஒளிப் பரப்பே!
நீர் உறு தீயே! நினைவதேல், அரிய
நின்மலா![8] நின் அருள் – வெள்ளச்
சீர் உறு சிந்தை எழுந்தது ஓர் தேனே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆர் உறவு எனக்கு, இங்கு? யார் அயல் உள்ளார்?
ஆனந்தம் ஆக்கும் என் சோதி! (8)

6 நிலவுலகம்
7 இந்திரன், பிரமன் முதலியவர்களுடைய நிலை
8 மாசு அணுகாதவனே

௯

௩௬௪. சோதியாய்த் தோன்று முருவமே யருவா
மொருவனே சொல்லுதற் கரிய
வாதியே நடுவே யந்தமே பந்த
மறுக்குமா னந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் னிணையடி தந்தே.

௰

௩௬௫. தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா வார்கொலோ சதுர
ரந்தமொன் றில்லா வானந்தம் பெற்றே
னியாதுநீ பெற்றதொன் றென்பாற்
சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்
றிருப்பெருந் துறையுறை சிவனே
யெந்தையே யீசா வுடலிடங் கொண்டா
யானிதற் கிலனொர் கைம் மாறே.

திருச்சிற்றம்பலம்.

போக விடுவேனோ ?

394. சோதியாய்த் தோன்றும் உருவமே! அரு ஆம்
ஒருவனே! சொல்லுதற்கு அரிய
ஆதியே! நடுவே! அந்தமே! பந்தம்
அறுக்கும் ஆனந்த மா கடலே!,
தீது இலா நன்மைத் திருவருள்—குன்றே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
யாதுநீ போவது, ஓர்-வகை? எனக்கு அருளாய் —
வந்து நின் இணை-அடி தந்தே. (9)

சிந்தையே கோயில்

395. தந்தது, உன்-தன்னை; கொண்டது, என்-தன்னை;
சங்கரா! ஆர்-கொலோ, சதுரர்?[1]
அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்;
யாது நீ பெற்றது ஒன்று, என்பால்?
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல் இடம் கொண்டாய்;
யான் இதற்கு இலன், ஓர் கைம்மாறே! (10)

1 திறமையுடையவர்

உ திருச்சிற்றம்பலம் ௳

இருபத்து மூன்றாவது

செத்திலாப் பத்து

சிவானந்த மளவறுக் கொணுமை

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

௧

௩௯௬. பொய்யனே னகநெகப் புகுந்தமு தூறும்
புதுமல ர்க்கழ லிணையடி பிரிந்துங்
கையனே னின்னுஞ் செத்திலே னந்தோ
விழித்திருந் துள்ளக் கருத்தினை யிழந்தே
னையனே யரசே யருட்பெருங் கடலே
யத்த னேயயன் மாற்கறி யொண்ணுச்
செய்யமே னியனே செய்வகை யறியேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே

௨

௩௯௭. புற்று மாய்மர மாய்ப்புனல் காலே
யுண்டி யாயண்ட வாணரும் பிறரும்
மற்றி யாருநின் மலரடி காணு
மன்ன வென்னையோர் வார்த்தையுட் படுத்துப்
பற்றிஞய் பதையேன் மனமிக வுருகேன்
பரிகி லேன்பரி யாவுட றன்னைச்
செற்றிலே னின்னுந் திரிதரு கின்றேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

இருபத்து மூன்றாவது

செத்திலாப் பத்து

சிவானந்த மளவறுக் கொணுமை

பிரிந்தும் வாழ்வா ? செய்வகை அறியேன்

396. பொய்யனேன் அகம் நெகப் புகுந்து, அமுது ஊறும்,
புதுமலர்க் கழல்-இணை-அடி பிரிந்தும்,
கையனேன்,[1] இன்னும் செத்திலேன் ; அந்தோ ! — 1 கீழ்மகனாகிய யான்
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்.
ஐயனே ! அரசே ! அருள்-பெரும்-கடலே !
அத்தனே ! அயன், மாற்கு, அறி ஒண்ணாச்
செய்ய[2] மேனியனே ! செய்வகை அறியேன் ; — 2 சிவந்த
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (1)

சொல்லிய சொல் ஒரு சொல்லே

397. புற்றும் ஆய், மரம் ஆய் ; புனல், காலே,
உண்டி ஆய் ; அண்ட வாணரும், பிறரும்,
மற்று யாரும், நின் மலர் அடி காணா
மன்ன ! என்னை ஓர் வார்த்தையுள் படுத்து,
பற்றினாய் ; பதையேன் ; மனம் மிக உருகேன் ; — 3 அனல்பால் உருகேன்
பரிகிலேன் ;[3] பரியா[4] உடல்-தன்னைச் — 4 உருகா
செற்றிலேன் ;[5] இன்னும் திரிதருகின்றேன் ; — 5 வெறுத்திலேன்
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (2)

ங

நகூஅ. புலைய னேனையும் பொருளென நினைந்துன்
னருள்பு ரிந்தனை புரிதலுங் களித்துத்
தலையி னுனடந் தேன்விடைப் பாகா
சங்கரா வெண்ணில் வானவர்க் கெல்லா
நிலைய னேயலை நீர்விட முண்ட
நித்த னேயுடை யார்புர மெரித்த
சிலைய னேயெனைச் செத்திடப் பணியாய்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

ச

நகக. அன்ப ராகிமற் றருந்தவ முயல்வா
ரயனு மாலுமற் றழலுறு மெழுகா
மென்ப ராய்நினை வாரெ னைப்பலர்
நிற்க விங்கெனை யெத்தினுக் காண்டாய்
வன்ப ராய்முரு டொக்குமென் சிந்தை
மரக்க ணென்செவி யிரும்பினும் வலிது
தென்ப ராய்த்துறை யாய்சிவ லோகா
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

ரு

சூ. ஆட்டுத் தேவர்தம் விதியொழித் தன்பா
லையனே யென்றுன் னருள்வழி யிருப்பே
னாட்டுத் தேவரு நாடரும் பொருளே
நாத னேயுனைப் பிரிவுறு வருளைக்
காட்டித் தேவநின் கழலிணைக் காட்டிக்
காய மாயத்தைக் கழித்தருள் செய்யாய்
சேட்டைத் தேவர்தந் தேவர்பி ரானே
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

பெற்ற அருளால் பிறழ்வது செய்தேன்

398. புலையனேனையும், பொருள் என நினைந்து, உன்
அருள் புரிந்தனை ; புரிதலும், களித்துத்
தலையினால் நடந்தேன் ; விடைப் பாகா[1] !
சங்கரா ! எண் இல் வானவர்க்கு எல்லாம்
நிலையனே[2] ! அலை நீர் விடம் உண்ட
நித்தனே ! அடையார்[3] புரம் எரித்த
சிலையனே[4] ! எனைச் செத்திடப் பணியாய் ;
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (3)

1 எருது ஊரும் பெருமானே
2 நிலையாகவுள்ளவனே
3 பகைவர்
4 வில்லை உடையவனே

என்னை ஆண்டது எதற்கோ ?

399. அன்பர் ஆகி, மற்று, அரும் தவம் முயல்வார்,
அயனும், மாலும்; மற்று, அழல் உறுமெழுகு ஆம்
என்பர் ஆய்,[5] நினைவார் எனைப் பலர் ;
நிற்க – இங்கு, எனை, எத்தினுக்கு ஆண்டாய் ?
வன் பராய்[6] முருடு[7] ஒக்கும் என் சிந்தை ;
மரக்கண்[8] ; என் செவி இரும்பினும் வலிது ;
தென்பராய்த்துறையாய் ! சிவலோகா !
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (4)

5 மெழுகாய் உருகிய எலும்பு உடையவராகி.
6 ஒரு வகை மரம்
7 கரடு முருடான கட்டை
8 மரத்திலுள்ள கண் (பெயரளவில் கண்)

பிரிவுறு அருள் வேண்டும்

400. ஆட்டுத் தேவர்[9] – தம் விதி ஒழித்து, அன்பால்,
'ஐயனே' என்று, உன் அருள்வழி இருப்பேன் ;
நாட்டுத் தேவரும்[10] நாடு – அரும்பொருளே !
நாதனே ! உனைப் பிரிவு உறு அருளைக்
காட்டி, தேவ, நின் கழல் – இணை காட்டி,
காய மாயத்தை[11]க் கழித்து, அருள் செய்யாய் ;
சேட்டை[12]த் தேவர் – தம் தேவர் பிரானே !
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (5)

9 உலகை நடத்தும் தெய்வங்கள்
10 நாட்டவர் வழிபடும் தெய்வங்கள், நாட்டப் பெற்ற தெய்வங்கள்
11 மாயமான காயத்தை
12 பெருமையுற்ற

௬

சுகக. அறுக்கி லேனுட றுணிபடத் தீப்புக்
கார்கி லேன்றிரு வருள்வகை யறியேன்
பொறுக்கி லேனுடல் போக்கிடங் காணேன்
போற்றி போற்றியென் போர்விடைப் பாகா
விறக்கி லேனுனைப் பிரிந்தினி திருக்க
வென்செய் கேனிது செய்கவென் றருளாய்
சிறைக்க ணேபுன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

எ

சுஙஉ. மாய னேமறி கடல்விட முண்ட
வான வாமணி கண்டத்தெம் மமுதே
நாயி னேனுனை நினையவு மாட்டே
னமச்சி வாயவென் றுன்னடி பணியாப்
பேய னாகிலும் பெருநெறி காட்டாய்
பிறைகு லாஞ்சடைப் பிஞ்ஞக னேயோ
சேய னாகினின் றலறுவ தழகோ
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே

அ

சுஙங. போது சேரயன் பொருகடற் கிடந்தோன்
புரந்த ராதிக ணிற்கமற் றென்னைக்
கோது மாட்டிநின் குரைகழல் காட்டிக்
குறிக்கொள் கென்றுநின் றொண்டரிற் கூட்டா
யாது செய்வதென் றிருந்தனன் மருந்தே
யடிய னேனிடர்ப் படுவது மினிதோ
சீத வார்புன னிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

போக்கிடம் காணேன்

401. அறுக்கிலேன் உடல் துணிபட ; தீப் புக்கு
ஆர்கிலேன்[1] ; திருவருள் வகை அறியேன் ;
பொறுக்கிலேன் உடல் ; போக்கு – இடம் காணேன் ;
போற்றி ! போற்றி ! என்போர் விடைப் பாகா !
இறக்கிலேன் உனைப் பிரிந்து ; இனிது இருக்க,
என் செய்கேன் ? ‘ இது செய்க ’ என்று அருளாய் ;
சிறைக் கணே[2] புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (6)

1 அமைதியடையாமலிருக்கின்றேன்
2 அணைகளுக்குள்

சேயன் சேயனாகி அலறுவதா ?

402. மாயனே[3] ! மறி கடல் விடம் உண்ட
வானவா ! மணி[4] கண்டத்து எம் அமுதே !
நாயினேன், உனை நினையவும் மாட்டேன் ;
‘ நமச்சிவாய ’ என்று, உன் அடி பணியாப்,
பேயன் ஆகிலும், பெருநெறி[5] காட்டாய் ;
பிறை குலாம் சடைப் பிஞ்ஞகனே[6] ! ஓ !
சேயன்[7] ஆகி நின்று, அலறுவது அழகோ ?
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (7)

3 மாயம் செய்பவனே
4 நீலமணி
5 வீட்டுலகம்
6 அழிப்பவனே பொனனிறமானவனே
7 தூரத்திலுள்ளவன நெருஙகாதவன

இடர்ப்படுவதும் இனிதோ ?

403. போது[8] சேர் அயன், பொரு கடல் கிடந்தோன்[9],
புரந்தர – ஆதிகள்[10], நிற்க, மற்று என்னைக்
கோதுமாட்டி[11], நின் குரை கழல்[12] காட்டி,
‘ குறிக்கொள்க ’ என்று, நின்தொண்டரில் கூட்டாய் ;
யாது செய்வது, என்று இருந்தனன் ; மருந்தே !
அடியனேன் இடர்ப்படுவதும் இனிதோ ?
சீதவார்[13] புனல் நிலவிய வயல் சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே ! (8)

8 மலர் – தாமரை
9 திருமால்
10 இந்திரன் முதலியோர்
11 குறறஙகளைந்து
12 ஒலிக்கின்ற கழல் அணிநத திருவடி
13 நெடிய

கூ

சயிச. ஞால மிந்திர னான்முகன் வானவர்
நிற்க மற்றெனை நயந்தினி தாண்டாய்
கால னாருயிர் கொண்ட பூங் கழலாய்
கங்கையா யங்கி தங்கிய கையாய்
மாலு மோலமிட் டலறுமம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்
சேலு நீலமு நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே.

ய

சயிரு. அளித்து வந்தெனக் காவவென் றருளி
யச்சந் தீர்த்தநின் னருட்பெருங் கடலிற்
றிளைத்துந் தேக்கியும் பருகியு முருகேன்
றிருப்பெ ருந்துறை மேவிய சிவனே
வளைக்கை யானொடு மலரவ னறியா
வான வாமலை மாதொரு பாகா
களிப்பெ லாமிகக் கலங்கிடு கின்றேன்
கயிலை மாமலை மேவிய கடலே.

திருச்சிற்றம்பலம்

திருவடி மலரில் சேர்த்தருள்

404. ஞாலம்[1] இந்திரன், நான்முகன்,[2] வானோர்,[3]
நிற்க, மற்று எனை நயந்து, இனிது ஆண்டாய்;
காலன்[4] ஆர் – உயிர்கொண்ட பூம் கழலாய்[5]
கங்கையாய்! அங்கி[6] தங்கிய கையாய்!
மாலும் ஓலம்[7] இட்டு அலறும் அம் மலர்க்கே,
மரக்கணேனையும்[8] வந்திடப் பணியாய்;
சேலும்,[9] நீலமும்[10] நிலவிய வயல்சூழ்
திருப்பெருந்துறை மேவிய சிவனே! (9)

1 நிலவுலகத்திலுள்ளோர்
2 பிரமன
3 தேவர்
4 யமன்
5 மலர்போலும் திருவடியுடையாய்
6 தீ
7 முறை
8 உருகிநீரததும்பாத கணணேயுடைய என்னே (மரததிலுள்ள கண்)
9 கெண்டைமீனும்
10 குவளை மலரும

களிப்பு எலாம் கலக்க மாயிற்றே!

405. அளித்து[11] வந்து, எனக்கு 'ஆவ'[12] என்று அருளி,
அச்சம் தீர்த்த நின் அருள் – பெருங் – கடலில்,
திளைத்தும்,[13] தேக்கியும்,[14] பருகியும், உருகேன்;
திருப்பெருந்துறை மேவிய சிவனே!
வளைக்[15] கையானொடு[16] மலரவன்[17] அறியா
வானவா! மலை மாது ஒரு பாகா!
களிப்பு எலாம் மிகக் கலங்கிடுகின்றேன்;
கயிலை மா மலை மேவிய கடலே! (10)

11 அருளி
12 இரக்கக் குறிப்பு
13 மகிழ்ந்து முழுகியும்
14 நிரம்ப இன்புற்றும்
15 சங்கு
16 திருமாலோடு
17 பிரமன்

திருச்சிற்றம்பலம்

இருபத்து நான்காவது

அடைக்கலப் பத்து

பக்குவ நிண்ணயம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

கலவைப் பாட்டு

க

௪௱௬. செழுக்கமலத் திரளனநின் சேவடி சேர்ந்தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
வழுக்கு மனத்தடியே னுடையாயுன் னடைக்கலமே.

உ

௪௱௭. வெறுப்பன வேசெய்யு மென்சிறு மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் றிருவரு ளாலென் பிறவியைவே
ரறுப்பவ னேயுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

௩

௪௱௮. பெரும்பெருமா னென் பிறவியை வேரறுத்துப் பெருப்பிச்சுத்
தரும்பெருமான் சதுரப் பெருமானென் மனத்தினுள்ளே
வரும்பெருமான் மலரோ னெடுமாலறி யாமனின்ற
வரும்பெருமா னுடையா யடியேனுன் னடைக்கலமே.

இருபத்து நான்காவது

அடைக்கலப் பத்து

பக்குவ நிண்ணயம்

அழுக்கு மனத்து அடியேன்

406. *செழுக் கமலத் திரள்*[1] *அன, நின் சேவடி சேர்ந்து அமைந்த,*
பழுத்த மனத்து அடியர் உடன் போயினர்; யான் பாவியேன்;
புழுக்கண் உடைப் புன்குரம்பை,[2] *பொல்லாக், கல்வி-ஞானம் இலா,*
அழுக்கு மனத்து அடியேன்; உடையாய்! உன் அடைக்கலமே. (1)

1 தாமரை மலரின இதழ்களை செறிந்த தொகுதி
2 சிறுகுடில்—உடல்

சிறுமையைப் பொறுக்கும் பெருமை

407. *வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை, நின் பெருமையினால்*
பொறுப்பவனே! அராப்[3]*பூண்பவனே! பொங்கு கங்கை சடைச்*
செறுப்பவனே![4] *நின் திருவருளால், என் பிறவியை வேர்*
அறுப்பவனே! உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே.(2)

3 பாம்பு
4 ஒடுக்கி வைப்பவனே

மனத்தின் உள்ளேவரும் சதுரன்

408. *பெரும் பெருமான், என் பிறவியை வேர் அறுத்துப் பெரும் பிச்சுத்*
தரும் பெருமான், சதுரப் பெருமான்,[5] *என் மனத்தின் உள்ளே*
வரும் பெருமான், மலரோன்,[6] *நெடுமால், அறியாமல் நின்ற*
அரும் பெருமான்! உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (3)

5 ஞானத் தலைவன்
6 பிரமன்

ச

சயகூ. பொழிகின்ற துன்பப் புயல்வெள் ளத்தினின் கழற்புணைகொண்
டிழிகின்ற வன்பர்க ளேறினர் வான்யா னிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
வழிகின் றனனுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

ரு

சகய. சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டுன் றிறமறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கண்
வெருள்புரி மானன்ன நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமா
னருள்புரி யாயுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

சா

சகக. மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத் திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் றடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையே
னூழியப் பாவுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

எ

சகஉ. மின்கணி னார் நுடங்குமிடையார் வெகுளிவலையி லகப்பட்டுப்
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி
யென்கணிலே யமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கு
மங்கணனே யுடையா யடியேனுன் னடைக்கலமே.

அ

சகக. மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ள
மாகெடு வேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

துன்ப வெள்ளத்தைக் கடக்கும் தோணி

409. பொழிகின்ற துன்பப் புயல்[1] வெள்ளத்தில், நின் கழல் புணை[2] கொண்டு,
இழிகின்ற[3] அன்பர்கள் ஏறினர், வான்; யான், இடர்க்[4] கடல் வாய்ச்
சுழி சென்று, மாதர்திரை[5] பொர,[6] காமச் சுறவு எறிய,[7]
அழிகின்றனன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே! (4)

1 மழை 2 தெப்பம் 3 இறங்குகின்ற 4 துன்ப 5 அலை 6 மோத 7 தாகக

உன் திறம் மறந்து துன்புறு கின்றேன்

410. சுருள்[8] புரி கூழையர்[9] சூழலில்[10] பட்டு, உன் திறம் மறந்து, இங்கு,
இருள்புரி யாக்கையிலே கிடந்து, எய்த்தனன்;[11] மைத்தடம்கண்
வெருள்[12] புரி மான் அன்ன நோக்கி-தன் பங்க, விண்ணோர் பெருமான்,
அருள் புரியாய்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (5)

8 சுருண்ட 9 கூந்தலையுடையவர் 10 கூட்டத்தில் 11 தளர்நதேன் 12 அச்சம்

வாழி! எப்போது வந்து வணங்குவேன் ?

411. மாழை,[13] மைப் பாவிய[14] கண்ணியர்[15] வன் மத்து இட உடைந்து,
தாழியைப்[16] பாவு[17] தயிர் போல், தளர்ந்தேன்; தட மலர்த்தாள்,
வாழி! எப்போது வந்து, எந்நாள், வணங்குவன் வல் வினையேன்?
ஆழி[18] அப்பா! உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (6)

13 மாம்பிஞ்சு 14 தீட்டிய 15 கண்ணையுடையவர் 16 தயிர்ப் பானையை 17 தாண்டிப் பரவுகின்ற 18 கருணைக கடல்

பிழைக்கு இரங்கும் பேரருளே! அடைக்கலம்

412. மின்-கணினார்,[19] நுடங்கும்[20] இடையார், வெகுளி வலையில் அகப்பட்டு,
புன்-கணன்[21] ஆய், புரள்வேனை, புரளாமல் புகுந்து அருளி,
என்-கணிலே[22] அமுது ஊறி, தித்தித்து, என் பிழைக்கு இரங்கும்
அம் கணனே![23] உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (7)

19 கண்களை உடையவா-கணணினார் 20 துவளும் 21 துனபமுடையவனாய் 22 என்னிடத்திலே 23 அருளுடையவனே

உய்யத் திருவுளமோ எது செய்யத் திருவுளமோ ?

413. மா வடு வகிர்[24] அன்ன கண்ணி பங்கா! நின் மலர் அடிக்கே
கூவிடுவாய்? கும்பிக்கே[25] இடுவாய்? நின் குறிப்பு அறியேன்;
பா இடை[26] ஆடு குழல்[27] போல், கரந்து,[28] பரந்தது, உள்ளம்
ஆ! கெடுவேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (8)

24 பிளவு 25 ஒருவகை நரகம் 26 நெசவுப் பா 27 நூல் சுற்றியுள்ள குழல் 28 மறைந்து

௯

௪௧௪. பிறிவறி யாவன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்துபெற் றாருன்னை வந்திப்பதோர்
நெறியறி யேனின்னை யேயறி யேனின்னை யேயறியு
மறிவறி யேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே

௧௰

௪௧௫. வழங்குகின் றாய்க்குன் னருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை யேனென் விதியின்மையாற்
றழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
யழுங்குகின் றேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்.

நெறி அறியேன்

414. பிறிவு அறியா அன்பா, நின் அருள் பெய் கழல் தாள் - இணைக் கீழ்,
மறிவு அறியாச் செல்வம் வந்து பெற்றார், உன்னை வந்திப்பது ஓர்
நெறி அறியேன்; நின்னையே அறியேன்; நின்னையே அறியும்
அறிவு அறியேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (9)

விழுங்குகின்றேன் விக்கினேன்

415 வழங்குகின்றாய்க்கு உன் அருள் ஆர் அமுதத்தை வாரிக் கொண்டு,
விழுங்குகின்றேன்; விக்கினேன் வினையேன், என் விதி இன்மையால்;
தழங்கு[1] அரும் தேன் அன்ன தண்ணீர்[2] பருகத் தந்து, உய்யக் கொள்ளாய்;
அழுங்குகின்றேன்; உடையாய்! அடியேன் உன் அடைக்கலமே. (10)

1 இனிய ஒலியுள்ள
2 தண்ணிய அருள்

திருச்சிற்றம்பலம்

இருபத்தைந்தாவது

ஆசைப் பத்து

ஆத்தும விலக்கணம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

சகசு. கருளக் கொடியோன் காண மாட்டாக்
கழற்சே வடியென்னும்
பொருளைத் தந்திங் கென்னை யாண்ட
பொல்லா மணியேயோ
விருளைத் துரந்திட் டிங்கே வாவென்
றங்கே கூவு
மருளைப் பெறுவா னாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

உ

சகஎ. மொய்ப்பா னரம்பு கயிறாக மூளை
யென்பு தோல்போர்த்த
குப்பா யம்புக் கிருக்க கில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவேயோ
வெப்பா லவர்க்கு மப்பா லாமென்
னாரமு தேயோ
வப்பா காண வாசைபட்டேன்
கண்டா யம்மானே.

இருபத்தைந்தாவது

ஆசைப் பத்து

ஆத்தும இலக்கணம்

உன் அழைப்பு எப்போது ?

416. கருளக்[1] கொடியோன்[2] காணமாட்டாக்
கழல் சேவடி என்னும்
பொருளைத் தந்து, இங்கு, என்னை ஆண்ட
பொல்லா மணியே ! ஓ !
இருளைத் துரந்திட்டு, ' இங்கே வா ' என்று,
அங்கே, கூவும்
அருளைப் பெறுவான், ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே ! (1)

1 கருட, பருந்தின்
2 திருமால்

ஊனச் சிறையில் தங்கேன்

417. மொய்ப்பால் நரம்பு கயிறு ஆக,
மூளை, என்பு, தோல், போர்த்த
குப்பாயம்[3] புக்கு, இருக்ககில்லேன் ;
கூவிக் கொள்ளாய் ; கோவே ! ஓ !
எப்பாலவர்க்கும் அப்பால் ஆம்
என் ஆர் அமுதே ! ஓ !
அப்பா ! காண ஆசைப் பட்டேன்
கண்டாய் ; அம் மானே ! (2)

3 சட்டை

௩.

சகஅ. சீவார்ந் தீமொய்த் தழுக்கொடு திரியுஞ்
சிறுகுடி லிதுசிதையக்
கூவாய் கோவே கூத்தா காத்தாட்
கொள்ளுங் குருமணியே
தேவா தேவர்க் கரியானே சிவனே
சிறிதென் முகநோக்கி
யாவா வென்ன வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

௪

சகசு. மிடைந்தெலும் பூத்தை மிக்கழுக் கூறல்
வீறிலி நடைக்கூடந்
தொடர்ந்தெனை நலியத் துயருறு கின்றேன்
சோத்தமெம் பெருமானே
யுடைந்துநைந் துருகி யுள்ளொளி நோக்கி
யுன்றிரு மலர்ப்பாத
மடைந்துநின் றிடுவா னாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

௫

சஉ௦. அளிபுண் ணகத்துப் புறந்தோன் மூடி
யடியே னுடையாக்கை
புளியம் பழமொத் திருந்தே னிருந்தும்
விடையாய் பொடியாட
வெளிவந் தென்னை யாண்டு கொண்ட
வென்னா ரமுதேயோ
வளியே னென்ன வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

என் முகம் நோக்காயா ?

418. சீ வார்ந்து, ஈ மொய்த்து, அழுக்கொடு திரியும்
சிறு குடில்[1]–இது சிதையக்
கூவாய்; கோவே! கூத்தா! காத்து
ஆட்கொள்ளும் குருமணியே!
தேவா! தேவர்க்கு அரியானே! சிவனே!
சிறிது என் முகம் நோக்கி,
'ஆ! ஆ!' என்ன, ஆசைப் பட்டேன்
கண்டாய்; அம்மானே! (3)

1 உடல்

உள் ஒளி நோக்க அருள் செய்

419. மிடைந்து, எலும்பு ஊத்தை, மிக்கு அழுக்கு ஊறல்
வீறு[2] இலி, நடைக் கூடம்[3]
தொடர்ந்து எனை நலிய, துயர் உறுகின்றேன்;
சோத்தம்![4] எம் பெருமானே!
உடைந்து, நைந்து, உருகி, உள் ஒளி நோக்கி,
உன் திரு மலர்ப் பாதம்
அடைந்து நின்றிடுவான், ஆசைப் பட்டேன்
கண்டாய்; அம்மானே! (4)

2 சிறப்பு, பெருமை
3 சமமட்டி–உடல்
4 வணக்கம்

பற்றில்லேன் : ஆண்டு கொண்ட அமுதே

420. அளி புண் அகத்து, புறம் தோல் மூடி,
அடியேன் உடை யாக்கை,
புளியம்பழம் ஒத்து இருந்தேன்; இருந்தும்,
விடையாய்![5] பொடி[6] ஆடி!
எளி வந்து, என்னை ஆண்டு கொண்ட
என் ஆர் அமுதே! ஓ!
'அளியேன்'[7] என்ன, ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே! (5)

5 எருது ஊர்வோனே .
6 திருநீறு
7 இரங்கத்தக்கவன்

சா

சஉக. எய்த்தே னுயே னினியிங் கிருக்க
கில்லே னிவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோ ரறியா
மலர்ச்சே வடியானே
முத்தா வுன்றன் முகவொளி நோக்கி
முறுவன் னகைகாண
வத்தா சால வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

எ

சஉஉ. பாரோர் விண்ணோர் பரவி யேத்தும்
பரனே பரஞ்சோதீ
வாராய் வாரா வுலகந் தந்து
வந்தாட் கொள்வானே
பேரா யிரமும் பரவித் திரிந்தெம்
பெருமா னெனவேத்த
வாரா வமுதே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

அ

சஉங. கையாற் றொழுதுன் கழற்சே வடிகள்
கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம்
பெருமான் பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி
யழல்சேர் மெழுகொப்ப
வையாற் றரசே யாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

அலுத்தேன் அடியேனை உய்யக்கொள்

421. எய்த்தேன்[1] நாயேன்; இனி இங்கு இருக்க-
கில்லேன்; இவ் வாழ்க்கை
வைத்தாய்; வாங்காய்;[2] வானோர் அறியா
மலர்ச் சேவடியானே!
முத்தா! உன்-தன் முக ஒளி நோக்கி,
முறுவல்[3] நகை காண,
அத்தா! சால ஆசைப்பட்டேன்
கண்டாய்! அம்மானே! (6)

1 இளைத்தேன்
2 முடிவு செய்யாமலிருக்கின்றாய், முடிவு செய்
3 மகிழ்ச்சி மிக்க

ஆயிரம் பேர் அம்மானே! வாராய்!

422. பாரோர், விண்ணோர், பரவி ஏத்தும்
பரனே! பரஞ்சோதி!
வாராய்; வாரா உலகம் தந்து,
வந்து ஆட்கொள்வானே!
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து,
'எம் பெருமான்' என ஏத்த,
ஆரா அமுதே! ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே! (7)

உடல் முழுதும் உன்னை வணங்கவே

423. கையால் தொழுது, உன் கழல் சேவடிகள்
கழுமத்[4] தழுவிக் கொண்டு,
எய்யாது[5] என்-தன் தலை மேல் வைத்து,
'எம் பெருமான்', 'பெருமான்!' என்று,
ஐயா! என்-தன் வாயால் அரற்றி,[6]
அழல்சேர் மெழுகு ஒப்ப,
ஐயாற்று அரசே! ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே! (8)

4 பொருந்த
5 தளராது
6 கதறி

௯

௪௨௪. செடியா ராக்கைத் திறமற வீசிச்
சிவபுர நகர்புக்குக்
கடியார் சோதிகண்டு கொண்டென்
கண்ணிணை களிகூரப்
படிதா னில்லாப் பரம்பர னேயுன்
பழவடி யார்கூட்ட
மடியேன் காண வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

௧௰

௪௨௫. வெஞ்சே லனைய கண்ணார்தம் வெகுளி
வலையி லகப்பட்டு
நைஞ்சே னாயேன் ஞானச் சுடரே
நானோர் துணைகாணேன்
பஞ்சே ரடியாள் பாகத் தொருவா
பவளத் திருவாயா
லஞ்சே லென்ன வாசைப் பட்டேன்
கண்டா யம்மானே.

திருச்சிற்றம்பலம்

தொண்டரொடு கூட்டு கண்டாய்

424. செடி[1] ஆர் ஆக்கைத் திறம் அற வீசி,
சிவபுர நகர் புக்கு,
கடி[2] ஆர் சோதி கண்டு கொண்டு, என்
கண்-இணை களி கூர,
படி[3]-தான் இல்லாப் பரம்பரனே! உன்
பழ அடியார் கூட்டம்,
அடியேன் காண ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே! (9)

1 முடை நாற்றம்
2 விளக்கம்
3 ஒப்பு

ஞானச்சுடரே! 'அஞ்சேல்' என்று அருள்

425. வெம்[4] சேல்[5] அனைய கண்ணார்-தம்
வெகுளி[6] வலையில் அகப்பட்டு,
நைஞ்சேன், நாயேன்; ஞானச் சுடரே!
நான் ஓர் துணை காணேன்;
பஞ்சு ஏர் அடியாள்[7] பாகத்து ஒருவா!
பவளத் திருவாயால்,
'அஞ்சேல்' என்ன, ஆசைப்பட்டேன்
கண்டாய்; அம்மானே! (10)

4 காட்சிக்கு இனிய
5 கயல்
6 முககுற்றங்களுள் ஒன்று
7 செம்பஞ்சு ஊட்டிய திருவடியையுடைய உமையம்மை

திருச்சிற்றம்பலம்

இருபத்தாருவது

அதிசயப் பத்து

முத்தியிலக்கணம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

சஉகூ. வைப்புமா டென்று மாணிக்கத் தொளியென்று
மனத்திடை யுருகாதே
செப்பு நேர்முலை மடவர லியர்தங்க
டிறத்திடை நைவேனை
யொப்பி லாதன வுவமணி லிறந்தன
வொண்மலர்த் திருப்பாதத்
தப்ப னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

உ

சஉஎ. நீதி யாவன யாவையு நினைக்கிலே
னினைப்பவ ரொடுங்கூடே
னேத மேபிறந் திறந்துழல் வேன்றனை
யென்னடி யானென்று
பாதி மாதொடுங் கூடிய பரம்பர
னிரந்தர மாய்நின்ற
வாதி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

இருபத்தாறுவது

அதிசயப் பத்து

முத்தி இலக்கணம்

உருகா உள்ளம்

426. வைப்பு,[1] மாடு,[2] என்று, மாணிக்கத்து ஒளி என்று,
மனத்திடை உருகாதே,
செப்பு[3] நேர் முலை மடவரலியர்[4]—தங்கள்
திறத்திடை நைவேனை[5]—
ஒப்பு இலாதன, உவமனில் இறந்தன,
ஒள்-மலர்த் திருப் பாதத்து
அப்பன்—ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே! (1)

1 நிலைத்த இடம்
2 செல்வம்
3 சிமிழ
4 இளம் பெண்கள்
5 மனம் உருகுவேனை

நீதி நினையா நெஞ்சு

427. நீதி ஆவன யாவையும் நினைக்கிலேன்;
நினைப்பவரொடும் கூடேன்;
ஏதமே[6] பிறந்து, இறந்து, உழல்வேன்-தனை—
'என் அடியான்' என்று,
பாதி மாதொடும் கூடிய பரம்பரன்,[7]
நிரந்தரமாய்[8] நின்ற
ஆதி—ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே! (2)

6 துன்பமே குற்றமே
7 உமை பங்கன சிவபெருமான்
8 நிலையாக

௩

சஉஅ. முன்னை யென்னுடை வல்வினை போயிட
முக்கண துடையெந்தை
தன்னை யாவரு மறிவதற் கரியவ
னெளியவ னடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை முடிதனி
லிளமதி யதுவைத்த
வன்னை யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

௪

சஉகூ. பித்த னென்றெனை யுலகவர் பகர்வதோர்
காரண மிதுகேளீ
ரொத்துச் சென்றுதன் றிருவருட் கூடிடு
முபாயம தறியாமே
செத்துப் போயரு நரகிடை வீழ்வதற்
கொருப்படு கின்றேனை
யத்த னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

௫

சங௰. பரவு வாரவர் பாடுசென் றணைகிலேன்
பன்மலர் பறித்தேத்தேன்
குரவு வார்குழ லார்திறத் தேநின்று
குடிகெடு கின்றேனை
யிரவு நின்றெரி யாடிய வெம்மிறை
யெரிசடை மிளிர்கின்ற
வரவ னாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

வல்வினை போயிட ஆண்டான்

428. முன்னை என்னுடை வல்வினை போயிட,
 மூக்கண்-அது உடை எந்தை,
தன்னை யாவரும் அறிவதற்கு அரியவன்,
 எளியவன் அடியார்க்கு,
பொன்னை வென்றது ஓர் புரிசடை முடி-தனில்
 இளமதி-அது வைத்த
அன்னை, ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
 அதிசயம் கண்டாமே! (3)

பித்தன் ஆண்ட பித்தன்

429. 'பித்தன்' என்று, எனை உலகவர் பகர்வது ஓர்
 காரணம்-இது; கேளீர்:
ஒத்துச் சென்று, தன் திருவருள் கூடிடும்
 உபாயம்-அது அறியாமே,
செத்துப்போய், அரு நரகிடை வீழ்வதற்கு
 ஒருப்படுகின்றேனை,
அத்தன், ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
 அதிசயம் கண்டாமே! (4)

அடியார் பால் செல்லேன்

430. பரவுவார்[1] அவர் பாடு[2] சென்று அணைகிலேன்;
 பல் மலர் பறித்து ஏத்தேன்;
குரவு[3] வார் குழலார்[4] திறத்தே[5] நின்று,
 குடிகெடுகின்றேனை —
இரவு நின்று, எரி ஆடிய எம் இறை,[6]
 எரி சடை மிளிர்கின்ற
அரவன்[7] ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
 அதிசயம் கண்டாமே! (5)

1 போற்றி வணங்குவார்
2 பக்கம்
3 குராமலர்
4 கூந்தலையுடையவர்
5 வழியிலே
6 — சிவபெருமான்
7 பாம்பை அணிந்தவன்

௬

சுடுக. எண்ணி லேன்றிரு நாமமஞ் செழுத்துமென்
னேழைமை யதனாலே
நண்ணி லேன்கலை ஞானிக டம்மொடு
நல்வினை நயவாதே
மண்ணி லேபிறந் திறந்துமண் ணாவதற்
கொருப்படு கின்றேனை
யண்ண லாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

எ

சுடுஉ. பொத்தை யூன்சுவர் புழுப்பொதிந் துளுத்தசும்
பொழுகிய பொய்க்கூரை
யித்தை மெய்யெனக் கருதிநின் றிடர்க்கடற்
சுழித்தலைப் படுவேனை
முத்து மாமணி மாணிக்க வயிரத்த
பவளத்தின் முழுச்சோதி
யத்த னுண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

அ

சுடுங. நீக்கி முன்னெனைத் தன்னொடு நிலாவகை
குரம்பையிற் புகப்பெய்து
நோக்கி நுண்ணிய நொடியன சொற்செய்து
நுகமின்றி விளாக்கைத்துத்
தூக்கி முன்செய்த பொய்யறத் துகளறுத்
தெழுதரு சுடர்ச்சோதி
யாக்கி யாண்டுதன் னடியரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

ஞானிகளோடு கூடேன்

431. எண்ணிலேன் திருநாமம் அஞ்சு-எழுத்தும் ; என்
ஏழைமை[1] அதனாலே
நண்ணிலேன்[2] கலை-ஞானிகள்-தம்மொடு ;
நல் வினை நயவாதே,
மண்ணிலே பிறந்து, இறந்து, மண் ஆவதற்கு
ஒருப்படுகின்றேனை,
அண்ணல், ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே ! (6)

1 அறியாமை
2 அணுகிலேன்

பொய்யை மெய்எனக் கொண்டேன்

432. பொத்தை[3] ஊன் சுவர் ; புழுப்பொதிந்து, உளுத்து[4] அசும்பு[5]
ஒழுகிய, பொய்க்கூரை ;
இத்தை,[6] மெய்என க் கருதி நின்று, இடர்க் கடல்[7]
சுழித்தலைப் படுவேனை –
முத்து, மாமணி, மாணிக்க, வயிரத்த,
பவளத்தின் முழுச் சோதி,
அத்தன்–ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே ! (7)

3 தொளைகளையுடைய
4 சிதைந்து
5 நிணநீர்ப் பொசிவு
6 இதை
7 துன்பக் கடல்

தள்ளியவன் தூக்கினன் !

433. நீக்கி, முன் எனைத் தன்னொடு நிலாவகை,
குரம்பையில்[8] புகப் பெய்து ;
நோக்கி ; நுண்ணிய, நொடியன[9] சொல் செய்து ;
நுகம் இன்றி விளாக்கைத்து ;[10]
தூக்கி ; முன் செய்த பொய் அற, துகள்[11] அறுத்து ;
எழுதரு சுடர்ச் சோதி
ஆக்கி ; ஆண்டு ; தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே ! (8)

8 — உடலில்
9 குறிப்பான
10 உழுது
11 குற்றம்

௯

௪௩௪. உற்ற வாக்கையி னுறுபொரு ணறுமல
ரெழுதரு நாற்றம்போற்
பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொரு
ளப்பொருள் பாராதே
பெற்ற வாபெற்ற பயனது நுகர்ந்திடும்
பித்தர்சொற் றெளியாமே
யத்த னுண்டுதன் னடியாரிற் கூட்டிய
வதிசயங் கண்டாமே.

௰

௪௩௫. இருடி ணிந்தெழுந் திட்டதோர் வல்வினைச்
சிறுகுடி லிதுவித்தைப்
பொருளெ னக்களித் தருநர கத்திடை
விழப்புகு கின்றேனைத்
தெருளு மும்மதி ளொடிவரை யிடிதரச்
சினப்பதத் தொடுசெந்தீ
யருளு மெய்ந்நெறி பொய்ந்நெறி நீக்கிய
வதிசயங் கண்டாமே.

திருச்சிற்றம்பலம்

மலரின் மணம்

434. உற்ற ஆக்கையின் உறுபொருள்,[1] நறுமலர்
எழுதரு நாற்றம் போல்,
பற்றல் ஆவது ஓர் நிலை இலாப் பரம் பொருள்
அப் பொருள் பாராதே,
பெற்றவா பெற்ற பயன் - அது நுகர்ந்திடும்
பித்தர் சொல் தெளியாமே,
அத்தன், ஆண்டு, தன் அடியரில் கூட்டிய
அதிசயம் கண்டாமே! (9)

பொய் நெறி நீக்கிய மெய் நெறி

435. இருள் திணிந்து எழுந்திட்டது ஓர் வல்வினைச்
சிறு குடில்,[2] இது: இத்தை[3]ப்
பொருள் என களித்து, அரு நரகத்திடை
விழப் புகுகின்றேனை -
தெருளும்[4] மும்மதில், நொடி - வரை[5] இடிதர,
சினப் பதத்தொடு செம்தீ
அருளும் மெய்ந்நெறி - பொய்ந்நெறி நீக்கிய
அதிசயம் கண்டாமே! (10)

1 பொருந்திய சிறந்த பொருள்
2 உடல்
3 இதை
4 அறிவாற் சிறந்த
5 நெடிப் பொழுதில்

திருச்சிற்றம்பலம்.

இருபத்தேழாவது

புணர்ச்சிப் பத்து

அத்துவிதவிலக்கணம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரியவிருத்தம்

க

சஉ௬. சுடர்பொற் குன்றைத் தோளா
முத்தை வாளா தொழும்புகந்து
கடைபட் டேனை யாண்டுகொண்ட
கருணா லயனைக்கரு மால்பிரமன்
றடைபட் டின்னுஞ் சார மாட்டாத்
தன்னைத் தந்தவென்னா ரமுதைப்
புடை பட்டிருப்ப தென்றுகொல் லோவென்
பொல்லாமணி யைப் புணர்ந்தே.

உ

சஉ௭. ஆற்ற கில்லே னடியே னரசே
யவனி தலத்தைம் புலனாய
சேற்றி லழுந்தாச் சிந்தைசெய்து
சிவனெம் பெருமா னென்றேத்தி
யூற்று மணற்போ னெக்குநெக் குள்ளே
யுருகி யோலமிட்டுப்
போற்றிப் புகழ்வ தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

இருபத்தேழாவது

புணர்ச்சிப் பத்து

அத்துவித இலக்கணம்

ஆண்டுகொண்ட அருளாளனை அணுகுவது என்றோ ?

436. சுடர் பொன் குன்றை, தோளா[1]
 முத்தை, வாளா[2] தொழும்பு[3] உகந்து,
கடை பட்டேனை ஆண்டு கொண்ட
 கருணாலயனை,[4] கருமால், பிரமன்,
தடைபட்டு, இன்னும் சாரமாட்டாத்
 தன்னைத் தந்த என் ஆர் அமுதை,
புடை பட்டு[5] இருப்பது என்று – கொல்லோ – என்
 பொல்லா மணியைப் புணர்ந்தே ? (1)

1 துளைக்கப்படாத
2 பயனற்ற, பெயரளவிலுள்ள
3 தொண்டு
4 அருளாளனை
5 அருகில் பொருந்தி

ஊற்று மணல் போல் உருகுவது என்றோ ?

437. ஆற்ற கில்லேன்[6] அடியேன் ; அரசே !
 அவனி – தலத்து[7] ஐம் புலன் ஆய
சேற்றில் அழுந்தாச் சிந்தை செய்து,
 ' சிவன், எம்பெருமான்,' என்று ஏத்தி,
ஊற்று மணல் போல், நெக்கு – நெக்கு
 உள்ளே உருகி, ஓலம் இட்டு,
போற்றிப் புகழ்வது என்று – கொல்லோ – என்
 பொல்லா மணியைப் புணர்ந்தே ? (2)

6 பொறுக்க மாட்டேன்
7 நிலவுலகத்தில்

௩

சூ௩அ. நீண்ட மாலு மயனும் வெருவ
நீண்ட நெருப்பை விருப்பிலேனை
யாண்டு கொண்ட வென்னாரமுதை
யள்ளூ றுள்ளத் தடியார்முன்
வேண்டுந் தனையும் வாய்விட் டலறி
விரையார் மலர்தூவிப்
பூண்டு கிடப்ப தென்றுகொல்லோ வென்
பொல் லாமணியைப் புணர்ந்தே.

௪

சூ௩௯. அல்லிக் கமலத் தயனுமாலு
மல்லாதவரு மமரர் கோனுஞ்
சொல்லிப் பரவு நாமத்தானைச்
சொல்லும் பொருளு மிறந்தசுடரை
நெல்லிக் கனியைத் தேனைப்பாலை
நிறையின் னமுதை யமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல் லோவென்
பொல்லா மணியைப் புணர்ந்தே.

௫

சூசும். திகழத் திகழு மடியுமுடியுங்
காண்பான்கீழ்மே லயனும்மாலு
மகழப் பறந்துங் காணமாட்டா
வம்மா னிம்மா னிலமுழுது
நிகழப் பணிகொண் டென்னையாட்கொண்
டாவா வென்ற நீர்மையெல்லாம்
புகழப் பெறுவ தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

அடியார் முன் அலறுவது என்றோ?

438. நீண்ட மாலும், அயனும், வெருவ[1]
நீண்ட நெருப்பை,[2] விருப்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆர் அமுதை,
அள்ளூறு[3] உள்ளத்து அடியார் முன்
வேண்டும் தனையும் வாய்விட்டு அலறி,
விரை[4] ஆர் மலர் தூவி,
பூண்டு[5] கிடப்பது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? (3)

தழுவித் திளைப்பது என்றோ?

439. அல்லிக்[6] கமலத்து அயனும், மாலும்,
அல்லாதவரும், அமரர் கோனும்,[7]
சொல்லிப் பரவும் நாமத்தானை,
சொல்லும் பொருளும் இறந்த சுடரை,
நெல்லிக் கனியை, தேனை, பாலை,
நிறை இன் அமுதை, அமுதின் சுவையை,
புல்லிப்[8] புணர்வது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? (4)

புகழப் பெறுவது என்றோ?

440. திகழத் திகழும் அடியும் முடியும்
காண்பான், கீழ்மேல், அயனும் மாலும்,
அகழப்[9] பறந்தும், காணமாட்டா
அம்மான், இம் மாநிலம் முழுதும்
நிகழப்[10] பணிகொண்டு,[11] என்னை ஆட்கொண்டு,
'ஆ! ஆ!'[12] என்ற நீர்மை[13] எல்லாம்
புகழப் பெறுவது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே? (5)

1 அஞ்ச
2 அனற் பிழம்பாக உயர்ந்த நிலையை - சிவபெருமானை
3 மேலும் மேலும் இனிமை சுரக்கும்
4 மணம்
5 அணிந்து
6 அக இதழ்
7 தேவேந்திரனும்
8 தழுவி
9 அகழ்ந்தும்
10 விளங்க
11 ஆட்கொண்டு
12 இரக்கக்குறிப்பு
13 தன்மை

சா

சசக. பரிந்து வந்து பரமானந்தம் பண்டே
யடியேற் கருள்செய்யப்
பிரிந்து போந்து பெருமாநிலத்தி
லருமா லுற்றே னென்றென்று
சொரிந்த கண்ணீர் சொரியவுண்ணீ
ருரோமஞ் சிலிர்ப்ப வுகந்தன்பாய்ப்
புரிந்து நிற்ப தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

எ

சசஉ. நினையப் பிறருக் கரியநெருப்பை
நீரைக் காலை நிலனைவிசும்பைத்
தனையொப் பாரை யில்லாத்தனியை
நோக்கித் தழைத்துத் தழுத்தகண்டங்
கனையக் கண்ணீ ரருவிபாயக்
கையுங் கூப்பிக் கடிமலராற்
புனையப் பெறுவ தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

அ

சசங. நெக்கு நெக்குள் ளுருகியுருகி
நின் று மிருந்துங் கிடந்துமெழுந்து
நக்கு மழுதுந் தொழுதும் கிடந்துமெழுந்து
நாளு விதத்தாற் கூத்துநவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி திகழ
நோக்கிச் சிலிர்சிலிர்த்துப்
புக்கு நிற்ப தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

உள் மாசு உகுக்கும் கண்ணீர் உகுப்பது என்றோ ?

441. பரிந்து[1] வந்து, பரம-ஆனந்தம்,
பண்டே,[2] அடியேற்கு அருள்செய்ய,
பிரிந்து போந்து, பெருமாநிலத்தில்
அருமால்[3] உற்றேன், என்று-என்று,
சொரிந்த கண்ணீர், சொரிய உள்நீர்,
உரோமம் சிலிர்ப்ப, உகந்து அன்புஆய்,
புரிந்து[4] நிற்பது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே ? (6)

1 இரங்கி
2 முன்னமே
3 போக்குதற்கியலாத மயக்கம்
4 இடைவிடா விருப்பத்தோடு

தழுதழுத்து கைகூப்புவது என்றோ ?

442. நினையப் பிறருக்கு[5] அரிய நெருப்பை,
நீரை, காலை,[6] நிலனை, விசும்பை,[7]
தனை ஒப்பாரை இல்லாத் தனியை[8]
நோக்கி; தழைத்து;[9] தழுத்த கண்டம்[10]
கனைய; கண்ணீர் அருவி பாய;
கையும் கூப்பி, கடி[11] மலரால்
புனையப்[12] பெறுவது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே ? (7)

5 பிறருக்கு நினைய
6 காற்றை
7 வானத்தை
8 ஒப்பற்ற பொருளை
9 பூரித்து
10 தழுதழுத்த குரல்
11 மணம்
12 அணி செய்ய

திருமேனி நோக்கித் திகழ்வது என்றோ ?

443. நெக்கு-நெக்கு, உள் உருகி-உருகி,
நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும்,
நக்கும்,[13] அழுதும், தொழுதும், வாழ்த்தி;
நானா[14] விதத்தால் கூத்து நவிற்றி;[15]
செக்கர்[16] போலும் திருமேனி
திகழ[17] நோக்கி; சிலிர்-சிலிர்த்து;
புக்கு நிற்பது என்று-கொல்லோ-என்
பொல்லா மணியைப் புணர்ந்தே ? (8)

13 சிரித்தும்
14 பல
15 செய்து
16 செவ்வானம்
17 உள்ளத்தில் அமைந்து விளங்க

௯

௪௪௪. தாதாய் மூவே ழுலகுக்குந்
தாயே நாயேன் றனையாண்ட
பேதாய் பிறவிப் பிணிக்கோர்மருந்தே
பெருந்தேன் பில்க வெப்போது
மேதா மணியே யென்றென்றேத்தி
யிரவும் பகலு மெழிலார்பாதப்
போதாய்ந் தணைவ தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

௰

௪௪௫. காப்பாய் படைப்பாய் கரப்பாய் முழுதுங்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெல்லா
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா முன்னே யெனையாண்ட
பார்ப்பா னேயெம் பரமாவென்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போ தணைவ தென்றுகொல்லோ வென்
பொல் லாமணி யைப்புணர்ந்தே.

திருச்சிற்றம்பலம்

திருவடி மலரையே சிந்தித்து அணைவது என்றோ ?

444. ' தாதாய்,[1] மூ – ஏழ் உலகுக்கும்
தாயே, நாயேன் – தனை ஆண்ட
பேதாய், பிறவிப் பிணிக்கு ஓர் மருந்தே,
பெரும் தேன் பில்க, எப்போதும்
ஏது[2] ஆம் மணியே !' என்று – என்று ஏத்தி,
இரவும் பகலும், எழில் ஆர் பாதப்
போது[3] ஆய்ந்து, அணைவது என்று–கொல்லோ–என்
பொல்லா மணியைப் புணர்ந்தே ? (9)

1 தந்தையே
2 காரணம் (மேதாமணியே)
3 மலர்

பாடிப் பாடிப் பணிவது என்றோ ?

445. ' காப்பாய், படைப்பாய், கரப்பாய்,[4] முழுதும் ;
கண் ஆர்[5] விசும்பின் விண்ணோர்க்கு எல்லாம்
மூப்பாய்,[6] மூவா[7] முதலாய் நின்ற
முதல்வா ; முன்னே எனை ஆண்ட
பார்ப்பானே ; எம் பரமா !' என்று,
பாடிப் பாடிப் பணிந்து, பாதப் –
பூப்போது அணைவது என்று – கொல்லோ – என்
பொல்லா மணியைப் புணர்ந்தே ? (10)

4 மறைப்பாய்
5 இடம் அகன்ற
6 மூத்தவனாய்
7 முதிராத

திருச்சிற்றம்பலம்

இருபத்தெட்டாவது

வாழாப் பத்து

முத்தியுபாயம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

சசசு. பாரொடு விண்ணாய்ப் பரந்த வெம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகே னார்க்கெடுத் துரைக்கே
னாண்டநீ யருளிலை யானால்
வார்கட லுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

உ

சசஎ. வம்பனேன் றன்னை யாண்டமா மணியே
மற்றுநான் பற்றிலேன் கண்டா
யும்பரு மறியா வொருவனே யிருவர்க்
குணர்விறந் துலகமூ டுருவுஞ்
செம்பெரு மானே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெம்பெரு மானே யென்னையாள் வானே
யென்னைநீ கூவிக்கொண் டருளே.

இருபத்தெட்டாவது

வாழாப் பத்து

முத்தி உபாயம்

மற்றுப் பற்று எனக்கு இல்லை

446. பாரொடு விண்ணாய், பரந்த எம்பரனே!
பற்று நான்மற்று இலேன் கண்டாய்;
சீரொடு பொலிவாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஆரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?-
ஆண்ட நீ அருளிலை யானால்,
வார்[1]கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள் புரியாயே. (1)

1 நெடிய

கூவிக் கொண்டு அருள்

447. வம்பனேன்[2]-தன்னை ஆண்ட மா மணியே!
மற்று நான் பற்று இலேன் கண்டாய்;
உம்பரும்[3] அறியா ஒருவனே! இருவர்க்கு[4]
உணர்வு இறந்து, உலகம் ஊடுருவும்
செம்பெருமானே! சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எம்பெருமானே! என்னை ஆள்வானே!
என்னை, நீ கூவிக் கொண்டருளே. (2)

2 பயனற்றவன்; பயிற்சி பெறாதவன்
3 வானோரும்
4 பிரமனுக்கும் திருமாலுக்கும்

ங

சசஅ. பாடிமால் புகழும் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேடிநீ யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யூடுவ துன்னோ டுவப்பது முன்னை
யுணர்த்துவ துனக்கெனக் குறுதி
வாடினே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

ச

சசகூ. வல்லைவா ளரக்கர் புரமெரித் தானே
மற்றுநான் பற்றிலேன் கண்டாய்
தில்லைவாழ் கூத்தா சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெல்லைமூ வுலகு முருவியன் றிருவர்
காணுநா ளாதியீ றின்மை
வல்லையாய் வளர்ந்தாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே

ரு

சரு௰. பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திண்ணமே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யெண்ணமே யுடல்வாய் மூக்கொடு செவிகண்
ணென்றிவை நின்கணே வைத்து
மண்ணின்மே லடியேன் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை

448. பாடி, மால்[1] புகழும் பாதமே அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
தேடி, நீ ஆண்டாய்; சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
ஊடுவது[2] உன்னோடு; உவப்பதும்[3] உன்னை;
உணர்த்துவது உனக்கு; எனக்கு உறுதி
வாடினேன்; இங்கு வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள்புரியாயே. (3)

1 மால் பாடி
2 மாறுபடுவது
3 இணைந்து மகிழ்வதும்

'வருக' என்று அருள்

449. வல்லை[4] வாள் அரக்கர்[5] புரம் எரித்தானே!
மற்று நான் பற்று இலேன் கண்டாய்;
தில்லை வாழ் கூத்தா! சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எல்லை மூ-உலகும் உருவி, அன்று, இருவர்[6]
காணும்நாள், ஆதி, ஈறு, இன்மை
வல்லையாய்[7] வளர்ந்தாய்; வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள்புரியாயே. (4)

4 விரைவில்
5 வாள் ஏந்திய அரக்கர்
6 பிரமன் திருமால்
7 வலிமையுடையவனாய்

ஐம்புலனும் சிந்தையும் அடியிணைக்கே

450. பண்ணின் நேர்மொழியாள்[8] பங்க! நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
திண்ணமே ஆண்டாய்; சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
எண்ணமே, உடல், வாய், மூக்கொடு, செவி, கண்,
என்று இவை நின்கணே வைத்து,
மண்ணின்மேல் அடியேன் வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று அருள் புரியாயே. (5)

8 உமையம்மை

சா

சருக. பஞ்சின்மெல் லடியாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செஞ்செவே யாண்டாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யஞ்சினே னுயே னுண்டுநீ யளித்த
வருளினை மருளினுன் மறந்த
வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

எ

சருஉ. பருதிவா ழொளியாய் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
திருவுயர் கோலச் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கிக் கசிந்துள முருகிக்
கலந்துநான் வாழுமா றறியா
மருளனே னுலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

அ

சருங. பந்தணை விரலாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செந்தழல் போல்வாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யந்தமி லமுதே யரும்பெரும் பொருளே
யாரமு தேயடி யேனை
வந்துய வாண்டாய் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

அருளினை மறந்து அஞ்சினேன்

451. பஞ்சின் மெல் அடியாள்[1] பங்க ! நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய் ;
செஞ்செவே[2] ஆண்டாய் ; சிவபுரத்து அரசே !
திருப்பெருந்துறை உறை சிவனே !
அஞ்சினேன் நாயேன் ; ஆண்டு, நீ அளித்த
அருளினை, மருளினால் மறந்த
வஞ்சனேன், இங்கு வாழ்கிலேன் கண்டாய் ;
' வருக ' என்று, அருள் புரியாயே. (6)

1 –உமையம்மை
2 செம்மையாகவே, நலனுறவே

வாழும் வழி அறியா மருளனேன்

452. பருதி[3] வாழ் ஒளியாய் ! பாதமே அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய் ;
திருஉயர் கோல[4]ச் சிவ புரத்து அரசே !
திருப்பெருந்துறை உறை சிவனே !
கருணையே[5] நோக்கிக் கசிந்து, உள்ளம் உருகிக்
கலந்து, நான் வாழும் ஆறு அறியா
மருளனேன்,[6] உலகில் வாழ்கிலேன் கண்டாய் ;
' வருக ' என்று, அருள் புரியாயே. (7)

3 கதிரவன்
4 அழகுமிக்க
5 அருளையே
6 மயக்க முற்றவன்

உய்யவந்த அமுது

453. பந்து அணை விரலாள் பங்க ! நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய் ;
செம் தழல் போல்வாய், சிவபுரத்து அரசே !
திருப்பெருந்துறை உறை சிவனே !
அந்தம் இல் அமுதே ! அரும் பெரும் பொருளே !
ஆர் அமுதே ! அடியேனை
வந்து உய, ஆண்டாய் ; வாழ்கிலேன் கண்டாய் ;
' வருக ' என்று, அருள் புரியாயே. (8)

௯

௪௫௪. பாவநா சாவுன் பாதமே யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ விருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

௧௦

௪௫௫. பழுதிறொல் புகழாள் பங்கநீ யல்லாற்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
செழுமதி யணிந்தாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ வெனக்கோர்
துணையென நினைவனோ சொல்லாய்
மழவிடை யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகவென் றருள்புரி யாயே.

திருச்சிற்றம்பலம்.

தேவர் தம் தேவே

454. பாவ-நாசா, உன் பாதமே அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
தேவர்-தம் தேவே, சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
மூ-உலகு உருவ[1], இருவர்[2] கீழ்மேலாய்
முழங்க[3], அழலாய் நிமிர்ந்தானே!
மா உரியனே[4]! வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள் புரியாயே. (9)

1 ஊடுருவிச் செல்ல
2 திருமாலும் பிரமனும்
3 ஆரவார ஒலி செய்ய
4 விலங்கின (யானையின்) தோலைப்போர்த்தவனே

தொழுவனோ பிறரை? துதிப்பனோ?

455. பழுது இல் தொல் புகழாள்[5] பங்க! நீ அல்லால்,
பற்று நான் மற்று இலேன் கண்டாய்;
செழுமதி அணிந்தாய், சிவபுரத்து அரசே!
திருப்பெருந்துறை உறை சிவனே!
தொழுவனோ பிறரை? துதிப்பனோ? எனக்கு ஓர்
துணை என நினைவனோ? சொல்லாய்;
மழ விடையானே[6]! வாழ்கிலேன் கண்டாய்;
'வருக' என்று, அருள் புரியாயே. (10)

5 உமையம்மை
6 இளங்காளையை ஊர்தியாக உடையவனே

திருச்சிற்றம்பலம்

இருபத்தொன்பதாவது

அருட்பத்து

மகாமாயாசுத்தி

ஆசிரியவிருத்தம்

க

சருசு. சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையி
னிறைமலர்க் குருந்தமே வியசீ
ராதியே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

உ

சருஎ. நிருத்தனே நிமலா நீற்றனே நெற்றிக்
கண்ணனே விண்ணுளோர் பிரானே
யொருத்தனே யுன்னை யோலமிட் டலறி
யுலகெலாந் தேடியுங் காணேன்
திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருத்தனே யடியே னாதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

இருபத்தொன்பதாவது

அருள் பத்து

மகா மாயா சுத்தி

நீதியே ! அருளாய்

456. சோதியே ! சுடரே ! சூழ் ஒளி[1] விளக்கே !
சுரி[2] குழல்[3] , பணை[4] முலை மடந்தை[5]
பாதியே ! பரனே! பால் கொள் வெள்-நீற்றாய் !
பங்கயத்து[6] அயனும், மால் அறியா
நீதியே ! செல்வத் திருப்பெருந்துறையில்
நிறை மலர்க் குருந்தம்[7] மேவிய[8] சீர்
ஆதியே ! அடியேன் ஆதரித்து[9] அழைத்தால்,
' அதெந்துவே ? '[10] என்று, அருளாயே ! (1)

1 ஒளி சூழ்
2 சுருண்ட
3 கூந்தல்
4 பருத்த
5 பெண்-உமையம்மை யார்
6 தாமரை மலரில்
7 குருந்த மரம்
8 விரும்பி அமர்ந்த
9 ஆசை கூர்ந்து புகழ வேண்டி
10 " அது என்ன '

தேடியும் காணேன்

457. நிருத்தனே[11]! நிமலா[12]! நீற்றனே! நெற்றிக்
கண்ணனே! விண்-உளார் பிரானே!
ஒருத்தனே[13]! உன்னை, ஓலம் இட்டு அலறி,
உலகு எலாம் தேடியும், காணேன்;
திருத்தம்[14] ஆம் பொய்கைத் திருப்பெருந்துறையில்
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அருத்தனே[15]! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
' அதெந்துவே ? ' என்று, அருளாயே ! (2)

11 கூத்தனே
12 மாசு அணுகாதவனே
13 ஒப்பற்றவனே
14 தூய்மை
15 மெய்ப்பொருளாக வுள்ளவனே

௩

சருஅ. எங்கணு யகனே யென்னுயிர்த் தலைவா
வேலவார் குழலிமா ரிருவர்
தங்கணு யகனே தக்கநற் காமன்
றனதுட றழலெழ விழித்த
செங்கணு யகனே திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரங்கணு வடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

௪

சருகூ. கமலநான் முகனுங் கார்முகி னிறத்துக்
கண்ணனு நண்ணுதற் கரிய
விமலனே யெமக்கு வெளிப்படா யென்ன
வியன்றழல் வெளிப்பட்ட வெந்தாய்
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரமலனே யடியே னுதரித்தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

௫

சசூ0. துடிகொணே ரிடையாள் சுரிகுழன் மடந்தை
துணைமுலைக் கண்கடோய் சுவடு
பொடிகொள்வான் றழலிற் புள்ளிபோ லிரண்டு
பொங்கொளி தங்குமார் பினனே
செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரடிகளே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே

அழல்-கண் அருள்-கண்ணே

458. எங்கள் நாயகனே! என் உயிர்த் தலைவா!
ஏல[1]வார் குழலிமார் இருவர்[2]–
தங்கள் நாயகனே! தக்க[3] நல்[4] காமன்–
தனது உடல் தழல் எழ விழித்த
செம்-கண் நாயகனே! திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அம்-கணா[5]! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (3)

1 மயிர்ச்சாந்தணிந்த
2 கங்கையும் உமையம்மையும்
3 சிறந்த
4 அழகுள்ள
5 அருள்நோக்கம் உடையவனே

வேண்ட வெளிப்பட்ட தழல்

459. கமல[6] நான் முகனும்[7], கார்[8] முகில்[9] நிறத்துக்
கண்ணனும்[10], நண்ணுதற்கு[11] அரிய
விமலனே[12], எமக்கு வெளிப்படாய்! என்ன,
வியன்[13] தழல் வெளிப்பட்ட எந்தாய்!
திமில[14] நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அமலனே[15]! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (4)

6 தாமரை மலரிலிருக்கும்
7 பிரமனும
8 கரிய
9 மேகம
10 திருமாலும்
11 நெருங்குவதற்கு
12 மாசு ஒழிப்பவனே
13 பெரிய, வியப்பான
14 முழக்கமான
15 மாசு அணுகாதவனே

பெண்ணொடு தோன்றும் பெருந்தகை

460. துடி[16] கொள் நேர் இடையாள், சுரிகுழல்[17] மடந்தை[18]
துணை முலைக்கண்கள் தோய் சுவடு,
பொடி கொள் வான் தழலில்,[19] புள்ளிபோல், இரண்டு
பொங்கு ஒளி தங்கு மார்பினனே!
செடி[20] கொள் வான் பொழில் சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே[21]! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (5)

16 உடுக்கை
17 சுருண்ட கூந்தல்
18 பெண்–உமையம்மை
19 பொடி...தழலில்–நீறு பூத்த நெருப்பில்
20 புதர், தூறு
21 முதல்வனே – சிவபெருமானே

சா

சசுக. துப்பனே தூயாய் தூயவெண் ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்
தொப்பனே யுன்னை யுள்குவார் மனத்தி
னுறுசுவை யளிக்குமா ரமுதே
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரப்பனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே.

எ

சசுஉ. மெய்யனே விகிர்தா மேருவே வில்லா
மேவலர் புரங்கண்மூன் றெரித்த
கையனே காலாற் காலனைக் காய்ந்த
கடுந்தழற் பிழம்பன்ன மேனிச்
செய்யனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரையனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே.

அ

சசுங. முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறு மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரத்தனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றருளாயே.

உள்குவார் மனத்து அமுது

461. துப்பனே,[1] தூயாய்! தூய வெள்-நீறு
துதைந்து[2] எழு, துளங்கு[3] ஒளி வயிரத்து
ஒப்பனே! உன்னை உள்குவார்[4] மனத்தில்
உறு[5] சுவை அளிக்கும் ஆர் அமுதே!
செப்பம்[6] ஆம் மறை சேர் திருப்பெருந்துறையில்,
செழு மலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (6)

1 பவள நிறத்தவனே அறிவாகவுள்ளவனே
2 படிந்து
3 விளங்கு
4 சிந்திப்பார்
5 நிலைத்த
6 திருத்தம்

காலனைக் காய்ந்தான்

462. மெய்யனே! விகிர்தா[7]! மேருவே வில்லா
மேவலர்[8] புரங்கள் மூன்று எரித்த
கையனே! காலால் காலனைக்[9] காய்ந்த,[10]
கடும் தழல்[11] பிழம்பு[12] அன்ன மேனிச்
செய்யனே! செல்வத் திருப்பெருந் துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவியசீர்
ஐயனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (7)

7 வேறுவேறு உருவம் கொள்பவனே
8 பகைவர்
9 யமனை
10 சினந்த
11 நெருப்பு
12 திரண்ட வடிவம்

அன்பர்க்கு அருளும் சித்தன்

463. முத்தனே[13]! முதல்வா! முக்கணா! முனிவா!
மொட்டு அறு மலர்[14] பறித்து, இறைஞ்சி,
பத்தியாய் நினைந்து, பரவுவார்[15]–தமக்குப்
பர–கதி[16] கொடுத்து அருள் செய்யும்
சித்தனே[17]! செல்வத் திருப்பெருந் துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவியசீர்
அத்தனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று, அருளாயே! (8)

13 முத்தி என்னும் வீட்டு இன்பத்தை அளிப்பவனே
14 மலரும் பருவத்திலுள்ள பூ
15 போற்றிப் பணிவார்
16 மேலான நிலை – வீட்டின்பம்
17 ஞானவடிவினனே

கூ

சகூச. மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி
மறுமையோ டிம்மையுங் கெடுத்த
பொருளனே புனிதா பொங்குவா ளரவங்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்
தெருளுநான் மறைசேர் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்தமே வியசீ
ரருளனே யடியே னுதரித் தழைத்தா
லதெந்துவே யென்றரு ளாயே.

ய

சகூரு. திருந்துவார் பொழில்சூழ் திருப்பெருந் துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீ
ரிருந்தவா றெண்ணி யேசறு நினைந்திட்
டென்னுடை யெம்பிரா னென்றென்
றருந்தவா நினைந்தே யாதரித் தழைத்தா
லலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி யிதுகாண்
போதரா யென்றரு ளாயே.

திருச்சிற்றம்பலம்

மருள் அறுத்த பொருள்

464. மருளனேன்[1] மனத்தை மயக்கு[2] அற நோக்கி,
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே[3]! புனிதா[4]! பொங்கு[5] வாள்[6] அரவம்,[7]
கங்கை நீர், தங்கு செம் சடையாய்!
தெருளும்[8] நான் மறை சேர் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவியசீர்
அருளனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்,
'அதெந்துவே?' என்று அருளாயே! (9)

1 மயங்கிய என்
2 மயக்கம், அறியாமை
3 மெய்ப்பொருளாக வுள்ளவனே
4 தூய்மையானவனே
5 சீறுகின்ற
6 ஒளி
7 பாம்பு
8 தெளிவான உணர்ச்சியை உண்டுபண்ணுகின்ற

குருந்தம் மேவியது எண்ணில்

465. திருந்து[9] வார்[10] பொழில்[11] சூழ் திருப்பெருந்துறையில்
செழு மலர்க் குருந்தம் மேவிய[12] சீர்
இருந்தவாறு எண்ணி, ஏசறு[13], நினைந்திட்டு,
'என்னுடை எம்பிரான்' என்று-என்று,
அருந்தவா[14]! நினைந்தே, ஆதரித்து அழைத்தால்,
அலை கடல்-அதனுளே நின்று,
'பொருந்த, வா; கயிலை புகு நெறி இது காண்;
போதராய்'[15] என்று அருளாயே! (10)

9 செப்பமுற்ற; செப்பமுறச் செய்யும்
10 நெடிய
11 சோலை
12 விரும்பியமர்ந்த
13 மனம் உடைந்து
14 அரிய தவத்தால் அடையப்பெறுபவனே
15 வருக

திருச்சிற்றம்பலம்

முப்பதாவது

திருக்கழுக்குன்றப் பதிகம்

சற்குரு தரிசனம்

ஆசிரிய விருத்தம்

க

௪௬௬. பிணக்கி லாதபெ ருந்து றைப்பெரு
மா னுன் னாமங்கள் பேசுவார்க்
கிணக்கி லாததோ ரின்ப மேவருந்
துன்பமே துடைத் தெம்பிரா
னுணக்கி லாததோர் வித்து மேல்விளை
யாம லென்வினை யொத்தபின்
கணக்கி லாத்திருக் கோல நீவந்து
காட்டினாய் கழுக் குன்றிலே.

உ

௪௬௭. பிட்டு நேர்பட மண்சு மந்தபெ
ருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள் வான்வந்து
காட்டினாய்கழுக் குன்றிலே.

முப்பதாவது

திருக்கழுக்குன்றப் பதிகம்

சற்குரு தரிசனம்

பெயர் ஓதுவார்க்குப் பேரின்பம்

466. பிணக்கு[1] இலாத பெருந்துறைப் பெருமான்!
உன் நாமங்கள் பேசுவார்க்கு,
இணக்கு[2] இலாதது ஓர் இன்பமே வரும்;
துன்பமே துடைத்து; எம்பிரான்!
உணக்கு[3] இலாதது ஓர் வித்து, மேல்
விளையாமல், என் வினை ஒத்த பின்,
கணக்கு[4] இலாத் திருக்கோலம் நீ வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே! (1)

1 மாறுபாடு இசையாத்தன்மை
2 ஒப்பு
3 வற்றுதல், வாடுதல், வலிமையிழத்தல்
4 அளவு

உன்னைச் சார்ந்திலேன்

467. பிட்டு நேர்பட, மண் சுமந்த
பெருந்துறைப் பெரும் பித்தனே!
சட்ட[5] நேர்பட[6] வந்திலாத
சழக்கனேன்[7] உனைச் சார்ந்திலேன்[8];
சிட்டனே[9]! சிவலோகனே! சிறு
நாயினும் கடை ஆய வெம்[10]
கட்டனேனையும்[11] ஆட்கொள்வான்[12]; வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே! (2)

5 நெறி
6 பொருந்த, ஒத்து
7 குற்றமுடையவன
8 அடைந்திலேன
9 சீலம் மிக்கவனே
10 கொடிய
11 துன்பமுடைய என்னையும்
12 ஆட்கொள்ளற்கு

௩

௪௬௮. மலங்கி னேன்கண்ணி னீரை மாற்றிம
லங்கெ டுத்தபெ ருந்துறை
விலங்கி னேன்வினைக்கேட னேனினி
மேல்வி ளைவ தறிந்திலே
னிலங்கு கின்றநின் சேவ டிகளி
ரண்டும் வைப்பிட மின்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

௪

௪௬௯. பூணொ ணாததொ ரன்பு பூண்டுபொ
ருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாண மெய்திந
டுக்க டலுள ழுந்திநான்
பேணொ ணாதபெ ருந்து றைப்பெருந்
தோணி பற்றி யுகைத்தலுங்
காணொ ணாத்திருக் கோல நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

௫

௪௭௰. கோல மேனிவ ராக மேகுண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே
சீல மேதும றிந்தி லாதவென்
சிந்தை வைத்த சிகாமணி
ஞால மேகரி யாக நானுனை
நச்சி நச்சிட வந்திடுங்
கால மேயுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

கண்ணீர் துடைத்தாய்

468. மலங்கினேன்[1] கண்ணின் நீரை மாற்றி
மலம்[2] கெடுத்த பெருந்துறை
விலங்கினேன்[3] ; வினைக்கேடனேன், இனி
மேல் விளைவது அறிந்திலேன் ;
இலங்குகின்ற[4] நின் சேவடிகள்
இரண்டும், வைப்பிடம்[5] இன்றியே
கலங்கினேன்[6] ; கலங்காமலே, வந்து,
காட்டினாய்; கழுக்குன்றிலே ! (3)

1 கலங்கினவனாகிய என்
2 பிறவிக்குக் காரணமாகிய குற்றங்கள்,
3 விலகினேன்
4 விளங்குகின்ற
5 அமாததி வழிபடும் இடம்
6 வருந்தினேன்

தோணி உகைக்கத் தோன்றிய கோலம்

469. பூண்-ஒணாதது[7] ஓர் அன்பு பூண்டு,
பொருந்தி, நாள்தொறும் போற்றவும்,
நாண்-ஒணாதது ஓர் நாணம் எய்தி,
நடுக் கடலுள் அழுந்தி, நான்
பேண்-ஒணாத பெருந்துறைப் பெரும்
தோணி பற்றி உகைத்தலும்,
காண்-ஒணாத் திருக்கோலம், நீ வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே ! (4)

7 இயலாத

சிந்தை வைத்த சிகாமணி

470. கோல[8] மேனி வராகமே[9] !குணம்
ஆம் பெருந்துறைக் கொண்டலே!
சீலம்[10] ஏதும் அறிந்திலாத என்
சிந்தை வைத்த சிகாமணி!
ஞாலமே[11] கரி[12] ஆக, நான் உனை
நச்சி[13] நச்சிட வந்திடும்
காலமே[14]! உனை ஓத,[15] நீ வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே! (5)

8 அழகிய
9 பொன்னே (மேல+நிவர்+ஆகமே)?
10 நல்ல நெறி
11 உலகமே
12 சான்று
13 விரும்பி
14 காலதத்துவமாக வுள்ளவனே
15 புகழ்ந்து பாட

௬

௭௭௧. பேத மில்லதொர் கற்ப ளித்தபெ
ருந்து றைப்பெரு வெள்ளமே
யேத மேபல பேச நீயெனை
யேதி லார்முன மென்செய்தாய்
சாதல் சாதல்பொல் லாமை யற்றத
னிச்ச ரண்சர ணாமெனக்
காத லாலுனை யோத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

௭

௭௭௨. இயக்கி மார றுபத்து நால்வரை
யெண்குணஞ் செய்த வீசனே
மயக்க மாயதொர் மும்ம லப்பழ
வல்வி னைக்கு ளழுந்தவும்
துயக்க றுத்தெனை யாண்டு கொண்டுநின்
றூம லர்க்கழ றந்தெனைக்
கயக்கவை வத்தடி யார்மு னேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

பேதம் அறுத்த பெருவெள்ளம்

471. பேதம்[1] இல்லது ஓர் கற்பு[2] அளித்த
பெருந்துறைப் பெரு வெள்ளமே!
ஏதமே[3] பல பேச, நீ எனை
ஏதிலார்[4] முனம், என் செய்தாய்?
சாதல்-சாதல்[5], பொல்லாமை அற்ற,
தனிச்[6] சரண்[7] சரண்[8] ஆம் என,
காதலால்[9] உனை ஓத, நீ வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே! (6)

1 வேற்றுமை, பிரிவுணர்ச்சி
2 ஞானம்
3 குற்றமே
4 அயலார்
5 பிறத்தலும் சாதலு மான பிறவித்துயர்
6 ஒப்பற்ற
7 திருவடி
8 புகலிடம்
9 அளவற்ற அன்பால்

வினை அறுத்து வீறு அளித்தான்

472. இயக்கிமார்[10] அறுபத்து நால்வரை
எண் குணம்[11] செய்த ஈசனே!
மயக்கம் ஆயது ஓர் மும்மலப்[12] பழ
வல் வினைக்குள் அழுந்தவும்,
துயக்கு[13] அறுத்து, எனை ஆண்டுகொண்டு, நின்
தூ[14] மலர்க் கழல் தந்து, எனைக்
கயக்க[15] வைத்து, அடியார் முனே வந்து,
காட்டினாய், கழுக்குன்றிலே! (7)

10 தேவகணத்துள் ஒரு கணம்
11 இறைவனது எட்டுக் குணம்
12 பிறவிக்குக் காரண மாகிய மூன்று மலம்
13 தளர்ச்சி, துன்பம்
14 தூய்மை சிறக்க
15 சிறக்க

திருச்சிற்றம்பலம்

முப்பத்தொன்றாவது

கண்ட பத்து

நிருத்த தரிசனம்

கொச்சகக் கலிப்பா

க

சஎங. இந்திரிய வயமயங்கி யிறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோ யருநரகில் வீழ்வேனைச்
சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அந்தமிலா வானந்த மணிகொடில்லை கண்டேனே.

உ

சஎச. வினைப்பிறவி யென்கின்ற வேதனையி லகப்பட்டுத்
தனைச்சிறிது நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
யெனைப்பெரிது மாட்கொண்டென் பிறப்பறுத்த விணையிலியை
யனைத்துலகுந் தொழுந்தில்லை யம்பலத்தே கண்டேனே.

ங

சஎரு. உருத்தெரியாக் காலத்தே யுள்புகுந்தென் னுளமன்னிக்
கருத்திருத்தி யூன்புக்குக் கருணையினு லாண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்குஞ் சிவபதத்தை
யருத்தியினு னடியே னணிகொடில்லை கண்டேனே.

ச

சஎசா. கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை
வல்லாள னய்வந்து வனப்பெய்தி யிருக்கும்வண்ணம்
பல்லோருங் காணவென்றன் பசுபாச மறுத்தானை
யெல்லோரு மிறைஞ்சுதில்லை யம்பலத்தே கண்டேனே.

முப்பத்தொன்றாவது

கண்ட பத்து

பொறி வழியே சென்று வேறு பட்டேன்

473. இந்திரிய[1] வயம் மயங்கி, இறப்பதற்கே காரணம்ஆய், — 1 பொறி
அந்தரமே[2] திரிந்துபோய், அருநரகில் வீழ்வேனைச் — 2 இருளிலே, தீமையிலே
சிந்தை-தனைத்தெளிவித்து, சிவம்ஆக்கி, எனை ஆண்ட
அந்தம் இலாஆனந்தம்-அணிகொள் தில்லைக் கண்டேனே! (1)

என் உயிர்க்கு உறுதி எண்ணிலேன்

474. வினைப் பிறவி என்கின்ற வேதனையில்[3] அகப்பட்டு, — 3 துன்பத்தில்
தனைச் சிறிதும் நினையாதே, தளர்வு எய்திக் கிடப்பேனை,
எனைப் பெரிதும் ஆட்கொண்டு, என்பிறம்பு அறுத்தஇணை[4] இலியை- — 4 ஒப்பு
அனைத்து உலகும் தொழும் தில்லை அம்பலத்தே கண்டேனே! (2)

அறியாப் பருவத்தே அகம் புகுந்தான்

475. உருத் தெரியாக் காலத்தே உள் புகுந்து, என் உளம் மன்னி,
கருத்து இருத்தி[5], ஊன்புக்கு, கருணையினால் ஆண்டுகொண்ட — 5 நிலைபெற்று
திருத்துருத்தி மேயானை, தித்திக்கும் சிவபதத்தை-
அருத்தியினால்[6] நாய்-அடியேன் அணிகொள் தில்லைக்கண்டேனே! (3) — 6 அன்பினால்

கல்லாத புல்லறிவேன் கடைத்தேறினேன்

476. கல்லாத. புல் அறிவின் கடைப்பட்ட நாயேனை,
வல்லாளனாய் வந்து, வனப்பு[7] எய்தி இருக்கும் வண்ணம், — 7 சிறந்த தோற்றம்
பல்லோரும் காண, என்-தன் பசு-பாசம்[8] அறுத்தானை- — 8 உயிருக்குரிய கட்டு
எல்லோரும் இறைஞ்சு[9] தில்லை அம்பலத்தே கண்டேனே! (4) — 9 வணங்கும்

௫

சஎஎ. சாதிகுலம் பிறப்பென்னுஞ் சுழிப்பட்டுத் தடுமாறு
மாதமிலி நாயேனை யல்லலறுத் தாட்கொண்டு
பேதைகுணம் பிறருருவம் யானெனதென் னுரைமாய்த்துக்
கோதிலமு தானானைக் குலாவுதில்லை கண்டேனே.

௬

சஎஅ. பிறவிதனை யறமாற்றிப் பிணிமூப்பென் றிவையிரண்டு
முறவினொடு மொழியச்சென் றுலகுடைய வொருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலமன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

௭

சஎக. பத்திமையும் பரிசுமிலாப் பசுபாச மறுத்தருளிப்
பித்தனிவ னெனவென்னை யாக்குவித்துப் பேராமே
சித்தமெனுந் திண்கயிற்றாற் றிருப்பாதங் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே.

௮

சஅ௦. அளவிலாப் பாவகத்தா லமுக்குண்டிங் கறிவின்றி
விளைவொன்று மறியாதே வெறுவியனாய்க் கிடப்பேனுக்
களவிலா வானந்த மளித்தென்னை யாண்டானைக்
களவிலா வானவருந் தொழுந்தில்லை கண்டேனே.

௯

சஅக. பாங்கினொடு பரிசொன்று மறியாத நாயேனை
ஓங்கியுளத் தொளிவளர வுலப்பிலா வன்பருளி
வாங்கிவினை மலமறுத்து வான்கருணை தந்தானை
நான்குமறை பயில்தில்லை யம்பலத்தே கண்டேனே.

சாதிகுலம் என்னும் தடுமாற்றம ஒழிந்தது

477. சாதி, குலம், பிறப்பு, என்னும் சுழிப்[1]பட்டுத் தடுமாறும் — 1 சுழல்
ஆதம்[2] இலி நாயேனை, அல்லல்[3] அறுத்து ; ஆட்கொண்டு ; — 2 பெருகிய அன்பு
'பேதை[4] குணம், பிறர் உருவம், யான், எனது', என் உரை, மாய்த்து; — 3 துன்பம், 4 அறியாமை
கோது[5] இல் அமுது ஆனானை-குலாவு[6] தில்லைக் கண்டேனே! (5) — 5 குற்றம், 6 விளங்குகின்ற

பிணி மூப்பு அகன்றது

478. பிறவி-தனை அற மாற்றி; பிணி, மூப்பு, என்ற இவை இரண்டும்,
உறவினொடும் ஒழியச் சென்று; உலகு உடைய ஒரு முதலை[7] — 7 சிவபெருமானை
செறி[8] பொழில் சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி, — 8 அடர்ந்த
மறையவரும், வானவரும், வணங்கிட-நான் கண்டேனே! (6)

திருவடியில் கட்டுவித்தான்

479. பத்திமையும்[9] பரிசும்[10] இலாப் பசு-பாசம் அறுத்தருளி, — 9 அழுந்திய அன்பும்
பித்தன் இவன் என, என்னை ஆக்குவித்து, பேராமே[11], — 10 நலவொழுக்கமும்
சித்தம் எனும் திண் கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த — 11 விலகாமல்
வித்தகனார்[12] விளையாடல்-விளங்கு தில்லைக் கண்டேனே! (7) — 12 தெய்வத்திறவுடையார்—சிவபெருமான

விளைவு அறியா வெறுவியேன்

480. அளவு இலாப் பாவகத்தால்[13] அமுக்கு உண்டு, இங்கு, அறிவு இன்றி, — 13 உள்ளத் தோற்றம்
விளைவு ஒன்றும் அறியாதே, வெறுவியனாய்[14]க் கிடப்பேனுக்கு — 14 பயனற்றவனாய்
அளவு இலா ஆனந்தம் அளித்து, என்னை ஆண்டானை-
களவு[15] இலா வானவரும் தொழும் தில்லைக் கண்டேனே! (8) — 15 வஞ்சம் முதலிய தீய குணங்கள்

வான் கருணை தந்தான்

481. பாங்கினொடு[16] பரிசு[17] ஒன்றும் அறியாத நாயேனை, — 16 தன்மையொடு முறையொடு, 17 பயன்
ஓங்கி[18] உளத்து, ஒளிவளர உலப்பு[19] இலா அன்பு அருளி, — 18 உளத்து ஓங்கி, 19 கெடுதல்
வாங்கி[20] வினை, மலம் அறுத்து, வான் கருணை தந்தானை-
நான்கு மறை பயில் தில்லை அம்பலத்தே கண்டேனே! (9) — 20 நீக்கி

ய

சஅ௨. பூதங்க ளைந்தாகிப் புலனாகிப் பொறியாகிப்
பேதங்க ளனைத்துமாய்ப் பேதமிலாப் பெருமையனைக்
கேதங்கள் கெடுத்தாண்ட கிளரொளியை மரகதத்தை
வேதங்க டொழுதேத்தும் விளங்குதில்லை கண்டேனே.

திருச்சிற்றம்பலம்.

முப்பத்திரண்டாவது

பிரார்த்தனைப் பத்து

சதாமுத்தி

ஆசிரிய விருத்தம்

க

சஅ௩. கலந்து நின்னடியா ரோடன்று
வாளா களித்தி ருந்தேன்
புலர்ந்து போன காலங்கள்
புகுந்து நின்ற திடர்பின்னா
ளுலர்ந்து போனே னுடையானே
யுலவா வின்பச் சுடர்காண்பா
னலந்து போனே னருள்செய்யா
யார்வங் கூர வடியேற்கே.

௨

சஅச. அடியார் சிலருன் னருள்பெற்றா
ரார்வங் கூர யானவமே
முடையார் பிணத்தின் முடிவின்றி
முனிவா லடியேன் மூக்கின்றேன்
கடியே னுடைய கடுவினையைக்
களைந்துன் கருணைக் கடல்பொங்க
வுடையா யடியே னுள்ளத்தே
யோவா துருக வருளாயே.

கேதம் கெடுத்த கிளர் ஒளி

482. பூதங்கள் ஐந்து ஆகி, புலன் ஆகி, பொறி ஆகி,
பேதங்கள்[1] அனைத்தும் ஆய், பேதம் இலாப் பெருமையனை,
கேதங்கள்[2] கெடுத்து ஆண்ட கிளர்[3] ஒளியை, மரகதத்தை[4]-
வேதங்கள் தொழுது ஏத்தும் விளங்குதில்லைக் கண்டேனே! (10)

1 வேற்றுமைகள்
2 துன்பங்கள
3 தானே விளங்குகின்ற
4 பச்சைமணி

திருச்சிற்றம்பலம்.

முப்பத்திரண்டாவது

பிரார்த்தனைப் பத்து

காலம் வறிதே கழிகின்றது

483. கலந்து, நின் அடியா ரோடு,
அன்று, வாளா,[5] களித்திருந்தேன்;
புலர்ந்து[6] போன, காலங்கள்;
புகுந்து நின்றது இடர், பின் நாள்;
உலர்ந்து[7] போனேன்; உடையானே!
உலவா[8] இன்பச் சுடர் காண்பான்,
அலந்து[9] போனேன்; அருள்செய்யாய்,
ஆர்வம் கூர[10], அடியேற்கே! (1)

5 செயல் மறந்து
6 கழிந்து
7 வாடி, வாட்டம் அடைந்து
8 கெடாத
9 வருந்தி
10 மிக

யாக்கை பயனின்றி மூப்படை கின்றது

484. அடியார் சிலர், உன் அருள் பெற்றார்,
ஆர்வம் கூர; யான், அவமே,
முடை[11] ஆர் பிணத்தின், முடிவு[12] இன்றி,
முனிவால்[13], அடியேன், மூக்கின்றேன்[14];
கடியேனுடைய[15] கடுவினையைக்
களைந்து, உன் கருணைக் கடல் பொங்க[16],
உடையாய்! அடியேன் உள்ளத்தே
ஓவாது[17] உருக, அருளாயே; (2)

11 தீய நாற்றம்
12 எல்லை
13 வெறுப்பால்
14 மூப்பு அடைகின்றேன்
15 இளகாத உள்ளமுடைய எனது
16 மேனமேலும் மிக
17 இடைவிடாது

௩.

௪அரு. அருளா ரமுதப் பெருங்கடல்வா
யடியா ரெல்லாம் புக்கழுந்த
இருளா ராக்கை யிதுபொறுத்தே
யெய்த்தேன் கண்டா யெம்மானே
மருளார் மனத்தோ ருன்மத்தன்
வருமா லென்றிங் கெனைக்கண்டார்
வெருளா வண்ண மெய்யன்பை
யுடையாய் பெறநான் வேண்டுமே.

௪

௪அசு. வேண்டும் வேண்டு மெய்யடியா
ருள்ளே விரும்பி யெனையருளால்
ஆண்டா யடியே னிடர்களைந்த
வமுதே யருமா மணிமுத்தே
தூண்டா விளக்கின் சுடரனையாய்
தொண்ட னேற்கு முண்டாங்கொல்
வேண்டா தொன்றும் வேண்டாது
மிக்க வன்பே மேவுதலே.

௫

௪அஎ. மேவு முன்ற னடியாருள்
விரும்பி யானு மெய்ம்மையே
காவி சேருங் கயற்கண்ணாள்
பங்கா வுன்றன் கருணையினால்
பாவி யேற்கு முண்டாமோ
பரமா னந்தப் பழங்கடல்சேர்ந்
தாவி யாக்கை யானெனதென்
றியாது மின்றி யறுதலே.

மருளன் என்று உலகம் வெருளுகின்றது

485. அருள் ஆர் அமுதப் பெரும் கடல் வாய்,
அடியார் எல்லாம் புக்கு அழுந்த,
இருள் ஆர் ஆக்கை-இது பொறுத்தே
எய்த்தேன்[1] கண்டாய்; எம்மானே!
'மருள்[2] ஆர் மனத்து ஓர் உன்மத்தன்[3]
வருமால்'[4] என்று, இங்கு, எனைக் கண்டார்
வெருளா[5] வண்ணம், மெய் அன்பை,
உடையாய்! பெற நான் வேண்டுமே! (3)

1 இளைத்தேன்
2 மயக்கம், தெளிவின்மை
3 பெரும்பித்தன்
4 வரும்+ஆல்
5 அஞ்சா

அன்பும் உண்டாகுமா?

486. வேண்டும், வேண்டும், மெய் அடியார்-
உள்ளே, விரும்பி, எனை அருளால்
ஆண்டாய்; அடியேன் இடர்[6] களைந்த
அமுதே! அரு மா மணி முத்தே!
தூண்டா விளக்கின் சுடர் அனையாய்!
தொண்டனேற்கும் உண்டாம்-கொல்-
வேண்டாது ஒன்றும் வேண்டாது,
மிக்க அன்பே மேவுதலே? (4)

6 துன்பம்

யான் எனது என்றல் அறுமா?

487. மேவும்[7] உன்-தன் அடியாருள்
விரும்பி, யானும், மெய்ம்மையே,
காவி[8] சேரும் கயல்[9] கண்ணாள்[10]
பங்கா, உன்-தன் கருணையினால்
பாவியேற்கும் உண்டாமோ-
பரம-ஆனந்தப் பழம் கடல் சேர்ந்து,
ஆவி, யாக்கை, யான் எனது, என்று
யாதும் இன்றி, அறுதலே? (5)

7 விரும்பியடையும்
8 கருங்குவளை மலர்
9 கெண்டை மீன
10 கண்ணையுடையவள் —உமையம்மை

௬

சஅஅ. அறவே பெற்றார் நின்னன்ப
ரந்த மின்றி யகநெகவும்
புறமே கிடந்து புலைநாயேன்
புலம்பு கின்றே னுடையானே
பெறவே வேண்டு மெய்யன்பு
பேரா வொழியாப் பிரிவில்லா
மறையா நினையா வளவிலா
மாளா வின்ப மாகடலே.

௭

சஅகூ. கடலே யனைய வானந்தங்
கண்டா ரெல்லாங் கவர்ந்துண்ண
விடரே பெருக்கி யேசற்றிங்
கிருத்த லழகோ வடிநாயே
னுடையாய் நீயே யருளுதியென்
றுணர்த்தா தொழிந்தே கழிந்தொழிந்தேன்
சுடரா ரருளா லிருணீங்கச்
சோதி யினித்தான் றுணியாயே.

௮

சகூ0. துணியா வுருகா வருள்பெருகத்
தோன்றுந் தொண்ட ரிடைப்புகுந்து
திணியார் மூங்கிற் சிந்தையேன்
சிவனே நின்று தேய்கின்றே
னணியா ரடியா ருனக்குள்ள
வன்புந் தாரா யருளளியத்
தணியா தொல்லை வந்தருளித்
தளிர்ப்பொற் பாதந் தாராயே.

புறமே கிடந்து புலம்புகின்றேன்

488. அறவே[1] பெற்றார், நின் அன்பர்
அந்தம் இன்றி, அகம் நெகவும்,
புறமே கிடந்து, புலை-நாயேன்
புலம்புகின்றேன் ; உடையானே !
பெறவே வேண்டும், மெய் அன்பு ;
பேரா, ஒழியா, பிரிவு இல்லா,
மறவா, நினையா, அளவு இலா,
மாளா, இன்ப மா கடலே ! (6)

1 எல்லாம், ஒரு குறைவு மின்றி

இடரே பெருக்கி இளைக்கின்றேன்

489. கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்து உண்ண,
இடரே[2] பெருக்கி, ஏசற்று,[3] இங்கு,
இருத்தல் அழகோ, அடி-நாயேன் ?
உடையாய் ! 'நீயே அருளுதி' என்று,
உணர்த்தாது ஒழிந்தே, கழிந்தொழிந்தேன் ;
சுடர் ஆர் அருளால், இருள்[4] நீங்க,
சோதி ! இனித்தான் துணியாயே ! (7)

2 துன்பமே
3 தளர்ந்து
4 மலஇருள்

மூங்கில் குழலுக்காகும் : நானோ கல்-மூங்கில்

490. துணியா,[5] உருகா[6], அருள் பெருகத்
தோன்றும் தொண்டர் இடைப் புகுந்து,
திணி[7] ஆர் மூங்கில் சிந்தையேன்,
சிவனே ! நின்று தேய்கின்றேன் ;
அணி ஆர் அடியார் உனக்கு உள்ள
அன்பும் தாராய் ; அருள் அளியத்[8]
தணியாது[9], ஒல்லை[10] வந்தருளி,
தளிர் பொன் பாதம் தாராயே ! (8)

5 துணிந்து
6 உருகி
7 திணிந்த, உள் துளையில்லாத
8 மனம் நைந்துருக
9 தாழ்க்காது
10 விரைவில்

௯

சகூக. தாரா வருளொன் றின்றியே
தந்தா யென்றுன் றமரெல்லா
மாரா நின்றா ரடியேனு
மயலார் போல வயர்வேனே
சீரா ரருளாற் சிந்தனையைத்
திருத்தி யாண்ட சிவலோகா
பேரா னந்தம் பேராமை
வைக்க வேண்டும் பெருமானே.

௰

சகூஉ. மானேர் பங்கா வந்திப்பார்
மதுரக் கனியே மனநெகா
நானேர் தோளாச் சுரையொத்தா
னம்பி யினித்தான் வாழ்ந்தாயே
யூனே புகுந்த வுனையுணர்ந்தே
யுருகிப் பெருகு முள்ளத்தைக்
கோனே யருளுங் காலந்தான்
கொடியேற் கென்றோ கூடுவதே.

கக

சகூங. கூடிக் கூடி யுன்னடியார்
குனிப்பார் சிரிப்பார் களிப்பாராய்
வாடி வாடி வழியற்றே
வற்றன் மரம்போ னிற்பேனோ
வூடியூடி யுடையாயொடு
கலந்துள் ளுருகிப் பெருகிநெக்
காடி யாடி யானந்த
மதுவே யாக வருள்கலந்தே.

திருச்சிற்றம்பலம்.

அயலார் போல் அயர்கின்றேன்

491. 'தாரா அருள் ஒன்று இன்றியே
தந்தாய்' என்று, உன் தமர் எல்லாம்
ஆரா[1] நின்றார்; அடியேனும்,
அயலார் போல, அயர்வேனோ[2]?
சீர்ஆர் அருளால், சிந்தனையைத்
திருத்தி ஆண்ட சிவலோகா!
பேர்-ஆனந்தம் பேராமை[3]
வைக்கவேண்டும், பெருமானே! (9)

1 துய்த்து மகிழ்ந்து
2 தளர்வேனோ
3 நீங்காமை

சுரை வீணைக்கு ஆகும்: நானோ தோளாச்சுரை

492. மான்[4] ஓர் பங்கா![5] வந்திப்பார்
மதுரக்[6] கனியே! மனம்நெகா[7]
நான், ஓர் தோளாச்[8] சுரை ஒத்தால்,
நம்பி! இனித்தான் வாழ்ந்தாயே?
ஊனே புகுந்த உனை உணர்ந்தே,
உருகிப்பெருகும் உள்ளத்தை,
கோனே! அருளும் காலம்-தான்,
கொடியேற்கு, என்றோ கூடுவதே? (10)

4 மான்போலும் உமையம்மை
5 பக்கத்தில் வைத்துள்ளவனே
6 இனிமையான
7 நெகிழா
8 தோண்டப்படாத

வற்றல் மரமாகவா நிற்பது?

493. கூடிக் கூடி, உன் அடியார்
குனிப்பார்,[9]சிரிப்பார், களிப்பாராய்;
வாடி-வாடி, வழிஅற்றே,
வற்றல்[10]மரம் போல் நிற்பேனோ?
ஊடி-ஊடி,[11]உடையாயொடு
கலந்து, உள் உருகி, பெருகி, நெக்கு,
ஆடி-ஆடி, ஆனந்தம்
அதுவே ஆக, அருள் கலந்தே! (11)

9 ஆனந்தக் கூத்தாடுவார்
10 உலர்ந்த, பட்ட
11 மாறுபட்டு மாறுபட்டு

திருச்சிற்றம்பலம்

முப்பத்துமூன்றாவது

குழைத்த பத்து

ஆத்துமநிவேதனம்

ஆசிரிய விருத்தம்

க

சகூச. குழைத்தாற் பண்டைக் கொடுவினை நோய்
காவா யுடையாய் கொடுவினையே
னுழைத்தா லுறுதி யுண்டோதா
னுமையாள் கணவா வெனையாள்வாய்
பிழைத்தாற் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய் முறையோவென்
றழைத்தா லருளா தொழிவதே
யம்மா னேயுன் னடியேற்கே.

உ

சகூரு. அடியே னல்ல லெல்லாமுன்
னகல வாண்டா யென்றிருந்தேன்
கொடியே ரிடையாள் கூறுவெங்
கோவே யாவா வென்றருளிச்
செடிசே ருடலைச் சிதையாத
தெத்துக் கெங்கள் சிவலோகா
வுடையாய் கூவிப் பணிகொள்ளா
தொறுத்தா லொன்றும் போதுமே.

முப்பத்துமூன்றாவது

குழைத்த பத்து

ஆத்தும நிவேதனம்

உழைத்தால் இறுதி உண்டோ ?

494. குழைத்தால்[1], பண்டைக் கொடுவினை, நோய்[2]
காவாய் ; உடையாய் ! கொடுவினையேன்
உழைத்தால்,[3] உறுதி உண்டோ — தான் ?
உமையாள் கணவா! என்னை ஆள்வாய் ;
பிழைத்தால்[4], பொறுக்க வேண்டாவோ ?
'பிறை சேர் சடையாய் ! முறையோ ?' என்று
அழைத்தால், அருளாது ஒழிவதே,
அம்மானே, உன் அடியேற்கே ? (1)

1 வாடச் செய்தால் துன்புறுத்தினால்
2 துன்பம்
3 பாடுபட்டால்
4 பிழைசெய்தால்

ஒறுத்தால் ஒன்றும் போதுமே ?

495. அடியேன் அல்லல்[5] எல்லாம், முன்,
அகல ஆண்டாய், என்று இருந்தேன் ;
கொடி ஏர் இடையாள் கூறு[6] எம்
கோவே, 'ஆ ! ஆ !' என்று அருளி,
செடி[7] சேர் உடலைச் சிதையாது[8]
எத்துக்கு ? எங்கள் சிவலோகா !
உடையாய் ! கூவிப் பணி கொள்ளாது,
ஒறுத்தால்,[9] ஒன்றும் போதுமே ? (2)

5 துன்பம்
6 — உமையொருபங்கன் — சிவபெருமானே
7 தீமை, குற்றம்
8 அழிக்காதது
9 தண்டித்தால்

௩

௪௬௬. ஒன்றும் போதா நாயேனை
யுய்யக் கொண்ட நின்கருணை
யின்றே யின்றிப் போய்த்தோதா
னேழை பங்கா வெங்கோவே
குன்றே யனைய குற்றங்கள்
குணமா மென்றே நீகொண்டா
லென்றான் கெட்ட திரங்கிடா
யெண்டோண் முக்க ணெம்மானே.

௪

௪௬௭. மானேர் நோக்கி மணவாளா
மன்னே நின்சீர் மறப்பித்திவ்
வூனே புகவென் றனை நூக்கி
யுழலப் பண்ணு வித்திட்டா
யானு லடியே னறியாமை
யறிந்து நீயே யருள்செய்து
கோனே கூவிக் கொள்ளுநா
ளென்றென் றுன்னைக் கூறுவதே.

௫

௪௬௮. கூறு நாவே முதலாகக்
கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ
தீமை நன்மை முழுதுநீ
வேறோர் பரிசிங் கொன்றில்லை
மெய்ம்மை யுன்னை விரித்துரைக்கில்
தேறும் வகையென் சிவலோகா
திகைத்தாற் றேற்ற வேண்டாவோ.

கருணை இல்லாமல் போய் விட்டதா ?

496. ஒன்றும் போதா நாயேனை
உய்யக்[1] கொண்ட நின் கருணை,
இன்றே,[2] இன்றிப் போய்த்தோ—தான் ?
ஏழை பங்கா ! எம் கோவே !
குன்றே அனைய குற்றங்கள்
குணம், ஆம் என்றே, நீ கொண்டால்,
என்-தான் கெட்டது ? இரங்கிடாய் ;
எண் தோள், முக்கண், எம்மானே ! (3)

1 கடைத்தேற
2 இப்பொழுது

மறப்பித்தவன் நீ : நினைப்பிப்பது என்று ?

497. மான்-நேர் நோக்கி[3] மணவாளா ?
மன்னே ! நின் சீர் மறப்பித்து, இவ்
ஊனே[4] புக, என்-தனை நூக்கி,[5]
உழலப்[6] பண்ணுவித்திட்டாய் ;
ஆனால், அடியேன் அறியாமை
அறிந்து, நீயே அருள் செய்து,
கோனே ! கூவிக் கொள்ளும் நாள்
என்று ? என்று, உன்னைக் கூறுவதே ? (4)

3 மான்போலும் பார்வையை உடையவள்-உமையம்மையார்
4 இவ் வுடலிலே
5 தள்ளி
6 துன்புற

எல்லாம் நீயே : தேறும் வகைதான் ஏது ?

498. கூறும் நாவே முதலாகக்
கூறும்[7] கரணம்[8] எல்லாம் நீ !
தேறும்[9] வகை நீ ! திகைப்பு நீ[10] !
தீமை, நன்மை, முழுதும் நீ !
வேறு ஓர் பரிசு[11], இங்கு, ஒன்று இல்லை ;
மெய்ம்மை, உன்னை விரித்து உரைக்கின்,
தேறும் வகை என் ? சிவலோகா !
திகைத்தால், தேற்ற வேண்டாவோ ? (5)

7 சொல்லப்படுகிற
8 கருவிகள்
9 தெளிவடையும்
10 தெளியாமல் திகைத்தல்
11 தன்மை

கா

சகக. வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டு மயன்மாற் கரியோய் நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள்செய்தா
யானு மதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னி
லதுவு முன்றன் விருப்பன்றே.

எ

ருமம. அன்றே யென்ற னுவியு
முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட்
கொண்ட போதே கொண்டிலையோ
வின்றோ ரிடையூ றெனக்குண்டோ
வெண்டோண் முக்க ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய்
நானோ விதற்கு நாயகமே.

அ

ருமக. நாயிற் கடையா நாயேனை
நயந்து நீயே யாட்கொண்டாய்
மாயப் பிறவி யுன்வசமே
வைத்திட் டிருக்கு மதுவன்றி
யாயக் கடவே னானோதா
னென்ன தோவிங் கதிகாரங்
காயத் திடுவா யுன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.

நீ நினைத்தது எப்படி அப்படி அருளுக

499. வேண்டத் தக்கது அறிவோய் நீ!
வேண்ட, முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன், மாற்கு, அரியோய் நீ!
வேண்டி, என்னைப் பணிகொண்டாய்;
வேண்டி, நீ, யாது அருள் செய்தாய்,
யானும், அதுவே வேண்டின் அல்லால்,
வேண்டும் பரிசு[1] ஒன்று உண்டு என்னில்,
அதுவும், உன்-தன் விருப்பு அன்றே? (6)

1 நன்கொடை

எனக்கு எனச் செயல் ஒன்று இல்லை

500. அன்றே[2], என்-தன் ஆவியும்,
உடலும், உடைமை எல்லாமும்,
குன்றே[3] அனையாய்! என்னை ஆட்-
கொண்ட போதே கொண்டிலையோ?
இன்று ஓர் இடையூறு[4] எனக்கு உண்டோ?
எண் தோள், முக்கண், எம்மானே!
நன்றே செய்வாய்; பிழை செய்வாய்;
நானோ இதற்கு நாயகமே[5]? (7)

2 ஆட்கொண்ட அந்த நாளிலேயே
3 திருவருட்குன்று
4 துன்பம்
5 பொறுப்பாளி

எல்லாம் உன் உடைமை-எப்படிச் செய்தால் என்ன?

501. நாயின் கடை ஆம் நாயேனை
நயந்து[6], நீயே ஆட்கொண்டாய்;
மாயப் பிறவி[7] உன் வசமே
வைத்திட்டு இருக்கும்-அது அன்றி,
ஆயக் கடவேன், நானோ-தான்?
என்னதோ, இங்கு, அதிகாரம்?
காயத்து[8] இடுவாய்; உன்னுடைய
கழல்கீழ்[9] வைப்பாய்; கண்-நுதலே[10]! (8)

6 விரும்பி
7 மாறி மாறித் தோன்றும் பிறவி
8 உடலில்
9 திருவடிக்கீழ்
10 நெற்றிக்கண்ணனே

௯

ருௐ௨. கண்ணுூர் நுதலோய் கழலிணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
வெண்ணு திரவும் பகலுநா
னவையே யெண்ணு மிதுவல்லால்
மண்மேல் யாக்கை விடுமாறும்
வந்துன் கழற்கே புகுமாறு
மண்ணு வெண்ணக் கடவேனே
வடிமை சால வழகுடைத்தே.

ௐ

ருௐ௩. அழகே புரிந்திட் டடிநாயே
னரற்று கின்றே னுடையானே
திகழா நின்ற திருமேனி
காட்டி யென்னைப் பணிகொண்டாய்
புகழே பெரிய பதமெனக்குப்
புராண நீதந் தருளாதே
குழகா கோல மறையோனே
கோனே யென்னைக் குழைத்தாயே

திருச்சிற்றம்பலம்

502. கண் ஆர் நுதலோய்[1] ! கழல்-இணைகள்
கண்டேன், கண்கள் களிகூர;
எண்ணாது[2], இரவும் பகலும், நான்,
அவையே[3] எண்ணும்-இது அல்லால்-
மண்மேல் யாக்கை விடும் ஆறும்,
வந்து, உன் கழற்கே புகும் ஆறும்-
அண்ணா ! எண்ணக் கடவேனோ[4] ?
அடிமை சால அழகு உடைத்தே[5] ! (9)

குழகா என்னைக் குழைத்தாயே !

503. அழகே புரிந்திட்டு[6], அடி-நாயேன்
அரற்றுகின்றேன்; உடையானே!
திகழா நின்ற திருமேனி
காட்டி, என்னைப் பணிகொண்டாய்;
புகழே[7] ? பெரிய பதம்[8] எனக்கு,
புராணா[9] ! நீ, தந்தருளாதே,
குழகா[10], கோல மறையோனே[11],
கோனே, என்னைக் குழைத்தாயே ! (10)

1 நெற்றிக்கண்ணனே
2 வேறு ஒன்றும் எண்ணாமல்
3 திருவடிகளையே
4 (உன திருவருள் முறைகளை) எண்ணும் கடப்பாடு உடையவனாவேனோ ?
5 (அவ்வாறு என் சிற்றறிவு கொண்டு உன் பேரருட் செயல்களை எண்ண முயலுவேனானால்) என அடிமைத் திறம அழகானது தான என இகழ்ந்து கூறியது
6 அழகலாதவைகளையே விருமபிச செய்து விட்டு (இகழ்ச்சிக குறிப்பு)
7 உனகக இது புகழாகுமா ?
8 வீட்டு இனபம்
9 பழையவனே ! தொனமையனே !
10 எவ்வெவா நிலைக்கும் இணங்கி அருள செயயும் இளமைச் செவ்வியுடையவனே.
11 எல்லாவற்றையும் வளைத்துத் தனனுள் கொண்ட மறையாக விளங்குபவனே

திருச்சிற்றம்பலம்

முப்பத்துநான்காவது

உயிருண்ணிப் பத்து

சிவானந்த மேலிடுதல்

கலி விருத்தம்

௧

௫௰௪. பைங்நாப்பட வரவேரல்கு லுமைபாகம தாயென்
மெய்ங்நாடொறும் பிரியாவினைக் கேடாவிடைப் பாகா
செங்நாவலர் பரசும்புகழ்த் திருப்பெருந் துறை யுறைவா
யெங்நாட்களித் தெங்நாளிறு மாக்கேனினி யானே.

௨

௫௰௫. நானாரடி யணைவானொரு நாய்க்குத்தவி சிட்டிங்
கூனாருடல் புகுந்தானுயிர் கலந்தானுளம் பிரியான்
றேனார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யுறைவான்
வானோர்களு மறியாததோர் வளமீந்தன னெனக்கே.

௩

௫௰௬. எனைநானென்ப தறியேன்பக லிரவாவது மறியேன்
மனவாசகங் கடந்தானெனை மத்தோன்மத்த னாக்கிச்
சினமால்விடை யுடையான்மன்னு திருப்பெருந்துறை யுறையும்
பனவனெனைச் செய்தபடி றறியேன்பரஞ் சுடரே.

௪

௫௰௭. வினைக்கேடரு முளரோபிறர் சொல்லீர்விய னுலகி
லெனைத்தான்புகுந் தாண்டானென தென்பின்புரை யுருக்கிப்
பினைத்தான்புகுந் தெல்லேபெருந் துறையிலுறை பெம்மான்
மனத்தான்கண்ணி னகத்தான்மறு மாற்றத்திடை யானே.

௫

௫௰௮. பற்றாங்கவை யற்றீர்பற்றும் பற்றாங்கது பற்றி
நற்றாங்கதி யறிவோமெனிற் கெடுவீரோடி வம்மின்
றெற்றார்சடை முடியான்மன்னு திருப்பெருந்துறை யிறைசீர்
கற்றாங்கவன் கழல்பேணின ரொடுங்கூடுமின் கலந்தே.

முப்பத்துநான்காவது

உயிருண்ணிப் பத்து

எந்த நாள் கருணைக்கு உரித்தாகும் நாள்

504. பைந்நா ப்பட அரவு[1] ஏர் அல்குல் உமை பாகம்-அது ஆய் என்
மெய்ந் நாள் தொறும் பிரியா, வினைக் கேடா! விடைப் பாகா![2]
செம் நாவலர்[3] பரசும்[4] புகழ்த் திருப்பெருந்துறை உறைவாய்!
எந்நாள் களித்து, எந்நாள் இறுமாக்கேன், இனி, யானே? (1)

1 அரவு – பட = பாம்புப்படம் 2 எருது ஊர்பவனே 3 செம்மை மிக்க நாவன்மை யுடைய புலவர் 4 போற்றும்

வான் உலகமும் அறியாவளம் ஈந்தான்

505. நான்ஆர், அடி அணைவான்? ஒரு நாய்க்குத் தவிசு[5] இட்டு, இங்கு,
ஊன் ஆர் உடல் புகுந்தான்; உயிர் கலந்தான்; உளம் பிரியான்;
தேன்[6] ஆர் சடை முடியான்; மன்னு திருப்பெருந்துறை உறைவான்;
வானோர்களும் அறியாதது ஓர் வளம்[7] ஈந்தனன், எனக்கே. (2)

5 தடுக்கு, மெத்தை 6 தேன் துளிக்கும் மலர் 7 செல்வம்

ஓரே பெருவெளி-ஒன்றும் அறியேன் உன்மத்தனுனேன்

506. எனை, நான் என்பது அறியேன்; பகல், இரவு, என்பதும் அறியேன்,
மன-வாசகம்[8] கடந்தான், எனை, மத்த-உன்மத்தன்[9] ஆக்கி;
சின[10] மால்[11] விடை[12] உடையான், மன்னு திருப்பெருந் துறை உறையும்
பனவன்,[13] எனைச் செய்த படிறு[14] அறியேன்; பரம்[15]- சுடரே! (3)

8 உளமும் உரையும்; மனமும் வாக்கும் 9 பெரும் பித்தன் 10 சீற்றமுள்ள 11 சிறந்த 12 காளை 13 முனிவன் 14 வஞ்சகம் 15 மேன்மை மிக்க

மனத்து அகத்தான் தலைமேலான் வாக்கில் உள்ளான்

507. வினைக் கேடரும்[16] உளரோ பிறர், சொல்லீர்? வியன்[17] உலகில்
எனை, தான் புகுந்து, ஆண்டான்; எனது என்பின் புரை[18] உருக்கி,
பினை, தான்புகுந்து, எல்லா![19] பெருந்துறையில் உறை பெம்மான்,
மனத்தான்; கண்ணின் அகத்தான்; மறு மாற்றத் திடையானே![20] (4)

16 வினையை ஒழிப்பவர் 17 பரந்த 18 உள்-துளை 19 வியப்புகுறி 20 சொல்லி லுள்ளவன்

பரவுமின் பணிமின் பணிவாரொடு விரவுமின்

508. பற்று ஆங்கு அவை அற்றீர், பற்றும் பற்று ஆங்கு அது பற்றி,
நற்று[21] ஆம் கதி அறிவோம் எனின், கெடுவீர், ஓடிவம்மின்;
தெற்று[22] ஆர் சடை முடியான், மன்னு திருப்பெருந்துறை இறை, சீர்
கற்று ஆங்கு, அவன் கழல்[23] பேணினரொடு[24] கூடுமின், கலந்தே! (5)

21 நல்ல 22 பின்னல் 23 திருவடி 24 விரும்பிப் புகலடைந்தோர்

௬

ருமக. கடலின்றிரை யதுபோல்வரு கலக்கமல மறுத்தென்
னுடலும்மென துயிரும்புகுந் தொழியாவண்ண நிறைந்தான்
சுடருஞ்சுடர் மதிசூடிய திருப்பெருந்துறை யுறையும்
படருஞ்சடை மகுடத்தெங்கள் பரன்றான்செய்த படிறே.

௭

ருகம. வேண்டேன்புகழ் வேண்டேன்செல்வம் வேண்டேன்
மண்ணும் விண்ணும்
வேண்டேன்பிறப் பிறப்புச்சிவம் வேண்டார்தமை நாளுந்
தீண்டேன்சென்று சேர்ந்தேன்மன்னு திருப்பெருந்துறை யிறைதாள்
பூண்டேன்புறம் போகேனினிப் புறம்போகலொட் டேனே.

அ

ருகக. கோற்றேனெனக் கென்கோகுறை கடல்வாயமு தென்கோ
வாற்றேனெங்க ளரனேயரு மருந்தேயென தரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு திருப்பெருந் துறையுறையு
நீற்றார்தரு திருமேனிநின் மலனேயுனை யானே.

௯

ருகஉ. எச்சம்மறி வேனானெனக் கிருக்கின்றதை யறியே
னச்சோவெங்க ளரனேயரு மருந்தேயென தமுதே
செச்சைமலர் புரைமேனியன் றிருப்பெருந்துறை யுறைவா
னிச்சம்மென நெஞ்சின்மன்னி யானாகிநின் றானே.

ம

ருகஙு. வான்பாவிய வுலகத்தவர் தவமேசெய வவமே
யூன்பாவிய வுடலைச்சுமந் தடவிமர மானேன்
றேன்பாய்மலர்க் கொன்றைமன்னு திருப்பெருந்துறை யுறைவாய்
நான்பாவிய னானாலுனை நல்காயென லாமே.

திருச்சிற்றம்பலம்

ஒழிந்தது கலக்கம் : ஒழிவற நிறைந்தான்

509. கடலின் திரை[1]-அது போல் வரு கலக்கம், மலம், அறுத்து; என் 1 அலை
உடலும், எனது உயிரும், புகுந்து; ஒழியாவணம், நிறைந்தான்
சுடரும் சுடர்மதி சூடிய, திருப்பெருந்துறை உறையும், 2 முடியையுடைய
படரும் சடை மகுடத்து,[2] எங்கள் பரன்-தான் செய்த படிறே! (6)

ஆளாய் இனி அல்லன் எனல் ஆமோ ?

510. வேண்டேன் புகழ், வேண்டேன் செல்வம்; வேண்டேன் மண்ணும் விண்ணும்;
வேண்டேன் பிறப்பு, இறப்பு; சிவம் வேண்டார்-தமை நாளும்
தீண்டேன்; சென்று, சேர்ந்தேன், மன்னு திருப்பெருந்துறை; இறைதாள்
பூண்டேன்; புறம் போகேன்; இனி, புறம் போகல் ஒட்டேனே! (7)

ஆற்றேன்; அருமருந்தே! அமுதே! அரசே!

511. கோல்-தேன் எனக்கு என்கோ-குரை[3] கடல்வாய் அமுது என்கோ-
ஆற்றேன் எங்கள் அரனே! அரு மருந்தே! எனது அரசே! 3 ஒலிக்கின்ற
சேற்று ஆர் வயல் புடை சூழ்தரு திருப்பெருந்துறை உறையும், 4 திருநீற்று
நீற்று[4] ஆர் தரு திருமேனி நின் மலனே![5]-உனை யானே! (8) 5 மாசு ஒழிப்பவனே

ஓர் விந்தை : எல்லாம் அறிவேன்; என்னை அறியேன்!

512. எச்சம்[6] அறிவேன் நான்; எனக்கு இருக்கின்றதை அறியேன்; 6 எஞ்சியுள்ள மற்றவை,
அச்சோ![7] எங்கள் அரனே! அரு மருந்தே! எனது அமுதே! 7 இரக்கக்குறிப்பு 8 வெட்சி
செச்சை[8] மலர் புரை[9] மேனியன், திருப்பெருந்துறை உறைவான்! 9 ஒத்த
நிச்சம்[10] என நெஞ்சில் மன்னி, யான் ஆகி நின்றானே ! (9) 10 நிச்சயமாக, உறுதியாக

பாவிக்கு அருள் இல்லையா ?

513. வான்[11] பாவிய[12] உலகத்தவர் தவமே செய, அவமே,[13] 11 சிறப்பு, பெருமை
ஊன் பாவிய[14] உடலைச் சுமந்து, அடவி[15] மரம் ஆனேன்; 12 பொருந்திய 13 வீணே
தேன் பாய் மலர்க் கொன்றை மன்னு திருப்பெருந்துறை உறைவாய்! 14 நிறைந்த, மூடிய
நான் பாவியன் ஆனால், உனை நல்காய்[16] எனல் ஆமே ? (10) 15 காடு 16 அருளால்

திருச்சிற்றம்பலம்

முப்பத்தைந்தாவது

அச்சப்பத்து

ஆனந்த முறுதல்

ஆசிரிய விருத்தம்

க

ருகச. புற்றில்வா ளரவு மஞ்சேன்
பொய்யர்தம் மெய்யு மஞ்சேன்
கற்றைவார் சடையெம் மண்ணல்
கண்ணுதல் பாத நண்ணி
மற்றுமோர் தெய்வந் தன்னை
யுண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

உ

ருகரு. வெருவரேன் வேட்கை வந்தால்
வினைக்கடல் கொளினு மஞ்சேன்
இருவரால் மாறு காணு
வெம்பிரான் றம்பிரானூர்
திருவுரு வன்றி மற்றோர்
தேவரெத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

முப்பத்தைந்தாவது

அச்சப் பத்து

எதையும் அஞ்சோம்; சிவபெருமானைப் பற்றாதார் பற்றாகக் கொள்ளாரே அஞ்சத்தக்கார்

514. புற்றில் வாள்[1] அரவும்[2] அஞ்சேன்;
பொய்யர்-தம் மெய்யும் அஞ்சேன்;
கற்றை[3] வார்[4] சடை எம் அண்ணல்,
கண்-நுதல்[5] பாதம் நண்ணி,
மற்றும் ஓர் தெய்வம்-தன்னை
உண்டு என நினைந்து, எம் பெம்மாற்கு[6]
அற்றிலாதவரைக்[7] கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே! (1)

1 ஒளியுள்ள
2 பாம்பும்
3 திரண்ட
4 நீண்ட
5 நெற்றிக்கண்ணன்—சிவபெருமான
6 பெருமானுக்காக
7 (மற்றவைகளை) அறவே விடாதவரை

சிவபெருமானை விட்டு, சிறுதெய்வம் கொள்வாரே அஞ்சத்தக்கார்

515. வெருவரேன்,[8] வேட்கை[9] வந்தால்;
வினைக் கடல் கொளினும், அஞ்சேன்;
இருவரால்[10] மாறு[11] காணா
எம்பிரான்,[12] தம்பிரான்,[13] ஆம்
திருஉரு அன்றி, மற்று ஓர்
தேவர், எத்தேவர்? என்ன
அருவராதவரைக்[14] கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே! (2)

8 அஞ்சேன
9 உலகப்பொருள் களினுள்ள ஆசை
10 பிரமன திருமால
11 மாறுபட்டு, போட்டியிட்டு
12 எமது தலைவனை
13 இறைவனை
14 வெறுப்புடையாத வரை

ங

ருகசு. வன்புலால் வேலு மஞ்சேன்
வளைக்கையார் கடைக் கணஞ்சே
னென்பெலா முருக நோக்கி
யம்பலத் தாடு கின்ற
வென்பொலா மணியை யேத்தி
யினிதருள் பருக மாட்டா
வன்பிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

ச

ருகஎ. கிளியனார் கிளவி யஞ்சே
னவர்கிறி முறுவ லஞ்சேன்
வெளிய நீருடு மேனி
வேதியன் பாத நண்ணித்
துளியுலாங் கண்ண ராகித்
தொழுதழு துள்ள நெக்கிங்
களியிலாத வரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

ரு

ருகஅ. பிணியெலாம் வரினு மஞ்சேன்
பிறப்பினே டிறப்பு மஞ்சேன்
துணிநிலா வணியி னான்றன்
றொழும்பரோ டழுந்தி யம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

அவனை ஏத்தி அருள்பெருகமாட்டாரே அஞ்சத்தக்கார்

516. வன் புலால் வேலும் அஞ்சேன் ;
வளைக்கையார்[1] கடைக்கண்[2] அஞ்சேன் ;
என்பு[3] எலாம் உருக நோக்கி,
அம்பலத்து ஆடுகின்ற
என் பொலா[4] மணியை ஏத்தி,
இனிது அருள் பருக மாட்டா
அன்பு இலாதவரைக் கண்டால்,
அம்ம ! நாம் அஞ்சுமாறே ! (3)

1 – வளையலணிந்த பெண்கள்
2 குறிப்போடுகூடிய சாய்ந்த பார்வை
3 எலும்பு
4 தொளைக்கப்படாத

கண்ணீர் ததும்ப சிவனடி தொழும் தகுதி இல்லாரே அஞ்சத்தக்கார்

517. கிளி அனார்[5] கிளவி[6] அஞ்சேன் ;
அவர் கிறி[7] முறுவல்[8] அஞ்சேன் ;
வெளிய நீறு[9] ஆடும்[10] மேனி
வேதியன்[11] பாதம் நண்ணி,[12]
துளி[13] உலாம்[14] கண்ணர்[15] ஆகி,
தொழுது, அழுது, உள்ளம் நெக்கு, இங்கு,
அளி[17] இலாதவரைக் கண்டால்,
அம்ம ! நாம் அஞ்சுமாறே ! (4)

5 கிளிபோன்ற பெண்கள்
6 கொஞ்சும் சொல்
7 வஞ்சகமான
8 நகை
9 திருநீறு
10 – நிறையப் பூசியுள்ள
11 வேதங்களின் பொருளாயுள்ளவன் – சிவபெருமான்
12 அணுகி
13 கண்ணீர்த்துளி
14 உலாவும், இயங்கும்
15 கண்களை உடைய
16 உளக்கனிவு

திருநீறு அணியாதாரே அஞ்சத்தக்கார்

518. பிணி[16] எலாம் வரினும், அஞ்சேன் ;
பிறப்பினோடு இறப்பும் அஞ்சேன் ;
துணி நிலா[18] அணியினான்–தன்
தொழும்பரோடு[19] அழுந்தி,[20] அம்மால்,
திணி[21] நிலம் பிளக்கும் காணாச்
சேவடி[22] பரவி,[23] வெண்ணீறு
அணிகிலாதவரைக் கண்டால்,
அம்ம ! நாம் அஞ்சுமாறே ! (5)

17 நோய்
18 பிறைத்திங்கள்
19 தொண்டரோடு
20 மனம் அழுந்தி
21 வலிமையான
22 சிவந்த திருவடி
23 போற்றி

௬

௫௧௯. வாளுலா மெரியு மஞ்சேன்
வரைபுரண் டிடினு மஞ்சேன்
தோளுலா நீற்ற னேற்றன்
சொற்பதங் கடந்த வப்பன்
தாளதா மரைக ளேத்தித்
தடமலர் புனைந்து நையு
மாளலாத வரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

௭

௫௨௰. தகைவிலாப் பழியு மஞ்சேன்
சாதலை முன்ன மஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப்
பொலிந்தவம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை
முன்னவன் பாத மேத்தி
யகநெகா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

௮

௫௨௧. தறிசெறு களிறு மஞ்சேன்
றழல்விழி யுழுவை யஞ்சேன்
வெறிகமழ் சடைய னப்பன்
விண்ணவர் நண்ணா மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச்
சிறந்தினி திருக்க மாட்டா
வறிவிலாத வரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

அவன் திருவடிக்கு ஆள் அல்லாதாரே அஞ்சதத்க்கார்

519. வாள்[1] உலாம்[2] எரியும்[3] அஞ்சேன் ;
வரை[4] புரண்டிடினும், அஞ்சேன்,
தோள் உலாம் நீற்றன்,[5] ஏற்றன்,[6]
சொல்-பதம் கடந்த அப்பன்,
தாள்[7] தாமரைகள் ஏத்தி,
தட மலர் புனைந்து, நையும்[8]
ஆள்[9] அலாத வரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே! (6)

1 ஒளி
2 வீசுகின்ற
3 தீயும்
4 மலை
5 திருநீற்றை உடையவன்
6 எருதை உடையவன்
7 திருவடிகளான
8 உள்ளம் உருகும்
9 அடிமை

அவன் திருவடிக்கு உள்ளம் உருகாதாரே அஞ்சத்தக்கார்

520. தகைவு[10] இலாப் பழியும் அஞ்சேன் ;
சாதலை முன்னம் அஞ்சேன் ;
புகை முகந்து எரி கை வீசி,
பொலிந்த[11] அம்பலத்துள் ஆடும்,
முகை[12] நகைக்[13] கொன்றை மாலை,
முன்னவன் பாதம் ஏத்தி,
அகம்[14] நெகாத[15] வரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே! (7)

10 பொருத்தம்
11 விளங்குகின்ற
12 அரும்பு
13 மலர்கின்ற
14 உள்ளம்
15 இளகாத

அவன் திருவடியைப் போற்றவல்ல அறிவிலாதாரே அஞ்சத்தக்கார்

521. தறி[16] செறு[17] களிறும் அஞ்சேன் ;
தழல் விழி[18] உழுவை[19] அஞ்சேன் ;
வெறி[20] கமழ் சடையன், அப்பன்,
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு[21] கழல்கள் ஏத்தி,
சிறந்து, இனிது இருக்க மாட்டா
அறிவு இலாதவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சுமாறே! (8)

16 கட்டுத்தறியை
17 சினந்து சீறும்
18 நெருப்புபோன்ற கண்
19 புலி
20 மணம்
21 நெருங்கிய

சு

ருஉஉ. மஞ்சுலா முருமு மஞ்சேன்
மன்னரோ டுறவு மஞ்சேன்
நஞ்சமே யமுத மாக்கு
நம்பிரா னெம்பி ரானுய்ச்
செஞ்செவே யாண்டு கொண்டான்
றிருமுண்டந் தீட்ட மாட்டா
தஞ்சுவா ரவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

ய

ருஉங. கோணிலா வாளி யஞ்சேன்
கூற்றுவன் சீற்ற மஞ்சேன்
நீணிலா வணியி னானை
நினைந் துநைந் துருகி நெக்க
வாணிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின் றேத்த மாட்டா
வாணலா தவரைக் கண்டா
லம்மநா மஞ்சு மாறே.

திருச்சிற்றம்பலம்.

திருநீறு பூசாதாரே அஞ்சத்தக்கார்

522. மஞ்சு[1] உலாம் உருமும்[2] அஞ்சேன்;
மன்ன ரோடு உறவும் அஞ்சேன்;
நஞ்சமே அமுதம் ஆக்கும்
நம்பிரான் எம்பிரானாய்,
செஞ்செவே[3] ஆண்டு கொண்டான்
திருமுண்டம்[4] தீட்ட மாட்டாது,
அஞ்சுவார்–அவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சு மாறே! (9)

1 மேகம்
2 இடியும்
3 நன்மை பெறவே
4 திரிபுண்டரம் – திருநீற்றை மூன்று வரியாகப் பூசுதல

அவனை ஏத்தும் ஆண்மையில்லாதாரே அஞ்சத்தக்கார்

523. கோள்[5] நிலா[6] வாளி[7] அஞ்சேன்;
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்;
நீள் நிலா அணியினானை
நினைந்து, நைந்து, உருகி, நெக்கு,
வாள்[8] நிலாம் கண்கள் சோர,
வாழ்த்தி நின்று, ஏத்த மாட்டா
ஆண்[9] அலாதவரைக் கண்டால்,
அம்ம! நாம் அஞ்சு மாறே! (10)

5 கொலலுந்தன்மை
6 நிலைபெற்ற
7 அம்பு
8 ஒளி
9 வீரம், ஆண்தன்மை

திருச்சிற்றம்பலம்.

முப்பத்தாறுவது

திருப்பாண்டிப்பதிகம்

சிவானந்தவிளைவு

கட்டளைக் கலித்துறை

க

ருஉச. பருவரை மங்கைதன் பங்கரைப் பாண்டியற் காரமுதா
மொருவரை யொன்று மிலாதவ ரைக்கழற்போ திறைஞ்சித்
தெரிவர நின்றுருக் கிப்பரி மேற்கொண்ட சேவகனு
ரொருவரை யன்றி யுருவறி யாதென்ற னுள்ளமதே.

உ

ருஉரு. சதுரை மறந்தறிமால் கொள்வர்சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்னசோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்துகூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

முப்பத்தாறுவது

திருப்பாண்டிப் பதிகம்

என் உள்ளம் உருக்கிய ஒருவரை அன்றி வேறு அறியேன்

524. பரு வரை[1] மங்கை[2] -தன் பங்கரை,
பாண்டியற்கு ஆர் அமுது ஆம்
ஒருவரை, ஒன்றும் இலாதவரை,
கழல்-போது[3] இறைஞ்சி[4],
தெரிவர நின்று, உருக்கி, பரி[5]
மேற்கொண்ட சேவகனார்
ஒருவரை அன்றி, உருவு அறியாது
என்-தன் உள்ளம்-அதே. (1)

1 மலை
2 பெண்-உமையம்மை
3 திருவடி மலர்களை
4 வணங்கி
5 குதிரை

சார்ந்தவர், தம்மை மறந்து ஆர்வம் கொள்வர்

525. சதுரை[6] மறந்து, அறிமால்[7] கொள்வர்
சார்ந்தவர்; சாற்றி[8] சொன்னோம் ;
கதிரை[9] மறைத்தன்ன சோதி,
கழுக்கடை[10]கைப் பிடித்து,
குதிரையின்மேல் வந்து கூடிடு மேல்,
குடி-கேடு[11]கண்டீர் !
மதுரையர் மன்னன் மறு பிறப்பு
ஓட[12]மறித்திடுமே[13]. (2)

6 ஆற்றலை
7 ஞான மையல்
8 பறை சாற்றினாற் போல்
9 கதிரவன ஒளியை
10 சூலம்
11 பிறவிப்பிணி ஒழியும்
12 தொடாவதனை
13 தடுத்திடும்

௩

௫௨௬. நீரின்ப வெள்ளத்து ணீந்திக்
குளிக்கின்ற நெஞ்சங் கொண்டீர்,
பாரின்ப வெள்ளங் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனு
ரோரின்ப வெள்ளத் துருக்கொண்டு
தொண்டரை யுள்ளங் கொண்டார்
பேரின்ப வெள்ளத்துட் பெய்கழ
லேசென்று பேணுமினே.

௪

௫௨௭. செறியும் பிறவிக்கு நல்லவர்
செல்லன் மின்றென்ன னன்னாட்
டிறைவன் கிளர்கின்ற காலமிக்
காலமெக் காலத்துள்ளு
மறிவொண் கதிர்வா ளுறைகழித்
தானந்த மாக்கடவி
யெறியும் பிறப்பை யெதிர்ந்தார்
புரள விருநிலத்தே.

௫

௫௨௮. காலமுண் டாகவே காதல்செய்
துய்ம்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
வாலமுண் டானெங்கள் பாண்டிப்
பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
றான்வந்து முந்துமினே.

ஆனந்த வெள்ளம் உலகம் எல்லாம் பரவுகின்றது

526. நீர்[1] இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம் கொண்டீர் ;
பார், இன்ப வெள்ளம் கொள, பரி
மேற் கொண்ட பாண்டியனார்,
ஓர் இன்ப வெள்ளத்து உருக் கொண்டு,
தொண்டரை உள்ளம் கொண்டார் ;
பேர்-இன்ப வெள்ளத்துள், பெய்கழலே
சென்று பேணுமினே. (3)

1 நிலையில்லா நீர்க்கோல வாழ்வு

திருவருள் விளங்குகின்ற காலம் இது

527. செறியும்[2] பிறவிக்கு நல்லவர்
செல்லல்மின் ; தென்னன், நல் நாட்டு
இறைவன், கிளர்கின்ற[3] காலம் இக்
காலம், எக் காலத்துள்ளும் ;
அறிவு ஒண் கதிர் வாள்[4] உறை கழித்து[5] ,
ஆனந்த மா[6] க் கடவி[7] ,
எறியும்[8] பிறப்பை, எதிர்ந்தார்[9]
புரள, இரு நிலத்தே. (4)

2 அடர்ந்து வரும்
3 விளங்குகின்ற
4 ஞானமென்னும் ஒளிககதிர் வீசும வாள்
5 உறையிலிருநது எடுத்து
6 குதிரை
7 ஏறி நடத்தி
8 வெட்டும்
9 எதிர்த்தாரா(கிய) பிறப்பை இரு நிலத்தே புரள எறியும்

முந்துங்கள் மூலபண்டாரம் வழங்குகின்றான்

528. காலம் உண்டாகவே[10], காதல்[11] செய்து
உய்ம்மின்[12]: கருது-அரிய
ஞாலம்[13] உண்டானொடு,[14] நான்முகன்[15],
வானவர், நண்-அரிய
ஆலம்[16] உண்டான்; எங்கள் பாண்டிப்
பிரான்; தன் அடியவர்க்கு
மூல-பண்டாரம்[17] வழங்குகின்றான்:
வந்து, முந்துமினே. (5)

10 வீணாகாமல், மிகுதியாகக் கிடைக்கும் படி, பயன் பெறும்படி
11 இறைவனிடத்து இடைவிடாத அன்பு
12 கடைத்தேறுங்கள்
13 உலகம்
14 திருமாலோடு
15 பிரமனை
16 கொடிய நஞ்சு
17 மூலமாகிய நிதிக் குவை—பேரின்பச் செலவம்

சு

ருஉகூ. ஈண்டிய மாயா விருள்கெட
வெப்பொரு ளும்விளங்கத்
தூண்டிய சோதியை மீனவ
னுஞ்சொல்ல வல்லனல்லன்
வேண்டிய போதே விலக்கிலை
வாய்தல் விரும்புமின்றுள்
பாண்டிய னரருள் செய்கின்ற
முத்திப் பரிசிதுவே.

எ

ருஙய. மாய வனப்பரி மேல்கொண்டு
மற்றவர் கைக்கொளலும்
போயறு மிப்பிறப் பென்னும்
பகைகள் புகுந்தவருக்
காயவ ரும்பெருஞ் சீருடைத்
தன்னரு ளேயருளும்
சேய நெடுங்கொடைத் தென்னவன்
சேவடி சேர்மின்களே.

அ

ருஙக. அழிவின்றி நின்றதொ ரானந்த
வெள்ளத் திடையழுத்திக்
கழிவில் கருணையைக் காட்டிக்
கடிய வினையகற்றிப்
பழமலம் பற்றறுத் தாண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுல குந்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே.

வேண்டுவார் வேண்டுவ தெல்லாம் வேண்டிய போதே வாய்க்கும் - விலக்கு இல்லை

529. ஈண்டிய[1] மாய இருள்கெட,
எப்பொருளும் விளங்க,
தூண்டிய[2] சோதியை, மீனவனும்
சொல்ல வல்லன் அல்லன்;
வேண்டிய போதே விலக்குஇலை
வாய்தல்;[3] விரும்புமின்தாள்;
பாண்டியனார்[4] அருள் செய்கின்ற
முத்திப் பரிசு இதுவே. (6)

1 நெருங்கிய
2 (குதிரையில் ஏறி) தூண்டி வந்த
3 வாய்தல் விலக்கு இலை பெறுதல்
4 — சிவபெருமான்

பிறவிப்பிணி அகலும் : அவன் திருவடியை இடைவிடாது நினையுங்கள்

530. மாய வனப்பரி[5] மேற்கொண்டு,
மற்று அவர் கைக்கொளலும்,
போய்அறும், இப்பிறப்பு என்னும்
பகைகள் புகுந்தவருக்கு,
ஆய, அரும்பெரும், சீர்உடைத்
தன் அருளே அருளும்;
சேய[6] நெடும்[7] கொடைத் தென்னவன்[8]
சேவடி சேர்மின்களே. (7)

5 மாயமாகிய அழகிய குதிரை
6 செம்மையாகிய
7 பெரிய,சிறந்த, நீடித்த
8 — சிவபெருமான்

நீக்கம் இல்லாத கருணை - உலகம் எல்லாம் வழங்குகின்றான்

531. அழிவு இன்றி நின்றது ஓர் ஆனந்த-
வெள்ளத்திடை அழுத்தி,
கழிவு[9] இல் கருணையைக் காட்டி,
கடிய[10] வினை அகற்றி,
பழ மலம்[11] பற்று அறுத்து, ஆண்டவன்,
பாண்டிப் பெரும் பதமே,[12]
முழுது உலகும், தருவான், கொடையே;[13]
சென்று முந்துமினே.[14] (8)

9 நீக்கம்
10 வலிய
11 தொன்றுதொட்டு வரும் மாசு
12 பாண்டிய நாட்டின் சிறப்பாகிய சிவலோகம எனனும் பேரின்ப நிலையை
13 பரிசாக
14 பெறுவதற்கு விரைந்துசெல்லுங்கள்

௯

௫௩௨. விரவிய தீவினை மேலைப்
பிறப்புமுந் நீர் கடக்கப்
பரவிய வன்பரை யென்புருக்
கும்பரம் பாண்டியனார்
புரவியின் மேல்வரப் புந்திகொ
ளப்பட்ட பூங்கொடியார்
மரவியன் மேற்கொண்டு தம்மையுந்
தாமறி யார்மறந்தே.

௰

௫௩௩. கூற்றைவென் றாங்கைவர் கோக்களை
யும்வென் றிருந்தழகால்,
வீற்றிருந் தான்பெருந் தேவியுந்
தானுமோர் மீனவன்பா
லேற்றுவந் தாருயி ருண்ட
திறலொற்றைச் சேவகனே
தோற்றமி லாதவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே.

திருச்சிற்றம்பலம்.

கொடியார் மரமானார்; ஏன்? குதிரை மேல் வந்தான்

532. விரவிய[1] தீவினை[2] மேலைப்
பிறப்பு முந்நீர்[3] கடக்க,
பரவிய[4] அன்பரை, என்பு உருக்கும்
பரம்[5] பாண்டியனார்[6],
புரவியின்[7] மேல்வர, புந்தி[8]
கொளப்பட்ட பூம்-கொடியார்[9]
மர இயல்[10] மேற்கொண்டு, தம்மையும்
தாம் அறியார், மறந்தே. (9)

1 கலந்த
2 தீவினை விரவிய
3 பிறவிக் கடல்
4 வழிபட்ட
5 மேன்மையான
6 — சிவபெருமான்
7 குதிரையின்
8 அறிவு, உணர்வு
9 கொடி போன்ற மகளிர்
10 மரத்தின் தன்மை

பெருந்தேவியும் தானுமாக வீற்றிருக்கும் வீரன்

533. கூற்றை[11] வென்று, ஆங்கு ஐவர்[12] கோக்களையும்[13]
வென்று இருந்து, அழகால்
வீற்றிருந்தான், பெரும் தேவியும்,
தானும்-ஓர் மீனவன்[14] பால்
ஏற்று[15] வந்து ஆர் உயிர் உண்ட,
திறல்[16] ஒற்றைச்[17] சேவகனே;[18]
தேற்றம்[19] இலாதவர்! சேவடி
சிக்கெனச்[20] சேர்மின்களே. (10)

11 யமனை
12 ஐந்து புலன்கள்
13 ஆட்சி செலுத்தும் அரசர் (வென்றுங்கு)
14 பாண்டியன்
15 இரந்து
16 ஆற்றல்
17 தனிப்பட்ட
18 வீரனே —சிவபெருமான்
19 தெளிவு
20 உறுதியாக

திருச்சிற்றம்பலம்

முப்பத்தேழாவது

பிடித்த பத்து

முத்திக் கலப்புரைத்தல்

ஆசிரிய விருத்தம்

க

௫௩௪. உம்பர்கட் கரசே யொழிவற நிறைந்த
யோகமே யூத்தையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெருமானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

உ

௫௩௫. விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணை மாகடலே
யிடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

முப்பத்தேழாவது

பிடித்த பத்து

முத்திக் கலப்புரைத்தல்

வாழ்விக்க வந்த செம்பொருள்

534. உம்பர்கட்கு[1] அரசே! ஒழிவு[2] அற நிறைந்த
யோகமே[3]! ஊத்தையேன்[4] தனக்கு
வம்பு[5] எனப் பழுத்து, என் குடி முழுது ஆண்டு,
வாழ்வு[6] அற[7] வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே[8]! சீர் உடைக் கழலே!
செல்வமே! சிவபெருமானே!
எம்பொருட்டு, உன்னைச் சிக்கெனப்[9] பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (1)

1 வானவர்களுக்கு
2 நீக்கம்
3 கூட்டுறவாகிய இன்பமே
4 அழுககுடையவன்
5 புதிதாக
6 இவ்வுலகப் பொய் வாழ்வு
7 ஒழிய
8 செம்மையானவர்கள் கண்டு துணிந்த பொருளே
9 உறுதியாக

கடைப்படாமல் காத்த மெய்ப்பொருள்

535. விடை[10] விடாது உகந்த[11] விண்ணவர் கோவே!
வினையனேனுடைய மெய்ப் பொருளே!
முடை[12] விடாது, அடியேன் மூத்து, அற[13] மண் ஆய்,
முழுப் புழுக் குரம்பையில்[14] கிடந்து,
கடைபடா வண்ணம் காத்து, எனை ஆண்ட
கடவுளே! கருணை மா கடலே!
இடைவிடாது, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (2)

10 எருது
11 விரும்பிய
12 நாற்றம்
13 மண் ஆய் அரு; முழுவதும் புழுவாகிய குடில்
14 – உடல்

௩

௫௩௬. அம்மையே யப்பா வொப்பிலா மணியே
யன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
யிம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

௪

௫௩௭. அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெரு மானே
யிருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

௫

௫௩௮. ஒப்புனக் கில்லா வொருவனே யடியே
னுள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்த தோரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
யெய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

பொய்மையை ஒழித்த செம்மை

536. *அம்மையே! அப்பா! ஒப்பு இலா மணியே!*
அன்பினில் விளைந்த ஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கி, பொழுதினைச் சுருக்கும்,
புழுத் தலைப்[1] புலையனேன்—தனக்கு,
செம்மையே[2] ஆய சிவ பதம் அளித்த
செல்வமே! சிவபெருமானே!
இம்மையே,[3] உன்னைச் சிக்கெனப்[4] பிடித்தேன்!
எங்கு எழுந்தருளுவது, இனியே? (3)

1 புழுக்களுக்கு இடம்
2 நேர்மையான, சிறந்த
3 இப்பிறவியிலேயே
4 உறுதியாக

இருள் நீக்கிய தெருள்

537. *அருள் உடைச் சுடரே! அளிந்தது[5] ஓர் கனியே!*
பெரும் திறல்[6] அரும் தவர்க்கு[7] அரசே!
பொருள்[8] உடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த
போகமே![9] யோகத்தின் பொலிவே!
தெருள்[10] இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த
செல்வமே! சிவபெருமானே!
இருள்[11] இடத்து, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (4)

5 கனிந்தது
6 பேராற்றல்
7 தவம்உடையவர்களுக்கு
8 மெய்ப்பொருள்
9 நுகர்ச்சியே
10 தெளிவு
11 அறியாமை

செப்புதற்கு அரிய செழுஞ்சுடர்

538. ஒப்பு உனக்கு இல்லா ஒருவனே! அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே!
மெய்ப் பதம்[12] அறியா வீறு[13] இலியேற்கு,
விழுமியது[14] அளித்தது ஓர் அன்பே!
செப்புதற்கு[15] அரிய செழும் சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவபெருமானே!
எய்ப்பு[16] இடத்து, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (5)

12 உண்மையான நிலை
13 பெருமை
14 சிறந்த திருவருள்
15 சொல்லுதற்கு
16 இளைப்பு

௬

௫௩௯. அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா வாநந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே யடியேன்
செல்வமே சிவபெரு மானே
யிறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

௭

௫௪௰. பாசவே ரறுக்கும் பழம்பொரு டன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
யீசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

அ

௫௪௧. அத்தனே யண்ட ரண்ட மாய்நின்ற
வாதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கு
மெத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

உள்ளக் கோயிலின் அம்பலக் காட்சி

539. அறவையேன்[1] மனமே கோயிலாக் கொண்டு, ஆண்டு,
அளவு இலா ஆனந்தம் அருளி,
பிறவி வேர் அறுத்து, என் குடி முழுது ஆண்ட
பிஞ்ஞகா![2] பெரிய எம் பொருளே!
திறவிலே[3] கண்ட காட்சியே! அடியேன்
செல்வமே! சிவபெருமானே!
இறவிலே,[4] உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (6)

1 ஆதரவு அற்றவன்
2 பொன்னிறமானவனே; கொடை வள்ளலே, தீமையை அழிப்பவனே
3 வெளியாகவே
4 முடிவாக

வணங்க வழிவகுத்த கழல்

540. பாசவேர்[5] அறுக்கும் பழம் பொருள் தன்னைப்
பற்றும் ஆறு, அடியனேற்கு அருளி,
பூசனை[6] உகந்து, என் சிந்தையுள் புகுந்து,
பூம் கழல்[7] காட்டிய பொருளே!
தேசு[8] உடை விளக்கே! செழும் சுடர் மூர்த்தீ!
செல்வமே! சிவ பெருமானே!
ஈசனே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (7)

5 உலகப் பற்று
6 வழிபாடு
7 திருவடிமலர்
8 ஒளி

எங்குமாய் நிறைந்தவன்

541. அத்தனே! அண்டர் – அண்டம் ஆய் நின்ற
ஆதியே! யாதும் ஈறு இல்லாச்
சித்தனே![9] பத்தர்[10] சிக்கெனப் பிடித்த
செல்வமே! சிவபெருமானே!
பித்தனே[11]! எல்லா உயிரும் ஆய்த் தழைத்து[12],
பிழைத்து[13], அவை அல்லை ஆய் நிற்கும்
எத்தனே[14]! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (8)

9 ஞானவடிவானவனே
10 அடியார்
11 அன்பரிடத்துப் பேரன்பு கொண்டவனே
12 பெருகி
13 நீங்கி
14 மாயம் உடையவனே

௯

௫௪௨. பானினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
வூனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா வானந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

௰

௫௪௩. புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
வீசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்கந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தே
னெங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்.

அன்னையினும் தயை உடையான்

542. பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து,[1] நீ, பாவியேனுடைய
ஊனினை[2] உருக்கி, உள் ஒளி பெருக்கி,
உலப்பு[3] இலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து, புறம் - புறம் திரிந்த[4]
செல்வமே! சிவபெருமானே!
யான் உனைத் தொடர்ந்து, சிக்கென[5]ப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (9)

1 இளகிய அன்பு கொண்டு
2 உடலினை
3 குறைதல், கெடுதல்
4 பிரியாமல் சுற்றிச் சுற்றித் தொடர்ந்த
5 உறுதியாக

நிலையிலாப் புலால் உடம்பே கனிய நின்ற கற்பகம்

543. புன்[6] புலால் யாக்கை,[7] புரை - புரை[8] கனிய
பொன் நெடும் கோயிலாப் புகுந்து, என்
என்பு எலாம் உருக்கி, எளியை ஆய் ஆண்ட
ஈசனே! மாசு இலா மணியே!
துன்பமே, பிறப்பே, இறப்பொடு, மயக்கு ஆம்
தொடக்கு[9] எலாம் அறுத்த நல் சோதீ!
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்;
எங்கு எழுந்தருளுவது, இனியே? (10)

6 இழிந்த
7 உடல்
8 என்புத் துளை எல்லாம் (யாக்கை ... கோயிலாப் புகுந்து)
9 பிணிப்பு, கட்டு

திருச்சிற்றம்பலம்

முப்பத்தெட்டாவது

திருவேசறவு

சுட்டறிவொழித்தல்

கொச்சகக் கலிப்பா

க

ருசச. இரும்புதரு மனத்தேனை யீர்த்தீர்த்தெ னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக் காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாகியவா றன்றேயுன் பேரருளே.

உ

ருசரு. பண்ணார்ந்த மொழிமங்கை பங்காநின் னாளானார்க்
குண்ணார்ந்த வாரமுதே யுடையானே யடியேனை
மண்ணார்ந்த பிறப்பறுத்திட் டாள்வாய்நீ வாவென்னக்
கண்ணார வுய்ந்தவா றன்றேயுன் கழல்கண்டேன்.

ந

ருசகூ. ஆதமிலி யான்பிறப் பிறப்பென்னு மருநரகில்
ஆர்தமரு மின்றியே யழுந்துவேற் காவாவென்
றோதமலி நஞ்சுண்ட வுடையானே யடியேற்குன்
பாதமலர் காட்டியவா றன்றேயெம் பரம்பரனே.

ச

ருசஎ. பச்சைத்தா லரவாட்டீ படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே யடியேனை யுய்யக்கொண்
டெச்சத்தார் சிறுதெய்வ மேத்தாதே யச்சோவென்
சித்தத்தா றுய்ந்தவா றன்றேயுன் றிறனினைந்தே.

முப்பத்தெட்டாவது

திரு ஏசறவு

சுட்டறி வொழித்தல்

கரும்பினும் இனிய கழல்-இணை

544. இரும்பு தரு[1] மனத்தேனை, ஈர்த்து,[2] ஈர்த்து, என் என்பு உருக்கி,
கரும்பு தருசுவை எனக்குக் காட்டினை உன் கழல்-இணைகள்;
ஒருங்கு[3] திரை[4] உலவு சடை உடையானே! நரிகள் எல்லாம்
பெரும் குதிரை ஆக்கிய ஆறு அன்றே, உன் பேர்-அருளே! (1)

'நீ வா' என்ற ஆர் அமுது

545. பண் ஆர்ந்த மொழி மங்கை[5] பங்கா! நின் ஆள் ஆனார்க்கு
உண்[6] ஆர்ந்த[7] ஆர்[8] அமுதே! உடையானே! அடியேனை
மண் ஆர்ந்த[9] பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய், நீ, 'வா' என்ன;
கண் ஆர[10] உய்ந்த ஆறு அன்றே, உன் கழல் கண்டே! (2)

'அஞ்சல்' என்று அருளிய பாதமலர்

546. ஆதம்[11] இலி யான், பிறப்பு, இறப்பு என்னும் அருநரகில்,
ஆர் தமரும்[12] இன்றியே, அழுந்து வேற்கு, 'ஆ! ஆ!' என்று,
ஓதம்[13] மலி[14] நஞ்சு உண்ட உடையானே! அடியேற்கு உன்
பாத மலர் காட்டிய ஆறு அன்றே, எம் பரம் பரனே! (3)

உள்ளத்தை உய்யும் வழியில் செலுத்திய திறம்

547. பச்சைத் தால்[15] அரவு[16] ஆட்டீ! படர்[17] சடையாய்! பாத மலர்
உச்சத்தார்[18] பெருமானே! அடியேனை உய்யக் கொண்டு,[19]
எச்சத்து-ஆர்[20] சிறு தெய்வம் ஏத்தாதே, அச்சோ![21] என்
சித்தத்து[22] ஆறு[23] உய்ந்த ஆறு அன்றே, உன் திறம்[24] நினைந்தே! (4)

1 ஒத்த
2 அருகே இருந்து
3 ஒடுங்கிய
4 அலை–கங்கை
5 உமையம்மை
6 உணவு
7 நிறைந்த
8 அருமையான
9 பொருந்திய
10 கண் ஆர கண்டு அன்றே உய்ந்தவாறு
11 ஆதரவு
12 சேர்ந்தவர்
13 இரக்கக்குறிப்பு
14 கடல
15 மிகுந்த
16 நாகசு
17 பாம்பு
18 விரிந்த
19 தலையில் வைத்துள்ளவர்
20 கடைத்தேறும் வண்ணம ஆண்டுகொண்டு
21 குறைபாடுகள் நிறைந்த
22 இரக்கக்குறிப்பு
23 உள்ளத்து
24 வழி
25 அருள–திறம்

ரு

ருசஅ. கற்றறியேன் கலைஞானங் கசிந்துருகே னாயிடினும்
மற்றறியேன் பிறர்தெய்வம் வாக்கியலால் வார்கழல்வந்
துற்றிறுமாந் திருந்தேனெம் பெருமானே யடியேற்குப்
பொற்றவிசு நாய்க்கிடுமா றன்றேநின் பொன்னருளே.

சா

ருசகூ. பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணா லிடர்ப்பட்டு
நஞ்சாய துயர்கூர நடுங்குவே னின்னருளா
லுய்ஞ்சேனெம் பெருமானே யுடையானே யடியேனை
யஞ்சேலென் றாண்டவா றன்றேயம் பலத்தமுதே.

எ

ருரு௦. என்பாலைப் பிறப்பறுத்திங் கிமையவர்க்கு மறியவொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையுஞ் சிவபெருமா
னன்பாநீ யகநெகவே புகுந்தருளி யாட்கொண்ட
தென்பாலே நோக்கியவா றன்றேயெம் பெருமானே.

அ

ருருக. மூத்தானே மூவாத முதலானே முடிவில்லா
வோத்தானே பொருளானே யுண்மையுமா யின்மையுமாய்ப்
பூத்தானே புகுந்திங்குப் புரள்வேனைக் கருணையினாற்
பேர்த்தேநீ யாண்டவா றன்றேயெம் பெருமானே.

கூ

ருருஉ. மருவினிய மலர்ப்பாத மனத்தில்வளர்ந் துள்ளுருகத்
தெருவுதொறு மிகவலறிச் சிவபெருமா னென்றேத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலிற் படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே யிடங்கொண்ட வம்மானே.

அறிவில்லேன் அகம் நெகிழேன் : உறுதி மாறேன்

548. கற்று அறியேன் கலை-ஞானம்; கசிந்து உருகேன்; ஆயிடினும்
மற்று அறியேன் பிறர் தெய்வம்; வாக்கு[1] இயலால், வார் கழல்[2] வந்து
உற்று, இறுமாந்து இருந்தேன்; எம்பெருமானே! அடியேற்குப்
பொன் தவிசு[3] நாய்க்கு இடும் ஆறு அன்றே, நின் பொன் அருளே? (5)

1 உன்னுடைய அருளாகிய சொல்
2 திருவடி
3 அமரும் அணை

'அஞ்சேல்' என்று ஆண்ட அம்பலத்து அமுது

549. பஞ்சு[4] ஆய அடி மடவார் கடைக் கண்ணால்[5] இடர்ப்பட்டு,[6]
நஞ்சு ஆய துயர் கூர,[7] நடுங்குவேன்; நின் அருளால்
உய்ஞ்சேன்;[8] எம் பெருமானே! உடையானே! அடியேனை,
'அஞ்சேல்' என்று ஆண்ட ஆறு அன்றே, அம்பலத்து அமுதே! (6)

4 செம்பஞ்சுக் குழம்பு
5 சாயந்த பார்வையால்
6 துன்பப்பட்டு
7 மிகுதியாக
8 உயந்தேன

என் முகம் நோக்கிய அன்பு

550. என் பாலைப்[9] பிறப்பு அறுத்து, இங்கு, இமையவர்க்கும்[10] அறிய ஒண்ணா,
தென் பாலைத்[11] திருப்பெருந்துறை உறையும் சிவபெருமான்,
அன்பால், நீ, அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது,
என்பாலே நோக்கிய ஆறு அன்றே, எம்பெருமானே! (7)

9 இடத்து
10 வானவர்க்கும்
11 திசை, திக்கு

கை தூக்கிவிட்ட கருணை

551. மூத்தானே[12], மூவாத[13] முதலானே, முடிவு இல்லா
ஓத்தானே[14], பொருளானே, உண்மையும் ஆய், இன்மையும் ஆய்
பூத்தானே[15], புகுந்து இங்குப் புரள்வேனை[16], கருணையினால்
பேர்த்தே[17], நீ ஆண்ட ஆறு அன்றே, எம்பெருமானே! (8)

12 முனனே யுளளவனே
13 மூப்பு அடையாத
14 வேதமாக வுளளவனே
15 தோன்றிய வனே
16 உழனறு இடப்பேனை
17 நீக்கியே, பெயர்த்தே

மலர்ப் பாதம் மனதில் வளர அருள்

552. மருவு[18] இனிய மலர்ப்பாதம், மனத்தில் வளர்ந்து உள் உருக,
தெருவு தொறும் மிக அலறி, 'சிவபெருமான்' என்று ஏத்தி,
பருகிய[19] நின்பரம்[20] கருணைத் தடம் கடலில் படிவு ஆம் ஆறு,
அருள் எனக்கு, இங்கு-இடைமருதே இடம் கொண்ட அம்மானே (9)

18 கூடுதற்கு
19 பருக
20 மேலான

ம

ருருங. நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம வெனப்பெற்றேன்
தேனாயின் னமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான்
றானேவந் தெனதுள்ளம் புகுந்தடியேற் கருள்செய்தா
னூனாரு முயிர்வாக்கை யொறுத்தன்றே வெறுத்திடவே.

திருச்சிற்றம்பலம்

முப்பத்தொன்பதாவது

திருப்புலம்பல்

சிவானந்த முதிர்வு

(திருவாரூரிலருளிச் செய்யப்பட்டது)

கொச்சகக்கலிப்பா

க

ருருச. பூங்கமலத் தயனொடுமா லறியாத நெறியானே
கோங்கலர்சேர் குவிமுலையாள் கூறாவெண் ணீறாடீ
வோங்கெயில்சூழ் திருவாரூ ருடையானே யடியேனின்
பூங்கழல்க ளவையல்லா தெவையாதும் புகழேனே.

உ

ருருரு. சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையா யடியேனு
னுடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே.

ங

ருருசா. உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

திருச்சிற்றம்பலம்

தானே வந்து அருள் செய்தான்

553. நானேயோ தவம் செய்தேன்? 'சிவாய நம' எனப் பெற்றேன்
தேன் ஆய் இன் அமுதமும் ஆய் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து, எனது உள்ளம் புகுந்து, அடியேற்கு அருள் செய்தான்–
ஊன் ஆரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து[1] அன்றே வெறுத்திடவே! (10)

1 இகழ்ந்து

திருச்சிற்றம்பலம்

முப்பத்தொன்பதாவது

திருப் புலம்பல்

சிவானந்த முதிர்வு

பூம்-கழல்களையே புகழ்வேன்

554. பூம்-கமலத்து[2] அயனொடு[3] மால் அறியாத நெறியானே,
கோங்கு-அலர்[4] சேர் குவி முலையாள் கூறு,[5] வெண்-நீறு ஆடி,
ஓங்கு[6] எயில்[7] சூழ் திருவாரூர் உடையானே, அடியேன் நின்
பூம்-கழல்கள்[8] அவை அல்லாது, எவை யாதும் புகழேனே! (1)

2 அழகிய தாமரை மலரில
3 பிரமனொடு
4 கோங்கு முகை ஒருவகை ஆடை
5 பங்காக உடையவனே
6 உயர்ந்த
7 மதில்
8 திருவடி மலர்

வேறு துணை அறியேன்

555. சடையானே, தழல் ஆடி, தயங்கு[9] மூ-இலைச்சூலப்
படையானே, பரஞ்சோதீ,[10] பசுபதீ,[11] மழ[12] வெள்ளை
விடையானே,[13] விரிபொழில் சூழ் பெருந்துறையாய், அடியேன் நான்,
உடையானே, உனை அல்லாது, உறு துணை மற்று அறியேனே! (2)

9 விளங்குகின்ற
10 மேலான ஒளியே – சிவபெருமானே
11 ஆன்மாக்களுக்குத் தலைவனே – சிவபெருமான்
12 இளமையான
13 எருதை உடையவனே

நின்னையே நான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதேன்

556. உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்; பேர் வேண்டேன்;
கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்;
குற்றாலத்து அமர்ந்து[14] உறையும் கூத்தா! உன் குரை கழற்கே,
கற்றாவின்[15] மனம் போல, கசிந்து, உருக வேண்டுவனே! (3)

14 விரும்பி
15 கன்றுடைய பசுவின்

திருச்சிற்றம்பலம்

நாற்பதாவது

குலாப்பத்து

அனுபவமிடையீடுபடாமை

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

கொச்சகக்கலிப்பா

க

நுநுஎ. ஓடுங் கவந்தியுமே யுறவென்றிட் டுள்கசிந்து
தேடும் பொருளுஞ் சிவன்கழலே யெனத்தெளிந்து
கூடு முயிருங் குமண்டையிடக் குனித்தடியே
னூடுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

உ

நுநுஅ. துடியே ரிடுகிடைத் தூமொழியார் தோணசையாற்
செடியேறு தீமைக ளெத்தனையுஞ் செய்திடினு
முடியேன் பிறவே னெனைத்தனதாண் முயங்குவித்த
வடியேன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

ங

நுநுகூ. என்புள் ளுருக்கி யிருவினையை யீடழித்துத்
துன்பங் களைந்து துவந்துவங்க டூய்மைசெய்து
முன்புள்ள வற்றை முழுதறிய வுள்புகுந்த
வன்பின் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

ச

நுசுO. குறியு நெறியுங் குணமுமிலாக் குழாங்கடமைப்
பிறியு மனத்தார் பிறிவரிய பெற்றியனைச்
செறியுங் கருத்தி லுருத்தமுதாஞ் சிவபதத்தை
யறியுங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

ரு

நுசுக. பேருங் குணமும் பிணிப்புறுமிப் பிறவிதனைத்
தூரும் பரிசு துரிசறுத்துத் தொண்டரெல்லாஞ்
சேரும் வகையாற் சிவன்கருணைத் தேன்பருகி
யாருங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

நாற்பதாவது

குலாப் பத்து

அனுபவமிடையீடு படாமை

திருநாடு காண இம்மையிலே பிச்சைதான் கொள்வர்

557. 'ஓடும்,[1] கவந்தியுமே,[2] உறவு'என்றிட்டு, உள் கசிந்து ;
தேடும் பொருளும் சிவன் கழலே எனத் தெளிந்து ;
கூடும், உயிரும், குமண்டை யிடக் குனித்து ;[3] அடியேன்
ஆடும் குலா[4]–தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (1)

1 ஐயம் ஏற்கும் திருவோடும்
2 கோவணமுமே
3 மகிழ்ச்சி பொங்க வளைந்து
4 ஆனந்தம்

தீவினை ஒழிந்தேன்

558. துடி[5]ஏர்[6] இடுகு[7] இடைத்தூமொழியார்[8]தோள் நசையால்[9]
செடி[10]ஏறு[11]தீமைகள் எத்தனையும் செய்திடினும்,
முடியேன்[12]; பிறவேன் ; எனைத் தன தாள் முயங்குவித்த[13]
அடியேன் குலா–தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (2)

5 உடுக்கை
6 அழகு
7 சுருங்கிய
8 பெண்கள்
9 விருப்பத்தால்
10 பாவம்
11 மிகுவதற்குக் (காரணமான)
12 இறக்கமாட்டேன்
13 கூடும்படிசெய்த

இனி வருவனவற்றை அறியச் செய்தான்

559. என்பு[14]உள் உருக்கி, இரு வினையை ஈடு[15] அழித்து,
துன்பம் களைந்து, துவந்துவங்கள்[16] தூய்மை செய்து,
முன்பு உள்ளவற்றை முழுது அறிய, உள் புகுந்த
அன்பின் குலா–தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (3)

14 எலும்பு
15 வலிமை
16 மாறுபட்ட இரு வகை நிலைகள்

உள்ளத்தில் தோன்றும் உருவம்

560. குறியும், நெறியும், குணமும், இலாக் குழாங்கள்–தமைப்
பிறியும் மனத்தார் பிறிவு–அரிய பெற்றியனை ;
செறியும் கருத்தில் உருத்து[17],அமுது ஆம் சிவ–பதத்தை
அறியும் குலா–தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (4)

17 திருவுருக் கொண்டு

பிறவியை ஒழிக்கும் கருணைத்தேன்

561. பேரும் குணமும், பிணிப்பு உறும் இப் பிறவி–தனைத்
தூரும் பரிசு[18],துரிசு[19] அறுத்து, தொண்டர் எல்லாம்
சேரும் வகையால், சிவன் கருணைத்தேன் பருகி
ஆரும்[20]குலா–தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (5)

18 தூர்ந்து மறையும் வகை
19 குற்றம்
20 நிறையும்

௬

௫௬௨. கொம்பி லரும்பாய்க் குவிமலராய்க் காயாகி
வம்பு பழுத்துடல மாண்டிங்ஙன் போகாமே
நம்புமென் சிந்தை நணுகும்வண்ண நானணுகு
மம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

௭

௫௬௩. மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் றோணெரிய
மிதிக்குந் திருவடி யென்றலைமேல் வீற்றிருப்பக்
கதிக்கும் பசுபாச மொன்றுமிலோ மெனக்களித்திங்
கதிர்க்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

௮

௫௬௪. இடக்குங் கருமுருட் டேனப்பின் கானகத்தே
நடக்குந் திருவடி யென்றலைமே னட்டமையாற்
கடக்குந் திறலைவர் கண்டகர்தம் வல்லரட்டை
யடக்குங் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

௯

௫௬௫. பாழ்ச்செய் விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக்
கீழ்ச்செய் தவத்தாற் கிளியீடு நேர்பட்டுத்
தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென் புன்றலையா
லாட்செய் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

௰

௫௬௬. கொம்மை வரிமுலைக் கொம்பனையாள் கூறனுக்குச்
செம்மை மனத்தாற் றிருப்பணிகள் செய்வேனுக்
கிம்மை தரும்பய னித்தனையு மீங்கொழிக்கு
மம்மை குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே.

திருச்சிற்றம்பலம்

மாதுயர் இடும்பை காய்த்து மரணமே
கனியாவண்ணம் காத்தான்

562. கொம்பில்[1] அரும்பு ஆய், குவிமலர் ஆய், காய் ஆகி,
வம்பு[2] பழுத்து, உடலம் மாண்டு, இங்ஙன் போகாமே;
நம்பும்[3]என் சிந்தை நணுகும்[4]வண்ணம், நான் அணுகும்[5]
அம் பொன்[6]குலா[7] தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (6)

அரக்கனை நெரித்த திருவடி அடியேன் தலைமேல்
மென்மலராக மிளிர்கின்றது

563. மதிக்கும் திறல்[8] உடைய வல் அரக்கன்[9]தோள் நெரிய,
மிதிகக்கும் திருவடி என் தலைமேல் வீற்றிருப்ப,
'கதிக்கும்[10]பசு-பாசம் ஒன்றும் இலோம்' எனக்களித்து,இங்கு
அதிர்க்கும்[11] குலா-தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (7)

ஐவரும் அரட்டை அடங்கினர்

564. இடக்கும்[12]கரு முருட்டு ஏனப் பின், கானகத்தே,
நடக்கும் திருவடி என் தலைமேல் நட்டமையால்,
கடக்கும் திறல் ஐவர்[13]கண்டகர்[14]-தம் வல் அரட்டை[15]
அடக்கும் குலா-தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (8)

பழந்தனம் இழந்தவர் படைத்ததனை ஒத்தேன்

565. பாழ்ச் செய்[16]விளாவி,[17]பயன் இலியாய்க் கிடப் பேற்கு,
கீழ்ச்செய் தவத்தால் கிளிியீடு[18]நேர். பட்டு,
தாள் செய்ய[19]தாமரைச் சைவனுக்கு,[20]என் புன்[21]தலையால்
ஆட்செய்குலா-தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (9)

செம்மை மனத்தால் திருப்பணிகள் செய்வேன்

566. கொம்மை[22]வரிமுலைக் கொம்பு[23]அனையாள்[24]கூறனுக்கு
செம்மை மனத்தால் திருப் பணிகள் செய்வேனுக்கு,
இம்மை[25]தரும் பயன்[26]இத்தனையும் ஈங்கு ஒழிக்கும்[27]
அம்மை[28]குலா-தில்லை ஆண்டானைக் கொண்டன்றே. (10)

1 மரக்கிளையில்
2 வீணே
3 உறுதிகொண்டிருக்கும்
4 ஒன்றும், சேரும்
5 நெருங்கும்
6 பொன்போலுயர்ந்த
7 ஆனந்தம (அம பொன நிலலை)
8 ஆற்றல்
9 - இராவணன்
10 மேலும் மேலும எழுகின்ற
11 பெருமுழக்கம் செய்யும
12 தோண்டும்
13 ஐம்புலன
14 முளபோலத் துன்பம செய்பவர்
15 அடங்காச் செயலை
16 வயல்
17 உழுது
18 கிளியிலலை சேர்தது வைககப் பெறற கதிர்கள் - முன் செய்த நல்வினையின பலன
19 செயயதாமரைததாள்
20 சிவபெருமான
21 தாழ்மையான
22 திரடசி
23 கொடி
24 உமையம்மை
25 இப்பிறவி
26 வினைப்பயன - இனப துனபஙகள
27 (துய்த்து, மேல் தொடராது) ஒழியசசெய்யும்
28 மேலுலக, வீட்டு இனபம்

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தொன்றாவது

அற்புதப் பத்து

அனுபவமாற்றாமை

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

ருகூஎ. மைய லாயிந்த மண்ணிடை வாழ்வெனு
மாழியு ளகப்பட்டுத்
தைய லாரெனுஞ் சுழித்தலைப் பட்டுநான்
றலைதடு மாறாமே
பொய்யெ லாம்விடத் திருவரு டந்துதன்
பொன்னடி யிணைகாட்டி
மெய்ய னாய்வெளி காட்டிமுன் னின்றதோ
ரற்புதம் விளம்பேனே.

உ

ருகூஅ. ஏய்ந்த மாமல ரிட்டுமுட் டாததோ
ரியல்பொடும் வணங்காதே
சாந்த மார்முலைத் தையனல் லாரொடுந்
தலைதடு மாறாகிப்
போந்தி யான்றுயர் புகாவண மருள்செய்து
பொற்கழ லிணைகாட்டி
வேந்த னாய்வெளி யேயென்மு னின்றதோ
ரற்புதம் விளம்பேனே.

நாற்பத்தொன்றாவது

அற்புதப் பத்து

அனுபவமாற்றாமை

பொய் எலாம் விட வந்த மெய்யன்

567. மையல்[1] ஆய், இந்த மணணிடை வாழ்வு என்னும்
ஆழியுள்[2] அகப்பட்டு,
தையலார்[3] எனும் சுழி[4]த்தலைப் பட்டு, நான்
தலை தடுமாறுமே,
பொய் எலாம் விட,[5] திருவருள் தந்து, தன்
பொன் அடி-இணை காட்டி,
மெய்யன்[6] ஆய், வெளி[7] காட்டி, முன் நின்றது ஓர்-
அற்புதம்[8] விளம்பேனே ! (1)

1 நிலையாத வற்றை நிலை யெனக் கருதும் மயகக உணர்சசி
2 கடலினுள
3 பெணகள்
4 நீரசசுழல
5 நிலையில்லாதவறறி லுள்ள பறறுககளெல லாம விலக
6 உணமைபபொருள
7 ஞானவெளி
8 வியப்பு

துயர் புகாவண்ணம் அருள் செய்தான்

568. ஏய்ந்த[9] மாமலர் இட்டு, முட்டாதது[10] ஓர்
இயல் பொடும் வணங்காதே,
சாந்தம்[11] ஆர்[12] முலைத் தையல் நல்லாரொடும்
தலை தடு மாறு ஆகி,
போந்து, யான் துயர் புகா வணம் அருள் செய்து,
பொன் கழல்-இணை காட்டி,
வேந்தன்[13] ஆய், வெளியே, என் முன் நின்றது ஓர்-
அற்புதம் விளம்பேனே ! (2)

9 பொருததமான
10 தவறாதது
11 சநதனம் பூசிய
12 அழகிய
13 ஆள்பவனாய்

௩

௫௬௯. நடித்து மண்ணிடைப் பொய்யினைப் பலசெய்து
நானென தெனுமாயக்
கடித்த வாயிலே நின்றுமுன் வினைமிகக்
கழறியே திரிவேனைப்
பிடித்து முனின்றவப் பெருமறை தேடிய
வரும்பொரு ளடியேனை
யடித்த டித்துவக் காரமுந் தீற்றிய
வற்புத மறியேனே.

௪

௫௭௰. பொருந்து மிப்பிறப் பிறப்பிவை நினையாது
பொய்களே புகன்று போய்க்
கருங்கு ழலினார் கண்களா லேறுண்டு
கலங்கியே கிடப்பேனைத்
திருந்து சேவடிச் சிலம்பவை சிலம்பிடத்
திருவொடு மகலாதே
யருந்து ணைவனா யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

௫

௫௭௧. மாடுஞ் சுற்றமு மற்றுள போகமு
மங்கையர் தம்மோடுங்
கூடி யங்குள குணங்களா லேறுண்டு
குலாவியே திரிவேனை
வீடு தந்தென்றன் வெந்தொழில் வீட்டிட
மென்மலர்க் கழல்காட்டி
யாடு வித்தென தகம்புகுந் தாண்டதோ
ரற்புத மறியேனே.

அகந்தை ஒழித்த அக்காரம்

569. நடித்து, மண்ணிடை ; பொய்யினைப் பல செய்து ;
'நான், எனது' எனும் மாயம்[1]
கடித்த வாயிலே நின்று ; முன் வினை[2] மிகக்
கழறியே[3] திரிவேனை,
பிடித்து, முன் நின்று, அப் பெரு மறை தேடிய
அரும் பொருள், அடியேனை
அடித்து அடித்து, அக்காரமும்[4] தீற்றிய –
அற்புதம் அறியேனே ! (3)

1 மாயை (என்னும் பாமபு)
2 வினையாகிய நஞ்சு
3 (மனத்தில் தோன்றியதை) பேசிக்கொண்டே
4 கற்கண்டும்

திருவொடும் அகலாத அருந்துணை

570. பொருந்தும் இப் பிறப்பு, இறப்பு, இவை நினையாது
பொய்களே புகன்று போய் ;
கரும் குழலினார்[5] கண்களால் ஏறுண்டு[6]
கலங்கியே கிடப்பேனை ;
திருந்து சேவடிச் சிலம்பு[7]–அவை சிலம்பிட,[8]
திருவொடும் அகலாதே,
அரும் துணைவன்[9] ஆய், ஆண்டுகொண்டு, அருளிய–
அற்புதம் அறியேனே ! (4)

5 பெண்கள்
6 தாக்குப்பட்டு
7 காலில் அணிவது
8 ஒலிக்க
9 கிடைத்தற்கரிய துணைவன

வீடு தந்த மென்மலர்க் கழல்

571. மாடும்,[10] சுற்றமும், மற்று உள போகமும்,
மங்கையர்–தம்மோடும்
கூடி, அங்குள குணங்களால் ஏறுண்டு,
குலாவியே[11] திரிவேனை,
வீடு தந்து, என்–தன் வெம்-தொழில்[12] வீட்டிட,[13]
மென் மலர்க் கழல் காட்டி,
ஆடுவித்து,[14] எனது அகம் புகுந்து, ஆண்டது ஓர் –
அற்புதம் அறியேனே ! (5)

10 செல்வமும்
11 களித்துப் பாராட்டியே
12 தீயவினை
13 அழிய
14 ஆனந்தக் கூத்து ஆடும்படி செய்து

சா

௫௭௨. வணங்கு மிப்பிறப் பிறப்பிலை நினையாது
மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாயிதழ்ப் பெருவெள்ளத் தழுந்திநான்
பித்தனாய்த் திரிவேனைக்
குணங்க ளுங்குறி களுமிலாக் குணக்கடல்
கோமளத் தொடுங்கூடி
யணைந்து வந்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

எ

௫௭௩. இப்பி றப்பினி லிணைமலர் கொய்துநா
னியல்பொடஞ் செழுத்தோதித்
தப்பி லாதுபொற் கழல்களுக் கிடாதுநான்
றடமுலை யார்தங்கண்
மைப்பு லாங்கண்ணா லேறுண்டு கிடப்பேனை
மலரடி யிணைகாட்டி
யப்ப னென்னைவந் தாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

அ

௫௭௪. ஊச லாட்டுமிவ் வுடலுயி ராயின
விருவினை யறுத்தென்னை
யோசை யாலுணர் வார்க்குணர் வரியவ
னுணர்வுதந் தொளியாக்கிப்
பாச மானவை பற்றறுத் துயர்ந்ததன்
பரம்பெருங் கருணையா
லாசை தீர்த்தடி யாரடிக் கூட்டிய
வற்புத மறியேனே.

கோமளத்தோடு கூடிய குணக்கடல்

572. வணங்கும்[1] இப் பிறப்பு, இறப்பு, இவை நினையாது,
மங்கையர்-தம்மோடும்
பிணைந்து,[2] வாய் இதழ்ப் பெரு வெள்ளத்து அழுந்தி, நான்
பித்தனாய்த் திரிவேனை,
குணங்களும், குறிகளும், இலாக் குணக் கடல்
கோமளத் தொடும்[3] கூடி,
அணைந்து வந்து, எனை ஆண்டு கொண்டு, அருளிய—
அற்புதம் அறியேனே! (6)

1 மேற் செல்ல விடாது கீழ்ப்படுத்தும்
2 கூடி
3 இளமையழகு நிறைந்த-உமையம்மை யோடும்

ஆண்டு கொண்ட அப்பன்

573. இப் பிறப்பினில், இணை[4] மலர் கொய்து, நான்
இயல்பொடு அஞ்சு-எழுத்து[5] ஓதி,
தப்பு இலாது பொன் கழல்களுக்கு இடாது, நான்
தட முலையார்-தங்கள்
மைப்பு[6] உலாம்[7] கண்ணால் ஏறுண்டு[8] கிடப்பேனை,
மலர் அடி-இணை காட்டி,
அப்பன், என்னை, வந்து, ஆண்டு கொண்டு, அருளிய—
அற்புதம் அறியேனே! (7)

4 பொருத்தமான
5 'நமசிவாய' எனனும் ஐந்தெழுத்து
6 கருமை நிறம்
7 திரிதலுறு
8 தாக்கப்பட்டு

அடியார் அடிக்கூட்டிய கருணை

574. ஊசல்[9] ஆட்டும் இவ் உடல் உயிர் ஆயின
இரு வினை அறுத்து, என்னை,
ஓசையால் உணர்வார்க்கு உணர்வு-அரியவன்,
உணர்வு தந்து, ஒளி ஆக்கி,[10]
பாசம் ஆனவை பற்று அறுத்து, உயர்ந்த தன்
பரம் பெருங் கருணையால்
ஆசை தீர்த்து,[11] அடியார் அடிக் கூட்டிய—
அற்புதம் அறியேனே! (8)

9 ஊஞ்சல்
10 இருள் அகலச் செய்து
11 அவாவை அறுத்து குறறதைப் போக்கி (ஆசு+ஐ)

கூ

ருஎரு. பொச்சை யானவிப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
விச்சை யாயின வேழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
யிச்ச கத்தரி யயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
யச்ச னென்னையு மாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

கய

ருஎசு. செறியு மிப்பிறப் பிறப்பிவை நினையாது
செறிகுழ லார்செய்யுங்
கிறியுங் கீழ்மையுங் கெண்டையங் கண்களு
முன்னியே கிடப்பேனை
யிறைவ னெம்பிரா னெல்லையில் லாததன்
னிணைமலர்க் கழல்காட்டி
யறிவு தந்தெனை யாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

திருச்சிற்றம்பலம்

வறள் நிலத்தில் தோன்றிய வாசனைப்பூ

575. பொச்சை[1] ஆன இப் பிறவியில் கிடந்து, நான்,
புழுத்து அலைநாய் போல,
இச்சை ஆயின ஏழையர்க்கே செய்து, அங்கு
இணங்கியே[2] திரிவேனை,
இச்சகத்து.[3] அரி, அயனும் எட்டாத, தன்
விரை[4] மலர்க் கழல்[5] காட்டி,
அச்சன்[6], என்னையும் ஆண்டுகொண்டு, அருளிய-
அற்புதம் அறியேனே ! (9)

1 பொற்றை, கரிந்த காடு, புழுக்கூடு
2 கூடியே
3 இந்த உலகில்
4 மணம்
5 திருவடி மலர்
6 தந்தை சிவபெருமான்

அறிவு தந்து ஆண்டான்

576. செறியும்[7] இப் பிறப்பு, இறப்பு, இவை நினையாது,
செறி[8] குழலார்[9] செய்யும்
கிறியும்,[10] கீழ்மையும், கெண்டை அம் கண்களும்,
உன்னியே[11] கிடப்பேனை,
இறைவன், எம்பிரான், எல்லை இல்லாத தன்
இணை மலர்க் கழல் காட்டி,
அறிவு தந்து, எனை ஆண்டு கொண்டு, அருளிய-
அற்புதம் அறியேனே ! (10)

7 மேலும மேலும் நெருககும்
8 அடர்ந்த
9 பெணகள்
10 பொயயான செயல்
11 சிநதித்தே

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்திரண்டாவது

சென்னிப் பத்து

சிவவிளைவு

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

௫௭௭. தேவ தேவன் மெய்ச் சேவகன்
றென்பெ ருந்துறை நாயகன்
மூவ ராலு மறியொ ணாமுத
லாய வானந்த மூர்த்தியான்
யாவ ராயினு மன்ப ரன்றி
யறியொ ணாமலர்ச் சோதியான்
றூய மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னிச் சுடருமே.

உ

௫௭அ. அட்ட மூர்த்தி யழக னின்னமு
தாய வானந்த வெள்ளத்தான்
சிட்டன் மெய்ச்சிவ லோக நாயகன்
றென்பெ ருந்துறைச் சேவகன்
மட்டு வார்குழன் மங்கை யாளையோர்
பாகம் வைத்த வழகன்றன்
வட்ட மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

நாற்பத்திரண்டாவது

சென்னிப் பத்து

சிவ விளைவு

அன்பர் அறியும் சோதி

577. தேவ-தேவன், மெய்ச் சேவகன்,[1]
தென் பெருந்துறை நாயகன்,
மூவராலும்[2] அறிஒணா, முதல்
ஆய, ஆனந்த-மூர்த்தியான்,
யாவர் ஆயினும், அன்பர் அன்றி,
அறிஒணா மலர்ச் சோதியான்,
தூய மா மலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி[3] மன்னி, சுடருமே! (1)

1 உண்மை வீரன்—பாதுகாப்பவன்
2 மும்மூர்த்திகளாலும்
3 தலை

மங்கையைப் பாகம் வைத்த ஆனந்த வெள்ளம்

578. அட்ட-மூர்த்தி,[4] அழகன், இன் அமுது
ஆய ஆனந்த வெள்ளத்தான்,
சிட்டன்,[5] மெய்ச் சிவலோக-நாயகன்,
தென் பெருந்துறைச் சேவகன்,
மட்டு[6] வார்[7] குழல் மங்கையாளை[8] ஓர்
பாகம் வைத்த அழகன்-தன்
வட்ட மா மலர்ச்[9] சேவடிக் கண், நம்
சென்னி மன்னி, மலருமே! (2)

4 மண், புனல், அனல், கனல், வான், கதிரவன, திங்கள, இயமானன்எனனும எட்டின வடிவமானவன்
5 தலைமையானவன்
6 தேன
7 நீண்ட
8 உமையம்மையை
9 வட்ட வடிவமாகிய பெரிய தாமரை மலர் போன்ற

௩

௫எ௯. நங்கை மீரெனை நோக்கு மின்னங்க
ளூத னம்பணி கொண்டவன்
றெங்கு சோலைகள் சூழ்பெ ருந்துறை
மேய சேவக னுயகன்
மங்கை மார்கையில் வளையுங் கொண்டெம்
முயிருங் கொண்டெம் பணிகொள்வான்
பொங்கு மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னிப் பொலியுமே.

௪

௫அ௦. பத்தர் சூழப் பராபரன்
பாரில் வந்துபார்ப் பானெனச்
சித்தர் சூழச் சிவபிரான்
றில்லை மூதூர் நடஞ்செய்வா
னெத்த னுகிவந் தில்பு குந்தெமை
யாளுங் கொண்டெம் பணிகொள்வான்
வைத்த மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

௫

௫அ௧. மாய வாழ்க்கையை மெய்யென் றெண்ணி
மதித்தி டாவகை நல்கினுன்
வேய தோளுமை பங்க னெங்க
டிருப்பெ ருந்துறை மேவினுன்
காயத் துள்ளமு தூற வூறநீ
கண்டு கொள்ளென்று காட்டிய
சேய மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

என் உயிரையும் பணியையும் கொள்ளும் நாதன்

579. நங்கை மீர்! எனை நோக்குமின்; நங்கள்
நாதன், நம் பணி[1] கொண்டவன்,
தெங்கு[2] சோலைகள் சூழ் பெருந்துறை
மேய சேவகன், நாயகன்,
மங்கைமார் கையில் வளையும் கொண்டு, எம்
உயிரும் கொண்டு, எம் பணி கொள்வான்
பொங்கு[3] மா மலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, பொலியுமே! (3)

1 தொண்டினை
2 தென்னை
3 விளங்குகின்ற

இல் புகுந்து எம்மை ஆட்கொண்ட எத்தன்

580. பத்தர் சூழ, பரா-பரன்
பாரில் வந்து, பார்ப்பான் என,
சித்தர் சூழ, சிவபிரான்,
தில்லை மூதூர் நடம் செய்வான்,
எத்தன்[4] ஆகி வந்து, இல் புகுந்து, எமை
ஆளுங் கொண்டு, எம் பணி கொள்வான்
வைத்த மா[5] மலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! (4)

4 ஏமாற்றுகின்றவன்
5 மா வைத்த=பெருமை தாங்கிய

உள்ளத் தேறல் அமுத ஒளிவெளி காட்டிய வள்ளல்

581. மாய[6] வாழ்க்கையை, மெய் என்று எண்ணி,
மதித்திடா வகை நல்கினான்;
வேய[7] தோள் உமை பங்கன், எங்கள்
திருப்பெருந் துறை மேவினான்;
காயத்துள்[8] அமுது ஊற-ஊற, 'நீ
கண்டு கொள்' என்று காட்டிய
சேய[9] மா மலர்ச்[10] சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, திகழுமே! (5)

6 பொய்யான
7 இள மூங்கில் போன்ற
8 உடலினுள்
9 சிவந்த பெரிய தாமரை மலர்
10 சிவந்த

௬

ருஅஉ. சித்த மேபுகுந் தெம்மை யாட்கொண்டு
தீவி னைகெடுத் துய்யலாம்
பத்தி தந்துதன் பொற்க ழற்கணே
பன்மலர் கொய்து சாத்தலு
முத்தி தந்திந்த மூவு லகுக்கு
மப்பு றத்தெமை வைத்திடு
மத்தன் மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

௭

ருஅங. பிறவி யென்னுமிக் கடலை நீந்தத்தன்
பேர ருடந் தருளினு
னறவை யென்றடி யார்க டங்க
ளருட்கு ழாம்புக விட்டுநல்
லுறவு செய்தெனை யுய்யுக் கொண்டபி
ரான்ற னுண்மைப் பெருக்கமாந்
திறமை காட்டிய சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

௮

ருஅச. புழுவி னுற்பொதிந் திடுகு ரம்பையிற்
பொய்த னையொழி வித்திடு
மெழில்கொள் சோதியெம் மீச னெம்பிரா
னென்னுடை யப்ப னென்றென்று
தொழுத கையின ராகித் தூமலர்க்
கண்க ணீர்மல்குந் தொண்டர்க்கு
வழுவி லாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னி மலருமே.

சித்தம் புகுந்து முத்தி தந்தான்

582. சித்தமே[1] புகுந்து, எம்மை ஆட்கொண்டு,
தீவினை கெடுத்து, உய்யல்[2] ஆம்
பத்தி தந்து, தன் பொன் கழல்கணே
பன்[3] மலர் கொய்து[4] சாத்தலும்[5],
முத்தி தந்து, இந்த மூ-உலகுக்கும்
அப்புறத்து எமை வைத்திடும்
அத்தன் மா மலர்ச் சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, மலருமே! (6)

1 உள்ளத்தின் உள்ளே
2 கடைத்தேறும் வழி
3 பலவகையான
4 பறித்து
5 சூட்டலும்

பிறவிப் பெருங்கடல் நீந்த திறமை காட்டும் சேவடி

583. பிறவி என்னும் இக் கடலை நீந்த, தன்
பேர்-அருள் தந்தருளினான்,
அறவை[6] என்று அடியார்கள்-தங்கள்
அருள்-குழாம்[7] புகவிட்டு, நல்
உறவு செய்து, எனை உய்யக் கொண்ட
பிரான்[8]-தன் உண்மைப் பெருக்கம் ஆம்
திறமை[9] காட்டிய சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, திகழுமே! (7)

6 யாரும் அற்றவன
7 கூட்டம்
8 தலைவன்
9 அருள்-திறம்

தவறாது தாங்கும் சேவடி

584. 'புழுவினால் பொதிந்திடு குரம்பையில்[10]
பொய்-தனை[11] ஒழிவித்திடும்
எழில்[12] கொள் சோதி, எம் ஈசன், எம்பிரான்,
என்னுடை அப்பன்' என்று-என்று,
தொழுத[13] கையினர் ஆகி; தூ மலர்க்
கண்கள் நீர் மல்கு[14] தொண்டர்க்கு
வழு[15] இலா மலர்ச் சேவடிக்கண் நம்
சென்னி மன்னி, மலருமே! (8)

10 சிறு வீட்டில்-உடலில்
11 நிலையாதவைகளை
12 மேலும் மேலும் எழுகின்ற பேரழகு
13 கூப்பி வணங்கிய
14 பெருகு
15 தவறு

௯

௫௮௫. வம்ப னாய்த்திரி வேனை வா வென்று
வல்வி னைப்பகை மாய்த்திடு
மும்ப ரானுல கூட றுத்தப்
புறத்த னாய்நின்ற வெம்பிரா
னன்ப ரானவர்க் கருளி மெய்யடி
யார்கட் கின்பந் தழைத்திடுஞ்
செம்பொன் மாமலர்ச் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

௰

௫௮௬. முத்த னைமுதற் சோதியை முக்க
ணப்ப னைமுதல் வித்தி னைச்
சித்த னைச்சிவ லோக னைத்திரு
நாமம் பாடித் திரிதரும்
பத்தர் காளிங்கே வம்மி னீருங்கள்
பாசந் தீரப் பணிமினோ
சித்த மார்தருஞ் சேவ டிக்கணஞ்
சென்னி மன்னித் திகழுமே.

திருச்சிற்றம்பலம்.

இன்பம் தழைக்கும் மலரடி

585. வம்பனாய்த்[1] திரிவேனை 'வா' என்று
வல்வினைப் பகை மாய்த்திடும்,[2]
உம்பரான்[3] உலகு ஊடு அறுத்து[4] அப்
புறத்தன் ஆய் நின்ற எம்பிரான்,[5]
அன்பர் ஆனவர்க்கு அருளி, மெய்
அடியார்கட்கு இன்பம் தழைத்திடும்
செம் பொன் மா மலர்ச்[6] சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, திகழுமே! (9)

1 வீணனாய்
2 அழித்திடும்
3 மேல்மேலாகவுள்ள
4 உருவி
5 எமது தலைவன்
6 செம்மைமிக்கப் பொன் போல் ஒளிரும் தாமரை மலர்

பத்தர்காள் வம்மின் பாசம் தீரப் பணிமின்

586. முத்தனை[7], முதல் சோதியை, முக்கண்
அப்பனை, முதல் வித்தினை,[8]
சித்தனை,[9] சிவலோகனை, திரு –
நாமம் பாடித் திரிதரும்
பத்தர்காள்! இங்கே, வம்மின், நீர்; உங்கள்
பாசம்[10] தீரப்[11] பணிமினோ[12];
சித்தம்[13] ஆர்தரும்[14] சேவடிக்கண், நம்
சென்னி மன்னி, திகழுமே! (10)

7 முத்திகொடுப்பவன்
8 மூல வித்துப் போன்றவனை
9 ஞானமே உருவானவனை
10 ஆணவமலப்பிணிப்பு
11 நீங்க
12 வணங்குங்கள்
13 உள்ளம்
14 முழுவதும் நிறைந்துள்ள

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்துமூன்றுவது

திருவார்த்தை

அறிவித்தன்புறுதல்

(திருப்பெருந் துறையிலருளிச் செய்யப்பட்டது)

ஆசிரிய விருத்தம்

க

ருஅஎ. மாதிவர் பாகன் மறைபயின்ற
வாசகன் மாமலர் மேயசோதி
கோதில் பரங்கரு ணையடியார்
குலாவு நீதிகுண மாய்நல்கும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்திழிந்
தாதிப் பிரமம் வெளிப்படுத்த
வருளறி வாரெம்பி ராஞவாரே.

உ

ருஅஅ. மாலயன் வானவர் கோனும்வந்து
வணங்க வவர்க்கருள் செய்தவீசன்
ஞால மதனிடை வந்திழிந்து
நன்னெறி காட்டி நலந்திகழுங்
கோல மணியணி மாடநீடு
குலாவு மிடவை மடநல்லாட்குச்
சீல மிகக்கரு ணையளிக்குந்
திறமறி வாரெம்பி ராஞவாரே.

நாற்பத்து மூன்றுவது

திருவார்த்தை

அறிவித்து அன்புறுதல்

நிலவுலகில் தோன்றிய இறை உருவம்

587 மாது[1] இவர்[2] பாகன்[3], மறை பயின்ற
வாசகன்[4], மா மலர் மேய சோதி,
கோது[5] இல் பரம் கருணை, அடியார்
குலாவும்[6] நீதி குணம் ஆய நல்கும்,
போது[7] அலர் சோலைப் பெருந்துறை, எம்
புண்ணியன், மண்ணிடை வந்திழிந்து,
ஆதிப் பிரமம்[8] வெளிப் படுத்த
அருள் அறிவார் – எம்பிரான் ஆவாரே. (1)

1 உமையம்மை
2 அமர்ந்த
3 பாகத்தையுடையவன் – சிவபெருமான்
4 மறைமொழிகள் செறிந்த சொற்றொடர்களாய் அருள் செய்பவன
5 குற்றம்
6 மகிழ்ந்து போற்றுகின்ற
7 அரும்பு
8 முதன்மையாகிய பரம் பொருளின் தன்மை

இடவையில் அளித்த அருள்

588. மால், அயன்[9], வானவர் கோனும்[10] வந்து
வணங்க, அவர்க்கு அருள் செய்த ஈசன்,
ஞாலம்[11]–அதனிடை வந்திழிந்து,
நல்நெறி காட்டி, நலம் திகழும்
கோல[12] மணி அணி மாடம் நீடு
குலாவும்[13] இடவை மட நல்லாட்கு,
சீலம் மிகக் கருணை அளிக்கும்
திறம்[14] அறிவார் – எம்பிரான் ஆவாரே. (2)

9 பிரமன்
10 இந்திரனும்
11 நிலவுலகில்
12 அழகிய
13 விளங்குகின்ற
14 தன்மை

௩

௫௮௯. அணிமுடி யாதி யமரர் கோமா
னானந்தக் கூத்த னறுசமயம்
பணிவகை செய்து படவதேறிப்
பாரொடு விண்ணும் பரவியேத்தப்
பிணிகெட நல்கும் பெருந்துறையெம்
பேரரு ளாளன்பெண் பாலுகந்து
மணிவலை கொண்டுவான் மீன்விசிறும்
வகையறி வாரெம்பி ரானாவாரே.

௪

௫௯௦. வேடுரு வாகி மயேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட விருந்த சிவபெருமான்
சிந்தனை செய்தடி யோங்களுய்ய
வாட லமர்ந்த பரிமாவேறி
யையன் பெருந்துறை யாதியந்நா
ளேடர் கலையெங்கு மாண்டுகொண்ட
வியல்பறி வாரெம்பி ரானாவாரே.

௫

௫௯௧. வந்திமை யோர்கள் வணங்கியேத்த
மாக்கரு ணைக்கட லாயடியார்
பந்தனை விண்டற நல்குமெங்கள்
பரமன் பெருந்துறை யாதியந்நா
ளுந்து திரைக்கட லைக்கடந்தன்
றோங்கு மதிலிலங் கையதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வாரெம்பி ரானாவாரே.

வலை வீசியது

589. அணிமுடி ஆதி அமரர் கோமான்[1],
ஆனந்தக் கூத்தன், அறு சமயம்
பணி வகை[2] செய்து, படவு–அது ஏறி,
பாரொடு[3] விண்ணும்[4] பரவி ஏத்த,[5]
பிணிகெட,[6] நல்கும்[7] பெருந்துறை எம்
பேர்–அருளாளன், பெண் பால்[8] உகந்து[9],
மணி வலை கொண்டு, வான்[10] மீன் விசிறும்[11]
வகை அறிவார் – எம் பிரான் ஆவாரே. (3)

1 சடை முடியை உடைய முதல்வனாகிய வானவர் தலைவன் – சிவபெருமான்
2 வணங்கும் வழியாக (பணிவகை அறுசமயம் செய்து)
3 நிலவுலகத்தோடு
4 வானுலகும்
5 போற்றிப் புகழ
6 பிறவிப்பிணி ஒழிக
7 அருளதரும்
8 – வலைஞர் மகளாகத் திருவவதாரம் செய்த உமையம்மையை
9 விரும்பி
10 பெரிய
11 வீசும் (வலை...வீசும்)

அன்பர்களை ஆண்டது

590. வேடு உரு[12] ஆகி, மயேந்திரத்து
மிகு குறை[13] வானவர் வந்து, தன்னைத்
தேட இருந்த சிவபெருமான்;
சிந்தனை செய்து, அடியோங்கள் உய்ய,
ஆடல் அமர்ந்த பரிமா[14] ஏறி,
ஐயன், பெருந்துறை ஆதி, அந்நாள்
ஏடர்களை[15] எங்கும் ஆண்டுகொண்ட
இயல்பு அறிவார் – எம்பிரான் ஆவாரே. (4)

12 வேட்டுவ உருவம்
13 குறையுடைய
14 நாட்டியம் வல்ல குதிரை
15 அடியவர்களை

மந்தோதரிக்கு அருளியது

591. வந்து, இமையோர்கள் வணங்கி ஏத்த,
மாக் கருணைக் கடல் ஆய், அடியார்
பந்தனை[16] விண்டு[17] அற[18] நல்கும்,[19] எங்கள்
பரமன், பெருந்துறை ஆதி, அந்நாள்
உந்து திரைக்[20] கடலைக் கடந்து, அன்று,
ஓங்கு[21] மதில் இலங்கை–அதனில்,
பந்து அணைமெல் விரலாட்கு அருளும்
பரிசு அறிவார் – எம்பிரான் ஆவாரே. (5)

16 பாசக் கட்டுகள்
17 கழன்று, அறுந்து
18 ஒழிய
19 அருளும்
20 மேல் மேல் எழுந்து பரவுகின்ற அலை
21 உயர்ந்த

சா

ருகூஉ. வேவத் திரிபுரஞ் செற்ற வில்லி
வேடுவ னாய்க்கடி நாய்கள்சூழ
வேவற் செயல்செய்யுந் தேவர்முன்னே
யெம்பெரு மான்றா னியங்கு காட்டி
லேவுண்ட பன்றிக் கிரங்கியீச
னெந்தை பெருந்துறை யாதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறி வாரெம்பி ரானுவாரே.

எ

ருகூங. நாத முடையதோர் நற்கமலப்
போதினி னண்ணிய நன்னுதலா
ரோதிப் பணிந்தலர் தூவியேத்த
வொளிவளர் சோதியெம் மீசன்மன்னும்
போதலர் சோலைப் பெருந்துறையெம்
புண்ணியன் மண்ணிடை வந்துதோன்றிப்
பேதங் கெடுத்தருள் செய்பெருமை
யறியவல் லாரெம்பி ரானுவாரே.

அ

ருகூச. பூவலர் கொன்றைய மாலைமார்பன்
போருகிர் வன்புலி கொன்றவீரன்
மாதுநல் லாளுமை மங்கைபங்கன்
வண்பொழில் சூழ்தென் பெருந்துறைக்கோ
னேதில் பெரும்புக ழெங்களீச
னிருங்கடல் வாணற்குத் தீயிற்றோன்று
மோவிய மங்கையர் தோள்புணரு
முருவறி வாரெம்பி ரானுவாரே.

பன்றிக்குட்டிக்குப் பால் கொடுத்தது

592. வேவ, திரிபுரம்[1] பெற்ற வில்லி[2],
வேடுவன் ஆய், கடி நாய்கள்[3] சூழ,
ஏவல்-செயல் செய்யும் தேவர் முன்னே
எம்பெருமான்-தான், இயங்கு காட்டில்
ஏ[4] உண்ட[5] பன்றிக்கு இரங்கி, ஈசன்,
எந்தை, பெருந்துறை ஆதி, அன்று
கேவலம்[6] கேழல்[7] ஆய், பால் கொடுத்த
கிடப்பு[8] அறிவார் – எம்பிரான் ஆவாரே. (6)

1 திரிபுரம் வேவ
2 அழித்த வில்லையுடையவன்
3 வேட்டை நாய்கள் காவல் நாய்கள்
4 அம்பு
5 தைத்த
6 தனிப்பட்ட
7 பன்றி
8 தன்மை

வேற்றுமை கெடுத்து அருள் செய்தது

593. நாதம்[9] உடையது ஓர் நல் கமலப்
போதினில்[10] நண்ணிய நல் நுதலார்[11],
ஓதி[12], பணிந்து[13], அலர்[14] தூவி, ஏத்த[15],
ஒளி வளர் சோதி, எம் ஈசன் ; மன்னும்,
போது அலர் சோலை, பெருந்துறை எம்
புண்ணியன் ; மண்ணிடை வந்து தோன்றி,
பேதம்[16] கெடுத்து, அருள் செய்பெருமை
அறியவல்லார் – எம்பிரான் ஆவாரே. (7)

9 வண்டுகளின் ரீங்கார ஒலி
11 தாமரை மலரில்
10 கலைமகளும், திருமகளும்
12 புகழ்களை ஓதி
13 வணங்கும
14 மலர்
15 வழிபட
16 வேற்றுமை

வலைவாணன் மகளை மணந்தது

594. பூ அலர் கொன்றை அம்[17] மாலை மார்பன்,
போர் உகிர்[18] வன்[19] புலி கொன்ற வீரன்,
மாது நல்லாள், உமை மங்கை, பங்கன்,
வண்[20] பொழில்[21] சூழ் தென் பெருந்துறைக்கோன்,
ஏது[22] இல் பெரும் புகழ் எங்கள் ஈசன்,
இரும்[23] கடல் வாணற்குத்[24] தீயில் தோன்றும்
ஓவிய மங்கையர்[25] தோள் புணரும்[26]
உருவு அறிவார் – எம்பிரான் ஆவாரே. (8)

17 அழகிய
18 நகம்
19 வலிய
20 வளம்பெருகிய
21 சோலை
22 குற்றம
23 பெரிய
24 வருணன்
25 சித்திரப் பதுமை போன்ற பெண்கள்
26 விரும்பி மணம் செய்யும்

௯

௫௯௫. தூவெள்ளை நீறணி யெம்பெருமான்
சோதி மயேந்திர நாதனவந்து
தேவர் தொழும்பதம் வைத்த வீசன்
றென்னன் பெருந்துறை யாளியன்று
காதல் பெருகக் கருணை காட்டித்
தன்கழல் காட்டிக் கசிந்துருகக்
கேதங் கெடுத்தென்னை யாண்டருளுங்
கிடப்பறி வாரெம்பி ரானாவாரே.

௰

௫௯௬. அங்கண னெங்கள மரர்பெம்மா
னடியார்க் கமுத னவனிவந்த
வெங்கள் பிரானிரும் பாசந்தீர
விகபர மாயதோ ரின்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவெண் சாத்தினோடுஞ்
சதுரன் பெருந்துறை யாளியன்று
மங்கையர் மல்கு மதுரைசேர்ந்த
வகையறி வாரெம்பி ரானாவாரே.

திருச்சிற்றம்பலம்.

துன்பம் நீக்கி என்னை ஆண்டது

595. தூவெள்ளை நீறு[1] அணி எம்பெருமான்,
சோதி மயேந்திர-நாதன், வந்து
தேவர் தொழும் பதம்[2] வைத்த[3] ஈசன்,
தென்னன்,[4] பெருந்துறை ஆளி,[5] அன்று
காதல்[6] பெருக, கருணைகாட்டி,
தன் கழல்[7] காட்டி, கசிந்து உருக,
கேதம்[8] கெடுத்து, என்னை ஆண்டருளும்
கிடப்பு அறிவார்-எம்பிரான் ஆவாரே. (9)

1 திருநீறு
2 பாதம், திருவடி
3 என தலைமேல் வைத்த
4 சிவபெருமான
5 ஆள்பவன
6 இறைவனிடத்து அன்பு
7 திருவடி
8 துன்பம்

வளையல் விற்றது

596. அம்-கணன்,[9] எங்கள் அமரர்[10] பெம்மான்,
அடியார்க்கு அமுதன், அவனி[11] வந்த
எங்கள் பிரான், இரும் பாசம்[12] தீர[13]
இக-பரம்[14] ஆயது ஓர் இன்பம் எய்த,
சங்கம்[15] கவர்ந்து, வெண் சாத்தினொடும்,[16]
சதுரன்[17], பெருந்துறை ஆளி, அன்று
மங்கையர் மல்கு[18] மதுரை சேர்ந்த
வகை அறிவார்-எம்பிரான் ஆவாரே. (10)

9 அருள் நோக்கு உடையவன
10 வானவா, தேவர்
11 நிலவுலகம
12 நிலையாத பொருள் களிடத்துள்ள பற்று
13 ஒழிய
14 இம்மையும மறுமையும்
15 சஙகுகளால் ஆன வளையல்
16 சங்கம சாததினொடும் கவாநது. சாதது = தொகுதி கூட்டம
17 வல்லமையுடையவன
18 பெருக்கமாகவுள்ள

திருச்சிற்றம்பலம்

நாற்பத்து நான்காவது

எண்ணப்பதிகம்

ஒழியாவின்பத்துவகை

௧

௫௯௭. பாருரு வாய பிறப்பற வேண்டும்
பத்திமையும் பெறவேண்டுஞ்
சீருரு வாய சிவபெரு மானே
செங்கமல மலர்போ
லாருரு வாயவென் னாரமு தேயுன்
னடியவர் தொகை நடுவே
யோருரு வாயநின் றிருவருள் காட்டி
யென்னையு முய்யக் கொண்டருளே.

௨

௫௯௮. உரியே னல்லே னுனக்கடிமை
யுன்னைப் பிரிந்திங் கொருபொழுதுந்
தரியே னாயே னின்னதென்
றறியேன் சங்கரா கருணையினாற்
பெரியோ னொருவன் கண்டுகொ
ளென்றுன் பெய்கழ லடிகாட்டிப்
பிரியே னென்றென் றருளிய வருளும்
பொய்யோ வெங்கள் பெருமானே.

௩

௫௯௯. என்பே யுருக நின்னரு ளளித்துன்
னிணைமல ரடிகாட்டி
முன்பே யென்னை யாண்டு கொண்ட
முனிவா மூவர் முழுமுதலே
யின்பே யருளி யெனையுருக்கி
யுயிருண் கின்ற வெம்மானே
நண்பே யருளா யென்னுயிர்
நாதா நின்னரு ணாணாமே.

நாற்பத்து நான்காவது

எண்ணப் பதிகம்

அடியவருள் கூட்டி உய்யக்கொள்

597. பார்[1] உரு ஆய[2] பிறப்பு[3] அற[4] வேண்டும்;
பத்திமையும் பெற வேண்டும்;
சீர்[5] உரு ஆய சிவபெருமானே,
செம் கமல மலர் போல்
ஆர் உரு ஆய என் ஆர் அமுதே, உன்
அடியவர் தொகை நடுவே,
ஓர் உரு ஆய நின் திருவருள்[6] காட்டி,
என்னையும் உய்யக் கொண்டருளே. (1)

1 நிலவுலகத்தில்
2 பல உருவங்களோடு தோன்றுகிற
3 பிறவியின தொடர்
4 ஒழிய
5 புகழ
6 நின திருவருள் ஆய ஓர் உரு - நின திருவருளை ஓர உருவமாக

உன்னைப் பிரிந்து தரியேன்

598. உரியேன் அல்லேன் உனக்கு அடிமை;
உன்னைப் பிரிந்து; இங்கு ஒரு பொழுதும்
தரியேன், நாயேன்; இன்னது என்று
அறியேன்; சங்கரா! கருணையினால்
பெரியோன் ஒருவன், 'கண்டு கொள்' என்று, உன்
பெய்கழல் அடி காட்டி,
'பிரியேன்' என்று-என்று, அருளிய அருளும்
பொய்யோ? எங்கள் பெருமானே! (2)

உருக்கி உயிர் உண்ணும் இன்பம்

599. என்பே உருக, நின் அருள் அளித்து, உன்
இணை மலர் அடி காட்டி,
முன்பே என்னை ஆண்டு கொண்ட
முனிவா, மூவர்[7] முழு-முதலே,
இன்பே அருளி, எனை உருக்கி,
உயிர் உண்கின்ற எம்மானே,
நண்பே அருளாய்-என் உயிர்
நாதா! நின் அருள் நாணுமே. (3)

7 மும்மூர்த்தி

௪

௬௱௰. பத்திலனேனும் பணிந்திலனேனுமுன்
னுயர்ந்தபைங் கழல்காணப்
பித்திலனேனும் பிதற்றிலனேனும்
பிறப்பறுப் பாயெம் பெருமானே
முத்தனை யானே மணியனை யானே
முதல்வனே முறையோவென்
றெத்தனை யானும் யான்றொடர்ந் துன்னை
யினிப்பிரிந் தாற்றேனே.

௫

௬௱௰௧. காணும தொழிந்தே னின்றிருப் பாதங்
கண்டுகண் களிகூரப்
பேணும தொழிந்தேன் பிதற்றும தொழிந்தேன்
பின்னையெம் பெருமானே
தாணுவே யழிந்தே னின்னினைந் துருகுந்
தன்மையென் புன்மைகளாற்
காணும தொழிந்தே னீயினி வரினுங்
காணவு நாணுவனே.

௬

௬௱௰௨. பாற்றிரு நீற்றெம் பரமனைப்
பரங்கருணை யொடு மெதிர்ந்து
தோற்றிமெய் யடியார்க் கருட்டுறை யளிக்குஞ்
சோதியை நீதியிலேன்
போற்றியென் னமுதே யெனநினைந் தேத்திப்
புகழ்ந்தழைத் தலறியென் னுள்ளே
யாற்றுவ னாக வுடையவ னேயெனை
யாவவென் றருளாயே.

திருச்சிற்றம்பலம்.

தொடர்ந்தேன் பிரிந்து ஆற்றேன்

600. பத்து[1] இலன் ஏனும், பணிந்திலன்[2] ஏனும், உன்
உயர்ந்த பைம் கழல் காணப்
பித்து[3] இலன் ஏனும், பிதற்றிலன் ஏனும்,
பிறப்பு அறுப்பாய்; எம்பெருமானே!
முத்து அனையானே! மணி அனையானே!
முதல்வனே! 'முறையோ?' என்று
எத்தனையானும் யான் தொடர்ந்து, உன்னை
இனிப் பிரிந்து ஆற்றேனே. (4)

1 பக்தி, பத்தி, பத்து—அன்பு
2 வணங்காதவன்
3 அளவு கடந்த ஆசை

புன்மையால் புறமானேன்; நாணுகின்றேன்

601. காணும்-அது ஒழிந்தேன் நின் திருப் பாதம்;
கண்டு கண் களி கூர,
பேணும்[4] -அது ஒழிந்தேன்; பிதற்றும்-அது ஒழிந்தேன்;
பின்னை, எம்பெருமானே,
தாணுவே,[5] அழிந்தேன்; நின் நினைந்து உருகும்
தன்மை, என் புன்மைகளால்,
காணும்-அது[6] ஒழிந்தேன் நீ இனி வரினும்—
காணவும் நாணுவனே. (5)

4 போற்றி உள்ளத்தில் அமைத்தல
5 நிலைத்தவனே
6 தோன்றுவது, உண்டாவது, பொருந்துவது.

என் உள்ளே உன்னை நிறுத்தினேன்; இரங்கு

602. பால் திரு நீற்று எம் பரமனை;
பரம் கருணை யொடும்[7] எதிர்ந்து[8]
தோற்றி, மெய் அடியார்க்கு அருள் துறை[9] அளிக்கும்
சோதியை; நீதி இலேன்,[10]
போற்றி, என் அமுதே, என நினைந்து, ஏத்தி,
புகழ்ந்து, அழைத்து, அலறி, என் உள்ளே
ஆற்றுவன் ஆக[11]; உடையவனே, எனை,
'ஆவ'[12] என்று அருளாயே! (6)

7 மேலான திருவருள் வடிவத்தோடு
8 எதிர்பட்டு
9 திருவருள் நெறி
10 நெறியில்லாத வஞ்சிய யான்
11 அமைத்து ஆனந்தம் பெறுமாறு
12 இரக்கக் குறிப்பு

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தைந்தாவது

யாத்திரைப்பத்து

அனுபவாதீத முரைத்தல்

ஆசிரியவிருத்தம்

க

கூ௰ந. பூவார் சென்னி மன்னனெம்
புயங்கப் பெருமான் சிறியோமை
ஓவா துள்ளங் கலந்துணர்வா
யுருக்கும் வெள்ளக் கருணையினா
லாவா வென்னப் பட்டன்பா
யாட்பட் டீர்வந் தொருப்படுமின்
போவோங் காலம் வந்ததுகாண்
பொய்விட் டுடையான் கழல்புகவே

உ

கூ௰சு. புகவே வேண்டா புலன்களினீர்
புயங்கப் பெருமான் பூங்கழல்கள்
மிகவே நினைமின் மிக்கதெல்லாம்
வேண்டா போக விடுமின்கள்
நகவே ஞாலத் துள்புகுந்து
நாயே யனைய நமையாண்ட
தகவே யுடையான் றனைச்சாரத்
தளரா திருப்பார் தாந்தாமே.

நாற்பத்தைந்தாவது

யாத்திரைப் பத்து

அன்பர்களே! அவன் கழல் புகுவோம்!

603. பூ ஆர்[1] சென்னி[2] மன்னன், எம்
புயங்கப் பெருமான்,[3] சிறியோமை
ஓவாது[4] உள்ளம் கலந்து, உணர்வு ஆய்
உருக்கும் வெள்ளக் கருணையினால்,[5]
'ஆ! ஆ!'[6] என்னப் பட்டு, அன்பு ஆய்
ஆட்பட்டீர், வந்து ஒருப்படுமின்;[7]
போவோம்; காலம் வந்தது காண்;
பொய் விட்டு, உடையான் கழல் புகவே. (1)

1 கொன்றை மலரை அணிந்த
2 தலை
3 பாம்பை யணிந்தவன், புயங்கம் என்னும் ஒரு வகைக் கூத்துடையவன்
4 இடைவிடாது
5 கடல் போன்ற பேருளால்
6 இரக்கக் குறிப்பு
7 ஒன்று சேருங்கள்

அவன் கழலையே எண்ணுவோம்

604. புகவே வேண்டாம் புலன்களில் நீர்;
புயங்கப் பெருமான் பூம் கழல்கள்
மிகவே நினைமின்; மிக்கது எல்லாம்[8]
வேண்டா; போக[9] விடுமின்கள்;
நகவே,[10] ஞாலத்து, உள் புகுந்து,
நாயே அனைய நமை ஆண்ட
தகவே[11] உடையான்-தனைச் சாரத்
தளராது[12] இருப்பார் தாம்-தாமே. (2)

8 திருவடிகளைத் தவிர்த்து மற்றவை எல்லாம்
9 அகன்று போக
10 விளக்கம் உண்டாகவே
11 திருவருளாகிய தகுதி
12 பிணங்கிடாது

௩

௩௰௫. தாமே தமக்குச் சுற்றமுந்
தாமே தமக்கு விதிவகையும்
யாமா ரெமதார் பாசமா
ரென்ன மாய மிவைபோகக்
கோமான் பண்டைத் தொண்டரொடு
மவன்றன் குறிப்பே குறிக்கொண்டு
போமா றமைமின் பொய்நீக்கிப்
புயங்க னாள்வான் பொன்னடிக்கே

௪

௩௰௬. அடியா ரானீ ரெல்லீரு
மகல விடுமின் விளையாட்டைக்
கடிசே ரடியே வந்தடைந்து
கடைக்கொண் டிருமின் றிருக்குறிப்பை
செடிசே ருடலைச் செலநீக்கிச்
சிவலோ கத்தே நமைவைப்பான்
பொடிசேர் மேனிப் புயங்கன்றன்
பூவார் கழற்கே புகவிடுமே.

௫

௩௰௭. விடுமின் வெகுளி வேட்கைநோய்
மிகவே கால மினியில்லை
யுடையா னடிக்கீழ்ப் பெருஞ்சாத்தோ
டுடன்போ வதற்கே யொருப்படுமி
னடைவோ நாம்போய்ச் சிவபுரத்து
ளணியார் கதவ தடையாமே
புடைபட் டுருகிப் போற்றுவோம்
புயங்க னாள்வான் புகழ்களையே.

பொய் நீக்கிப் பொன் அடிக்கே செல்வோம்

605. தாமே தமக்குச் சுற்றமும்
தாமே தமக்கு விதிவகையும்;
யாம் ஆர்? எமது ஆர்? பாசம் ஆர்?
என்ன மாயம்? இவை போக,
கோமான்[1] பண்டைத் தொண்டரொடும்,
அவன்-தன் குறிப்பே குறிக்கொண்டு,
போம் ஆறு[2] அமை மின்-பொய் நீக்கி,
புயங்கன்[3] ஆள்வான் பொன் அடிக்கே. (3)

1 இறைவன
2 வழி
3 பாம்பை அணிந்தவன் புயங்கக கூத்தன

அவன் திருக்குறிப்பைக் கடைப்பிடிப்பீராக

606. அடியார் ஆனீர் எல்லீரும்,
அகல விடுமின் விளையாட்டை[4];
கடி[5] சேர் அடியே வந்து அடைந்து,
கடைக்கொண்டு[6] இருமின் திருக்குறிப்பை;
செடி[7] சேர் உடலைச் செல நீக்கி,
சிவலோகத்தே நமை வைப்பான்
பொடி[8] சேர் மேனிப் புயங்கன்-தன்,
பூ ஆர் கழற்கே புகவிடுமே. (4)

4 உலக இன்பத்தில் திளைப்பதாகிய விளையாட்டை
5 மணம்
6 உறுதியாகப் பற்றி
7 தீமை
8 திருநீறு

காலம் இனி இல்லை; ஒருப்படுமின்

607. விடுமின் வெகுளி,[9] வேட்கை[10] நோய்;
மிகவே, காலம் இனி இல்லை;
உடையான் அடிக்கீழ், பெரும் சாத்தோடு[11]
உடன் போவதற்கே ஒருப்படுமின்;
அடைவோம், நாம் போய்ச் சிவபுரத்துள்,
அணி ஆர் கதவு-அது அடையாமே;
புடைபட்டு[12] உருகிப் போற்றுவோம்,
புயங்கன் ஆள்வான் புகழ்களையே. (5)

9 பிறவிக்குக் காரணமாகிய காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று குற்றங்களுள் ஒன்று
10 தணியாத ஆசை
11 கூட்டத்தோடு
12 அருகில் நெருங்கி நின்று

சு

சு௰அ. புகழ்மின் ஏறொழுமின் பூப்புனைமின்
புயங்கன் றுளே புந்திவைத்திட்
டிகழ்மி னெல்லா வல்லலையு
மினியோ ரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்ருள் வணங்கிநாம்
நிகழு மடியார் முன்சென்று
நெஞ்ச முருகி நிற்போமே.

எ

சு௰கூ. நிற்பார் நிற்கநில் லாவுலகி
னில்லோ மினிநாஞ் செல்வோமே
பொற்பா லொப்பாந் திருமேனிப்
புயங்க ளுள்வான் பொன்னடிக்கே
நிற்பீ ரெல்லாந் தாழாதே
நிற்கும் பரிசே யொருப்படுமின்
பிற்பா னின்று பேழ்கணித்தாற்
பெறுதற் கரியன் பெருமானே.

அ

சுக௰. பெருமான் பேரா னந்தத்துப்
பிரியா திருக்கப் பெற்றீர்கா
ளருமா லுற்றுப் பின்னைநீ
ரம்மா வழுங்கி யரற்றுதே
திருமா மணிசேர் திருக்கதவந்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமா லறியாத் திருப்புயங்கன்
றிருத்தாள் சென்று சேர்வோமே.

நெஞ்சம் உருகி நிற்போம்

608. புகழ்மின் ;[1] தொழுமின் ;[2] பூப் புனைமின் ;[3]
புயங்கன்[4] தாளே[5] புந்தி[6] வைத்திட்டு,
இகழ்மின்[7] எல்லா அல்லலையும் ;[8]
இனி, ஓர் இடையூறு அடையாமே,
திகழும்[9] சீர் ஆர் சிவபுரத்துச்
சென்று, சிவன் தாள் வணங்கி, நாம்,
நிகழும்[10] அடியார் முன் சென்று,
நெஞ்சம் உருகி, நிற்போமே. (6)

1 போற்றுங்கள்
2 வணங்குங்கள்
3 மலர் சாத்துங்கள்
4 பாம்பை அணிந்தவன
5 திருவடியையே
6 புத்தி
7 வெறுத்து உதறுங்கள்
8 நிலையா உலகத்துத் துன்பங்களையும்
9 விளங்கும்
10 (திருத்தொண்டில் உறைத்துத்) தங்கி நிற்கும,

நில்லா உலகில் நில்லோம்

609. நிற்பார்[11] நிற்க ; நில்லா உலகில்
நில்லோம் ; இனி, நாம் செல்வோமே ;
பொற்பால்[12] ஒப்பாம் திரு மேனிப்
புயங்கன் ஆள்வான் பொன் அடிக்கே
நிற்பீர் எல்லாம், தாழாதே,[13]
நிற்கும் பரிசே, ஒருப்படுமின் ;
பிற்பால் நின்று, பேழ்கணித்தால்,[14]
பெறுதற்கு அரியன், பெருமானே. (7)

11 (நிலையற்ற வாழ்வில் மயங்கி) நிற்பவர்
12 பொன்னின் பகுதி (நிறம்) அழகால
13 காலம் தாழ்க்காமல்
14 (பெறவேண்டும் என்று ஆசைப்பட்டு) வருந்தினால்

திருக்கதவம் திறந்துள்ளது

610. பெருமான் பேர்–ஆனந்தத்துப
பிரியாது இருக்கப் பெற்றீர்காள்,
அரு மால்[15] உற்றுப் பின்னை நீர்,
அம்மா ! அழுங்கி[16] அரற்றுதே[17]
திரு மா மணி சேர் திருக்கதவம்
திறந்தபோதே, சிவபுரத்து,
திருமால் அறியாத் திருப் புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே. (8)

15 மயக்கம்
16 மனம் புழுங்கி
17 கதறுதே

கூ

சுகக. சேரக் கருதிச் சிந்தனையைத்
திருந்த வைத்துச் சிந்திமின்
போரிற் பொலியும் வேற்கண்ணாள்
பங்கன் புயங்க னருளமுத
மாரப் பருகி யாராத
வார்வங் கூர வழுந்துவீர்
போரப் புரிமின் சிவன்கழற்கே
பொய்யிற் கிடந்து புரளாதே.

ம

சுகஉ. புரள்வார் தொழுவார் புகழ்வாரா
யின்றே வந்தா ளாகாதீர்
மருள்வீர் பின்னை மதிப்பாரார்
மதியுட் கலங்கி மயங்குவீர்
தெருள்வீ ராகி லிதுசெய்ம்மின்
சிவலோ கக்கோன் றிருப்புயங்க
னருளார் பெறுவா ரகலிடத்தே
யந்தோ வந்தோ வந்தோவே

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தாறுவது

திருப்படையெழுச்சி

பிரபஞ்சப்போர்

கலிவிருத்தம்

க

சுகங. ஞானவா ளேந்துமையர் நாதப் பறையறைமின்
மானமா வேறுமையர் மதிவெண் குடைகவிமி
னானீற் றுக்கவச மடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோநா மாயப்படை வாராமே.

உ

சுகச. தொண்டர்கா ளூசிசெல்லீர் பத்தர்காள் சூழப்போகீ
ரொண்டிறல் யோகிகளே பேரணி யுந்தீர்க
டிண்டிறற் சித்தர்களே கடைக்கூழை சென்மின்க
ளண்டர்நா டாள்வோநா மல்லற்படை வாராமே.

திருச்சிற்றம்பலம்

பொய்யை விட்டுச் செல்வோம்

611. சேரக்[1] கருதி, சிந்தனையைத்
திருந்தவைத்து, சிந்திமின் ;
போரில் பொலியும் வேல் கண்ணாள்[2]
பங்கன்,[3] புயங்கன், அருள் அமுதம்
ஆரப் பருகி ஆராத
ஆர்வம் கூர அழுந்துவீர் !
போரப்[4] புரிமின்[5] சிவன் கழற்கே,
பொய்யில் கிடந்து புரளாதே. (9)

1 (இறைவன் திருவடியை) சேர
2 போரில் விளங்கும் வேல் போன்ற கண்ணை யுடையவள் – உமையம்மை
3 பாகத்தில் உடையவன்– சிவபெருமான்
4 போத, போக, செல்ல
5 விருமபுமின்

இன்றே வந்து ஆள் ஆகாதீர் மருள்வீர்

612. புரள்வார், தொழுவார், புகழ்வார் ஆய்,[6]
இன்றே வந்து, ஆள் ஆகாதீர்,
மருள்வீர்[7] ; பின்னை, மதிப்பார் ஆர் ?
மதியுள் கலங்கி, மயங்குவீர் ;
தெருள்வீர் ஆகில்,[8] இது செய்மின் ;
சிவலோகக் கோன், திருப்புயங்கன்[9]
அருள் ஆர் பெறுவார், அகல் இடத்தே ?
அந்தோ ! அந்தோ ! அந்தோவே ![10] (10)

6 இறைவனிடம் அன்பு மேலிட்டார் செயல்
7 மயங்குவீர்
8 தெளிவு உடையவர்களானால்
9 பாம்பையணிந்தவன்
10 ஐயோ! ஐயோ! ஐய்யோ;

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தாறுவது

திருப்படை எழுச்சி

மாயையை வெல்வோம் : வானத்தைக் கொள்வோம்

613. ஞான வாள் ஏந்தும் ஐயர் நாதப் பறை அறைமின்[11]
மானமா ஏறும் ஐயர் மதி வெண்குடை[12] கவிமின் ;[13]
ஆன நீற்றுக் கவசம்[14] அடையப் புகுமின்கள் ;
வான ஊர்[15] கொள்வோம் நாம்–மாயப் படை[16] வாராமே. (1)

அல்லலை வெல்வோம்: அண்டர் நாடு ஆள்வோம்

614. தொண்டர்காள், தூசி செல்லீர்[17] ; பத்தர்காள், சூழப் போகீர்
ஒண் திறல் யோகிகளே, பேர்–அணி[18] உந்தீர்கள்[19] ;
திண் திறல் சித்தர்களே[20], கடைக்கூழை[21] செல்மின்கள்
அண்டர் நாடு[22] ஆள்வோம் நாம்–அல்லல்–படை[23] வாராமே. (2)

11 அறியாமையை வீசி எறியும் ஞானமாகிய வாளை ஏந்தும் நம் தலைவனுடைய நாதப் பறையைச்சாற்றுவீராக
12 திங்களைபோன்ற வெண் கொற்றக்குடை
13 பிடிப்பீராக
14 திருநீறாகிய காப்பாற்றும் மேற்போர்வை, மெய்புகு கருவி
15 வீட்டுலகம்
16 மாயையாகிய படை
17 முன்னணியிற் செல்லுங்கள்
18 பெரும்படை
19 செலுத்துங்கள்
20 திருவருளைப் பெற்றவர்களே
21 பின் அணியில்
22 வானுலகம்
23 துன்பமாகிய படை

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தேழாவது

திருவெண்பா

அணைந்தோர் தன்மை

நேரிசை வெண்பா

க

சுகரு. வெய்ய வினையிரண்டும் வெந்தகல மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்—செய்ய
திருவார் பெருந்துறையான் றேனுந்து செந்தீ
மருவா திருந்தேன் மனத்து.

உ

சுகசு. ஆர்க்கோ வரற்றுகோ வாடுகோ பாடுகோ
பார்க்கோ பரமபரனே யென்செய்கேன்—தீர்ப்பரிய
வானந்த மாலேற்று மத்தன் பெருந்துறையான்
தானென்பா ராரொருவர் தாழ்ந்து.

ங

சுகஎ. செய்த பிழையறியேன் சேவடியே கைதொழுதே
யுய்யும் வகையி னுயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள் வேன்மடுத்தென் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையின் மேய பிரான்.

ச

சுகஅ. முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்—றென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரந் தீர்க்கு மருந்து.

ரு

சுகசு. அறையோ வறிவார்க் கனைத்துலகு மீன்ற
மறையோனு மாலு மறியா—விறையோன்
பெருந்துறையுண் மேய பெருமான் பிரியா
திருந்துறையு மென்னெஞ்சத் தென்று.

சு

சுஉய. பித்தென்னை யேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதா
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையா னாட்கொண்டு பேரருளா னேக்கு
மருந்திறவாப் பேரின்பம் வந்து.

நாற்பத்தேழாவது

திரு வெண்பா

பொய் ஒழியவில்லையே! என் செய்வேன் ?

615. வெய்ய[1] வினை இரண்டும் வெந்து[2]அகல, மெய்[3] உருகி
பொய்யும்[4]பொடி[5] ஆகாது ; என் செய்கேன் ?–செய்ய
திரு ஆர் பெருந்துறையான் தேன் உந்து செந்தீ[6]
மருவாது[7] இருந்தேன் மனத்து. (1)

உடன் இருப்பார் ஒருவரையும் காணேம்

616. ஆர்க்கோ ?[8]அரற்றுகோ ?[9]ஆடுகோ ? பாடுகோ ?
பார்க்கோ? பரம்பரனே, என்செய்கேன்?–தீர்ப்பு- அரிய[10]
ஆனந்த மால்[11]ஏற்றும் அத்தன்,'பெருந்துறையான்-
தான்' என்பார் ஆர் ஒருவர் தாழ்ந்து ? (2)

உய்யும் வகை அறியேன்

617. செய்த பிழை அறியேன் ; சேவடியே, கை தொழுதே,
உய்யும்[12]வகையின் உயிர்ப்பு[13] அறியேன் -வையத்து
இருந்து, உறையுள் வேல் மடுத்து, என் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். (3)

பேராளன் முன் நின்றான்

618. முன்னை வினை இரண்டும் வேர் அறுத்து, முன் நின்றான்
பின்னைப் பிறப்பு அறுக்கும் பேராளன்;-தென்னன்[14]
பெருந்துறையில் மேய பெருங் கருணையாளன் ;
வரும் துயரம் தீர்க்கும் மருந்து. (4)

என் நெஞ்சத்து உறைவான்

619. அறையோ,[15] அறிவார்க்கு? அனைத்து உலகும் ஈன்ற
மறையோனும்[16],மாலும், அறியா - இறையோன் ;
பெருந்துறையுள் மேய பெருமான் ; பிரியாது
இருந்து உறையும், என் நெஞ்சத்து என்று. (5)

பேரின்பம் பெற்றேன்

620. பித்து[17]என்னை ஏற்றும் ; பிறப்பு அறுக்கும் ; பேச்சு அரிது ஆம்
மத்தமே[18]ஆக்கும், வந்து, என் மனத்தை;–அத்தன்,
பெருந்துறையான், ஆட்கொண்டு பேர் அருளால் நோக்கும்
மருந்து, இறவாப் பேரின்பம், வந்து. (6)

1 வெம்மையைத் தருகிற, அழலுகின்ற
2 எரிந்து, சாம்பலாகி
3 உடல்
4 பொய்யான பற்றுக்களெல்லாம்
5 மண்
6 தேன்போலும இனிமையை அடியவா உள்ளத்தில் செலுததும் செஞ்சுடர் - சிவபெருமானை
7 அணைததுக கொள்ளாது
8 ஆரவாரம் செய்வேனோ
9 அலறுவேனோ
10 நீஙகாத
11 சிவானந்தக் களிப்பு
12 கடைத்தேறும்
13 செயலற்று நிற்கும் நிலை
14 சிவபெருமானை
15 சொல்லவோ?
16 பிரமனும்
17 சிவஞானப்பித்து
18 பேசுவதும் நின்ற உன் மத்தம்

எ

சாஉக. வர்ரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
யாரா வமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தன் பெருந்துறையா னென்சிந்தை மேய
வொருத்தன் பெருக்கு மொளி.

அ

சாஉஉ. யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான்
யாவர்க்குங் கீழா மடியேனை—யாவரும்
பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை.

கூ

சாஉங. மூவரு முப்பத்து மூவரு மற்றொழிந்த
தேவருங் காணாச் சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்த வார்கழல்கள் வந்திக்க
மெய்யகத்தே யின்ப மிகும்.

கய

சாஉச. இருந்தென்னை யாண்டா னிணையடியே சிந்தித்
திருந்திரந்து கொண்ணெஞ்சே யெல்லாந்—தருங்காண்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
மருந்துருவா யென்மனத்தே வந்து.

கக

சாஉரு. இன்பம் பெருக்கி யிருளகற்றி யெஞ்ஞான்றுந்
துன்பந் தொடர்வறுத்துச் சோதியா—யன்பமைத்துச்
சீரார் பெருந்துறையா னென்னுடைய சிந்தையே
யூராகக் கொண்டா னுவந்து.

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தெட்டாவது

பண்டாய நான்மறை

அனுபவத்துக்கையமின்மை யுரைத்தல்

நேரிசை வெண்பா

க

சாஉசா. பண்டாய நான்மறையும் பாலணுகா மாலயனுங்
கண்டாரு மில்லைக் கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
யுண்டாமோ கைம்மா றுரை.

பெருந்துறையான் பேரொளி

621. வாரா வழி[1] அருளி வந்து, எனக்கு மாறு இன்றி,[2]
ஆரா அமுதாய் அமைந்தன்றே-சீர் ஆர்
திருத்தன்[3] பெருந்துறையான், என் சிந்தைமேய
ஒருத்தன்,[4] பெருக்கும் ஒளி.[5] (7)

1 பிறவியில் வாராத வழி
2 மாறுத தன்மையதாய்
3 தூயவன், அடைந்தாரைத் தூயராக்குவோன்
4 தனிப்பட்ட பெரியோன்
5 ஞான ஒளி

கைம்மாறு என்?

622. யாவர்க்கும் மேல் ஆம் அளவு இலாச் சீர் உடையான்,
யாவர்க்கும் கீழ் ஆம் அடியேனை, யாவரும்
பெற்று அறியா இன்பத்துள் வைத்தாய்க்கு, என் எம்பெருமான்!–
மற்று அறியேன் செய்யும் வகை. (8)

வையகத்து வந்தான்

623. மூவரும்,[6] முப்பத்து மூவரும்,[7] மற்று ஒழிந்த
தேவரும், காணாச் சிவபெருமான் மா ஏறி,[8]
வையகத்தே வந்திழிந்த வார் கழல்கள்[9] வந்திக்க,[10]
மெய்யகத்தே இன்பம் மிகும். (9)

6 மும்மூர்த்திகளும்
7 பதினொரு உருத்திரர், பன்னிரண்டு சூரியர், இரண்டு அச்சுவினி தேவர், எட்டு வசுக்கள்.
8 குதிரை ஏறி
9 திருவடிகளை
10 வணங்க

எல்லாம் தரும்

624. இருந்து என்னை ஆண்டான் இணை-அடியே சிந்தித்து
இருந்து, இரந்துகொள், நெஞ்சே! எல்லாம் தரும்காண்–
பெருந்துறையில் மேய பெரும் கருணையாளன்,
மருந்து[11] உருவாய், என் மனத்தே, வந்து. (10)

11 ஞான அமிழ்தம்

என் சிந்தையே அவன் விரும்பும் பதி

725. இன்பம் பெருக்கி, இருள்[12] அகற்றி, எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வு அறுத்து, சோதி[13] ஆய், அன்பு அமைத்து,
சீர் ஆர் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊர்[14] ஆகக் கொண்டான், உவந்து. (11)

12 அறியாமையாகிய இருள்
13 ஞான ஒளி
14 தங்கும் இடம்

திருச்சிற்றம்பலம்

நாற்பத்தெட்டாவது

பண்டு ஆய நான்மறை

கண்டவர் யாவர்? என்னைத் தொண்டு கொண்டான்

626. பண்டு ஆய நான் மறையும்[15] பால் அணுகா; மால், அயனும்,
கண்டாரும் இல்லை; கடையேனைத் தொண்டு ஆகக்
கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு,[16] நெஞ்சமே!
உண்டாமோ கைம்மாறு? உரை. (1)

15 பழமையாகிய நான்கு மறைகளும்
16 இறைவனுக்கு – சிவபெருமானுக்கு

௨

௬௨௭. உள்ள மலமூன்று மாய வுகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பரியின் மேல்வந்த-வள்ளன்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு

௩

௬௨௮ காட்டகத்து வேடன் கடலில் வலைவாண
ஞட்டிற் பரிப்பாக னம்வினையை-வீட்டி
யருளும் பெருந்துறையா னங்கமல பாத
மருளுங் கெடநெஞ்சே வாழ்த்து.

௪

௬௨௯, வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாருந்
தாழ்ந்துலக மேத்தத் தகுவாருஞ்-சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி யேத்துந் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி யேத்து நமர்.

௫

௬௩0. நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
வெண்ணி யெழுகோ கழிக்கரைசைப்-பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

௬

௬௩௧. காணுங் கரணங்க ளெல்லாம்பே ரின்பமெனப்
பேணு மடியார் பிறப்பகலக்-காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையி லென்றும்
பிரியானை வாயாரப் பேசு.

௭

௬௩௨. பேசும் பொருளுக் கிலக்கிதமாய் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை-பேசிப்
பெருந்துறையே யென்று பிறப்பறுத்தே னல்ல
மருந்தினடி யென்மனத்தே வைத்து.

திருச்சிற்றம்பலம்.

வாழ்த்துவார் பிறவிக்காடு வேரோடு கெடும்

627. உள்ள மலம் மூன்றும்[1] மாய, உகுபெரும் தேன்
வெள்ளம் தரும், பரியின்[2] மேல் வந்த, வள்ளல்[3]
மருவும்[4] பெருந்துறையை வாழ்த்துமின்கள்; வாழ்த்த,
கருவும்[5] கெடும், பிறவிக் காடு. (2)

1 பிறவிக்குக் காரண மாகிய மூன்று மலம் ஆணவம், கன்மம், மாயை.
2 குதிரையின
3 வரையாது கொடுப்போன்
4 அமர்ந்து உறையும்
5 வேரும

அவன் திருவடியை வாழ்த்து

628. காட்டகத்து வேடன், கடலில் வலை வாணன்,
நாட்டில் பரிப் பாகன், நம் வினையை வீட்டி
அருளும் பெருந்துறையான் அம்-கமல பாதம்,[6]
மருளும்[7] கெட, நெஞ்சே! வாழ்த்து. (3)

6 திருவடித் தாமரை
7 அறியாமையும்

இறைஞ்சுவாரை யாவரும் இறைஞ்சுவார்

629. வாழ்ந்தார்கள் ஆவாரும், வல்வினையை மாய்ப்பாரும்,
தாழ்ந்து உலகம் ஏத்தத் தகுவாரும்-சூழ்ந்து அமரர்
சென்று, இறைஞ்சி, ஏத்தும் திரு ஆர் பெருந்துறையை,
நன்று இறைஞ்சி ஏத்தும் நமர். (4)

அவனை எண்ணு : இடர் அகலும்

630. நண்ணி[8] பெருந்துறையை, நம் இடர்கள் போய் அகல,
எண்ணி எழு[9] -கோகழிக்கு அரசை, பண்ணின்
மொழியாளோடு உத்தரகோசமங்கை மன்னிக்
கழியாது[10] இருந்தவனை, காண். (5)

8 அடைந்து
9 உள்ளத்தில் எண்ணி எழுச்சிகொள
10 நீங்காது

எல்லாம் பேரின்பம்–வாயாரப் பேசு

631. காணும் கரணங்கள்[11] எல்லால் பேரின்பம் என,
பேணும்[12] அடியார் பிறப்பு அகல, காணும்[13]
பெரியானை, நெஞ்சே! பெருந்துறையில் என்றும்
பிரியானை, வாய் ஆரப் பேசு. (6)

11 கருவிகள்
12 போற்றும்
13 அருளும், அருள் நோக்கம் கொள்ளும்

மனத்து அமர்ந்த மருந்து

632. பேசும் பொருளுக்கு இலக்கிதம்[14] ஆய், பேச்சு இறந்த
மாசு இல் மணியின் மணி வார்த்தை பேசி,
பெருந்துறையே என்று, பிறப்பு அறுத்தேன்-நல்ல
மருந்தின்[15] அடி என் மனத்தே வைத்து. (7)

14 குறி
15 தேவாமிழ்தம் போலும் சிவபெருமான்

திருச்சிற்றம்பலம்.

நாற்பத்தொன்பதாவது

திருப்படையாட்சி

சீவோபாதி யொழிதல்

ஆசிரிய விருத்தம்

க

௬௩௩. கண்க ளிரண்டு மவன்கழல் கண்டு களிப்பன வாகாதே
காரிகை யார்கடம் வாழ்விலென் வாழ்வு கடைப்படு மாகாதே
மண்களில் வந்து பிறந்திடு மாறு மறந்திடு மாகாதே
மாலறி யாமலர்ப் பாத மிரண்டும் வணங்குது மாகாதே
பண்களி கூர்தரு பாடலொ டாடல் பயின்றிடு மாகாதே
பாண்டிநன் னாடுடை யான்படை யாட்சிகள் பாடுது மாகாதே
விண்களி கூர்வதோர் வேதகம் வந்து வெளிப்படு மாகாதே
மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படு மாயிடிலே.

உ

௬௩௪. ஒன்றினொ டொன்றுமோ ரைந்தினொ டைந்துமு யிர்ப்பது மாகாதே
யுன்னடி யாரடி யாரடி யோமென வுய்ந்தன வாகாதே
கன்றை நினைந்தெழு தாயென வந்த கணக்கது வாகாதே
காரண மாகு மனாதி குணங்கள் கருத்துறு மாகாதே
நன்றிது தீதென வந்த நடுக்க நடந்தன வாகாதே
நாமுமே லாமடி யாருட னேசெல நண்ணுது மாகாதே
யென்றுமெ னன்பு நிறைந்த பராவமு தெய்துவ தாகாதே
யேறுடை யானெனை யாளுடை நாயக னென்னுள்புகுந் திடிலே.

௩

௬௩௫. பந்தவி கார குணங்கள் பறிந்து மறிந்திடு மாகாதே
பாவனை யாய கருத்தினில் வந்த பராவமு தாகாதே
யந்தமி லாத வகண்டமு நம்மு ளகப்படு மாகாதே
யாதி முதற்பர மாய பரஞ்சுட ரண்ணுவ தாகாதே
செந்துவர் வாய்மட வாரிட ரானவை சிந்திடு மாகாதே
சேலன கண்க ளவன்றிரு மேனி திளைப்பன வாகாதே
யிந்திர ஞால விடர்ப்பிற வித்துய ரேகுவ தாகாதே
யென்னுடை நாய கனாகிய வீச னெதிர்ப்படு மாயிடிலே.

நாற்பத்தொன்பதாவது

திருப்படை ஆட்சி

அவன் தோன்றுவானேல்

633. கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ; ஆகாதே?[1]
காரிகையார்கள்-தம் வாழ்வில்[2] என் வாழ்வு கடைப்படும்;[3] ஆகாதே?
மண்களில் வந்து பிறந்திடும் ஆறு[4] மறந்திடும்;[5] ஆகாதே?
மால் அறியா மலர்ப்பாதம் இரண்டும் வணங்குதும்; ஆகாதே?
பண் களிகூர் தரு பாடலொடு ஆடல் பயின்றிடும்; ஆகாதே?
பாண்டி நல்நாடு உடையான் படை-ஆட்சிகள் பாடுதும்; ஆகாதே?
விண் களி கூர்வது ஓர் வேதகம்[6] வந்து, வெளிப்படும்; ஆகாதே?- (1)
மீன் வலை வீசிய கானவன் வந்து, வெளிப்படும் ஆயிடிலே!

ஆண்ட அண்ணல் உள் புகுவானேல்

634. ஒன்றினொடு ஒன்றும்,[7] ஓர் ஐந்தினொடு ஐந்தும்,[8] உயிர்ப்பதும்;[9] ஆகாதே?
உன் அடியார் அடியார் அடியோம் என உய்ந்தன ; ஆகாதே?
கன்றை நினைந்து எழு தாய் என வந்த கணக்கு[10]-அதும்; ஆகாதே?
காரணம் ஆகும் அனுதி[11] குணங்கள்[12] கருத்து உறும்;[13] ஆகாதே?
நன்று, இது; தீது என வந்த நடுக்கம்[14] நடந்தன;[15] ஆகாதே?
நாமும் மேல் ஆம் அடியாருடனே செல,[16] நண்ணுதும்;[17] ஆகாதே?
என்றும் என் அன்பு நிறைந்த பரா-அமுது எய்துவது; ஆகாதே?-
ஏறு உடையான், எனை ஆளுடை நாயகன், என்னுள் புகுந்திடிலே! (2)

நாயகன் எதிர்ப்படுமாகில்

635. பந்த-விகார குணங்கள்[18] பறிந்து மறிந்திடும்;[19] ஆகாதே?
பாவனை ஆய கருத்தினில் வந்த பரா-அமுது; ஆகாதே?
அந்தம் இலாத அகண்டமும் நம்முள் அகப்படும்[20] ஆகாதே?
ஆதிமுதல் பரம் ஆய பரம் சுடர் அண்ணுவது[21] ஆகாதே?
செம் துவர் வாய் மடவார் இடர் ஆனவை சிந்திடும்;[22] ஆகாதே?
சேல் அன கண்கள்[23] அவன் திருமேனி திளைப்பன;[24] ஆகாதே?
இந்திர-ஞால[25] இடர்ப் பிறவித்துயர் ஏகுவது;[26] ஆகாதே?-
என்னுடை நாயகன் ஆகிய ஈசன் எதிர்ப்படும் ஆயிடிலே! (3)

1 ஆகாதோ? ஆகும்
2 வாழவோடு கூடிய
3 முடிவடையும்
4 மாறிமாறிப் பிறந்து இறக்கும் பிறவித் தொடரின வழி
5 ஒழிந்திடும்
6 தாழ்ந்ததை உயர்ந்ததாக மாற்றும் பொருள், மாசகன்ற செம்பொன.
7 உடலோடு உயிரும்
8 ஐம்பொறியோடு ஐம்புலனும்
9 செயலறுதலும்
10 தோன்றிய அருளும்
11 எல்லாவற்றிற்கும் காரணமாகிய தோற்றம் முடிவில்லாத இறைவனது
12 பண்புகள்
13 உள்ளத்தில் பதியும்
14 அச்சம்
15 அகன்றன
16 நல்நெறியில் செல்ல
17 நெருங்குவதும்
18 பாசத் தொடர்பினால் தோன்றும் பல வேறுபாடான இயல்புகள்
19 வேரோடு களைந்தெறியப்பட்டு ஒழிந்திடும்
20 பரவெளியும் நம் உள்ளத்தின் உள்ளாகும்
21 மேலான முதற்பொருள் ஒப்பற்ற ஒளியாக நம்மை அணுகுவதும்
22 ஒழிந்துபோம்
23 அடியார்களுடைய கண்கள் (நயன தீக்ஷை)
24 ஈடுபட்டுக் களிப்பன
25 மாயையின் செயலான
26 விலகுவது

௪

௬௩௬. என்னணி யார்முலை யாக மளைந்துட னின்புறு மாகாதே
யெல்லையின் மாக்கரு ணைக்கட லின்றினி தாடுது மாகாதே
நன்மணி நாத முழங்கியெ னுள்ளுற நண்ணுவ தாகாதே
நாத னணித்திரு நீற்றினை நித்தலு நண்ணுவ தாகாதே
மன்னிய வன்பரி லென்பணி முந்துற வைகுவ தாகாதே
மாமறை யும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
யின்னியற் செங்கழு நீர்மல ரென்றலை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப்பெரு மானரு ளீசனெ ழுந்தரு ளப்பெறிலே.

௫

௬௩௭. மண்ணினின் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
வானவ ரும்மறி யாமலர்ப் பாதம் வணங்குது மாகாதே
கண்ணிலி கால மனைத்தினும் வந்த கலக்கறு மாகாதே
காதல் செயும்மடி யார்மன மின்றுக ளித்திடு மாகாதே
பெண்ணலி யாணென நாமென வந்த பிணக்கறு மாகாதே
பேரறி யாத வனேக பவங்கள் பிழைத்தன வாகாதே
யெண்ணிலி யாகிய சித்திகள் வந்தெனை யெய்துவ தாகாதே
யென்னை யுடைப்பெரு மானரு ளீச னெழுந்தருளப்பெறிலே.

௬

௬௩௮. பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து பொழிந்திடு மாகாதே
மின்னிய னுண்ணிடை யார்கள் கருத்து வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழு மோசையி லின்ப மிகுந்திடு மாகாதே
தன்னடி யாரடி யென்றலை மீது தழைப்பன வாகாதே
தானடி யோமுட னேயுய வந்து தலைப்படு மாகாதே
யின்னிய மெங்கு நிறைந்தினி தாக வியம்பிடு மாகாதே
யென்னைமு ழுளுடை யீச னெனத்தனெழுந்தருளப் பெறிலே.

உடையான் எழுந்தருளுவானேல்

636. என் அணி ஆர் முலை ஆகம்[1] அளைந்து,[2] உடன் இன்புறும்;[3] ஆகாதே?
எல்லை இல் மாக் கருணைக் கடல்[4] இன்று இனிது ஆடுதும்;[5] ஆகாதே?
நல் மணி நாதம்[6] முழங்கி, என் உள் உற,[7] நண்ணுவது; ஆகாதே?
நாதன் அணித்திரு நீற்றினை நித்தலும் நண்ணுவது;[8] ஆகாதே?
மன்னிய அன்பரில் என் பணி[9] முந்துற வைகுவது;[10] ஆகாதே?
மா மறையும் அறியா மலர்ப் பாதம்[11] வணங்குதும்; ஆகாதே?
இன் இயல் செங்கழுநீர் மலர்[12] என் தலை எய்துவது;[13] ஆகாதே?-
என்னை உடைப் பெருமான், அருள் ஈசன் எழுந்தருளப் பெறிலே! (4)

1 இறைவனுடைய திருமேனி
2 படிந்து
3 ஒத்த இன்பத்தைப் பெறும்
4 திருவருட் கடல்
5 இனிமையாக ஆடுவதும் முழுகுவதும்
6 இனிய மணி ஓசை போன்ற அருள் உணர்வு
7 என் உள்ளத்திலே தோன்றி அமைவது
8 பூசுவது
9 என் தொண்டு
10 முன்னாக அமைவது
11 திருவடி மலர்
12 அவன் அணியும் மாலையிலுள்ள செங்கழுநீர் மலர்
13 பொருந்துவது

கணக்கில்லாத காலமாக வந்த கலக்கம் தீர்ந்தது

637. மண்ணினில் மாயை மதித்து,[14] வகுத்த மயக்கு அறும்;[15] ஆகாதே?
வானவரும் அறியா மலர்ப் பாதம் வணங்குதும்; ஆகாதே?
கண் இலி காலம்[16] அனைத்திலும் வந்த கலக்கு அறும்;[17] ஆகாதே?
காதல் செயும் அடியார் மனம் இன்று களித்திடும்; ஆகாதே?
பெண், அலி, ஆண், என, நாம் என, வந்த பிணக்கு[18] அறும்; ஆகாதே?
பேர் அறியாத[19] அனேக பவங்கள்[20] பிழைத்தன[21] ஆகாதே?
எண் இலி ஆகிய சித்திகள் வந்து, எனை எய்துவது; ஆகாதே?-
என்னை உடைப் பெருமான், அருள் ஈசன், எழுந்தருளப் பெறிலே! (5)

14 மாயையை உண்மையென உள்ளங் கொண்டு
15 பிரிவு செய்த தெளிவில்லாத தீய செயலெல்லாம் ஒழியும்
16 திருவருட் பார்வை பெறாது குருடனாகக் கழிந்த காலம்
17 துன்பம் ஒழியும்
18 மாறுபாடுகள்
19 பெயரளவிலும் அறியக்கூடாத
20 இனி வரக்கடவதான பல பிறப்புகளையும்
21 தப்பித்துக் கொண்டது

அடியார் அடி என் தலைமேல் தழைப்பன

638. பொன் இயலும் திருமேனி வெண்ணீறு பொலிந்திடும்;[22] ஆகாதே?
பூமழை, மாதவர் கைகள் குவிந்து, பொழிந்திடும்[23] ஆகாதே?
மின் இயல் நுண் இடையார்கள் கருத்து[24] வெளிப்படும்;[25] ஆகாதே?
வீணை முரன்று எழும் ஓசையில் இன்பம் மிகுத்திடும்;[26] ஆகாதே?
தன் அடியார் அடி என் தலை மீது தழைப்பன; ஆகாதே?
தான் அடியோமுடனே உயவந்து, தலைப்படும்;[27] ஆகாதே?
இன் இயம்[28] எங்கும் நிறைந்து, இனிது ஆக இயம்பிடும்;[29] ஆகாதே?-
என்னை முன் ஆளுடை ஈசன், என் அத்தன், எழுந்தருளப் பெறிலே! (6)

22 திருநீற்றுப் பொலிவுடன் பொன் மேனி திகழ்தலும்
23 அடியார்கள் கைகள் அஞ்சலியுடன் பூமழை பொழியும்
24 மின்போலும் இடையுடைய மெல்லியலார் மேல் கொண்ட இச்சை
25 வெளியே சென்றுவிடும், புறப்படும், நிற்காது ஒழியும்
26 உள்ளத்தில் இனிய தெய்வ ஒலிகள் எழுந்து இனிமை தரும்
27 கூடும், கலக்கும்
28 இனிய ஓசை
29 எங்கும் இன்பம் தழைக்கும்

௭

௬௩௯. சொல்லிய லாதெழு தூமணி யோசை சுவைதரு மாகாதே
துண்ணென வென்னுள மன்னிய சோதி தொடர்ந்தெழு மாகாதே
பல்லியல் பாய பரப்பற வந்த பராபர மாகாதே
பண்டறி யாத பரானு பவங்கள் பரந்தெழு மாகாதே
வில்லிய னன்னுத லார்மய லின்று விளைந்திடு மாகாதே
விண்ணவ ரும்மறி யாத விழுப்பொரு ளிப்பொரு ளாகாதே
யெல்லையி லாதன வெண்குண மானவை யெய்திடு மாகாதே
யிந்து சிகாமணி யெங்களை யாள வெழுந்தருளப் பெறிலே

௮

௬௪௰. சங்கு திரண்டு முரன்றெழு மோசை தழைப்பன வாகாதே
சாதி விடாத குணங்கணம் மோடு சலித்திடு மாகாதே
யங்கிது நன்றிது நன்றெனு மாயை யடங்கிடு மாகாதே
யாசையெ லாமடி யாரடி யோமெனு மத்தனை யாகாதே
செங்கய லொண்கண் மடந்தையர் சிந்தை திளைப்பன வாகாதே
சீரடி யார்கள் சிவானு பவங்க டெரிந்திடு மாகாதே
யெங்கு நிறைந்தமு தூறு பரஞ்சுட ரெய்துவ தாகாதே
யீறறி யாமறை யோனெனை யாள வெழுந்தருளப் பெறிலே.

திருச்சிற்றம்பலம்.

அறியாத அனுபவங்கள்

639. சொல் இயலாது எழுதா மணிஓசை சுவைதரும்;[1] ஆகாதே ?
துண் என என் உளம் மன்னிய சோதிதொடர்ந்து எழும்;[2]
ஆகாதே ?
பல் இயல்பு ஆய பரப்பு அறவந்த பரா-பரம்;[3] ஆகாதே ?
பண்டு அறியாத பர-அனுபவங்கள் பரந்து எழும்;[4]
ஆகாதே ?
வில் இயல் நல்நுதலார் மயல்[5] இன்று விளைந்திடும்;[6]
ஆகாதே ?
விண்ணவரும் அறியாத விழுப் பொருள்[7] இப்பொருள் ;
ஆகாதே ?
எல்லை இலாதன எண் குணம்[8] ஆனவை எய்திடும் ;
ஆகாதே ? –
இந்து சிகாமணி[9] எங்களை ஆள, எழுந்தருளப்பெறிலே ! (7)

1 சொல்லுக் கடங்காத இனியதெய்வீகஒலி யைக் கேட்டு இன் புறக் கூடும்
2 உள்ளத்தில் ஞான ஒளி எழும்
3 பலவகையான மன விரிவு ஒழிய வந்த மேலான மேன்மை
4 அறியாத பல உணர்ச்சிகள் நிறைந்து எழும்
5 மையல்
6 விளைந்திடும்? கேடு றுமு? முதிர்ந்து விழுந்திடும்? ஒழிந் திடுமே?
7 மேலான பொருள
8 இறைவனது எட்டு குணங்கள்
9 திங்களை விளங்கும் திருமுடியான – சிவபெருமான்

எங்கும் நிறைந்து அமுதம் ஊறும் ஒலியும் ஒளியும்

640. சங்கு திரண்டு, முரன்று எழும் ஓசை தழைப்பன;[10]
ஆகாதே ?
சாதிவிடாத குணங்கள் நம்மோடு சலித்திடும்;[11] ஆகாதே ?
அங்கு இது நன்று, இது நன்று, எனும் மாயை
அடங்கிடும்[12] ஆகாதே ?
ஆசை எலாம், அடியார் அடியோம் எனும் அத்தனை;[13]
ஆகாதே ?
செம் கயல் ஒண் கண் மடந்தையர் சிந்தை திளைப்பன;[14]
ஆகாதே ?
சீர் அடியார்கள் சிவ-அனுபவங்கள் தெரிந்திடும் ;[15]
ஆகாதே ?
எங்கும் நிறைந்து, அமுது ஊறு, பரம்-சுடர் எய்துவது;
ஆகாதே ? –
ஈறு அறியா மறையோன் எனை ஆள, எழுந்தருளப்
பெறிலே ! (8)

10 மிகுவன
11 வெறுப்புற்றுப் பிரிந்துவிடுமே
12 இருவினையும் அடங் கிவிடும்
13 அவ்வளவே– அதற்குமேலில்லை
14 மகிழ்வன
15 அடியவர்கள் தோய்ந்து இன்பு றும் சிவனருட் பேருணர்வும இன் பமும எமக்கும் புலனாகும்.

திருச்சிற்றம்பலம்

ஐம்பதாவது

ஆனந்தமாலை

சிவானுபவ விருப்பம்

ஆசிரிய விருத்தம்

க

௬௪௧. மின்னே ரனைய பூங்கழல்க
ளடைந்தார் கடந்தார் வியனுலகம்
பொன்னே ரனைய மலர்கொண்டு
போற்றா நின்றா ரமரரெல்லாங்
கன்னே ரனைய மனக்கடையாய்க்
கழிப்புண் டவலக் கடல்வீழ்ந்த
வென்னே ரனையே னினியுன்னைக்
கூடும் வண்ண மியம்பாயே.

உ

௬௪உ. என்னா லறியாப் பதந்தந்தா
யான தறியா தேகெட்டே
னுன்னா லொன்றுங் குறைவில்லை
யுடையா யடிமைக் காரென்பேன்
பன்னா ளுன்னைப் பணிந்தேத்தும்
பழைய வடிய ரொடுங்கூடா
தென்னா யகமே பிற்பட்டிங்
கிருந்தே னோய்க்கு விருந்தாயே.

ஐம்பதாவது

ஆனந்த மாலை

உன்னைக் கூடும் வகை?

641. மின் நேர் அனைய[1] பூங் கழல்கள்[2]
அடைந்தார்,[3] கடந்தார், வியன் உலகம்[4];
பொன் நேர் அனைய மலர் கொண்டு
போற்றா நின்றார், அமரர்[5] எல்லாம்;
கல் நேர் அனைய மனக் கடையாய்,[6]
கழிப்புண்டு,[7] அவலக் கடல்[8] வீழ்ந்த
என் நேர் அனையேன்,[9] இனி, உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே. (1)

அடிமைக்கு யார்?

642. என்னால் அறியாப்[10] பதம்[11] தந்தாய்;
யான் அது அறியாதே கெட்டேன்;
உன்னால் ஒன்றும் குறைவு இல்லை;
உடையாய், அடிமைக்கு யார்? என்பேன்;
பல் நாள் உன்னைப் பணிந்து ஏத்தும்
பழைய அடியரொடும் கூடாது,
என் நாயகமே! பிற்பட்டு, இங்கு,
இருந்தேன்—நோய்க்கு விருந்தாயே.[12] (2)

1 மின்னலை ஒத்த
2 திருவடித் தாமரைகள்
3 இடைவிடாது உள்ளத்தில் எண்ணி அடைந்தவர்
4 பரந்த உலகத்தினை அல்லல்களை
5 வானவர்
6 கல்லை ஒத்த கடிய மனத்தையுடையவனாய்
7 தள்ளப்பட்டு
8 துன்பக்கடல்
9 இழிந்த தன்மையில் எனக்குநானே நிகரான யான்
10 அறிந்துகொள்ள வியலாத
11 சிவபதம்
12 நோய்களால் விரும்பி உண்ணும் நல் உணவாக

ஙு

கூசஙு. சீல மின்றி நோன்பின்றிச்
செறிவே யின்றி யறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை
மாலுங் காட்டி வழிகாட்டி
வாரா வுலக நெறியேறக்
கோலங் காட்டி யாண்டானைக்
கொடியே னென்றோ கூடுவதே.

சு

கூசச. கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடி லாதாய் பழிகொண்டாய்
படுவேன் படுவ தெல்லாநான்
பட்டாற் பின்னைப் பயனென்னே
கொடுமா நரகத் தழுந்தாமே
காத்தாட் கொள்ளுங் குருமணியே
நடுவாய் நில்லா தொழிந்தக்கா
லன்றோ வெங்க ளுயகமே.

டு

கூசடு. தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் சவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பி யினித்தா னல்குதியே
தாயே யென்றுன் றாளடைந்தேன்
றயாநீ யென்பா லில்லையே
நாயே னடிமை யுடனாக
வாண்டாய் நான்றான் வேண்டாவோ.

ஆண்டானைக் கூடுவது என்றோ ?

643. சீலம்[1] இன்றி, நோன்பு[2] இன்றி,
செறிவே[3] இன்றி, அறிவு[4] இன்றி,
தோலின் பாவைக் கூத்தாட்டு ஆய்,
சுழன்று, விழுந்து, கிடப்பேனை -
மாலும் காட்டி,[5] வழி காட்டி,[6]
வாரா உலக நெறி ஏற,[7]
கோலம் காட்டி[8] ஆண்டானை,
கொடியேன் என்றோ கூடுவதே ? (3)

1 நல் ஒழுக்கம்
2 தவம்
3 அடக்கம
4 ஞானம்
5 தெளிவின்மையாகிய மயக்கம் இன்னது என்பதையும காட்டி
6 மயக்கத்தினின்று விலகும வழியையும் காட்டி
7 வீட்டுலகத்தை எளியேன் பெற
8 தன்னுடைய திருக் கோலத்தைக காட்டி

கெடுகின்றேன் : நன்றோ ?

644. கெடுவேன் ; கெடுமா கெடுகின்றேன் ;
கேடு இலாதாய், பழிகொண்டாய் ;
படுவேன், படுவது எல்லாம், நான்
பட்டால், பின்னைப் பயன் என்னே ?
கொடு மா நரகத்து அழுந்தாமே
காத்து ஆட்கொள்ளும் குருமணியே,
நடு ஆய் நில்லாது ஒழிந்தக்கால்,
நன்றோ, எங்கள் நாயகமே ? (4)

நான்-தான் வேண்டாவோ ?

645. தாய் ஆய் முலையைத்[9] தருவானே,
தாராது ஒழிந்தால், சவலையாய்[10]
நாயேன் கழிந்து போவேனோ ?
நம்பி, இனித்தான் நல்குதியே ;
தாயே என்று உன் தாள் அடைந்தேன் ,
தயா,[11] நீ, என்பால் இல்லையே ?
நாயேன் அடிமை உடன் ஆக
ஆண்டாய் ; நான்-தான் வேண்டாவோ ? (5)

9 ஞானத்தை
10 தாய்ப்பாலில்லாக் குழநதையாய்
11 இரககம்

௬

௬௪௬. கோவே யருள வேண்டாவோ
கொடியேன் கெடவே யமையுமே
யாவா வென்று விடிலென்னை
யஞ்சே லென்பா ராரோதான்
சாவா ரெல்லா மென்னளவோ
தக்க வாறன் றென்னாரோ
தேவே தில்லை நடமாடீ
திகைத்தே னினித்தான் றேற்றாயே.

௭

௬௪௭. நரியைக் குதிரைப் பரியாக்கி
ஞால மெல்லா நிகழ்வித்துப்
பெரிய தென்னன் மதுரை யெல்லாம்
பிச்ச தேற்றும் பெருந்துறையா
யரிய பொருளே யவிநாசி
யப்பா பாண்டி வெள்ளமே
தெரிய வரிய பரஞ்சோதீ
செய்வ தொன்று மறியேனே.

திருச்சிற்றம்பலம்

திகைத்தேன், தேற்றுயே !

646. கோவே, அருள வேண்டாவோ ?
    கொடியேன் கெடவே அமையுமே ?
'ஆ ! ஆ !'[1] என்னுவிடில், என்னை
    'அஞ்சேல்' என்பார் ஆரோ-தான் ?
சாவார்[2] எல்லாம் என் அளவோ ?
    'தக்க ஆறு அன்று' என்னுரோ ?
தேவே ! தில்லை நடம் ஆடீ !
    திகைத்தேன் ; இனித்தான் தேற்றுயே ! (6)

செய்வது அறியேன்

647. நரியைக் குதிரைப் பரி ஆக்கி,
    ஞாலம் எல்லாம் நிகழ்வித்து,
பெரிய தென்னன் மதுரை எல்லாம்
    பிச்சு-அது ஏற்றும் பெருந்துறையாய் !
அரிய பொருளே ! அவிநாசி
    அப்பா ! பாண்டி வெள்ளமே ![3]
தெரிய அரிய பரஞ்சோதீ !
    செய்வது ஒன்றும் அறியேனே ! (7)

1 இரக்கக குறிப்பு

2 பிறவிப்பயன் பெருது இறப்பவர்

3 பாண்டியனுக வந்த அருளவெள்ளமே, அருட்கடலே

திருச்சிற்றம்பலம்.

ஐம்பத்தொன்றுவது

அச்சோப்பதிகம்

அனுபவ வழியறியாமை

கலி விருத்தம்

௧

௬௪௮. முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௨

௬௪௯. நெறியல்லா நெறிதன்னை நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும்வண்ணங்
குறியொன்று மில்லாத கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும் வண்ண மருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௩

௬௫௰. பொய்யெல்லா மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் றன்கழலே சேரும்வண்ண
மையனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௪

௬௫௧. மண்ணதனிற் பிறந்தெய்த்து மாண்டுவிழக் கடவேனை
யெண்ணமிலா வன்பருளி யெனையாண்டிட் டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீ றணிவித்துத் தூநெறியே சேரும்வண்ணம்
மண்ணலெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

ஐம்பத்தொன்றாவது

அச்சோப் பதிகம்

யான் பெற்றது யார் பெறுவார்

648 முத்தி நெறி[1] அறியாத மூர்க்கரொடும்[2] முயல்வேனை,[3]
பத்திநெறி[4] அறிவித்து, பழவினைகள்[5] பாறும் வண்ணம்[6]
சித்தமலம்[7] அறுவித்து, சிவம்ஆக்கி,[8] எனை ஆண்ட
அத்தன்[9] எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்?
அச்சோவே![10] (1)

கூத்தன் கூத்தை அறிந்தேன்

649. நெறி[11] அல்லா நெறி-தன்னை நெறியாக நினைவேனை,
சிறு நெறிகள்[12] சேராமே, திரு அருளே சேரும் வண்ணம்,
குறி[13] ஒன்றும் இல்லாத கூத்தன்[14]-தன் கூத்தை எனக்கு
அறியும் வண்ணம் அருளிய ஆறு,[15] ஆர்பெறுவார்?
அச்சோவே! (2)

மையல் அறுத்தான்

650. பொய்எல்லாம்[16] மெய் என்று,[17] புணர் முலையார் போகத்தே
மையல்[18] உறக் கடவேனை, மாளாமே,[19] காத்தருளி,
தையல்[20] இடம் கொண்ட பிரான்,[21] தன் கழலே சேரும் வண்ணம்,
ஐயன், எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்?
அச்சோவே! (3)

தூய நெறியே சேர்ந்தேன்

651. மண்—அதனில் பிறந்து, எய்த்து,[22] மாண்டு விழக் கடவேனை,
எண்ணம் இலா[23] அன்பு அருளி, எனை ஆண்டிட்டு, என்னையும் தன்
சுண்ண வெண்-நீறு அணிவித்து, தூநெறியே[24] சேரும் வண்ணம்,
அண்ணல்[25] எனக்கு அருளிய ஆறு, ஆர் பெறுவார்?
அச்சோவே! (4)

1 நிலையான வீடுபேற்றுக்கு ஏற்ற வழி
2 அறிவில்லாத் தீய குணங்களுடைய கீழ்மக்கள்
3 விடாது பற்றிப் பழகுவேனை
4 இறைவனிடத்து மாறாத அன்புடைய சிறந்த வழி
5 தொன்று தொட்டு பிறவிக்குக் காரணமாய்த் தொடர்ந்து வரும் மாசின் விரிவும் பிரிவுமாகிய வினைகள்
6 ஒழியும்படி
7 உள்ளத்தே பதிந்து ஆன்மாவைத் தொடர்ந்து வரும் மாசு
8 சிவபெருமான் இணையடியில் கலந்தவனாக்கி
9 தந்தை
10 கனிவும் களிப்பும் கலந்த உணர்ச்சியைக் குறிப்பிடும் சொல்
11 நல்ல நெறி
12 தீய எண்ணம் செயல்களில் செலுத்தும் வழிகள்
13 பொறிபுலன் வழியாகத் தெரிந்து கொள்ளக்கூடிய அடையாளம்
14 கூத்தப் பெருமான்
15 திருவருளால் உணர்த்திய வழி
16 நிலையாதவற்றை எல்லாம்
17 நிலைத்தன என்று
18 மயங்கி மருளல்
19 (பிறவிப் பயன் பெறாது) இறந்து விடாமல்
20 – உமையம்மை
21 – சிவபெருமான்
22 இளைத்து, நலம் குறைந்து
23 நினைத்தற்கும் முடியாத
24 தலைசிறந்த தெய்வ நெறியாகிய தூய வழியிலேயே
25 – சிவபெருமான்

௫

௬௫௨. பஞ்சாய வடிமடவார் கடைக்கண்ணு லிடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேனுன் னருள்பெற்றே
றுய்ஞ்சேற னுடையானே யடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௬

௬௫௩. வெந்துவிழு முடற்பிறவி மெய்யென்று வினைபெருக்கிக்
கொந்துகுழற் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தமறுத் தெனையாண்டு பரிசறவென் றுரிசுமறுத்
தந்தமெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௭

௬௫௪. தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசமெனுந் தாழுருவி
யுய்யுநெறி காட்டுவித்திட் டோங்காரத் துட்பொருளை
யையனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௮

௬௫௫. சாதல்பிறப் பென்னுந் தடஞ்சுழியிற் றடுமாறிக்
காதலின்மிக் கணியிழையார் கலவியிலே கழிவேனை
மாதொருகூ றுடையபிரான் றன்கழலே சேரும்வண்ண
மாதியெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

௯

௬௫௬. செம்மைநல மறியாத சிதடரொடுந் திரிவேனை
மும்மைமல மறுவித்து முதலாய முதல்வன்று
னம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை யேற்றுவித்த
அம்மையெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

திருச்சிற்றம்பலம்.

'அஞ்சேல்' என்று அருளினான்

652. பஞ்சு ஆய அடி மடவார்[1] கடைக்கண்ணால்[2] இடர்ப்பட்டு,[3]
நெஞ்சு ஆய துயர்[4] கூர[5] நிற்பேன் உன் அருள் பெற்றேன்;
உய்ஞ்சேன் நான்;[6] உடையானே, அடியேனை 'வருக' என்று,
'அஞ்சேல்' என்று, அளிருய ஆறு, ஆர் பெறுவார்?
அச்சோவே! (5)

என் துரிசு அறுத்தான்

653. வெந்து[7] விழும் உடல்-பிறவி[8] மெய் என்று, வினைபெருக்கி,
கொந்து[9] குழல்[10] கோல் வளையார்[11] குவிமுலைமேல்
விழுவேனை,
பந்தம்[12] அறுத்து, எனை ஆண்டு, பரிசு[13] அற,[14]
என் துரிசும்[15] அறுத்து,
அந்தம் எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்?
அச்சோவே! (6)

ஓங்காரத்து உட்பொருளை உணர்ந்தேன்

654. தையலார்[16] மையலிலே[17] தாழ்ந்து[18] விழக் கடவேனை,
பையவே[19] கொடு போந்து,[20] பாசம்[21] எனும் தாழ் உருவி,
உய்யும் நெறி[22] காட்டுவித்திட்டு, ஓங்காரத்து
உட்பொருளை[23]
ஐயன் எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்?
அச்சோவே! (7)

அவன் கழலே சேர்ந்தேன்

655. சாதல்,[24] பிறப்பு, என்னும் தடம் சுழியில்[25] தடுமாறி,
காதலின் மிக்கு,[26] அணி இழையார்[27] கலவியிலே
கழிவேனை,[28]
மாது ஒரு கூறு உடைய பிரான்,[29] தன்கழலே[30]
சேரும் வண்ணம்,
ஆதி,[31] எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்?
அச்சோவே! (8)

பொருளல்லாதவன் பொருளானேன்

656. செம்மை[32] நலம் அறியாத சிதடரொடும்[33] திரிவேனை,
மும்மை மலம்[34] அறுவித்து, முதல் ஆய முதல்வன்-தான்
நம்மையும் ஓர் பொருள் ஆக்கி, நாய்சிவிகை[35] ஏற்றுவித்த
அம்மை[36] எனக்கு அருளிய ஆறு, ஆர்பெறுவார்?
அச்சோவே! (9)

திருச்சிற்றம்பலம்

1 செம்பஞ்சுக் குழம்பால் அழகுபடுத்தப் பெற்ற அடியை உடைய இளம் பெண்கள்
2 சாய்ந்தபார்வையால்
3 துன்பப்பட்டு
4 உள்ளத்திலுள்ள வருத்தம்
5 மேலும் மேலும் பெருக
6 கடைத்தேறினேன்
7 எரிந்து
8 பிறந்த இந்த உடல்
9 மலர்க்கொத்து
10 கூந்தல்
11 திரண்ட வளையலை அணிந்த மகளிர்
12 பிறவிக்கட்டு, பிணி
13 இயற்கை
14 இற்று ஒழியும் வண்ணம்
15 குற்றமும்
16 பெண்கள்
17 இன்பமயக்கத்திலே
18 நின்றும்
19 சிறுகச் சிறுக
20 கொண்டுவந்து
21 கட்டு, நிலையற்ற பொருள்களில் மாறாத ஆசை
22 கடைத்தேறும் நல்வழி
23 'ஓம்' என்னும் மறை ஒலியின் நுண்பொருளை
24 இறப்பு
25 பெரிய சுழலில்
26 நிலையற்ற வற்றிலுள்ள ஆசையில் மிகுந்து
27 அணிகளைப் பூண்ட பெண்கள்
28 ஒழிவேனை
29 பெண் ஒரு பாகத்து அண்ணல் – சிவபெருமான்
30 திருவடியையே
31 முதல்வன்
32 மெய்ம்மையால் வாய்மையால் உண்மையால் ஆகிய பண்பு
33 கீழ்மக்களோடும்
34 ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக வரும் பிறவி மாசு
35 பல்லக்கு
36 அழகு

திருவாசகத்துள் வந்துள்ள கதைகள்

1. அடிமுடி தேடியது :

படைப்புக் கடவுளாகிய பிரமனுடைய நாட்கள் ஒவ்வொன்றும், தேவர்கள் ஆண்டில் 12,000 ஆண்டுகள் கொண்ட பகற்பொழுதும், அதே அளவுள்ள இராப்பொழுதும் கொண்டதாகும். தேவர்கள் ஆண்டு 12,000 என்பது, மண்ணுலக ஆண்டு 4,320,000,000-க்குச் சமமாகும். பிரமனுடைய இராப் பொழுதில், எவ்வகைச் செயலும், எவ்வகைத் தோற்றமும் அற்று, எல்லா உலகமும் உயிரும் ஒடுங்கி, ஏற்றம் தாழ்வு இல்லாத ஒரே அமைதியே நிலவும்; இதை, யாவும் அழிந்த ஊழி எனக் கூறுவர். இத்தகைய இரவு ஒன்றில், பிரமன், அண்டங்களுக்கு எல்லாம் முதல்வனும் உயிருமாகி ஆயிரங் கண்களுடன், நீர் உருவம் பெருத நீர் மேல் ஆயிரம் படங்களையுடைய அனந்தன் என்னும் உயர் வெள்ளையணையில் நாராயணன் கண் வளர்வதைக் கண்டு, பெருவியப்பும் மகிழ்வும் உடையவனாய், என்றும் உள்ள அப்பொருளைக் கையினால் தொட்டு 'நீ யார்? சொல்' என்றான். செந்தாமரைக் கண்ணன், அனந்தலொடு கடைக்கண் சாத்தி, புன்னகை பூத்து "மகனே வருக" எனலும், பிரமன் வெகுண்டு "எண்ணிறந்த உலகங்களைத் தோற்றியழித்து யாவைக்கும் மூலமும் உயிருமாய் விளங்கும் என்னை, 'மகன்' என அழைக்கும் மடமை ஏன் கொண்டாய்" எனக் கூறினான். திருமால் "உலகங்களை எல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் நாராயணன் நான் என்பது அறிந்திலையா? நான் அன்றோ 'பரம்பொருள்'; நீ என் அழியாத் திருமேனியிலிருந்து தோன்றினவன் அன்றோ" எனக் கூற, இருவருக்கும் 'யார் பரம்பொருள்' என்பதில் பூசல் தோன்றிப் போராகப் பெருகியது. அப்பொழுது, அண்டங்களை எல்லாம் அழிக்க எழுந்தது போல் முதல், நடு, ஈறு இல்லாத ஒரு பேரழற் பிழம்பு தோன்றவே, இருவரும் திகைத்து நின்றனர். அண்டம் அனைத்தும் கடந்து நின்ற பேரொளித் தூணமாகிய அனற்பிழம்பின் அடியையும் முடியையும் காணும் முயற்சியில் இருவரும் ஈடுபட்டு, காவதக் கணக்கான நீளமும் அதற்கேற்ற பருமனும் கொண்ட நீலமணிக் குன்று போன்ற பன்றி உருவில், நிலத்தை அகழ்ந்து அடியைக் காண திருமாலும், திசையனைத்தும் விரிந்த சிறகுகளுடன் தூய வெண்மையான அன்னத்தின் உருவில், விரைந்து பறந்து முடியைக் காண பிரமனும் சென்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் உழன்றும் காணவியலாது களைத்துக் கையற்றுத் தங்கள் ஆணவம் ஒடுங்கப் பெற்றனர். இந்த நிலையில், முன்தோன்றிய அனற்

பிழம்பு, சிவலிங்க உருவில் காட்சியளித்து இருவருக்கும் அருள் செய்தது. தம் பேதமையால் 'பரமம் யாம் பரமம்' என்ற பிரமன் அரி இருவரும், தம் பதைப்பு ஒடுங்கி, பரம்பொருள் சிவபெருமானே என உணர்ந்து வழிபட்டார்கள்.

பிரமன், முடியைக் கண்டதாகப் பொய் கூறியபடியால், சிவபெருமான், அவனுடைய ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்து, அவனை நான்முகனாக நிலைக்க அருளினார்.

2. அத்தி உரித்து அது போர்த்தது

முன்னொரு காலத்தில் யானை வடிவம் கொண்ட கயாசுரன் என்னும் ஓர் அசுரன், நான்முகனை நோக்கித் தவம் செய்து அழியாத வலிமை, வாழ்நாள், செல்வம் முதலிய பல வரங்களைப் பெற்று மூன்று உலகங்களிலும் சுற்றித் திரிந்து எல்லோருக்கும் துன்பம் செய்து வந்தான். திசைக் காவலர்களை வெருட்டினான்; இந்திரன் ஏறிச் செல்லும் ஐராவதத்தின் வாலைப் பிடித்துச் சுழற்றி எறிந்து, இந்திரனும் தேவர்களும் புறங்கொடுத்து ஓடச் செய்தான். தேவர்களும், முனிவர்களும், மற்றுமுள்ளோரும், பெருநடுக்கம் கொண்டு, சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் காசிப்பதியில் அடைக்கலம் புகுந்தார்கள். கயாசுரன், தான் பெற்ற வரங்கள் எல்லாம் சிவபெருமான் முன்னம் நில்லாது என்பதை அறவே மறந்தும், தன் வெற்றியிலும் வலிமையிலும் செருக்குற்றும், சிவபெருமான் கோயில் கொண்டிருக்கும் திருப்பதியில் அடைக்கலம் புகுந்தவர்களையும் கொன்று சிதைக்கும் கொடிய நோக்கத்துடன், திருக்கோயிலின் முன்பு சீற்றத்துடன் சென்று இடிபோலப் பெரு முழக்கம் செய்தான். அடியவர்களுக்கு அரணாகிய சிவபெருமான், கண்டார் நடுங்கும் தோற்றத்துடன், கயாசுரன் முன் தோன்றினார். முடிவு நெருங்கியபடியால் சிவபெருமானுடனும் போர் செய்வதற்காகத் துடித்து ஓடினான். சிவபெருமான் திருவடியால் உதைக்கப் பெற்றுப் பதைபதைத்துக் கீழே விழுந்தான். அவ்வாறு விழுந்த கயாசுரனாகிய யானையின் தலையை ஒரு திருவடியாலும், தொடையை மற்றொரு திருவடியாலும் மிதித்துக்கொண்டு திருக்கைகளின் நகங்களால் முதுகில் கிழித்து நான்கு கால்களும் பக்கங்களில் பொருந்தும்படி தோலை உரித்தார். இதைக் கண்டு உமையம்மையும் நடுங்கினார். பெருமானின் உக்கிரத் திருமேனியின் பேரொளியால் உயிர்களின் கண்கள் பார்வையை இழந்தன. ஒளியின் கொடுமையைக் குறைத்து, உயிர்களின் கண்ணொளி மயக்கத்தைப் போக்கத் திருவுளங்கொண்டு உரித்த யானைத் தோலைத் திருப்புயத்தின் மேல் போர்த்துத் தன் கடுவொளியை மாற்றினார். கயாசுரன் அழிந்தது கண்டு மூவுலகும் பெருமகிழ்ச்சியடைந்து சிவபெருமான் திருவருளைப் போற்றி வாழ்த்தின.

" எண்திசையோர் அஞ்சிடுவகை கார்சேர் வரையென்னக்
கொண்டெழு கோலமுகில்போல் பெரிய கரிதன்னைப்
பண்டுரி செய்தோன் " (தேவாரம் 1053)

" வேழம் உரித்து உமை அஞ்சக்கண்டு ஒண்திருமணிவாய்
விள்ளச் சிரித்தருள் செய்தார்" (தேவாரம் 4870)

" உரித்துவிட்டாய் உமையாள் நடுக்கெய்த ஓர் குஞ்சரத்தை"
(தேவாரம் 4994)

" உமையவளை அஞ்சநோக்கிக் கலித்து ஆங்கு
இரும்பிடிமேல் கைவைத்து ஓடும் களிறு உரித்த கங்காளா"
(தேவாரம் 6715)

3 அத்திக்கு அருளியது

துருவாச முனிவர், சிவபெருமானை முறைப்படி வழிபாடு செய்யும் பொழுது பெருமான் திருமுடியிலிருந்து நறுமணம் மிக்க பொன்னிறத் தாமரை மலர் ஒன்று முனிவர் கையகத்து விழுந்தது; அதைப் பன்முறையும் வணங்கிக் கையில்ஏந்திக்கொண்டு பொன்னுலகுக்குச் சென்றார்; அங்கு, இந்திரன், பேரார்வத்துடன் தேவர்களும் முனிவர்களும் பல்லாண்டு இசைக்கவும், அரமகளிர் ஆடிப்பாடி சூழ்ந்து வரவும், இன்னியம் பல ஒலிக்கவும், சாமரைகள் இரட்டவும், வெண்கொற்றக்குடை நிழற்றவும், ஐராவதத்தின் மேல் அமர்ந்து, உலா வருவதைக் கண்ணுற்றார். உலாப்போந்த வாசவனை வணங்கி வானவர் பல கையுறை வழங்கினர்; முனிவரும் தன் கையகத்திருந்த பொன்மலரைக் கையுறையாகக் கொடுத்தார். அத் தெய்வ மலரின் மாட்சியறிய மாட்டாத புரந்தரன், அதைப் பொருட்படுத்தாமல் ஒரு கையால் வாங்கித் தான் ஊர்ந்து வந்த ஐராவதத்தின் முடியில் வைத்தான்; அந்த வெள்ளையானை, களிப்பு மிகுதியால், அம்மலரைக் கீழே தள்ளிக் காலால் தேய்த்து விட்டது. தான் கையுறையாகக் கொடுத்த சிவபெருமான் திருமுடிமேல் சாத்தப் பெற்ற பொற்றாமரைக்கு நேர்ந்த இழிவையும், ஆகண்டலன் ஆணவத்தையும், நான்கு கொம்பு யானையின் செருக்கையும் கண்டு மனங் கொதிப்பேறிய முனிவர், இந்திரனை நோக்கி " ஆயிரங் கண்ணோய்!

வண்டுளருந் தண்டுளாய் மாயோன் இறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தேள் இறுமாப்பும்
அண்டர் தொழ வாழ் உன் இறுமாப்பும் ஆலாலம்
உண்டவனைப் பூசித்த பேறென்றுணர்ந்திலையால்

உன் முடி, மண்ணுலக மன்னன் பாண்டியன் ஒருவனால் சிதறக்கடவது, இந்த வெள்ளையானையும் மண்ணுலகத்தில் காட்டானையாகப் பிறந்து அலைந்து உழலக்கடவது" எனச் சாபமிட்டார். சீறிய யானையும் கரியாக மண்ணுலகிற் பிறந்து யானைக் கூட்டங்களுடன் காடுகளிலும் மலைகளிலும் அலைந்து கொண்டிருக்கலாயிற்று. இவ்வாறு திரிந்துகொண்டிருக்கும் பொழுது, ஒரு நாள், கடம்பவனத்துள் நுழைந்து அங்கிருந்த தாமரைக் குளத்தில் நீராடியது. முனிவர் சுடுசொல் விடுதலையாகும் காலம் வந்துற்றபடியால் காட்டானை உருவம் நீங்கி, பண்டைய வடிவும் அறிவும் பெற்றது.

அங்கு சொக்கலிங்க மூர்த்தியாகக் காட்சியளித்த சிவபெருமானை வணங்கி, தாமரைப் பொய்கையிலிருந்து, தன் துதிக்கையால் நன்னீர் கொண்டு வந்து இறைவன் திருமேனிக்குத் திருமஞ்சனம் செய்து, தாமரை மலர்களைச் சாத்தி வழிபட்டது. வெள்ளையானையின் பூசைக்குத் திருவுளம் மலர்ந்த சிவபெருமான், வேண்டிய வரங்களைத் தந்து, வானவர் உலகில் முன்புபோலச் சீரும் சிறப்பும் பெற்று வானவர் தலைவன் ஊர்தியாகத் திகழும் வண்ணம் திருவருள் செய்தார்.

4. அந்தகனை மாயா வடுச் செய்தது

அந்தகன் என்னும் அசுரன் ஒருவன் சிவபெருமானை எதிர்த்து அவரது சூலப்படையினுல் அழிவுற்ருன் என்னும் பழஞ்செய்தி

“ காளமேகந்நிறக் காலனேடு அந்தகன் கருடனும்
நீளமாய் நின்று எய்த காமனும் பட்டன நினைவுறின்
நாளுநாதன் அமர்கின்ற நாகேச்சர நண்ணுவார்
கோளு நாளுந் தீயவேனும் நன்காங் குறிக்கொண்மினே ”
(தேவாரம் 2763)

“ நஞ்சினை உண்டு இருள் கண்டர் பண்டு அந்தகனைச் செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழிமிழலையார்...”
(தேவாரம் 2891)

“ ....தண்வயல் கண்டியூர் உறை வீரட்டன்
... ...
அமரரானவர் ஏத்த அந்தகன் தன்னைச் சூலத்தில் ஆய்ந்ததே ”
(தேவாரம் 3209)

எனத் திருமுறைகளில் காணப்படுகின்றது. ‘அந்தகன்’ என்பதற்கு ‘யமன்’ என்றும், ‘சனி’ என்றும் பொருள் கூறுவாரும் உண்டு.

5. அந்தணன் ஆகி ஆண்டு கொண்டது

திருவாதவூரடிகளுக்குச் சிவபெருமான் ஞான குரவனுகத் தோன்றி ஆட்கொண்டதைக் குறிப்பிடுகின்றது.

6. அந்தரத்து இழிந்து பாலையுள் அமர்ந்தது

இச்செய்தி, திருப்பெருந்துறையில் சிவபெருமான் எழுந்தருளியதைக் குறிப்பிடுவதாகச் சிலர் கொண்டு “தென்பாலைத் திருப்பெருந்துறை ” (550) என அடிகளார் குறிப்பிடுவதைத் துணையாகக் கூறுவர். சிலர், ‘அழகனே கழிப்பாலை எம் அண்ணலே ’
(தேவாரம் 5627)

“ அத்தனை அணியார் கழிப்பாலைஎம்
சித்தனைச் சென்று சேருமா செப்புமே ”
(தேவாரம் 5632)

"ஐயனே அழகே அனலேந்திய
கையனே கறைசேர்தரு கண்டனே
மையுலாம் பொழில் சூழ் கழிப்பாலை எம்
ஐயனே விதியே அருள் என்னுமே"

(தேவாரம் 5631)

என்னும் திருமுறைப் பகுதிகளைத் தொடர்புபடுத்தி, 'பாலை' என்பது "கழிப்பாலை" என்னும் திருப்பதியைக் குறிப்பிடுகிறது என்றும், "அணியார்," "அழகன்," "அழகு" என வருவன 'அழகமர் பாலை,' "சுந்தர வேடம்" என்பனவற்றோடு இயைபுடையன எனவுங் கூறுவர். சிலர், அடிகளார் காலத்தில் வழக்கிலிருந்த நான்கு கயிலாயங்களுள், மேற்குக் கயிலாயத்தை இத்தொடர் குறிப்பிடுகின்றதென்றும், அங்கு, வானத்திலிருந்து இழிந்தருளிய சிவலிங்கம் ஒன்று நிலைபெற்றுப் பல சமயத்தாராலும் வணங்கப்பெற்று வந்ததென்றும், அத் தெய்வநிலை, இப்போது அரபிய நாட்டில் தெய்வச் சிறப்புற்றுத் திகழும் 'மெக்கம்' என்னும் திருப்பதியாக இருக்கக் கூடும் என்றும்,

'அந்தரத்து இழிந்து வந்து அழகமர் பாலையுள்
சுந்தரத் தன்மையொடு துதைந்து இருந்தருளியும்'

என்பன, எல்லா வழியாலும் தங்கள் கொள்கையையே வலியுறுத்துகிறது என்றும், "தன்மை" என்பது "தொன்மை" என இருந்திருக்க வேண்டும் என்றும், ஆழ்ந்த ஆராய்ச்சிக்கு உரிய கருத்துக்களைக் கூறுகின்றனர்.

7. அயன் தலை கொண்டு செண்டாடியது

60-ஆவது கதை பார்க்க.

8. அயனை மாயா வடுச் செய்தது

பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றைச் சிவபெருமான் கிள்ளி எறிந்ததாகப் பல கதைகள் கூறப்படுகின்றன. 'அடிமுடிதேடிய' கதையுள் ஒன்று கூறப்பெற்றது. சிவபெருமானினும் தான் உயர்ந்தவனாக எண்ணிப் பிதற்றியமையால், பெருமான் அவ்வாறு பிதற்றிய ஐந்தாவது தலையைக் கொய்து எறிந்தார் என்றும்; பிரமன் காமக் குறிப்புடன், தன்னிடமிருந்து தோன்றிய ஒரு பெண்ணின் அழகைப் பார்த்தமையால, சிவபெருமான், அவ்வாறு பார்த்த கண்களையுடைய ஐந்தாவது தலையைத் துணித்தனர் என்றும்; சிவனை, தனக்கு மகனாகப்பிறக்க வேண்டும் என்று பிரமன் வரம் கேட்ட போது, அப் பெருமான் இட்ட சாபத்தால், ஐந்தாவது தலை வெடித்து உதிர்ந்தது என்றும்; பழங்கதைகளில் காணப்பெறுகின்றது.

9. அரக்கன் தோள் நெரித்தது

வானினும் நீரினும் செல்லவல்லவர்களும் பல மாயங்களும் கற்றுக் கைதேர்ந்தவர்களுமாகிய அரக்கர்களுக்குத் தலைவனாக,

இலங்கையைத் தலைமையிடமாக வைத்து மூவுலகங்களையும் ஆட்சி செய்துவந்த இராவணன் என்னும் அரக்கன், சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் புரிந்து பல வரங்களையும் பெற்றுத் தேவர்களும் மூவர்களும் அடிபணியவும் இருசுடரும் ஐம்பெரும்பூதமும் ஏவல் கேட்கவும் தனக்கு மிக்காரும் ஒத்தாரும் எவ்வுலகத்திலும் இல்லை என இறுமாப்புக் கொண்டு திரிந்து வந்தான். ஒரு நாள் அவன் வான் வழியாக விமானத்தில் செல்லும்போது, சிவபெருமான் கயிலைக் குன்றம் எதிர்ப்பட்டது; பாகன், விமானத்தை நிறுத்தி, கயிலைக்குன்றத்தை வணங்கி வலம் செய்து செல்வதே முறை எனக் கூறினன். ஆணவம் தலைக்கேறிய அரக்கன், தான் பெற்ற பேறு அனைத்தும் சிவபெருமான் அளித்தவையேஎன்பதை அறவேமறந்து, ஒரு சிறிதும் பணிவு இன்றி, விமானத்தைக் கயிலைக்குன்றுக்கு மேலே செலுத்துமாறு கட்டளையிட்டான்; விமானம் மேற்செல்லும் ஆற்றலின்றி நின்றுவிடவே, கடுஞ்சினங்கொண்டு, குறுக்கே நின்ற கைலைமலையையே எடுத்து எறிந்து விடுவதாக விமானத்தினின்றும் இறங்கித் தன் வீரத்தோள்களால் மலையைப் பெயர்க்கத் தொடங்கினன். மலையும் சிறிது அசைவுற்றது; கைலையில் இறைவனோடு வீற்றிருந்த உமையம்மையும் துணுக்குற்றனர். சிவபெருமான் தன் திருவடியின் சிறு விரலைச் சிறிது அழுத்தினர். ஒரு மலையைத் தூக்கி எழும் மற்றொரு மலைபோல் கைலையைத் தோள்கொடுத்துத் தூக்கிய அரக்கனது முடியும் தோளும் நெடுநெடு என நெரிபட்டு அரக்கனும் யானைக் காலில் அகப்பட்ட அத்திப்பழம்போல் நசுக்குண்டு கதறினன். பல காலம், மலையடியிற் கிடந்த வண்ணமாகவே சிவபெருமானைப் பணிந்து பல இனிய பாடல்களைப் பாடி விடுதலையடைந்து சிவபெருமான் திருவருளையும் மேலும் பல வரங்களையும் பெற்று இலங்கைக்குத் திரும்பினன்.

10. அரியொடு பிரமற்கு அளவறியாமை

1-ஆவது கதை பார்க்க. அனற் பிழம்பாக நின்ற சிவபெருமான் அடியையும் முடியையும் அரியும் பிரமனும் அளந்து காணவியலாது நின்றதைக் குறிப்பிடுவது.

11. அருக்கன் எயிறு பறித்தது

60-ஆவது கதை பார்க்க.

12. அலரவனும் மாலவனும் அறியாத அழல் உருவம்

1-ஆவது கதை பார்க்க. அலரவன் = தாமரை மலரிலுள்ள பிரமன். மால் = திருமால்.

13. அலைகடல் மீமிசை நடந்தது

14-ஆவது 99-ஆவது கதைகள் பார்க்க.

14. அலைகடல்வாய் மீன் விசிறியது

முன்பு ஒரு காலத்தில், சிவபெருமான், வேதங்களின் உண்மைகளை, உமையம்மைக்குச் சொல்லிக் கொண்டிருந்தார். அம்மை, அவ் உண்மைகளை உளம்பற்றிக் கேளாது பராமுகமாக இருந்தார். சிவபெருமான் வெகுண்டு "நீ உண்மைப் பொருளை உணர்ந்து கொள்வதில் நாட்டமில்லாது இருந்தமையால், மண்ணுலகத்தில் வலைச்சேரியில் வலைஞர் மகளாகத் தோன்றக் கடவாய்" எனச் சபித்தனர். அம்மை, நடு நடுங்கி "இறைவனே ஒரு கணமேனும் பிரியாது உடன் உறையும் யான் எவ்வாறு பிரிந்திருப்பேன்" என அழுதார்; இறைவன் உளமிரங்கி, "என் செய்வது? இனி சாபத்தை மாற்ற முடியாது; ஆனால், நீ, வலைஞர்குலப் பெண்ணாக வளரும் நாட்களில், நாமே நின்பால் எழுந்தருளித் திருமணம் செய்து சாபத்தை நீக்குவோம்" என ஆறுதல் கூறி அனுப்பி விட்டார். அன்னைக்கு நேர்ந்த அலக்கணைக் கேள்வியுற்ற பிள்ளைகள் இருவரும், இவ்வளவும் இந்த வேதங்களாலன்றோ நிகழ்ந்தது என வெகுண்டு, சிவபெருமானிடம் சென்று அருகிருந்த வேதங்களைப் பறித்துக் கடலில் வீசி எறிந்து விட்டார்கள். இச்செயல் கண்டு கடுஞ்சினம் கொண்ட கறைமிடற்று அண்ணல், குறும்பு செய்த தன் மக்களைச் சபிக்க முடியாமல், இவர்களை உள்ளே விட்ட வாயிற்காவலனை நந்திதேவரைச் சினந்து "நீ சுறுமீனாகப் பிறந்து கடலில் எறியப்பட்ட வேதங்களைச் சுமந்து திரிவாயாக" எனச் சபித்தனர்.

சாபம் பெற்ற அம்மையார், பாண்டிய நாட்டில், ஒரு பரதவர் சேரியில், அக்குல மன்னனின் மகளாகவும், நந்திதேவர் அச்சேரியை அடுத்த கடலில், உச்சியில் வேதமும் உள்ளத்தில் சிவபெருமான் திருவடியும் வீற்றிருக்கும் சுறுமீனாகவும் வாழ்ந்து வந்தார்கள். கடலில் மீன் பிடிக்கும் பரதவர்களுக்கு, புதிதாக வந்த சுறு பல இடுக்கண்களைச் செய்து, கடற் பரப்பில் படகோ நாவாயோ ஓடாதபடி அச்சம் விளைவித்து வந்தது. வலைவளம் குன்றி, பரதவர்குடி வாட்டம் உறுவதாயிற்று. பரதவர் மன்னனும், அச்சுறுத்தும் அச்சுறவினைப் பிடிக்கப் பலவாறு முயன்றும் பயன்படாது போயிற்று. வாட்டமுற்ற வலைஞர் பெருமகன் ஒன்றும் தோன்றாமல், இக் கடலைக் கலக்கித் திரியும் குன்றம் போன்ற சுறவினைப் பிடிப்பவனுக்கே தன் மகளை மணஞ் செய்து கொடுப்பதென உறுதி கொண்டிருந்தான். அப்பொழுது, சிவபெருமானே வலிய வலைமகன் உருக்கொண்டு பரதவர் சேரியை அணுகி, அவர்கள் வேண்டிய வண்ணம், நீர் மேல் நடந்து சென்று வலை வீசி, எவர்க்கும் பிடிபடாத சுறுமீனைப் பிடித்து வலைவாழ்நர் இடுக்கணைப் போக்கினார். பரதவர் மன்னனும் தான் உறுதிகொண்டபடியே, தன் மகளை சுறவினை ஒரே வீச்சில் பிடித்த இளைஞனுக்கு மணம் செய்து கொடுத்தான். உடனே அம்மையப்பனாகச் சிவபெருமான் வலைஞர் கோவிற்குக் காட்சி கொடுத்து, உமையும் நந்தியும் பெற்ற சாபத்தை விலக்கியருளி முன் நிலையிலே இருக்கத் திருவருள் செய்தார்.

15 அலை நீர் விடம் உண்டது

முன் ஒரு காலத்தில், தேவர்கள் வலிமை குன்றியும் அசுரர்கள் வலிமை மிக்கும் இருந்தார்கள். வலிமை மிக்க அசுரர்கள் தேவர்களைப் பல வழியிலும் துன்புறுத்தி அவர்களுடைய உடைமைகளை எல்லாம் சிறுகச் சிறுகக் கவர்ந்துகொண்டார்கள். இந்த நிலை தொடருமானல் தேவர்கள் அறவே ஒழிந்துவிடுவார்கள் என்ற அச்சம் பிறந்தது. தேவர் எல்லாம் ஒன்று சேர்ந்து நான்முகனைச் சரண் அடைந்து தாங்கள் வாழ்வதற்கான வழியை வகுத்தருள வேண்டினர்கள். பிரமதேவன், எல்லாத் தேவர்களையும் அழைத்துக் கொண்டு திருப்பாற்கடலின் வடகரை வழியாகச் சென்று அரவணையில் கண்துயிலும் பெருமானகிய திருமாலிடம் தேவர்கள் குறையைத் தெளிவாகக் கூறி யாவரையும் காத்தருள வேண்டினன். கமலக் கண்ணன் கருணை பொழியும் திருமுகம் மலர்ந்து கடைக்கணித்து "தேவர்களே உங்கள் அனைவரையும் காப்பாற்றி வலிமையுடைய வராக்கி அசுரர்களைப் புறங்கொடுத்து ஓடச்செய்வன். திருப்பாற் கடலிலுள்ள அமிர்தத்தைக் கடைந்து எடுத்து உண்பீர்களானல் மரணமின்மையையும், பல செல்வங்களையும் வலிமையையும் பெறுவீர்கள். பாற்கடலிலிருந்து அமுதம் பெறுவதற்கு, மத்தாக மந்திர மலையை நாட்டி நாகை வாசுகியைப் பூட்டித் தக்க வலிமையுடன் இருபுறமும் நின்று கடையவேண்டும். ஆனல், இப்போது, தேவர்களாகிய நீவிர் அனைவரும் வலிமையின்றி வாடுகின்றீர்கள்; நீங்கள் அனைவரும் கூடினல் ஒரு புறம் தான் நிற்க முடியும், மற்ருெரு புறத்திற்கு அசுரர்களை ஆசைகாட்டிச் சேர்த்துக்கொள்வீர்களானல், அவர்கள் உழைப்பைப் பெற்றுக்கொண்டு கிடைக்கும் பொருள்களில் பங்கில்லாமல் ஏமாற்றிவிடலாம், எல்லா வழியிலும் நான் முன் நின்று உங்களைக் காத்து அமிழ்தம் ஈவேன்" என உறுதி கூறினர். தேவர் வாசுகியின் வாற்புறமும், அசுரர் தலைப்புறமுமாக நின்று கடைந்தார்கள். வாசுகி வலி பொறுக்காமல் நஞ்சைக் கக்கியது; கடலினின்றும் கொடிய நஞ்சு வெளிவந்தது; இரண்டும் கூடி ஆலாலமாகி அண்டங்களை எல்லாம் அழிப்பது போல் பரந்தது. திருமாலும், பிரமனும், தேவர்களும், அசுரர்களும் அஞ்சி, ஓடோடியும் சிவபெருமானைச் சரண் அடைந்தார்கள். சிவபெருமான் கொடிய ஆலகாலவிடத்தைத் தினையளவாகச் சுருக்கி அமுது செய்தருளி வானவரையும் தானவரையும் அழியாமற் காத்தார். இறைவன் நஞ்சு உண்டு வானவரை அமுதுண்ணச் செய்த பேரருளை, அந் நஞ்சு, இறைவன் திருமிடற்றில் நீலமணிபோல் நின்று உலகுக்குக் காட்டுகின்றது.

> "நாகந்தான் கயிருக நளிர்வரை அதற்கு மத்தாகப்
> பாகந் தேவரோடு அசுரர் படுகடல் அளறு எழக்கடைய
> வேகநஞ்சு எழ ஆங்கே வெருவொடும் இரிந்து எங்கும் ஓட
> ஆகம் தன்னில் வைத்து அமிர்தம் ஆக்குவித்தான்
> மறைக்காடே" (தேவாரம் 2459)

16. ஆகமம் வாங்கியது

14-ஆவது கதையிற் கண்டபடி உமையம்மையார் சிவபெருமானை மணந்து, தான் ஆகமங்களைக் கருத்தூன்றிக் கேளாமையால் வந்த விளைவு என்பதை உணர்ந்து, இறைவனை வேண்டி ஆகமங்களின் உண்மையை இறைவன் உரைப்ப அவர் கேட்டுத் தெளிந்தமையையும், கடலில் எறியப்பெற்ற ஆகமங்களை நந்திதேவர் சுருவடிவில் சுமந்து கொண்டிருப்ப, அத்தேவர் சிவபெருமான் வீசிய வலையில் பிடிபட்ட போது ஆகமங்களும் அவருடன் வலையிற்பட்டு மீண்டும் நிலவுலகுக்கு வரச் செய்ததையும் குறிப்பிடுகின்றது.

17. ஆட்டின் தலையை விதிக்குக் கூட்டியது

60-ஆவது கதையைப் பார்க்க. விதி என்பது பிரமனுடைய பெயர்களுள் ஒன்று. துணைப் பிரமர்களில் ஒருவனாகிய 'தக்கன்' சிறு விதி எனப் பெறுவான். இங்கு விதி என்பது துணைப்பிரமர்களுள் ஒருவனாகிய தக்கனுக்கே வழங்கப்பெற்றுள்ளது.

18. ஆலாலம் உண்டது

15-ஆவது கதையைப் பார்க்க.

19. ஆலின் கீழ் அறம் உரைத்தது

சநகர், சநந்தனர், சநாதனர், சநற்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் சிவபெருமான் ஞானாசிரியனாகக் கல்லாலின் கீழ் வீற்றிருந்து, சரியை, கிரியை, யோகம் என்னும் முதல் மூன்று பகுதிகளை விளக்கிக் கூறி, நான்காவதாகிய ஞானத்தை, இருந்தபடி இருந்து, மோன முத்திரையினால் அருளிச்செய்தார் என்பது பெரு வழக்கிலுள்ள வரலாறு. சிவபெருமான், இந்தத் திருக்கோலத்தில் தக்ஷிணாமூர்த்தி அல்லது தென்முகக்கடவுள் எனப் போற்றப் பெறுவர்.

> கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறு அங்கமுதல்
> கற்ற கேள்வி
> வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கு
> அப்பாலாய்
> எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து
> காட்டிச்
> சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்
> தொடக்கை வெல்வாம் – திருவிளையாடல்.

சிவபெருமான் திருவுருவத்தையே ஐம்புலன்களாலும் துய்த்து மனம் இறந்த மாண்பினராய் எவ்வுயிர்க்கும் தண்மையே பூண்டு ஒழுகும் அறவோர்க்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் உண்மைகளையும், முக்கண்ணன், திருவாய் மலர்ந்தருளினன்

என்றும், ஐந்தவிந்தடங்கிய ஆன்றோர் காட்சியிற்கண்ட உண்மைகள் பொதிந்த முதல் நூல்களின் வழி நின்று இறைவன் தாளினை அடைய முயன்றோர்க்கு, அவன் திருவருள் காட்டிய நெறியே, ஆலின் நீழலில் அருமறையாகச் சொல்லப்பெற்றதென்றும், அறநெறிகளைக் கிளரும் நான்கு வேதங்களை ஆலின் கீழ் அமர்ந்து நிமலன் அருளினான் என்றும், நேர்மையான நான்கு மறைகளின் பொருளை உரைத்ததோடு திருவருட் பிரகாசமாகிய பேரொளியைச் சேரும் சிறந்த வழிகளையும் அருளினான் என்றும், ஆளுடைய பிள்ளையார் கூறுகின்றார். (575, 515, 1411) திருவாதவூரடிகள், ஆலின் கீழ் உரைத்த அறம் முதல் நான்கால் அருந்தவர் உலகியற்கையைத் தெரிந்தனர் எனக் கூறுகின்றனர். ஆலடி அமர்ந்த தென்முகக் கடவுளை முன்னிலைப் படுத்தித் தாயுமானவர் பாடியுள்ள 'சின்மயானந்தகுரு' என்னும் பகுதி படித்துப் பயன் கொளற்பாலது.

20. இத்திதன்னில் இருமூவர்க்கு அருளியது

முன்பு ஒரு காலத்தில், திருக்கயிலாயமலையில், உமையவள் உடனிருப்ப, சிவபெருமான் போக குருமூர்த்தியாய் எழுந்தருளி, சிவகணத் தலைவர்களுக்கும் முனிவர்களுக்கும், அரிய மறைப் பொருளை இனிமையாகச் சொல்லிக் கொண்டிருக்கும் போது, முருகக் கடவுளுக்குப் பால் கொடுத்த கார்த்திகைப் பெண்களான இயக்க மாதர் அறுவரும், எம்பெருமான் திருவடிக் கமலங்களை வணங்கித் தங்களுக்கு அட்டமா சித்தியை உபதேசித்தருள வேண்டினார்கள். இறைவன் கருணைகொண்டு உபதேசம் செய்து, உடனிருக்கும் உமையைச் சுட்டிக் காட்டி, "அட்டமாசித்திகள் சேடிகளாகப் பணி கேட்கும், இந்த அம்மையை இடைவிடாது சிந்திப்பீர்களாயின் இச் சித்திகள் அனைத்தும் நிலைக்கப்பெறுவீர்கள்" என்றும் உறுதிகூறினார். வினைவயத்தால் இயக்கமாதர் உமைவழிபாட்டை மறந்து சித்திகளும் கைவரப் பெறுமற் போயினர். அவர்கள் மறந்த குற்றத்திற்காக, சிவபெருமான் சாபத்துக்கு ஆளாகி, பாண்டி நாட்டில் பட்டமங்கை என்னும் பதியில் ஒரு ஆலமரத்தின் (இத்தி என்றும் பேசப் படுகிறது) கீழ், கற்பாறைகளாகக் கிடக்க வேண்டியாதாயிற்று. பல ஆயிரம் ஆண்டுகள் கழித்து, மதுரையில் எழுந்தருளியுள்ள திருக்கோலத்தில் சிவபெருமான், பாறையாகக் கிடந்த இயக்கமாதர் முன் தோன்றி சாபத்தை விடுதலை செய்து மீண்டும் அட்டமாசித்திகளை அவர்களுக்கு உபதேசித்தார். இயக்கமாதரும் உபதேசப்படி பயின்று உமையம்மையை வழிபட்டு வான்வழியாகக் கயிலையை அடைந்தார்கள்.

21. இந்திரஞாலம் காட்டிய இயல்பு

வாதவூரடிகளுக்குச் சிவபெருமான் ஞானாசிரியனாகத் தோன்றி இவ்வுலக வாழ்வு நிலையாதது என உணர்த்தியதைக் குறிப்பதாகும். இக் கருத்தையே" இந்திரஞால இடர்ப் பிறவித்துயர்" என 635ஆம் செய்யுளிலும் குறிப்பிடுகின்றார். இந்திரசாலம், கனா, கழுதிரம்

(கானல்நீர்) என்பன உலக நிலையாமைக்கு எடுத்துக்காட்டுகளாக நூலோர் கொண்டனவாகும். இந்திரசாலம் தோன்றும் பொழுதே இல்லையாய் வேருதற்கும், கனு, முற்றும் நிகழ்ச்சியின்றி இடையில் மாறுதலுக்கும், கானனீர், ஒரு காரணங்காட்டி அழிவெய்தலுக்கும் உவமையாவன. 'இந்திரஞாலம் காட்டிய இயல்பு' என்பதற்கு இறைவன் நரிகளைப் பரிகளாகச் செய்த மாயத்தைக் குறிப்பிடுவதாகவும் சிலர் கூறினர்.

22. இந்திரனைத் தோள் நெரித்தது

60–ஆவது கதை பார்க்க.

23. இயக்கிமாரை எண்குணம் செய்தது

அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், சிம்புருடர், கந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பிசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகர்யவாசியர், போகபூமியர் என்னும், பதினெண் கணத்துள் இயக்கர் என்பர் ஒரு பகுதியினர். அப்பகுதியைச் சேர்ந்த பெண்பாலர் அறுபத்து நால்வர் சிவபெருமானை நோக்கித் தவம் செய்து, தன் வயத்தர் ஆதல், தூய உடம்பினர் ஆதல், இயற்கைஉணர்வினர் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கல், பேரருள் உடைமை, வரம்புஇல் இன்பம் உடைமை என்றும் எட்டு வகையான பேறுகளையும் பெற்ற ஒரு பழஞ் செய்தியைக் குறிப்பிடுகின்றது. இந்த வரலாறு ஆந்திரம், கன்னடம், தென்மராடம் முதலிய நாடுகளில் சில சிற்றூர்களில் வழங்கி வருகிறதென்றும், சில கோயில்களில் கற்சிலைகளும் காணப் பெறுகின்றதென்றும் கூறுவர்.

24. இராவணன் பரிசு அழிந்தது

9–வது கதை பார்க்க.

25. இலங்கையில் பந்தணை விரலாட்கு அருளியது

திருவுத்தரகோசமங்கையில், முன்பு ஒரு காலத்தில், இலந்தையம்பொதுவில் சிவபெருமான் அருட்டிருமுன், ஆயிரம் முனிவர், நின்று ஆகமப் பொருளைக் கேட்டுக் கொண்டிருந்தனர். அப்போது இலங்கைவேந்தன் இராவணனது கற்பிற்சிறந்த மனைவியின் பூசனைக்கு அருள் செய்யவேண்டி, இம் முனிவர்களையும் விடுத்து இலங்கை மன்னன் மனைவிக்கு அவள் வேண்டியபடி குழந்தை உருவத்தில் காட்சியளித்து அருள் செய்தார். சிவ வழிபாட்டில் சிறந்த வனுகிய இராவணனும், குழந்தை உருவிற் கிடந்த சிவபெருமானைத் தூக்கி எடுத்து உச்சிமோந்து பேரானந்தம் கொண்டான். வண்டோதரி, தன் கணவனுக்குச் சிவபெருமானைத் தொட்டு எடுத்து மார்பில் அணைத்துக்கொள்ளும் நற்பேறு கிடைக்க வேண்டுமென்றே, குழந்தை உருவில் காட்சியளிக்க வேண்டினள் போலும்.

26. எச்சன் தலையை அரிந்தது

60-ஆவது கதையைப் பார்க்க.

27. எரி மூன்று தேவர்க்கு அருளியது

மண்ணகத்தில் அந்தணர் ஓம்பும் வேள்வித்தீயின் வகையாகிய ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி, என்னும் மூன்று எரி (தீ)யையும் தேவர், பிதிரர், முதலியோர் அடையுமாறு வகுத்த இறைவனது பேரருள் குறிப்பிடப்பட்டது.

28. எரியைக் கரம் தூய்மை செய்தது

60-ஆவது கதை பார்க்க.

29. ஏகம்பத்தில் இயல்பாய் இருந்தது

முன்பு ஒரு காலத்தில் சிவபெருமானும் உமையம்மையும் தலைவன் தலைவி முறையில் மகிழ்பொங்க விளையாடிக் கொண்டிருக்கும் போது, அம்மை, இறைவன் கண்களைப் புதைத்தார். இரு கண்களும் இரு சுடர்களானபடியால் (கதிர், மதி) கண்கள் அம்மை திருக்கரத்தால் புதைபட்டவுடன் உலகம் எங்கும் இருள் பரவியது. உயிர்கள் எல்லாம் நடுக்குற்றன. யாவும் மயங்கின. இறைவி கரம் நீத்தவுடன் மீண்டும் ஒளி பரவியது. உலகத்தில் ஒளியை மறைத்து இருளைப் பரவச் செய்தல் தீய செயலானபடியால், அத்தீமையினின்றும் தீர்வு பெறுதற்கு, அம்மை, காஞ்சிநகரை அடைந்து முறைப்படி முப்பத்திரண்டு அறங்களையும் செய்து சிவ பூசையை நியமம் தவருது செய்து கொண்டுவர வேண்டும் எனப் பணித்தார். அம்மையாரும் காஞ்சியை அடைந்து எண்நான்கு அறங்களையும் எழில் பெறச் செய்து,

" ஆனுடைப் பாற்குடம் கோடி அருஞ்சுவை நெய்க்குடம் கோடி
தேனுடைப் பொற்குடம் கோடி செழுங்கரும்பு அட்டதண்சாறு
தானிறை பொற்குடம் கோடி தயிருடைப் பொற்குடம் கோடி
வானமிழ்தக் குடம் கோடி "

ஒரு சார் சேடியர் கொணரவும், பல்வகைப்பட்டும் ஒருசாரர் கைஏந்தி நிற்கவும் பல்வகைத் தீபமும் ஒரு சாரர் ஏந்தி நிற்கவும்.

"வழுவறு தோற்றமாதி வழுக்கிய பாவத்தீமை
கழுவநின் பூசை இந்நாட் கடைப்பிடித்து அருளால் செய்கேன்"

என்று சங்கற்பம் செய்து கொண்டு சிவபூசை செய்து வருநாளில், கம்பையாறு பெருகிக் கடல் புரண்டாற்போல் பரந்து வந்தது. தான் பூசை செய்துவரும் சிவலிங்கத் திருவுருவுக்கு என்ன நேருமோ என்ற அச்சத்தால் நடுநடுங்கி வேதியின் மேல் தன் வல முழந்தாளை ஊன்றி இரு திருக்கரங்களாலும் சிவலிங்கத்தைத் தழுவிக் கொண்டார். உடனே " சுந்தரம் திகழ்சுடர் ஒளி இலிங்கத்தினின்று, முந்து தோன்றினர் மூவருக்கு அறிவருமுதல்வர்." பின்னர்

இறைவனும் இறைவியும் திருமணக்கோலத்துடன் அடியவர்க்குக் காட்சியளித்தனர். இதன்கண் இயல்பான பல நிகழ்ச்சிகள் பொதிந்துள்ளமை காண்க.

30. ஏனக்குருளேக்கு அருளியது

முன்னொரு காலத்தில் வேளாளர் குலத்திற் பிறந்த சேனைத் தலைவன் ஒருவனுக்குப் பன்னிரண்டு பிள்ளைகள் பிறந்து சிறப்புற வளர்ந்து வரும்போது, சேனைத்தலைவனும் அவன் மனைவியும் இறப்ப, பன்னிரு பிள்ளைகளும் போற்றுவாரின்றி, நாட்டைவிட்டு வேற்று நாட்டுக்குச் சென்று காடுகளைத் திருத்தி வயிறு வளர்த்து வந்தார்கள். ஒரு நாள், அந்தக் காட்டில் தவம் செய்துவந்த ஒரு முனிவனைப் பார்த்துச் சிரித்து ஏளனம் செய்தார்கள். முனிவன் சீற்றம் கொண்டு "நீவிர் பன்னிருவரும் பன்றிக்குட்டிகளாகப்பிறந்து, தாயை இழந்து இன்னலுறுவீர்களாக" என சுடுமொழி கூறினான். தங்கள் குற்றத்தை உணர்ந்து முனிவனைப் பணிந்து, சுடுமொழியை விடுவிக்க மன்றாடிக் கேட்டனர். முனிவனும் இரங்கி "சோமசுந்தரக் கடவுள், உங்களுக்கு நற்கதி அளிப்பார்" எனப் பகர்ந்தான். அவ்வாறே பன்னிருவரும் பன்றிக் குட்டிகளாகப் பிறந்தனர்; தாய்ப் பன்றியை, அங்கு வேட்டையாடிவந்த அரசன் எய்து கொல்லவே, அக்குட்டிகள் பால் இல்லாமல் துயருற்று அழுங்குவனவாயின. இத் துயர் கண்டு உலகுக்கு எல்லாம் அம்மையப்பராகிய சோமசுந்தரக் கடவுள், கேழல் உருவத்துடன் வந்து அப் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்து வளர்த்தார். அவையும் யானைக் கன்றுபோல் ஓங்கி மேட்டைப் பள்ளமாகவும் பள்ளத்தை மேடாகவும் கோட்டால் உழுது திரிந்தன.

பின்னர், திருவருளால் பன்றியாக்கையை விட்டு ஒரு வேளாண் தலைவனுக்குப் பிள்ளைகளாப் பிறந்து ஒத்த உருவம், நிறம், அறிவு, குணம் முதலிய வாய்க்கப்பெற்று உலகத்தோர் மதிக்கும் வண்ணம் வளர்ந்தனர். இவர்களது அறிவின் மேம்பாட்டைக் கேள்வியுற்ற பாண்டியன், பன்னிருவரையும் அழைத்து, அவர்கள் ஒரே தன்மையாய் விளங்குவதைக்கண்டு மந்திரிகளாக அமர்த்தினான். அவர்களும், படிப்படியாக அரசாங்கப் பணியில் உயர்ந்து தலமெலாம் அதிசயிப் பச்சாற்றரும் பகை கடந்து சிலைபொலி தடக்கை வேந்தைத் திசை விசயஞ் செய்வித்து வரிசை புனை வன்னியராகிச் சிலகாலம் மண் மேல் வாழ்ந்து கொன்றைச் சடிலமுடியான் திருவருளால் சிவலோகம் புக்கனர். அவர்கள் வாழ்ந்த மலை பன்றிமலை என வழங்கப் பெறுகிறது.

31. ஏனத் தொல்எயிறு அணிந்தது

தேவர்களுக்குப் பேரிடர் இழைத்துவந்த இரணியாக்ஷன் என்னும் அசுரன் நிலமடந்தையைக் கவர்ந்து கீழுலகத்திற்குக் கொண்டுபோய் மறைத்துவைத்து விட்டான். தேவர்கள் எல்லாம்

நடுங்கினார்கள். திருமால் பன்றி உருவம் கொண்டு மலைபோல் வளர்ந்து நொடிப் பொழுதில் பாதலத்திற் புகுந்து இரணியாக்ஷனைக் கொம்பினால் குத்திக் கொன்று, நிலமகளை மீண்டும் தன் நிலையில் நிலைக்கச் செய்தார். இந்த அருஞ்செயலால், திருமால், தானே பரம்பொருள் என்று எண்ணி அகந்தை கொண்டு நிலத்தைத் தன் கொம்புகளால் தோண்டிக் கடலை உடைத்தார். சிவபெருமான், திருமாலின் அகந்தை அகல, அவர் கொம்பு ஒன்றைப் பறித்தார்; திருமாலும் நல் நினைவு வரப்பெற்றுப் பன்றி உருவத்தைப் போக்கித் தன் மூதுருவத்தோடு சிவபெருமானை வணங்கினார். திருமாலிட மிருந்து பறித்த எயிற்றை வெற்றி அணிகலனாக மார்பில் பிறை போல் ஒளிரும் வண்ணம் அணிந்தார்.

32. ஏனப்பின் கானகத்தே நடந்தது

பாண்டவர் மறைந்துறையும் நாட்களில், அவர்களுள் முதல்வரான தருமர், தம் தாயத்தாருடன் போர்செய்துதான் தம் பங்கு நாட்டைப் பெறவேண்டிவரின் என் செய்வது எனக் கவலை கொண்டிருந்தபோது, இந்திரன், ஒரு முதிய அந்தணன் வடிவில் தோன்றி, அவர்களுள், அருச்சுனனை ஒத்த வீரர் உலகில் இல்லை என்றும், சிவபெருமானை நேரில் ஒருமுறை அருச்சுனன் கண்டு விடின், தெய்வப்படைக்கலங்களைப் பெற்று, தனிவீரனாக நின்று ஒருவனாகவே துரியதோனன் கூட்டத்தையும் துணைவர்களையும் புறங்காண்பன் என்றும் அறிவுரை வழங்கினான். அருச்சுனன் இமய மலைச்சாரல் சென்று கடுந்தவம்புரிந்து சிவவழிபாடு செய்துகொண்டு இருந்தான். ஒரு நாள் சிவபூசை செய்து கொண்டிருக்கும் போது அவனைக் கொல்லவருவதுபோல் ஒரு பன்றி நெருங்கியது; உண்மையில், பக்தியிலும் வீரமே மிகுந்துள்ள அருச்சுனன், பூசையையும் மறந்து, வில்லை வளைத்து பன்றியை நோக்கி எய்தான். ஒரே கணையில் பன்றி விழுந்தது. ஆனால், அருச்சுனன் கணைபட்ட அதே சமயத்தில், வேறு ஒரு கணையும் அப்பன்றிமேல் விழுந்தது. அக் கணையை எய்தவன் யாவன் என்று அருச்சுனன் சினந்து நோக்க ஒரு வேடுவன் அருகில் நின்றான். இருவருக்கும், பன்றியை முதலில் எய்தவர் யார் என்பதில் விவாதம் ஏற்பட்டு விற்போரும் மற்போரும் நடந்தது. விற்போரில் வெல்லவியலாத அருச்சுனன் மற்போரில் வெல்ல எண்ணி, வேடனைத் தாளைப்பற்றி புறம்தள்ள எண்ணி இருகையாலும் தாளைப் பிடித்தான். வேடுவனைக் காணவில்லை. சிவபெருமான் உமையுடன் காட்சியளித்து வேண்டிய படைக்கலங்களையும் வரங்களையும் அருளினார்.

33. ஐயம் புகுந்தது

முன்பு ஒரு காலத்தில், தாருகாவனத்தில், ஒரு முனிவர் கூட்டம் இருந்தது. அக்கூட்டம், தெய்வசிந்தனை ஒரு சிறிதும் இன்றி, இம்மை மறுமைப் பேறுகள் அனைத்தையும் கன்மத்தினாலேயே பெறலாம் என்ற துணிவுடன், உடல் வருந்த அளவற்ற தவங்களைச்

செய்து கொண்டும் வேள்விகளைச் செய்து கொண்டும் தெய்வத்தின் அருள் இன்றியே எல்லாம் கைகூடும் என்னும் எண்ணங்களை வலியுறுத்திக் கொண்டும் வந்தது. இதனால் உலகுக்குப் பல தீமைகள் விளைவனவாயின. தெய்வத்திருவருள் இல்லாமல் எச்செயலும் நிலைபெற்று ஓங்காது என்பதை அம்முனிவர் கூட்டம் உணர்ந்து நலனடையவேண்டி, சிவபெருமான், அழகிற் சிறந்த ஆடவன் உருக் கொண்டு ஆடையின்றி அவ்வனத்துள் நுழைந்து முனிவர் மனைவியர் இருக்கும் பகுதியுள் சென்று இனிய இசையைப் பாடிக்கொண்டு ஐயம் ஏற்கத் தொடங்கினர். ஒப்பற்ற ஆடவன் அழகில் தம் சிந்தையைப் பறிகொடுத்து 'நிறை அழிந்த அம்முனிவர் மனைவியர், பிக்ஷாடனமூர்த்தி (ஐயம் ஏற்கும் கோலம்) யாகிய சிவபெருமானைத் தொடர்ந்து சென்று காமமயக்கம் கொண்டு கருவுற்று நாற்பத்தெண்ணாயிரம் புதல்வர்களைப் பெற்றனர். இவ்வாறேகண்டார் மயங்கும் பெண்ணுருவமாகிய மோகினி வடிவுடன் திருமால், முனிவர்களது இருக்கை நோக்கிச் செல்ல, அம்முனிவர்கள் காமவேட்கை மிகுந்து, தவவலி குன்றி, தங்கள் தங்கள்கன்மங்களை விடுத்து, விளக்கில் விழும் விட்டில்கள் போன்று மோகினியைச் சூழ்ந்து கொண்டு பல பலவாறு பிதற்றிக் காமத்தீயால் வெதும்பினார்கள். சிவபெருமானும் திருமாலும் மறைந்தவுடன், முனிவர்கள், தாங்களும் தங்கள் மனைவியரும் தவ வலியையும் கற்பு நிலையையும் கைவிட்டு மிக்க இழிந்த நிலையை அடைந்ததைக் கண்டு நாணமும் சீற்றமுங்கொண்டுத் தீயகொள்கையையே பின்பற்றி, தங்களுக்கு இழிவு உண்டாக்கிய சிவபெருமானை அழித்துவிடுவதாக அறியாமையால் ஆணவம் கொண்டு, பிறர்க்குத் தீங்கிழைக்கும் வேள்வியாகிய அபிசார ஹோமம் ஒன்றைச் செய்தார்கள். அந்த வேள்விக் குண்டத்திலிருந்து வலிமை மிக்க கொடிய புலி ஒன்று இடிபோல் முழங்கிக்கொண்டு எழுந்தது முனிவர்கள் அப் புலியை, சிவபெருமானைக் கொல்லுமாறு ஏவினார்கள். புலி யாவரும் நடுங்குமாறு சிவபெருமான் முன் சென்று முழங்கியது. சிவபெருமான், அப்புலியைப் பிடித்து அதன் தோலை உரித்து, ஆடையாக அணிந்துகொண்டார். பின்னர் ஒரு முத்தலைச் சூலம் தோன்றியது; அதை முனிவர்கள், சிவபெருமானிடம் செலுத்தினார்கள். அவர், அம்முத்தலைச் சூலத்தைப் பற்றித் தனக்குப் படையாக ஏற்றுக்கொண்டார். பின்னர், மான் ஒன்று தோன்றிச் சிவபெருமான் திருமுன் சென்றது, அதனைத் தன் இடதுகையில் ஏந்திக் கொண்டார். பின்னர், அவ்வேள்வித் தீயினின்றும் எழுந்த, பாம்பு, பூதப்படை, வெண்தலை, உடுக்கை முதலியவையெல்லாம் சிவபெருமான் திருமுன் சென்றவுடனேயே ஆற்றல் அழிந்தவைகளாய் அவன் திருவருள்பெற்று, அணியாய், ஆளாய், கருவியாய் அடைக்கலம் புகுந்தன. இவைகளால் எல்லாம் தாங்கள் எண்ணிய தீச்செயல் இயலாமைக் கண்ட தாருகாவன முனிவர்கள், இறுதியாகத் தோன்றிய முயலகன் என்னும் ஒரு பூதத்தையும் வேள்வித் தீயையும் ஏவினார்கள். சிவபெருமான் வேள்வித்தீயை ஒரு கையில்

ஏந்திக்கொண்டு முயலகனைத் திருவடியால் கீழே தள்ளி அவன் முதுகின்மேல் திருவடியை ஊன்றிக்கொண்டு நடனம் ஆடினார். உலகங்கள் எல்லாம் நடுங்கின, தாருகாவனத்து முனிவர்கள் நடு நடுங்கி வீழ்ந்தார்கள். திருமால், நான்முகன், இந்திரன் முதலிய தேவர்களெல்லாம் நடனத்தைக் கண்டு மகிழ்ந்தார்கள். உலகமும் உயிர்களும் நடுங்கி அயர்வதைக் கண்ட சிவபெருமான், நடனத்தை நிறுத்தித் தன்னை வணங்கிய தேவர்களுக்கெல்லாம் ஆனந்தம் அருளி, தாம் செய்த குற்றத்தை உணர்ந்து பொறுத்தருளுமாறு வேண்டிய தாருகவன முனிவர்களுக்கும் சிவஞானம் கைவரத் திருவருள்செய்தார்.

34. ஐயாறு அதனில் சைவனாகியது

திருவையாறு என்னும் திருப்பதியில் கோயில் கொண்டருளும் அறம் வளர்த்தநாயகியுடன்கூடிய ஐயாறப்பரை ஆகமப்படி வழிபாடு செய்துவரும் ஆதிசைவர்களில் ஒருவர், கங்கை நீராடிக் காசியம்பதியில் கோயில்கொண்டருளும் சிவபெருமானை வணங்கச் சென்றிருந்தார். பல ஆண்டுகளாகியும் அவர் திரும்பவில்லை. இதுகண்ட மற்ற ஆதிசைவர்கள், அவருடைய காணி, முறை, முதலிய உரிமைகளைத் தங்களுக்குள் பகுத்துக்கொண்டு, அவருடைய இல்லத்தார் வருவாயின்றி வாட்டமுறச் செய்தனர். வாட்டமுற்ற அந்த ஆதிசைவருடைய மனைவியார், உற்றார் இலார்க்கு உறுதுணையாகும் ஐயாறப்பனுடைய பொற்றாளை வணங்கி முறையிட்டார். அற்றார்க்கும் அலந்தார்க்கும் அடைக்கலம் ஆகிய ஐயாறன், கங்கை நீராடச் சென்ற ஆதிசைவருடைய தோற்றத்தில் தோன்றி, அந்த ஆதிசைவருடைய காணி, முறை, முதலிய உரிமைகளை மறுமுறையும் பெற்றுத் தானே தன் திருவுருவத்துக்கு வழிபாடியற்றினர். இந்த நிலையில் கங்கையாடச் சென்றிருந்த ஆதிசைவர் தம் ஊர் திரும்பினார்; தன் நிலையில் வேறு ஒருவர் வழிபாடு செய்துவருவதைக் கண்டு அச்சமும் வெகுளியும் கொண்டு, உண்மையாக ஊர்சென்று மீண்ட ஆதிசைவர் தானே என்பதை, மற்ற ஆதிசைவர்களிடம் விளங்கக் கூறினார். பின்னர், ஒரே தோற்றத்தில் வந்துள்ள இரு ஆதிசைவர்களும், தங்களுள் உண்மையான உரிமையுடைய ஆதிசைவர் யாவர் என்பதை மெய்ப்பிப்பதற்காகத் திருக்கோயிலுள் புகுந்து, சிவபெருமான் திருவுருவத்தின் முன்பு வரும்போது, ஆதிசைவராக வந்த சிவபெருமான், திருவுருவத்தில் மறைந்தனர். இந்த அருட்காட்சியினைக் கண்ட ஆதிசைவர்களும் அடியவர்களும், சிவபெருமான் திருவருளைப் போற்றிப் புகழ்ந்து வணங்கினார்கள்.

35. ஓரியூரில் பாலனாகியது

முன்பு ஒரு காலத்தில், பாண்டிய நாட்டிலுள்ள பெருங்கிராமம் என்னும் ஊரில், குலத்தாலும் ஒழுக்கத்தாலும் மிக்க சிவமறையோன் ஒருவன், தன் அருமை மகளாகிய கௌரியை, வேதம்வல்ல,

ஆலவாய்அண்ணலை ஒத்த அழகமைந்த பிரமசாரி ஒருவனைத் தேடித் திருமணம் செய்து கொடுக்க எண்ணியிருந்தான்; அப்போது அவன் இல்லத்தில் பிச்சை கொள்ள வந்த ஒரு பாகவதப் பிரமசாரியின் தோற்றத்திலும் வேத நூற் பயிற்சியிலும், பிரமசரிய நெறியிலும் மனம் மகிழ்ந்து, தன் மகளை அவனுக்கு, தந்திர நூன் மறை விதியில் மணஞ்செய்து சடங்கு முடித்து இனிய பல நல்கி வழி அனுப்பினன். பிரமச்சாரியாகப் பரதேசம் போன பிள்ளை அணி பொலிய மணம் செய்து மாதினெடும் ஊர் வரக்கண்ட உற்ருர் உறவினர் எல்லாம் அவன் பெற்ருேரைப் புகழ்ந்து மகிழ்ந்தார்கள். ஆனல், மணமகனின் தாய், தனக்கு மருகியாக வாய்த்தவள் சைவன் மகள் என்பது கண்டு மனம் கொதித்தாள். மணம் செய்து கொண்டுவந்த இளையோனும், கௌரிபால் மனம் செல்லாமல் இளமையைக் கழித்தான். தான் புகுந்த அகத்தில் பாகவதர்களே அளவிறந்து புசிக்க, நீறு பூசியவர் ஒருவரேனும் வாராதது கண்ட கௌரி வருந்தினள். ஒரு நாள் கௌரியின் மாமன் மாமி முதலியோர் வேற்றூருக்குச் சென்றிருந்தனர். அப்போது, வயது முதிர்ந்த வேதியர் ஒருவர் சைவத்திருக்கோலத்துடன் தள்ளாடி நடந்து கௌரியின் இல்லத்தில் பிச்சை கேட்டார். வேற்றூர் சென்ற மாமி அறைக் கதவுகளை எல்லாம் அடைத்துப் பூட்டியிருந்த படியால் ஒன்றும் செய்ய வியலாது வருந்தினள். "அடிகாள் என் செய்வேன் அமுதுபடி புறம்பில்லையே, அறைகள் எல்லாம் அடைத்துள்ளனவே" எனக் கலங்கிக் கூறினள். விருத்த வேதியர் "அணங்கே என் பசி பெரிது, நீ அறையின் அருகே செல்வாயேல் கதவம் தானே திறக்கும்" எனக் கூறினர். அவ்வாறே கதவம் திறக்க, வேண்டிய எடுத்து விருப்புடை அடிசில் அமைத்து முதிய அந்தணற்குப் படைத்தாள். விருந்து உண்ட பின் விருத்தவேதியன் இளங் குமரனைத் தோன்றினன். இவ்வமயம், வேற்றூர் சென்றிருந்த மாமன் மாமியர் வீட்டுக்குள் நுழைந்தனர். இளங்குமரன் ஒரு பாலகன் உருவம் கொண்டான். இளங் குழந்தை தன் இல்லத்தில் தவழுவதைக்கண்ட மாமி வெகுண்டு "பிறர் குழந்தையை நீ ஏன் சீராட்டிக் காப்பாற்றுகின்ருய்" எனக் கடுமொழி கூறி, பாலகனையும் கௌரியையும் தன் வீட்டை விட்டு வெருட்டினள். குழந்தையும் கௌரியும் மறைந்தனர். அனைவரும் காண விண்ணில் சிவபெருமானும் உமையம்மையும் தோன்றினர். இது நிகழ்ந்த இடம் ஓரியூர் என எண்ண வேண்டியிருக்கிறது.

36. ஓவிய மங்கையர் தோள் புணர்ந்தது

14-வது கதையைப் பார்க்க, 'இருங்கடல் வாணற்குத் தீயிற் ருேன்றும் ஓவிய மங்கையர்' என்பதனல், கடல் அரசனுகிய செம்படவனுக்கு மகளாகத் தோன்றிய உமையம்மையே எழுது பாவையொத்த எழிலுடையார் என்னுங் கருத்துப்பெற ஓவிய மங்கையர் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளதாகக் கருதுகின்றனர்.

37. கங்காளம் தாங்கியது

தோன்றியவை எல்லாம் அழிந்து சிவபெருமான் ஒருவரே தனித்து நிற்கும் இறுதிக் காலத்தில், படைத்தற் கடவுளும் காத்தற் கடவுளுமாகிய அயன் மால் இருவருடைய தவத்தின் பயனாக அவர்களுடைய எலும்புக்கூடு, சாம்பல், சிகை, தலை முதலியவற்றை அணிந்து அருள் செய்வார்.

" பெருங்கடல் மூடிப் பிரளயங் கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும்; இறந்தான் களேபரமும்,
கருங்கடல் வண்ணன் களேபரமும் கொண்டு கங்காளராய்
வருங்கடல் மீள நின்று எம் இறை நல்வீணை வாசிக்குமே "
(தேவாரம் 5214)

38. கங்கையைத் தாங்கியது

1. கங்கை, இமவானுடைய மூத்த மகளும், உமை, இளைய மகளும் ஆவார். கங்கை, வானுலகத்தில் பரந்து, விரைந்து, ஆழ்ந்து பேராழிபோல் சுழன்று கொண்டிருந்தது; இதன் வேகத்தை ஒடுக்கிச் சிவபெருமான் தன் சடையில் கரந்தனர்.

2. ஒரு காலத்தில் விளையாட்டாக, சிவபெருமானுடைய திருக்கண்களை உமையம்மையார் மூடினார், அப்போது அம்மையின் கைவிரல்களில் தோன்றிய வியர்வை, கடல்போலப் பெருகிப் பத்துப் பேராறுகளாக (கங்கைகள்) எல்லா உலகங்களிலும் பரவியது. யாவரும் அஞ்சி முறையிடவே, சிவபெருமான் அதன் பெருக்கை அடக்கிச் சடையில் அணிந்தார்.

3. தன் முன்னோர்கள் நற்கதியடையும் வண்ணம், அவர்களது என்பினைக் கங்கையில் தோய்க்க வேண்டி, அவ் வான்ஆற்றினை நிலவுலகுக்குக் கொண்டுவரக் கடுந்தவம் இயற்றிய பகீரதனது தவத்துக்கு இரங்கிச் சிவபெருமான் தன் சடையில் கங்கையைத் தாங்கி அதன் வேகத்தை அடக்கி நிலவுலகிற்கு அளித்தார்.

' பாயிருங் கங்கையாளைப் படர் சடை வைப்பர் போலும் '
(தேவாரம் 4696)

' பாரகம் விளங்கிய பகீரதன் அருந்தவம் முயன்ற பணிகண்டு
ஆரருள் புரிந்து அலைகொள் கங்கை சடை ஏற்ற அரன் '
(தேவாரம் 3542)

' பாங்குடைத் தவத்துப் பகீரதற்கு அருளிப் படர்சடைக்
கரந்த நீர்க் கங்கை
தாங்குதல் தவிர்த்துத் தராதலத்து இழித்த தத்துவன்
உறை இடம் '
(தேவாரம் 4113)

39. கடலில் வலைவாணன்

14-வது கதை பார்க்க.

40. கண்ணப்பர்

திருக்காளத்தியைச் சூழ்ந்த பகுதி பொத்தப்பி நாடெனப்படும் அந்நாட்டுள் உடுப்பூர் என்றதோர் ஊருண்டு. அவ்வூருள், குற்றமே குணமாகக் கொண்டு வாழும் வேடர்தலைவன் நாகன் என்பான், தத்தையென்பாளை மணந்து மனையறம் நடத்திவந்தான். இவ்வாறு மனையறம் நடத்திவருகின்ற காலத்துத் தங்களுக்கு மகப் பேறு இல்லாதது கண்டு வருந்தி முருகவேளை வழிபட்டு ஓர் ஆண் மகவைப் பெற்றனர். அம்மகவு உடற்கட்டு வாய்ந்து திண்ணென்றிருந்தமையால் திண்ணன் என்று பெயரிட்டனர். புண்ணியப் பொருளாயுள்ள ஒப்பற்ற உருவுடையிவரைக் கண்ணிமை காப்பது போல் காத்து வளர்த்து வருவாராயினர். வேடர் குடிக்கேற்ற முறையில் உரியபருவத்தே இவர்க்கு விற்பயிற்சிசெய்து வில்விழா எடுத்துச் சிறப்புச் செய்தார்கள். ஆண்டுகள் பன்னிரண்டு நிரம்பின. தந்தை நாகனுர்க்கும் மூப்புவந்தெய்தியது.

இந்நிலையில், வன விலங்குகள் பயிர்களையழிக்கின்றன, அவற்றைத் தொலைக்க வேண்டுமென்று நாகன்பால் வேடர்கள் வந்து முறையிட்டனர்; நாகன், "முன்போல் என்னுல் வேட்டமேற் சேறலியலாது மூப்பு வந்தெய்தியது; ஆதலால் என்மகனை நுங்கட்குத் தலைவனுகக் கொள்மின்" என்ருன். அவர்களும் அங்ஙனமே தலைவனுக ஏற்றனர். உடனே தேவராட்டியை அழைத்துக் கன்னிப் போர்க்குச்செல்லும் திண்ணனுர்க்கு ஆசிகூறச் செய்தனர். அவளும் "நல்ல குறிகள்தோன்றுகின்றன. நின்னள வன்றி மேம்பட்டு வாழ்வான்" என்று வாழ்த்திச் சென்ருள்.

தெய்வம் வாழ்த்திச்சென்றபின், தாதை மகனை அருகழைத்துத் தன்னிலைகூறி "நீவேட்டமேற் சென்று வெற்றிபெற்றுவருக" என வாழ்த்தினுன். சுரிகை உடைதோல் இவற்றைக் கொடுத்தான். தந்தை நிலைகண்டு தான் ஏற்றுக்கொண்டார். வேட்டைக்குரிய வேடம் தாங்கினுர். அரியேறன்ன திண்ணனுர், தந்தை தாள் பணிந்து வெளிப்போந்து வேடரோடு சேர்ந்து புறப்பட்டார். வேட்டை நாய்கள் சூழ்ந்தன. கொற்றவை வில்லின்மேனின்ருள். வெற்றிக்குக்குறையே இல்லை. வேடர்கள்சூழக் காடு சென்று புதர்ப்பகுதிகளை வலையால் வளைத்துக்கட்டி, புதர்களில் மறைந்த விலங்குகளை நாய்களைக்கொண்டு உசுப்பினர். வெளி ஏறியவற்றைக் கொன்றனர். கொன்ருராயினும், அவர்கள் அறவேட்டையே யாடினர். எவ்வாறெனின்; யானைக்கன்றுகள், வேறு சில இளங் கன்றுகள், குட்டிகள், அடிதளர்ந்து செல்லும் கருவுற்ற பெண் விலங்குகள் இவற்றைக் கொலைபுரியார்; ஆதலால், இவர்கள் வேட்டையில் அறம் எவ்வளவுதூரம் நிலைபெற்ற தென்பதனை யறியலாம்.

இவ்வாறு நீண்ட வழிச் சென்றதன் பின், "வேட்டமேல் நீண்ட தொலை வந்துவிட்டோம். அதனுல் இளைத்தோம், பசிவந்துற்றது.

நீ தொலைத்த பன்றித்தசையைக் காய்ச்சித்தின்று வேட்டமேற் சொல்வோம்" என்றான் நாணன். திண்ணனார், "அங்ஙனமாயின் நீர் எங்குளது?" என்றார். "இம்மலைக்கப்பால் பொன்முகலி என்றோராறுண்டு" என்றான். ஆனால் அங்குச் சொல்வோமென்று சென்று சிறிது தொலைவில் குடுமித் தேவர் உறையும் மலையைக் கண்டார். மலையின்காட்சி, இறைவன் சிறப்பு இவற்றைச் சொல்லக் கேட்ட திண்ணனார், மலைமேல் ஏறும் தோறும் தன்மேல் பாரங் குறைவதாகவும், அன்பு, அங்கு, தன்னை விரைந்து இழுத்துச் செல்வதாகவும் கூறினார்.

ஏறிச்சென்றவர்கள், பொன்முகலி யாற்றின் கரையில் தங்க "தீக்கடைக் கோலால் தீயுண்டுபண்ணி கொணர்ந்த தசையைக் காய்ச்சுமின், யான் குடுமித் தேவரைக்கண்டு வருகின்றேன்" என்று, முன் செய் தவத்தின் ஈட்டம் முடிவிலா இன்பமான அன்பினை யெடுத்துக்காட்ட, நாணனும் அன்பும் முந்தத் தான் பின் சென்றார். சென்றவர், மலைமேல் கொழுந்தைக் கண்டார்; தழுவினார்; பெருமூச்செறிந்தார்; மயிர்க் கூச்செறிந்தன. கைச்சிலை விழுவதோராது, "இங்கு இவ்விடத்தைப் பூவோடு பச்சிலை பறித்திட்டு நீர் வார்த்தார் யாவரோ?" என்றார். அருகிருந்த நாணன் "ஒரு பார்ப்பனர் இவ்வாறு செய்து வருகின்றனர்" என்றான். குடுமித் தேவர் தனியாக இருப்பதாக எண்ணினார். "ஊன் இடுவாரில்லை, யானே சென்று கொணர்வேன்" என்று சென்றார். சென்றவர் முன் குறித்த இடத்துச் சென்றார். காடன் என்பான் "நுங்கள் குறிப்பின்படி இறைச்சியைப் பக்குவப்படுத்தினேன். தேவர் தாழ்த்ததென்" என்றான். உடனே நாணன் "மலையில் தேவரை அணைத்துக்கொண்டு தேவர்க் காட்பட்டார், அவர் தின்ன இறைச்சி கொணர வந்தார்" என்றான். கேட்ட காடன் "என் செய்தாய் திண்ணா? நீ தான் மால் கொண்டாய்; என்? என்றான். அவன் கூறியதனைச் செவியேற்காமல், கோலில் இறைச்சி கோத்துக் காய்ச்சி வாயிலிட்டு அதுக்கிப் பார்த்துப் பக்குவப்பட்டவற்றை இலையில் வைத்தெடுத்துக் கொண்டார். மருங்கு நின்ற வேடர் இவர் கடவுள் மயக்குற்றார் திருத்தவியலாதென்று கைவிட்டுப் போயினார்.

கானவர் போனபின், பக்குவப்படுத்தப்பட்ட ஊனைக் கையில் ஏந்தி, திருமஞ்சனமாட்ட ஆற்று நீரை வாயில் முகந்து, பூக்களைப் பறித்துத் தலைமேலிட்டுக் கொண்டு குடுமித் தேவர்க்கு மிகப் பசியுண்டாயிருக்குமென்று விரைந்தார். விரைந்து வந்தவர் இறைவன் முடி மீதுள்ள மலரைச் செருப்புக் காலால் தள்ளி வாயினீரால் மஞ்சனமாட்டி மலரை முடிமேலிட்டார். தான் கொண்டு வந்த இறைச்சி உணவு செய்யப்பெற்ற முறையெல்லாம் சொல்லி இறைவன் முன் படைத்து "அமுது செய்தருள்க" என்றார். இந்நிலையில் பொழுது சாய்ந்தது. மலைமேல் மருந்தனார்க்கு என்ன தீங்கு நேரிடுமோ என்று வில்லை யூன்றிய கையோடும் வெய்துயிர்ப்

போதும் இரவு முழுதும் காத்து நின்றார். நின்றவர், மறுநாள், உண வுக்காக வேண்டிய இறைச்சி கொணரச் சென்றார்.

இப்பால், நாள்தோறும் வழிபாடு செய்யும் சிவகோசரியார் என்னும் பார்ப்பனர் அங்கு வந்தார். இறைச்சி முதலிய சிதறிக் கிடப்பதனைக் கண்டார். யார் இது செய்தார் என்று வருந்தினார். பின் திருவலகால் அவற்றை மாற்றினார். நீராடித் தூய பொருள் கொண்டு பூசனை முடித்துக் காட்டுள் சென்றார்.

அவர் சென்ற பின், திண்ணனார் நல்லிறைச்சிகளை முன்போல் பக்குவப்படுத்தி இலையில் கொணர்ந்தார். கொணர்ந்தவர், பார்ப் பனர் செய்து சென்ற பூசனையை முன்பு போல் அகற்றினார். வழி பாடு செய்தார். "இவ்வூன் முன்னைய வூனின் நன்று, அமுது செய் தருள்க" எனப் படைத்தார். இவ்வாறே பூசனை முடித்து வந்தார். இப்பால் திண்ணனாரைக் காட்டுள் விட்டுப் போன வேடர்கள் நாக னிடம் செய்தி அறிவித்தனர். பிறகு வேடர்கள் திண்ணனாரிடம் வந்து நாகன் செய்தி அறிவித்து அவரை அழைத்துச் செல்ல முயன்றனர். பக்குவப்பட்ட ஆன்மாவாதலால், வாரார் எனக் கைவிட்டுச் சென்றார்கள். இறைவன் அருள் நோக்கால் இரும்பு பொன்னாற் போல இருவினை மும்மல மற்று அன்புப் பிழம்பாயினார்.

அந்நிலையில் சிவகோசரியார் பூசனை செய்து முடித்த பின்பு இறைவா! இது செய்தார் யாரோ? அறியேன். நீயே அதனைப் போக்கி அருள வேண்டுமென்று வேண்டினார். அன்றிரவு அவர் கனவில் இறைவன் தோன்றி, "இதனைச் செய்பவன் வேடுவ னென்று நினையேல். அவன் வடிவெல்லாம் நம் பக்கல் அன்பு, அவன் அறிவு நம்மை அறியும் அறிவு, செயலெல்லாம் நமக்கு இனிய வாம் என்பவற்றை நீ அறிவாய்; ஆதலால் நினக்கு அவன் செயல் காட்டுகின்றேன், நீ ஒளித்திருந்தறி, மனக்கவலை யொழி" என்றான். பார்ப்பனர், கனவு நீங்கி மறுநாள் வந்து வழக்கம்போல் வழிபாடியற்றி இறைவன் பின் மறைந்து நின்றார்.

இவ்வாறு வழிபாடியற்றிவரும் ஆறும் நாள், திண்ணனார் வேட்டையாடி வழக்கம்போல் பக்குவப்படுத்திய உணவோடு விரைந்து செல்வாராயினார். வழியில் தீயசகுனங்கள் நிகழ்ந்தன. கண்டவர், இறைவனுக்கு என்ன நேர்ந்ததோ? என்று புழுங்கிய மனத்தோடு அடைந்தார். அடைந்தவர்முன் காளத்திஅண்ணலார் திண்ணனார்க்குப் பரிவுகாட்ட ஒரு கண்ணில் குருதிப்பெருக இருந்தனர். வந்தவர், குருதிகண்டார், நடுங்கினார், கைப்பொருள்கள் சிதறின, பூமியில்விழுந்தார். எழுந்து இது செய்தார் யார்? என்று வில்லுங் கையுமாகத் திரிந்தார். பகைவர் எவரையும் காணவில்லை. அண்ணலாரை நெருங்கி "ஐயகோ இந்நோய் எதனால் தீருமோ" என ஏங்கினார். பச்சிலை கொணர்ந்து பிழிந்து கண்ணில்விட்டார்; புண்ணீர் குறையவில்லை. ஊனுக்கு ஊனிடல் என்ற உரையை உணர்ந்தார், மகிழ்ச்சி பொங்கியது, தன்கையம்பால் தன்கண்ணைப்

பெயர்த்தெடுப்பேன் என்று தம் இடக்கண்ணை அம்பால் பெயர்த்து வலக்கண்ணில் அப்பினர். குருதிநின்றது கண்டார், மகிழ்ந்தார், குதித்தார்; இறைவன் சோதனை அவ்வளவோடு இல்லை. அன்பின் அளவைக்காட்ட இடக்கண்ணில் குருதிபெருகச் செய்தார். அது கண்ட திண்ணனார், "இதற்கஞ்சேன். மருந்து கைகண்டேன் குருதி ஒழிப்பேன்" என்று தம் இடக்காலை இறைவன் கண்ணிலூன்றித் தம் வலக் கண்ணில் அம்பை யூன்றினர். அவ்வளவில், அது பொருத காளத்தி நாதர் பெயர்க்கும் திண்ணனார் கையைத்தடுக்க, "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப" என்று மும்முறை வானில் குரல் எழுந்தது. இச்செயலை மறைந்திருந்த முனிவர் கண்டார். இறைவன் தன் கையால் பிடித்து "என் வலப் பக்கத்திருப்பாய்" என்று அருள் புரிந்தான். இதிலிருந்து திண்ணனார்க்குக் கண்ணப்பர் என்று பெயராயிற்று. மணிவாசகர் கண்ணப்பர் அன்பைச் சிறப்பித்துக் "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" எனப் போற்றுகின்றார்.

41. கதிரோன் பல் தகர்த்தது

60-வது கதை பார்க்க.

42. கருங்குருவிக்கு அருளியது

பறவைகளில் வலிமையற்றதாக, கருங்குருவி, காக்கைக்கு அஞ்சி மரம்செறிந்த ஒரு காட்டில் வாழ்ந்து வந்தது. காக்கைகளால் பலகாலும் தாக்கப்பெற்றுக் குருதி வடிகின்ற தலையுடன் செய்வதறியாது திகைத்து இடருற்று நின்ற நிலையில் வழிப்போக்கர் ஒருவரால், மதுரையிற் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளது அருளால் எவ்வகைப் பகையையும் வெல்லலாம் என்பது தெரிந்து சொக்கனை இடைவிடாது வணங்கி அவன் அருளால் 'மிருத்திஞ்சய' மந்திரத்தை உபதேசிக்கப் பெற்று, அந்த மூவெழுத்து மறைமொழியின் வன்மையால் எல்லாப் பகையையும் வென்று வலியன் என்னும் பெயர் பெற்றது. இந்த அரிய மந்திரத்தைத் தன் சாதிக்கெல்லாம் உபதேசித்துத் தன் இனத்தை வலிமையுடையதாகவும் சிவபெருமான் திருவடிக்குத் தொண்டு பூண்பதாகவும் செய்தது.

43. கழுமலம் அதனில் காட்சி கொடுத்தது

கழுமலம் என்ற பெயர் சீகாழிக்கு உண்டு; வேறு இப்பெயர் பொண்ட பழம்பதிகளும் இருக்கக்கூடும். கழுமங்கலம் என இப்போது சில ஊர்கள் வழங்கப்பெருகின்றன, ஒருக்கால் கழுமலம் என்பதே மருவி வழங்கப்பெறுகிறதா என்பதும் கருதத்தக்கது. கழுமலம் என்பதை, சீகாழி எனக் கொள்ளின் சைவ சமய முதல்வர் மூவருள் முதலாமவராகிய திருஞானசம்பந்தப் பெருமானுக்கு, காழிப்பதியில் சிவபெருமான் அம்மையப்பராகக் காட்சியருளி ஞானப் பால் ஊட்டிய நிகழ்ச்சியே முற்பட நினைவுக்கு வருகின்றது.

சோழநாட்டின் பழைய ஊர்களில் ஒன்றாகிய சீகாழியில், வேத நெறி தழைத்து ஓங்குதற்குக் காரணமாகிய ஆகமத்துறை வழியே வாழ்ந்துவந்த அந்தணமரபில் கவுணியர் குடியில் சிவபாத இருதயருக்கும் பகவதி அம்மையாருக்கும் திருக்குமரனாகத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் தோன்றினார். இவர் மூன்றுவயதுள்ள குழந்தையாக இருக்கும்போது, ஒருநாள், தன் தந்தையாரோடு திருக்கோயிலுக்குச் செல்லவேண்டும் என்று பிடிவாதம் செய்ய, தந்தையார் உடன் அழைத்துச் சென்று, குழந்தையைத் திருக்குளத்தின் கரையில் உட்காரவைத்துவிட்டு, குளத்தில் இறங்கிச் சைவ மறைமொழிகளை ஓதிக்கொண்டு தண்ணீருள் முழுகி நீராடுவாராயினார்; தமது தந்தையைக் காணாத குழந்தை பல திசைகளிலும் பார்த்து அழுது கடைசியாகத் திருத்தோணியப்பர் கோயில் விமானத்தைப் பார்த்து "அம்மே அப்பா" என அழத் தொடங்கியது. உடனே தோணியப்பர் உமையுடன் ஆன் ஏறு ஏறி, அழுகின்ற குழந்தைமுன் தோன்றினார்; உமையம்மை ஒரு பொற் கிண்ணத்திற் சிவஞானப்பாலை அழுகின்ற குழந்தைக்கு ஊட்டியருளினார். ஞானப்பாலை உண்ட தெய்வக்குழந்தை 'சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம், உவமையிலாக் கலைஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்' எனும் ஞானம் அனைத்தையும் பெற்று ஞானசம்பந்தனாகத் திகழ்ந்தது. நீராடிவந்த தந்தை, பால்வடியும் உதடுகளுடன் குளக்கரையில் உட்கார்ந்திருக்கும் குழந்தையைப் பார்த்து "யார் கொடுத்த பாலை நீ அருந்தினை? பிறர் கொடுத்ததை அருந்தலாமா? பால் கொடுத்தவர் யாவர்?" என வெகுண்டு வினவினார். உடனே ஞானசம்பந்தப். பிள்ளையார் கோயிலின் விமானத்தைச் சுட்டிக்காட்டி அங்கு காட்சியளித்த சிவபெருமான் தோற்றத்தைத் தந்தையார் உணரும் வண்ணம், "எனக்குப் பால் கொடுத்தவன்.

"தோடுடைய செவியன் விடையேறி ஓர்தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனநாள் பணிந்து ஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே!"

எனக் கூறினார். பெற்றோரும் மற்றோரும் பேரானந்தம் உற்றனர். இந்த நிகழ்ச்சியை ஞானசம்பந்தப் பெருமானே

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாளவளொடும் பெருந்தகை யிருந்ததே"

(தேவாரம் 3053)

எனத் திருவாய் மலர்ந்துள்ளார்.

44. கன்றால் விள வெறிந்தது

மிகப் பழங்காலத்தில், வட மதுரையில் கம்சன் என்ற ஒரு கொடுங்கோலன் அரசு செலுத்தி வந்தான். அவனுக்குத் தேவகி என்ற ஒரு தங்கை உண்டு. அவளை வசுதேவர் என்ற பெரியார் மணந்து கொண்டு இல்லறம் நடத்தி வந்தார். இல்லறக் கிழமை பூண்ட தேவகி அம்மையார்க்குக் குழந்தைகள் பிறந்தன. "நின் தங்கைக்குப் பிறக்கின்ற குழந்தையால் நினக்கு முடிவேற்படும்" என்று கணிதமாக்கள் கம்சனுக்குக் கூறியிருந்தனர். ஆதலால் அவன் தன் தங்கைக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் கொண்டுவரச் செய்து வெட்டி விடுவது வழக்கமாக இருந்தது. இக்கொடுஞ் செயலைப் பொறுக்காத தாய் தந்தையர் துன்பக் கடலுள் மூழ்கி யிருந்தார்கள் என்பது சொல்ல வேண்டுவதின்று.

இந் நிலையில் ஏழாவது கருவுற்றாள் தேவகி. அது கண்ட கம்சன் இருவரையும் சிறையிலிட்டான். திருவருள் வேறாயிற்று. இவளுற்ற கருவை ஆய்ப்பாடி அசோதை வயிற்றிலிட்டான் இறைவன்; மறுபடியும் எட்டாவதாகக் கருவுற்றாள் தேவகி. அங்கு ஆய்ப்பாடியில் அசோதைக்குப் பலராமனும் ஒரு மாயைப் பெண்ணும் பிறந்தனர்; இங்கு, அந்நேரத்தில் தேவகி வயிற்றில் கண்ணன் பிறந்தான். பிறந்த குழந்தையை வசுதேவர் தளை களைந்து இரவில் ஆய்ப்பாடிக்கு எடுத்துச் சென்றார். சென்றவர் தங் குழந்தையாகிய கண்ணனை அங்கு விட்டு மாயைப் பெண் குழந்தையை அங்குநின்றும் எடுத்து வந்து தேவகியிடம் விட்டார் இவ்வளவும் இரவில் நிகழ்ந்தது. பொழுது புலர்ந்தது; அறிந்தான் செய்தி கம்சன்; குழந்தையை எடுத்து வரச் செய்தான்; வழக்கம் போல் வானில் விட்டெறிந்து வெட்டச் செய்தான். விட்டெறியப் பட்ட குழந்தை "நின்னைக் கொல்பவன் ஆய்ப்பாடியில் சென்று வளர்கின்றான்; என்னைக் கொல்ல நீ யார்?" என்று கூறி மாய மாய் மறைந்தது.

இந்நிலையில் ஆய்ப்பாடியில் நந்தகோபன் மனையில் அசோதை இளஞ் சிங்கமாக வளர்ந்து வந்தான் கண்ணன்; அவன் இளமையிற் செய்த அருஞ்செயல்கள் மிகப்பல. இங்ஙனம் இவனது அருஞ்செயல்களைக் கேள்வியுற்ற கம்சன் "நம்மைக் கொல்ல ஆய்ப் பாடியில் வளர்கின்றவன் இவனேயாம்" இவனை எங்ஙனமாவது கொன்றுவிட வேண்டுமென்ற முடிவிற்கு வந்தான். அதற்கான சூழ்ச்சிகள் பல செய்தான். அவற்றுள் ஒன்று கன்றால் விள வெறிந் தது. அஃதாவது: கம்சன் ஓர் அசுரனை அழைத்து, "நீ போய் கண்ணன் கன்று காலிகளோடு வரும் வழியில் விளாமரமாக முளைத்திரு. அவன் அப்பக்கம் வரும்போது அவன் மீது சாய்ந்து கொன்றுவிடு" என்றான். வேறொரு அசுரனை விளித்து "நீ போய்க் கண்ணன் மேய்க்குங் கன்றுகாலிகளோடு ஒன்றாக இருந்து சமயம் பார்த்து முட்டியோ உதைத்தோ கொன்றுவிடு" என்று கட்டளை யிட்டான்.

கம்சன் ஆணையேற்ற இருவரும் ஆணை வண்ணம் உருவு கொண்டனர். புதிய மரம் வழியில் முளைத்திருப்பதும் புதிய கன்றொன்று காலிகளோடு சேர்ந்திருப்பதும் புதுமையாக இருந்தது கண்ணனுக்கு. உற்றுணர்ந்த கண்ணன் இதுவும் அம்மான் கம்சன் சூழ்ச்சியேயென்று சிந்தையுட் கொண்டான். முன் பன்முறை அவன் சூழ்ச்சி கண்டு தெளிந்துள்ளானாதலால் வியப்புத் தோன்ற வில்லை. காலத்தை எதிர் நோக்கினான் கண்ணன். வழக்கம் போல் கன்று காலிகளோடு அவ்வழியே வந்தான். புதுக்கன்று புதுமரத்தை யண்மியது; காலம் நேர்ந்ததென்று கருத்துட் கொண்டவன், கன்றைத் தூக்கி விளவின் மேல் எறிந்தான். எறிந்த அளவில் மரம் முறிந்து காய்கனி சிதற வீழ்ந்தது. கன்றும் உயிர் துறந்தது. ஒரு கல்லால் இரு மாங்காய் என்றாங்கு ஒரு செயலால் இரு காரியம் நிகழ்ந்தன. இறந்த உயிர் ஒளி வடிவுடையனவாய்க் கண்ணனை வாழ்த்தி விண்ணிற் சென்றன. கம்சன் வஞ்சம் ஈடேறவில்லை. இதனையே "கன்று குணிலாக் கனியுகுத்த மாயவன்"—என்றும், "கஞ்சனார் வஞ்சங் கடந்தான்"—என்றும் இளங்கோவடிகள் தம் வாயாரப் புகழ்ந்துள்ளார்.

45. காட்டகத்து வேடன்

முன்பு ஒரு காலத்தில் பாண்டிய மன்னர்களுள் ஒருவன் 'உற்ற காலத்தில் தெய்வம் அலாது இலை உதவி' எனக் கற்றவர் சொல்லும் நெறியினைக் கடைப்பிடித்து, ஆலவாய் அண்ணல் அடிகளுக்கே பற்றுடையவனாக நின்று, படைப் பெருக்கத்தை நிந்தித்துத் தன் நாட்டிற்கு வேண்டிய அளவு சேனையை மட்டும் வைத்துக் கொண்டு, தன் கீழ் வாழும் குடிகளுக்குத் தெய்வப்பற்றும் அறநெறி ஒழுக்கமும் ஓங்கும் வழியில் அரசு செலுத்தி வந்தான். அதே காலத்தில், சோழ மன்னர்களுள் ஒருவன், படையைப் பெருக்கிப் பிறநாடுகளையும் தன் ஆட்சியில் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். பாண்டியனின் படை மெலிவு, சோழனைப் பாண்டிய நாட்டின் மீது படையெடுக்கத் தூண்டிற்று; படை வலுவால் சோழன் தன்னிலும் மிக்கான் என்று உணர்ந்த பாண்டியன், தெய்வத் திருவருள் துணை கொண்டு சோழன் படையை எதிர்த்தான்; அளவில் சிறியதாகிய பாண்டியன் சேனை, சோழனது பெரும்படையினும் ஆற்றலுடையதாகிச் சோழன் சேனையைக் களத்தை விட்டுப் புறங் கொடுத்து ஓடச் செய்தது. இது கண்டு மனம் பொறாத சோழன், தானே குதிரைமேல் ஏறிச் சேனையைச் செலுத்தத் தொடங்கினான். அப்போது, சோழன் முன்னர், காட்டில் திரிகின்ற வேடன் ஒருவன் குதிரையின் மீது ஏறி வந்து "நான் ஓர் வேட்டுவப் பரியாள்; என்னொடு போர் செய்யவல்லையோ?" எனக் கூறித் தன் கையிலிருந்த வேலைச் சோழன் மீது எறிந்தான்; சோழன் மிகவும் வெகுண்டு 'இவ் வேடனைக் குதிரையுடன் பிடித்துக் கொணர்வேன்" என வஞ்சினமுரைத்துத் தன் பரியை அவன் பக்கம் செலுத்தவே, வேடன் புறங் கொடுத்து ஓடுபவன் போல் விரைந்து தன் குதிரையைச் செலுத்தி

னன். சோழனும் அவனை விரைந்து தொடர்ந்தான். புறங் கொடுத்தோடும் வேடன் குதிரையோடு வழியிலிருந்த ஓர் நீர் நிலையில் இறங்கி ஏறினன்; பின் தொடர்ந்த சோழன் நீர் நிலையில் குதிரையோடு ஆழ்ந்தான். சோழர் படையும் கலங்கி நாட்டை விட்டு ஓடியது. இவ்வாறு காட்டகத்து வேடனாகத் தோன்றிப் பாண்டியனைக் காப்பாற்றியவன் சோமசுந்தரக் கடவுளே என்பது தெரிந்து மக்கள் எல்லாம் போற்றினர்கள்.

46. காமன் உடலைத் தூய்மை செய்தது

ஒரு காலத்தில் சிவபெருமான் யோக நிலையிலிருந்தார். அப்போது உலகங்களும் உயிர்களும் எவ்வித அசைவும் அற்று அமைதியாக நின்றன. உலக இயக்கம் ஒடுங்கியதைக் கண்ட பிரமன், சிவபெருமான் யோக நிலையை விட்டுச் சக்தியோடு கூடினலல்லால் உலகம் இயங்காதென்பதை உணர்ந்து, சிவபெருமானுடைய யோக நிலையைக் கலைக்கும் வண்ணம் காமனை வேண்டினன். எம்பெருமானை அணுகுவதற்குக் காமன் அஞ்சி மறுத்தான் எனினும், தேவர்கள் எல்லாம் ஒருசேர வேண்டியமையால், துணிந்து, ஐங்கணையோடும், வில்லோடும், இரதி தேவியோடும், அலையற்ற கடல்போல் யோகத்தில் ஆழ்ந்திருந்த அருட்கடலாம் சிவபெருமான் முன் சென்று, பலவாறு கலங்கி, முடிவாகத் தான் இறுதி எய்தினும் உலகுக்கு ஒரு நன்மையைச் செய்வதே உயர்ந்தது எனும் கொள்கையைப் பின்பற்றி, இறைவன் யோக நிலையைக் கலைக்கும் நோக்கத்தில் மலர்க் கணைகளைத் தூவினன். சிவபெருமான் சிறிது தன் நெற்றிக் கண்ணைத் திறந்தார்; உடனே காமன் எரிந்து சாம்பராயினன். சிவபெருமான் மறுபடியும் யோகத்திலே அமர்ந்து விட்டார். கணவன் எரிந்து பொடியானதைக் கண்ட இரதி,

"செம்பதுமைத் திருக்குமரா! தமியேனுக்கு ஆருயிரே!
திருமால் மைந்தா!
சம்பரனுக் கொருபகைவா! கன்னல் வரிச் சிலைபிடித்த
தடக்கை வீரா!
அம்பவளக் குன்றனைய சிவன் விழியால் வெந்துடலம்
அழிவுற்றயே!
உம்பர்கள் தம் விழி எல்லாம் உறங்கிற்ரே? அயனும்
உவப்புற்ருரோ?
நேயமொடு மறைபயிலுந் திசைமுகனைப் புரந்தரனை
நின்னைத்தந்த
மாயவனை முனிவர்களை யாவரையும் நின் கணையால் மருட்டி
வென்ருய்?
ஆயதுபோல் மதிமுடித்த பரமனையும் நினைந்திவ்வா
றழிவுற்ருயே!
தீயழலின் விளக்கத்திற் படுகின்ற பதங்கத்தின்
செயலிதன்ரே?

எனப் பலவாறு புலம்பி, கண்ணுதலின் அருளால் அவனை உயிர்ப்பித்தாள்; காமனும் உடலம் இல்லாதவனுக நிலையுற்ருன்.

47. காலன் உயிரைத் தூய்மை செய்தது

மிகமிகப் பழங்காலத்தில், மிருகண்டு முனிவரும் அவருடைய மனைவி மருத்துவதியும் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து எல்லா நற்குணங்களும் வாய்க்கப் பெற்றதும், பேரழகு வாய்ந்ததும் சிவனடி மறவாத சிந்தையுடையதுமான ஒரு ஆண்மகவைப் பெற்றனர். அம் மகவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது; நாட்கள் ஆக, ஆக, பெற்றோர் கவலையுற்றனர். அவர்கள் கவலைக்குக் காரணம் யாது என வினவிய சிறுவன் மார்க்கண்டேயன், தன் வாழ்நாள் பதினாறு ஆண்டுகளே எனத் தெரிந்து கொண்டான். சிவபெருமான் திருவருளால் இயலாத தொன்றில்லை என்பது நன்கு தெரிந்த மார்க்கண்டேயன், தன் பெற்றோரைக் கவலையுறுவண்ணம் தேற்றித் தவத்தால் காலனையும் வெல்வேன் என்று சிவபெருமானை இடைவிடாது போற்றித் தவம் செய்து காலன் கைக்கு அகப்படாத வரத்தைப் பெற்றான். பதினாறு ஆண்டு நிரம்பியதும், மார்க்கண்டேயன் உயிரைக் கொள்ள, எமனுடைய பணியாளர்கள் அணுகினார்கள்; ஆனால் அவனுடைய தவத்தின் ஆற்றலால் எவரும் நெருங்க முடியவில்லை. பின்னர் எமன், எருமைக்கடாவில் ஏறி, செம்மயிரும் காருடலும் எரிவிழியும் உடையவனாய், பாசமும் தண்டமும் சூலமும் ஏந்தி, தன் வீரர்கள் சூழ மார்க்கண்டனை அணுகி அழைத்தான். அச் சிறுவன், காலனைப் பொருட்படுத்தாது சிவபெருமான் திருவடிகளைப்பற்றிக் கொண்டான். காலன் வெகுண்டு தன் பாசத்தை வீசினான். தன்பால் புக்கவனைப் பாசத்தால் ஈர்க்க முயன்ற காலனை, சிவபெருமான் தன் இடது காலால் உதைத்துத் தள்ளினார். எமன் கீழே மலைபோல் விழுந்து உயிர் துறந்தான். எருமைக் கடாவும், உடன்வந்த பரிவாரங்களும் உடனே மாண்டன. மார்க்கண்டேயர் இறவா வரம் பெற்றார்.

48. காலனைக் காலால் உதைத்தது

47-வது கதையைப் பார்க்க.

49. கிராதவேடம் கொண்டது

32-வது கதையைப் பார்க்க.

50. குதிரை கொண்டு அருளியது

பாண்டிய நாட்டில், அதன் தலைநகருக்கு அண்மையிலுள்ள திருவாதவூரில் ஓர் பெரியார் தோன்றினார்; இவர் இளமையிலேயே கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய நிரம்பப் பெற்றும் திறம்பெற எதையும் கொண்டு செலுத்தவல்லவராயும் இருந்தபடியால், பாண்டிய மன்னன், இவரைத் தன் அமைச்சராக அமர்த்தி எல்லா ஏற்றங்களும் அளித்திருந்தான். அரண்மனையிலும், சேனையிலும் குதிரைகள் குறைவாக இருந்தமையில், தகுதி வாய்ந்த குதிரைகள் வாங்கி வருமாறு பெரும்பொருளுடன் இவ் அமைச்சரை அருகிலுள்ள துறைமுகப் பட்டினத்துக்கு, அரசன் அனுப்பினான். செல்லும்

வழியில், ஒரு பூம்பொழிலில், ஒரு ஞானகுரவன் பல அடியவர்களுக்குச் சிவஞானத்தை வழங்கி வருவதைக் கண்டு, தான் மேற்கொண்ட பணியை மறந்து, அந்த ஞானகுரவன் திருவடிக்குத் தொண்டாகித் தான் குதிரை வாங்கக் கொண்டு வந்த பொருளனைத்தையும் தன் ஞானகுரவன் ஆணைப்படி சைவத் திருப்பணிகளில் செலவிடத் தொடங்கினர். உடன் வந்தோர், எவ்வளவோ தடுத்தும் அவர் மாறவில்லை ; அவர்களும் பாண்டியனிடம் சென்று நிகழ்ந்ததை அறிவித்தார்கள், பாண்டியன் சீற்றங்கொண்டு, அவரை உடனே மதுரைக்கு வரும்படி ஓலை போக்கினன் ; அவரும், மன்னவன் கட்டளையைத் தன் ஞானகுரவனிடம் விண்ணப்பித்தார். ஞான குரவனிடம் விண்ணப்பித்தார். ஞானகுரவனுக எழுந்தருளியிருந்த சிவபெருமான் "அஞ்சாதே, மதுரைக்குச் செல், 'குதிரைகள் ஆவணி மூலத்தன்று மதுரைக்கு வருவனவாகும்' என மன்னவனுக்குக் கூறு" எனத் திருவாய் மலர்ந்தருளினர். அவ்வாறே அவரும் சென்று தெரிவிக்க, பாண்டியனும் ஒருவாறு அமைதி கொண்டு இருந்தான். ஆனல், ஆவணி மூலத்துக்குச் சில நாள் முன்வரையிலும் குதிரைகள் வரக்கூடிய குறிகள் ஒன்றும் காணுதது கொண்டு ஐயுற்ற மன்னன், அவரைச் சிறையிலிட்டான் ; காவலாளர்கள் துன்புறுத்துவது பொருத அமைச்சர் உளம் கலங்கி

"மின்னும் புகழா அருளாளா மெய்யே மனிதர்போல் வந்து இங்கு
என் நெஞ்சு உருக்கி உரைத்த உரை தப்பாது என வந்துயான் உரைத்தேன்
மன்னன் காண்பான் விழிகுழிய வழியை நோக்கியிரா நின்ருன்
துன்னும் புரவி கொடு விரைவில் தோன்ருய் தோன்ருய் தோன்ருயே"

'ஊரார் உனைச்சிரிப்பது ஓராய் என்று உன் அடிமைக்கு
ஆராய் அடியேன் அயர்வேன் அஃதறிந்தும்
வாராய் அரசன் தமர் இழைக்கும் வன்கண்நோய்
பாராய் உன் தன்மை இதுவோ பரமேட்டி"

எனப் பலவாறு முறையிட்டார்.

இம்முறையீட்டொலி கேட்ட சிவபெருமான், கணநாதர்களை அழைத்து 'குறிப்பிட்ட நாள் தவருமல் பாண்டியனுக்குக் குதிரைகளைச் சேர்ப்பிக்க வேண்டும், நீவிர் அனைவரும் குதிரைச் சேவகர்களாகி, காட்டிலுள்ள நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றி ஏறிச் செல்லுங்கள், நாமும் குதிரை வணிகர் தலைவனுகத் தோற்றம் கொண்டு பின்னர் வருகின்ருேம்' எனக் கூறினர். சிவகணநாதர்களும் நரிகளை எல்லாம் உத்தம இலக்கணம் வாய்ந்த குதிரைகளாக மாற்றி ஏறிச் சென்ருர்கள். சிவபெருமானும் குதிரைவணிகனுக வேதமாகிய குதிரையின் மீதேறி நடுவண் சென்ருர். குதிரைகள் வெள்ளம்போல் மதுரையை அடைந்தன ; பாண்டியன் மிகமகிழ்ந்து அமைச்சரைச் சிறையினின்றும் விடுவித்து, குதிரைகளை ஏற்றுத்

தன் பந்தியில் சேர்ப்பித்தான். குதிரை கொண்டு வந்த வணிகர் தலைவரது தோற்றம் பாண்டியனது உள்ளத்தைக் கவர்ந்தது. அவ்வணிகர் தலைவனும், தான் ஒரு பெரும் குதிரை வீரன் என்பதை மெய்ப்பிக்க தான் ஏறிவந்த குதிரையை, மல்லகதி, மயூர கதி, வானரகதி, வல்லியகதி, சரகதி என்னும் ஐந்து கதிகளும், பதினெண்வகை சாரிவிகற்பங்களும் தோன்றச் செலுத்திக்காட்டினார். மன்னனும் குதிரை வணிகர் தலைவருக்குப் பரிசாகப் பொன்னுடை அளித்தான், வணிகர் அதைத் தன் கைச் செண்டால் வாங்கி அணிந்து கொண்டார். பின்னர் யாவரும் மகிழ்ந்து அவரவரிருப்பிடம் சென்றார்கள். இந்த அமைச்சர் வாதவூரிற் பிறந்தமையால் வாதவூரர் எனவும் பாண்டியனுடைய அமைச்சர் என்ற நிலையில் தென்னவன் பிரமராயன் எனவும் வழங்கப் பெறுவார்.

51. கேழலாய்ப் பால் கொடுத்தது :

30-வது கதையைப் பார்க்க.

52. கேவேடராகிக் கெளிறு படுத்தது :

14-வது கதையைப் பார்க்க.

53. சக்கரம் மாற்கு அருளியது :

திருமால், தன்னால் வெல்லமுடியாத சலந்தரனைத் தடிந்த சக்கரத்தைப் (கதை 56 பார்க்க) பெறுவதற்குச் சிவபெருமானை, நாள் ஒன்றுக்கு ஆயிரம் தாமரைமலர்களைக் கொண்டு வழிபட்டு வந்தார். ஒரு நாள் ஒரு தாமரை மலர் குறைந்தது; மலர் எண்ணிக்கை குறையாதிருக்கும் வண்ணம், தன் கண்ணைத் தோண்டி மலராகச் சாத்திக் குறையை நிரப்பினார். சிவபெருமான் உவந்து சக்கரப் படையை அருளினார்.

‘ நீற்றினை நிறையப் பூசி நித்தல் ஆயிரம் பூக்கொண்டு
ஏற்றுழி யொருநாள் ஒன்று குறையக் கண் நிறையவிட்ட
ஆற்றலுக்கு ஆழி நல்கி அவன் கொணர்ந்திழிச்சுங் கோயில்
வீற்றிருந்தளிப்பர் விழிமிழலையுள் விகிர்தனாரே.

(தேவாரம் 4784)

‘ திகழு மாலவன் ஆயிர மலரா லேத்துவானொரு நீண் மலர் குறையப்
புகழினலவன் கண்ணிடந்திடலும் புரிந்து சக்கரம் கொடுத்தல் கண்டு அடியேன்
திகழு நின்திருப் பாதங்கள் பரவித் தேவதேவ நின் திறம்பல பிதற்றி
அகழும் வல்வினைக் கஞ்சி வந்தடைந்தேன் ஆவடு துறையாதி யெம்மானே.

(தேவாரம் 7898)

54. சங்கங் கவர்ந்தது.

தாருகாவனத்து இருடிகளது மனைவிமார்கள், கற்புக்கு நிகரா வார் தம்போல்வார் இல்லென்று செருக்குற்றிருந்தனர். இதனை உணர்ந்த இறைவன் இவர்களது செருக்கை ஒழிக்க எண்ணி பிச்சாடனர் வடிவங்கொண்டு தாருகாவனத்துக்கு எழுந்தருளினார். இவர் வருகின்ற கோலத்தைக் கண்ட அவ் இருடிகளது மனைவிமார்கள் அவரது பேரழகில் ஈடுபட்டுப் பிச்சை இடுதலோடு நிறையழிந்து தம் கை வளையல்களையும் கலத்தில் சொரிந்தனர். இதனை அறிந்த முனிவர்கள் தம் மனைவிமார் நிறையழிந்தமை கண்டு வெறுத்து, "நீவிர் நும் கற்புநிலையில் தவறியதால், மதுரையில் வணிகப் பெண்களாய்ப் பிறந்திடுக" என்ன, அவர்களும் எம் சாபம் நீங்குவது எப்போது என்றனர். அதற்கு, ஆலவாயண்ணல் நும் கையைத் தீண்டும்போது விலகும் என்றனர்.

சாபத்தை ஏற்ற அம்முனிவர் மனைவிமார், மதுரையில், வணிகர் மகளிராய்த் தோன்றி வளர்ந்து மங்கைப் பருவம் அடைந்தனர். ஆலவாய் அண்ணலும் இவர்கள் சாபத்தைப் போக்க வளையல் விற்கும் ஒரு வணிகராகி மதுரைப் பெருந் தெருவை அடைந்தார் மறை பகர்ந்த வாயால் ''வளையலோஓ வளையல்'' என்றார். இவ்வளையல் ஒலி கேட்ட மங்கையர்கள் உள்ளிருந்து வெளிப்போந்து கண்டனர். இவரது பேரழகில் ஈடுபட்டுச் சுழன்ற மனமுடையராய் நெருங்கி மொய்த்தனர்.

நெருங்கிய மங்கைமார், ''வணிகரே! எம் கைகட்கு ஏற்ற அழகிய வளை இடுமின்'' என்று தம் காந்தள் கைகளை நீட்டினர். அண்ணலும் கைம்மலர் பற்றினார், கண்மலர் உள்ளங்கவர வளையலும் அணிந்தனர். பின்னரும், இறைவர் கை தம் கைமேல் படவேண்டுமென்று எண்ணினர்; தம் கைவளையலை உடைத்தனர்; கைகளை நீட்டினர். இறைவரும் வளையலை இட்டனர். பல முறை இந்நிகழ்ச்சி நிகழ்ந்தன.

இந்நிலையில் வணிகரை நோக்கி, ''வணிக நல்லீரே! இதுகாறும் இவ்வளை போன்ற வளையலைக் கண்டிலேம், இவைகள் எம்மை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தின. நாளையும் வருவீராக, இவ்வளைக்குரிய பொருளைப் பெற்றுக்கொள்வீராக'' என்றனர். ''வாள்விழியீர் நாளைப் பெற்றுக்கொள்வோம்'' என்று யாவரும் வியக்கும் வண்ணம் விண்ணிழி விமானத்துள் சென்று சிவலிங்கத்தோடு கலந்தருளினார். இவ்வாறு வந்தவர் மங்கை பங்கனே என்று இன்ப வெள்ளத்தழுந்தி இன்புற்றனர்.

55. சந்திரனைத் தேய்த்தருளியது.

60-வது கதை பார்க்க.

56. சலந்தரனைத் தடிந்தது.

வழக்கமாக நாள்தோறும் சிவபெருமானைக் கண்டு வணங்கும் இந்திரன், ஒருநாள் இறுமாப்புடன் கைலைக்குச் சென்றான். இதனை

அறிந்த சிவபெருமான் ஒரு பூத வடிவாய் அவன் எதிரில் தோன்றினார். நம் தரிசனத்திற்கு இடையூறாய் வாயிலில் இப்பூதம் நிற்கின்றது என இந்திரன் சீற்றங்கொண்டு தன் வச்சிரப்படையால் அப்பூதத்தைத் தாக்கினான். உடனே பூத வடிவம் உருத்திர வடிவமாயிற்று. இதனைக் கண்ட இந்திரன் அஞ்சித் தான் உய்யுமாறு வேண்டினான். சிவபெருமான் அவன்பால் கருணைகாட்டித் தம்பால் எழுந்த சினத்தைக் கடலில் எறிந்தார். அது ஒரு குழந்தை வடிவமாயிற்று. அக்குழந்தையைக் கடல் அரசனாகிய வருணன் வளர்த்தான். ஒரு நாள் அக்குழந்தை அழுத ஒலியை நான்முகன் கேட்டுக் கடலை அடைந்து, "இவ்வொலி யாது?" என்று வருணனிடம் கேட்டான். வருணன் குழந்தையை நான்முகனிடம் கொடுக்க அதனைத் தன் இரு கைகளாலும் வாங்கி மார்போடணைத்தான். அக்குழந்தை நான்முகனின் தாடியைப் பற்றி இழுத்து வருத்தியது. சலத்தால் தாங்கப் பெற்றதனால் சலந்தரன் என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டனர்.

இவன் தவ வலியால் பல வரங்களைப் பெற்றுத் தேவர் முதலியோரைத் துன்புறுத்தி வந்தான். இவன் சாலாந்தரம் என்னும் ஒரு நகரை அமைத்து அரசு புரிந்து வந்தான் இவன் விருந்தை என்பவளை மணந்து கொண்டு யாவரும் அஞ்சும்படி சகல செல்வங்களுடன் பலநாள் இன்புற்றிருந்தான். ஒருநாள் இவனுக்கு அஞ்சி மேரு மலையில் ஒளிந்து கொண்டிருந்த தேவர்களை அழிக்க அங்கே சென்றான். அதனை அறிந்த தேவர்கள் திருமாலிடம் சென்று தங்களைக் காத்தருள வேண்டினார்கள். திருமாலும் அவர்கள் வேண்டுகோட்கிணங்கிச் சலந்தரனுடன் பல ஆண்டுகள் போர் புரிந்தும் அவனை வெல்ல இயலாது சென்றார். அப்போது தேவர்கள் கைலையை அடைந்து திருநந்திதேவரின் அனுமதிபெற்றுச் சிவபெருமானை வணங்கிச் சலந்தரனால் தங்களுக்கு நேர்ந்த துன்பத்தைக் கூறிக் காத்தருளுமாறு வேண்டினார்கள். சிவபெருமானும் காத்தருள்வதாகக் கூறினர்.

திருமாலிடம் வெற்றி பெற்ற சலந்தரன், தேவர்களை எங்கும் காணாதவனாய், அவர்கள் கைலை மலையை அடைந்தார்கள் என்பது அறிந்து அவர்களை அழிக்கச் சேனைகளுடன் கைலைக்குப் புறப்பட்டான். சிவபெருமானது பெருமையை அறிந்த அவன் மனைவி விருந்தை எவ்வளவோ தடுத்தும் அவன் கேட்கவில்லை. கைலைக்குச் செல்லும் வழியில் சிவபெருமான் ஒரு முதிய அந்தணனாய்த் தன்னெதிரே அவன் எதிரே தோன்றி, "நீ யார்? எங்கு செல்கின்றாய்?" என்றனன். அதற்கு "பூவுலகத்திலுள்ளேன். சலந்தரன் என்னும் பெயரை உடையேன். தேவர்களையும் சிவபெருமானையும் வெல்ல இங்கு வந்தேன்", என்றான். உன்னால் அவர்களை வெல்வது அரிது, ஆயினும், நான் கிழிக்கும் இவ்வளவு பூமியைப் பேர்த்து எடுக்கவல்லையேல் உன்னால் கூடும் எனக் கூறித் தன் திருவடியினால் பூமியில் வட்டமாகக் கிழித்தார். சலந்தரன் அதனைப் பேர்த்துத் தூக்கித்

தலையில் இட. அதுவே சக்கரப் படையாக அவனது உடலை இரு கூறுகக் கிழித்து அவனை அறவே அழித்தது.

"பிலந்தரு வாயினெடு பெரிதும் வலிமிக்குடைய
சலந்தரன் ஆகம் இரு பிளவாக்கிய சக்கரம் முன்
நிலந்தரு மாமகள்கோன் நெடுமாற்கு அருள்செய்த பிரான்
நலந்தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே"
(தேவாரம் 8223)

57. சேவகன் ஆகியது.

முன் ஒரு காலத்தில் பாண்டியன் ஒருவன், புத்தம் சமணம் முதலிய புறச்சமயங்களைக் களைந்து வேதநெறியும் சிவாகமத்துறையும் நிலைபெற்றுவருமாறு ஆட்சி செலுத்தி வந்தான். அப்போது காஞ்சியிலிருந்து அரசு செலுத்தி வந்த சமண சமயத்தைச் சார்ந்த மன்னன், இந்தப் பாண்டியனை வென்று பாண்டிய நாட்டைத் தன் ஆட்சியில் கொண்டுவரப் பலவாறு முயன்ருன்; தன் முயற்சி ஒன்றும் நிறைவேருதது கண்டு சமண முனிவர்களைக் கொண்டு ஒரு அபிசார வேள்வி செய்து அதன் மூலமாகப் பாண்டியனைக் கொன்று நாட்டைக் கைப்பற்ற எண்ணினன். முனிவர்கள் செய்த அபிசார வேள்விக் குண்டத்திலிருந்து நீலமலை போலவும், இயமன் போலவும் ஒரு யானை எழுந்தது; முனிவர்கள், பாண்டியனையும் அவன் நாட்டையும் அழிக்குமாறு அந்த யானையை ஏவினர்கள். நிலவுலகம் பிளக்குமாறு இடிபோல் பிளிறிக்கொண்டு கண்களினின்றும் வடவைக் கனல்சிந்த ஊழிக்காற்றுப்போல் காற்று எழ, காதுகளை வீசிக்கொண்டு, குன்றுகளைத் துதிக்கையால் பற்றிச் சுழற்றிக்கொண்டு மதுரையை நெருங்கியது. யாவரும் கலங்கினர். பாண்டியன் சோமசுந்தரக் கடவுளிடம் சென்று முறையிட்டான். சிவபெருமான், மதிமுடி மறைத்து மயில் தோகை அணிந்து, உடைவாள் கட்டி, தோளிலே நீண்ட வில்லை மாட்டிச் சேவகனுகத் தோன்றிக் கீழ்த்திசை மதில் மேலுள்ள மண்டபமாகிய அட்டாலை மண்டபத்திலே நின்று, அபிசார வேள்வி யானை மதுரையை நோக்கி வரும்போது, அதன் மத்தகத்தைக் குறிவைத்து அம்பை விடுத்தார். மத்தகம் கிழிபட்டது; யானை மேகம்போல் முழங்கி நிலத்தில் விழுந்திறந்தது. யானையைத் தொடர்ந்து வந்த சமண முனிவர்களும், காஞ்சி மன்னனின் வீரர்களும் திசை தடுமாறி ஓடினர்கள். யானை இறந்து விழுந்து கிடந்ததும், பெருமிதமாக அட்டாலைச் சேவகன் நிற்பதும், பாண்டியன் பணிவுடன் அருகில் திருவடிபற்றி வணங்குவதும், மார்க்கண்டருக்காக மறலியை உதைத்துத் தள்ளிய காட்சிபோல் தோன்றிற்று.

புகைபடக் கரித்தோல் போர்த்த புண்ணிய மூர்த்தி தாளால்
உதைபடக் கிடந்த கூற்றம் ஒத்தது மத்தயானை;
சுதைபடு மதிக்கோ வேந்தன் தொழுகுலச் சிறுவன் ஒத்தான்;
புதைபடும் அமணர் காலபடரெனப் படரிற் பட்டார்.

58. சோதி தோன்றிய தொன்மை.

1-வது கதையைப் பார்க்க.

59. சோமன் கலையைத் தூய்மை செய்தது.

60-வது கதையைப் பார்க்க.

60. தக்கன் வேள்வி

நான்முகனின் பத்துப் புதல்வர்களில் மூத்தவனும், அறிவு ஆற்றல்களில் மிக்கவனுமாகிய தக்கன், தன் தந்தையின் அறிவுரைகளால், சிவபெருமானே முழுமுதற் கடவுள் என்பதைத் தெரிந்து. மானசவாவிக் கரையில் அமர்ந்து, அப்பெருமானையே தன் நெஞ்சக் கமலத்துள் இறுத்திப் பல ஆண்டுகள் தவம் செய்து பெறற்கரிய தலைசிறந்த வரங்கள் பலவற்றைப் பெற்றான். அவன் பெற்ற வரங்கள் எல்லாம் தேவரின் மேலாய வளங்களைப் பெற்றுத் தன் ஆணை எல்லா உலகங்களிலும் சென்று பல மக்களுடன் வாழ்வதையே முடிவாகக் கொண்டனவேயாம்; அவன் வீடு பேற்றை விரும்பவில்லை. சிவபெருமான் அருளிய வரங்களின் வலிமையால் தேவரும் அசுரரும் வழிபடவும், நான்முகன் முதலாயோர் தன் சொல்வழி நிற்பவும் தக்ஷபுரியைத் தலைநகராக கொண்டு ஆட்சி செய்து வந்தான். வேதவல்லி என்னும் கற்பிற்சிறந்த பேரழகியை மணந்து ஆயிரக்கணக்கான புதல்வர்களைப் பெற்றான்; இப் புதல்வர்கள் எல்லாம் இவன் போல் இம்மை வளத்தில் ஈடுபடாது, நாரத முனிவன் நல்லுரையால் வீடு பேற்றை விரும்பித் தவம் செய்து சிவபெருமான் திருவருளால் வீடுபெற்றனர். பின்னர் இருபத்து மூன்று பெண்களைப் பெற்று அவர்கள் வழியாகத் தன் கிளையை அளவுக்கு மேல் பெருக்கமுறச் செய்தான்; பின்னும் விண்மீன் கூட்டமாகிய இருபத்தேழு பெண்களைப் பெற்று, அவர்களைச் சந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். சந்திரன், பேரழகோடு விளங்கிய கார்த்திகையையும் உரோகணியையும் பெரிதும் காதலித்து மற்றவர்களைப் புறக்கணித்தான்; புறக்கணிக்கப்பட்ட பெண்கள், தங்கள் தந்தையிடம் முறையிட, சந்திரன் கலைகள் யாவும் தேய்ந்து பொலிவு ஒழிக எனச் சாபமிட்டான். இந்த சாபத்தால் கலைகள் குறையப்பெற்ற சந்திரன் சிவபெருமானை நோக்கித் தவங்கிடந்து கலைகள் ஒவ்வொன்றாய் நிறையப்பெற்றான். தக்கன் சுடுமொழியின் வண்ணம் கலைகள் நாளும் நாளும் குறைவதும், சிவபெருமான் திருவருள் வண்ணம் பின்னர் நாளும் நாளும் நிறைவதுமாக மாறி மாறிக் குறைந்தும் வளர்ந்தும், சந்திரன் நிலைபெறுவானாயினன்.

தன் சுடுமொழியை மாற்றியதால், தக்கனுக்குச் சிவபெருமானிடத்துப் பகைமை பிறந்து வளர்வதாயிற்று. புலகர் என்னும் முனிவர் நல்லுரைகளாலும் சிவபெருமானும் தனக்கு மருகனாக வருவார் என்ற வரத்தின் நினைவாலும் பகைமை தணிந்து அரசு செலுத்தி வந்தான்.

சிவபெருமான் அளித்த வரத்தின் பயனாக, உமாதேவி, தக்கனுக்கு மகளாய்த் தோன்றி, சிவபெருமானை அடையத் தவம் செய்தார்; சிவபெருமானும் தோன்றினார். தக்கன் தன் மகளாரின் திருமணத்தைப் பேரார்வத்துடன் தொடங்கி நடத்திக்கொண்டிருக்கும்போது, மாயமாகச் சிவபெருமான் மறைந்து விட்டார். மீண்டும் உமாதேவி தவம் செய்யத் தொடங்கினார். சிவபெருமான் யாவரும் அறியாது தனித்து தவக்கோலத்துடன் வந்து உமையம்மையை இடது பாகத்தமர்த்திக் கயிலைக்குச் சென்றுவிட்டார். சிவபெருமான் இவ்வாறு செய்தது தக்கனுக்குப் பெரும் சினத்தை உண்டாக்கி விட்டது தக்கன், தன் மகளைக்காணக் கயிலைக்குச் சென்றான்; அவனை, சிவபெருமான் அம்மையொடு அமர்ந்திருக்கும் திருக்கோயிலுட் புகாவண்ணம் பூதகணங்கள் தடுத்துவிட்டன. அடங்காச் சினத்தனாகத் தக்கன் திரும்பினான்.

சிவபெருமானுக்கு அவிப்பாகம் கொடாமல் அவரை இழிவு படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், தக்கன் ஒரு பெருவேள்வி இயற்றினான்; அவன் தவவலிமைக்கு அஞ்சித் தேவர்கள் எல்லாம் வந்தனர்; அவுணர்களும் வந்தனர்; ஆனால் அகத்தியர், சனகாதி முனிவர்கள் முதலிய மெய்ப்பொருள் உணர்ந்த மேலோர் வரவில்லை. தக்கன் செயல் தகாதது எனத் ததீசி முனிவர் பலவாறு எடுத்துரைத்தும் அவன் கேட்கவில்லை. சிவபெருமான் திருப்பெயர்களைத் தாங்கியுள்ள தெய்வங்களையும் எம்பெருமானையும் ஒன்று எனக் கருதும் மயக்கத்தையும், அவன் அருளால் படைத்தல் காத்தல் செய்யும் முதல்வர்களை அவனோடு ஒத்தவர் எனக்கொள்ளும் அறியாமையையும் தவிர்த்துச் சிவபெருமானே பரம்பொருள் எனக் கொள்ள வேண்டும் என்பதை விளக்கமாக முனிவர் கூறியும் தக்கன் தெளியவில்லை.

தக்கன் வேள்வியைத் தொடங்கிவிட்டான். அவன் கட்டளைப்படி, காமதேனு, பல்வகை இனிய உணவுகளைக் கொண்டு குவித்து எல்லோருக்கும் படைத்தது. சிந்தாமணியும், சங்கநிதியும், பதுமநிதியும், ஐந்தருக்களும் பலவகை மணிகளையும், ஆடைகளையும், அணிகளையும் யாவர்க்கும் வழங்கின. தேவர்கள், முனிவர்கள், அந்தணர் யாவரும் மனமார வாயாரப் பலவகை உணவுகளையும் உண்டு களித்துப் பாராட்டினார்கள். எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சியின் பேரொலியாகவே இருந்தது, திருமாலுடைய கருடனும், நான்முகனது அன்னமும், வாசவனது ஐராவதமும், அங்கியங் கடவுளது ஆட்டுக்கிடாவும், இயமனுடைய எருமைக்கடாவும், கதிரவனது குதிரைகளும் ஒருபால் நின்று ஒலித்தன. அரம்பையர் இசை ஒருபால் முழங்கின, எங்கும் ஒரே ஆரவாரமாக இருந்தது.

வேள்வி தொடங்கிற்று; அவரவர்க்குரிய பகுதி வேலைகளை அவரவர் செய்தனர். தக்கன் ஆகுதி செய்யப்பெறும் தேவர்களை

நினைத்து அவிகளை அமுதுபோல் ஊட்டிக்கொண்டிருந்தான். இந்த நிலையில், தக்கன் தன்னை அழையாதிருந்தும், உமாதேவியார் கயிலையிலிருந்து, தக்கனது வேள்விச்சாலைக்கு வந்து சிவபெருமானையும் தன்னையும் அழையாதது பெருங்குற்றம் என்பதைத் தக்கனுக்குக் கூறினார். தக்கன் தன் மகளாகிய உமையம்மையிடம் சிவபெருமானை இழித்துக் கூறியதோடு அம்மையையும் இகழ்ந்தான். உமையும், வேள்விச்சாலையை விடுத்துக் கயிலைக்கு மீண்டனர் ஈதெல்லாம் அறிந்த சிவபெருமான் தக்கன் வேள்வியை அழிக்கத் திருவுளங் கொண்டார். வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளியும், இருவர் கண்களிலிருந்தும் தோன்றி, இறைவன் ஆணையைத் தலைமேல் கொண்டு வேள்விச்சாலைக்குச் சென்றனர். இருவர் தோற்றத்தையும் கண்டு தேவர்கள் எல்லாம் நடுங்கினர். இறுதிக் காலம் வந்து விட்டது என ஏங்கினர்.

வீரபத்திரர், சிவபெருமானுக்கு உரிய அவியைக் கேட்டார்; தக்கன் மறுத்தான்; கூடியிருந்த தேவர்களைப் பார்த்தார் வீரபத்திரர், "முறையற்றவன் வேள்விக்கு நீவிரும் துணையாக வந்துள்ளீரோ" எனச் சீறினார்; தண்டாயுத்தினால் திருமாலின் மார்பில் அடித்தார்; அவர் கீழே விழுந்தார். பிரமனை ஒரு கையால் தலையில் குட்டி வீழ்த்தினார்; அருகிலிருந்த அவன் மனைவியின் மூக்கை அரிந்தார். தேவர்களெல்லாம் ஒளிந்து கொள்ள இடம் தேடிப் பல வழியாலும் ஓடினார்கள். சந்திரனைப் பிடித்துத்தள்ளிக் காலால் தேய்த்தார், சூரியனைக் கன்னத்தில் அடித்துப் பற்களை உதிர்த்தார்; பகன் என்னும் சூரியனது கண்களைப் பிடுங்கினார். இயமனைத் தலையை வெட்டினார். குயிலுருக் கொண்டு ஓடிய இந்திரனைப் பிடித்து வெட்டி வீழ்த்தினார். அக்கினி தேவனின் கைகளையும் நாக்குகளையும் துணித்தார். அவன் மனைவியாகிய சுவாகாதேவியின் மூக்கைக் கிள்ளி எறிந்தார், நிருதியைத் தடியால் அடித்து வீழ்த்தினார். வருணனையும் வாயுவையும் எழுவாலும் மழுவாலும் தாக்கினார். குபேரனைச் சூலத்தால் குத்திக் கொன்றார். அசுரர் தலைவன் தலையை ஒரு கணையால் எய்தார். மான் உருக்கொண்டு ஓடிய வேள்வித் தெய்வத்தின் தலையைக் கணையால் அறுத்தார்; தன்னை வணங்கிய உருத்திரர்களை மன்னித்து வழி காட்டினார். மனம் கலங்கித் தக்கன் நின்றான்; அவன் தலையை வெட்டி அக்கினி தேவனை உண்ணச் செய்தார். தக்கன் மனைவி, மகள் முதலிய பெண்டிர்களைப் பத்திர காளி தண்டித்தார். வேள்விச்சாலை அழிந்தது; அனைவரும் மாண்டனர். சிவபெருமான் உமையுடன் வேள்விச்சாலைக்கு எழுந்தருளினார்; திருமாலும் நான்முகனும் வணங்கி நின்றார். உமையம்மை மாண்டவர்களை உய்வித்தருள வேண்டினார்; யாவரும் உயிர் பெற்றனர். தக்கனுடைய தலையை முன்னமே தீக்கடவுள் உண்டுவிட்டமையின், ஒரு ஆட்டுத் தலையைத் தக்கனுக்குத் தலையாக வைத்து உயிர்ப்பித்தனர். அவனும் தன் குற்றத்திற்கு வருந்திச் சிவபெருமானை வணங்கித் திருவருட்கு இலக்கானான்.

"மலைமகள் தனை இகழ்வது செய்த மதியறு சிறுமனவனதுயர்
தலையினொடழலுருவனகரமற முனிவு செய்தவனுறைபதி
கலை நிலவிய புலவர்களிடர்களை தருகொடை பயில்பவர் மிகு
சிலை மலி மதிள் புடை தழுவிய திகழ்பொழில் வளர்
திருமிழலையே" (தேவாரம் 208)

"சுருதியான் தலையும் நாமகள் மூக்கும் சுடரவன் கரமும் முன்னியங்கு
பருதியான் பல்லுமிறுத்தவர்க்கருளும் பரமனர் பயின்றினி திருக்கை
விருதினன் மறையும் அங்கமோராறும் வேள்வியும் வேட்டவர் ஞானம்
கருதினருலகிற் கருத்துடையார்சேர் கழுமல நகரெனலாமே"
(தேவாரம் 4072)

"எச்சன் நிணத்தலை கொண்டார் பகன் கண் கொண்டார்
இரவிகளிலொருவன்பல் இறுத்துக்கொண்டார்
மெச்சன் வியாத்திரன்தலையும் வேருக் கொண்டார்
விறலங்கி கரங்கொண்டார் வேள்விகாத்து
உச்ச நமன் தாளறுத்தார் சந்திரனையுதைத்தார்
உணர்விலாத்தக்கன்றன் வேள்வியெல்லாம்
அச்சமெழ அழித்துக் கொண்டருளுஞ் செய்தார்
அடியேனை ஆட்கொண்ட அமலர்தாமே" (தேவாரம் 7191)

61. தண்ணீர்ப் பந்தல் வைத்தது

மதுரையில் இராசேந்திர பாண்டியன் அரசு செலுத்தும் நாளில், காடு வெட்டிய சோழன் சோமசுந்தரக் கடவுளை யாவரும் அறிய, வந்து வந்து வணங்கிப் போக விரும்பினன். அதனல் பாண்டியனுக்குச் சில கையுறைப் பொருள்கள் அனுப்பி அவனுடைய நட்பைப் பெற்ருன். பின் தன் மகளையும் அவனுக்கு மணம் செய்து கொடுக்க உடன்பட்டான். இராசேந்திர பாண்டியனின் தம்பியாகிய இராசசிம்மன் அதனை அறிந்தான்; தன் மூத்தோனுக்குப் பேசப்பட்ட சோழன் மகளைத் தானே மணம் செய்து கொள்ள எண்ணினன். அண்ணனை வஞ்சித்துக் காஞ்சி நகரை அடைந்தான். அது கேட்ட சோழன் அவனை எதிர் கொண்டு அழைத்து இராசேந்திரனுக்கு என்று வரையறுத்திருந்த தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான்.

பிறகு, காடு வெட்டியசோழன், பாண்டியநாட்டு அரசுரிமையைத் தன் மருமகனுக்கு ஆக்க விரும்பி இராசேந்திர பாண்டியனைப் பிடிக்கக் கருதினன். இராச சிம்மனேடு சேனைகள் சூழப் புறப்பட்டுச் சென்று மதுரைக்குச் சமீபத்தில் தங்கிப் பாடி வீடு அமைத்தான். இச்செய்தியை இராசேந்திர பாண்டியன் ஒற்றர்கள் மூலம் அறிந்தான். உடனே திருக்கோயிலை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "பெருமானே! நள்ளிரவில் தனியனய் வந்து உமது திருவடியைப் பணிந்து சென்ற காடு வெட்டிய சோழன், பல

வரிசைகள் விடுத்து என் நட்பைப் பெற்றான்; இன்று தமியேனுக்கு எதிராகப் படை எடுத்து வந்துள்ளான்; காத்தருள வேண்டும்'' என்று குறையிரந்து வேண்டினான். அப்போது "பாண்டியனே! நாளை உன் சேனையுடன் சென்று பகைவனோடு எதிர்த்துப் போரிடுக, வெற்றி உன்னுடையதாகச் செய்வோம்'' என்று விண்ணினின்றும் ஒரு வாக்கு எழுந்தது. அதனைக் கேட்ட பாண்டியன் மகிழ்ச்சியுற்றுச் சோமசுந்தரக் கடவுளை வணங்கி விடை பெற்றுத் தன் இருக்கையை அடைந்தான்.

மறுநாள், பாண்டியன், தன் சேனைகளுடன் சென்று சோழனோடு போர் புரிந்தான். பாண்டியனது சிறு சேனை போருக் காற்றாது வருந்தியது. அப்போது சோமசுந்தரக் கடவுளின் திருவருளால், பாண்டியன் படைகள் சோழன் படைமுன், ஒன்று, பலவாக உருக்கொண்டு தோன்றின. இரு படைகளும் சலியாது சூரியன் உச்சிவரும் வரை போர் புரிந்தன. அப்போது சூரியன் ஊழித் தீயே போல் காய்ந்தது; அவ்வெம்மையின் கொடுமை ஆற்றாது மரங்கள் எல்லாம் கரிந்து போயின; ஆறுகளில் நீர் சிறிதும் இன்றி வறண்டது; படைகள், நிற்பதற்குக்கூட நிழல் இன்றி வருந்தின.

இவ்வாறு வெப்பத்தால் வருந்தும் சமயத்தில், கருணைக் கடலாகிய சோமசுந்தரக் கடவுள், பாண்டியன் படையின் நடுவே, நான் மறைகளும் கால்களாகப் பொருந்தத் தண்ணீர்ப்பந்தல் வைத்து, தவக்கோலம் பூண்டு, கங்கை நீர் நிரப்பிய ஒரு கெண்டியை ஏந்தி ஒருவருக்கு ஒன்றாய் பலருக்குப் பலவாய் உள்ள துவாரத்தினால் தண்ணீர் வார்த்து தாகத்தைத் தணித்தருளினார். பாண்டியன் 'டை வீரர்கள் சிவபெருமான் வைத்தருளிய தண்ணீர்ப் பந்தலை அடைந்து தண்ணீர் குடித்து இளைப்பு நீங்கினர். அதனால் மீண்டும் வலிமை பெற்று சோழன்மேல் போருக்குச் சென்று வெற்றி பெற்றனர். சோழனையும் இராசசிம்மனையும் பிடித்து இராசேந்திர பாண்டியன் முன் நிறுத்தினர். அவர்களைப் பாண்டியன் சோமசுந்தரக் கடவுள் திருமுன் விடுத்து, "பெருமானே! உமது திருவுளம் யாது?'' என்ன, "பாண்டியனே! உன் கருத்துக்கிசைந்ததைச் செய்யக் கடவை'' என்று ஒரு வாக்கு விண்ணினின்றும் எழுந்தது. அதனைக் கேட்ட பாண்டியன் காடு வெட்டிய சோழனை விடுவித்து தன் தம்பியாகிய இராச சிம்மனை வேறாக விலக்கி விட்டான். பிறகு பலவளங்களும் சிறக்க வாழ்ந்து வந்தான்.

62. திருமால் இடபமாய்த் தாங்கியது

எல்லா உலகங்களும் உயிர்களும் முடிவடைகின்ற கடையூழியில், செந்தீ பரவி எஞ்சியவற்றையும் உண்டு தூய்மை செய்யும் அப்போது சிவபெருமான், உமைகாண ஊழிக் கூத்து ஆடி மகிழ்வர். இத்தகைய கடையூழி ஒன்றில், எங்கும் செந்தீ பரந்து வரும்போது, அறக்கடவுள் தான் அழிந்து விடுவனோ என்று அஞ்சி எருது வடிவமாகச் சிவபெருமானை அணுகித் தன் நிலையை எடுத்துரைத்தான்.

சிவபெருமான், அறக்கடவுளுக்கு இறவாத தன்மை அருளி, ஆற்றலையும் கொடுத்துத் தனக்கு ஊர்தியாக இருக்கும் சிறப்பையும் அளித்தார். அது முதல் அறக்கடவுள் வலிமை கொண்டு சிவனுக்கு ஊர்தியாகவும் ஏனையோர்க்குத் தலைவனாகவும் திகழ்கின்றான்.

முப்புரங்களைச் சிவபெருமான் கனல் எழ விழித்து அழித்த போது, திருமால், இடபமாகச் சிவபெருமானைத் தாங்கினார் என்றும் வரலாறு உண்டு.

63. திருமால் பன்றியாய்த் தேடியது

1-வது கதை பார்க்க.

64. தேவர் கிளை ஓட்டுகந்தது

60-வது கதை பார்க்க.

65. நஞ்சு அமுது செய்தருளியது

15-வது கதை பார்க்க.

66. நட்டம் பயின்றது

உலகம் எல்லாம் தோன்றுவதும், நிலை நிற்பதும், அழிவதும், மயக்கமுறுதலும், அருள் பெறுதலும், சிவபெருமான், தில்லையம்பலத்தும், ஒவ்வொரு உயிர்களின் உள்ளக் கருவிலும் ஆடுகின்ற ஆட்டத்தாலே தான் ஆகின்றன என்பது அறிஞர் கொள்கை. எல்லாம் ஒடுங்கிய பேரூழியின் முடிவாகிய ஈமக்காட்டிலும் அவர் கூத்தாடுகின்றார். இவருடைய திருக்கூத்தை, நடம் என்றும் நட்டம் என்றும் நடனம் என்றும் கூறுகின்றோம். இறைவி ஒரு காலத்தில் காளியாக நின்று கூத்து ஆடினார்; அக்கூத்து கொடுங்கூத்தாய் வளர்ந்து உலகத்தை நடுங்கச் செய்தது. உலகம் எல்லாம் காளியின் கூத்துக்கு உணவாகிவிடுமோ என்ற அச்சம் தோன்றியது. அப்போது சிவபெருமான் ஆனந்தக்கூத்தனாய் நட்டம் பயின்று காளியின் கொடுங்கூத்தை ஒடுங்கச் செய்தார்.

காலதிற் கழல்களார்ப்பக் கனலெரிகையில் வீசி
ஞாலமுங் குழியநின்று நட்டமதாடுகின்ற
மேலவர் முகடுதோய விரிசடை திசைகள்பாய
மாலொரு பாகமாக மகிழ்ந்த நெய்த்தானனாரே.

(தேவாரம் 4528)

67. நந்தம்பாடியில் நான்மறையோன்

ஒரு காலத்தில், தங்கள் மரபுக்குரிய வேதம் ஓதுதலைக் கைவிட்டுப் பார்ப்பார் யாரும்

ஒருமை நெஞ்சகமும் முன்னை இருபிறப்பு ஒழுங்கும் ஓங்கும்
பெருமை முத்தழலும் நான்குஆச்சிரமும் பீடு இலங்கும்
அரியபால் வேள்வி ஐந்தும் ஆதிநூல் அங்கம் ஆறும்
தரும ஏழிசையும் மற்றும் தவிர்ந்து இழிதொழிலில் சார்ந்தார்.

எங்கேனும் சிலர் வேதங்களை ஓதி வந்தாலும், அவற்றின் பொருளை உணராராயிருந்தனர். பொருள் உணர்ந்தார் ஒருவர் இருவர் இருந்தாலும், அழுக்காறு உடையவர்களாய்ப் பிறர்க்கு உதவாதவர்களா இருந்தனர். அப்போது முனிவர் சிலர் சிவபிரானை வேண்ட, அவர், வேதத்தையும் அதன் பொருளையும், திருவாலவாயில் எழுந்தருளி முனிவர்களுக்கு விளக்கிக் கூறி மறைந்தார். திருவிளையாடற் புராணத்தில் 'வேதம் உணர்த்திய திருவிளையாடலில்' இது திருவாலவாயில் நிகழ்ந்ததாகப் பேசப்படுகின்றது. திருவாதவூரடிகள் காலத்தில், இந்நிகழ்ச்சி, கடற்கரை ஊர்கள் ஒன்றிலோ, பாடி வீட்டிலோ நிகழ்ந்ததாக வழங்கப் பெற்றிருத்தலும் கூடும். தஞ்சை மாவட்டத்திலுள்ள கடற்கரை ஊர்கள் சில வேதத்தோடு தொடர்புடைய பெயர்களுள்ளனவாக இருக்கின்றன. 'நால்வேதபுரி', 'திருமறைக்காடு' என்பன எடுத்துக் காட்டுகளாகும். 'நந்தம்பாடி' என்பது ஏதேனும் ஓர் ஊரின் பெயராக இருக்கக்கூடுமா அல்லது மதுரையம்பதியின் பகுதி ஒன்றை அடிகள் இவ்வாறு குறித்திருக்கக் கூடுமா என்பதும் கருதற்பாலது.

> மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை வரி வளைக்கை மடமானி
> பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாள்தோறும் பரவப்
> பொங்கழலுருவன் பூதநாயகன் நால்வேதமும் பொருள்களும் அருளி
> அங்கயற்கண்ணி தன்னொடும் அமர்ந்த ஆலவாயாவதும் இதுவே.
>
> (தேவாரம் 4090)

68. நரி பரியாக்கியது

50-வது கதை பார்க்க.

69. நாமகள் நாசியைத் தூய்மை செய்தது

60-வது கதை பார்க்க.

70. பஞ்சப்பள்ளியில் பான்மொழியோடு இருந்தது

பஞ்சப்பள்ளி என்பது ஒரு ஊரின் பெயராகவோ, அழகு, தண்மை, மென்மை, நறுமணம், வெண்மை என்னும் ஐவகைத் தன்மையமைந்த படுக்கையாகவோ கருதவேண்டி இருக்கிறது. ஊரின் பெயராயின் அங்கு நிகழ்ந்ததொரு தெய்வ நிகழ்ச்சியைக் குறிப்பிடுவதாகும். பள்ளியைக் குறிப்பதாயின் சிவபெருமான் சௌந்திர மாறனாகத் தடாதகைப் பிராட்டியாரை மணந்து அரசு செலுத்திய நாட்களைக் குறிப்பதாகக் கொள்ளலாம். தெளிவாகக் கூறுவதற்கில்லை.

71. பட்டமங்கையில் அட்டமாசித்தி அருளியது

முன்னொரு காலத்தில் திருக்கயிலாய மலையில் கல்லால நீழலின் கீழ்ச்சிவபெருமான் குருமூர்த்தியாய் வீற்றிருந்து, சிவகணத் தலைவர்க்கும் சனகர் முதலிய முனிவர் நால்வர்க்கும் சிவகதையினை திருவாய் மலர்ந்தருளிக் கொண்டிருந்தார். அப்போது கார்த்திகைப் பெண்களான இயக்க மாதர் அறுவரும் சைவத்தவ வேடம் பூண்டு சிவபெருமான் திருமுன் வந்து வணங்கி, "பெருமானே! அடியேங் கட்கு அட்டமாசித்தியை உபதேசித்தருளும்" என்று வேண்டினர். அது கேட்ட பெருமான், "நீங்கள், அட்டமாசித்திகளும் சேடியர் களாய்த் தன்னைப் பணிந்து தன் குற்றேவலைச் செய்ய வீற்றிருப்பவ ளாகிய உமாதேவியை சிந்திப்பீர்களாயின், அவள் உங்கள் வினைகளைப் போக்கி அட்டமாசித்திகளையும் தந்தருள்வாள்" என்று கூறி அட்டமாசித்திகளையும் உபதேசித்தருளினார்.

பின்னர், அவ்வியக்கியர் அறுவரும் முன்னை ஊழ்வலியால் உமாதேவியைச் சிந்தியாமல் சிவபெருமான் அருளிய அட்டமா சித்திகளை மறந்து விட்டனர். சிவபெருமானும் அவர்களைச் சினந்து, "நீங்கள் பட்டமங்கையில் உள்ள ஆலமரத்தின் அடியிலே கற்பாறையாய்க் கிடக்கக் கடவீர்கள்" என்று சபித்தார். இயக்க மார்கள் மனந்தளர்ந்து வணங்கி, "பெருமானே! இச்சாபம் நீங்குவது எப்பொழுது" என்று வினவினர். சிவபொருமான், "ஆயிரம் ஆண்டுகள் கற்பாறையாய்க் கிடந்தால். அதன்மேல் யாம் மதுரையினின்றும் போந்து உங்கள் சாபத்தைப் போக்கி அருள் செய்வோம்" என்றார். இயக்கிமார்கள் அறுவரும் பட்ட மங்கையில் ஆலமரத்தின் அடியில் கற்பாறையாகிக் கிடந்தனர். ஆயிரம் ஆண்டுகள் கழிந்தபின், மதுரையில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுள், ஓரு ஞானசாரிய வடிவங் கொண்டு பட்டமங்கையில் கற்பாறையாய்க் கிடக்கும் அப்பெண்களின் முன் தோன்றி அருள் நோக்கம் செய்தருளினார். உடனே அவர்கள் அறுவரும் பழைய வடிவம் பெற்று அப்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சிவபெருமான் அவர்கள் சிரமீது தம் கையை வைத்து அட்டமாசித்திகளையும் உபதேசிப்பாராயினார்.

"சித்திகள், அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என எட்டு வகைப்படும். இவை ஞானிகளின் விளையாட்டு வகையாகும். அவற்றுள், மிக நுண்ணிய உயிர்கள்தோறும் தான் மிகச் சிறிய பரம அணுவாய்ச் சென்று தங்கும் நுண்மை அணிமாவாம். மண்தத்துவ முதல் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களின் உள்ளும் புறமும் நீங்காது நிறைந்திருக்கும் பெருமை மகிமாவாம். மலையின் பாரத்தைப் போலக் கனமாக இருக்கும் யோகியை எடுத்தால் இலேசாகக் கனமற்று இருப்பது இலகிமாவாம். இலேசான அணுவைப்போல் மெலிந்திருக்கும் யோகியை எடுத்தால் மலையின் பாரத்தைப் போல்க் கனமாக இருப்பது கரிமாவாம்,

பாதலத்திலுள்ள ஒருவன் பிரமலோகத்தில் புகுதலும் மீண்டும் பாதலத்தை அடைதலும் பிராத்தியாம். வேறு உடலில் புகுதலும் ஆகாயத்தில் கஞ்சரித்தலும் தான் விரும்பிய இன்பங்கள் அனைத்தும் தான் இருக்கும் இடத்தில் நினைத்த வண்ணம் வரச் செய்தலும் பிரகாமியம். சூரியன் தனது ஒளியால் எல்லாவற்றையும் விளங்கச் செய்தல்போல உலகிலுள்ள பொருள்களனைத்தையும், மூன்று காலங்களையும், விண்ணுலகப் பொருள்களையும் தன் உடம்பின் ஒளியினால் விளங்கச் செய்து தான் இருந்த இடத்திலிருந்து அறிதல் பிரகாமியம் ஆகும் என்பர். ஆக்கல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் தன் இச்சையின்படி இயற்றி, சூரியன் முதல் ஒன்பது கோள்களும் ஏவல் கேட்ப இருப்பது ஈசத்துவமாகும். அவுணர், பறவை, விலங்கு, பூதம், மனிதர் முதலிய பலவகை உயிர்களையும், இந்திரன் முதலிய திக்குப்பாலர் எண்மரையும், தன் வசமாகச் செய்து கொள்வது வசித்துவமாகும்.'' என்று சிவபெருமான் இயக்கியர் அறுவர்க்கும் அட்டமாசித்திகளை விளங்க அறிவித்தருளினார். இயக்கிமார் அறுவரும் பெருமான் உபதேசித்தருளிய அட்டமாசித்திகளை உமாதேவியைத் தியானம் செய்து நன்கு பயின்றபின் கயிலையை அடைந்தனர்.

72. பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளியது

மதுரையில் வரகுண பாண்டியன் அரசு செலுத்திவரும் நாளில் பாணபத்திரன் என்னும் ஒரு யாழ்ப்பாணன், பாண்டியன் சபையில் யாழ் வாசித்து வருவது வழக்கம். ஒரு நாள், ''நமக்கு இனி அறிவாய் இருப்பது சோமசுந்தரக் கடவுளே'' என்று கருதி அன்று முதல் சோமசுந்தரக் கடவுளின் திருக்கோயிலில் மூன்று காலமும் இசை பாடும் நியமமம் பூண்டான். இறைவன் திருமுன் பாடுதலே யன்றி வேறு தொழில் இன்மையால் வறுமையினை அடைந்தான். அதனைப் பொருத சோமசுந்தரக் கடவுள், ஒவ்வொரு நாளும் சிறிது பொருள் அளிக்க அதனைப் பாணபத்திரன் பெற்றுச் சென்று யாவர்க்கும் கொடுத்து கவலை இன்றி வாழ்ந்து வந்தான்.

இவ்வாறு நாள்தோறும் கொடுத்தருளிய பெருமான் சில காலம் சென்றபின் ஒன்றும் கொடாது ஒழிந்தார். பாணபத்திரன் வறுமையால் துன்பமுற்றான். ஒரு நாள் சோமசுந்தரக் கடவுள் அப்பாண சித்திரன் கனவில் தோன்றி, ''அன்பனே! இதுவரை பாண்டியனது பொருளைக் கவர்ந்து கொடுத்தருளினோம். எம்மிடம் அன்பு வைத்துள்ள பாண்டியன் அறியின் வேறாக நினைத்து விடுவான். உன்னைப் போலவே நம்மிடம் அன்பு கொண்டுள்ள சேரமானுக்கு ஓலை எழுதித் தருவோம். அங்கு செல்லக்கடவை'' என்று கூறி யருளி ''மதிமலி புரிசை மாடக்கூடல்'' என்னும் திருமுகப் பாசுரம் ஒன்று எழுதிக் கொடுத்து மறைந்தார். பாணபத்திரன் விழித் தெழுந்து அதனைக் கண்டு மகிழ்ந்தான்.

பிறகு பாணபத்திரன் தான் பெற்ற திருமுகத்தோடு இறைவனை வணங்கி, மலைநாட்டு திருவஞ்சைக் களத்தை அடைந்தான். அந்நகரில் உள்ள ஒரு தண்ணீர்ப் பந்தலில் தங்கினான். சோமசுந்தரக் கடவுள் அன்றிரவு சேரமான் கனவில் தோன்றி, "மன்னனே! பாணபத்திரன் நம் அடியவன். அவன் உன்னைக் காண நம் திருமுகம் பெற்று வந்திருக்கிறான். அவனுக்கு அரிய பொருளைக் கொடுத்து விரைந்தனுப்புக" என்று கூறி மறைந்தார். சேரமான் விழித்தெழுந்து அமைச்சரிடம் கூறி பாணபத்திரரைத் தேடிக் கண்டு வர ஏவலாளரை அனுப்பினான். அவர்களும் சென்று தேடி தண்ணீர்ப் பந்தலில் தங்கி இருக்கக் கண்டு அதனை அரசனுக்குத் தெரிவித்தனர். உடனே சேரமான் நாயனார் சென்று பாணபத்திரனை எதிர் கொண்டு வணங்கி திருமுகத்தை முறைப்படி வாங்கி வணங்கிக் கண்ணுற்றார். அதில், "மாடங்கள் நிறைந்த மதுரையில் எழுந்தருளியுள்ள சிவனாகிய யாம் எழுதி அனுப்பும் செய்தி நீருண்ட மேகத்தைப்போல புலவர்களுக்கு வரையாது அளிக்கும் சேரமான் காண்க; இத்திருமுகம் கொண்டு வரும் பாணபத்திரன் நின்போல் எம்மிடம் அன்புடையவன். அவன் நின்னைக் காண வருகின்றான் அவனுக்குப் பெருநிதி கொடுத்தனுப்புவது" என்று சோமசுந்தரக் கடவுள் வரைந்தருளிய செய்தியைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.

பிறகு, சேரமான் நாயனார் பாணபத்திரனுக்கு அமுது செய்வித்து முறைப்படி உபசரித்தார். 'வரவிடுப்பது' என்ற கட்டளையால் சேரமான் தம் கருவூலத்தைக் காட்டி "இப்பொருளை எல்லாம் நீரே கைக்கொண்டுபோம்" என்று கூற, பாணபத்திரன் சேரமானை வணங்கி, தனக்கு வேண்டிய அளவு பொருளைப் பெற்றுக் கொண்டு அவரிடம் விடைபெற்றுப் புறப்பட்டார். பாணபத்திரன் மதுரையை அடைந்து சோமசுந்தரக் கடவுளை வணங்கினான். பிறகு, தான் கொணர்ந்த பொருள்கள் அனைத்தையும் யாவர்க்கும் வேண்டுவன வழங்கி மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான்.

73. பதஞ்சலிக்கு அருளியது

1. தாருகாவன முனிவர்களுடைய ஆணவத்தை அழித்து சிவபெருமான், அம்முனிவர்கள் ஏவிய முயல்கன் மீது திருவடியை ஊன்றித் திருநடஞ்செய்த ஆனந்தக் காட்சியில் முழுகித் திளைத்த ஆதிசேடன், மறுமுறையும் அவ்வருட் காட்சியைக் காணவேண்டும் என்ற தன் தணியா வேட்கையைத் திருமாலிடம் விண்ணப்பித்தான். அவ் விண்ணப்பத்திற்கு இரங்கி, திருமால், ஆதிசேடனுக்கு விடை கொடுத்தார். ஆதியேடன், சுடர்மணிகள் இமைக்கும் தன் ஆயிரம் முடிகளுடனும் கயிலையின் வடபால்சென்று, சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் இயற்றினான். இவன் கடுந்தவத்தைக் கலைக்கப் பிரமன் எதிர்வந்து பல நற்பேறுகளை வழங்கினான். ஆதிசேடனோ, எத்தேவரையும், எப்பேற்றையும் சிறிதும் பொருட்படுத்தாது, சிவபெருமானது ஆனந்தக் கூத்தைக் காணவேண்டும் என்ற ஒரே உறுதியில்

நிலைபெற்றுக் கடுந்தவத்தை மேலும் மேலும் கடுமையாக்கி நின்றான். அவன் உறுதியை வியந்த சிவபெருமான், பெண்ணொரு பாகனாக அண்ணல் ஆன்மீது தோன்றி ஆதிசேடனுக்குக் காட்சியளித்து "எவரும் கண்டு அஞ்சும் இப் பேருருவினை மாற்றிக்கொண்டு, தில்லைக்குச் சென்று, அங்கு புலிக்கால் முனிவன் அமைத்துள்ள துறவோர் இருக்கையுள் அமர்ந்து, அங்கு நிலைபெற்றுள்ள சிவ லிங்கத்தை புலிக்கால் முனிவனுடன் வழிபட்டு வருக; யாம் அத் திருப்பதிக்கண் படைத்தல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து அருட்செயல்களையும் இடைவிடாது இயற்றும் ஆனந்தக் கூத்தினை, யாவரும் காண அம்பலத்தில் ஆடி நினக்கும் புலிக்கால் முனிவருக்கும், ஏனை அடியவர்களுக்கும் அருள்செய்வோம்" எனத்திருவாய் மலர்ந்து மறைந்தார். அவ் வாறே ஆதிசேடனும் தன் பேருருவினையும் ஆயிரம் மணிமுடிகளையும் துறந்து சிவபெருமானது அடியானாகத் தில்லையை அடைந்து ஆனந்தக் கூத்தினைக்கண்டுப் பேரானந்தம் உறுவானாயினன். ஆதிசேடனைப் பதஞ்சலி என வழங்கினர்.

2. மதுரையில் இறைவன திருமணம் காணச்சென்ற பதஞ்சலி முனிவர், இறைவனது தில்லையம்பலத் திருக்கூத்தைக் கண்டு வணங்கியே உண்ணும் நியமம் உடையவராகையால்: திருமண விருந்தில் உண்ணாது விடைபெற்றார்; சிவபெருமான் அவருக்காக வேண்டித் தில்லையில் ஆடும் திருக்கூத்தை வெள்ளியம்பலத்தில் ஆடித்திருவருள் செய்தார்.

74. பரிப்பாகன்

50-வது, 97-வது கதைகளைப் பார்க்க.

75. பாண்டியற்குப் பரகதி அருளியது.

சிவபெருமான் தடாதகைப் பிராட்டியாரை மணந்து சுந்தர பாண்டியனாக வீற்றிருக்கும்போது, பிராட்டியாரின் தாயாகிய காஞ்சனமாலை, கடலாடவேண்டும் என்று விரும்ப, பெருமான் ஒரு கடலன்றி எழுகடலையும் மதுரைக்கு வரவழைத்தார். கணவனோடு கடலாடுதலே தலைசிறந்தது என்பது நன்குணர்ந்த காஞ்சன மாலைக்குத் தன் கணவன் இல்லாத குறை வருத்தியது. இஃதறிந்த எம்பெருமான், இந்திரனோடு ஒரு சேர தேவலோகத்தில் வீற்றிருந்த மலையத்துவச பாண்டியனை மதுரையம்பதிக்கு வருமாறு பணித்தனர். விண்சென்ற மலையத்துவசன் மீண்டும் மண்ணுலகில் வரக்கண்ட மக்கள் எல்லாம் மகிழ்ந்தனர். காஞ்சனமலையும் மங்கலக்கோலம் பூண்டு மலையத்துவசனோடு எழுகடலும் ஆடினாள். கடலாடிய பின்னர் இறைவன் திருவருளால், பாசம் ஒழிந்தவர்களாய் அம்மையப்பரது திருஉருவமாகிய சிவசாருப வடிவை மண்ணுலகம் எல்லாம் மகிழ்ந்து வணங்குமாறு பெற்று சிவலோகத்திலிருந்து இழிந்து வந்துள்ள ஒரு தெய்வ விமானத்தில் ஏறிவீற்றிருந்தனர். அவ்விமானம், இவர்களை ஏற்று, பூலோகத்தினின்றும் நீங்கி,

இரவியும் மதியும் நிலவும் புவலோகத்தையும், இந்திரன்வாழும் சுவலோகத்தையும், இருடிகள் சித்தர்கள் வசிக்கும் மகலோகத்தையும், பிதிரர்முதலியோரது சனலோகத்தையும், சனகர்முதலியோர் தவம் செய்யும் தவலோகத்தையும், பிரமனது சத்தியலோகத்தையும் திருமாலுடைய வைகுந்தமாகிய நவலோகத்தையும் கடந்து, சிவலோகத்தில் கொண்டு உய்த்தது. பாண்டியனும் அவன் மனைவியும் எல்லா உலகங்களுக்கும் மேலாய சிவலோகத்தில் இறுமாந்து வீற்றிருப்பாராயினர்.

76. பாதகமே சோறு பற்றியது

பொன்னிநதி பொய்யாதளிக்கும் புனல் நாட்டில் மண்ணி நதியின் தென்கரையில், சேய்ஞலூர் என்னும் மூதூர் உளது. அவ்வூரில், மறையோர்கள், செல்வச் சிறப்புடனும் அறு தொழிலின் மெய்ம்மை ஒழுக்கம் குன்றாமலும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களுள் காசிபகோத்திர மரபில் எச்சதத்தன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன், சுற்றம் விரும்பும் பவித்திரை என்பாளை மணந்து, சிறப்புடன் இல்லறம் நடத்தி வந்தான். இவர்களுக்கு, நல்வினைப் பயனால் ஓர் ஆண்மகவு பிறந்தது அம்மகவுக்கு விசாரசருமன் எனப் பெயரிட்டனர். அம்மகவும் முந்தை அறிவின் தொடர்ச்சியினால், தம்மரபிற்குரிய எல்லாக் கலைகளும் உரிய காலத்தே பயின்று அறிவு நிரம்பப் பெற்றது. ஆண்டு ஏழு நிரம்பியபின் பெற்றோர்கள் அவருக்கு உபநயனம் செய்து முடித்தனர். அவர் பிறகலைகள் எல்லாம் பயின்றுவருநாளில் எல்லாக் கலைகட்கும் பொருளாய் இருப்பது இறைவன் கழலே என உணர்ந்து இறைவன்பால் ஆராத காதல் கொண்டு திகழ்ந்து வந்தார்.

ஒருநாள் அவர், மாட்டுக் கிடையுடன் சென்றார். அப்போது மாடுமேய்க்கும் இடையனை, ஒரு பசு, தன் கொம்பால் குத்த அவன் அதனைக் கோல்கொண்டு அடித்தான். அதனைக் கண்டு வெகுண்டு ஆவின் பெருமையை ஆயற்கு எடுத்து உரைத்தார். இறைவன் திருமுடிமேல் ஆடி அருளுதற்கு திருமஞ்சனம் ஐந்தும் அளிப்பது ஆவே யாகும் என உணர்ந்தார். அங்கு நின்ற ஆயனை நோக்கி, “இனி நிரை மேய்ப்பொழிக நீ; யானே இந்நிரை மேய்ப்பன்.” என்றார், இடை மகனும் அஞ்சி நிரையை விட்டகன்றான். அவர் நாள்தோறும் நிரையை, புல் நிறைந்த இடங்களில் மேய்த்து, தண்ணீர் ஊட்டி, நிழலில் அமரச் செய்து, பால் உதவும் காலத்து உடையோர் இல்லந்தோறும் உய்த்து வந்தார். முன்னையினும் நிரைபல்கி பால் அதிகம் சுரப்பதைக் கண்ட மறையவர்கள் மனம் மகிழ்ந்தனர்.

இவ்வாறு நிரை மேய்த்து வருங்கால் மண்ணி நதியின் ஆற்றிடைக் குறையில், ஓர் ஆத்தி மரத்தின் கீழ், சிவபெருமான் திருமேனி மணலால் ஆக்கி, சிவாலயமும் கோபுரமும் வகுத்து அமைத்தார். ஆத்தி மலரும் செழுந்தளிரும் கொய்து பூங்கூடையினில் கொணர்ந்து, குடம் நிறைய பசுக்களின் பாலைக் கறந்து தாம் ஆக்கிய

இறைவன் திருமேனிக்கு திருமஞ்சனமாட்டி மலரால் அருச்சித்து வந்தார். ஒரு நாள் இதனைக் கண்ட அயலான் ஒருவன் மறையவர்களிடம் சென்று நடந்ததைக் கூறினான். அதுகேட்ட மறையோர்கள் சபைகூட்டி அச்சிறுவனின் தந்தையாகிய எச்சதத்தனை அழைத்து, "உன் மகன் ஆகுதிக்குக் கறக்கும் பசுக்களை எல்லாம் மேய்ப்பான் போல ஓட்டிச் சென்று பாலைக் கறந்து மணலில் உகுத்து வருகின்றான்" என்றார்கள். இதனை அறியாத எச்சதத்தன், "அவ்வாறு நடக்குமாயின் குற்றம் என்னுடையதே" என்று அச்சத்தோடு கூறினான். அன்றிரவு முழுதும் "நம் குடிக்குப் பழி வந்ததே" என்று கவன்று உறங்காதிருந்தான்.

மறுநாள் மகன் ஆக்களை எல்லாம் ஓட்டிச் சென்ற பின் அவன் அறியாது சென்று மறைந்து இருந்து நடப்பனவற்றை எல்லாம் கண்டான். அச்சிறுவன் வழக்கம்போல் இறைவன் திருமேனியை மணலால் அமைத்து மலரால் அருச்சனை செய்வதைக் கண்டு அம்மறையவன் வெகுண்டு தன் கையில் உள்ள தண்டால் தன் மகன் முதுகில் புடைத்தான். இவ்வாறு பலகாலும் அடிக்க அச்சிறுவன் திருமஞ்சனமாட்டும் ஆர்வத்தால் பொறுத்திருந்தான். அதுகண்டு தந்தையார் வெகுண்டு திருமஞ்சனக் குடப்பாலை காலால் இடறிச் சிந்தினார். இதனைக் கண்ட சிறுவன், தன் தந்தை என்று அறிந்தும், அத்தந்தையின் தாள்கள் சிந்தும்படி மருங்கு கிடந்த கோலை எடுத்து எறிந்தான். அது மழுவாகி மறையவன் தாளைத் துணிக, மறையவனும் மண்மேல் வீழ்ந்தான். இதனை உணர்ந்த சிவபெருமான் வெளித்தோன்றி, "நம் பொருட்டால் தந்தை விழ எறிந்தாய். அடுத்த தாதை இனி உனக்கு நாம்" என்று கூறி, தொண்டர்கட்கதிபனாக்கி சண்டேசப் பதத்தைக் கொடுத்தருளினார். தேவர்கள் மலர்மாரி பொழிய கணநாதர் பாடி ஆட தாதை தாள் தடிந்த அம்மறைச் சிறுவர் சிவனார் மகன் ஆயினார்.

77. பாம்பை அணியாகக் கொண்டது

கருடனும் பாம்பும் ஒரு தந்தையின் இரு மனைவியரின் மக்கள்; இவர்களுக்குள் பல காரணங்களால் பகைமை ஏற்பட்டு கருடன் பாம்புகளைத் துன்புறுத்துவதாயிற்று; அவ்வாறு துன்புறுத்தப்பெற்ற பாம்புகள், கருடனுக்கு அஞ்சி, சிவபெருமானிடம் அடைக்கலம் புக்கன; அவர், அவற்றை அணிகளாக அணிந்துகொண்டார். பின்னர், தாருகாவன முனிவர் வேள்வியிலிருந்து தன்பால் சினந்து வந்த பாம்புகளையும் இவற்றோடு சேர்த்து அணியாகக் கொண்டார். மலையரையன் மகளாரைத் திருமணம் செய்துகொள்ளச் சென்றபோது தான் கொண்ட மணமகன் கோலத்திற்கேற்ப இப்பாம்புகளைத் தலைசிறந்த அணிகளாக மாற்றிச் சென்றார்.

78. பாலகனுக்கிய பரிசு

35-வது கதையைப் பார்க்க.

79. பாலகனுக்குப் பாற்கடல் ஈந்தது :

காமதேனு என்னும் தெய்வீகப் பசுவின் பாலை அருந்தி அதன் சுவையை நன்கு தெரிந்த குழந்தையாகிய உபமன்யு, சுவைமிக்க பால்வேண்டும் என்று சிவபெருமானை நோக்கித் தவம் செய்ய, சிவபெருமான் பாற்கடலையே அவருக்கு அருளினார்.

80. பிட்டு அமுது செய்தருளியது :

திருவாதவூரர் புராணவரலாறு பக்கம் 36 பார்க்க.

81. பிறையை அணிந்தது :

தக்கனுக்குப் பலபெண்கள் பலகாலங்களில் பிறந்திருந்தார்கள்; அவர்களுள், ஒருகாலத்துத் தோன்றிய இருபத்தெழுவரைத் தக்கன், சந்திரனுக்கு மனைவியராக மணம் செய்து கொடுத்திருந்தான்; சந்திரன் ஒரு பெண்ணிடம் மட்டும் மிகவும் காதலுடையவனாய், ஏனையோரைப் புறக்கணித்திருந்தான். தன் பெண்கள் எல்லோரையும் ஒரேபடியாக ஏற்று வாழாமல், ஒருத்தியிடம் பேரன்பும் ஏனையோர் அனைவரிடமும் புறக்கணிப்பும் கொண்டிருந்தமைக்குத் தக்கன் பொறுமல் சந்திரனுடைய கலைகள் அனைத்தும் தேய்ந்து ஒழியுமாறு வெகுண்டு உரைத்தான். அவ்வாறே ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலையாகத் தேய்ந்தது; ஒரே ஒரு கலை மட்டும் எஞ்சியிருந்தது. சந்திரன் சிவபெருமானைப் புகல் அடைந்து வணங்கினான். தாழ்ந்தோரை உயர்த்தும் தாழ் சடையோன், ஒற்றைக்கலையனாக நின்ற சந்திரனைத் தன் தலைக்கு அணியாக அணிந்தான். இறைவன் அருள் பெற்றவுடனே மீண்டும் கலைகள் வளரத்தொடங்கின. இங்கு குறிப்பிடுவது சிவபெருமான் தலையில் அணிந்த ஒரு கலையோடு நின்ற சந்திரனாகிய பிறை.

82. புலித்தோல் அணிந்தது :

33வது கதையைப் பார்க்க

83. புலிமுலை புல்வாய்க்கு அருளியது :

தென்பாண்டி நாட்டில், ஒரு கடப்பங்காட்டில், ஒரு பெண்மான் மான் கூட்டத்தை விட்டுத் தனியாகத் தங்கியிருந்தது. அது மேயும்போதும் தண்ணீர் குடிக்கும்போதும், தன குட்டிகளைப் புதரில் மறைத்துவைத்துச் செல்லுவது வழக்கம்; ஒரு நாள், நீர்த்துறையில் தண்ணீர் குடிக்கும்போது, ஒரு வேடன் அந்தப் பெண் மானை அம்பால் எய்து கொன்றுவிட்டான். நெடுநாழிவரைத் தாய் மானிடம் பால்குடிப்பதற்காகச் காத்துகொண்டிருந்த சிறு மான் குட்டிகள், தாயைக் காணாது உணவாகிய பால் பெறுதற்கு எவ்வித வழியும் இல்லாதனவாய் இடர்ப்பட்டன. கன்றுகளின் துன்பத்தைக் கண்ட சிவபெருமான், அக்காட்டிலிருந்த ஒரு பெண்புலியை அம்

மான் கன்றுகளுக்குப் பால் கொடுக்கும்படிக் கட்டளையிட்டார்; அவ்வாறே அப் பெண்புலியும், மான் கன்றுகளைப் பால் கொடுத்துப் பாதுகாத்து வளர்த்தது

84. மண்சுமந்து அருளியது :

திருவாதவூரர் புராண வரலாறு பக்கம் 37 பார்க்க.

85. மலைமகளை ஒரு பாகம் வைத்தது :

இமயமலைத் தெய்வமாகிய மலையரசனின் தவத்துக்கு இரங்கி உமையம்மையார் அவன் மகளாகப் பிறந்தார். சிவபெருமானை நோக்கி நோன்பு நோற்று அப்பெருமானால் விதிப்படி மணம் செய்து கொள்ளப்பெற்று, உலகியல் இடையறாது நடைபெறும் வண்ணம் எப்போதும் அப்பெருமானுடைய இடப்பாகத்தில் வீற்றிருப்பாராயினர்.

86. முப்புரம் எரித்தது :

வானத்தில் பறக்கும் வலிமைபெற்ற பொன், வெள்ளி, இரும்புகளாலாகிய கோட்டைகளை உடையவர்களான மூன்று அரக்கர்கள் எப்போதுப், தேவர்களுக்கு பெருந்துயர் விளைத்துவந்தனர். தேவர்கள் எல்லாம் தேராகவும தேரின் பகுதிகளாகவும், படைக்கலமாகவும், படைக்கலப் பகுதிகளாகவும் மாறி, சிவபெருமானைத் தேரில் வீற்றருளச் செய்து அந்த அசுரர்களுடன் போருக்குப் புறப்பட்டனர். அசுரர்கள் எதிர்ப்பட்ட அளவில், தேவர்கள், ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் தனிப்பட்ட வலியினாலும், அனைவரும் ஒன்று சேர்ந்துள்ள ஆற்றலினாலும் முப்புர அசுரர்கள் வீழ்ச்சியடைவார்கள் எனத் தருக்கி நின்றார்கள். இது உணர்ந்த சிவபெருமான் புன்னகை பூத்தார்; முப்புரங்களும் எரிந்து ஒழிந்தன.

87. யானைக்கு அருள் செய்தது :

3 ஆவது கதை பார்க்க.

88. யானைத்தோல் போர்த்தது :

2 ஆவது கதை பார்க்க.

89. வண்டோதரிக்கு அருளியது :

25 ஆவது கதை பார்க்க.

90. வீரபத்திரரால் தேவர்கள் புண்பட்டது :

60 ஆவது கதை பார்க்க.

91. வெண்தலை மிலைச்சியது :

33 ஆவது கதை பார்க்க.

92. வேடுவன் ஆனது:

45 ஆவது கதை பார்க்க.

93. வேலம்புத்தூரில் விட்டேறு அருளியது:

தமிழின் இனிமையை இடைவிடாது துய்ப்பதற்காக ஒரு காலத்து, தமரநீர்ப் புவனம் முழுதும் ஒருங்கு ஈன்ற அன்னை, தடாதகைப் பிராட்டி என்ற பெயருடனும், தனி முதலாகிய சிவபெருமான் சௌந்திரபாண்டியன் என்ற பெயருடனும், குமரவேள். உக்கிர குமார பாண்டியன் என்ற பெயருடனும், தென்பாண்டி நாட்டுத் திருவாலவாயில் தென்னவர் குல முன்னவராய்த் தோன்றியருளி ஆட்சி செய்தனர். அக்காலத்தில், வேலம்புத்தூர் என்ற ஊரில், சிவபெருமான் உக்கிரகுமாரருக்கு, வேல், வளை, செண்டு என்னும் படைக்கலங்களைக் கொடுத்தருளினர். தாய், தந்தை, தனயன் மூவரும் தமிழ்ச்சுவையைப் பருகித் தமிழ் நாட்டைக் காத்துத் தெய்வத்திருப்பதியாய்த் திகழ்வித்து அருளினர்.

திருவாசகம்

பதிகங்களின் அகரவரிசை

திருவாசகம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

பாட்டு எண்	முதற்குறிப்பு	பதிக எண்	பதிகத்துள் செய்யுள் எண்	பக்கம்
596	அங்கணன் எங்கள்	43	10	416
289	அங்கியருக்கன்	13	15	220
578	அட்ட மூர்த்தி	42	2	402
142	அடர்புல ஞனிற்	6	38	136
136	அடற்கரி போலைம்	6	32	132
606	அடியா ரானீர்	45	4	424
484	அடியார் சிலருன்	32	2	340
87	அடியே னல்லேன்	5	83	98
495	அடியேனல்லெ	33	2	348
3	அண்டப் பகுதியின்	3		20
172	அண்ணு மலையான்	7	8	158
589	அணிமுடி யாதி	43	3	412
541	அத்தனே யண்ட	37	8	380
293	அத்தி யுரித்தது	13	19	220
219	அத்தேவர் தேவர்	10	5	188
372	அதுபழச் சுவையென	20	7	256
102	அப்ப னேயெனக்	5	98	108
273	அம்பரமாம் புள்ளி	12	19	212
271	அம்பலத்தே கூத்தாடி	12	17	210
536	அம்மையே யப்பா	37	3	378
258	அயனை யனங்கனை	12	4	206
212	அயன்றலை கொண்டு	9	18	184
237	அரிக்கும் பிரமற்கும்	11	3	196
22	அரியானே யாவர்க்கு	5	18	58
367	அருணனிந் திரன்	20	2	252
274	அருந்தவருக் காலின்	12	20	212
239	அருமந்த தேவர்	11	5	198
383	அருளா தொழிந்தால்	21	8	264
485	அருளா ரமுதப்	32	3	342
537	அருளுடைச் சுடரே	37	4	378
388	அரைசனே யன்பர்க்	22	3	270
380	அரைசே பொன்னம்	21	5	262
141	அரைசே யறியாச்	6	37	136
240	அரையாடு நாகம்	11	6	198
439	அல்லிக் கமலத்	27	4	308
260	அலரவனும் மாலவனும்	12	6	206
238	அவமாய தேவர்	11	4	198
503	அழகே புரிந்திட்	33	10	354
531	அழிவின்றி நின்ற	36	8	372
92	அழுகே னின்பா	5	88	102

திருவாசகம்

பிழை திருத்தம்

பக்கம்	பாட்டு அடி	குறிப்பு	பிழை	திருத்தம்
7		1	மாறூபடுகின்ற	மாறுபடுகின்ற
15	2–76		படிமம்	படிமப்
21	3–7		தொகையோடு	தொகையொடு
21		7	சிறூகாற்றுப்போல	சிறுகாற்றுப்போல
21	3–20		அருக்கனில் 12	அருக்கனில் 11
26	3–107		பிச்சைமை	பிச்செமை
27	3–107		பிச்சுஅமை	பிச்சுஎமை
32	4–தலைப்பு		அரியதிருவடி எளிதாயிற்று	சகத்தின் உற்பத்தி
34	4–41		புலவரம்பாய	புலவரம்பாகிய
35		7	கவலையுற்றூ	கவலையுற்று
35		10	வெறூப்பு	வெறுப்பு
36	4–72		பரம	பரமா
37	4–60		தழல்–னது	தழல்–அது
38	4–99		வென்றனக்	வென்றெனக்
39	4–95		உருவவிகிர்தா	வெல்கொடிச் சிவனே
39	4–96		—	மின்ஆர் உருவ விகிர்தா போற்றி
39	4–99		ஆ ! ஆ !	' ஆ ! ஆ ! '
39	4–99		என்–தனக்கு	என்று, எனக்கு
40	4–124		வொருவா	வொருவ
42	4–155		கரியேன்	கறியேன்
43	4–155		ஒர்பற்று	ஓர்பற்று
44	4–172		விங்கென்றருளாய்	லென்றிங்கருளாய்
44	4–190		சரியாபோற்றி	சரியாய்போற்றி
44	4–192		பூவணத்தானே	பூவணத்தரனே
47		1	கிளைக்கும்கணு	கிளைக்கும்கணு.
49	6–4		ஆல்லாது ;	அல்லாது ;
57	19–3		அவர்–னவரைக்	அவர்–அவரைக்
76	54–2		யாண்டது	யாண்டதும்
77		7	பிறவியைய்	பிறவியைய
79		3	கச்சி	கச்சு
81		1	ஊடல்	உடல்
85	66–1		ஒ	ஓ
85	66–2		ஒ	ஓ
85	66–3		ஒ	ஓ
85	66–4		ஒ	ஓ
89	71–4		உம்பராய்	உம்பரா
94	80–3		எனைத்	அனைத்
95	80–2		இல்லை	இல்லை ;
95	80–2		சொல்லல் ;	சொல்லல்

பக்கம்	பாட்டு அடி	குறிப்பு	பிழை	திருத்தம்
95	80–2		கேட்பவே	கேட்பவே :
95	80–3		உலகும் ;	உலகும்
95	82–2		ஓர்பேதம்	ஒருபேதம்
95	82–3		ஓர் நின்	ஒரு நின்
95	82–4		ஓர்தேவர்	ஒருதேவர்
95		4	வேற்றாமை	வேற்றுமை
104	95–3		மானுட	மானிட
104	96–1		கையி	மையி
105	95–3		எளிமை	எளியை
109	101–4		அடியன் ஆக்கினாய்; போற்றி! என்னை, நின்	—
117		15	15	16
120	118–1		துன்பத்தினின்றும்	துன்பத்தின்றும்
121	118–1		துன்பத்தின்(நின்)றும்	துன்பத்து இன்றும்
122	121–2		மெய்மை	மெய்ம்மை
125		6	பிரப்பங்கொடி போன்றவள்-உமையம்மை	பிரப்பங்கொடி போன்றவளை-உமையம்மையை
131	132–1		ஓர்	ஒரு
133		10	வலு	வலிமை
133	135–4		தட	தடம்
145	152–1		அராப்பூண்	அரப்பூண்
147	156–5		ஏத்துதற்குக	ஏத்துதற்குக்
148	157–6		னன்புடமை	னன்புடைமை
149	157–6		அன்புடமை	அன்புடைமை
150	161–7		வன்நெஞ்சப்	வன்னெஞ்சப்
162	178–1		டிந்திரனும	டிந்திரனும்
162	180–1		தோழீ	தோழி
163	178–3		செய்தது	செய்து
164	181–2		பெருந்துறையில்	பெருந்துறையின்
177	200–2		பேதாது	போதாது
185	212–1		கொண்டு-ஆடல்	கொண்டு செண்டு ஆடல்
186	217–2		பேசும்தோறு	பேசுந்தொறு
187	217–2		பேசுந்தோறுப்	பேசுந்தொறும்
188	220–1		பெண்டீர்	பெண்டிர்
198	241–2		பூதலத்தேவலித்து	பூதலத்தே வலிந்து
201	245–4		கொட்டாமே	கொட்டாமோ
202	248–2		நுழைவரிய	நுழைவரியா
202	250–1		புர்ந்தரா தியவயன்	புரந்தராதியயன்
203	248–2		அரியன்	அரியான்
203	251–1		சாத்திரம்	சாத்திரம்
205		3	இறகு	மந்தாரை
207		13	பதாளத்திலே	பாதாளத்திலே
216	279–2		துள்புகுந்தான்	துட்புகுந்தான்
217	279–2		உட்புகுந்தரன்	உள்புகுந்தான்
222	297–3		பொங்கனின்று	பொங்கநின்று
223		8	கமலாக்ஷ்ன்	கமலாக்ஷன்

பக்கம்	பாட்டு அடி	குறிப்பு	பிழை	திருத்தம்
225	301–1		சுற்றிய	சாற்றிய
227	306–2		முகம்நெரித்து	முகன்நெரித்து
237	332–1		பாகத்தான்	பாகத்தன்
240	பாட்டின் தலைப்புஎண்		௯	௬
241	339–1		பூண்[6]	அர[6]
245	346–2		வினவின்	வினவில்
245	346–3		சொல்லின்	சொல்லில்
251		16	ஏருது	எருது
256	பாட்டின் தொடர் எண்		௩௨௭	௩௭௨
256	371–2		மானுடத்	மானிடத்
258	374–1		நன்னவு	நன்னவு
267	385–4		ஓல்கா	ஒல்கா
278	399–2		யெத்தினுக்	யெற்றினுக்
279	399–2		எத்தினுக்கு	எற்றினுக்கு
279		9	உலகை நடத்தும் தெய்வங்கள்	ஆட்டிவைக்கும் புலன்கள்
283	404–1		வானோர்	வானவர்
285	406–3		புழுக்கண்	புழுக்கள்
285	406–3		உடை	நுடை
287	409–3		மாதர் திரை	மாதர்த்திரை
289	414–1		அன்பா	அன்பர்
290	417–4		வாசைபட்டேன்	வாசைப்பட்டேன்
304	435–4		வசதியங்	வதிசயங்
305		5	நெடிப்பொழுதில்	நொடிப்பொழுதில்
306	437–4		கொல்லோவென்	கொல் லோவென்
308	438–4		கொல்லோவென்	கொல் லோவென்
308	440–2		னிலமுழுது	நிலமுழுது
309	438–4		மணியைப	மணியைப்
310	441–4		கொல்லோவென்	கொல் லோவென்
310	442–4		கொல்லோவென்	கொல் லோவென்
310	443–4		கொல்லோவென்	கொல் லோவென்
312	444–4		கொல்லோவென்	கொல் லோவென்
312	445–4		கொல்லோவென்	கொல் லோவென்
321	454–4		உரியனே	உரியானே
323	457–1		உளார்	உளோர்
326	461–2		னுறுசுவை	லுறுசுவை
331	467–2		சட்ட	சட்டம்
337	474–3		பிறம்பு	பிறப்பு
349	495–3		சிதையாது	சிதையாத
350	498–3		விரித்துரைக்கில்	விரித்துரைக்கின்
355		5	அவ்வாறூ	அவ்வாறு
357	506–1		என்பதும்	ஆவதும்
357	507–3		எல்லா	எல்லே
359	509–2		ஒழியாவணம்	ஒழியாவண்ணம்
365	519–3		தரமரைகள்	தாமரைகள்
372	522–1		மாயா	மாய
372	530–1		மேல்கொண்டு	மேற்கொண்டு
373	530–1		மேற்கொண்டு	மேல்கொண்டு

பக்கம்	பாட்டு அடி	குறிப்பு	பிழை	திருத்தம்
374	533–4		தோற்றமி	தேற்றமி
376	534–3		கழலே	கடலே
377		13	மண்ஆய்அரு	மண்ஆய்அற
380	539–1		வாநந்த	வானந்த
382	543–3		மயக்கந்	மயக்காந்
384	544–4		யாகிலா	யாக்கியவா
384	545–4		கழல்கண்டேன்	கழல்கண்டே
384	547–4		றிறனினைந்தே	றிறநினைந்தே
385	546–2		ஆ! ஆ!	‘ஆ! ஆ!’ 13
385	546–3		ஓதம் 13	ஓதம் 14
385	546–3		மலி 14	மலி 15
385	547–1		தால் 15	தால் 16
385	547–1		அரவு 16	அரவு 17
385	547–1		படர் 17	படர் 18
385	547–2		உச்சத்தார் 18	உச்சத்தார் 19
385	547–2		உய்யக்கொண்டு19	உய்யக்கொண்டு 20
385	547–3		ஆர் 20	ஆர் 21
385	547–3		அச்சோ 21	அச்சோ 22
385	547–4		சித்தத்து 22	சித்தத்து 23
385	547–4		ஆறு 23	ஆறு 24
385	547–4		திறம் 24	திறம்25
389	556–4		கற்ருவின் 1	கற்ருவின் 15
390	561–3		சிவன்கருனைத்	சிவன்கருணைத்
391		11	மிகுவதற்குக் (காரனமான)	மிகுவதற்குக் (காரணமான)
430	616–2		பரமபரனே	பரம்பரனே
430	619–2		யிறையோன்	விறையோன்
433	தலைப்பு		திருவெண்பா	பண்டுஆய நான்மறை
433		7	பதிேனாரு	பதினொரு
434	632–1		கிலக்கிதமாய்	கிலக்கிதமாய்ப்
441	639–3		பரபபு	பரப்பு
450	653–2		வீழ்வேனை	விழுவேனை

பிற்சேர்க்கை 'அ' 1

திருவாசகப் பதிகத்தொகை

ஆசிரிய விருத்தம்

சிவபுரா ணங்கீர்த்தி திருவண்டம் போற்றித்
திருவகவல் முதனான்காம்; சதகம் நூறும்;
இவைநீத்தல் விண்ணப்பம் ஐம்ப தாகும்;
எம்பாவை அம்மானை சுண்ணங் கோத்தும்பி
புவனமகிழ் தெள்ளேணஞ் சாழல்இரு பஃதாம்;
பூவல்லி திருவுந்தி பத்தொன்ப தாகும்;
உவமையிலாத் தோணோக்கம் பதினான் காகும்;
ஊசல்ஒன்ப தாகுமென உரைத்த வாறே.

திருவன்னை குயிற்பத்துத் திருத்த சாங்கம்
திருப்பள் ளியொடு கோயின்மூத்த திருப்பதிகம்
அருள்கோயிற் றிருப்பதிகம் செத்திலா அடைக்கலமே
ஆசைஅதி சயம்புணர்ச்சி வாழாப்பத்(து) அருட்பத்(து)
ஒருபதெனு வுரைசெய்வர்; கழுக்குன்றம் ஏழாம்;
ஒருபதாங் கண்டம்; பிரார்த்தனை பதினொன்றே;
திருமருவு குழைத்துபத்து உயிருண்ணி அச்சம்
திருப்பாண்டி பிடித்தபத்தோ டேசறவும் பத்தே.

திருப்புலம்பல் மூன்றாகும்; குலாப்பத் தற்புதமே
சென்னிதிரு வார்த்தை பத்(து); எண்ணப் பத்தாறும்;
பரற்குறிய யாத்திரைப்பத் தொருப தாகும்;
படையெழுச்சி இரண்டாகும்; பதினொன்று வெண்பா;
இருட்டவிரும் பண்டாய நான்மறை ஏழாம்;
எட்டாகும் படையாட்சி மின்னே ரேழாகும்;
அருட்பெறும்அச் சோவொன்பான் நாற்பத்தேழ் பதிகம்
அகவலுடன் பாட்டறு நூற் றைம்பத் தாறே.

திருவாசக செய்யுட்தொகை
அறுநூற்று ஐம்பத்தெட்டு என்போர் காட்டும் ஆதரவு.

சிவபுரா ணங்கீர்த்தி திருவண்டப் பகுதி
திருப்போற்றி யுடனகவ றிருச்சதக நூறும்
நவநீத்தல் விண்ணப்ப மைம்பதாம் பாவை
நலந்திகழு மம்மானை நல்லபொற் சுண்ணம்
புவனமகிழ் கோத்தும்பி திருவார்தெள் ளேணம்
பொருவரிய திருச்சாழல் பூவல்லி யுந்தி
இவையிருப தாமிரே ழாகுதோ ணோக்கம்
எழிற்பொன்னூ சலுமேயோன் பானென்ப விவையே. (1)

திருவன்னை குயிற்பத்துத் திருத்தத்த சாங்கம்
திருப்பள்ளி யொடுகோயின் மூத்ததிருப் பதிகம்
அருற்கோயிற் றிருப்பதிகஞ் செத்திலடைக் கலமே
ஆசையதி சயம்புணர்ச்சி வாழாப்பத் தருட்பத்
தொருபதென வுரைசெய்வர் கழுக்குன்ற மேழாம்
உயிர்பிரார்த் தனைகள்பதி னொன்றுகுங் காண்பத்
திருமைபெருங் குழைத்தபத் துயிருண்ணி யச்சம்
எழிற்பாண்டி பிடித்தபத்தொ டேசறவு பத்தே. (2)

திருப்புலம்பல் மூன்றுகுலா வற்புதமே சென்னி
திருவார்த்தை பத்தெண்ணப் பதிகதொரு வாறும்
பரற்குறிய யாத்திரைப்பத் தொருபதா மற்றைப்
படையெழுச்சி யிரண்டாகும் பதினொன்றும் வெண்பா
அருட்டவழும் பண்டாய நான்மறையே ழாகும்
வலியபடை யாட்சியெட் டானந்த மேழாம்
அருட்பெறுமச் சோவொன்ப தைம்பதொன்றும் பதிகம்
அகவலொடு செய்யுள்அறு நூற்றைம்பத் தெட்டே. (3)

பிற்சேர்க்கை 'அ' 2

திருவாசகப் பதிக வரிசை

வெண்பா அந்தாதி

திருவகவல் நான்கின் திறங்கேளாய்; நெஞ்சே!
அருவமாய் எங்கும் அமர்ந்தோன்—ஒருவன்
சிவபுரா ணங்கீர்த்தி சீரண்டம் போற்றி
அவைபிரான் என்றெண்ணி யாய். (1)

எண்ணுஞ் சதகந் திருநீத்தல் விண்ணப்பம்
அண்ணலார் எம்பாவை அம்மானை—சுண்ணமொடு
கோத்தும்பி தெள்ளேணம் கொண்டாடுஞ் சாழலுடன்
ஏத்தும்பூ வல்லியென் றேத்து. (2)

ஏத்தரிய உந்தி எழிலாருந் தோணோக்கம்
பார்த்தாடும் பொன்னூசல் பண்பினுடன்—கூத்தனுரை
அன்னை குயிலும் அழகார்த சாங்கமுடன்
பன்னியநூ லேபரிந்து பார். (3)

பாராரும் பள்ளி யெழுச்சியுடன் பண்கோயிற்
சீராரு மூத்த திருப்பதிகம்—ஏராரும்
கோயிற் றிருப்பதிகம் கொண்டாடி நெஞ்சமே!
நீயிறையை வாழ்த்தாய் நெகிழ்ந்து. (4)

நெகிழாதே நெஞ்சமே! நீசெத்தி லாப்பத்(து)
இகழா தடைக்கலமென் றேத்திப்—புகழுடைய
ஆசைப்பத் தோதி அதிசயத்தை இப்பொழுதே
பாசத்தை விட்டுநீ பற்று. (5)

பற்றற்று நெஞ்சே பகராய்; புணர்ச்சிப்பத்(து)
உற்றுருவா வாழாப்பத் தோதியபின்—மற்றை
அருட்பத்தை ஓதி அகற்றாய் வினையை
மருட்புத்தி ஏது மறந்து. (6)

மறவாது நீகழுக்குன் றந்தனையே வாழ்த்தி
இறவாதே கண்டபத் தேற்றி—உறவாம்
பிரார்த்தனைப் பத்தைப் பிதற்றிப்பே ணாய்; பிரமன்
அராத்தலையோன் காணா அடி. (7)

காணாய் குழைத்த உயிருண்ணி கவல் அச்சம்
பேணாய்; திருப்பாண்டி பேணியபின்—கோணார்
பிறைசூடி தாளைப் பிடித்தபத் தென்றும்
கறைபோம் மனமே! கருது. (8)

கருதே சறவுபுலம் பல்காண் குழாப்பத்(து)
அரிதேயும் அற்புதமே சென்னி—பெரிதாம்
திருவார்த்தை எண்ணமுடன் யாத்திரையும் தேறி
திருவார்த்தை யாயிருந்தே ஓது. (9)

ஓதும் படையெழுச்சி ஓங்குந் திருவெண்பா
நாதனுறை பண்டாய நான்மறையே—ஆதியதாய்
நற்படைய தாட்சிவா னந்தம்அச் சோவையே
செப்படையும் முத்தித் திரு. (10)

பிற்சேர்க்கை 'அ' 3

திருவாசக உண்மை

சிவபுராணம்

தேசுறுமா ணிக்கமெனச் சிறந்ததிரு வாசகத்தில்
பேசுதிருச் சிவபுரா ணத்தகவற் பெருமைசொலில்
ஈசர்தமக் கியல்பான திருநாம முதலெவையும்
மாசறவே வாழ்கவென வாழ்த்துகின்ற அருட்குறிப்பாம். (1)

கீர்த்தித்திருவகவல் – திருவண்டப்பகுதி

புகழ்பெருகுஞ் செய்கையெலாம் புகல்அகவல் ஒன்றுகும்
திகழ்திருவண் டப்பகுதித் திருவகவல் செப்பியது
தகுசிருட்டி திதியொடுக்கஞ் சாற்றுதிரோ தம்பொதுவாதி
அகலமுறத் தேர்ந்திடவே யருளியநற் பொருளாகும். (2)

போற்றித்திருவகவல் – திருச்சதகம் – நீத்தல்விண்ணப்பம்

முத்திபெறு நெறியறியு மொழிபோற்றித் திருவகவல்
சத்தியஞா னந்தருதே சிகர்மோகஞ் சதகமதாம்
மித்தையுல கிணையகற்றி விடாமலெனை யாண்டருளென்
றத்தரறிந் திடநீத்தல் விண்ணப்பம் அறைந்ததுவாம். (3)

திருவெம்பாவை – திருவம்மானை

மலவிருளற் றுறங்காமல் மன்னுபரி பாகரருள்
செலமுழுக வருகவெனச் செப்பல்திரு வெம்பாவை
நலமுறு மந்தணர் வடிவாய் நாரணன்காண் பரியபதம்
நிலமதில்வந் தாள்கருணை நினைந்தாட லம்மானை (4)

திருப்பொற்சுண்ணம் – திருக்கோத்தும்பி

சத்திகளாற் றனுகரண புவனபோ கங்கள்தமை
அத்தனுக்குச் சுண்ணமவை யாயிடிக்கக் கூவுதலே
ஒத்ததிருச் சுண்ணமுயர் போதமொரு வண்டாகச்
சித்தவிகா ரத்தூது செப்பிவிடல் கோத்தும்பி. (5)

திருத்தெள்ளேணம் – திருச்சாழல்

பொன்னார்மெய் யண்ணலரும் போதவின்ப மேமிகுந்து
தென்னாதென் னாவெனவே தெள்ளேணங் கொட்டியதாம்
முன்னாற் கலையுமுண ராமுகை யாமேடி
தன்னாற் பதிமுதன்மை சாற்றியதாந் திருச்சாழல். (6)

திருப்பூவல்லி – திருவுந்தியார்

தேவரறி யாதசிவன் தேடியே யாண்ட நலம்
ஆவலொடுங் சொல்லி யடியாரொ டுங்கூடிப்
பூவியந்து கொய்தல்திருப் பூவல்லி யாமரன்சீர்
பாவமுறு தீமையறப் பாடல்திரு வுந்தியதே, (7)

திருத்தோணோக்கம் – திருப்பொன்னூசல்

சித்தஞ் சிவமாக்கிச் செய்தனவே புண்ணியமாய்
அத்தன் செயுங்கருணைக் காராமை யுண்மிகுந்து
பொத்தியகை கொட்டிப் புகழ்தல்தோ ணோக்கமருள்
சத்தியிருந் தாடத்தா லாட்டிடுதல் பொன்னூசல், (8)

திருவன்னைப்பத்து – குயிற்பத்து

நேயம்மி குந்த நிலைகுலையக் கூடுதலை
ஆயவருட் டாய்க்கங் கறைதலன்னைப் பத்தாகும்
தூயவருட் குயிலேநற் சோதியெனைக் கூடுதற்குன்
வாயினாற் கூவெனமுன் வாழ்த்தல்குயில் பத்தாமே. (9)

திருத்தசாங்கம் – திருப்பள்ளி யெழுச்சி

பேர்நாடு ஊருமலை பெயரூர்தி படைமுரசு
தார்கொடிய லாமரற்குச் சாற்றல் தசாங்கமதாம்
ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சிபணி விடைகேட்
டார்வமுட னண்டவாற் கன்புசெயு மியல்பே. (10)

கோயின்மூத்த திருப்பதிகம் – கோயிற்றிருப்பதிகம்
செத்திலாப்பத்து – அடைக்கலப்பத்து

கோயின்மூத்த திருப்பதிகஞ்சிதம்பரத்திலருளடையுங் குறிப்பதாகும்
ஏயுங்கோயிற்றிருப்பதிகம் பெருந்துறைத் தேசிகர் மோகமியம்
பலாகும்
ஆயபசுபோதம் முற்றறுங்கெடவேண்டலே செத்திலாப்பத்தாகும்
ஓதுவல்வாதனைகள் வந்தணுகாமலடைக்கலப்பத்
துரைத்ததாமே. (11)

ஆசைப்பத்து - அதிசயப்பத்து

க்ருவியுறு மூனுடற்கண் வாராமற் றிருவருளிற் கலப்பதற்கே
அரனடியைப்புகழ்ந்து பெருகார்வமொடுபாடுதலே யாசைப்பத்தாம்
வெருவிமலத்தினைச் சீலத்தொன்ருகுமடியர் குழாத்துடனே கூட்டும்
பரமரருட்பெருமை மிகுதியைப்புகழ்ந்து பாடலதிசயப்பத்தாமே. (12)

புணர்ச்சிப்பத்து – வாழாப்பத்து

ஆண்டகுரு வைப்பிரியா தணைந்துபணி புரிந்துமிகு மன்போடின்பம்
பூண்டுகிடக் கப்பெறுவ தென்றுகொலோ வெனும்விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்
நீண்டவுல கத்தினிற்பற் றென்றிலேனிவ்வுடற்க ணின்று வாழேன்
மாண்டகுநின் பதநிழற்கீழ் வருகவருள் புரியெனுஞ்சொல் வாழாப் பத்தே. (13)

அருட்பத்து – திருக்கழுக்குன்றப்பதிகம்

சோதியருட் சுடர்விளக்கே துயர்ப்பிறவிக் கூடல்விடுத் துன்ருள் சேர்தற்
காதரித்திங் குனையழைத்தா லதெந்துவெனக் கேளெனுஞ்சொல் அருட்பத்தாகும்
நீதிமறை பரவுதிருப் பெருந்துறையிற் குருவடிவாய் நிகழ்ந்த கோலம்
காதலொடுங் காட்டினையே யெனுங்களிப்புப் பகர்தல்திருக் கழுக்குன்ருமே. (14)

கண்டபத்து - பிரார்த்தனைப்பத்து

இந்திரிய வயமயங்கா தேயெடுத்துத் தானுக்கு மெழிலா னந்தம்
கந்தமலி தில்லையினுட் கண்டேனென் றுவந்துரைத்தல் கண்டபத்தாம்
அந்தமிலா வானந்தத் தகலாம லெனையழுத்தி யாள்வாயென்று
சிந்தைகலந் துரைத்ததுவே பிரார்த்தனைப்பத் தாய்ப்புகலுஞ் செய்கை யாமே.(15)

குழைத்தபத்து – உயிருண்ணிப்பத்து

இழைத்தேனிவ் வாக்கைபொறுத் தினிக்கணமும் பொறுக்ககிலே னேழையேனைக்
குழைப்பதேன் பிழைபொறுத்தா ளெனவிரங்கிக் கூறுதலே குழைத்த பத்தாம்
தழைத்துவளர் பேரின்பந்தானுகி யுயிர்தோன்ருத் தன்மை யாய்த்துன்
பொழித்துநிறைவைப்பெறுத லுயிருண்ணிப் பத்தாயிங் குரைத்த தாமே. (16)

அச்சப்பத்து – திருப்பாண்டிப்பதிகம்

தரையில்வளர் வினைமுழுதும் வரினுமஞ்சேன் சிவசமயத்தவஞ்சா ராதார்
அருகின்வரக் காண்கின்மன மஞ்சுமென விகழ்ந்துரைத்த லச்சப் பத்தாம்
புரவியின்மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை யாம்பெறுமற் புதம்போல் யாரும்
விரவுமின்க ளென்றடியார்க் குறுதிசொலல் திருப்பாண்டி விருத்த மாமே. (17)

பிடித்தபத்து - திருவேசறவு

மிக்கபிற வித்துயரெ லாமொழித்து விபுத்துவமிங் களித்தலாலே
சிக்கறச் சிக்கெனப் பிடித்தே னின்னை யென்று துணிவுசெப்பல் பிடித்த பத்தாம்
தக்கபரி யாய்நரியை யாக்குதல்போ லெனைப்பெரிதாய்த் தாக்கித் தாட்கீழ்
அக்கணம்வைத் தனையேயென் றிரங்கல்திரு வேசறவென் றியம்பலாமே. (18)

திருப்புலம்பல் – குலாப்பத்து

கரைந்துருகும் பேரன்புன் கழலிணைக்கே'கற்றாவின் மனம்போலென்றும்
திருத்தும்வகை யெனக்கருள்க வெனக்கேட்டல் திருப்புலம்ப லாகுமுள்ளம்
விரும்புசிவா னந்தவெள்ளம் விழைந்ததில்லை நாயகனை மிகக்கொண்டாடி
நிரம்புமனக் களிமிகுத்த விறுமாப்பே குலாப்பத்தாய் நிகழ்த்த லாமே. (19)

அற்புதப்பத்து – சென்னிப்பத்து

மாயவுருக் கொண்டுளத்தை மயக்குமின்னார் கண்வலையுண் மயங்கு வேற்கிங்
காயுமறி வளித்தாள லதிசயமென் றுரைத்தலற்புதப்பத் தாகும்
தூயவருட் குருபதத்தைச் சூட்டுதற்குப் பெற்றவுயிர் சுகத்தை நோக்கிச்
சேயமலர்ப் பதத்தருமை யடியரொடும் வியந்துரைத்தல் சென்னிப் பத்தே. (20)

திருவார்த்தை – எண்ணப்பதிகம்

அறம்பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட செயன்முதலாவரன்சீ ராட்டின்
திறமறிவா ரெம்பிரா னாவரென் வுரைத்தல்திருவார்த்தையாகும்
நிறம்வளரு மலர்ப்பொழில்சூழ்ந் தோங்குதிருத்தில்லைமன்று ணிமலனாமத்
திறம்பெருகு மின்பமரு ளென்றலெண்ணப் பத்தெனவும் திகழ்த்த லாமே. (21)

யாத்திரைப்பத்து – திருப்படையெழுச்சி

பொல்லாத பலத்தைவிட்டுச் சிவன்கழற்கீழ்ப் புகுங்காலம்புணர்ந்த தெற்கிங்
கெல்லாரும் வாருமெனக் கருணையினா லழைத்திடல்யாத் திரைப்பத்தாகும்
அல்லாத துர்க்குணமா யப்படைகள் விளையாம லருள்வா ளேந்தி
நல்லோர்க ளியாருமெம்மோ டெய்துமெனப் படையெழுச்சி நவிறலாகும். (22)

திருவெண்பா – பண்டாயநான்மறை

தொந்தமா மலமொறுத்துச் சுகம்பெருக்கிப் பெருந்துறைவாழ்சோதி யென்றன்
சிந்தனையே யூராகக் கொண்டிருந்தா ரென்றுரைத்தல் திருவெண் பாவாம்
எந்தைதிருப் பெருந்துறையையேத்துநம ரேவாழ்வுற் றிடர்சேர்பாச
பந்தமறுத் திடுவரெனப் பண்டாய நான்மறையும் பகர்ந்த தாமே. (23)

திருப்படையாட்சி – ஆனந்தமாலை – அச்சோப்பதிகம்

வாகுதிருப் பெருந்துறையா ரெழுந்தருளப் பெறிலெல்லாவளங்கள் முற்றும்
ஆகவெமக் கல்லாத தாகாதென் றியம் பல்படையாட்சி யாகும்
மோகமிகு மடியரொடுங் கூடவிரும்பியதானந்தமொழியு மீசர்
போகசுக மெனக்களித்தா ரார்பெறுவா ரெனுமருமைபுகற லச்சோ. (24)

திருச்சதகம்

71-வது புணர்ப்பதொக்க என்னுந்திருப்பாசுரம்

(இ—ள்) புணர்ப்பதொக்க - ஆண்டவனோடு மாறுகொண்டு திரிகின்ற அடிமையானவனை அந்த ஆண்டவன் சதுர்வித உபாயங்களினாலும் தன்னடிமை யென்று தன்னோடுங் கூட்டிக்கொள்வதொப்ப, எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய் — திருவடிக்குருகராகிய மெய்யடியார் குணங்களொன்று மில்லாதவனாய்க் காம வெகுளி மயக்கங்களினால் பிரபஞ்சத்தை மெய்யென்று சுழல்கின்ற வென்னைக்கிருபையினாலே ஆசாரியமூர்த்தமா யெழுந்தருளிவந்து தடுத்தாட்கொண்டு மெய்யடியார் கண்மேல் வைக்குங் கிருபா நோக்கத்தை யடியேன் போதத்துக்குள்ளும் மறனுமாயழுந்த வைத்தருளிச் செய்தாய், புணர்ப்பதன்றி தென்றபோது — அரிபிரமாதிகட்குங் கிடையாத விந்தக் கிருபாநோக்கம் ஒன்றுக்கும் பற்றாத வெனக்குக் கிடைப்பதன்றென்று கிருபையருமையை யறிந்தபோது, நின்னோடுமென்னை யிரண்டற்ற அத்துவிதமாய்க் கூட்டுவதாகவும், அன்றிதாக வன்பு நின்கழற்கனே புணர்ப்பதாக-முன் யானெனதாய் நின்ற பிரபஞ்ச மானவிது இப்போது யானெனதென்றதாகவும் இப் பிரபஞ்சத்தின் மேனின்ற அன்பு சுவாமிகள் திருவடிக்கண்ணே மீளாது நிற்பதாகவுமாயின, அங்கணாள புங்கமான போகமே— அழகிய கண்ணாளா அரிபிரமாதியர் போகங்களையுங் கடந் திருப்பதான சிவானந்தபோகமே இந்தக் காருணியத்துக்கு நாயேனற் கைம்மாறும் உண்டு—கொலோ. எ—று.

ஆண்டு பூணநோக்கினாய்—என்றமையான், புணர்ப்பதொக்க என்ற உவமைக்கு ஆண்டவனடிமை வருவிக்கப்பட்டது. பூண நோக்குதல்-போதம் பதையாது வைத்த நோக்கம். கிருபையருமையை யறிந்தபோது தற்செயல் முழுதுமிறந்து சிவத்தொடத்து விதமான படியினாலே, நின்னோடுமென்னைப் புணர்ப்பதாக என்றார். என்னோடும் என்ற மூன்றனுருபை என்னையென்னு மிரண்டனுருபாகக் கொள்க. உம்மைகளும் ஆயினவென்னும் ஆக்கமுந்தொக்குநின்றன.

திருவெம்பாவை

ஆடிமாதமுதல் மார்கழிமாத வரையும் இராத்திரியாகவும் தைமாதமுதல் ஆனிமாதவரையும் பகலாகவும் இது தேவர்களுக் கொருநாள், சங்கார காலத்துக்குஞ் சிருஷ்டி காலத்துக்கும் பிரமாணமாக இந்த ஆறுமாதமும் பிரிந்து நடக்கும் மார்கழி மாதம் உதயகாலமாய்ச் சிருஷ்டிகாலத்துக் கேதுவாயிருக்கும்.

பிரபஞ்ச சிருஷ்டியைத் திருவுளத்தடைத்து வைந்த வசத்தியைச் சிருஷ்டிக்கத் தொடங்குகிற அவசரந் திருப்பள்ளி யெழுச்சியென வழங்கும்.

இனி அந்தச் சுத்தமாயை நாதவிந்துகளாகவும், சாதாக்கிய மாகவும், மகேசுரமாகவும், சுத்தவித்தையாகவும் அஞ்சுதல மாயிருக்கும்; நாதவிந்துகளாகிய தலங்களிலே பரமும், பரையும் அதிஷ்டிக்குஞ் சாதாக்கியமாகிய தலத்திலே சதாசிவமூர்த்தி யெழுந்தருளியிருப்பர். போகாங்கங்களாகிய அணுசதாசிவரே சேவிக்கவும், இதன் கீழே யீசுரற் கதிட்டானமாகிய மகேசுர தலத்திலே அனந்தாதியஷ்ட வித்தியேசுரர் சேவிக்கவும், இதன் கீழே உருத்திரர்க்கதிஷ்டானமாகிய சுத்தவித்தியாதலத்திலே மந்திரேசுரர் சேவிக்கவும், இப்படிப் பிரபஞ்சவனுக்கிரக காரியமாகப் பராசத்தியிற்றோன்றிய ஞானக் கிரியைக ளொத்த விச்சையே திருமேனியான சதாசிவமூர்த்தி திருவருளால் அந்த மகேசுர தத்துவத்திலே சத்தி மண்டலத்தி லிருந்த மனோன்மணி சத்தியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சர்வபூத தமனி பெலப்பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி பெலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி இரவுத்திரியைப் பிரேரிக்க, அந்தச்சத்தி சேட்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படி பிரேரியா நிற்கப் பட்ட நவசத்திகள் பிரேர கத்தினல் மாயையை அதிஷ்டித்திருக்கிற அனந்த தேவராலே அசுத்தமாயை காரியப்பட்டுப் பிருதிவி முடிவான பிரபஞ்சகாரியம் நடக்கும். இனி :

1-வது ஆதியுமந்தமும் என்னுந்திருவாசகம் :

மனோன்மணி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ச் சர்வபூதத மனியை யுணர்த்துகிறது.

2–வது. பாசம் பரஞ்சோதி என்னுந் திருவாசகம் :

சர்வபூத தமனியென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ப் பெலப் பிரமதனி யென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

3–வது. முத்தன்ன வெண்ணகையாய் என்னுந் திருவாசகம் :

வெலப்பிரமதனி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ப் பெலவி கரணியென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

4–வது. ஒண்ணித்திலநகையாய் என்னுந் திருவாசகம் :

பெலவிகரணி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய் காளி யென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

5–வது. மாலறியாநான்முகன் என்னுந் திருவாசகம் :

காளியென்னுஞ் சத்தியின் திருவாக்காய் இரவுத்திரி யென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

6–வது. மானேநீ நென்னலே என்னுந் திருவாசகம் :

இரவுத்திரி யென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ச் சேட்டை யென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

7–வது. அன்னேயிவையும் என்னுந் திருவாசகம் :

சேட்டை யென்னுஞ் சத்தியின் திருவாக்காய் வாமையென்னுஞ் சத்தியை யுணர்த்துகிறது.

8–வது. கோழிசிலம்ப என்னுந் திருவாசகம் :

வாமையென்னுஞ் சத்தியின் திருவாக்காய்ச் சுத்தமாயையைப் பிரேரிக்கிற அனந்ததேவரை ஆசரித்து அப்பால் பிரகிருதியில் விகு'தியான ஆன்ம தத்துவம் நடப்பது பொருட்டாக விஷ்ணுவினிடத்தில் அதிஷ்டிக்கிற சிவ சத்தியை நோக்கி, ஆழியானன்புடைமையாமாறு மிவ்வாரே என்று பிரேரித்ததாகக் கருதினது ஆக இப்படி நவசத்திகள்கூடி விசுவகாரியம் பண்ணுகிறதே பாட்டாகப் பாடியபடி.

9–வது. முன்னைப்பழம்பொருள் திருவாசகம் :

அநாதியாயுள்ளவர்களுக் கெல்லாம் அநாதியாயுள்ளவனுமாய் அனுபவிப்பவர்களுக்கு மேன்மேலும் புதுமைகொடுக்கும் ஆனந்தத்தைத் கொடுப்போனுமா யிருக்கிற உன்னடியார் அடிபணிதலும், அவர்களை ஆசரித்தலும், அவர்களே பத்தாவாக அங்கீகரித்தலும், அவரேவற பணிசெய்தலும், யாங்களுரிமையா யிந்த முறைமை ஒழியாவண்ணம் பரசாதித்தருளில் ஒருகுறைவுபாடுமில்லோமென்று நவசத்திகளுந் தம்மிற் சொல்லியது.

உன்னடியார்–என்பது, விஞ்ஞானகலரில் மலபக்கவராய் அணு சதாசிவரென்னும் பேர் பெற்றிருப்பார் ஒருவகையும், அதிகாரமலத்துடனே கூடிய யனந்தாதி யஷ்டவித்தியேசுரரென்னும் பேர் பெற்றிருப்பார் ஒருவகையும், ஆணவமல சகிதராய்ச் சத்தகோடி மகாமந்திரரேசுரரென்று பேர் பெற்றிருப்பார் ஒருவகையுமாக விஞ்ஞான கலர் மூன்று வகையையும், அன்றியும், உன்னடியார் என்பது இனி நிரைநிரையாக அணு சதாசிவர்தாள் பணிவோம், அட்டவித்தியேசுரர்க்குப் பாங்காவோம், சத்தகோடி மகாமந்திரரேசுர ரெங்களுக்குப் பத்தாக்க ளாவார்க ளென்றலுமாம். சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம் என்பது, அவர்களேவலால் அசுத்தமாயையைப் பிரேரியா நிற்போ மென்க.

10–வது. பாதாள மேழினும் என்னும் திருவாசகம் :

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர் என்பது நூறுயிரம் யோசனையான பூமியின் கனத்தையும், சிவஞானமன்றியே தபசு பண்ணுகிறவர்கள் சென்றிருக்கும் இடமாகிய கனிட்ட பாதாளத்தையும் அதன்கீழே உண்டாகிய அசுர கண்டம், சர்ப்பகண்டம், இராக்கதகண்டம், இப்படி ஒவ்வொன்று மும்மூன்றும் கண்டமாய் ஆடகேசுரர்க்குப் புவனமுமாயிருக்கிற ஏழு பாதாளத்துக்கும் அதன் கீழாக ரவுரவம், கும்பீபாகம், அவிசிகம் என்று சொல்லப்பட்ட மயிரராச நகரமூன்றும் இவையுட்படப் பதின்மூன்று நரகம் ஒரு அடுக்காகவும், பத்து நரகம் ஒரு அடுக்காகவும், ஒன்பது நரகம் ஒரு

அடுக்காகவும், ஆக முப்பத்திரண்டு நரகமும், இவர்களைச் சூழ்ந்து சேவித்திருக்கிற நூற்றெட்டு நரகமும் ஆக நூற்றுநாற்பது நரகமும் கூர்மாண்டதேவரென்னும் உருத்திரர்க்குப் புவனமா யிருக்கப்பட்ட நரகபுவனங்களுக்குங் கீழ்க் காலாக்கினி உருத்திரர் புவனம் பதினேழுகோடி யோசனையாய் அண்ட கடாக மூடப்பட்ட புவனமாயிருக்கும். இப்படிச் சொல்லப்பட்ட பிரமாண்ட முதலாக அண்டங்களனைத்துக்கும் ஆதார பூதமாய்ச் சிவசத்தியான ஆதார சத்திக்கும் அப்பாற் சிவனுடைய பூரணத்துக்கு எல்லைப்படுத்தி இன்னமட்டென்று சொல்லுதற்கு முடியாதாதலால் சொற்கழிவா யிருக்கப்பட்டது மலர்போன்ற சீபாதமாகையாலும், போதார்புனை முடியு மெல்லாப் பொருள் முடிவே-இனிப்பிருதிவியண்ட முன் சொன்ன அண்ட கடாகமுதல் ஐம்பதுகோடி யோசனையுட்பட மேற் புவலோக முதல் சிவலோகமளவாக ஏழு லோகமு மேல் அண்ட கடாக முட்பட ஐம்பது கோடி யோசனையுமாகப் பிரமாண்டம் நூறுகோடி யோசனையாக, அதற்குமேல் அதிற் பதின்மடங்கு அப்பு அண்டம், அதற்குமேல் அதிற் பதின்மடங்கு தேயு அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு வாயு அண்டம், அதற்குமேல் பதின் மடங்கு ஆகாச அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு மனஅண்டம், அதற்குமேல் பதின்மடங்கு புத்தி அண்டம், அதற்குமேல் பதின் மடங்கு ஆங்கார அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு குண அண்டம், அதன்மேல் நூறுமடங்கு பிரகிருதி அண்டம், அதன்மேல் நூறு மடங்கு அராக அண்டம், அதன்மேல் நூறுமடங்கு வித்தை அண்டம், அதன்மேல் நூறுமடங்கு கலையண்டம், அதன்மேல் நூறு மடங்கு நியதி அண்டம், அதன்மேல் நூறுமடங்கு கால அண்டம், அதன்மேல் ஆயிரமடங்கு அசுத்தமாயை, அதன்மேல் பதினுயிர மடங்கு சுத்தமாயையிற் சுத்தவித்தை, அதற்குமேல் பதினுயிர மடங்கு மகேசுவரம், அதற்குமேல் சாதாக்கியம், அதற்குமேல் பரவிந்து, அதற்குமேல் பரநாதம், அப்பால் சிவனுடைய பூரணம் அளவு எல்லைப்படாதாதலின் எல்லாப்பொருள்களுக்கு முடிவுமா யிருப்பது திருமுடியாதலாற் சிவபாதமுந் திருமுடியுமொருவர்க்கும் அளவுபடுத்த முடியாதாதலாலும், — பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன் – முன்சொல்லி வரப்பட்ட லோகங்களிடத்தும் அதற்கு மேலுங் கீழுஞ் சத்தி சிவான்மக பூரணமாக விருக்கையாலே ஒருவடிவாய் ஏகதேசியுமாயிரான், ஆதலாலும், — வேதமுதல் விண்ணேரு மண்ணுந் துதித்தாலுமோத வுலவா வொரு தோழன் தொண்டருளன் – சதுர்வேதங்களும் பிரம விஷ்ணுக்களாகிய தேவர் களும் பூமியிலுண்டானவர்களும் அளவற்ற தோத்திரம் பண்ணி ணுலும் அந்தத் தோத்திரத்தினுலின்னமட்டென்று அளவுபடுத்த முடியாமல் முன்சொன்ன தேவர்கள் திரட்சியாகிய வீட்டங்கள் தோன்றலுள் சாத்திரங்களைக் கிளறிக்கிளறி[illegible]டப்பன்னியுந் தெரியாத வஸ்துவை, — கோதில் குலத் தரன்றன் கோயிற்பி ணப்பிள்ளைகாள் – உபாதி சூனியனுய் நிர்மலனுய் அரனென்னுந் திருநாமத்தை யுடையவனுமா யிருக்கிற சிவனுக்கு ஆலயமான

சுத்த மாயையிற் சுத்தவித்தையிலிருந்து தம்பிரானுற் பணிவிடையாகப் பிரபஞ்சகாரியத்தைப் பண்ணுமவர் வாமைமுதலாகிய சிவசத்திகள், ஏதவனூரேதவன் பேராருற்றுராரயலா ரேதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய் – இப்படியே யுணர்ந்தாக்கு உணர் வரியோனுகிய சிவபெருமானுக்கூரேது பேரேது உறவார் அடுத்தோ ரார் இவைகளொன்று மில்லாமையாலிந்த முறைமையையுடைய சிவபெருமானைப் பாடும் வண்ணம் எவ்வண்ணமோதோழி எ – று.

திருப்படையாட்சி

1-வது. கண்களிரண்டும் என்னுந் திருப்பாசுரம்

இச்செய்யுள் என்னுதலிற்றோவெனின் படையாட்சியோடு பாசறைக்கட்சென்ற தலைவன் சத்தனுதலால் அவன் வருவலென வுரைத்த பருவமும் வந்தது – அவனும் வருவன், என்றாற்றுவித்த பாங்கிக்குத் தலைவி அவன் வெளிப்படின் றனக்குளதாம் போகானந் தப்பேற்றைக் கூறுதலை யுணர்த்துத னுதலிற்று.

(இ-ள்) கலவனுருக்கொடு வலைவீசி மீனிலைப்படுத்த சிவ னெனுந் தலைவன் வந்து வெளிப்படி னுண்டென்னிரண்டு கண்களு மவன் றிருக்கழல் கண்டு களிப்பனவாகிய நிகழ்ச்சியு முளதாகாது பிரிவறியாது தன் றலைவருடன் புணர்ந்து நிற்குமேனை மாதர் வாழ்வினின்று மென்வாழ்வு கடைப்படுமாறு மாகாது. இனி மண்ணுலகங்களின் வந்து பிறந்திடுமாறு மறந்திடுமாறு முளதா காது. திருமாலறியாத் திருமலர்ப்பாத மிரண்டனையும் வணங்குது மென்றுசொல்லுஞ் சொன்னிகழ்ச்சியு முளதாகாது. களிப்பினை மிகத்தரும் பண்ணினைப் பொருந்திய பாடலோடாடல் பயின்றிடு மாறு முளதாகாது. நல்வளநிறைந்த திருப்பாண்டி நாடதனையே திருப்படைவீடாக வுடையான் படையாட்சிகள் பாடுதுமென்று சொல்லுஞ் சொன்னிகழ்ச்சியு முளதாகாது. இருமலமுடைய பிரளயாகலர் களிகூரத்தக்கதாக மான்மழு சதுர்ப்புயத்தோடுவந்து வெளிப்படுதலுமுளதாகாது. ஆண்டுயான் சிவபோகமென்னுஞ் சிவாநுபூதி சொரூபியாகவே னென்பதாம்.

ஈண்டு தலைவி சீவன் முத்தன். தலைவன் சத்தனுகிய பரமசிவன் பாங்கி திருவருளெனவறிக. சைவாகமத்து முத்தியிலு மும்முதலு முண்டென்பதனுன் முத்தியினு மாண்டானடிமை யிருக்கவிவ்வாறு கூற லாகாதெனின், அறியாது கூறினுய், மலமாயா கன்மங்களோடு கூடித் திரோதப்பட்டுச் சனனமரணமுற்றுவரு மான்மா விருவினையு மொருகாலத்தே வந்து புசிக்கைக்குச் சமமுற்ற வெல்லையிற்போன பல கோடி பவங்களிலே செய்துவந்த சரியாகிரியா யோகத் தவப்பயனுன் மலபரிபாகப் பட்டுச் சிவஞானத்தைப் பெற்றுத் திருவருடாரகமாகநின்று சீவகரணங்களெல்லாஞ் சிவகரணங் களாய்ச் சிவனேடொன்றாய்ச் சாயுச்சியமாவன்; சாயுச்சியமாமிடத்து வேருய் நின்று கலப்பின் கலத்தல் கூடாமையானும் ஒன்ருய்நின்று

கலப்பின் கலத்தலின்மையானும் அப்பொடுகலந்த வுப்புப்போல் வேறறநின்று சாயுச்சியமாவன்; ஆனவிடத்து மூன்று முதலு மிருக்கினு மவை முன்போலச் சீவித்து நிற்பனவுஞ் செய்யா மனிற்கும்; நிற்கவே ஆன்மா சிவனோடு அத்துவிதமாய் நிற்பானு தலாலாண்டு சிவனையுஞ் சுட்டியறியான் இதுவிதுவென்று சுட்டி யறியப்பட்டனவெல்லாம் விடையமாய்ப் பொய்ப்பொருளாமாதலி னவ்வாறு அவை பொய்ப்பொருளென வறிந்தவிடத்தே சுட்டற்ற வுண்மையாகிய சிவரூபமாவான்; அங்ஙனஞ் சிவரூபனான முத்தாத்மாவினாலே யிவ்வாறு சுட்டியறித லின்றாமாதலி னிவ்வாறு கூறுதலா மெனக்கொள்க. இதனைச் சிவஞானபோதம் அ- -க- கக ·ஆஞ் சூத்திரங்களாலு மிந்நான்கு சூத்திரங்களின் பொருள்களை விரித்துச் சித்தியார் சிவப்பிரகாசங்களிற் கூறிய திருவிருத் தங்களாலு மறிக.

ஏகாரங்க ளீற்றசை. தேற்றமெனினு மமையும். அன்றி வினாவாகக் கொண்டாமெனப் பொருள் கொள்ளின், காரிகையார் கடம் வாழ்விலென்வாழ்வு கண்டப்படுமாகாதே யென்பதைத் திலதரப்பணஞ் செய்யல் வேண்டும். இதுமுதலிய பல குற்றங்க ளுண்டாம். அவற்றை விரிப்பிற்பெருகுமென் றொழிந்தாம். இச் செய்யுளிற் கூறப்படு மாகாதென்னு மொழிகட்கு ஆமெனப் பொருள் கூறி னாகாதோவெனினாகாது, என்னெனின் யாண்டும் எதிர் மறையை யுடன்பாடாகக் கூறுதற்கிலக்கணமின்மையின். செய்யா யென்று முன்னிலை யொருமையேவ லெதிர்மறை வினைமுற்றை யுடன் பாட்டு வினை முற்றாகப் பொருள்கொள்ளுதல் போலிதனையும் பொருள் கொள்ளுதலாகாதோவெனின் ஆகாது; என்னெனின் அதனை யெதிர்மறை வினைமுற்றாகப் பொருள் கொள்ளுமிடத்து எதிர்மறையாகார மிடையிற் புணர்ந்துகெட்டு நின்றதாகவுமுடன் பாட்டு வினைமுற்றாகப் பொருள்கொள்ளுமிடத்து அவ்வெதிர்மறை யாகாரம் வேண்டாது நிற்பதாகவும் கொள்ளுதலானுமிதனிடத்தில் எதிர்மறை யாகாரம் புணர்ந்து நிற்றலினுடன்பாடாகக் கொள்ளுதற் கேலாமையானுமென்க. கண்களிரண்டாவன: ஞானக் கண்ணு மூனக்கண்ணுமாம் ஏனையவற்றை வரித்துக்கடாவிடையாகக் கூறுதற் கிஃதமைய மன்றென விடுத்தனம்.

பிற்சேர்க்கை ‘இ’ 1

புகழ் மாலை

திருக்களிற்றுப் படியார்

1. கண்ணப்ப னொப்பதோர் அன்பின்மை என்றமையால்
கண்ணப்ப னொப்பதோர் அன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறிதல் அல்லதுமற்று
யாமறியும் அன்பன்றது.

2. அன்பேயென் அன்பேயென் றன்பால் அழுதரற்றி
அன்பே அன்பாக அறிவழியும் — அன்பன்றித்
தீர்த்தம் தியானம் சிவார்ச்சனைகள் செய்யுமது
சாற்றும் பழமன்றே தான்.

3 பாய்பரியோன் றந்தப் பரமானந் தப்பயனைத்
தூயதிரு வாய்மலராற் சொற்செய்து — மாயக்
கருவாதை யாமறியா வாறுசெய்தான் கண்டாய்
திருவாத வூராளுந் தே.

4. சிவனெனவே தேறினன்யான் என்றமையால் இன்று
சிவன் அவனி வந்தபடி செப்பில்—அவனிதனில்
உப்பெனவே கூர்மை உருச்செய்யக் கண்டனையே
அப்படியே கண்டாய் அவன்.

பிற்சேர்க்கை ‘இ’ 2

தாயுமான சுவாமிகள் பாடல்

1. கூர்த்தஅறி வால்அறியக்கூடா தெனக்குரவன்
தேர்த்தபடி தானே திரிந்தேன் பராபரமே.

2. உருவெளிதான் வாதவூர் உத்தமர்க்கல் லாலினமுங்
குருவழிநின் ருர்க்குமுண்டோ கூருய் பராபரமே.

3. போதவூர் நாடறியப் புத்தர்தமை வாதில்வென்ற
வாதவூர் ஐயன்அன்பை வாஞ்சிப்ப தெந்நாளோ.

4. நினைப்பறவே தான்நினைந்தேன் என்றநிலை நாடி
அனைத்துமாம் அப்பொருளில் ஆழுநாள் எந்நாளோ.

5. சென்றுசென் றேயணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ருகி
நின்றுவிடும் என்றநெறி நிற்குநாள் எந்நாளோ.

6. ஆதியந்த மில்லா அரியபரஞ் சோதி என்ற
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநாள் எந்நாளோ.

பிற்சேர்க்கை 'இ' 3

சிவப்பிரகாச சுவாமிகள் 'நால்வர் நான்மணிமாலை'ப் பகுதிகள்

1. விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூ ரண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
அன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. (4)

2. பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம்
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. (8)

3. கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்தும்
அருமக னறுப்பூங் கருமயி ருதவியும்
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்தும்
அகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யருவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியும்
மொய்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்தும் மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்தும்
இளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்

விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்தும்
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டும்
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டனன்
இருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே. (12)

4. வலமழு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடல்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
ஓதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
உளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (16)

5. வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கும்
அருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்தன்
அருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேதச் சிரப்பொருள் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. (20)

6. நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயகன்
ஒருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணும்
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியும்
ஆயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலும்
இகழ்ச்சி யறியா வென்பணி வானே. (24)

7. பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருரி னழுங்கி

பேயேன் பெருது பெற்ருர் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
அன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனுர்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவ மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின றேற்றறிந் தேனே. (28)

8. திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தின்
நீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலின்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசகம்
ஓதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. (32)

9. தானே முத்தி தருகுவன் சிவனவன்
அடியன் வாதவூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. (36)

10. செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டு
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (40)

பிற்சேர்க்கை 'இ' 4

இராமலிங்க சுவாமிகள்

அருளிய

ஆளுடையவடிகள் அருண்மாலை

திருச்சிற்றம்பலம்

தேசகத்தி லினிக்கின்ற தெள்ளமுதே மாணிக்க
வாசகனே யானந்த வடிவான மாதவனே
மாசகன்ற நீதிருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற வநுபவநா னநுபவிக்க வருளுதியே. (1)

கருவெளிக்குட் புறமாகிக் கரணமெலாங் கடந்துநின்ற
பெருவெளிக்கு நெடுங்காலம் பித்தகித் திரிகின்றோர்
குருவெளிக்கே நின்றுழலக் கோதறநீ கலந்ததனி
உருவெளிக்கே மறைபுகழு முயர்வாத வூர்மணியே (2)

மன்புருவ நடுமுதலா மனப்புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவஞ்செய்வா ரெல்லாரு மேமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் னருளுருவ மடைந்துபின்னர்
இன்புருவ மாயினைநீ யெழில்வாத வூரிறையே. (3)

உருவண்டப் பெருமறையென் றுலகமெலாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியெனுந் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றெப் பெருந்தவருங் கூறுகின்ற கோவேநீ
இருவென்ற தனியகவ லெண்ணமெனக் கியம்புதியே. (4)

தேடுகின்ற வானந்தச் சிற்சபையிற் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீ ழாடுகின்ற வாரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கான் மாற்றுதியே. (5)

சேமமிகுந் திருவாத வூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை யெண்ணுதொறுங்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமுறு கற்புடையா ளின்பினுமின் பெய்துவதே. (6)

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து வுயிர்கலந்து வுவட்டாம லினிப்பதுவே. (7)

வருமொழிசெய் மாணிக்க வாசகநின் வாசகத்தில்
ஒருமொழியே யென்னையுமென் னுடையனையு மொன்றுவித்துத்
தருமொழியா மென்னிலினிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூடுவதேன் கூறுதியே. (8)

பெண்சுமந்த பாகப் பெருமா னொருமாமேல்
எண்சுமந்த சேவகன்போ லெய்தியதும் வைகைநதி
மண்சுமந்து நின்றதுமோர் மாறன் பிரம்படியாற்
புண்சுமந்து கொண்டதுநின் பொருட்டன்றோ புண்ணியனே. (9)

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன்றே. (10)

பிற்சேர்க்கை 'இ' 5

கந்தபுராணம்

1. கந்தமொ டுயிர்படுங் கணபங் கம்மெனச்
சிந்தைகொள் சாக்கியர் தியங்க மூகராய்
முந்தொரு மூகையை மொழிவித் தெந்தைபால்
வந்திடு மடிகளை வணக்கஞ் செய்குவாம்.

— கச்சியப்ப சிவாச்சாரியார்,

காசி காண்டம்

2. கொழுதியின வரியளிகள் கூட்டுண்ணுங் கொன்றையந்தார்க்
குழகன்ருளிற்
பழுதறுசொற் பாமாலை புனைந்தேத்தி யெறிதிரைநீர்ப் பரவையாடை
முழுதுலகு மதிக்கவிகை தனிநிழற்றி யொரு செங்கோன் முறை
நடாத்தும்
வழுதிமுனம் பரியழைத்த வாதவூரிறைவனடி வழுத்தல் செய்வாம்.

— அதிவீரராம பாண்டியர்.

திருவெண்காட்டுப் புராணம்

3. சிற்றம் பலக்கோவைத் தேன்சொரியும் செம்மலே
மற்றொருப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
கொற்றத் திருவாத வூரனைக்கை கூப்புதுமே.

— காலிங்கப்புலவர்

திருவையாற்றுப் புராணம்

4. குருவாய்மை தனக்குளது குருந்தின்கீழ் மிகக்கேட்டுப்
பெருவாய்மை யம்பலத்தே பிறவிவழக் கினையறுத்து
வெருவாத வானந்தம் விளைநிலத்தைக் கைக்கொண்ட
திருவாத வூராளி செங்கமலப் பதம்போற்றி.

திருப்பரங்கிரிப் புராணம்

5. நீரணி கடவுள்மண் ணின்றெ டுத்திடப்
பார்முழு தாண்டருள் பாண்டி யன்கையா
லோரடி வலியவே யுதவி மற்றர
னீரடி வாங்குமோ ரிறையைப் போற்றுவாம்.

— ஸ்ரீநிரம்ப அழகிய தேசிகர்.

செவ்வந்திப் புராணம்

6. தேனூறும் வாசகங்க ளறுநூறுந் திருக்கோவை
நானூறு மமுதூற மொழிந்தருளு நாயகனை
வானூறுங் கங்கைநிகர் மாணிக்க வாசகனை
யானூறு படாதவகை யிருபோது மிறைஞ்சிடுவேன்.

— சைவ. எல்லப்ப நாவலர்.

நல்லூர்ப் புராணம்

7. எக்கதியிற் புக்குழன்று திரிந்தாலு மெமைமேற் கொண்டிருப்போர் தம்மை
யக்கதியிற் பேர்த்துமே லருங்கதியி லுய்ப்போமென் றறிவிப்பார் போற்
ருெக்க நரிக்குல மனைத்துந் துரங்ககதி செலநடத்தத் தொடர்ந்துபோற்றி
முக்கணனைப் பரசுமொருகவி யரசினிரு சரணமுடி மேற்கொள்வாம்.

— திருவாரூர். வைத்தியநாத தேசிகர்.

திருக்குற்ருலத்தல புராணம்

8. சொன்னவனைத் துளகலையும் பயிலாமாத் தியர்குலத்துத்
தோன்றியாங்கோர்
தென்னவனை யரசுரிமைத் திறல்செயுமந் திரியாக்கித் தென்னர்க்கெல்லா
முன்னவனைப் பின்னுசடை முடியின்மேற் பொன்னின்முடி சூட்டியாண்ட
மன்னவனை மதுரையிலே குதிரைவிற்கச் சொன்னவனை வணக்கஞ்
செய்வாம்.

— திரிகூடராசப்பன் கவிராச மூர்த்திகள்.

திருவுத்தரகோசமங்கைத்தல புராணம்

9. நிரைசிறந்த நெடுங்குடுமிப் பொலங்கிரியிற் கயலெழுது நிருபனேவ
விரைசெல்வாம் பரிகொணர்ந்து வருகெனப்பொய்ப் பொருள்கொடுபோய்
விழைவினெய்தித்
தரைவிளங்கும் பெருந்துறையிற் குருந்துறைமான் மழுக்கரந்த
தலைவற்போற்றி
யுரையிறந்த மெய்ப்பொருள்பெற் றுயர்ந்தோரைத் தாழ்ந்தவரை
யுளத்துள்வைப்பாம்.

வேதாரணிய புராணம்

10. எந்தையரு ளாற்கூடற் பதிவந்தேறி யெண்ணரிதாம் பரியரசுக்
கேறவேற்றி
மூந்துதிரு வாசகமா மணிக்கு லத்தைமூதுலகோ ரின்புறமா
முகத்தாற்றூவி
யந்தமிலந் திணைதழுவு கோவைநின்று மகமகிழ வரும்பொருளு
மவனுக்கீந்து
வந்துபெருந் துறைபுகுந்து மலைபுகாத வாதவூர்த் தமிழ்க்கடலை
வணங்கல் செய்வாம்.

— பரஞ்சோதி முனிவர்.

திருவிளையாடற் புராணம்

11. எழுதரு மறைகடேரு விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத்தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமீதேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடி யடைந்த வன்பனடியவர்க் கடிமை செய்வாம்.

— பரஞ்சோதி முனிவர்

புள்ளிருக்குவேளூர்ப் புராணம்

12. வழுதிமனு நெறிசெலுத்து மந்திரியாய்ப் புரவிகொள்ள வந்தசெம்பொன்
முழுதும்வளர் திருப்பணிசெய் திலகுதிரு வாசகமு மொழிந்து பாரோர்
தொழுதுசிர மேற்கொண்டு துதிப்பநிறை கோவையார்த் துறைகள்
[யாவும்
பழுதுபடா தெடுத்து ரைத்தவாதவூ ரன்பர்பதம் பணிதல் செய்வாம்.

— வடுகநாதர்

திருக்கூவப் புராணம்

13. இன்பமாணிக்க வாசக னென்னுமோர்
மன்பெ ரும்பெய ரியாரும் வழங்குறத்
தன்பெ யர்க்கொடை யோடுதரித்தபே
ரன்பன் றன்னை யகத்து ளிருத்துவாம்.

— சிவப்பிரகாச சுவாமிகள்

சீகாளத்திப் புராணம்

14. வஞ்சி நுண்ணிடை மால்வரை மங்கைபூண்
டுஞ்சு வெம்முலைத் தொய்யி லெழுதுகைக்
கஞ்ச நோவக் கடவு ளெழுதுமச்
செஞ்சு வைத்தமி ழோனடி சேர்குவாம்.

— சிவப்பிரகாச சுவாமிகள்

காஞ்சிப் புராணம்

15. பெருந்துறையிற் சிவபெருமானருளுதலும் பெருங்கருணைப் பெற்றி [நோக்கிக்
கரைந்து கரைந்திருகண்ணீர் மழைவாரத் துரியநிலை கடந்து போந்து
திருந்து பெருஞ் சிவபோகக் கொழுந்தேறல் வாய்மடுத்துத் தேக்கிச் [செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூரடிகளடி யிணைகள் போற்றி.

— சிவஞான முனிவர்

திருவானைக்காப் புராணம்

16. உளத்திற் றேக்கிய சிவானந்த வெள்ளமுட் பொசிந்து
வளத்திற் றேக்கிய தெனவெயர் பொடிப்பவான் மடையாற்
களத்திற் றேக்கிய தெனவிழி காலவன் பிறைதாட்
டளத்திற் றேக்கிய வாதவூரடிகளைச் சார்வாம்.

— கச்சியப்ப முனிவர்

உறையூர்ப் புராணம்

17. விதியறிதற் கரியமுடி மண்கூடை சுமப்பநறு விரைப்பூஞ் செல்வி
பதியறிதற் கரியவடி மலர்வையைக் கரைநாறப் பாயதீஞ்சொற்
றுதியறிதற் கரியபொரு ளமைத்துருகி யுருகியுளஞ் சொற்ற தேவைக்
கதியறிதற்கரிய யான் முப்போது நினைந்து வினைகழித்துய்வேனே.

— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

திருக்குடந்தைப் புராணம்

18. ஒலிகெழு குதிரைச்சென்னி யுவந்தினி தேறிவைகும்
வலிகெழு மெண்டோளண்ணன் மற்றதன் முதுகிலேறிப்
பொலிகெழு மதுரைவீதி புகுந்துநன் கியக்கக்கண்ட
கலிகெழு புகழ்சால்வாத வூரர்தாள் கலந்து வாழ்வாம்

— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

மாயூரப் புராணம்

19. பரமனைப் புறந்தழீஇ முன்பாற் சுவடுறுத்தாள் போலா
துரவகந் தழீஇயனானுன் மண்சுமந்துழன் றடி யொன்றேற்றுக்
கரவின்மேல் கீழ்பின்னென்னக் கரைதரு மொருமுப்பாலுந்
திரமுறுசுவடு கொண்மார் திகழ்ந்தவர்க் கன்புசெய்வாம்.
— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

திருத்துருத்திப் புராணம்

20. முழுதுல கவித்தை யென்னு மூடிருண் முருங்கி மாயப்
பழுதக றவமென் றோதும் பைம்பொரு ளுடையர் வாங்கி
யொழு ததங் காதிற் கோப்ப வுயர்ந்தவா சகமென்றோதுஞ்
செழுமணி வாயாற் கான்ற சிவயோ கியர்தாள் போற்றி.
— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

திருப்பெருந்துறைப் புராணம்

21. இந்திய மொன்றற் காமண் ணிடந்துபன் னுண்மு யன்று
முந்திய பாதங் காணு முகுந்தனே மாற வைந்து
நந்திய சிரத்தப் பாத நகுகுருந் தடிமேவப்பெற்
றுந்திய விறுமாப் புற்றவொருவருக் கன்பு செய்வாம்.
— மீனாட்சிசுந்தத்ம் பிள்ளை அவர்கள்

விளத்தொட்டிப் புராணம்

22. கண்சுமந் தருளுநெற்றிக் கடவுளென் றருளுமென்றே
எண்சுமந் தளவில்பாடு படுபவரேங்க வன்னுன்
மண்சுமந் தடியும் பட்டு வடுப்படாத் திருமேனிக்கட்
புண்சுமந்திடவும் வாளாப் பொலிந்திருந்தவரை யுள்வாம்.
— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

தனியூர்ப் புராணம்

23. தேடிய மலரோன் மாயோன் செறிபெருஞ் சமழ்ப்பின் மூழ்க
நீடிய வடிநீள்வையை நிலந்திரிந் துழலக் கொன்றை
கூடிய முடிமண் கொண்ட கூடையுஞ் சுமக்குமாறு
பாடிய பெருமான் செம்பொற் பாதமுட் பதித்து வாழ்வாம்.
— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

மண்ணிப்படிக்கரைப் புராணம்

24. அளவரும் வருத்த மெய்தி யனைவரு மடிமை யாகுந்
தளவரும் பனையமூரற் றையலோர் பாகன் றானே
வளவருங் கூடைகட்டி மண்சுமந்தடியும் பட்டுப்
பிளவரு மடிமை கொள்ளப் பெற்றவர்க் கடிமை செய்வாம்.
— மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்.

ஆற்றூர்ப் புராணம்

25 உடையபொன் னுடையதாக்கொண் டொளிரச்சூழ்ந் தொருபான்சன்மம்
அடையவன் சமழ்ப்புக் கொள்ள வரசுபண் டாரத்தேற்ற
உடையபொன் னுடை யா னுக்கே யொளிர்தரக் கொடுத்தோர்சன்மம்
அடையவும்பெருத வள்ள லடிமலர் முடிமேல் வைப்பாம்.

— மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

திருநாகைக்காரோணப் புராணம்

26. எழுதிடும்வேலை பூமேலிருப்பவனி யற்றப்போக்கி
யெழுதுதலில்ல நூல்சொற்றினிதமர்தருமா தேவை
யெழுதெழுதெனப் பல்பாச்சொற்றியை தரப்பெயருமீற்றி
லெழுதிடச்செய்த கோமானிணையடி முடிமேல் வைப்பாம்.

— மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

திருவாரூர்த்தியாகராசலீலை

27. ஆசையடை யாவழுதி யாசையெலா மாசையுடை யார்க்குமோங்கு
மாசையிலஞ் சூழ்புவிவா னுசையடை யார்க்குமுற வாரிவீசித்
தேசையுறு மணிவார்த்தைத் துதிபலரு முயப்புரிந்து சிவானந்தப்பே
ரோசையுறு கதியடைந்த வாதவூர் வள்ளலடி யுள்ளங் கொள்வாம்.

— மீனுட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள்

பிற்சேர்க்கை ஈ.

அடிகளார் திருவாசகப் பதிகங்களை அருளியமுறை
(திருவாலவாயுடையார் திருவிளையாடற்புரணம் கூறுவது)

—

ஞானேபதேசஞ்செய்த திருவிளையாடல்

1. குழுவி னேடு குருவை நினைந்திணை
விழிக ளாறு பொழிய விழுந்தெழுந்
தழுது விம்மி யரற்றி யரற்றிநின்
ஞெழிவில் வாசக மோதத் தொடங்கினர். (56)

2. மாறிநின் றென்னை யென்னு மாறிலொண் கோயிற் பத்துத்
தேறல்வண் புணர்ச்சிப் பத்துச் செத்திலாப் பத்து மற்று
மாறிய பிரார்த்த னைப்பத் தாசைப்பத் துயிரு ணிப்பத்
தேறிய புலம்பல் வாழாப் பத்தெண்ணப் பத்தெ டுத்தார். (57)

3. அரும்பெரு நகரி னிற்போந் தவ்வயிற் றிகழ்வ கண்டே
பொருந்துமம் மனையே சுண்ணங் கோத்தும்பி புகழ்த்தெள் ளேணந்
திருந்துபூ வல்லி யுந்தி தோனேக்கஞ் சிறந்த பாவை
முரண்கடி சதக மெய்யென் றேதினு ரோதப் புக்கார். (58)

4. வருந்தியுட னூனுறக்க மின்றி யாங்கண் வாசகமோ
திடக்கேட்ட தொண்டரெல்லாம்
பொருந்தியதி சயித்திவைமுன் கேட்ட வல்ல புதுமையெனச்
சூழ்ந்திறைஞ்சிப் போற்றல் கண்டு
பெரும்புரவி கொளவந்த பொருளனைத்தும் பின்வருங்கா
ரியமொன்றும் பாரா ராகிப்
பரிந்துகொளு மெனக்கொடுத்தார் சிறிது நாளிற் பாண்டியனு
ரீண்டுபொருண் மாண்ட தாங்கே. (59)

5. ஆதரித் தடிய னேனை மாலழித் தாண்டு கொண்ட
வேதநா யகற்குச் சென்று விண்ணப்பஞ் செய்வ லென்றுங்
கோதரும் பெரிய செல்வ ரொப்பார்போ லச்சத் தோடுஞ்
சோதியா லயத்துப் புக்குத் தொழுதுநின் றழுது சொலவார். (64)

6. போற்றியென் வாழ்முத லேயென வெடுத்துப்
புலருமுன் னினியவாசகத்தா
லேற்றுயர் கொடியுடை யானையங் குணர்த்தி
யினியநற் றுதிகளாற் றுதிப்பச்
சாற்றருங் கொடுந்துயர் கூர்ந்தவர் துயரந்
தணித்திடு வானருள் கூர்ந்து
தோற்றிய தவ்வழி மேற்றிகழ் விசும்பிற் றுளங்கிட வுயர்திரு வாக்கு (67)

நரி குதிரையான திருவிளையாடல்

7. ஆரிய மொழியு ளோரு மருந்தமிழ்ச் செய்யு ளோருங்
காரிய முறைசெய் வோரும் யாவருங் கசியச் சொல்வார்
சோர்வறக் குழைத்தா யென்றுஞ் சோதியே சுடரே யென்றுஞ்
சீரிய நாம மோதத் தரித்திலர் தேவர்தேவே. (10)

8. அங்கவர் கொடுபோய் நோவ வடிப்பதற் கணையக்கண்டு
செங்கணீர் வார வாரத் திருமுகம் வேர்ப்ப வேர்ப்ப
வங்கணன் றனை நினைந்தாங் கடைக்கலப் பத்து முன்னுத்
துங்கவா சகங்க ளோதத் தொடங்கினர் வடக்குநோக்கி. (24)

9. துங்கவெம் பரிமேற் றோன்றுற் சொக்கனைக் கண்ட வீதி
மங்கையர் சங்கி ழப்பார் வண்டுகில் சரிந்து நிற்பா
ரங்கமேற் செம்பொன் பூப்பா ரறிவுநா ணகல்வா ரெங்கும்
பொங்கிய பெருஞ்சூல் கொள்வார் புலம்புவார் வீழ்வார் சோர்வார் (37)

10. அன்னவர் புலம்பக் கண்ட வாடல்சேர் பாடலன்பர்
மின்னனார் தம்மை வேத மொழியரென் றெடுத்து மெல்ல
வின்னிய லன்னேயென்று மென்றிசை படமு டித்துக்
கன்னல்சே ரன்னைப் பத்தாங் கோதினர் களியிற் கூடி. (39)

11. முன்னுறச் சென்று பன்றி நேடுதாண் முளரிசூடிப்
பின்னியன் முனிவ ரங்கண் பிடித்தபத் தெடுத்துப் பாட
நின்னுடை நினைவுவந்து முடித்தன நேச மிக்க
நன்முனி யடிவி டென்று நயகா னருளிச் செய்தான். (89)

மண்சுமந்த திருவிளையாடல்

12. பொறையகத்துடைய வேந்த னமைச்சரைப் போக வேவி
யறையகத் தொழியாத்துன்பத் தொடுபுசுந் தழுங்க விப்பான்
மறையகத் தோரி ரும்பு தருமனத் தேனை யென்று
சிறையகத் தோதா முன்னஞ் சிவனகத் தருள்சு ரந்தான். (க)

13. வைத்தரு ணமச்சி வாய வாழ்கவென் றெடுத்தாங் கோதி
யுத்தமர் போகக் கண்ட வுவகைகூர் செழியர் கோமான்
பத்தியிற் பின்சென் றேத்திப் பணிந்துநல் விடையிற் போந்து
சித்திர மண்ட பத்து விருந்தனன் செயலை வாழ்த்தி. (48)

14. உத்தர கோச மங்கை கழுக்குன் றாங் குருவங் கண்டு
சித்திரக் கோவை பாடித் தில்லையம் பலத்து வாவென்
றத்தன்வா னத்து ரைப்பப் போந்தருந் தமிழ்கள் பாடிப்
புத்தன் வாதையும்வென் றியாரும் போற்றுபொற் பதமடைந்தார். (51)

திருவாதவூரர் புராணம் திருவம்பலச் சருக்கம்

1 வெண்பிறை முடித்த வேணி விண்ணவ னன்பி லாத
பண்பின ரெனினுந் தன்னைப் பாடினர்க் கிரங்கு மென்றே
என்பெறு நமச்சிவாய வாழ்கவென றெடுத்து நாதன்
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகல லுற்றார், (355)

2. இத்திறங் கூறி யாங்கே புலம்பிநின் றிரங்கு மெல்லை
நித்தனன் றுரைத்த நீர்மை நெஞ்சினு ணினைந்து பின்னர்
அத்தலத் திறைஞ்சி யெங்கோ னருட்பெரு விடைபெற் றேகி
உத்தர கோச மங்கை யூரினிற்சென் று புக்கார். (370)

3. சடையவர் கோயி லெய்தித் தம்மைவந் தடிமைகொண்ட
வடிவது காணு ராகி மயங்கிவெய் துயிர்த்து வீழ்ந்து
விடுதிகொ லென்னை யென்று நீத்தல்விண் ணப்ப மென்னுந்
தொடைகெழு பாட லோதக் காட்டினர் தொல்லை மேனி. (371)

4. வென்றிடுங் கன்னி மேதிச் சென்னிவிக் கிரமன் றன்னைக்
கொன்றதன் பாவந் தீரக் குறித்திட வருள்வாய் போற்றி
அன்றுவந் தென்னை யாளு மணியணு மலையாய் போற்றி
என்றுதம் பரிவா லேத்தி யிறைஞ்சியங் குறையு நாளில். (383)

5. மாதர்கொண் மாதரெல்லா மார்கழித் திங்க டன்னில்
ஆதிரை நாண்முன் னீரைந் தாகிய தினங்க டம்மின்
மேதகு மனைக டோறு மழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற்கூடிப் புனற்றட மாடல்செய்வார். (384)

6. அன்னவ ரியல்பு கண்டா ராங்கவர் புகன்ற தாக
மன்னிய திருவெம் பாவை வாசகம்பேசிப் பின்னர்க்
கன்னியர் பாடி யாடுங் கவின்கொளம் மனைகண் டன்னார்
பன்னிய பாட லாக வம்மனைப் பாடல் செய்தார். (385)

7. வரந்தர விருந்த நாதன் மலரடி வணங்கி நாகேச்
சுரந்தனி விருந்த வண்ண றன்பத மிறைஞ்சி நீங்கித்
திருந்திய மறையோர் வாழுந் தில்லையம் பலஞ்சூழ் வீதி
பொருந்துழி யமிர்த மான வாசகம் புகல லுற்றார். (405)

8. ஆடுமிக் குலாநற் றில்லை யாண்டவன் றனைக்கொண் டென்றும்
பாடலைப் புகன்று கோயி லிருவகைப்பதிகங் கூறி
நாடுமச் சிவபு ராண மொழிந்தநல் லகவன் மூன்று
நீடுமெய்த் தமிழு மன்பா லோதினர் நீதி மிக்கார். (406)

9. கைவளை சிலம்பச் செம்பொற் கிங்கிணி கறங்கச் சூழ்ந்து
மைவளர் குழன்மேல் வண்டு மருண்டசை திரண்டு பாட
மெய்வியர் வரும்ப வெம்போர் விழிக்கயல் புரட்டிஞாங்கர்
இவ்வகை நின்று சுண்ண மிடித்தனர் மடந்தை நல்லார்: (407)

10. அத்திரு வனையார் பாடல் கேட்டவ ரிசைத்த தாக
மெய்த்தமி ழதனை னன்கு மிகுதிருச் சுண்ண மோதி
மைத்திகழ் காவி னூடு வருதலு மாங்கே பொய்தல்
தத்தமின் முயலுங் காதற் சிறுமியர் தம்மைக் கண்டார். (408)

11. கண்டபின் வறிது கூறுங் கட்டுரை சிறிது மற்றெம்
அண்டனை யுரைமி னீரென் றவரவ ருரைத்த தாக
எண்டரு திருத்தெள் ளேணந் திருவுந்தி யெழிற் றோணோக்கம்
பண்டிகழ் திருப்பூ வல்லிப் பாடல்பொன் னூசல் சொன்னார். (409)

12. ஆங்கொரு சிறுமி தன்சீ ரன்னையை நோக்கிக் கூறுந்
தாங்கிசை மொழியே யாகத் தகுமவை யீரைந் தோதி
ஞாங்கரின் முரலுந்தும்பி தன்னையு நயந்து நாதன்
பூங்கழல் வழுத்து கென்று புனிதர்கோத் தும்பி சொன்னார். (410)

13. பொங்கரி னிடையே வாழும் பொற்பிளங் குயிலே கூவி
இங்கழை யெம்பி ரானை யென்பதுங் கிளியை நோக்கித்
திங்களஞ் சடையான் பாதஞ் செப்பெனத் தசாங்க மென்னுந்
தங்கிசைத் தமிழுஞ் சொன்னார் தன்நிக ரொருவ ரில்லார். (411)

14. மண்ணிடத் தெம்மை யாண்டவடிவினை யன்றி மற்றோர்
அண்ணலைக் கடவு ளென்பார்க் கஞ்சுதும் வினையே மென்றும்
பண்ணுறச் சிறந்தபாடல் பகர்ந்துநற் பன்ன சாலை
ஒண்ணகர்ப் புறம்பு செய்தாங் கிருந்தன ருண்மை மிக்கார். (412)

புத்தரை வாதில் வென்ற சருக்கம்

15. பற்று நன்குண ராதபுத்தர் பகர்ந்த தர்க்க மவைக்கெலாம்
கற்று ணர்ந்தவர் போலமன்னிய கன்னி மாறுரை கூறினள்
மற்று மங்கையர் சாழலாம்வினை யாட லாக மகிழ்ச்சியால்
உற்ற தன்பொரு டன்னைவாசக மாக வுண்மைய ரோதினர். (500)

திருவடிபெற்ற சருக்கம்

16. ஆடல்வெம் படையி ளுட்சி யெழுச்சியோ டச்சோவென்னும்
பாடலுந் தெய்வ லோக யாத்திரைப் பத்து மோதித்
தேடலுந் திகைப்பு மீளத்தெளிதலுஞ் சிறுமை கொண்டு
வாடலுங் களிப்பு மில்லா மன்பெரு வாழ்வி லானுர். (512)

17. தேக்கிய வருளு மன்புஞ் சிறந்தவ ரெல்லாஞ் சொல்லும்
வாக்கினி லொருவன் சென்று மலர்கொடி வணக்கஞ்செய்து
பூக்கமழ் சடையோன் வைத்த புத்தகந் தன்னைச் சேமம்
நீக்கின னேதி ஞன்முன் னீதிகொ ளகவ ஞன்கும். (530)

18. திருச்சதக முதலாகச் சிறந்ததமி ழறுநூறும்
விரித்தகலப் பொருட்கோவை விளங்கவொரு நானூறும்
உரைத்தனன்பின் முடிந்தவிடத் துயர்வாத வூரன்மொழி
தரித்தெழுது மம்பலவ னெழுத்தென்று சாற்றினுன். (531)

திருப்பெருந்துறைப் புராணம்

தில்லையையடைந்த படலம்

1. யாவருங் காணு மாறே துறவுகொண் டெழுந்த வையர்
தாவருஞ் சுந்த ரேசர் சந்நிதி முன்னந் தாழ்ந்து
மேவரும பெருந்து றைப்பான் மேவினர் குருந்த நீழ
லோவருங் குரவற் காணு ரோய்யெனப் பதைத்து வீழ்ந்தார். (2)

2. பிறைமுடிக் கணிந்தவேணிப் பிஞ்ஞக ரன்பு சாலாக்
குறையுடை யாரும் பாடிற் கொண்டருள் சுரத்தலெண்ணி
மறைபுகழ் நமச்சி வாய வாழ்கவென் றெடுத்துக் கொண்டு
முறைபெரு கன்பு பொங்க வாசகமொழிய லுற்ருர். (4)

3. அண்ணல்வந் தருளை நல்கு மற்புத மறியே னென்று
மெண்ணரு மதிச யங்கண் டாமென்று மெனது நெஞ்சந்
திண்ணறக் குழைத்தா யென்றுஞ் சென்னிமன் னுந்தா ளென்று
மொண்ணல னின்னைக் காண்ட லுறவாசைப் பட்டே னென்றும். (5)

4. உய்தரேன் வாழே னென்று முன்னடைக் கலமே யென்றுஞ்
செய்வதொன் றறியே ஞயேன் செத்திலே ஞவா வென்றும்
பொய்யமை யாத நின்ருள் புணருநா ளெந்நா ளென்று
மெய்துமா றழைக்கினீய தெந்துவென் றருளா யென்றும். (6)

5. திகழ்திரு வார்த்தையெண்ணந் திருப்பள்ளி யெழுச்சி யாதி
நிகழிவை பலவும்பாடி நெஞ்சநெக் குருகி நிற்கப்
புகழ்பர னடியார்சூழ்ந்து போற்றவெள் விடைமேற் றோன்றி
யிகழ்வரு மழனீர் நாப்ப ணழலெழ வெண்ணி னாரால். (7)

6. முதுகிரி வெண்ணெய் நல்லூர் மொய்புக ழதிகை நாளும்
பதுமமே லிருப்பான் போற்றும் பாதிரிப் புலியூராதி
கதுமெனக் கண்டு போற்றிக் கைகுவித் திறைஞ்சிச் சென்றார்
புதுமதி முடித்தா ரேயாய்ப் பொலியண்ணா மலையின் மாதோ. (13)

7. ஆவயிற் றிருவெம் பாவை யம்மானை யருளிச் செய்து
தூவயிற் சூலத் தார்முற் றேற்றிய கோலங் காட்ட
நாவயிற் புகழ்ந்து போற்றி நலமலி தொண்ட நாட்டிற்
சேவயிற் பொலிவார் மன்னுந் திருவேகாம் பரம்ப ணிந்து (14)

8. காமரு மந்நாட் டுள்ள காளத்தி யாதி யாய
தேமருங் கொன்றை யார்தந் தலமெலாஞ் சென்று போற்றிப்
பூமருங் கழுக்குன் றத்திற் புகுந்தருட் குரவன் கோலந்
தாமரும் படிநேர் கண்டு தண்டமிழ் மணக்கப் பாடி. (15)

9. ஆண்டவர் தில்லை வாவென் றருளிய துறநி னைந்து
பூண்டபல் கானுங் குன்றும்பொருபுன னதியு நீத்துச்
சேண்டலம் பொலியா நிற்குந் திருச்சிற்றம் பலம்பு குந்து
காண்டல்பெற் றடங்கா வன்பிற் கண்டபத் தருளிச் செய்து. (16)

10. திருக்குலாப் பத்துங் கோயிற் றிருப்பதி கம்மி ரண்டு
மருக்குலா மகவன் மூன்றும் வண்பொற்சுண் ணந்தெள் ளேண
மிருக்குலா வுந்தியார்தோ ணோக்கம்பூ வல்லி யின்னுங்
குருக்குலாந் திருப்பொன் னூசல் கோத்தும்பி யன்னைப் பத்து. (17)

11. கூவிய குயிற்பத் தச்சப் பத்துக்கோ தறுத சாங்க
மேவிய விவைகள் பாடி விடாத நன் னடனம் போற்றிப்
பாவிய பலரும் போற்றப் பண்புசா லத்த லத்தே
பூவியல் பன்ன சாலை யொன்றதிற் போந்தி ருப்பார். (18)

12. அறிவிலாப் புத்தர் முன்ன மறைசில நிந்தை யெல்லாஞ்
செறிதர வினாவ வந்தச் செழுங்கொடி விடைகொடுத்தாள்
மறிதர மூகைதீர்ந்த வாதொரீஇ மகிழ்ந்தார் யாரு
முறிவிலாச் சாழ லாலவ் வினாவிடை மொழிந்தா ரையர். (47)

பிற்சேர்க்கை உ.

திருவாவடுதுறையாதீனத்து வித்துவான்

தாண்டவராய சுவாமிகள்

இயற்றியது.

நேரிசையாசிரியப்பா

நிலமகண் முகத்தி னிலவுறு மியாணர்த்
திலகமென் றுரைக்குந் தென்னு டதனிற்
சீர்மலி புகலிச் சிவபிரா னருளா
லேர்மலி சிவையி னிணைமுலைப் பாலெனும்
பரஞா னந்தனைப் பரிவொடும் பருகி
யுரவுநீர் ஞால முளுற்றிய தவத்தாற்
ரேடெழுவாயிற் ரேன்றுபு துலங்கும்
பீடுசால் பதிசப் பெயர்பெற வுமிழ்ந்த
ஞானசம் பந்த நற்றமிழ்ப் பெருமா
னீனசம் பந்த விருட்சமண் பொருட்டா
லருடிருப் பாசுர வருந்தமிழ் மறையினைத்
தெருள்படப் பயின்று தெய்வவை திகமுஞ்
சைவமு முலகிற் றழைந்திட நிறுத்த
வையைவார் நதிசூழ் வாத வூரின்
மறையவர் குலத்திலா மாத்தியர் மரபி
லிறையவ னருளென வெழில்பெறத் தோன்றி
வளர்தரத் தாதையார் வாத வூரனென்
றுளமகிழ் சிறப்பா னுதவுமொண் பெயருநீஇ
வேத மாகமம் வேறுமற் றுள்ள
வோதுநூற் பகுதியு முளங்கொளக் கற்று
வாழுநாட் கூடன் மன்னரி மருத்தனப்
பூழியன் விளித்துப் புகன்முதலமைச்சுந்
தென்னவன் பிரம ராயனென் சிறப்பு
மன்னபிதானமும் வழங்குறப் பெற்றவ்
வண்ணலுக் கென்று மணிமணிக் கவசமுங்
கண்ணுமென் றுரைப்பக் காரியம் புரிந்து
வதியுநாளுடுறும் வளர்சிவ புண்ணியப்
பொதியினுற் றூய்மை புந்தியிற் பொருந்த
நிலைநிலை யாமையி னிலைமையை யளவிட்
டலைவுறும் பிறவியி னருந்துயர்க் கஞ்சி
வீடு பேற்றின் மிகவிருப் பினராய்க்
கூடுமெய் யடியார் குழாத்தொடுங் குலாவிச்
சிந்தையைச் சிவபிரான் றிருவடிக் கமைத்துத்
தந்தொழி லுங்கொடு சாரவோர் ஞான்று
குணதிசைக் கலித்துறை குதிரைகள் குறுகலை
மணம்விரி தண்டார் மன்னவன் தெரிந்தெம்

பொன்னறை திறந்து பொருள்பல கவர்ந்துபோய்க்
கொன்பரி வாங்கிக் கொணர்கெனக் கூறி
விடைதரப் பொருளொடும் விமலனை வணங்கி
நடைகொடு வருமிவர் நடைமுத லனைத்தும்
பரசிவன் றிருவுளம் பற்றியோர் பனவக்
குரவனாய்ப் பெருந்துறைக் குருந்தடி நீழவிற்
போற்றிமா ணவர்குழாம் புடையுற நாப்பண்
வீற்றிருந்தருளவவ் வியனக ரண்மி
யாலயம் புகுந்தன் பால்வலம் வருவார்
கோலமார் குருந்துறை குருமணி தன்னைக்
கண்டுள முருகிக் கண்ணீர் பெருகித்
தெண்டனிட் டெழுந்து சிவதே சிகனே
யடிய னேனையு மாண்டருள் செய்கென
முடிமிசை யஞ்சலி முகிழ்த்து நின் றிரப்ப
வேதியர் மலபரி பாக வினைவினை
யாதிதே சிகனறிந் தியாக்கையா நயிர்பொருண்
மூன்றையும் புனலொடு முளரியங் கரத்தா
லேன்றருட் கண்ணா லிருண்மல மகற்றிச்
சென்னிமேற் செங்கரஞ் சேர்த்தியைந் தெழுத்தான்
மன்னிய பாச வலிகெடுத் தின்பப்
பூரண வடிவம் புரிந்தவப் போதுபே
ராரண மறியா வருட்டே சிகனை
மாணிக்க நிகர்க்கு மதுரவா சகத்தாற்
பேணிப் பரவப் பிரானனி மகிழ்ந்தவ்
வாசில்கா ரணத்தா லமலமா ணிக்க
வாசகனெனப்பெயர் வழங்கினன் மறைதலும்
வியந்துபின் றெளிந்தவ் விரிபொரு ளனைத்து
நயந்தா னலய நற்பணி தனக்கு
மணிவிழா விற்குமர்ச்சனைக்குமங் கணன்கண்
மணிகொண்மெய் யடியார் மாண்பூசனைக்கு
மமைத்தரு ளந்த வாரிய னடிக
டமைப்பணிந் தங்ஙனஞ் சார்ந்தன ரிருப்ப
வழுதியீ தறிந்து வரவழைத் தெம்பொருண்
முழுதுமீ யலதுமா முறையினிற் கொணர்தியென்
றண்டரு மஞ்ச வல்லல்செய் மல்லராற்
றண்டனை செய்வது சகிக்கிலனாகிக்
கூடலங் கோனரி குதிரையாக் கியதிரு
வாடலா திகளாலரசனைத் தெருட்டத்
தெருண்டவவ் வரசனிச் சிவனடியாரை
மருண்டபுன் மதியான் வருத்தின னெனவவ்
வன்பரை யடைவுற் றடிகளிற் பணிந்தே
யென்பிழை பொறுத்தருள்வீரென் றிரப்ப
வகமகிழ்ந் தன்பரவ் வரசனுக் கலகில
முகமனன் குரைத்து முனைமதி முடியோன்
சன்னிதி சார்ந்து தாழ்ந்துபின் புறம்போந்
தென்னிதி யேயெனை வெய்துபாண் டியனை
நிற்கப் பணித்து நின்மல மாக்கிய
வற்களத் தையு ரமர்பெருந் துறையை

யடைந்து முன்போல வாரியற் காணவுள்
ளுடைந்துநைந் துருகி யுலப்பில்பே ரன்பாற்
பற்பல விதமாப் பாமாலைகள் புனைந்
தற்புதன் சேவடிக் கணிந்தவ ணிருப்பத்
தில்லையில் வருகெனச் சிவபர னருளலு
மொல்லையி லிறைஞ்சி யுதனினீங் கியாறு
செல்வுழிச் சிற்சில சிவநகர் துதித்துப்
பல்வளம் படைத்த பரமா காய
புண்ட ரீக புரந்தனிற் பொருந்தி
யண்டர்தம் பெருமா னருணடங் கும்பிட்
டாரா வன்பி னருட்டுதியியற்றிச்
சீரார் சிவேயோ கினிற்சிறந் திருப்ப
மணிமதிற் கூடலில் வளர்தமிழ்ச் சங்கத்
தணிமுதற் புலவனா யமர்தரும்போது
கூறரு மின்பொருட் கூறிறந் திடுதலின்
மாறனும் புலவரு மயங்குறு காலை
யிறையனா ரகப்பொரு ளெனப்படும் பனுவலை
முறைமையின் மொழிந்த முதிர்திரு வாக்கா
லைந்திணைக்கோவை யலங்கரித் துரையெனச்
சுந்தரத் தாண்டவத் தோன்றலார் பணிப்பக்
கருணையை யுன்னிக் கணக்கில்பே ரின்பப்
பொருணயந்தழுவிப் புனிதநல் வாக்காற்
றிருக்கோவை யுள்ளிடுந் தேவரும் பரவத்
திருக்கோவை யாரினைச் செப்பின ரஃதை
யிருக்கினுஞ் சிறந்ததா வேற்றெம் பெருமான்
றிருக்கரங் கொண்டு தீட்டியதன்றியு
மழகிய திருச்சிற் றம்பல முடையா
னெழுதிய தெனநெட் டெழுத்துமிட் டருளினன்